வெளியீடு: 22-8-2022 Issued: 22-8-2022

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு
(பதினாறாவது பேரவை)

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT
(SIXTEENTH ASSEMBLY)

திங்கட்கிழமை, செப்டம்பர் 13, 2021—தொகுதி 21—எண் 1

Monday the 13th September 2021—Volume 21—No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ. 3.00] **[Price Rs. 3.00**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

13–9–2021

உள்ளடக்கம்

	பக்கங்கள்
ஆளுநரும் அமைச்சரவையும்	xiii-xviii
Governor and Council of Ministers	xix-xxiv
பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள், செயலாளர் மற்றும் முக்கிய அலுவலர்கள்	xxv-xxviii
பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xxix-xxxviii
1. வினாக்கள்-விடைகள்—	
உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் (பட்டியல்கள் 1 மற்றும் 2)	1
2. தகவல் கோரல்—	2-16
(அ) *வாணியம்பாடி, ஜீவா நகர், திரு. வசீம் அக்ரம் படுகொலை மற்றும் நீட் தேர்வு இரத்து*	2-9, 14-15
திரு. எடப்பாடி K. பழனிசாமி	2-7
**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்*	3-5, 7-9
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா	14-15
(ஆ) *மேட்டூர், நீட் தேர்வு அச்சத்தால் மாணவன் தனுஷ் உயிரிழந்தது*	9-10, 14
திரு. ஜி.கே. மணி	9-10
திரு. S. சதாசிவம்	14

பக்கங்கள்

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(இ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு	10
திரு. நயினார் நாகேந்திரன்	10
(ஈ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி மற்றும் வேப்பனஹள்ளி தொகுதிகள், யானை தாக்கி இறந்தவர்களுக்கு நிவாரணம் மற்றும் ஆலங்குளம் தொகுதி, காட்டுப் பன்றிகளால் பயிர்கள் பாதிப்பு	11-13, 16
திரு. ட்டி. இராமச்சந்திரன்	11
திரு. கே.பி. முனுசாமி	11,16
திரு. பால் மனோஜ் பாண்டியன்	11-12
*மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்	12-13
(உ) பூந்தமல்லி தொகுதி, செவ்வாப்பேட்டை கிராமம், மூன்று சிறுவர்கள் கிருஷ்ணா கால்வாயில் விழுந்து உயிரிழந்தது	13-14
திரு. ஆ. கிருஷ்ணசாமி	13-14
(ஊ) கட்சி நிர்வாகி இல்லத் திருமணம், கொடிக்கம்பம் நடும்போது இறந்த சிறுவன் குடும்பத்திற்கு நிவாரணம்	15
திருமதி வானதி சீனிவாசன்	15
(எ) கல்விக் கடன் இரத்து, அரசு நடவடிக்கை எடுத்தல்	15-16
திரு. ஜே.ஜி. பிரின்ஸ்	16

	பக்கங்கள்
3. அறிக்கைகள் அளித்தல்—	16-17
(அ) மதிப்பீட்டுக் குழு	16
(ஆ) பொதுக் கணக்குக் குழு	17
(இ) பொது நிறுவனங்கள் குழு	17
(ஈ) அரசு உறுதிமொழிக் குழு	17
4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—	18-26, 182
(அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்)சட்டமுன்வடிவு, *2021*	18
மாண்புமிகு திரு. துரைமுருகன்	18
(ஆ) பாரதியார் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, *2021*	18-19
மாண்புமிகு முனைவர் க. பொன்முடி	19
(இ) தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு, *2021*	19-24
*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்	19-24
(ஈ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, *2021*	24-25
மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு	24-25
(உ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, *2021*	25-26
மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு	25-26
(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் *2*) சட்டமுன்வடிவு, *2021*	182
மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்	182

பக்கங்கள்

5. பிரதான எதிர்க்கட்சி (அ.இ.அ.தி.மு.க.) உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி வெளிநடப்பு, பேரவைத் தலைவர் விளக்கம் 26

6. மானியக் கோரிக்கைகள், 2021-2022, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி* 27-57, 68-180

(அ) கோரிக்கை எண் 22 - காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 23 - தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) — *27-57 தொடர்ச்சி*

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்* 27-55

திரு. எடப்பாடி K. பழனிசாமி 55

(இ) கோரிக்கை எண் 36 - திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை)

(ஈ) *கோரிக்கை எண் 38 - பொதுத் துறை*

(உ) *கோரிக்கை எண் 53 - சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை*

(ஊ) *கோரிக்கை எண் 1 - மாநில சட்டமன்றம்*

(எ) *கோரிக்கை எண் 2 - ஆளுநர் மற்றும் அமைச்சரவை*

(ஏ) *கோரிக்கை எண் 16 - நிதித் துறை*

(ஐ) *கோரிக்கை எண் 35 - மனித வள மேலாண்மைத் துறை*

(ஒ) *கோரிக்கை எண் 50 - ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்* — 68-180

**மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்* 68,79,92,99, 105-106,112, 151-169

பக்கங்கள்

6. மானியக் கோரிக்கைகள், 2021-2022, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

மாண்புமிகு திரு. துரைமுருகன் 73,84,89, 111, 169-174

திரு. இசக்கி சுப்பையா 113-123

**திரு. நிவேதா எம். முருகன்* 123-135

திரு. சீ. கதிரவன் 132, 135-141

** திரு. R. ராதாகிருஷ்ணன்* 141-149

மாண்புமிகு திரு. எ.வ. வேலு 149-150

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்* 172-173

7. விதி 110-ன்கீழ் அறிக்கை— 57-59

கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட ஐந்து பவுனுக்கு உட்பட்ட நகைக் கடன்கள் தள்ளுபடி குறித்த கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை 57-59

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்* 57-59

8. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி— 59-67

திரு. தி. வேல்முருகன் 60

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் 60-61

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா 61-62

பக்கங்கள்

8. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி—*தொடர்ச்சி*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்	62
திரு. ட்டி. இராமச்சந்திரன்	62-63
திரு. வி.பி. நாகைமாலி	63
திரு. ம. சிந்தனை செல்வன்	64
திரு. நயினார் நாகேந்திரன்	64-65
திரு. ஜி.கே. மணி	65-66
திரு. கு. செல்வபெருந்தகை	66
மாண்புமிகு திரு. இ. பெரியசாமி	66-67

9. அறிவிப்புகள்— 180-181, 247

(அ) *பல்கலைக்கழக அமைப்புகளில் அலுவல்சாரா உறுப்பினர்களாகப் பணிபுரிய சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்*	180-181
(ஆ) *தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2021 (ஆ.இ.)*	181
(இ) *தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021 (ஆ.இ.)*	186
(ஈ) *தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையச் சட்டமுன்வடிவு, 2021 (ஆ.இ.)*	247

பக்கங்கள்

10. அரசினர் தீர்மானங்கள்—

(அ) பேரவை விதிகள் *30, 130* மற்றும் *132* ஆகியவற்றைத் தளர்த்துதல்	183
மாண்புமிகு திரு. துரைமுருகன்	183
(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்	268-269
மாண்புமிகு திரு. துரைமுருகன்	268-269
11. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—	184-249
(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் *2*) சட்டமுன்வடிவு, *2021*	184-185
மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்	184-185
(ஆ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, *2021*	186-188
மாண்புமிகு திரு. துரைமுருகன்	186-187
(இ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்)சட்டமுன்வடிவு, *2021*	188-189
*மாண்புமிகு திரு. கே.என். நேரு	188-189
(ஈ) பாரதியார் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, *2021*	190-191
மாண்புமிகு முனைவர் க. பொன்முடி	190-191
(உ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத் தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) நீக்கறவு சட்டமுன்வடிவு, *2021*	191-195
மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்	192-195
திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி	192-193

TRUTH ALONE TRIUMPHS

பக்கங்கள்

11. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)
—தொடர்ச்சி

(ஊ) தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2021 — 195-200

மாண்புமிகு திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் — 196, 198-199

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி — 196-197

(எ) தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021 — 200-202

*மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு — 200-201

(ஏ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுச் (இரண்டாம் திருத்தம்) சட்டமுன்வடிவு, 2021 — 202-204

*மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி — 202-203

(ஐ) தமிழ்நாடு நீக்கறவு செய்தல் (இரண்டாம்) சட்டமுன்வடிவு, 2021 — 204-205

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி — 204-205

(ஒ) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் சென்னை (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021 — 206-208

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன் — 206-207

(ஓ) தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு, 2021 — 208-229

*மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் — 208,213-214, 219, 223, 228-229

திரு. எடப்பாடி K. பழனிசாமி — 208-213

பக்கங்கள்

11. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—
தொடர்ச்சி

திரு. கு. செல்வபெருந்தகை	214-218
மாண்புமிகு திரு. துரைமுருகன்	215, 223
திரு. நயினார் நாகேந்திரன்	219-223
மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்	222-223
திரு. தி. வேல்முருகன்	224
திரு. ஜி.கே. மணி	224-225
திரு. ம. சிந்தனை செல்வன்	225-226
திரு. வி.பி. நாகைமாலி	226
திரு. ட்டி. இராமச்சந்திரன்	226
டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்	226-227
முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா	227
திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்	227
திரு. மு. ஜெகன் மூர்த்தி	227
(ஔ) தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021	229-231
மாண்புமிகு திரு. பி. மூர்த்தி	230-231
(அஅ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலையக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021	231-233
மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு	232-233

	பக்கங்கள்
11. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— தொடர்ச்சி	
(அஆ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலையக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021	233-237
மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு	234-237
திரு. சேவூர் S. இராமச்சந்திரன்	234
(அஇ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2021	237-239
மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்	237-239
(அஈ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 2021	239-241
மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்	239-241
(அஉ) தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021	241-243
மாண்புமிகு திரு. சி.வெ. கணேசன்	241, 243
(அஊ) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021	243-245
மாண்புமிகு திரு. சி.வெ. கணேசன்	243, 245
(அஎ) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2021	245-247
மாண்புமிகு திரு. சி.வெ. கணேசன்	245, 247

பக்கங்கள்

11. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— *தொடர்ச்சி*

(அஏ) *தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையச் சட்டமுன்வடிவு, 2021* 248-249

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் 248-249

12. பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் 250-268

13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 270-274

14. இணைப்புகள் 275-819

ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர் — மாண்புமிகு திரு. பன்வாரிலால் புரோகித்

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, மற்ற அகில இந்திய பணி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள் துறை, சிறப்பு முயற்சிகள், சிறப்புத் திட்ட செயலாக்கம், மாற்றுத் திறனாளிகள் நலன்

2. நீர்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள், கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்

3. நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல்

4. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

கூட்டுறவு, புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலன்

5. உயர் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்

6.	**பொதுப் பணித் துறை அமைச்சர்**	**.. மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** *பொதுப் பணிகள் (கட்டடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்*
7.	**வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர்**	**.. மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** *வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை, கரும்புப் பயிர் மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு*
8.	**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்**	**.. மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** *வருவாய், மாவட்ட வருவாய் பணியமைப்பு, துணை ஆட்சியர்கள், பேரிடர் மேலாண்மை*
9.	**தொழில் துறை அமைச்சர்**	**.. மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** *தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல்லியல்*
10.	**சட்டத் துறை அமைச்சர்**	**.. மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:** *சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம்*
11.	**வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்**	**.. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** *வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகரமைப்புத் திட்டமிடல் மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, இட வசதிக் கட்டுப்பாடு, நகரத் திட்டமிடல், நகர்ப்பகுதி வளர்ச்சி, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

12. ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** *ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள்*
13. ஊரகத் தொழில் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** *குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், குடிசை மாற்று வாரியம்*
14. செய்தித் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** *செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்*
15. சமூக நலன் - மகளிர் உரிமைத் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** *மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்*
16. மீன்வளம் - மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்	**.. மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:** *மீன்வளம், மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் கால்நடை பராமரிப்பு*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

17. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்தி சட்டம்

18. வனத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:**

வனம்

19. உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி:**

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு

20. மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு

21. கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். காந்தி:**

கைத்தறி மற்றும் துணிநூல், கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், பூதானம் மற்றும் கிராம தானம்

22. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்:**

மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வு

23. வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி. மூர்த்தி:**

வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டுகள் மற்றும் கம்பெனிகள் பதிவு

24. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:**

பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன்

25. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:**

இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள்

26. நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:**

நிதித் துறை, திட்டம், மனிதவள மேலாண்மை, ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால நன்மைகள்

27. பால்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சா.மு. நாசர்:**

பால்வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

28. சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்:**

சிறுபான்மையினர் நலன், வெளிநாடு வாழ் தமிழர் நலன், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் வக்ஃப் வாரியம்

29. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:**

பள்ளிக் கல்வி

30. சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்:**

சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

31. தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. சி.வெ. கணேசன்:** *தொழிலாளர்கள் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, மக்கள் தொகை கணக்கெடுப்பு, நகரம் மற்றும் ஊரக வேலைவாய்ப்பு*
32. தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்:** *தகவல் தொழில்நுட்பத் துறை*
33. சுற்றுலாத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்:** *சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்*
34. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திருமதி நா. கயல்விழி:** *ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர்கள் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்*

GOVERNOR AND COUNCIL OF MINISTERS

GOVERNOR –HON. THIRU BANWARILAL PUROHIT

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Thiru M.K. Stalin:**

 Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, Other All India Service, District Revenue Officers, Police, Home, Special Initiatives, Special Programme Implementation, Welfare of the Differently abled persons

2. **Minister for Water Resources** .. **The Hon. Thiru Duraimurugan:**

 Irrigation Projects including small Irrigation, Legislative Assembly, Governor and Ministry, Elections and Passports, Minerals and Mines

3. **Minister for Municipal Administration** .. **The Hon. Thiru K.N. Nehru:**

 Municipal Administration, Urban and Water Supply

4. **Minister for Co-operation** .. **The Hon. Thiru I. Periyasamy:**

 Co-operation, Statistics and Ex-Servicemen Welfare

5. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudy:**

 Higher Education including Technical Education, Electronics, Science and Technology

6.	**Minister for Public Works**	.. **The Hon. Thiru E.V. Velu:** Public Works (Buildings), Highways and Minor Ports
7.	**Minister for Agriculture and Farmer's Welfare**	.. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Excise, Sugarcane Development and Waste Land Development
8.	**Minister for Revenue and Disaster Management**	.. **The Hon. Thiru K.K.S.S.R Ramachandran:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Disaster Management
9.	**Minister for Industries**	.. **The Hon. Thiru Thangam Thennarasu:** Industries, Tamil Official Language and Tamil Culture, Archeology
10.	**Minister for Law**	.. **The Hon. Thiru S. Regupathy:** Law, Courts, Prisons and Prevention of Corruption
11.	**Minister for Housing and Urban Development**	.. **The Hon. Thiru S. Muthusamy:** Housing, Rural Housing, Town Planning projects and Housing Development, Accommodation Control, Urban Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

12.	**Minister for Rural Development**	.. **The Hon. Thiru K.R. Periakaruppan:** Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness
13.	**Minister for Rural Industries**	.. **The Hon. Thiru T.M. Anbarasan:** Rural Industries including Cottage Industries, Small Industries, Slum Clearance Board
14.	**Minister for Information & Publicity**	.. **The Hon. Thiru M.P. Saminathan:** Information & Publicity, Film Technology and Cinematograph Act, Newsprint Control, Stationery and Printing, Government Press
15.	**Minister for Social Welfare & Women Empowerment**	.. **The Hon. Tmt. P. Geetha Jeevan:** Social Welfare including Women and Children Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development Scheme and Beggar Homes and Social Reforms & Nutritious Meal Programme
16.	**Minister for Fisheries – Fishermen Welfare and Animal Husbandry**	.. **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Fisheries, Fisheries Development Corporation and Animal Husbandry

17.	**Minister for Transport**	.. **The Hon. Thiru R.S. Rajakannappan:** Transport, Nationalised Transport and Motor Vehicles Act
18.	**Minister for Forests**	.. **The Hon. Thiru K. Ramachandran:** Forests
19.	**Minister for Food and Civil Supplies**	.. **The Hon. Thiru R. Sakkarapani:** Food and Civil Supplies, Consumer Protection and Price Control
20.	**Minister for Electricity, Prohibition & Excise**	.. **The Hon. Thiru V. Senthilbalaji:** Electricity, Non Conventional Energy Development, Prohibition and Excise, Molasses
21.	**Minister for Handlooms and Textiles**	.. **The Hon. Thiru R. Gandhi:** Handlooms and Textiles, Khadi and Village Industries Board, Boodhan and Gramadhan
22.	**Minister for Health and Family Welfare**	.. **The Hon. Thiru Ma. Subramanian:** Health, Medical Education and Family Welfare
23.	**Minister for Commercial Taxes and Registration**	.. **The Hon. Thiru P. Moorthy:** Commercial Taxes, Registration and Stamp Act, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits and Registration of Companies

24.	**Minister for Backward Classes Welfare**	.. **The Hon. Thiru S.S. Sivasankar:** Backward Classes Welfare, Most Backward Classes Welfare and Denotified Communities Welfare
25.	**Minister for Hindu Religious and Charitable Endowments**	.. **The Hon. Thiru P.K. Sekarbabu:** Hindu Religious and Charitable Endowments
26.	**Minister for Finance and Human Resources Management**	.. **The Hon. Dr. Palanivel Thiaga Rajan:** Finance, Planning, Human Resources Management, Pensions and Pensionary benefits
27.	**Minister for Milk & Dairy Development**	.. **The Hon. Thiru S.M. Nasar:** Milk and Dairy Development
28.	**Minister for Minorities Welfare and Non Resident Tamils Welfare**	.. **The Hon. Thiru Gingee K.S. Masthan:** Minorities Welfare, Non Resident Tamils Welfare, Refugees & Evacuees and Wakf Board
29.	**Minister for School Education**	.. **The Hon. Thiru Anbil Mahesh Poyyamozhi:** School Education
30.	**Minister for Environment -Climate Change and Youth Welfare and Sports Development**	.. **The Hon. Thiru Siva.V. Meyyanathan:** Environment and Pollution Control, Youth Welfare and Sports Development

31.	**Minister for Labour Welfare and Skill Development** ..	**The Hon. Thiru C.V. Ganesan:** Labour Welfare, Population, Employment and Training, Census, Urban and Rural Employment
32.	**Minister for Information Technology** ..	**The Hon. Thiru T. Mano Thangaraj:** Information Technology
33.	**Minister for Tourism** ..	**The Hon. Dr. M. Mathiventhan:** Tourism and Tourism Development Corporation
34.	**Minister for Adi Dravidar Welfare** ..	**The Hon. Tmt. N. Kayalvizhi:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour Welfare

பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள், செயலாளர் மற்றும் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. மு. அப்பாவு

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி

மாற்றுத் தலைவர்கள்#

திரு. க. அன்பழகன்

திரு. நா. இராமகிருஷ்ணன்

திரு. S.R. இராஜா

திரு. தா. உதயசூரியன்

திரு. துரை. சந்திரசேகரன்

முனைவர் T.R.B. ராஜா

செயலாளர்

திரு. கி. சீனிவாசன்

16-8-2021 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., பி.ஜி.எல்., எம்.ஏ.	.. சிறப்புச் செயலாளர்
திரு. இரா. சந்திரசேகரன், எம்.ஏ., பி.காம்., பி.ஜி.எல்., டி.சி.பி.	.. கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்சி., பி.எல்.	.. கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல்.	.. கூடுதல் செயலாளர்
திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர்
திரு. தே. நாகராஜன், பி.எஸ்சி., பி.எல்.,	.. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர்
திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எல்.	.. இணைச் செயலாளர்
திரு. மு. ஆதிசேசன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி.	.. இணைச் செயலாளர்
திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல்.	.. இணைச் செயலாளர்
திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல்.	.. மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர் (இணைச் செயலாளர் நிலை)
திருமதி ஸ்ரீ. ஸ்ரீவித்யா, பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி டிவி. ஜெயஸ்ரீ, பி.ஏ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. மு. கருணாகரன், எம்.காம்., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி பா. ரேவதி, பி.எஸ்சி., பி.எட்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. கே. ரமேஷ், பி.எஸ்சி., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. க.லோ. சிவகுமரன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி பெர்லின் ரூப்குமார், எம்.ஏ.,பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. கோ. கணேஷ், பி.எஸ்சி., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. சு. பாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்.	.. துணைச் செயலாளர்
திருமதி சி. சாந்தா, எம்.காம்., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. த. ரகுபதி, எம்.காம்., பி.ஜி.எல்.	.. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் துணைச் செயலாளர்
திருமதி சீ. உஷா, பி.காம்., பி.ஜி.எல்.	.. குழு அலுவலர் (பொதுக் கணக்குக் குழு)
திரு. ஸ்ரீ.ரா. ரவி, எம்.காம்., பி.எல்.	.. குழு அலுவலர் (துணைச் செயலாளர் நிலை)
திரு. பா. ரவிச்சந்திரன், பி.எஸ்சி.	.. குழு அலுவலர் (பொது நிறுவனங்கள் குழு)
திரு. சி. ஸ்ரீதரன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி.	.. தலைமை நிருபர்

திருமதி த. சுஜாதா தேவி, பி.இ., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. அ.சு. கேளுடை நம்பி, எம். எஸ்சி., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. மு. மோகன் ராஜா, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. இரா. இராஜேந்திரன், பி.ஏ.,பி. ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. க.நா. வளர்வேந்தன், எம்.ஏ., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. கி. முரளீதரன் நாயர், பி.ஏ.	.. சார்புச் செயலாளர்
திருமதி வி. சுமதி, பி.காம்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திருமதி பு. சங்கீதா, பி.காம்., பி.ஜி.எல்.	.. தலைமை நிருபர்
திருமதி சு.சீ. அலமேலு, எம்.காம்., பி.ஜி.எல்.	.. தலைமை நிருபர்
திருமதி செ. சாந்தகுமாரி, பி.ஏ., பி.ஜி.எல்.	.. தலைமை நிருபர்
திரு. ஜெ. பாஸ்கரன், பி.ஏ.	.. தலைமை நிருபர்
திரு. அ. பாஸ்கரன், பி.காம்., பி.ஜி. எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. ஜெ. பாலசீனிவாசன், எம். காம்.,எம்.ஃபில்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. வே. லோகநாதன், பி.எஸ்சி.	.. சார்புச் செயலாளர்

பேரவை உறுப்பினர்கள்
(அகர வரிசைப்படி)
பெயர்களும் தொகுதிகளும்

1.	அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு.	..	போளூர்
2.	அசன் மௌலானா, திரு. JMH.	..	வேளச்சேரி
3.	அசோகன், திரு. G.	..	சிவகாசி
4.	அசோக்குமார், திரு. கி.	..	கிருஷ்ணகிரி
5.	அசோக்குமார், திரு. N.	..	பேராவூரணி
6.	அண்ணாதுரை, திரு. கா.	..	பட்டுக்கோட்டை
7.	அப்துல் சமது, திரு. ப.	..	மணப்பாறை
8.	அப்துல் வஹாப், திரு. மு.	..	பாளையங்கோட்டை
9.	அப்பாவு, திரு. மு.	..	ராதாபுரம்
10.	அமலு, திருமதி V.	..	குடியாத்தம் (தனி)
11.	அமுல் கந்தசாமி, திரு. T.K.	..	வால்பாறை (தனி)
12.	அம்பேத்குமார், திரு. S.	..	வந்தவாசி (தனி)
13.	அம்மன் K. அர்ச்சுணன், திரு.	..	கோயம்புத்தூர் (வடக்கு)
14.	அய்யப்பன், திரு. பி.	..	உசிலம்பட்டி
15.	அரவிந்த் ரமேஷ், திரு. ச.	..	சோழிங்கநல்லூர்
16.	அருண்குமார், திரு. P.R.G.	..	கவுண்டம்பாளையம்
17.	அருண்மொழிதேவன், திரு. ஆ.	..	புவனகிரி
18.	அருள், திரு. இரா.	..	சேலம் (மேற்கு)
19.	அர்ஜுனன், திரு. பொ.	..	திண்டிவனம் (தனி)
20.	அனிதா R. ராதாகிருஷ்ணன், திரு.	..	திருச்செந்தூர்
21.	அன்பரசன், திரு. தா.மோ.	..	ஆலந்தூர்
22.	அன்பழகன், திரு. க.	..	கும்பகோணம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்ற பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

23.	அன்பழகன், திரு. கே.பி.	.. பாலக்கோடு
24.	அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திரு.	.. திருவெறும்பூர்
25.	ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம்.	.. பல்லடம்
26.	இசக்கி சுப்பையா, திரு.	.. அம்பாசமுத்திரம்
27.	இராசேந்திரன், திரு. சபா.	.. நெய்வேலி
28.	இராமகிருஷ்ணன், திரு. நா.	.. கம்பம்
29.	இராமச்சந்திரன், திரு. ட்டி.	.. தளி
30.	இராமச்சந்திரன், திரு. K.K.S.S.R.	.. அருப்புக்கோட்டை
31.	இராஜா, திரு. S.R.	.. தாம்பரம்
32.	இராஜேந்திரன், திரு. இரா.	.. சேலம் (வடக்கு)
33.	இராஜேந்திரன், திரு. வி.ஜி.	.. திருவள்ளூர்
34.	இலட்சுமணன், டாக்டர் இரா.	.. விழுப்புரம்
35.	இளங்கோ, திரு. ரா.	.. அரவக்குறிச்சி
36.	இனிகோ இருதயராஜ், முனைவர் த.	.. திருச்சிராப்பள்ளி (கிழக்கு)
37.	ஈஸ்வரப்பன், திரு. J.L.	.. ஆற்காடு
38.	ஈஸ்வரன், திரு. ஈ.ஆர்.	.. திருச்செங்கோடு
39.	உதயகுமார், திரு. ஆர்.பி.	.. திருமங்கலம்
40.	உதயசூரியன், திரு. தா.	.. சங்கராபுரம்
41.	உதயநிதி ஸ்டாலின், திரு.	.. சேப்பாக்கம்—திருவல்லிக்கேணி
42.	ஊர்வசி அமிர்தராஜ், திரு. செ.	.. ஸ்ரீவைகுண்டம்
43.	எடப்பாடி K. பழனிசாமி, திரு.	.. எடப்பாடி
44.	எபினேசர் என்கிற ஜான் எபினேசர், திரு. ஜே.ஜே.	.. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
45.	எழிலரசன், திரு. சி.வி.எம்.பி.	.. காஞ்சிபுரம்

46.	எழிலன், டாக்டர் நா.	..	ஆயிரம் விளக்கு
47.	ஐட்ரீம் இரா. மூர்த்தி, திரு.	..	இராயபுரம்
48.	ஐயப்பன், திரு. கோ.	..	கடலூர்
49.	கடம்பூர் ராஜூ, திரு.	..	கோவில்பட்டி
50.	கணபதி, திரு. க.	..	மதுரவாயல்
51.	கணேசன், திரு. சி.வெ.	..	திட்டக்குடி (தனி)
52.	கணேஷ், திரு. ஆர்.	..	உதகமண்டலம்
53.	கண்ணன், திரு. க.சொ.க.	..	ஜெயங்கொண்டம்
54.	கதிரவன், திரு. சீ.	..	மண்ணச்சநல்லூர்
55.	கந்தசாமி, திரு. V.P.	..	சூலூர்
56.	கயல்விழி, திருமதி நா.	..	தாராபுரம் (தனி)
57.	கருணாநிதி, திரு. இ.	..	பல்லாவரம்
58.	கருணாநிதி, திரு. ஜெ.	..	தியாகராய நகர்
59.	கருப்பணன், திரு. K.C.	..	பவானி
60.	கருமாணிக்கம், திரு. இராம.	..	திருவாடனை
61.	காதர்பாட்சா முத்துராமலிங்கம், திரு.	..	இராமநாதபுரம்
62.	காந்தி, திரு. ஆர்.	..	ராணிப்பேட்டை
63.	காந்தி, திரு. எம்.ஆர்.	..	நாகர்கோவில்
64.	காந்திராஜன், திரு. எஸ்.	..	வேடசந்தூர்
65.	காமராஜ், திரு. இரா.	..	நன்னிலம்
66.	கார்த்திகேயன், திரு. க.	..	ரிஷிவந்தியம்
67.	கார்த்திகேயன், திரு. ப.	..	வேலூர்
68.	கிரி, திரு. மு.பெ.	..	செங்கம் (தனி)
69.	கிருஷ்ணசாமி, திரு. ஆ.	..	பூந்தமல்லி (தனி)
70.	கிருஷ்ணமுரளி, திரு. செ.	..	கடையநல்லூர்
71.	கீதா ஜீவன், திருமதி பி.	..	தூத்துக்குடி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

72.	கோவிந்தசாமி, திரு. ஆ.	..	பாப்பிரெட்டிப்பட்டி
73.	கோவிந்தராஜன், திரு. டி.ஜெ.	..	கும்மிடிப்பூண்டி
74.	சக்கரபாணி, திரு. அர.	..	ஒட்டன்சத்திரம்
75.	சக்ரபாணி, திரு. மு.	..	வானூர் (தனி)
76.	சங்கர், திரு. கே.பி.	..	திருவொற்றியூர்
77.	சண்முகையா, திரு. எம்.சி.	..	ஒட்டப்பிடாரம் (தனி)
78.	சதன் திருமலைக்குமார், டாக்டர் தி.	..	வாசுதேவநல்லூர் (தனி)
79.	சதாசிவம், திரு. S.	..	மேட்டூர்
80.	சந்திரசேகரன், திரு. துரை.	..	திருவையாறு
81.	சந்திரசேகர், திரு. துரை.	..	பொன்னேரி (தனி)
82.	சந்திரன், திரு. S.	..	திருத்தணி
83.	சம்பத்குமார், திரு. வே.	..	அரூர் (தனி)
84.	சரவணக்குமார், திரு. கே.எஸ்.	..	பெரியகுளம் (தனி)
85.	சரவணன், திரு. பெ.சு.தி.	..	கலசப்பாக்கம்
86.	சரஸ்வதி, டாக்டர் சி.	..	மொடக்குறிச்சி
87.	சாமிநாதன், திரு. மு.பெ.	..	காங்கேயம்
88.	சித்ரா, திருமதி கு.	..	ஏற்காடு (ஆ.வ.)
89.	சிந்தனை செல்வன், திரு. ம.	..	காட்டுமன்னார்-கோவில் (தனி)
90.	சிவகாமசுந்தரி, திருமதி க.	..	கிருஷ்ணராயபுரம் (தனி)
91.	சிவகுமார் என்கிற தாயகம் கவி, திரு. ப.	..	திரு.வி.க. நகர் (தனி)
92.	சிவகுமார், திரு. ச.	..	மயிலம்
93.	சிவசங்கர், திரு. எஸ்.எஸ்.	..	குன்னம்
94.	சின்னதுரை, திரு. மா.	..	கந்தர்வகோட்டை (தனி)
95.	சின்னப்பா, திரு. கு.	..	அரியலூர்

96.	சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர்.	..	விருதுநகர்
97.	சுதர்சனம், திரு. எஸ்.	..	மாதவரம்
98.	சுந்தரராஜன், திரு. செ.	..	சங்கரி
99.	சுந்தர், திரு. க.	..	உத்திரமேரூர்
100.	சுப்பிரமணியன், திரு. மா.	..	சைதாப்பேட்டை
101.	செங்கோட்டையன், திரு. கே.ஏ.	..	கோபிசெட்டிபாளையம்
102.	செஞ்சி K.S. மஸ்தான், திரு.	..	செஞ்சி
103.	செந்தில்குமார், திரு. ஐ.பி.	..	பழனி
104.	செந்தில் குமார், திரு. கோ.	..	வாணியம்பாடி
105.	செந்தில்குமார், திரு. மா.	..	கள்ளக்குறிச்சி (தனி)
106.	செந்தில்நாதன், திரு. பெரி.	..	சிவகங்கை
107.	செந்தில்பாலாஜி, திரு. V.	..	கரூர்
108.	செல்வபெருந்தகை, திரு. கு.	..	ஸ்ரீபெரும்புதூர் (தனி)
109.	செல்வராஜ், திரு. க.	..	திருப்பூர் தெற்கு
110.	செல்வராஜ், திரு. A.K.	..	மேட்டுப்பாளையம்
111.	செழியன், முனைவர் கோவி.	..	திருவிடைமருதூர் (தனி)
112.	சேகர், திரு. R.D.	..	பெரம்பூர்
113.	சேகர், திரு. S.	..	பரமத்தி-வேலூர்
114.	சேகர்பாபு, திரு. பி.கே.	..	துறைமுகம்
115.	சேவூர் S. இராமச்சந்திரன், திரு.	..	ஆரணி
116.	சௌந்தரபாண்டியன், திரு. அ.	..	லால்குடி
117.	தங்கப்பாண்டியன், திரு. எஸ்.	..	ராஜபாளையம்
118.	தங்கமணி, திரு. பி.	..	குமாரபாளையம்
119.	தங்கம் தென்னரசு, திரு.	..	திருச்சுழி
120.	தமிழரசி, திருமதி ஆ.	..	மானாமதுரை (தனி)
121.	தமிழ்செல்வம், திரு. T.M.	..	ஊத்தங்கரை (தனி)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

122. தளபதி, திரு. கோ. .. மதுரை (வடக்கு)
123. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
124. தனபால், திரு. ப. .. அவினாசி (தனி)
125. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
126. திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு. .. திண்டுக்கல்
127. தியாகராஜன், திரு. ந. .. முசிறி
128. திருமகன் ஈவெரா, திரு. இ. .. ஈரோடு (கிழக்கு)
129. துரைமுருகன், திரு. .. காட்பாடி
130. தேவராஜி, திரு. க. .. ஜோலார்பேட்டை
131. தேன்மொழி, திருமதி எஸ். .. நிலக்கோட்டை (தனி)
132. நத்தம் ஆர். விசுவநாதன், திரு. .. நத்தம்
133. நந்தகுமார், திரு. A.P. .. அணைக்கட்டு
134. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
135. நல்லதம்பி, திரு. அ. .. கெங்கவல்லி (தனி)
136. நல்லதம்பி, திரு. A. .. திருப்பத்தூர்
137. நாகைமாலி, திரு. வி.பி. .. கீழ்வேளூர் (தனி)
138. நாசர், திரு. சா.மு. .. ஆவடி
139. நிவேதா எம். முருகன், திரு. .. பூம்புகார்
140. நீலமேகம், திரு. டி.கே.ஜி. .. தஞ்சாவூர்
141. நேரு, திரு. கே.என். .. திருச்சிராப்பள்ளி (மேற்கு)
142. பண்ணாரி, திரு. அ. .. பவானிசாகர் (தனி)
143. பரந்தாமன், திரு. இ. .. எழும்பூர் (தனி)
144. பழனி நாடார், திரு. S. .. தென்காசி
145. பழனியாண்டி, திரு. மொ. .. ஸ்ரீரங்கம்
146. பழனிவேல் தியாக ராஜன், முனைவர் .. மதுரை (மத்தி)

147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே.	..	குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ.	..	போடிநாயக்கனூர்
149. பன்னீர்செல்வம், திரு. மு.	..	சீர்காழி (தனி)
150. பாண்டியன், திரு. K.A.	..	சிதம்பரம்
151. பாபு, திரு. மு.	..	செய்யூர் (தனி)
152. பாலசுப்ரமணியன், திரு. ஈ.	..	சேலம் (தெற்கு)
153. பாலாஜி, திரு. S.S.	..	திருப்போரூர்
154. பால் மனோஜ் பாண்டியன், திரு.	..	ஆலங்குளம்
155. பிச்சாண்டி, திரு. கு.	..	கீழ்பெண்ணாத்தூர்
156. பிரகாஷ், திரு. ஓய்.	..	ஓசூர்
157. பிரபாகரராஜா, திரு. எ.எம்.வி.	..	விருகம்பாக்கம்
158. பிரபாகரன், திரு. ம.	..	பெரம்பலூர் (தனி)
159. பிரின்ஸ், திரு. ஜே.ஜி.	..	குளச்சல்
160. புகழேந்தி, திரு. நா.	..	விக்கிரவாண்டி
161. பூண்டி கே. கலைவாணன், திரு.	..	திருவாரூர்
162. பூமிநாதன், திரு. மு.	..	மதுரை (தெற்கு)
163. பெரியகருப்பன், திரு. கே.ஆர்.	..	திருப்பத்தூர்
164. பெரியசாமி, திரு. இ.	..	ஆத்தூர்
165. பெரியபுள்ளான் என்கிற செல்வம், திரு. பெ.	..	மேலூர்
166. பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர்	..	பொள்ளாச்சி
167. பொன்முடி, முனைவர் க.	..	திருக்கோவிலூர்
168. பொன்னுசாமி, திரு. கே.	..	சேந்தமங்கலம் (ஆ.வ.)
169. மகாராஜன், திரு. ஆ.	..	ஆண்டிப்பட்டி
170. மகேந்திரன், திரு. சி.	..	மடத்துக்குளம்
171. மணி, திரு. ரா.	..	ஓமலூர்

172.	மணி, திரு. ஜி.கே.	..	பெண்ணாகரம்
173.	மணிக்கண்ணன், திரு. A.J.	..	உளுந்தூர்பேட்டை
174.	மணியன், திரு. ஓ.எஸ்.	..	வேதாரண்யம்
175.	மதியழகன், திரு. தே.	..	பர்கூர்
176.	மதிவேந்தன், டாக்டர் மா.	..	ராசிபுரம் (தனி)
177.	மரகதம் குமரவேல், திருமதி கு.	..	மதுராந்தகம் (தனி)
178.	மனோ தங்கராஜ், திரு. த.	..	பத்மநாபபுரம்
179.	மாங்குடி, திரு. சா.	..	காரைக்குடி
180.	மாணிக்கம், திரு. இரா.	..	குளித்தலை
181.	மாரிமுத்து, திரு. K.	..	திருத்துறைப்பூண்டி (தனி)
182.	மார்க்கண்டேயன், திரு. G.V.	..	விளாத்திகுளம்
183.	மான்ராஜ், திரு. இ.மா.	..	ஸ்ரீவில்லிபுத்தூர் (தனி)
184.	முகம்மது ஷாநவாஸ், திரு. ஜெ.	..	நாகப்பட்டினம்
185.	முத்துசாமி, திரு. சு.	..	ஈரோடு (மேற்கு)
186.	முத்துராஜா, திரு. வை.	..	புதுக்கோட்டை
187.	முருகேசன், திரு. செ.	..	பரமக்குடி (தனி)
188.	முனிரத்தினம், திரு. ஆ.மு.	..	சோளிங்கர்
189.	முனுசாமி, திரு. கே.பி.	..	வேப்பனஹள்ளி
190.	மூர்த்தி, திரு. பி.	..	மதுரை (கிழக்கு)
191.	மெய்யநாதன், திரு. சிவ.வீ.	..	ஆலங்குடி
192.	மோகன், திரு. M.K.	..	அண்ணா நகர்
193.	ரகுபதி, திரு. எஸ்.	..	திருமயம்
194.	ரகுராமன், திரு. A.R.R.	..	சாத்தூர்
195.	ரவி, திரு. சு.	..	அரக்கோணம் (தனி)
196.	ராதாகிருஷ்ணன், திரு. K.	..	உடுமலைப்பேட்டை
197.	ராதாகிருஷ்ணன், திரு. R.	..	விருத்தாசலம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

198.	ராமசந்திரன், திரு. கா.	..	குன்னூர்
199.	ராமச்சந்திரன், திரு. தி.	..	அறந்தாங்கி
200.	ராமலிங்கம், திரு. பெ.	..	நாமக்கல்
201.	ராஜகண்ணப்பன், திரு. R.S.	..	முதுகுளத்தூர்
202.	ராஜகுமார், திரு. S.	..	மயிலாடுதுறை
203.	ராஜமுத்து, திரு. M.	..	வீரபாண்டி
204.	ராஜன் செல்லப்பா, திரு. வி.வி.	..	திருப்பரங்குன்றம்
205.	ராஜா, திரு. ஈ.	..	சங்கரன்கோவில் (தனி)
206.	ராஜா, முனைவர் T.R.B.	..	மன்னார்குடி
207.	ராஜூ, திரு. கே.	..	மதுரை (மேற்கு)
208.	ராஜேஷ் குமார், திரு. செ.	..	கிள்ளியூர்
209.	ரூபி ஆர். மனோகரன், திரு.	..	நாங்குநேரி
210.	வரலட்சுமி, திருமதி ம.	..	செங்கல்பட்டு
211.	வானதி சீனிவாசன், திருமதி	..	கோயம்புத்தூர் (தெற்கு)
212.	வில்வநாதன், திரு. அ.செ.	..	ஆம்பூர்
213.	விஜயகுமார், திரு. க.நா.	..	திருப்பூர் (வடக்கு)
214.	விஜயதரணி, திருமதி S.	..	விளவங்கோடு
215.	விஜயபாஸ்கர், டாக்டர் சி.	..	விராலிமலை
216.	வெங்கடாசலம், திரு. A.G.	..	அந்தியூர்
217.	வெங்கடேசன், திரு. ஆ.	..	சோழவந்தான் (தனி)
218.	வெங்கடேஷ்வரன், திரு. எஸ்.பி.	..	தருமபுரி
219.	வெற்றிஅழகன், திரு. அ.	..	வில்லிவாக்கம்
220.	வேலு, திரு. எ.வ.	..	திருவண்ணாமலை
221.	வேலு, திரு. த.	..	மயிலாப்பூர்
222.	வேலுமணி, திரு. எஸ்.பி.	..	தொண்டாமுத்தூர்
223.	வேல்முருகன், திரு. தி.	..	பண்ருட்டி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

224. வைத்திலிங்கம், திரு. ஆர்.	..	ஒரத்தநாடு
225. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச்.	..	பாபநாசம்
226. ஜெகன் மூர்த்தி, திரு. மு.	..	கீழ்வைத்திணான் குப்பம் (தனி)
227. ஜெயக்குமார், திரு. S.	..	பெருந்துறை
228. ஜெயசங்கரன், திரு. A.P.	..	ஆத்தூர் (தனி)
229. ஜெயசீலன், திரு. பொன்.	..	கூடலூர் (தனி)
230. ஜெயராம், திரு. கே.ஆர்.	..	சிங்காநல்லூர்
231. ஜோசப் சாமுவேல், திரு.	..	அம்பத்தூர்
232. ஜோதி, திரு. ஓ.	..	செய்யாறு
233. ஸ்டாலின், திரு. மு.க.	..	கொளத்தூர்
234. ஸ்டாலின் குமார், திரு. செ.	..	துறையூர் (தனி)

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. ஆர். சண்முகசுந்தரம் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 28, திருவள்ளுவர் ஆண்டு—2052

2021 செப்டம்பர் 13, திங்கட்கிழமை

சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு."

காலம் தாழ்த்தாத விரைவான நடவடிக்கைகளும், அறிவுடைமையும், துணிவும் நாடாளுகின்றவர்களுக்குத் தேவையானவையும், நீங்காமல் நிலைத்திருக்க வேண்டியவையுமான பண்புகளாகும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் (பட்டியல்கள் 1 மற்றும் 2) @

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கருப்பு பேட்ஜ் அணிந்து அவைக்கு வந்திருந்தனர்.)

@ *275 முதல் 525 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.*

2. தகவல் கோரல்

(அ) வாணியம்பாடி, ஜீவா நகர், திரு. வசீம் அக்ரம் படுகொலை மற்றும் நீட் தேர்வு இரத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், சொல்லுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசர முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு நிகழ்வுகள் குறித்து நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *ஒன்று, திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி, ஜீவா நகரைச் சேர்ந்த இஸ்லாமிய சகோதரர் திரு. வசீம் அக்ரம், வயது 40, சமூக ஆர்வலர் குறிப்பிட்ட பகுதியில் கஞ்சா விற்பனை செய்யப்படுவதாக வாணியம்பாடி காவல் நிலையத்தில் கடந்த ஜுலை மாதம் புகார் அளித்துள்ளார். ஆனால், காவல் துறையால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. 10–9–2021 அன்று மாலை மசூதியில் தொழுகை முடிந்து தனது மகனுடன் வீடு திரும்பும் வழியில், கூலிப் படையினரால் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார். இச்சம்பவம் குறித்து அனைத்து ஊடகங்களிலும், பத்திரிகைகளிலும் வந்திருக்கின்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிவு செய்துவிட்டீர்கள் அல்லவா?*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *இதற்காக அரசால் தனிப்படை அமைக்கப்பட்டதாகவும், சில குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. இந்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களைக் கண்டறிந்து, அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இச்சம்பவத்தால் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் குடும்பத்திற்குத் தேவையான நிதி வழங்க வேண்டுமென்றும், அதோடு அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவருக்கு, கல்வித் தகுதிக்கேற்றவாறு வேலைவாய்ப்பை வழங்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.*

2021 செப்டம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். பதிவு செய்துவிட்டீர்கள் அல்லவா?*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தவுடன் நீட் தேர்வு இரத்து செய்யப்படும் என்ற அறிவிப்பை தொடர்ந்து வலியுறுத்தினார்கள். தேர்தல் அறிக்கையிலும் வெளியிட்டார்கள். ஆனால், ஆட்சிக்கு வந்தவுடன் அந்த அறிவிப்பு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீட் தேர்வு குறித்து நிறைய முறை இங்கே* discuss *செய்தாகிவிட்டது. நீங்கள் நீட் தேர்வைப் பற்றிச் சொன்னதால், அதுகுறித்து நானும் சொல்கிறேன்.* (குறுக்கீடு) *ஒரு நிமிடம் இருங்கள்.* (குறுக்கீடு) *நான் நீட் தேர்வு குறித்து...* (குறுக்கீடு) *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.* (குறுக்கீடு) *உட்காருங்கள்.*

*__மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு பிரச்சினைகளை இந்த அவையிலே கிளப்பி, அவற்றின் நிலை என்ன என்று கேள்வி கேட்டிருக்கிறார்கள்.*

வாணியம்பாடி பகுதியில் நடைபெற்ற அந்தச் சம்பவத்தைப் பற்றி அவர் சொல்கிறபோது, எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொல்லிவிட்டு, சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற அந்தச் செய்தியையும் சொல்லி, அவர் இங்கே ஒப்புதல் தந்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) *எனவே, அதுகுறித்து நான் விளக்கிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

கடந்த 26–7–2021 அன்று, வாணியம்பாடி, ஜீவா நகரைச் சார்ந்த இம்தியாஸ் என்பவருக்குச் சொந்தமான கிடங்கில் கஞ்சா இருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்து, காவல் துறையினர் raid *செய்திருக்கிறார்கள். அதில், 9 கிலோ கஞ்சா, மூன்று கத்திகள், 10 கைபேசிகள் ஆகியவற்றைக் கைப்பற்றி, பைசல் உள்ளிட்ட மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். கஞ்சா குறித்த தகவலை காவல் துறையினருக்குக் கூறியது வசீம் அக்ரம்தான் என்று இம்தியாஸ் கருதியுள்ளார். இந்நிலையில், 10–9–2021 அன்று மாலை சுமார் 6–30 மணியளவில் வசீம் அக்ரமை வழிமறித்து, அரிவாளால் வெட்டியதால், அதே இடத்தில் அவர் உயிரிழந்துள்ளார். இந்தக் கொலை வழக்கில் செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூரைச் சேர்ந்த பிரசாத் மற்றும் மண்ணிவாக்கத்தைச் சார்ந்த டெல்லி*

குமார் ஆகியோர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். வாணியம்பாடி பகுதியில் தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற சம்பவங்களை இரும்புக்கரம் கொண்டு இந்த அரசு அடக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, நீட் தேர்வுப் பிரச்சினையைப் பற்றி இங்கே சொன்னார்கள். அதுகுறித்து, இன்றைக்கு ஒரு மசோதாவை இந்த அவையிலே. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று, அதுகுறித்த bill வருகிறது. அதில் நாம் பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்ன பிறகு உங்களுக்குப் பேச time தருகிறேன்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: இல்லை, bill–ல் பேசுவது பற்றி அல்ல. இன்று, ஒரு சட்ட மசோதாவைக் கொண்டுவரப் போகிறோம். நீங்களும் கொண்டுவந்தீர்கள். அது எந்த இலட்சணத்தில் கொண்டுவரப்பட்டது? இப்போது எந்த இலட்சணத்தில் கொண்டுவரப் போகிறோம் என்பதைப் பற்றி நான் விளக்கிச் சொல்லப் போகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அதுகுறித்த மசோதாவைத் தாக்கல் செய்து, சட்டத்தை நிறைவேற்ற இருக்கிறோம். ஆகவே, அந்தச் சட்டத்தை நிறைவேற்றும்போது எதிர்க்கட்சியினரும் பங்கேற்று, நிறைவேற்றித் தர வேண்டுமென்ற அந்த வேண்டுகோளைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நீங்கள் நீட் உட்பட நான்கு விஷயங்களைப் பதிவு செய்துவிட்டீர்கள், இல்லை. (குறுக்கீடு)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழுமையாகச் சொல்லவில்லையே,. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. (குறுக்கீடு).

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில். . .

2021 செப்டம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேசுங்கள், பேசுங்கள்* (குறுக்கீடு)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையினுடைய கவனத்திற்கு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதாவது, நீங்கள் உங்கள் மாவட்டத்தில், நீட் தேர்வு பற்றி சொன்னீர்கள், பதில் வந்துவிட்டது. பதில் தருகிறேன் என்று சொல்லிவிட்டார்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *அது சம்பந்தமாகத்தான் சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தற்கொலை செய்து கொண்ட மாணவன், உங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்.* (குறுக்கீடு) இல்லை.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *சேர்த்துதான் நான் சொல்கிறேன். பதில் சொல்லட்டும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் பேசி பதிவு செய்து விட்டீர்கள், இப்போது, திரு. கே.பி. முனுசாமி.* (குறுக்கீடு) இல்லை, *பதிவு செய்துவிட்டோம்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *பதில் சொல்லவில்லையே! நான் பதிவு செய்யவில்லையே!*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிவு செய்துவிட்டோம். நீங்கள் பேசியது இதுவரைக்கும் பதிவாகியிருக்கிறது.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசியிருந்தால்தானே பதிவு செய்யமுடியும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், அதாவது* (குறுக்கீடு) *ஒரு நிமிடம், நான் சொல்கிறேன். நீங்கள் நீட் குறித்து பேசியது பதிவாகிவிட்டது.* (குறுக்கீடு) *இருங்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார் என்று கேட்டுக்கொள்ளலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவரை பேச அனுமதியுங்கள், நான் தக்க பதில் சொல்கிறேன், தயாராக இருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டது, ஆட்சிக்கு வந்தவுடன் நீட் தேர்வு இரத்து செய்யப்படும் என்று. ஆட்சிக்கு வந்து நீட் தேர்வு இரத்து செய்யப்படவில்லை. அதோடு தொடர்ந்து நீட் தேர்வு இரத்து செய்யப்படுமென்ற செய்தியைச் சொல்லி வந்த காரணத்தினால், பல மாணவர்கள் நீட் தேர்விற்காகத் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள முடியவில்லை. நீட் தேர்வை எதிர்கொள்ள முடியாத காரணத்தினால், மேட்டூரைச் சேர்ந்த தனுஷ் என்ற மாணவன் தற்கொலை செய்து கொண்டார். இதற்கு முழுக்க முழுக்க காரணம் ** என்பதை இந்த நேரத்திலே அவையில் பதிவு செய்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள். . .*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர், அது மட்டுமல்ல. இந்த இறந்த (குறுக்கீடு) மாணவனின் குடும்பத்தைச் சேர்ந்தவருக்கு தேவையான நிதியுதவி வழங்க வேண்டும். அதோடு கல்வித் தகுதிக்கு ஏற்றவாறு வேலைவாய்ப்பை நல்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டு, திராவிட முன்னேற்றக் கழக அரசு வேண்டுமென்றே தவறான வாக்குறுதியைக் கொடுத்த காரணத்தினாலே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள். . .*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர், அந்த மாணவரின் உயிர் பறிக்கப்பட்டிக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் பதிவு செய்துவிட்டீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், நான் சொல்கிறேன். நீங்கள் நன்றாகப் பதிவு செய்து விட்டீர்கள். இதற்கு மேல் என்ன பதிவு செய்யவேண்டும். ** காரணம் என்று சொல்கிற வார்த்தையை நான் நீக்கிவிடுகிறேன்.*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

அதற்கு முன்னால் 13 பேர் இறந்திருக்கிறார்கள். இது 14–வது நபர் (குறுக்கீடு) நீங்கள், (குறுக்கீடு) இப்போது, அந்த 13 பேர் இறப்பிற்கு இன்னொரு கட்சி என்று சொல்ல முடியாது, please *உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும் கேளுங்கள். (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர், சொல்லிக் கொண்டே இருந்தீர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் தேர்வை (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், பதிலை கேளுங்கள். நீங்கள் கேள்வியைக் கேட்டுவிட்டு (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர், அந்த மாணவர்கள் நீட் தேர்விற்குத் தயாராகியிருப்பார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் பிரதான எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் கேள்வி கேட்டுவிட்டீர்கள், பதிலைக் கேளுங்கள். (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் வெளிநடப்பு செய்கிறோம்.*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதாவது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் பதிலைக் கேட்டுவிட்டுச் செல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் தேர்வைத் தடுத்து நிறுத்தி, 12 ஆம் வகுப்பு மதிப்பெண் அடிப்படையில் மாணவர்களை மருத்துவக் கல்வியில்*

[திரு. மு.க. ஸ்டாலின்] [*2021 செப்டம்பர் 13*

சேர்த்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன், மறைந்த முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா அவர்கள்கூட நீட் தேர்வை நடத்த அனுமதிக்கவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய இவர், முதலமைச்சராக இருந்தபோதுதான் நீட் தேர்வு தமிழ்நாட்டில் முதன்முதலில் நடத்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) 'நீட் தேர்வுக்கு விலக்கு அளிக்க வேண்டும்' என்று இதே சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட மசோதா நிராகரிக்கப்பட்டதும், எதிர்க்கட்சித் தலைவரான இவர், முதலமைச்சராக இருந்தபோதுதான்.

நீட் தேர்வு அச்சத்தில், அனிதா உள்பட மாணவ, மாணவிகள் தற்கொலை செய்து கொண்டது உங்கள் ஆட்சியில்தான். குடியரசுத் தலைவரால் நிராகரிக்கப்பட்ட நீட் மசோதாவை இந்த அவைக்குச் சொல்லாமல் மறைத்ததும் அ.தி.மு.க. ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது உயிரிழந்த மாணவர் தனுஷ் இருமுறை நீட் தேர்வில் தோல்வியடைந்ததும், நீங்கள் அதாவது, திரு. எடப்பாடி பழனிசாமி அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒன்றிய அரசுடன் கூட்டணியாக இருந்தீர்கள். இப்போதும் இருக்கிறீர்கள். சி.ஏ.ஏ. மற்றும் வேளாண் சட்டங்களுக்கு ஆதரவாக ஓட்டுப் போட வேண்டும் என்ற நிலை வந்தபோது, பா.ஜ.க. கூறியபோது, நீட் தேர்விற்கு விலக்கு தர வேண்டுமென்று அ.தி.மு.க. நிபந்தனை விதித்து இருக்கலாம். அந்தத் தெம்பு, திராணி அ.தி.மு.க.-விற்கு இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதைச் செய்திருந்தால், நீட் தேர்வுக்கு விலக்கு கிடைத்திருக்கும். ஆனால், நீட் தேர்வால் மாணவச் செல்வங்கள் மடிந்தபோது மரண அமைதி காத்து, ஆட்சி நடத்தியதுதான் அ.தி.மு.க. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் நீட் தேர்வை இரத்து செய்ய நடவடிக்கை எடுத்திருக்கிறோம். சட்ட மசோதாவை இன்று நான் அறிமுகப்படுத்தவிருக்கிறேன். ஆகவே, நீட் தேர்வை இரத்து செய்து, 12 ஆம் வகுப்பு மதிப்பெண்கள் அடிப்படையில் மருத்துவக் கல்வியில் மாணவர்களைச் சேர்க்க இந்த அரசு அனைத்து

2021 செப்டம்பர் 13] *[திரு. மு.க. ஸ்டாலின்]*

ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது என்பதை, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன குற்றச்சாட்டிற்குப் பதிலாகச் சொல்லி அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) மேட்டூர், நீட் தேர்வு அச்சத்தால் மாணவன் தனுஷ் உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் சொல்லுங்கள். நீங்கள் சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் விளக்கமாக இல்லாமல் ஒரு வரியில் சொல்லுங்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் தேர்வு காரணமாக மேட்டூர் அடுத்துள்ள கூழையூர் என்ற கிராமத்தைச் சேர்ந்த சிவகுமார் மகன் தனுஷ் என்பவர் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார். இரண்டு முறை. . .*

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, இல்லை, நீங்கள் விதி 55–ன்கீழ் அறிவிப்பு தந்திருக்கிறீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் சொன்னதையும் பதிவு செய்துவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம் அவர்களும் தந்திருக்கிறார்; அதையும் பதிவு செய்துவிடுகிறேன். போதும், பதிவோடு போதும். (குறுக்கீடு) இன்றைக்கு போதும். (குறுக்கீடு) நீங்கள் சொன்ன விஷயத்திற்குப் பதிலே வந்துவிட்டது. (குறுக்கீடு) உங்கள் கருத்தையும் பதிவு செய்துவிட்டேன். Please அடுத்ததாக நான் திரு. சதாசிவம் அவர்களிடம் கேட்க வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) சரி, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள், ஒரு வரியில் சொல்லுங்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாணவன் இறப்புக்கு ஆழ்ந்த இரங்கலைத்*

தெரிவித்துக்கொள்கிறோம். எதிர்க்கட்சித் தலைவர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களும், நமது சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய தம்பி உதயநிதி அவர்களும், எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் உயிரிழந்த மாணவன் வீட்டிற்குச் சென்று வந்திருக்கிறார்கள். அதோடு எனக்கு கிடைத்த செய்தி, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயநிதி அவர்கள் 10 இலட்சம் ரூபாய் அந்தக் குடும்பத்திற்கு நிதி கொடுத்திருக்கிறார் என்பது. (மேசையைத் தட்டும் ஒலி) அதனை வரவேற்கின்றோம்; நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அதேநேரத்தில் அந்தக் குடும்பத்திற்கு அரசு இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்வித் தகுதிக்கேற்ப குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கொடுக்கப்பட்டுள்ளது என நினைக்கிறேன்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதோடு . . .

(இ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடுத்தாகிவிட்டது; போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள். ஒரு வரியில் சொல்லுங்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து, கிட்டத்தட்ட 15 நாட்கள் ஆகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் உட்காருங்கள். உங்களுடைய பரிந்துரையையும் சேர்த்து அவர்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள். ஒரு வரியில் சொல்லுங்கள். (குறுக்கீடு) நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

2021 செப்டம்பர் 13]

(ஈ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி மற்றும் வேப்பனஹள்ளி தொகுதிகள், யானை தாக்கி இறந்தவர்களுக்கு நிவாரணம் மற்றும் ஆலங்குளம் தொகுதி, காட்டுப் பன்றிகளால் பயிர்கள் பாதிப்பு

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கெலமங்கலம் ஒன்றியத்தில் பச்சப்பனட்டி கிராமத்தைச் சார்ந்த வெங்கடேஷ் 65 வயதிற்குட்பட்டவர். அவர் நேற்றைக்கு தன்னுடைய தோட்ட வேலைக்குச் செல்லும்போது, ஒற்றை யானை தாக்கி உயிரிழந்திருக்கிறார். அவர் ஒரு கூலி விவசாயத் தொழிலாளி. அவருக்கு இரண்டு குழந்தைகள் இருக்கிறார்கள். ஆகவே, அரசு அவரது குடும்பத்திற்கு 10 இலட்சம் ரூபாய் நிவாரணமும் அரசு வேலையும் வழங்க வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள். (குறுக்கீடு) அவை இரண்டும் ஒரே கேள்விதான்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி தொகுதிக்குட்பட்ட சிகரலஹள்ளி மற்றும் நேரலகிரி கிராமத்தைச் சார்ந்த இரண்டு விவசாயிகள் காவல் காக்க சென்றபோது, இரவு நேரத்தில் யானை தாக்கி இருவரும் அந்த இடத்திலேயே உயிரிழந்திருக்கிறார்கள். இதுகுறித்து அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள், நீங்களும் பன்றி தாக்குதல் குறித்துதானே பேசவிருக்கிறீர்கள். ஒரு வரியில் சொல்லுங்கள்; சேர்த்துவிடலாம்.*

திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் தொகுதியில் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் காட்டுப் பன்றிகள் மிகப் பெரிய அளவிலான பாதிப்பை விவசாயிகளுக்கு உண்டாக்குகின்றன. 7 மாவட்டங்களுக்கு அரசு விலக்கு அளித்திருக்கின்றது. தென்காசி, திருநெல்வேலி மாவட்டங்களுக்கும் விலக்கு அளிக்க*

வேண்டுமென்று பிரேரணை மே மாதத்தில் அனுப்பப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்த்து, அதற்கு அரசாணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள், சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

***மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித—யானை மோதல் என்பது தொன்றுதொட்டு நடைபெற்று வருகிறது. நேற்றைய தினம் ஏற்பட்ட இந்த மூன்று மனித இறப்புகளுக்கும், அதிகாரிகள் உரிய இடத்திற்குச் சென்று உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த யானையை விரட்டுவதற்காக வனத் துறையைச் சார்ந்த வேட்டைத் தடுப்புக் காவலர்களையெல்லாம் அழைத்துச்சென்று, அங்கு சுற்றி வருகிறார்கள். அந்த யானையை அவர்கள் காட்டிற்குள் விரட்டி விடுவார்கள். இருந்தாலும் இந்தப் பிரச்சினை தொடர்ந்து நடைபெறுவதற்குக் காரணம், கடந்த ஆட்சிக் காலத்தில் யானை அகழிகளையெல்லாம் சரியாக வெட்டவில்லை. இன்னொரு காரணம் சொல்லப்போனால், கூடலூர் பகுதியில் 53 கிலோ மீட்டர் தூரம் மட்டும் யானை அகழிகளை வெட்டினார்கள். அங்கே தொடர்ந்து பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஒரு வண்டியை வைத்து, நான்கே நாட்களில் மண்ணைத் தோண்டி, அந்த வேலை முடிந்துவிட்டது என்று சொல்லி,* bill*-ஐ வாங்கிக்கொண்டு சென்றிருக்கிறார்கள். அந்த மாதிரி செய்ததால்தான் இத்தகைய பிரச்சினை வருகிறது. அதுமாத்திரமல்ல, அவர்கள் தோண்டிய அகழிகளில், மழை பெய்ததும் மண்ணெல்லாம் மூடிவிடுகிறது. மண் மூடுவது மட்டுமல்ல, யானை ஒரு அறிவுள்ள பிராணி. எந்த இடத்தில் பிரச்சினையிருக்கிறதோ, அந்த இடத்தில் காலால் மண்ணை ஒதுக்கி, குழியை மூடிவிட்டு, அந்த வழியாக ஊருக்குள் வந்துவிடுகிறது. இந்தமாதிரி சூழ்நிலைகளெல்லாம் இருக்கும்போது, வனத்தைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளுக்கு யானைகள் வராமல் தடுப்பதற்கு ஒரே வழி, அந்த அகழிகளைச் சீராக ஆழப்படுத்தி அவற்றை செம்மைப்படுத்துவதுதான். அதற்கு நான் அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து வருகிறேன். அந்த அகழிகளை வெட்டி, அகழிகளின் இருபுறமும் 8 அடி உயரத்திற்கு அங்கே* concrete *சுவர் எழுப்பினால், 25 ஆண்டுகள், 30 ஆண்டுகளானாலும், அந்த அகழிகள் அடைபடாமல் இருக்கும். இந்தச் சூழ்நிலையில்*

2021 செப்டம்பர் 13] [*திரு. கா. ராமசந்திரன்*]

யானைகள் ஊருக்குள் வராமல் நம்மால் தடுக்க முடியும் என்று ஆலோசித்து வருகிறோம். எனவே, இந்த அரசு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று நிச்சயமாக இந்தப் பணியை மேற்கொள்ளும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி யானை தாக்குதலின்மூலம் உயிரிழந்தவர்களுக்கு சென்ற ஆட்சியில் 4 இலட்சம் ரூபாய் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். தற்போது அத்தொகையுடன் ரூ.1 இலட்சத்தைச் சேர்த்து ரூ.5 இலட்சமாகக் கொடுக்கப்போகிறோம். நேற்றைக்கு உயிரிழந்தவருடைய இருப்பிடத்திற்கே சென்று ரூ.50,000/– advance *கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய ஆதார் அட்டை உள்ளிட்ட ஆவணங்களை* verify *செய்துவிட்டு, அவை சரியாக இருந்தால், அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு* balance *தொகை கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. கிருஷ்ணசாமி, கையை ஏன் தூக்குகிறீர்கள்? உட்காருங்கள். (குறுக்கீடு) காட்டுப் பன்றி தொடர்பாக பதில் சொல்லவில்லையா? சொல்லிவிடுங்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சேர்க்கப்பட்ட விலக்கு அளிக்கப்பட்டுள்ள மாவட்டங்களுடன் இந்த இரண்டு மாவட்டங்களையும் சேர்த்து, காட்டுப் பன்றிகளை* vermin *என்ற வகையின்கீழ் கொண்டுவந்து, அவற்றை கட்டுப்படுத்துவதற்கு உரிய ஆணைகள் அரசால் அறிவிக்கப்படும்.*

(உ) பூந்தமல்லி தொகுதி, செவ்வாப்பேட்டை கிராமம், மூன்று சிறுவர்கள் கிருஷ்ணா கால்வாயில் விழுந்து உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள். ஒரு வரியில் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. ஆ. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூந்தமல்லி தொகுதி, செவ்வாப்பேட்டை கிராமத்தைச் சேர்ந்த 10, 12 வயதுள்ள மூன்று பிள்ளைகளை, பிள்ளையாரைக் கும்பிட்டுவிட்டு, அந்தச் சிலையை ஆற்றில் கரைப்பதற்காக அனுப்பியிருக்கிறார்கள். பிள்ளையார் சிலையை கிருஷ்ணா*

[திரு. ஆ. கிருஷ்ணசாமி] [2021 செப்டம்பர் 13

கால்வாயில் கரைக்க முற்பட்டபோது, அந்த மூன்று பிள்ளைகளும் வழுக்கி விழுந்து இறந்துவிட்டார்கள். அவர்கள் குடும்பத்தினருக்கு அரசு நிவாரணம் வழங்கிட வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) மேட்டூர், நீட் தேர்வு அச்சத்தால் மாணவன் தனுஷ் உயிரிழந்தது—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. கிருஷ்ணசாமி, உங்களுடைய கோரிக்கையைப் பதிவு செய்துவிட்டீர்கள். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம், உங்களுடைய கேள்வியை ஒரு வரியில் சொல்லுங்கள். உங்களுடைய தலைவர் சொன்ன அதே விஷயத்தைத்தானே சொல்லப்போகிறீர்கள். நன்றி சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதியில் நடந்த சம்பவம், அவர் எனக்கு உறவினர்; எனக்குப் பக்கத்துவீடு. எங்களுடைய தலைவர் அவர்கள் பேசும்போது, தெளிவாகச் சொன்னார்கள். நேற்று ஐந்து மாண்புமிகு அமைச்சர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் உட்பட அனைவரும் வந்திருந்தார்கள். பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் வந்திருந்தார்கள். NEET தேர்வினால் பாதிக்கப்பட்ட மாணவன் குடும்பத்திற்கு ரூ.10 இலட்சம் நிதி கொடுத்திருக்கிறார்கள். அந்தக் குடும்பத்திற்கு ரூ.1 கோடி நிவாரணம் வழங்க வேண்டுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி, பதிவு செய்துவிட்டேன். உட்காருங்கள். (குறுக்கீடு) பதிவு செய்துவிட்டேன், போதும். (குறுக்கீடு) நன்றியும் சொல்லிவிட்டீர்கள். ரூ.1 கோடி நிவாரணத் தொகை வேண்டுமென்று பதிவும் செய்துவிட்டீர்கள். மாண்புமிகு முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

(அ) வாணியம்பாடி, ஜீவா நகர், திரு. வசீம் அக்ரம் படுகொலை மற்றும் நீட் தேர்வு இரத்து—தொடர்ச்சி

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடியில் வசீம் அக்ரம் என்பவர் படுகொலை செய்யப்பட்டது குறித்து, நானும் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு அளித்திருந்தேன்.

2021 செப்டம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அதுவும் பதிவாகிவிட்டது.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *நானும் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பு அளித்திருந்தேன். 'கஞ்சா வியாபாரிகளை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவோம்' என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) வாணியம்பாடி காவல் ஆய்வாளர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். கஞ்சா வியாபாரியைப் பற்றி தகவல் கொடுத்தார் என்ற ஒற்றைக் காரணத்திற்காக அவர் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *அதேபோன்று, பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பத்தில் உள்ள அவருடைய மனைவிக்கு வேலைவாய்ப்பும், இழப்பீடும் தருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

(ஊ) கட்சி நிர்வாகி இல்லத் திருமணம், கொடிக்கம்பம் நடும்போது இறந்த சிறுவன் குடும்பத்திற்கு நிவாரணம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நிறைவாக, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள். ஒரு வரியில் சொல்லுங்கள்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15 நாட்களுக்கு முன்பாக அவையிலிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கட்சியினுடைய நிருவாகியின் இல்லத் திருமணத்திற்குச் சென்றபோது 13 வயது சிறுவன் கொடிக் கம்பம் நடும்போது இறந்திருக்கிறார். அதற்காக அரசாங்கத்தின் சார்பாக ஏதாவது நிவாரணம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

(எ) கல்விக் கடன் இரத்து, அரசு நடவடிக்கை எடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Right. *பதிவு செய்துவிட்டீர்கள், நன்றி. பதிவு செய்துவிட்டேன். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், பதிவு செய்துவிட்டேன். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், ஒரு வரியில் சொல்லுங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றிய அரசு கல்விக் கடன்*—corporate company–*களை வைத்து வசூலித்து வருவதால் பல்வேறு பிரச்சினைகள் வருகின்றன. ஆகவே, கல்விக் கடனை இரத்து செய்ய திராவிட முன்னேற்றக் கழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

(ஈ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி மற்றும் வேப்பனஹள்ளி தொகுதிகள், யானை தாக்கி இறந்தவர்களுக்கு நிவாரணம் மற்றும் ஆலங்குளம் தொகுதி, காட்டுப் பன்றிகளால் பயிர்கள் பாதிப்பு—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிவு செய்துவிட்டீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. முனுசாமி, ஒரு வரியில் சொல்லுங்கள்.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம் இரண்டு மாநிலங்களின் எல்லைப் பகுதியாக இருக்கிற காரணத்தினால், . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். வேறு விஷயம் இல்லை. முடிந்துவிட்டது.*

திரு. கே.பி. முனுசாமி: *அதே* subject *தான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கான பதிலையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். வேறு விஷயம் இருந்தால், பிறகு பேசிக்கொள்ளலாம்.* (குறுக்கீடு) *அதற்கெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள்.*

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் முனைவர்* T.R.B. *ராஜா, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.* (குறுக்கீடு) *நீங்கள் கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்.*

முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகம் போற்றும் எங்கள் முதலமைச்சர் அவர்களை வணங்கி, 2021–2022 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் முதலாவது மற்றும் இரண்டாவது ஆகிய இரண்டு அறிக்கைகளைக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

2021 செப்டம்பர் 13]

(ஆ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) நான் அடுத்த அலுவலுக்குப் போய்விட்டேன். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021–2022 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 1 முதல் 3 வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(இ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு.* S.R. *இராஜா, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. S.R. இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் தமிழகத்தின் மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். 2021–2022 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 1 முதல் 3 வரையிலான மூன்று அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(ஈ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.*

முற்பகல் 10–20

திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், இளைஞரணிச் செயலாளர் அவர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2022 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 1–வது அறிக்கையை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், உங்களுக்கு* Zero hour*-ல் வாய்ப்பு கொடுத்தாகிவிட்டது. தயவுசெய்து உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஆ) பாரதியார் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

2021 செப்டம்பர் 13]

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2021 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(இ) தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் என்னும் தேர்வைக் கொண்டு வந்து, மருத்துவக் கல்விக் கனவைச் சிதைத்து வரும் ஒன்றிய அரசுக்கு எதிராக கடந்த நான்காண்டு காலமாகத் தமிழ்நாட்டில் மிகக் கடுமையான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. மாணவ, மாணவியர் தங்களது விலைமதிக்க முடியாத இன்னுயிரை இந்தப் போராட்டத்துக்குத் தாரைவார்த்து மறைந்து போயிருக்கிறார்கள். தொடக்கத்தில் இருந்தே இந்த நீட் தேர்வை திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்து வருகிறது. (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது அனைவரும் உட்கார வேண்டும். நீங்கள் உட்காருங்கள்.

(மாண்புமிகு அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.)

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: ஏனென்றால் மாணவர்களுக்குக் கல்வித் தடையை ஏற்படுத்தக்கூடிய நுழைவுத் தேர்வுக்கு நிரந்தரமாக முற்றுப்புள்ளி வைத்த அரசுதான், திராவிட முன்னேற்றக் கழக அரசு.

இதன் தொடர்ச்சியாக நீட் தேர்வை இரத்து செய்ய, கழக அரசு அமைந்தவுடன், முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே சட்டம் இயற்றப்படும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறோம். அதை நிறைவேற்றும் வகையில், மருத்துவம், பல் மருத்துவம், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி ஆகிய இளநிலை மருத்துவக் கல்விச் சேர்க்கைகளை, இனிமேல் 12 ஆம் வகுப்புத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் நடத்துவதற்கு ஏதுவாக, வலிமையான சட்டமுன்வடிவினை இப்பேரவையில் நான் முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கழக அரசு பொறுப்பேற்றவுடன் நீட் தேர்வுக்கு எதிரான சட்டப் போராட்டத்தைத் தொடங்கியிருக்கிறோம். ஒன்றிய அரசால் நடத்தப்படும் நீட் தேர்வால் சமுதாயத்தில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பித்திட, ஓய்வு பெற்ற நீதியரசர் டாக்டர் ஏ.கே. இராஜன் தலைமையில் ஒரு குழுவை அமைத்தோம். அரசாணை எண் 283, மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத் துறை, நாள் 10–6–2021–ன்படி இந்தக் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவிலே பல்வேறு கல்வியாளர்கள் மற்றும் அதிகாரிகள் இடம்பெற்றிருந்தார்கள். இந்த உயர்மட்டக் குழுவின் ஆய்வு வரம்புகளும் வெளியிடப்பட்டன. பொதுமக்கள் அனைவரிடமிருந்தும் கருத்துகளை இக்குழு கேட்டுப் பெற்றது. மின்னஞ்சல், கடிதங்கள் மற்றும் ஆணையத்தில் வைக்கப்பட்டிருந்த கருத்துக் கேட்புப் பெட்டியில் போடப்பட்ட மனுக்கள் என ஆணையத்துக்குப் பல்லாயிரக்கணக்கானவர்கள் தங்களுடைய கருத்துகளைத் தெரிவித்திருந்தார்கள். இந்த வழிமுறைகளின்

வாயிலாக 86 ஆயிரத்து 342 பேர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துகளை ஆராய்ந்து, தனது விரிவான பரிந்துரைகளை நீதியரசர் ஏ.கே. இராஜன் குழு 14–7–2021 அன்று அரசுக்கு அளித்தது. அந்தப் பரிந்துரைகளில் சமுதாயத்தில் பின்தங்கியோர் மருத்துவக் கல்வியைப் பெறும் கனவிற்கு இடையூறாகவும், சமூகப் பொருளாதாரத்தில் வளமிகுந்த பிரிவினருக்கு சாதகமாகவும் இருந்து, எம்.பி.பி.எஸ். மற்றும் உயர் மருத்துவப் படிப்புகளிலுள்ள பலதரப்பட்ட சமூகப் பிரதிநிதித்துவத்தை நீட் தேர்வானது குறைத்துள்ளது என்று தெரிவித்துள்ளது.

குறிப்பாக, அரசுப் பள்ளியின் மாணவர்கள், பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூபாய் 2.5 இலட்சத்திற்கும் குறைவாகக் கொண்டுள்ளவர்கள், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், பட்டியலினத்தவர் மற்றும் பட்டியலின பழங்குடியினர் போன்ற பிரிவுகளைச் சேர்ந்த வசதி குறைந்தவர்கள் இதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10–25

மேலும், எம்.பி.பி.எஸ். மாணவர்களின் தகுதி அல்லது தரத்தினை நீட் தேர்வு உறுதி செய்வதாகத் தெரியவில்லை எனவும், ஒப்பிடுகையில், குறைந்த செயல்திறன் கொண்ட (தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு மதிப்பெண்கள் மற்றும் மேனிலை மதிப்பெண்களில்) மாணவர்கள் எம்.பி.பி.எஸ். படிப்பில் சேர்க்கை பெறுவதற்கு மட்டுமே தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு புகுத்தப்பட்டுள்ளது எனவும் அறிக்கை முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

ஆகவே, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்சார் கல்வி நிறுவனங்களில் சேர்க்கைச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 3/2007) போன்றதொரு சட்டத்தை மாநில அரசு நிறைவேற்றி, அதற்காக குடியரசுத் தலைவருடைய ஒப்புதலைப் பெறலாம் என்றும் இந்தக் குழு பரிந்துரை செய்துள்ளது. இந்த உயர்மட்டக் குழு அளித்த விரிவான பரிந்துரைகளைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள, தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அரசுச் செயலாளர்களைக் கொண்ட குழு ஒன்று 15–7–2021 அன்று அமைக்கப்பட்டது. செயலாளர்கள் குழு, 2007–ல் தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்ட சட்டத்தைப் போன்று மருத்துவக் கல்விச் சேர்க்கைக்கு நீட் தேர்வினை விலக்குவதற்கான காரணத்தைக் குறிப்பிட்டு சட்டம் இயற்றி, சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல்

பெற்று, அதற்கு மாண்புமிகு குடியரசுத் தலைவருடைய ஒப்புதல் பெற வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

நீட் தேர்வானது மருத்துவக் கல்வியின் தரத்தை மேம்படுத்துகிறது என்பதும் தவறானதே. 2017 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே அதிக மருத்துவம் மற்றும் பல் மருத்துவக் கல்வி நிறுவனங்களைக் கொண்டுள்ள மாநிலங்களுள் தமிழ்நாடு ஒன்றாக இருந்தது. இந்த நிறுவனங்களிடமிருந்து பட்டம் பெற்ற மருத்துவர்கள் மற்றும் பல் மருத்துவர்கள் மிகவும் திறமை வாய்ந்தவராக விளங்கினர். எனவே, மேல்நிலைப் பள்ளிப் பாடத் திட்டம் போதுமான தரத்தில் இருக்கும் சூழலில், தகுதித் தேர்வின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் சேர்க்கையானது எந்த வகையிலும் கல்வியின் தரத்தை நிர்ணயிக்காது.

மேலும், பள்ளித் தேர்வு மதிப்பெண்கள், நெறிப்படுத்துதல் முறை மூலமாக சரிசெய்யப்பட்டால் அது முறையான, நியாயமான மற்றும் நடுநிலையான சேர்க்கை முறையை வழங்கும். மருத்துவக் கல்விப் படிப்புகளுக்கான சேர்க்கையினை இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையின் மூன்றாவது பட்டியலில் 25–வது உள்ளீட்டில் காணலாம். எனவே, மாநில அரசானது அதை முறைப்படுத்த தகுதியுடையது. ஆகவே, இன்று என்னால் இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தப் புதிய சட்டமுன்வடிவில், மருத்துவ இளநிலைப் படிப்பில் அரசு ஒதுக்கீடு இடங்கள், தனியார் மருத்துவக் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடு செய்யும் இடங்கள் ஆகியவற்றிற்கு 12 ஆம் வகுப்புத் தேர்வு மதிப்பெண்கள் அடிப்படையில் மட்டுமே மாணவர் சேர்க்கை நடத்த முன்மொழியப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 விழுக்காடு முன்னுரிமை ஒதுக்கீடு செய்யவும் முன்மொழியப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

உயர்மட்டக் குழுவின் பரிந்துரையை கவனமாக பரிசீலித்த பின்பு, சமூகநீதியை உறுதிசெய்யவும், சமத்துவம் மற்றும் சம வாய்ப்புகளை நிலைநிறுத்தவும், பாதிப்பிற்குள்ளாகக்கூடிய மாணவர்களைப் பாதுகாக்கவும், மாநிலத்தில், முக்கியமாக கிராமப் பகுதிகளில், வலுவான சுகாதாரக் கட்டமைப்பை

2021 செப்டம்பர் 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

உறுதி செய்யவும், பன்னிரெண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் அனைத்து மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கையை மேற்கொள்ள இச்சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டுள்ளது.

எனவே, அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த மாமன்ற உறுப்பினர்கள் இந்தச் சட்டமுன்வடிவினை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நீட் தேர்வால் அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த அனிதா தொடங்கி, ஏராளமான மாணவர்கள் தங்களுடைய உயிரை இழக்கக்கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். நேற்றைக்குக்கூட சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த தனுஷ் என்ற மாணவர் இந்த நீட் தேர்வினால் உயிரிழந்திருக்கிறார். உயிர்க்கொல்லியாக மாறி வரும் நீட் தேர்விலிருந்து நிரந்தர விலக்கு பெறுவதற்கான இந்த மசோதாவை மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அரசும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் நடத்திய சட்டப் போராட்டத்தின் விளைவாக, மருத்துவக் கல்விக்கான அகில இந்திய ஒதுக்கீட்டில் இன்றைக்கு 27 விழுக்காடு இடஒதுக்கீட்டினைப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு பெற்று வரலாற்றுச் சாதனையை நாம் புரிந்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நீட் தேர்வு விவகாரத்திலும் அனைத்துக் கட்சிகளின் சட்டமன்ற உறுப்பினர்களும் முழு ஒத்துழைப்பினை நல்கி, சமூகநீதியில் வரலாறு படைத்திட துணைநிற்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

[பேரவைத் தலைவர்] [2021 செப்டம்பர் 13

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 10–30

(ஈ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்து மதத்திற்கு எதிராகத்தான் எழுந்து நிற்கிறீர்கள். நான் முடித்துவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், நீங்கள் உட்காருங்கள், நான் வாய்ப்புத் தருகிறேன்.*

(உ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடு)

5. பிரதான எதிர்க்கட்சி (அ.இ.அ.தி.மு.க.) உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி வெளிநடப்பு, பேரவைத் தலைவர் விளக்கம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உட்காருங்கள். வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள், Zero Hour-ல் நேரமில்லா நேரத்தில், ஒரு பிரச்சினையை எழுப்புகிறேன், அதற்கு அனுமதி தாருங்கள் என்று என் room-ல் கேட்டார், அதற்கு அனுமதி தந்தோம். அவர், அந்தப் பிரச்சினையை எழுப்பி, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும் பதில் சொல்லி விட்டார்கள். ஏற்கெனவே விதி 55-ன்கீழ் கொடுக்கப்பட்டது. Agenda-வில் எடுக்கப்பட்ட ஒரு கவன ஈர்ப்பு தீர்மானமாக இருந்தால்தான், இரண்டாவது கேள்விக்கு அனுமதி. அப்படி இல்லையென்றால், Zero Hour-ல் 'ஒரு கேள்வி, ஒரு பதில்', அதோடு முடிந்தது. ஆகவே, பேரவைத் தலைவர் என்ற முறையில், 'நான் அவரைக் கேள்விக் கேட்க அனுமதிக்கவில்லை என்கிற முறையில் 'வெளிநடப்பு செய்கிறேன் என்று உறுப்பினர் சொன்னதை' இந்த அவைதான் நல்ல முடிவு செய்ய வேண்டும். ஏற்கெனவே கடந்த கால ஆட்சியில் நடந்த— மாண்புமிகு LOP அவர்கள், மாண்புமிகு பிரதான எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்விக்கு, முழுமையாக கேள்வி கேட்க அனுமதித்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே முழுமையாக கேள்வி கேட்க சொன்னார்கள். முழுமையாக கேள்விக் கேட்டு, பதிலையும் பெற்றாகிவிட்டது என்பதையும், அதன் பின்னர் அவர்கள் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2021 செப்டம்பர் 13]

6. மானியக் கோரிக்கைகள், 2021–2022, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 22-காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 23-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021–2022 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள், விவாதமும், வாக்கெடுப்பும். 9–9–2021 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின்மீதான விவாதத்திற்குப் பதிலுரை, வாக்கெடுப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள், Discussion வரும். அப்போது எடுத்துக்கொள்ளலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறாவது முறையாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி அமைந்து, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு முதலமைச்சராக, முதல் காவல் துறை மானியக் கோரிக்கையை இந்தப் பேரவையின்முன் வைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதங்களின் வாயிலாக விமர்சனங்களையும், விமர்சனங்களின் மூலமாக நல்ல பல கருத்துகளையும் வழங்கி இருப்பதற்கு நான் உள்ளபடியே என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

என் அருகில் அமர்ந்திருக்கிற மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், தனது நீர்வளத் துறையின் சார்பிலான மானியக் கோரிக்கை அறிக்கையை இந்த அவையில் முதலாவதாகத் தாக்கல் செய்தார். மானியக் கோரிக்கையானது ஒரு சுற்று, சுற்றி இப்போது என்னிடம் வந்திருக்கிறது.

நிகழ்கால கழக ஆட்சி, கடந்த கால கழக ஆட்சியின் தொடர்ச்சி என்பதனால், காவல் துறை ஒளி பெறவும், வழிகாட்டவும் தேவையான திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்ற நம்பிக்கையைப் பேரவைக்கு முன்கூட்டியே நான் தெளிவுபடுத்திட விரும்புகின்றேன்.

சமூகத்தில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டிடும் கடமையும், பொறுப்பும் காவல் துறை வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. எந்த ஒரு நாட்டில் சட்டம்-ஒழுங்கு சரியாக இருக்கிறது எனச் சொல்லப்படுகிறதோ, அங்கே சட்டங்கள் ஏற்கப்பட்டு, முறையாகப் பின்பற்றப்படுகின்றன; அதன் காரணமாக அந்தச் சமுதாயம் இயல்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது என நம்பிக்கை ஏற்படுத்திக்கொள்ளலாம்.

ஒரு சட்டம் நியாயமற்றது என்றால். அதற்கு கீழ்ப்படிய மறுப்பது உரிமை எனக் கருதப்பட வேண்டும் (When a Law is unjust, it is only right to disobey) என தாமஸ் ஜெஃபர்சன், மகாத்மா காந்தியடிகள் ஆகியோர் கூறியிருப்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

முற்பகல் 10–35

முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள், 15–3–1969 அன்று, "எந்தச் சமுதாயத்தில் இருந்து போலீஸ் படையினர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ, அந்தச் சமுதாயத்தை பிரதிபலிக்கின்ற நிலைக் கண்ணாடிகளாக அப்படையினர் விளங்குவார்கள். போலீஸ் படை நன்றாக நேர்த்தியாக செயல்படுகிறது என்றால், அது சமுதாயத்தின் தன்மையைக் காட்டும். அதேபோல, போலீஸ் படையினர் எங்கேனும் செயலாற்றுவதில் தவறுகள் இழைத்தால், சமுதாயத்தில் நிலவும் குறைபாட்டையே அவை காட்டுகின்றன" என்று இந்த அவையிலே கூறியிருக்கிறார்கள்.

தி.மு. கழகத்தைப் பொறுத்தவரைக்கும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, போலீசாருடைய நன்மைக்காக, நல்வாழ்வுக்காக எப்போதும் வாதாடக் கூடியவர்கள். முதலமைச்சராக இந்தப் பேரவைக்கு நான் வழங்கும் முதல் காவல் துறையினுடைய மானியக் கோரிக்கை இது. இருந்தாலும், ஏற்கெனவே 20–7–2009 அன்றும், 10–5–2010 அன்றும்,

முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் கட்டளையை ஏற்று, அவர் சார்பில் காவல் துறை மானியக் கோரிக்கையை முன்வைத்து, துணை முதலமைச்சர் என்ற முறையில் பதிலுரைகளை நான் ஆற்றி இருக்கிறேன் என்பதை இந்த நேரத்திலே நினைவுகூர்ந்திட விழைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் அன்றாடம் கற்றுப் பெற்ற அனுபவம்; 7–7–2017 அன்றும், 26–6–2018 அன்றும், சட்டப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவராக காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது எடுத்து வைத்த கருத்துகள்; ஆகியவற்றின் தொடர்ச்சியாக, இன்றைக்குக் காவல் துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்குப் பதிலளித்திட முன்வந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் இதே பேரவையில் காவல் துறை மானியக் கோரிக்கைக்கு 5–7–1967 அன்று பதிலுரை ஆற்றியபோது, மூன்று முக்கியமான குறிக்கோள்களை காவல் துறைக்கு வரையறுத்துக் காட்டி இருக்கிறார். "நாட்டினுடைய சமுதாய வாழ்விற்கு, காவல் துறை திறமையாக இருக்க வேண்டும்; திறமையுள்ள போலீஸ் துறை அமைய வேண்டுமானால், அவர்களுக்குப் போதுமான அளவிற்கு வசதிகள் செய்து தரப்பட வேண்டும்; அந்தத் துறையிலேயே வேறு யாரும் தலையிட்டு, தங்களுக்குச் சாதகமாக அந்தத் துறையை திருப்பிக்கொள்ளக் கூடாது" என்பவைதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் கோடிட்டுக் காட்டிய மூன்று குறிக்கோள்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு முதலமைச்சராகப் பொறுப்பேற்ற முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் காலடிச் சுவடுகளைக் கைகளால் அளந்து ஓர் அங்குலம் கூட விட்டுவிடாமல் பின்பற்றிய காரணத்தினால், தமிழகக் காவல் துறையின் மறுமலர்ச்சிக்கு அந்த மூன்று குறிக்கோள்களை நடைமுறைப்படுத்திட நாளும் முயன்றார் என்பது நாம் பெருமிதம் கொள்ளத்தக்கதாகும்.

காவல் துறை முன்னேற்றத்திற்கு கழக அரசு கடந்த காலங்களில் நிகழ்த்திய அரிய பல சாதனைகளின் உணர்வுடன், அந்த உணர்வு உருவாக்கித் தந்துள்ள உவகையுடன் நான் இப்போது பதிலுரையாற்றிக் கொண்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு, பிரபல பத்திரிகைகளும், ஆங்கில வார இதழ்களும், மாநில, தேசிய நாளிதழ்களும் பாராட்டக்கூடிய வகையில் ஆட்சி செய்து கொண்டிருக்கிறோம். அப்படிப் பாராட்டிய சிலவற்றை இந்த அவையில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உலகப் புகழ்பெற்ற எக்கனாமிஸ்ட் இதழின் ஜூலை 3 ஆம் தேதியிட்ட பதிப்பில், முதலமைச்சராக உள்ள எனது தலைமையிலான அரசின் செயல்பாடுகளைப் பாராட்டி கட்டுரை வெளியாகியுள்ளது. 'இந்து' குழுமம் வெளியிடும் 'பிரண்ட்லைன்' இதழில் 'action from Day 1' என்றும்; 'Panel for Progress' என்றும்; 'Free rides for women's empowerment' என்றும் பல்வேறு கட்டுரைகள் அரசின் செயல்பாடுகளை வரவேற்று, கடந்த சில மாதங்களில் வெளியாகியிருக்கின்றன.

தமிழ்நாடு முதலமைச்சரும், அமைச்சர்களும் ஓய்வுறக்கம் இன்றி பணியாற்றுவதைச் சுட்டிக்காட்டி 'Rising Sun Never Sets' என்று குறிப்பிட்டு, 'தி வீக்' இதழ் செய்தி வெளியிட்டது.

இந்தியா டுடே இதழ் 'Solid Start' என்று இந்த அரசின் 100 நாட்கள் செயல்பாடுகளைப் பாராட்டி ஆகஸ்ட் 2 ஆம் தேதியிட்ட இதழில் கட்டுரை வெளியிட்டிருக்கிறது. மேலும், 'a refreshing focus on efficiency and transparent governance' என்றும் எழுதியது.

இந்துஸ்தான் டைம்ஸ் நாளேடு, '100 Days of DMK; Activities of HR&CE are back to life' என்று இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையில் நமது செயல்பாடுகளைப் பாராட்டியிருக்கிறது.

தினத்தந்தி நாளிதழ், 'மு.க. ஸ்டாலின் கொண்டு வரும் திராவிட மாடல் வளர்ச்சி' என்று ஜூலை 14 ஆம் தேதியிட்ட இதழில் தலையங்கம் தீட்டியிருக்கிறது.

இப்படி தமிழ்நாட்டில் இருந்தும், பிற மாநிலங்களிலிருந்தும், டெல்லியில் இருந்தும் உலகின் பிற பகுதிகளில் இருந்தும் வெளியாகக்கூடிய முன்னணி இதழ்கள் அனைத்தும் போற்றும் விதத்தில் முன்னேற்றத்தை நோக்கியே இந்த அரசு போய்க்கொண்டிருக்கிறது என்பது தெளிவாகத் தெரியும்.

2021 செப்டம்பர் 13] [*திரு. மு.க. ஸ்டாலின்*]

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒருமாத காலமாக நடந்த மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பங்கெடுத்துப் பேசிய அமைச்சர்கள் அனைவரும் இந்த அரசிடம் என்னவெல்லாம் இருக்கிறது என்பதை விரிவாகப் பேசியிருக்கிறார்கள். உள் துறை சார்பில் என்னைக் கேட்டால், எதுவெல்லாம் இல்லை என்பதைத்தான் நான் சொல்ல முடியும்.

இந்த ஆட்சியில் வன்முறைகள் இல்லை! சாதிச் சண்டைகள் இல்லை! (மேசையைத் தட்டும் ஒலி) *மத மோதல்கள் எழவில்லை! துப்பாக்கிச் சூடுகள் இல்லை! அராஜகங்கள் இல்லை! இதுதான் இந்த ஆட்சியின் மாபெரும் சாதனையாகும்.*

உள் துறை சார்பில் சொல்ல விரும்புவது, தமிழ்நாட்டு மக்கள் அமைதியான வாழ்க்கை வாழ்வதற்கான அடித்தளத்தை அமைத்துத் தந்திருக்கின்றோம். இதனை உருவாக்கிக் கொடுத்த காவல் துறை அதிகாரிகள் தொடங்கி, கடைநிலைக் காவலர் வரைக்கும் அனைவருக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதிலும் கொரோனா ஊரடங்கு காலத்திலும் விடுப்பே இல்லாமல் தங்கள் உயிரைப் பணயம் வைத்து பணியாற்றியவர்கள் காவல் துறையைச் சார்ந்தவர்கள். அவர்கள் தியாகத்திற்கு ஈடுஇணை எதுவும் கிடையாது. ஆனாலும், அவர்களுக்கு நாம் காட்டும் நன்றியின் அடையாளமாக 25 இலட்சம் ரூபாய் வழங்கினோம். காவலர்கள் அனைவருக்கும் தலா 5,000 ரூபாய், கொரோனா நிவாரண நிதியாக வழங்கிய அரசுதான் இந்த அரசு. இதற்கென 58.27 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

விடுப்பே இல்லாமல் பணியாற்றும் காவலர்களின் கவலையைப் போக்க, வாரத்தில் ஒருநாள் விடுப்பு வழங்கப்பட்டுள்ளது. 968 உதவி ஆய்வாளர்களுக்குப் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. 10 கோடி ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த சைபர் பயிற்சி வளாகம் அமைப்பதற்கு அடிக்கல் நாட்டி இருக்கிறேன். தடய அறிவியல் துறை சார்பில் இளநிலை அறிவியல் அலுவலர் பணியிடங்களுக்காக 62 பேருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, தமிழ்நாட்டின் அனைத்துத் தொகுதிகளுக்கும் சென்று நான் மக்களிடம் மனுக்களைப் பெற்றேன். அந்த மனுக்களை ஆட்சிக்கு வந்த 100 நாட்களில் நிறைவேற்றிக் காட்டுவேன் என்று சொன்னேன். அந்த மனுக்களில் உள் துறை தொடர்பாக வந்த மனுக்கள் 1,498. இந்த மனுக்கள் அனைத்துக்கும் தீர்வு கண்டிருக்கிறோம் என்பதையும் இந்த மன்றத்துக்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காவலர்கள் நலன் பேணுவதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு எப்போதும் சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது. ஒவ்வொரு முறை ஆட்சியில் அமருகின்றபோதும், காவலர்கள் அனைவரது கவலையையும் தீர்க்கும் வகையில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறோம்.

காவல் துறையை நவீனப்படுத்துவதற்காக, 1969 ஆம் ஆண்டு முதலாவது காவல் துறை ஆணையம், 1989 ஆம் ஆண்டு இரண்டாவது காவல் துறை ஆணையம், 2006 ஆம் ஆண்டு மூன்றாவது காவல் துறை ஆணையம் அமைத்து, அந்த ஆணையங்களின் பரிந்துரைகளை நிறைவேற்றியவர்தான் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

1971 ஆம் ஆண்டு காவல் துறையில் கம்ப்யூட்டர் பிரிவு தொடங்கியதும், வீரதீர செயல்கள்புரியும் காவலர்களுக்கு அண்ணா பதக்கம் வழங்கத் தொடங்கியதும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலான தி.மு.கழக ஆட்சியில்தான். அவரது வழிநின்று, காவலர்களின் கோரிக்கைகள் மற்றும் தேவைகளை அறிவதற்காக காவல் துறை ஆணையம் விரைவில் அமைக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தி.மு.க.-வின் தேர்தல் அறிக்கையில் காவல் துறையினருக்கான பல்வேறு வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப் படிப்படியாக நிச்சயமாக, உறுதியாக நிறைவேற்றுவோம். தேர்தல் வாக்குறுதியின்போது சொல்லப்பட்டதில் சில முக்கியமான வாக்குறுதிகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மட்டும் இந்த அவைக்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

குடியுரிமைத் திருத்தச் சட்டம், வேளாண் சட்டங்கள், சேலம் எட்டு வழிச்சாலை, கூடங்குளம் அணு உலை, மீத்தேன், நியூட்ரினோ, ஹைட்ரோ கார்பன் ஆகியவற்றுக்கு எதிரான போராட்டங்களில்

கலந்துகொண்டவர்கள்மீது போடப்பட்ட வழக்குகளை வாபஸ் பெறுவதாகச் சொன்னோம். அதன்படி, 5,570 வழக்குகள் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக கடந்த ஆட்சியின்போது, 22–5–2018 அன்று நடந்த போராட்டத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தி 13 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். அப்பாவி மக்கள்மீது போடப்பட்ட 36 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன. பல்வேறு வழக்குகளில் சிக்க வைக்கப்பட்ட 93 பேருக்கு தலா 1 இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகையாகத் தரப்பட்டுள்ளது. இறந்தவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும், காயம் அடைந்தவர்களுக்கும் அவர்களது தகுதிக்கு ஏற்ற வேலைவாய்ப்பை வழங்கி இருக்கிறோம். ஸ்டெர்லைட் ஆலை துப்பாக்கிச் சூடு தொடர்பாக நீதி விசாரணை செய்ய அமைக்கப்பட்ட ஆணையத்தின் பதவிக் காலத்தை நீட்டித்துக் கொண்டே வந்திருக்கிறது கடந்த அ.தி.மு.க. அரசு. ஆட்சி அமைந்ததும் அந்த ஆணையத்தின் இடைக்கால அறிக்கையை இந்த அரசு பெற்றிருக்கிறது. இறுதி அறிக்கையை பிப்ரவரி 22-க்குள் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அறிக்கை கிடைத்த பிறகு அடுத்தகட்ட நடவடிக்கையை நிச்சயமாக நாங்கள் எடுப்போம்.

முற்பகல் 10–45

பொள்ளாச்சி பாலியல் வன்முறை வழக்கைப் பொறுத்தவரையில், அதனை CBI விசாரணை நடத்தி வருகிறது. இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் திருமதி முத்தரசி என்ற CBCID பெண் எஸ்.பி. அதிகாரி இதற்காக நியமிக்கப்பட்டு, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதி கிடைக்கவும், குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை கிடைத்திடவும், வழக்கினை விரைந்து நடத்திடவும் முழு ஒத்துழைப்பு வழங்கி வருகிறது.

அம்மையார் ஜெயலலிதா அவர்களுடைய மரணத்தில் உள்ள மர்மங்கள் குறித்து விசாரிக்க கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட ஓய்வுபெற்ற நீதியரசர் ஆறுமுகசாமி ஆணையத்தின் விசாரணையையும் விரைந்து முடிக்கச் சொல்லியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலஞ்ச ஒழிப்புத் துறைக்கு வந்துள்ள புகார்களின் அடிப்படையிலும் படிப்படியாக விசாரணைகள் நடந்து வருகின்றன.

இவையனைத்துமே தேர்தல் காலத்தில் மக்கள் மன்றத்தில் கொடுத்த வாக்குறுதிகள்தான். அவற்றைத்தான் இப்பொழுது நாங்கள் நிறைவேற்றத் தொடங்கியிருக்கிறோம்.

இதுமட்டும்தானா என நீங்கள் நினைத்து விட வேண்டாம். மாறி வரும் குற்றங்கள், மக்களின் பாதுகாப்புச் சூழல்கள் ஆகியவற்றை மனதில் கொண்டு, சென்னை பெருநகரக் காவல் துறையை மற்ற பெருநகரங்களில் உள்ளதுபோல் சீரமைத்திட இந்த அரசு எண்ணியுள்ளது. அந்த அடிப்படையில், ஆவடி, தாம்பரம் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு தனித் தனி புதிய காவல் ஆணையரகங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களுடைய 113–வது பிறந்தநாள் வருகிற செப்டம்பர் 15 ஆம் தேதியன்று வருகிறது. அப்போது, நீண்ட காலம் சிறைவாசம் அனுபவித்துவரும் 700 ஆயுள் தண்டனைக் கைதிகளின் தண்டனையை நல்லெண்ணம் மற்றும் மனிதாபிமான அடிப்படையில் குறைத்து, முன்விடுதலை செய்ய இந்த அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி) சிறைக் கைதிகளின் முன்விடுதலை தொடர்பான சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு, இதற்கான அரசாணை விரைவில் வெளியிடப்படும்.

மக்கள்தொகைக்கேற்ப மக்களுக்குச் சேவையாற்ற 10 புதிய காவல் நிலையங்கள் அமைக்கப்படும். தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகளை விரைந்து மேற்கொள்வதற்கு வசதியாக 4 புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் அமைக்கப்படும்.

இந்த அரசைப் பொறுத்தவரையில், குற்றம் என்ற ஒன்று நடந்தால் சாதி, மதம், இனம், மொழி, கட்சி பார்க்காமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் காவல் துறைக்கு கண்டிப்பான உத்தரவை வழங்கியிருக்கிறேன். அதன் அடிப்படையில், தனியார் பள்ளியில் மாணவிகளுக்குப் பாலியல் தொல்லை கொடுத்ததாக ஓர் ஆசிரியர்மீது புகார் வந்ததும் அவர் உடனடியாக கைது செய்யப்பட்டார். விளையாட்டுப் பயிற்சியாளர்கள் இருவரும் உடனடியாகக் கைது செய்யப்பட்டார்கள். பாலியல் புகார் எழுந்ததைத் தொடர்ந்து தனியார் பள்ளி உரிமையாளர் ஒருவரை உடனடியாகக் கைது செய்தோம். பட்டியலினத்தவரை விமர்சித்துப் பேட்டி அளித்த ஒரு நடிகை உடனடியாகக் கைது செய்யப்பட்டார்.

PUBG விளையாட்டு மூலமாக Youtube Channel-ல் ஆபாசமாக நடந்துகொண்ட ஒருவர் கைது செய்யப்பட்டார். இவற்றை நினைவூட்டுவதற்குக் காரணம், புகார் எழுந்ததும் எவரையும் தயவு தாட்சண்யம் பார்க்காமல் கைது செய்யும் அரசாக இந்த அரசு இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இதைச் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், மணல் கடத்தல், குட்கா விற்பனை, பொது விநியோகப் பொருட்கள் கடத்தல் ஆகிய குற்றங்களில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்கள்மீதெல்லாம் வழக்கும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

காவல் துறையை நவீனப்படுத்த வேண்டும். இன்றைக்கு அனைத்தையும் விஞ்சியதாக cyber குற்றங்கள் பெருகிவிட்டன. தொழில்நுட்பம் வளர வளர அதனைக் குற்றம் செய்வோர் பயன்படுத்திக்கொள்கிறார்கள். தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திச் செய்யும் குற்றங்கள் பெருகிவிட்டன. இணையவழிப் பொருளாதாரக் குற்றங்கள் அதிகமாகிவிட்டன. தொழில்நுட்பச் சேவைகளைத் திருடுவது, தகவல்களை அழிப்பது, முகம் தெரியாதவர்களை ஏமாற்றுவது, இணையதளங்கள் மூலமாக மிரட்டுவது, போலிக் கணக்குகள், போலிப் பெயர்கள் ஆகியவை பெருகிவருகின்றன. இந்த இணையதளங்கள் மூலமாக பாலியல் குற்றங்களும் அதிகமாகி வருகின்றன. நிதிக் குற்றவாளிகளும், பாலியல் குற்றவாளிகளும் நவீன தொழில்நுட்பத்தை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். இதனைக் கண்டுபிடித்துத் தடுப்பதற்கான நவீன வழிமுறைகள் கொண்டதாக தமிழ்நாடு காவல் துறை நிச்சயமாக மாற்றி அமைக்கப்படும்.

தடய அறிவியல் துறையானது மாநில காவல் துறை, மத்திய புலனாய்வுத் துறை மற்றும் தேசிய புலனாய்வுத் துறை ஆகிய புலனாய்வு அமைப்புகளுக்கு குற்றங்களைக் கண்டறிவதற்குரிய அறிவியல்சார் சேவைகளை வழங்கி வருகிறது. குற்றப் புலனாய்வில் எந்த ஒரு சவாலையும் எதிர்கொள்ளும் வகையில் தடய அறிவியல் துறையின் பகுப்பாய்வுத் திறனை மேம்படுத்த அரசு தொடர்ந்து ஊக்குவித்து வருகிறது.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்புத் துறைக்கு வாகனங்களே முதுகெலும்பாக அமைகின்றன. ஆகையால், உழைப்புக் காலம் முடிந்த தீயணைப்பு வாகனங்களுக்கு

மாற்று ஊர்திகள் கொள்முதல் செய்ய துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும், இத்துறைப் பணியாளர்களுக்கு சர்வதேச தரத்தில் பயிற்சி அளிப்பதுடன், அவர்களது உயிர்காக்க மேம்பட்ட பாதுகாப்புக் கவசங்களை வழங்கவும் முன்னுரிமை வழங்கப்படும்.

காவல் துறை என்றாலே குற்றங்களைத் தடுக்கும் துறையாக, தண்டனை வாங்கித் தரும் துறையாக மட்டும் அனைவரும் நினைக்கிறார்கள். காவல் துறை என்பது குற்றங்கள் நடக்காத வகையில் சூழ்நிலையை உருவாக்கித் தரும் துறையாக மாறவேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை; இந்த அரசினுடைய எண்ணம். அதனை நிறைவேற்றிக் காட்டும் விதத்தில் இந்த அரசின் செயல்பாடுகள் இருக்கும் என்று நான் உங்களுக்கெல்லாம் உறுதியாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காவல் துறை மானியக் கோரிக்கைமீது நடைபெற்ற விவாதத்திலே இங்கு இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் தங்களுடைய கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு இந்தத் தருணத்தில் நான் பதிலுரையாற்றக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள் போலீஸ் அதிகாரிகளுக்குப் பயிற்சி வழங்குவது குறித்துப் பேசினார். போலீஸ் அதிகாரிகளைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு பதவிக்கும் ஏற்றவாறு பல்வேறு பயிற்சிகள், புத்தாக்கப் பயிற்சிகள் எல்லாம் Police Academy–ல் வழங்கப்பட்டு வருகின்றன. அதை மேலும் விரிவுபடுத்தி உயர் போலீஸ் அதிகாரிகளுக்கும் குறிப்பிட்ட கால இடைவெளியில் பயிற்சி வழங்குவது குறித்து அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள் தமிழ் வழியில் பயின்றவர்களுக்கு முன்னுரிமை வழங்குவது குறித்து இங்கே பேசினார். இட ஒதுக்கீடு தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு ஆணையத்தால் நடத்தப்படும் தேர்வுகளில் 20 விழுக்காடு முன்னுரிமை வழங்கப்படும் என்று 2010 ஆம் ஆண்டு கழக ஆட்சியில்தான் அது செயல்படுத்தப்பட்டது. இடைப்பட்ட 10 ஆண்டுகளில் அவ்வாறு செயல்படுத்தப்படவில்லை. பல வழக்குகள் நீதிமன்றத்திற்குச் சென்றன. ஆனால், இப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தெளிவான

உத்தரவைப் பிறப்பித்திருக்கிறோம். மனிதவள மேலாண்மைத் துறையால் 16-8-2021 அன்று வெளியிடப்பட்ட அரசாணை எண் 82-ல் குறிப்பிட்டுள்ளபடி, வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதி வரை தமிழ் வழியில் பயின்றவர்களுக்கு மட்டுமே 20 விழுக்காடு முன்னுரிமை வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறோம் என்பதை அவருக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்; பலவற்றைக் குறிப்பிட்டார். இருந்தாலும், ஒன்றை மட்டும் தேர்வு செய்து அதற்கு நான் பதில் சொல்ல விரும்புகிறேன். ஓய்வுபெற்ற காவலர் மற்றும் காவல் துறை அதிகாரிகளுக்கு நல வாரியம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தார். அந்தக் கோரிக்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது. நல வாரியம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் ஒரு கோரிக்கையை வைத்தார்கள். 1996 ஆம் ஆண்டு நியமனம் செய்யப்பட்ட உதவி ஆய்வாளர்களின் பதவி உயர்வு குறித்து இங்கே அவர் பேசினார். அரசு ஊழியர்கள் ஓய்வுபெறும் வயதை அ.தி.மு.க. ஆட்சியில் 59 என்றும், பிறகு 60 என்றும் உயர்த்தியதாலும், 85 காவல் துணை கண்காணிப்பாளர்கள் நேரடியாகத் தேர்வு செய்யப்பட்டு பணியில் சேர்ந்திருப்பதாலும், 1996 ஆம் ஆண்டு நேரடி காவல் உதவி ஆய்வாளர் பணிக்காகத் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு காவல் துணை கண்காணிப்பாளர்களாகப் பதவி உயர்வு வழங்குவது காலதாமதமாகிறது. ஆனாலும், அவர்களுக்கு 1-6-2022-லிருந்து பதவி உயர்வு வழங்குவதற்கான நடவடிக்கைகளை ஏற்கெனவே இந்த அரசு எடுப்பதற்குத் தொடங்கியிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசும்போது மாநில ஆவணக் காப்பகத்தின் தற்போதைய நிலை குறித்து அவர் கவலை தெரிவித்தார். மாநில ஆவணக் காப்பகம் செயல்படுவதற்கும், உரிய அறிக்கைகளை வெளியிடுவதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள் பேசும்போது காவலர் மருத்துவமனையை பல்நோக்கு மருத்துவமனை தரத்திற்கு இணையாக உயர்த்த வேண்டுமென்று கூறியிருந்தார். அதையும் இந்த அரசு நிச்சயம் பரிசீலிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள் பேசும்போது, பிரகாஷ் சிங் வழக்கில் சொல்லப்பட்டுள்ள காவல் துறை சீர்திருத்தங்களை முழுமையாக நிறைவேற்றியது அ.தி.மு.க. ஆட்சிதான் என்று குறிப்பிட்டார். ஆனால், நான் சொல்ல விரும்புவது தி.மு.க. அரசுதான் காவல் துறை சீர்திருத்தங்களைச் செயல்படுத்த முதன்முதலில் நடவடிக்கை எடுத்தது. (மேசையைத் தட்டும் ஒலி) 14–5–2008 அன்றே இதே அவையில் Tamil Nadu Police Bill, 2008 கொண்டு வந்தது கழக அரசுதான். அதன் தொடர்ச்சியாக, பிறகு வந்த அ.தி.மு.க. ஆட்சியில் 2013–ல் சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன.

ஆனால், அந்தச் சட்டத்தின்படி அ.தி.மு.க. அரசு 10 ஆண்டுகளில் நடந்து கொள்ளவில்லை. ஓய்வு பெறும் நாளில் இந்த வழக்கின் சீர்திருத்தங்களைப் பயன்படுத்தி DGP நியமனங்களைச் செய்து, அது நீதிமன்றம் வரை சென்று வழக்கெல்லாம் நடைபெற்றதை மறந்திருக்கமாட்டீர்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில், DGP ஆக திரு. திரிபாதி அவர்களது பதவிக் காலத்தை நிறைவு செய்ததாக இருக்கட்டும்; இப்போது பொறுப்பேற்றிருக்கக்கூடிய புதிய DGP திரு. சைலேந்திர பாபு அவர்களின் தேர்வு மற்றும் நியமனமாக இருக்கட்டும்; முற்றிலும் பிரகாஷ் சிங் வழக்கின் அடிப்படையில்தான் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, பிரகாஷ் சிங் வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் எஞ்சியுள்ள காவல் துறை சீர்திருத்தங்களை நிறைவேற்ற இந்த அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

அதேபோல, போக்சோ வழக்கு விசாரணை குறித்துப் பேசினார். பெண்களுக்கு எதிரான குற்றங்களைப் பொறுத்தமட்டிலும், இந்த அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. போக்சோ வழக்குகளை விரைந்து விசாரித்து, நீதி வழங்கிட அனைத்து மாவட்டங்களிலும் தனி நீதிமன்றங்கள் நிறுவ அரசு நிச்சயம் நடவடிக்கை எடுக்கும்.

2021 செப்டம்பர் 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசியபோது, தமிழ்நாடு முழுவதும் 4.64 இலட்சம் CCTV கேமிராக்கள் பொருத்தப்பட்டன என்றும், அவற்றில் 2.50 இலட்சம் கேமிராக்கள் சென்னை மாநகரில் அ.தி.மு.க. ஆட்சியில் பொருத்தப்பட்டன என்றும் தெரிவித்தார்கள். ஆனால், உண்மை என்னவென்றால், சென்னைப் புறநகர் பகுதிகள் உட்பட, சென்னைப் பெருநகர் காவல் நிலைய சரகங்களில் பொருத்தப்பட்ட கண்காணிப்புக் கேமிராக்கள் 1,07,425 மட்டும்தான். அவற்றில் குடியிருப்போர் நலச் சங்கங்கள், வியாபாரச் சங்கங்கள், சமூகப் பொறுப்பாளர்கள் நிதி மூலமாக அமைக்கப்பெற்றவை 43,673 கேமிராக்கள்; பொது மக்கள் சார்பாக வைக்கப்பட்ட தனியார் கேமிராக்கள் 60,730; சென்னை மாநகராட்சி, டாஸ்மாக் நிறுவனம் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதி ஆகியவற்றின் மூலமாக நிறுவப்பட்ட கேமிராக்கள் 4,022 மட்டுமே என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கேமிராக்களை வைத்தார்களே தவிர, அதைப் பராமரிக்க கடந்த கால அரசு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. தி.மு.க அரசு பொறுப்பேற்ற பிறகு இதுகுறித்து ஆய்வு செய்து, கேமிராக்களை வைக்க, பராமரிக்க தனி நிதி ஒதுக்கிச் செய்யப்படுவது குறித்து அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற நடவடிக்கைகளை நேரடி ஒளிபரப்பு செய்வது குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசினார்கள். நான் சொல்ல விரும்புவது, "அரசிடம் நிதி இல்லை. அதனால் ஒளிபரப்ப முடியாது" என்று கடந்த கால அரசு உயர் நீதிமன்றத்தில் சொல்லியிருக்கிறது. பொதுநல வழக்கு விசாரணைக்கு வந்தபோது, அப்படிக் கூறிய ஆட்சிதான் அ.தி.மு.க ஆட்சி. ஆனால், எங்களைப் பொறுத்தவரையில், "சட்டமன்ற நடவடிக்கைகள் நேரடி ஒளிபரப்பு செய்யப்படும்" என்று தேர்தல் வாக்குறுதியிலேயே சொல்லியிருக்கிறோம். அந்த வாக்குறுதி விரைவில் நிறைவேற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அ.தி.மு.க. ஆட்சியில் சாலை விபத்துக்கள் குறைந்த மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது என்று மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் திரு. நிதின் கட்கரி அவர்கள் கூறியிருப்பதாக இங்கே பேசினார்கள். குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளை கண்டுபிடிக்கும் வலைப்பின்னல் வழிமுறை CCTNS புள்ளிவிவரங்களை ஆய்வு

செய்ததில் வேறு மாதிரியான தகவல்கள் கிடைத்துள்ளன. Cognos என்ற மென்பொருளைப் பயன்படுத்தி, CCTNS-ல் பெறப்பட்ட தகவல்களுக்கும், இதே திட்டத்தின்கீழ், பழைய முறைகளின்படி மாவட்டங்களில் பதிவேற்றம் செய்யப்பட்ட தகவல்களுக்கும் இடையே வேறுபாடுகள் இருக்கின்றன. ஆகவே, விபத்து இறப்புகளைக் குறைப்பதில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் மாநிலம் என ஒன்றிய அரசுக்கும், உச்ச நீதிமன்றத்திற்கும் தவறான தகவல் தரப்பட்டுள்ளது என்பதைப் பதிவு செய்ய நான் விரும்புகிறேன். அதுகுறித்து விரிவான விசாரணைக்கு நான் உத்தரவிட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு காவல் அங்காடிப் பொருள்களுக்கு GST-யிலிருந்து விலக்கு பெற வேண்டும் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். முதலில் இந்தத் திட்டம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் முதலமைச்சராக இருந்தபோது கொண்டுவரப்பட்டதாகும். அதுமட்டுமின்றி, 14.5 விழுக்காடு வரை மதிப்புக் கூட்டு வரியிலிருந்தும் விலக்கு அளித்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். GST-யிலிருந்து விலக்கு பெறுவதைப் பொறுத்தமட்டிலும் சொல்ல வேண்டுமென்றால், அ.தி.மு.க ஆட்சியில் இருந்தபோது 42 GST கூட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. அந்த 42 கூட்டங்களிலும் அப்போது ஆளுங்கட்சியாக இருந்த நீங்கள் அரசின் சார்பாக கலந்து கொண்டிருக்கிறீர்கள். ஆனாலும், கூட்டணிக் கட்சியாக இருக்கும் ஒன்றிய அரசிடம் இந்தச் சலுகைகளை நீங்கள் பெற முடியவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதை நேர்மையாக ஒப்புக்கொண்டிருக்கிறார். இந்த அரசு நிச்சயமாக GST-யிலிருந்து காவல் அங்காடிப் பொருள்களுக்கு விலக்கு பெற விரைந்து நடவடிக்கை எடுக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், காவல் துறைக்கு அ.தி.மு.க. ஆட்சியில்தான் அதிக நிதி ஒதுக்கப்பட்டது என்று கூறினார். ஆனால், அ.தி.மு.க. ஆட்சியின் இறுதியில் காவல் துறைக்காக மொத்தமாக செலவிடப்பட்ட தொகை 10.01 விழுக்காடுதான். ஆனால், 2010 தி.மு.க. ஆட்சியில், காவல் துறைக்காக செலவிடப்பட்டது 12.27 விழுக்காடு. (மேசையைத் தட்டும் ஒலி)

10 ஆண்டுகளுக்கு முன்பே, அதாவது 2 விழுக்காடு நிதியை அதிகம் செலவிட்டு காவல் துறையை நவீனப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இதில், ஒதுக்கிய தொகையைப் பார்க்கக்கூடாது; செலவிடப்பட்ட விழுக்காட்டைத்தான் பார்க்க வேண்டும் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

சட்டத்தின் ஆட்சிக்கு இந்த அரசு மதிப்பளிக்கும். ஜெ.ஜெ. நகர் அம்மா உணவக சம்பவம்; சென்னையில் ஆட்டோ ஓட்டுநர் பெண் ஆய்வாளரிடம் கொரோனா ஊரடங்கின்போது தகராறு செய்த சம்பவம்; திருச்சி மாவட்டத்தில் மணல் கடத்தல் நடைபெற்றதாகக் கூறப்பட்ட நிகழ்வு; திருச்சி மாவட்டத்தில் நில அளவை தனி வட்டாட்சியர் தாக்கப்பட்டதாக கொடுக்கப்பட்ட புகார்; திருநெல்வேலி மாநகர் பேட்டை காவல் நிலையத்தில் பெண் ஒருவரை சகோதரர் தாக்கியதால் கத்திக்குத்து நடைபெற்றிருக்கிறது; இதுபோன்ற சம்பவங்களை இங்கே எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்கள் எழுப்பினார்கள். அவை எல்லாவற்றுக்கும் புகார் அளிக்கப்பட்ட அதே நாளிலோ அல்லது அடுத்த நாளிலோ கைது செய்யப்பட்டு, சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டியிருக்கின்ற ஆட்சிதான் கழக ஆட்சி என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் கைது செய்யப்பட எவ்வளவு காலம் ஆனது என்பது உங்களுக்குத் தெரியும். அதேபோல மறைந்த முதலமைச்சர் அம்மையார் ஜெயலலிதா அவர்களுடைய முகாம் அலுவலகமாக செயல்பட்ட கொடநாடு பங்களாவில் நடைபெற்ற கொள்ளை, கொலை சம்பவங்களில் தொடர்புடையோர் கைது செய்யப்பட எவ்வளவு காலம் ஆனது என்பதையும் சற்று நீங்கள் எண்ணிப் பார்த்திட வேண்டும்.

காவல் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின்போது கடந்த 9 ஆம் தேதியன்று பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், 'கொடநாடு வழக்கை நடத்துங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை; புது விசாரணை செய்யுங்கள், நாங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை' என்று சொன்னார்கள். அதற்காக நான் அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கொடநாடு வழக்கை நடத்துவோம். உண்மைக் குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் தப்பிக்க முடியாதென்பதை

இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'வழக்கு நீதிமன்றத்தில் நடந்துகொண்டிருக்கிறது; வேண்டுமென்றே திட்டமிட்டு எங்கள்மீது குற்றம்சாட்டுவதைத் தவிர்க்க வேண்டும்' என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். கொடநாடு வழக்கு நீதிமன்றத்தில் இருக்கும்போது இந்த அவையிலே கொடநாடு வழக்கு பற்றி முதலில் பேசியது யார்? மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்தான். கடந்த ஆகஸ்ட் 18 ஆம் நாளன்று இந்த அவையில் அந்தப் பிரச்சினையைக் கிளப்பினார்கள்; வெளிநடப்பு செய்தார்கள். வழக்கு முடியும் தருவாயில் இருக்கும்போது எதற்காக மேல் விசாரணை செய்ய வேண்டுமென்று பேட்டியும் கொடுத்தார். என்னைப் போன்றவர்களுக்கே தி.மு.க. ஆட்சியில் பாதுகாப்பில்லை என்றும் பேட்டியளித்தார்கள். மறுநாள் ஆகஸ்ட் 19 அன்று மாண்புமிகு ஆளுநர் அவர்களை சந்தித்து எதிர்க்கட்சித் தலைவர் மனுவும் கொடுத்திருக்கிறார். நிர்பந்தம் காரணமாக காவல் துறையினர் மேல் விசாரணை நடத்துகிறார்கள் என்று குற்றம் சாட்டியிருக்கிறார். முடியும் தருவாயில் உள்ள வழக்கை மீண்டும் எதற்காக விசாரணை செய்கிறார்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் கேட்டார்கள். அதாவது, நீதிமன்றத்தில் உள்ள வழக்கை சட்டமன்றத்தில் எழுப்பியது யார்? நாங்களல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பாவேந்தர் பாரதிதாசனின் கவிதை வரிகளிலே இரண்டு சொற்களை மட்டும் மாற்றி எனது பதிலுரையை நிறைவு செய்திட நான் விரும்புகிறேன்.

"புதியதோர் நாடு செய்வோம் –
கெட்ட போரிடும் குணத்தை வேரோடு சாய்ப்போம்
பொதுஉடைமைக்கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்
புனிதமோடதை எங்கள் உயிரென்று காப்போம்
இதயமெலாம் அன்பு நதியினில் நனைப்போம்
இது எனதென்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்
உணர்வெனும் கனலிடை அயர்வினை எரிப்போம்
ஒருபொருள்தனி எனும் மனிதரைச் சிரிப்போம்
இயல்பொருள் பயன்தர மறுத்திடில் பசிப்போம்
ஈவதுண்டாம் எனில் அனைவரும் புசிப்போம்"

இந்த வரிகளை என்னுடைய மன நிறைவுக்காக மட்டும் நான் இங்கே சொல்லவில்லை. இங்கே வீற்றிருக்கும் மாண்புமிகு உறுப்பினர்களும், காவல் துறையிலே பணியாற்றுபவர்களும், பாவேந்தர் பாடலின் பொருள் ஆழத்தை சிந்தித்துப் பார்க்க வேண்டும். போலீஸ் துறையில் இருக்கின்ற சிலபல குறைபாடுகள் நீக்கப்படுவதற்காக சமுதாயத்தினுடைய நேர்த்தியும் வளர வேண்டும். அது வளர வளர அந்தக் குறைபாடுகள் தானாகவே குறையுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அரை நூற்றாண்டுக்கு முன்னரே சொல்லியிருக்கிறார்கள். வெற்று அலங்காரத்திற்காக அல்ல; அனைவரும் அகத்திலே கொள்வதற்காக அணுகுமுறையினை செம்மைப்படுத்திக் கொள்வதற்காக சொன்ன பொன்மொழிதான் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த வழியில் தமிழ்நாடு காவல் துறை நமது அரசின் ஆட்சியில் செவ்வனே வழிநடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டை சட்டத்தின் ஆட்சியில் நாட்டிலே முதன்மை மாநிலமாக்கிட தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு; தெரிவிப்பதோடு மட்டுமல்ல; உறுதியும் சொல்கிறேன். இந்தக் காவல் துறையின் மானியக் கோரிக்கை விவாதத்திலே பங்கெடுத்து உரையாற்றியிருக்கக்கூடிய அனைவருக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

அடுத்து, காவல் துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்கு இந்த அளவில் பதிலளித்திருக்கிறேன். அதைத் தொடர்ந்து 60 அறிவிப்புகள் இந்த மானியக் கோரிக்கையையொட்டி காவல் துறை சார்பிலே தரப்பட்டிருக்கின்றன. அந்த 60 அறிவிப்புகளையும் நான் முழுமையாக படிக்க இயலாது. அதற்கு நேரம் இல்லை. எனவே, அவற்றில் சிலவற்றை மட்டும் தலைப்புச் செய்திகளாக இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். மீதமிருக்கக்கூடிய அறிவிப்புகளையெல்லாம் சட்டமன்றக் குறிப்பேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் சபாநாயகர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொண்டு, இப்போது முக்கிய அறிவிப்புகளை நான் படிக்கின்றேன்.

I. புதிய பிரிவுகள் உருவாக்குதல்

1. சவாலான மற்றும் முக்கிய இணையவழிக் குற்றங்களைப் புலனாய்வு செய்யவும் காவல் ஆளிநர்களுக்கு சைபர் குற்றங்களைப்

புலனாய்வு செய்ய தகுந்த பயிற்சி அளிக்கவும் “மாநில இணையதளக் குற்றப் புலனாய்வு மையம்” (State Cyber Crime Investigation Centre) சென்னையில் அமைக்கப்படும். இம்மையம் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கெதிரான இணையவழிக் குற்றங்களைத் தடுப்பதற்கும், புலனாய்வு மேற்கொள்வதற்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் சிறப்புக் கவனம் செலுத்தும்.

2. மெரினா கடற்கரையில் பொதுமக்கள் நீரில் மூழ்கி இறக்கும் நிகழ்வுகளைத் தடுக்க சென்னை காவல் துறையில் மெரினா கடற்கரை உயிர் காப்புப் பிரிவு (Marina Beach Life Guard Unit) ஆரம்பிக்கப்படும். கடலோர காவல் படை ஆய்வாளர் தலைமையில் இயங்கும் இப்பிரிவில் கடலோர குழுமம் மற்றும் தீயணைப்புத் துறை மீட்பு வீரர்களுடன் ஒப்பந்த அடிப்படையில் 12 மீனவர்கள் பணி அமர்த்தப்படுவார்கள்.

3. தீவிர குற்றவாளிகளின் நடவடிக்கைகளை கண்காணிப்பதற்கும், சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளைத் தடுப்பதற்கும், குற்ற விகிதத்தைக் குறைப்பதற்கும் மொத்தம் ரூபாய் 8 கோடியே 42 இலட்சம் செலவில் சென்னை தெற்கு மற்றும் வடக்குப் பிரிவுகளில் தலா ஒரு தீவிர குற்றவாளிகள் தடுப்புப் பிரிவு உருவாக்கப்படும்.

4. சமூகத்திலும், பொருளாதாரத்திலும் பின்தங்கிய சிறுவர் மற்றும் சிறுமியர் தவறான வழியிலும், எந்தக் குற்றச் செயலிலும் ஈடுபடாமல் இருக்க சிறுவர் சிறுமியர் மன்றம் ஏற்படுத்தப்பட்டு, இவை அவர்களை நல்வழிப்படுத்தவும், உரிய கல்வி உதவி அளிக்கவும் ரூபாய் 38.25 இலட்சம் செலவில் 51 சிறார் மன்றங்கள் (Boys and Girls Club) உருவாக்கப்படும்.

5. காவல் துறையினரின் முயற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்தும் பிரிவு (SIRPI–Students in Responsible Police Initiatives) மொத்தம் ரூபாய் 4 கோடியே 25 இலட்சம் செலவில் சென்னையிலுள்ள 100 பள்ளிகளில் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. சென்னை பெருநகர காவலில் கூட்டமான இடங்களையும், நீண்ட தூர சாலைகளையும் கண்காணிப்பதற்கென ரூபாய் 3 கோடியே 60 இலட்சம் செலவில் நடமாடும் டிரோன் காவல் அலகு ஏற்படுத்தப்படும்.

2021 செப்டம்பர் 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

II. காவல் துறையினருக்கும், பொதுமக்களுக்கும் இடையிலான தொடர்பை மேம்படுத்துதல்

7. காவல் நிலையங்களுக்கு வரும் பொதுமக்களை இன்முகத்தோடு வரவேற்று அவர்களின் குறைகளைக் கனிவோடு கேட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திலும் வரவேற்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள். இதற்காக, பல ஆண்டுகளாகக் காத்திருக்கும் மறைந்த காவலர்களின் வாரிசுகள் 1,132 பேருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்படும். இந்தப் பணிக்காக கணினிகள் மற்றும் மென்பொருட்கள் புதிதாகக் கொள்முதல் செய்யப்படும். இதற்கான மொத்த தொடராச் செலவினம் ரூபாய் 33 கோடி ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

8. பொதுமக்களோடு தொடர்புகொள்ளும் திறனை மேம்படுத்த 1,20,000 காவல் ஆளிநர்களுக்கு ரூபாய் 10 கோடி செலவில் சென்னை அண்ணா மேலாண்மை மையத்தின்மூலம் பயிற்சி வழங்கப்படும்.

9. மீனவ இளைஞர்கள் இந்திய கடற்படையில் ஒப்பந்த அடிப்படையில் சேரும்விதமாக அவர்களுக்கு கடலோரக் காவல் படைக் குழுமம்மூலம் ரூபாய் 90 இலட்சம் செலவில் ஆறு மாதப் பயிற்சி வழங்கப்படும். இப்பயிற்சியின்மூலம் இவ்விளைஞர்கள் மற்ற இந்திய பாதுகாப்புப் படையில் சேரவும் வாய்ப்பு அதிகரிக்கும்.

10. கடலோரப் பாதுகாப்பு காவல் படையினருடன் இணைந்து பணிபுரிய 1,000 மீனவ இளைஞர்கள் ஊர்க்காவல் படையினராகப் பணியமர்த்தப்படுவர். இதற்கான மொத்த தொடர் செலவு ரூபாய் 3 கோடியே 40 இலட்சம் ஆகும்.

11. காவலர் – பொதுமக்களுக்கிடையேயான உறவை மேம்படுத்தவும், காவல் துறை பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டும் அவர்களுக்குத் தேவையான திட்டங்களையும், புதிய பயிற்சி முறைகளையும் பரிந்துரைக்கும் நோக்கத்துடன் காவல் ஆணையம் ஒன்று மீண்டும் அமைக்கப்படும். புதிய காவல் ஆணையம் ஏற்படுத்தப்படும்.

12. சென்னை மாநகரில், மண்டல அளவில் நான்கு சைபர் குற்றக் காவல் நிலையங்கள் அமைக்கப்படும். இதற்கென மறு விநியோக (Redeployment) முறையில் தேவையான பணியாளர்கள் பயன்படுத்தப்படுவர்.

13. பொதுமக்கள், காவல் உயர் அதிகாரிகளை இணையதள காணொளிமூலம் சந்தித்து புகார் அளிக்கும் வசதி அறிமுகப்படுத்தப்படும். இதனால் உயர் அதிகாரிகளை பார்க்க பயணம் மேற்கொள்ளவும், அலுவலகங்களில் காத்திருக்க வேண்டிய அவசியமும் இருக்காது.

14. பொதுமக்களின் பிரச்சினைகளை காவல் நிலைய அதிகாரியிடம் தெரிவிக்க ஒரு கைபேசி செயலி உருவாக்கப்படும். காவல் நிலைய அதிகாரியின் விசாரணை அறிக்கை அந்த செயலியில் தரவேற்றம் செய்யப்படும்.

15. வெளிநாடுகளில் வாழும் இந்திய குடிமக்களின் குறைகளைக் களைய காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தில் தனிப் பிரிவு அமைக்கப்படும். இணையத்தின்மூலம் பதிவு செய்யப்படும் புகார்கள் மீது துரித விசாரணை செய்யவும் அவர்களுக்கு விசாரணை முடிவுகளைத் தெரிவிப்பதும் இப்பிரிவின் வேலையாக இருக்கும்.

16. சுற்றுலாத் தலங்களில் பொதுமக்களுக்குப் பாதுகாப்பும், வழிகாட்டுதலும் வழங்க சுற்றுலா காவல் துறை அமைக்கப்படும். சுற்றுலா காவல் துறையினருக்குத் தனி பயிற்சி வழங்கப்படும்.

17. இந்தியக் குடியுரிமைத் திருத்தச் சட்டம், மீத்தேன்/ நியூட்ரினோ மற்றும் கூடங்குளம் அணுமின் நிலையம் மற்றும் எட்டு வழிச்சாலை திட்டங்களுக்கு எதிராகப் போராடிய விவசாயிகள், பத்திரிகைகள்மீது முந்தைய அரசால் 5,570 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்குகளைத் திரும்பப் பெற இந்த அரசு ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளது. அதேபோல், நீட் தேர்வு மற்றும் டாஸ்மாக் (TASMAC) மதுக் கடைகளுக்கு எதிரான போராட்டம் நடத்தியவர்கள்மீது முந்தைய அரசால் பதிவு செய்யப்பட்ட வழக்குகளைத் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

III. பணியாளர் நலன்

18. காவல் துறையினரின் நலன்களைப் பாதுகாக்கக் காவலர்களுக்கு வழங்கப்படும் இடர்ப்படி 800 ரூபாயிலிருந்து 1,000 ஆக உயர்த்தி வழங்கப்படும். இது அனைத்துத் தரப்பினருக்கும் பொருந்தும்.

2021 செப்டம்பர் 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

19. நிலுவையிலுள்ள சிறு தண்டனைகள் கைவிடப்படும். இதனால் சிறு தண்டனைகள் பெற்ற காவல் ஆளிநர்கள் பதவி உயர்வு மற்றும் பிற சலுகைகள் பெறுவார்கள்.

20. காவலர் முதல் ஆய்வாளர் வரை தங்கள் அடையாள அட்டைகளைக் காண்பித்து பேருந்துகளில் தாங்கள் பணி செய்யும் மாவட்டத்திற்குள் பயணம் செய்யலாம். இதற்காக "நவீன அடையாள அட்டை" வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

21. காவலர்கள் தங்கள் உடல் நலனைப் பேணிக் காத்திட ஏதுவாகவும், தங்களது குடும்பத்தாருடன் போதிய நேரம் செலவிடுவதற்காகவும், இரண்டாம் நிலை காவலர்கள் முதல் தலைமைக் காவலர் வரையிலான ஆளிநர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் ஓய்வு வழங்கப்படும்.

22. காவலர்களுக்கு ஆண்டுதோறும் அரசு மருத்துவமனைகளில் மருத்துவப் பரிசோதனை செய்யப்படுவதுபோல, இனி அவர்களின் வாழ்க்கைத் துணைவியருக்கும் அளிக்கப்படும். பெண்களுக்கான சிறப்பு மருத்துவப் பரிசோதனையும் இதில் சேர்க்கப்படும்.

23. காவல் ஆளிநர்களின் தற்செயல் விடுப்பினை ஒப்புதல் அளிக்கும் மென்பொருள் (CLAPP APP) ஒன்று ரூபாய் 10 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

24. காவலர்கள் தங்கள் உடல் நலனைப் பேணும் பொருட்டு காவல் நிலையங்களில் உடற்பயிற்சி மேற்கொள்ள 38 மாவட்டங்கள் மற்றும் 7 மாநகரங்களில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க தலா ரூபாய் இரண்டு இலட்சம் வீதம் ரூபாய் 90 இலட்சம் வழங்கப்படும்.

25. காவலர்களின் குறை தீர்ப்பதற்காக மாவட்ட அளவிலும், சரக அளவிலும், மண்டல அளவிலும் ஒரு புதிய நடைமுறை உருவாக்கப்படும். இதற்காக ரூபாய் 25 இலட்சம் செலவில் ஒரு தனிச் செயலி அறிமுகப்படுத்தப்படும். இதன்மூலமாக காவலர்கள் தங்கள் மனுக்களை எளிதில் சமர்ப்பிக்க வசதி ஏற்படுத்தப்படும்.

26. சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு பணியாற்றும் மாநில நுண்ணறிவுப் பிரிவு, குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை, பொருளாதாரக் குற்றப் பிரிவு, கடலோரக் காவல் படை, இரயில்வே காவல் படை மற்றும் காவலர் பயிற்சிப் பள்ளியில் பணிபுரியும் காவலர்கள் முதல் ஆய்வாளர்கள் வரையிலானோருக்கு

சென்னை மாநகர காவல் துறையில் வழங்கப்படுவதுபோல் உணவுப்படி மாதந்தோறும் வழங்கப்படும். இதற்கான மொத்த தொடர் செலவினம் ரூபாய் 14 கோடி ஆகும்.

27. காவலர், தலைமைக் காவலர், உதவி ஆய்வாளர், ஆய்வாளர் மற்றும் துணைக் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு தற்போது வழங்கப்படும் வீடுகளின் அளவை விட விகிதாச்சாரப்படி உயர்த்தி வழங்கப்படும்.

28. இரண்டாம் நிலை காவலரிலிருந்து முதல் நிலைக் காவலராகவும், முதல் நிலைக் காவலரிலிருந்து தலைமைக் காவலராகவும், தலைமைக் காவலரிலிருந்து சிறப்பு உதவி ஆய்வாளராகவும் பதவி உயர்வுகளுக்கான காலவரம்பை ஆய்வு செய்ய ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்படும்.

29. புதிதாக அமைக்கப்பட்ட ஆறு மாவட்டங்களிலும் காவலர் அங்காடிகள் நிறுவப்படும்.

30. காவல் துறையில் நிலவும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்க "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டத்தின் ஒரு பகுதியாக சிறப்பு குறைதீர்க்கும் முகாம்கள் ஏற்படுத்தப்படும்.

31. காவல் நிலையங்களில் உடனடி மற்றும் அவசரச் செலவுகளைச் சமாளிக்க ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ரொக்க சில்லறை செலவின நிதி (Cash Contingency Fund) உயர்த்தப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

IV. வாகனங்கள்

32. அனைத்து காவல் ஆணையரகங்களிலும் (சென்னை நீங்கலாக) ரோந்துப் பணிக்காக, ஒவ்வொரு காவல் நிலையத்துக்கும் புதிதாக நான்கு சக்கர வாகனங்கள் மொத்தம் ரூபாய் 10 கோடி செலவில் வழங்கப்படும். இதனால் நகர்ப்புறங்களில் காவல் துறை நடவடிக்கையைத் துரிதப்படுத்துவதோடு, குற்றவாளிகளைக் கண்காணிப்பதும் தீவிரமாகும்.

33. நவீன காவல் கட்டுப்பாட்டு அறையைப் பலப்படுத்தும்விதமாக ரூபாய் 9 கோடியே 59 இலட்சம் செலவில், பழுதடைந்துள்ள 62 ரோந்து வாகனங்களுக்குப் பதிலாக புதிதாக 62 வாகனங்கள் வாங்கப்படும்.

34. காவல் துறையில் கழிவு செய்யப்பட்ட காவல் வாகனங்களை ஏலம் விடும் முறையை எளிமையாக்கி, சம்பந்தப்பட்ட காவல் ஆணையர்/காவல் கண்காணிப்பாளருக்கு ஏலம் விடும் அதிகாரம் வழங்கப்படும். இதனால் அரசுக்கு வருமானம் வரும் நிலை ஏற்படும்.

35. சுமார் 10 வருடங்களாக பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்களுக்குப் பதிலாக ரூபாய் 9 கோடியே 43 இலட்சம் செலவில் 57 ரோந்து வாகனங்களும், 4 நெடுஞ்சாலை ரோந்து வாகனங்களும் வாங்கப்படும்.

V. கட்டடங்கள்

36. ஆயிரம் விளக்கு பகுதியில் Mansion site என்ற இடத்தில் ரூபாய் 275 கோடியே 76 இலட்சம் செலவில் 896 காவலர், தலைமைக் காவலர் குடியிருப்புகள் கட்டப்படும்.

37. அலுவல் நிமித்தமாக சென்னை வரும் காவலர்கள் தங்குவதற்கு ஏதுவாக கீழ்ப்பாக்கம் காவலர் குடியிருப்பில் ரூபாய் 16 கோடியே 20 இலட்சம் செலவில் 450 காவலர்கள் தங்குமிடம் (Barracks) கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

38. காவலர், தலைமைக் காவலர், உதவி ஆய்வாளர், ஆய்வாளர் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் ஆகியோருக்கு வீடு கட்டித் தரும் திட்டம் திருவாரூர் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

39. கோவை காந்திபுரத்தில் 1.4 ஏக்கர் இடத்தில் 140 காவல் துறை அதிகாரிகளுக்கான குடியிருப்புகள் ரூபாய் 54 கோடி செலவில் கட்டப்படும்.

VI. புதிய முயற்சிகள்

40. வங்கி/வேலை மோசடி, பதிவுரு மோசடி மற்றும் இணையக் குற்றங்கள் ஆகியவற்றை புலன் விசாரணை செய்ய ரூபாய் ஒரு கோடி செலவில் நிபுணர்களின் (Hiring of Experts) சேவை பயன்படுத்தப்படும்.

41. பெருநகர போக்குவரத்துக் காவல், போக்குவரத்தினைச் சீர் செய்ய தடுப்பு அரண்களைப் பயன்படுத்தி வருகின்றது. இத்தடுப்பு

அரண்களை இந்திய சாலைக் குழுமத்தின் (Indian Road congress) வரைமுறைப்படி பழுதுபார்க்கவும்/மாற்றியமைக்கவும் ரூபாய் ஒரு கோடியே ஏழு இலட்சம் செலவிடப்படும்.

42. தமிழ்நாட்டில் 249 காவல் உட்கோட்டங்கள் உள்ளன. 202 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்படுகின்றன. அவை பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யும்வகையில், இந்த அரசு அனைத்து உட்கோட்டங்களிலும் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் என்ற வகையில் புதிய அனைத்து மகளிர் காவல் நிலையங்களை உருவாக்க நடவடிக்கை எடுக்கும்.

VII. புதிய பதவி உருவாக்குதல்

43. சென்னை பெருநகர காவலில் உள்ள சிசிடிவி வலைப்பின்னல் மாநிலத்திலேயே மிகப் பெரியதாகும். இதனைச் சிறப்பாக மேற்பார்வையிட துணை காவல் ஆணையாளர் (தொழில்நுட்பம்) என்ற பதவி ரூபாய் 72.59 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்படும்.

44. சிலை திருட்டு தடுப்புப் பிரிவில் பணிபுரிபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு, உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு, கடத்தப்பட்ட அனைத்து சிலைகளையும் வல்லுநர்களின் ஒத்துழைப்புடன், மீண்டும் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.

தடய அறிவியல் துறை

45. தஞ்சாவூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ரூபாய் 7 கோடியே 30 இலட்சம் செலவில் புதியதாக மரபணு ஆய்வுப் பிரிவு துவக்கப்படும்.

46. மதுரை மற்றும் திருச்சி வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களில் ரூபாய் 5 கோடியே 49 இலட்சம் செலவில் புதியதாக கணினி தடயவியல் பிரிவுகள் துவக்கப்படும்.

47. அரியலூர், தென்காசி, கள்ளக்குறிச்சி, செங்கல்பட்டு, திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் மயிலாடுதுறை ஆகிய காவல் மாவட்டங்களுக்கு தலா ஒரு இயங்கும் தடய அறிவியல் ஆய்வகம் மொத்தம் ரூபாய் 5 கோடியே ஒரு இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.

48. சென்னை பெருநகர காவல் ஆணையரகத்திற்கு உட்பட்டு செயல்பட்டுவரும் இரண்டு இயங்கும் தடய அறிவியல் ஆய்வகங்கள் மற்றும் விழுப்புரம், வேலூர், தஞ்சாவூர் ஆகிய காவல் மாவட்டங்களில் செயல்பட்டுவரும் இயங்கும் தடய அறிவியல் ஆய்வகங்களின் செயல்திறன் ரூபாய் 0.92 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

I. புதிய உபகரணங்கள் வாங்குதல்

49. அனைத்து தீயணைப்பு வீரர்களுக்கும் தீயிலிருந்து பாதுகாக்கும் தற்காப்பு உடைகள் (Personal Protective Equipments) வழங்கும் திட்டத்தின்கீழ் ரூபாய் 8 கோடியே 10 இலட்சம் செலவில் 1,350 தற்காப்பு உடைகள், அதற்குரிய தீ பாதிக்காத காலணிகள் மற்றும் தலைக்கவசங்கள் ஆகியவற்றுடன் வழங்கப்படும்.

50. தீயணைப்பு பணியாளர்கள் மீட்புப் பணியின்போது தனித்த அடையாளத்துடன் விளங்கவும், சிறப்பாகச் செயல்படவும் ஏதுவாக பாதுகாப்பு உபகரணங்களுடன்கூடிய மீட்பு உடைகள் ரூபாய் 2 கோடியே 10 இலட்சம் செலவில் 3,000 எண்ணிக்கையில் வாங்கி வழங்கப்படும்.

51. தீயணைப்பு பணியின்போது புகை மற்றும் நச்சு வாயுக்களிலிருந்து தீயணைப்புப் பணியாளர்களைப் பாதுகாக்கும்விதமாக ரூபாய் 3 கோடியே 50 இலட்சம் செலவில் 350 எண்ணிக்கையில் மூச்சுக்கருவிகள் (Self Contained breathing apparatus sets) தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களின் பயன்பாட்டிற்கு வாங்கி வழங்கப்படும்.

52. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களின் பயிற்சி வசதிகளை நவீனப்படுத்தும் நோக்கில் செங்கல்பட்டு மாவட்டம், காலவாக்கத்தில் அமைய உள்ள மாநில பயிற்சி கழகத்தில் (Tamil Nadu Fire and Rescue Services Academy) ரூபாய் 20 கோடி செலவில் நிகழ்நேர மாதிரி பயிற்சிக் கூடம் (Fire and Rescue Services training simulator) ஒன்று நிறுவப்படும்.

II. வாகனங்கள் மற்றும் ஊர்திகள்

53. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் 15 ஆண்டுகளுக்கு மேலாக பயன்பாடு முடிந்து condemn *செய்யப்பட்ட நீர்தாங்கி ஊர்திகளுக்குப் பதிலீடாக முதற்கட்டமாக 25 புதிய நீர்தாங்கி ஊர்திகள் ரூபாய் 18 கோடியே 75 இலட்சம் செலவில் வழங்கப்படும்.*

54. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையிலுள்ள மாவட்ட அலுவலர்கள் தங்கள் பணிகளைச் செவ்வனே மேற்கொள்ள ஏதுவாக condemn *செய்யப்பட்ட 9 சீருந்துகளுக்குப் பதிலீடாக புதிய ஊர்திகள் ரூபாய் 65 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.*

55. கட்டட இடிபாடுகள், சாலை விபத்துக்கள் மற்றும் புயல், வெள்ளம் போன்ற இயற்கை இடர்பாடுகளின்போது மீட்புப் பணிகளைத் திறம்பட மேற்கொள்ள ஏதுவாக ரூபாய் 9 கோடி செலவில் 10 சிறிய அவசரகால மீட்பு ஊர்திகள் (Mini Emergency Rescue Tenders) *வாங்கி வழங்கப்படும்.*

56. பெருந்தீ விபத்துக்களின்போது தேவைப்படும் அதிக அளவிலான தண்ணீர் தேவையினைக் கருத்தில் கொண்டு ரூபாய் 16 கோடி செலவில் 20 பெரும தண்ணீர் லாரிகள் (Water bowzers) *வாங்கி வழங்கப்படும்.*

57. வளர்ந்து வரும் நகரமயமாக்கலின் தீயணைப்புச் சேவையினைக் கருத்திற்கொண்டு ரூபாய் 11 கோடி செலவில் 42 மீட்டர் உயரம் செல்லக்கூடிய வான்நோக்கி நகரும் ஏணியுடன்கூடிய (Aerial Ladder Platform) *தீயணைப்பு-மீட்பு ஊர்தி ஒன்று திருப்பூர் மாநகரத்திற்கென பிரத்யேகமாக வாங்கி வழங்கப்படும்.*

58. மலைப்பாங்கான பகுதிகளில் தீயணைப்புச் சேவையினை செவ்வனே செய்ய ஏதுவாக 7 அதிஉயர் அழுத்த நீர்தாங்கி வண்டிகள் (Ultra High Pressure Water Tenders) *ரூபாய் 5 கோடியே 60 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.*

III. கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள்

59. கீழ்க்கண்ட 9 இடங்களில் உள்ள தீயணைப்பு மீட்புப் பணி நிலையக் கட்டடங்கள் ரூபாய் 45 கோடியே 8 இலட்சம் செலவில் கட்டப்படும்:

2021 செப்டம்பர் 13] [திரு. மு.க. ஸ்டாலின்]

1. காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் ரூபாய் 6 கோடியே 99 இலட்சம் செலவில் கட்டப்படும்.

2. தென்சென்னை மாவட்டம், தேனாம்பேட்டை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் ரூபாய் 5 கோடியே 94 இலட்சம் செலவில் கட்டப்படும்.

3. தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் ரூபாய் 3 கோடியே 26 இலட்சம் செலவில் கட்டப்படும்.

4. தேனி மாவட்டம், கடமலைக்குண்டு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் ரூபாய் 2 கோடியே 55 இலட்சம் செலவில் கட்டப்படும்.

5. விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் ரூபாய் 2 கோடியே 31 இலட்சம் செலவில் கட்டப்படும்.

6. சென்னை புறநகர் மாவட்டம், செங்குன்றம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் ரூபாய் 3 கோடியே 78 இலட்சம் செலவில் கட்டப்படும்.

7. சென்னை புறநகர் மாவட்டம், மணலி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் ரூபாய் 6 கோடியே 42 இலட்சம் செலவில் கட்டப்படும்.

8. வடசென்னை மாவட்டம், வண்ணாரப்பேட்டை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் ரூபாய் 6 கோடியே 98 இலட்சம் செலவில் கட்டப்படும்.

9. சென்னை புறநகர் மாவட்டம், அம்பத்தூர் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையம் ரூபாய் 6 கோடியே 85 இலட்சம் செலவில் கட்டப்படும்.

60. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் பயன்பாட்டிற்கென

1. சென்னை புறநகர் மாவட்டம்-செங்குன்றம் 53 குடியிருப்புகள் (3 அலுவலர்கள் மற்றும் 50 பணியாளர்கள்),

2. தேனி மாவட்டம்-போடிநாயக்கனூர்–10 குடியிருப்புகள் (2 அலுவலர்கள் மற்றும் 8 பணியாளர்கள்),

3. திருச்சி மாவட்டம்-துறையூர்–18 குடியிருப்புகள் (2 அலுவலர்கள் மற்றும் 16 பணியாளர்கள்),

4. இராணிப்பேட்டை மாவட்டம்-இராணிப்பேட்டை–19 குடியிருப்புகள் (2 அலுவலர்கள் மற்றும் 17 பணியாளர்கள்)

ஆகிய இடங்களில் ரூபாய் 25 கோடியே 43 இலட்சம் செலவில் மொத்தம் 100 குடியிருப்புகள் கட்டப்படும்.

நமது அரசு பாரபட்சமின்றி சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பது, மாறி வரும் சூழலுக்கு ஏற்ப காவல் துறையைத் தொடர்ந்து நவீனப்படுத்துவது, காவல் துறைக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான உறவை மேம்படுத்துவது ஆகிய முக்கிய குறிக்கோள்களை மையமாகக் கொண்டு தொடர்ந்து செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை எண் 22–ஐ பொறுத்தவரைக்கும், காவல் பற்றிய மானியக் கோரிக்கையின்மீது 89 வெட்டுத் தீர்மானங்களும், கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் குறித்து 62 வெட்டுத் தீர்மானங்களும் மாண்புமிகு உறுப்பினர்களால் வழங்கப்பட்டிருக்கின்றன. காவல் துறையைப் பொறுத்தவரைக்கும், புதிய காவல் நிலையம், மகளிர் காவல் நிலையம், காவல் துறையில் பணிபுரிபவர்களுக்கு வசதிகள், காவலர் குடியிருப்புகள் என பல்வேறு வெட்டுத் தீர்மானங்களை அளித்திருக்கிறீர்கள்.

முற்பகல் 11–10

அதேபோல, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் குறித்த மானியக் கோரிக்கையைப் பொறுத்தவரைக்கும், சொந்தக் கட்டடங்கள், கிளை நிலையங்கள், புதிய தீயணைப்பு நிலையங்கள் வேண்டுமென்று கேட்டிருக்கிறீர்கள். அவற்றையெல்லாம் நான் படித்துப் பார்த்தேன். விதிகளுக்குட்பட்டு இருக்குமானால், நிதிநிலைமைக்கேற்ப அவை படிப்படியாக அரசால் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவற்றுக்குப் போதிய விளக்கங்களையும் நான் உங்களுக்கு வழங்கியிருக்கிறேன் என்று நம்புகிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும்

என்னுடைய விளக்கத்தை ஏற்று, வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது பதிலுரையில், கொடநாடு வழக்கு சம்பந்தமாக நீதிமன்றத்திலே வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார் என்ற ஒரு கருத்தைச் சொல்லியிருக்கின்றார். நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்ற கருத்து எதையும் நான் தெரிவிக்கவில்லை. ஆனால், குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை காவல் துறை அதிகாரிகள் அழைத்துச்சென்று விசாரித்தபோது, அவர் என்னுடைய பெயரைக் குறிப்பிட்டதாக பல பத்திரிகைகளில் செய்திகள் வந்தன. அந்தச் செய்தியை தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்காகத்தான் அதை நான் தெரிவித்தேனேயொழிய, வழக்கு சம்பந்தமாக எந்தக் கருத்தையும் இந்த அவையிலே தெரிவிக்கவில்லை என்பதை நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை). 9–9–2021 ஆம் நாளன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 22 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.8,641,58,06,000/–, மூலதனக் கணக்கில் ரூ.281,50,05,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.3,00,01,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) கோரிக்கை எண் 23-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை). 9–9–2021 ஆம் நாளன்று மாண்புமிகு உறுப்பினர்களால் முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.379,46,70,000/–, மூலதனக் கணக்கில் ரூ.25,63,36,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

7. விதி 110–ன்கீழ் அறிக்கை

கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட ஐந்து பவுனுக்கு உட்பட்ட நகைக் கடன்கள் தள்ளுபடி குறித்த கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *விதி 110–ன்கீழ் அறிக்கை. பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2021 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில், பத்தி 264–ல், 'கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட 5 பவுனுக்கு உட்பட்ட நகைக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும்' என்ற வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. அதனை நிறைவேற்றும் விதமாக தங்களது அனுமதியோடு, விதி 110–ன்கீழ் நான் அறிவிப்பினை வெளியிட விரும்புகிறேன்.*

தமிழ்நாடு சட்டப் பேரவையில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மானியக் கோரிக்கையின்மீது, கடந்த 25–8–2021 அன்று நடந்த விவாதத்தின்போது, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், கடந்த ஆட்சியில் வழங்கப்பட்ட பயிர்க் கடன் தள்ளுபடியில் பல்வேறு குளறுபடிகள் நடந்துள்ளதை ஆதாரங்களோடு சுட்டிக்காட்டி, எவ்வாறு 2 இலட்சத்து 42 ஆயிரத்து 783 நபர்களுக்கு, 2 ஆயிரத்து 749 கோடியே 10 இலட்சம் ரூபாய் தவறாகத் தள்ளுபடி செய்யப்பட்டது என்பதை விரிவாக விளக்கிப் பேசினார். அந்த விவாதத்தின்போது, தொடர்ந்து பேசிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவ்வாறான தவறுகள் நகைக் கடன்களிலும் எந்தெந்த மாவட்டங்களில்,

எந்தெந்த வகையில் நடைபெற்றுள்ளன என்பதையும் விளக்கி, எனவே நகைக் கடன்கள் ஒவ்வொன்றையும் தீவிரமான மற்றும் விரிவான ஆய்வுக்கு உட்படுத்திய பின்னரே தள்ளுபடி செய்வது குறித்த முடிவு எடுக்கப்படும் என்பதை இந்த அவையிலே தெரிவித்திருந்தார். அதன்படி, அனைத்து நகைக் கடன்கள் பற்றிய முழு புள்ளிவிவரங்களும் சேகரிக்கப்பட்டு, கடந்த ஒரு மாத காலமாக தீவிர ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

முற்பகல் 11–15

அதனடிப்படையில், நகைக் கடன்கள் தள்ளுபடி என்பது ஒரு குடும்பத்திற்கு 5 பவுனுக்கு உட்பட்ட நகைக் கடன்களை சில தகுதிகளின்கீழ், உண்மையான ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையில் தள்ளுபடி செய்யப்படும் என்பதை நான் அறிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நகைக் கடன்கள் தள்ளுபடி அறிவிப்பு குறித்து, தகுதியான நபர்களைக் கண்டறிவதற்காக, கடந்த ஒரு மாத காலம், ஒரு குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் பெற்ற அனைத்து நகைக் கடன்கள் பற்றிய பெயர், கடன் பெற்ற கூட்டுறவுச் சங்கங்களின் விவரம், கடன் பெற்ற நாள், கடன் தொகை, கடன் கணக்கு எண், வாடிக்கையாளர் தகவல் குறிப்பு எண், குடும்ப அட்டை எண், ஆதார் எண், முகவரி, அலைபேசி எண் உள்ளிட்ட 51 விதமான தகவல்களைச் சேகரித்து, தொகுக்கப்பட்டு கணினிமூலம் விரிவான பகுப்பாய்வு செய்யப்பட்டன.

அவ்வாறு புள்ளிவிவரங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டதில் நகைக் கடன்கள் வழங்கப்பட்டதிலும், பல்வேறு விதிமீறல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நகைக் கடன் தள்ளுபடி செய்கையில் சரியான, தகுதியான ஏழை எளிய மக்கள் மட்டுமே பயன்பெற வேண்டும் என்று இந்த அரசு கருதுகிறது. எனவே, 5 பவுனுக்கும் குறைவாக நகைக் கடன் பெற்றவர்களில் சில நேர்வுகளில் தள்ளுபடி செய்யவேண்டிய அவசியம் ஏற்படவில்லை எனக் கருதப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, 2021 ஆம் ஆண்டு பயிர்க் கடன் தள்ளுபடி வழங்கப்பட்டதில் பயன் பெற்றவர்கள், ஒரே குடும்பத்தில் உள்ள உறுப்பினர்கள், ஒரு கூட்டுறவு நிறுவனத்திலோ அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களிலிருந்தோ, ஒன்றுக்கும் மேற்பட்ட கடன்கள் மூலம் 5 பவுனுக்கு மேல் நகை ஈட்டின்பேரில் கடன் பெற்றவர்கள்; தவறாக

AAY (அந்தியோதயா அன்ன யோஜனா) குடும்ப அட்டையைப் பெற்று, அவற்றை பயன்படுத்தி நகைக் கடன் பெற்றவர்கள்; மற்றும் இதுபோன்ற மேலும் சில நேர்வுகளில் வழங்கப்பட்ட கடன்களைத் தள்ளுபடி செய்ய இயலாது. இதுகுறித்த விவரமான வழிமுறைகளை கூட்டுறவுத் துறை இன்னும் ஓரிரு நாளில் வெளியிடும்.

இந்த நகைக் கடன் தள்ளுபடி குறித்து தேர்தல் அறிக்கையில் அறிவிப்பு வெளிவந்தவுடன், முறையற்ற வகையில் தள்ளுபடி பெறவேண்டும் என்கிற தவறான நோக்கத்தோடு, நகைக் கடன்களைப் பெற்றிருப்பதும், குறிப்பாக, சில மாவட்டங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த முறைகேட்டில் ஈடுபட்ட சங்கங்களின்மீது தகுந்த நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும்.

மேற்கூறியவாறு, தகுதியுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 பவுனுக்கு உட்பட்டு நகைக் கடன்களைத் தள்ளுபடி செய்வதற்காக அரசுக்கு ஏற்படும் செலவு, பூர்வாங்க மதிப்பீடுகள் மற்றும் ஆய்வுகளின் அடிப்படையில் 6 ஆயிரம் கோடி ரூபாய் ஆகும் எனத் தெரிய வருகிறது. இதற்காக கூட்டுறவு நிறுவனங்களுக்கு, தமிழ்நாடு அரசு தேவையான உதவிகளைச் செய்யும் என்பதையும் இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கூட்டுறவு நிறுவனங்கள் இனி நேர்மையாக, திறமையாக, ஏழை எளிய விவசாயிகளும், நடுத்தர வர்க்கத்தினரும் பயன்பெறும் வகையில் செயல்பட தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். முழுமையான கணினிமயமாக்கம், Core Banking போன்ற நவீன வசதிகளுடன் கூட்டுறவு நிறுவனங்கள் முறையாகக் கண்காணிக்கப்பட்டு, எதிர்காலத்தில் சிறப்பாக நடத்திச் செல்லப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்! (மேசையைத் தட்டும் ஒலி)

8. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள், கையை உயர்த்தினீர்கள், சுருக்கமாகப் பேசுங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையான ஏழையெளிய, விவசாயி பயனடைகிற வகையில், 'கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட 5 பவுன் நகைக் கடன் தள்ளுபடி செய்யப்படும்', என்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் அளித்துள்ள வாக்குறுதியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இன்று நிறைவேற்றியிருப்பதற்காக நெஞ்சார்ந்த நன்றியைக்கூறி, காவல் துறை மானியத்திற்கான பதிலுரையின்போது, 700 சிறைவாசிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும், காவல் ஆணையம் அலுவலகம் அமைக்கப்படும் என்றும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 2010 ஆம் ஆண்டில் அறிவிப்பு செய்த தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தில், 20 சதவிகிதம் தமிழ் வழியில் பயின்றவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படுமென்கிற வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பு கடந்த 10 ஆண்டு கால ஆட்சியில் நிறைவேறாமல் இருந்தது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள், நன்றி சொல்லி உட்காருங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவற்றை நிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வேன் என்று அறிவித்து, அதற்காக மனிதவள மேலாண்மைத் துறையால் அரசாணை எண் 82-ன் மூலமாக உடனடியாக நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவித்ததற்காக நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி நிறைவு செய்கிறேன். அந்த 700 பேரில் நீண்ட நாட்களாக சிறையில் இருக்கிற இஸ்லாமிய சிறைவாசிகளையும் கணக்கில் எடுத்து விடுதலை செய்யவேண்டுமென்கிற வேண்டுகோளை வைத்து அமர்கிறேன், நன்றி வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம், மிகப் பெரிய சாதனையை மக்கள் நல்வாழ்வுத் துறை நிகழ்த்தி இருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலில், மக்கள் நல்வாழ்வுத் துறை 20 இலட்சம் என்ற இலக்கை வைத்து, ஆரம்பித்தாலும்கூட, 29 இலட்சம் வரை கொரோனா தடுப்பூசிகளைப் போட்டு மிகப்பெரிய*

சாதனையை செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோரும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள், விதி 110–ன்கீழ் பேசுங்கள்.

முற்பகல் 11–20

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்துவிட்டேன். 5 பவுனுக்கு உட்பட்ட நகைக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்ற அறிவிப்பை செய்திருக்கின்றார். சட்டமன்ற உறுப்பினராகிய நாங்கள் எல்லாம் தொகுதிக்கு செல்லும்போது, இந்தக் கேள்விக்கு பதில் சொல்லமுடியாமல் தடுமாறிக் கொண்டிருந்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பு எங்களை கொஞ்சம் comfort ஆக்கியிருக்கிறது என்பதைப் பதிவு செய்து கொள்கிறேன். பல்வேறு முறைகேடுகளைக் களைய வேண்டுமென்று சொன்னால், நாமக்கல் மாவட்டத்தில் நெட்வாளம்பாளையம் என்ற இடத்தில் இருக்கிற கூட்டுறவு நிறுவனத்திலும், கருவேப்பம்பட்டி என்ற இடத்தில் இருக்கிற கூட்டுறவு நிறுவனத்திலும் கடைசி நேரத்தில் அவசர அவசரமாக போலி நகைகள் வைக்கப்பட்டு கடன் கொடுக்கப்பட்டிருப்பதாகப் புகார்கள் வந்திருக்கின்றன. எப்படியிருந்தாலும் கடன் தள்ளுபடி ஆகிவிடும், திரும்பப் பெற்றுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையில், தமிழ்நாடு முழுவதும் கடைசி நேரத்தில் போலி நகைகளை வைத்து பல முறைகேடுகள் நடந்திருப்பதாகப் புகார்கள் வந்திருக்கின்றன. தயவுசெய்து அதையும் விசாரிக்க வேண்டுமென்று சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சியின் சார்பில் நன்றி தெரிவித்து, பாராட்டுக்களைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு நன்றி மட்டும் சொல்லி அமருங்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகம் சட்டமன்றத் தேர்தலின்போது அளித்த வாக்குறுதிகளில் ஏராளமானவற்றை

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2021 செப்டம்பர் 13

நிறைவேற்றியிருக்கின்றது. மற்றவற்றையும் படிப்படியாக நிறைவேற்றுவோம் என்று இந்த அவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்தார்கள். அந்த அடிப்படையில் 6,000 கோடி ரூபாய்க்கு நகைக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என்ற இந்த அறிவிப்பை வரவேற்கின்றேன்.

நீண்ட காலமாக, இந்த அவையில் இரண்டு முறை இந்தக் கோரிக்கையை வைத்திருக்கின்றேன். காவல் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது, இன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த நாளையொட்டி 700 வாழ்நாள் சிறைவாசிகள் முன்கூட்டியே விடுதலை செய்யப்படுவார்கள் என்ற அந்த அறிவிப்பை நெஞ்சார வரவேற்கின்றேன். பிரகாஷ் சிங் தீர்ப்பின் அடிப்படையிலே காவல் துறையில் சீர்திருத்தம் செய்யப்படும் என்ற அறிவிப்பும் நெஞ்சார பாராட்டுக்குரிய அறிவிப்பு என்று சொல்லி, நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று விதி 110–ன்கீழ் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சரியான தகவல்களைக் கொடுத்து கூட்டுறவு வங்கிகளில் 5 பவுனுக்குட்பட்ட நகைக் கடன் முறையாகப் பெற்றவர்களுக்கு மொத்தமாக 6,000 கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்படும் என்ற அறிவிப்பு, திராவிட முன்னேற்றக் கழக அரசு, 'செய்வதைத்தான் சொல்லும்' என்பதற்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி, இதற்கு பாராட்டையும், நன்றியையும் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110–ன்கீழ் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 5 பவுனுக்குக்கீழ் நகைக் கடன் பெற்ற அனைத்து தகுதியானவர்களுக்கும் நகைக்

2021 செப்டம்பர் 13] [திரு. ட்டி. இராமச்சந்திரன்]

கடன் தள்ளுபடி செய்யப்படும் என்ற அறிவிப்பையும், அதற்காக ரூபாய் 6,000 கோடி நிதியொதுக்கீடு செய்திருப்பதையும், அதேபோல் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளில் 700 ஆயுள் கைதிகள் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற அறிவிப்பையும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு வங்கிகளில் வைக்கப்பட்டிருக்கின்ற 5 பவுனுக்கு உட்பட்ட நகைக் கடன் தள்ளுபடிக்காக, 6,000 கோடி ரூபாய் தள்ளுபடி என்கிற அந்த அறிவிப்பை நான் வரவேற்கிறேன். கூட்டுறவுச் சங்கங்களில் பயிர்க் கடன் தள்ளுபடியில் நடந்திருக்கிற குளறுபடிகளை ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அந்த அறிவிப்பையும் நான் வரவேற்கின்றேன். அதேபோல், காவல் துறை மானியக் கோரிக்கைமீதான பதிலுரையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் துறை சம்பந்தமான ஏராளமான நல்லறிவிப்புகளையெல்லாம் இங்கே அறிவித்தார்கள். பல வழக்குகள் தள்ளுபடி சம்பந்தமாக இங்கே அறிவித்தார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள். Police பற்றி நிறைய சொல்லாதீர்கள். விதி 110-ன்கீழ் அறிவிப்புக்கு நன்றி சொல்லி முடியுங்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தின்போது, மேற்கு மாவட்டத்தில் (மணியடிக்கப்பெற்றது) உயர்மின் கோபுரத்திற்கு எதிராகப் போராடிய விவசாயிகள்மீது போடப்பட்ட வழக்குகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.*

முற்பகல் 11–25

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடுமையான பொருளாதார நெருக்கடியிலும்கூட, ஒவ்வொரு நாளும் முத்தாய்ப்பான அறிவிப்புகளைத் தருகின்ற வரிசையில், இன்று நகைக் கடன்கள் தொடர்பான அறிவிப்பை வெளியிட்டிருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலே நெஞ்சார்ந்த நன்றியைப் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'பாத்திரமறிந்து பிச்சையிடு' என்று ஔவைத் திருமகள் சொன்னாள். அந்த அடிப்படையிலே நகைக் கடன்கள் தள்ளுபடி தொடர்பான அறிவிப்பின்மூலமாக பயன்பெறுகிறவர்கள் எவ்வாறு பயனடைகிறார்கள் என்பது குறித்த ஒரு சமூகத் தணிக்கை எல்லா நிலைகளிலும் அவசியம் என்று நான் கருதுகிறேன். பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அந்த முறைகேடுகளின் பின்னணி குறித்தும் ஆய்வு செய்வது அவசியம் என்பதையும் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் துறை மானியக் கோரிக்கை தொடர்பான பல்வேறு முத்தாய்ப்பான அறிவிப்புகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறவித்திருக்கிறார்கள். 'பரிவுள்ள ஆளுமை' என்று அவர்கள் சொன்னார்கள். அது வெறும் அரசுக்கு மாத்திரமல்லாமல், காவல் துறைக்கும் பொருந்தக்கூடிய வகையிலே, சட்டம்-ஒழுங்கு காவல் துறை, சமூக நீதிக்கான காவல் துறையாகவும் பரிணமிக்கக்கூடிய வகையிலே, அந்த அறிவிப்புகளைச் செய்திருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கையில், (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. கோவிந்தசாமி, இருக்கையில் அமர்ந்துகொண்டு பேசக்கூடாது.

2021 செப்டம்பர் 13]

திரு. நயினார் நாகேந்திரன்: நான் வைத்த கோரிக்கைகளில் ஒன்றான '300 ஆய்வாளர்கள் D.S.P. ஆகப் பதவி உயர்த்தப்படுவார்கள்' என்று வெளியிட்ட அறிவிப்புக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன்கள் மொத்தமாக ரூ.6,000 கோடி அளவிற்கு தள்ளுபடி செய்யவிருப்பதை வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன்கீழ் ஏழை மக்கள் கூட்டுறவு வங்கிகளில் பெற்ற நகைக் கடன்கள் ரூ.6,000 கோடி அளவிற்குத் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்த நல்லதொரு அறிவிப்பை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் வரவேற்கிறேன். நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல் துறை மானியக் கோரிக்கையில் பல்வேறு அறிவிப்புகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். காவல் துறைக்கான கோரிக்கைகள் சிலவற்றையும் அவற்றோடு முன்வைத்துப் பேசினோம். ஆகவே, நிதிச் சூழலைக் கருத்தில்கொண்டு, அவற்றையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வருகின்ற செப்டம்பர் 15 அன்று 700 சிறைவாசிகள் விடுதலை என்று அறிவித்திருக்கின்றார்கள். வரவேற்கிறேன். நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, உச்ச நீதிமன்றம் 14 ஆண்டுகளுக்கு மேல் சிறைவாசம் செய்து வருபவர்களை விடுதலை செய்யலாம் என்று அறிவித்திருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில் எல்லோரையும் விடுதலை செய்வதையும், ஏழு தமிழர்கள் விடுதலை செய்வது என்பதனையும் நிறைவேற்ற வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

'பாட்டாளி மக்கள் கட்சியினர்மீது போடப்பட்டிருக்கின்ற வழக்குகளை ஆய்வு செய்து, அதிகாரிகளோடு கலந்துபேசி, நல்ல

முடிவு அறிவிக்கப்படும்' என்று உறுதியளித்தார்கள். அதனையும் நிறைவேற்ற வேண்டுமென்று அன்போடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கூட்டுறவே நாட்டுயர்வு'. ரூ.6,000 கோடி அளவில் கூட்டுறவு வங்கிகளில் பெறப்பட்ட நகைக் கடன்களை தள்ளுபடி செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.*

தமிழகத்தை எவ்வளவு வீழ்த்த நினைத்தாலும், விழ, விழ நாம் எழுவோம் என்பதை நம்முடைய அரசு தொடர்ந்து தன்னுடைய பணிகளின் மூலமாகக் காட்டிக்கொண்டிருக்கிறது. இனிவருங்காலங்களில் கூட்டுறவுக் கடன்களிலே ஊழல்கள் நடைபெறாவண்ணம், சரியான நபர்களுக்குக் கடன்கள் வழங்க மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் உறுதி செய்ய வேண்டும். கோச்சடையில் நடந்தது போல் சம்பவங்கள் இனிவருங்காலங்களில் நடைபெறாமல் நம்முடைய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்தக் கடன்களையெல்லாம் தள்ளுபடி செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோன்று, கொரோனா காலங்களிலே போடப்பட்ட வழக்குகளையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இதனை உறுதிபடுத்துவார்கள் என்று நம்புகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து கடுமையான நிதி நெருக்கடி இருந்தாலும், நிதிச் சுமை இருந்தாலும், தேர்தல் நேரத்திலே கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற வகையில்,*

2021 செப்டம்பர் 13] [திரு. இ. பெரியசாமி]

கூட்டுறவு வங்கிகளில் ஐந்து பவுன் நகை அடகு வைத்தவர்கள் அத்தனைபேருக்கும், அதிலும் தகுதியுள்ளவர்களுக்கு நகைக் கடன் தள்ளுபடி வழங்கப்படும் என்று மிகப் பெருமனதோடு நம்முடைய மாண்புமிகு மக்களுடைய முதல்வர் அறிவித்திருக்கிறார்கள். இந்த அரசு மட்டும் நிதி நெருக்கடியில் இல்லை. கூட்டுறவு வங்கிகளும் இந்தக் கடன் தள்ளுபடியை எதிர்பார்த்து கடுமையான நிதி நெருக்கடியில் இருக்கின்ற இந்தக் காலச்சூழ்நிலையில் ஏறத்தாழ 22 மாதங்கள் யாரும் பொதுவாக நகையைத் திருப்பவில்லை. இதனால் வங்கிகளெல்லாம் மிகுந்த சிரமத்திலிருந்த காலகட்டத்தில், எவ்வளவு நிதி நெருக்கடி இருந்தாலும், தன்னுடைய மனம் மக்களுக்காக, ஏழை எளிய மக்களுக்காக உதவிட வேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடு, மக்கள் முதல்வர், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "இன்றைக்கு ரூபாய் 6,000 கோடி தள்ளுபடி செய்து, அரசே வழங்கும்" என்று வெளியிட்ட அறிவிப்பு, அனைவர் மனதிலும், ஏழை எளிய மக்கள், விவசாயிகள் ஆகியோரின் மனதிலும் பாலை வார்த்திருக்கிறது. அதற்காக இந்தத் துறையின் சார்பாக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

மேலும், குறிப்பாக கடந்த ஆட்சியில், நம்முடைய விவசாயிகள் பெற்ற பயிர்க்கடன், 12,110 கோடி ரூபாய்க்கு மேலாக தள்ளுபடி செய்யப்படும் என்ற அந்த அறிவிப்பை செய்துவிட்ட பிறகு, ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. நிதி நெருக்கடி உள்ள நிலையிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு அந்தத் தொகையையும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, விவசாயிகளுக்கு, ஏழை எளிய மக்களுக்கு, உற்ற துணையாக இருக்கின்ற, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு, மீண்டும் மீண்டும் எத்தனையோ கோடி நன்றியைத் தெரிவித்தாலும், இந்தத் துறை இன்னும் மேலும் வலிவும் பொலிவும் பெறுவதோடு மட்டுமல்லாமல், ஏழை எளிய மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

6. மானியக் கோரிக்கைகள், 2021–2022, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(இ) கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

(ஈ) கோரிக்கை எண் 38-பொதுத் துறை

(உ) கோரிக்கை எண் 53-சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

(ஊ) கோரிக்கை எண் 1-மாநில சட்டமன்றம்

(எ) கோரிக்கை எண் 2-ஆளுநர் மற்றும் அமைச்சரவை

(ஏ) கோரிக்கை எண் 16-நிதித் துறை

(ஐ) கோரிக்கை எண் 35-மனித வள மேலாண்மைத் துறை

(ஒ) கோரிக்கை எண் 50-ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

(இ) கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021–2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.190,67,69,000/–, மூலதனக் கணக்கில் ரூ.123,25,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.10,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 390, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.*

திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,67,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,25,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1072, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 2969, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3987, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,67,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,25,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4127, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,67,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,25,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2248, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,67,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,25,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2789, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,67,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,25,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4208, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.

திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,67,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,25,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2272, மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன்.

திரு. G. அசோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,67,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,25,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3023, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,67,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,25,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4392, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,67,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,25,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4534, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,67,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,25,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3018, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3024, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,67,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,25,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3731, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,67,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,25,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3182, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.

திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரியை துணை பொருளாதார நகரமாக மாற்றிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,67,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,25,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3472, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காற்றாலைமூலம் கிடைக்கும் மின்சாரத்தை வேறு இடத்திற்குக் கொண்டு செல்ல வழிவகை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.190,67,69,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.123,25,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.10,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

(ஈ) கோரிக்கை எண் 38 - பொதுத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 38–பொதுத் துறை, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,060,15,51,000/–, மூலதனக் கணக்கில் ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.6,50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 386, மாண்புமிகு உறுப்பினர் திரு.* JMH. *அசன் மௌலானா.*

திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,060,15,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1070, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.*

திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,060,15,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2628, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.*

திரு. இரா. அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,060,15,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2970, மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *சதாசிவம்.*

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,060,15,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4129, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,060,15,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1452, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.

திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,060,15,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2000, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,060,15,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2276, மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன்.

திரு. G. அசோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,060,15,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3040, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார்.

திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,060,15,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4395, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.1,060,15,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2252, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,060,15,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2819, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,060,15,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4209, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.

திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,060,15,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3028, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,060,15,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3732, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,060,15,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3490, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காமராஜர் பிறந்த தினத்தை அரசு விடுமுறை தினமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,060,15,51,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2021 செப்டம்பர் 13]

முற்பகல் 11–35

(உ) கோரிக்கை எண் 53-சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.630,12,66,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 385, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.*

திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.630,12,66,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1026, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.*

திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.630,12,66,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2580, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.630,12,66,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2971, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.630,12,66,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4194, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.630,12,66,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2277, மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன்.

திரு. G. அசோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.630,12,66,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2841, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.630,12,66,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3041, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார்.

திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.630,12,66,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4452, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.630,12,66,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4567, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.630,12,66,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3022, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3030, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.630,12,66,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2779, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.630,12,66,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4213, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.

திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய *53* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*630,12,66,000*/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*25,00,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *401*, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன்.

திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு முழுவதும் வழங்கப்பட்டுவரும் சிறப்புத் திட்ட பொருட்களை காலத்தோடு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய *53* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*630,12,66,000*/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*25,00,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *2253*, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய *53* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*630,12,66,000*/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*25,00,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *3671*, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசின் பல்வேறு மக்கள் நல்வாழ்வு திட்டங்களைச்

சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின்கீழ் கண்காணிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.630,12,66,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

(ஊ) கோரிக்கை எண் 1–மாநில சட்டமன்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 1–மாநில சட்டமன்றம். மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநில சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.76,78,03,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 1050, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,78,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2494, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,78,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2972, மாண்புமிகு உறுப்பினர் திரு. S சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,78,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3993, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,78,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1453, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.

திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.76,78,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2278, மாண்புமிகு உறுப்பினர்* திரு. G. *அசோகன்.*

திரு. G. அசோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாநில சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,78,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3867, மாண்புமிகு உறுப்பினர்* திரு. JMH. *அசன் மௌலானா.*

திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாநில சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,78,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4263, மாண்புமிகு உறுப்பினர்* திரு. *ஆர். கணேஷ்.*

திரு. ஆர். கணேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மாநில சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,78,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4466, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,78,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3681, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,78,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2007, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களின் உதவியாளர்களுக்கு சட்டமன்றம் நடைபெறும் நாட்களில் ஓய்வெடுத்திட தனி அறைகள் ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,78,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2254, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கும் வழங்கப்படும் அத்தியாவசிய

சலுகைகள் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மாநில சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,78,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2301, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2697, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் தற்போதைய சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மாநில சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,78,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3243, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சட்டமன்ற உறுப்பினர்களும் பயன்பெறும் வகையில் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சட்டமன்றத்தில் உறுப்பினர்கள் பேசுவதை திரையின்மூலம் ஒளிபரப்பு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மாநில சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.76,78,03,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,00,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

(எ) கோரிக்கை எண் 2-ஆளுநர் மற்றும் அமைச்சரவை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 2 – ஆளுநர் மற்றும் அமைச்சரவை. மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.46,38,26,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 384, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.*

திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.46,38,26,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1750, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.*

திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.46,38,26,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2279, மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன்.*

திரு. G. அசோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.46,38,26,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4266, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.46,38,26,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2119, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.46,38,26,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2973, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.46,38,26,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3952, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

2021 செப்டம்பர் 13]

திரு. இரா. அருள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.46,38,26,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3996, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.46,38,26,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2255, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.*

திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.46,38,26,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2803, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.46,38,26,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3254, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆளுநர், முதலமைச்சர், அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் மாதந்தோறும் சந்தித்து மக்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.46,38,26,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

(ஏ) கோரிக்கை எண் 16-நிதித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 16–நிதித் துறை. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,358,41,23,000/–, மூலதனக் கணக்கில் ரூ.620,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.126,56,53,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 389, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.

திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,358,41,23,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.620,00,01,000/– மற்றும்

TRUTH ALONE TRIUMPHS

கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,56,53,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1450, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.

திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,358,41,23,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.620,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,56,53,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1860, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,358,41,23,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.620,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,56,53,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2273, மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன்.

திரு. G. அசோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,358,41,23,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.620,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,56,53,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2840, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,358,41,23,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.620,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,56,53,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3042, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார்.

திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,358,41,23,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.620,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,56,53,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4334, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,358,41,23,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.620,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,56,53,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4498, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,358,41,23,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.620,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,56,53,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1036, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,358,41,23,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.620,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,56,53,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2974. மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,358,41,23,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.620,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,56,53,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3908, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,358,41,23,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.620,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,56,53,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4055, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,358,41,23,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.620,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,56,53,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2806, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,358,41,23,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.620,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,56,53,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4205, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.

திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,358,41,23,000/–,

மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.620,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,56,53,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3017, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,358,41,23,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.620,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,56,53,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3026, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,358,41,23,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.620,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,56,53,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 492, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''அரசு ஊழியர்களுக்கு, பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,358,41,23,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.620,00,01,000/– மற்றும்

கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,56,53,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2249, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கடலூர் மாவட்டம், புவனகிரியில் சார்–கருவூலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,358,41,23,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.620,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,56,53,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2302, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3010, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3684, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''அரசு கருவூலங்கள் கணினிமயமாக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து'' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,358,41,23,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.620,00,01,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.126,56,53,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

(ஐ) கோரிக்கை எண் 35-மனிதவள மேலாண்மைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 35–மனித வள மேலாண்மைத் துறை. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"மனித வள மேலாண்மைத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.121,72,54,000/-, மூலதனக் கணக்கில் ரூ.5,87,27,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.50,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 388, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.*

திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மனித வள மேலாண்மைத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,72,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,87,27,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1990, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.*

திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மனித வள மேலாண்மைத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,72,54,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,87,27,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2274, மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன்.*

திரு. G. அசோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மனித வள மேலாண்மைத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,72,54,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,87,27,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2839, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மனித வள மேலாண்மைத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,72,54,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,87,27,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4390, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மனித வள மேலாண்மைத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,72,54,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,87,27,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4533, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மனித வள மேலாண்மைத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,72,54,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,87,27,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3038, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார்.

திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மனித வள மேலாண்மைத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,72,54,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,87,27,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1073, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மனித வள மேலாண்மைத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,72,54,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,87,27,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2975, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மனித வள மேலாண்மைத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.121,72,54,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,87,27,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *3914*, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மனித வள மேலாண்மைத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,72,54,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,87,27,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *4125*, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மனித வள மேலாண்மைத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,72,54,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,87,27,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *2250*, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கொள்கை பற்றி'' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மனித வள மேலாண்மைத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,72,54,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,87,27,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2785, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மனித வள மேலாண்மைத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,72,54,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,87,27,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3020, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன்.*

திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மனித வள மேலாண்மைத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,72,54,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,87,27,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3027, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மனித வள மேலாண்மைத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,72,54,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,87,27,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4207, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.*

திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மனித வள மேலாண்மைத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,72,54,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,87,27,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 397, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன்.*

திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு ஊழியர்கள் உயர் கல்வி படிக்க விரும்புவோருக்கு விரைந்து அனுமதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மனித வள மேலாண்மைத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,72,54,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,87,27,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2339, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி.*

திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு கல்லூரிக்கு நேரடியாகச் சென்று வளாகத் தேர்வு நடத்தி, தகுதியான மாணவர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மனித வள மேலாண்மைத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,72,54,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,87,27,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3463, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.*

2021 செப்டம்பர் 13]

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொகுப்பு ஊதிய முறையில் பணிபுரியும் அனைத்துத் துறை ஊழியர்களையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மனித வள மேலாண்மைத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,72,54,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,87,27,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3683, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதை 58 ஆகக் குறைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"மனித வள மேலாண்மைத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.121,72,54,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,87,27,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.50,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

முற்பகல் 11–40

(ஓ) கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ரூ.28,244,48,90,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 387, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.

திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,244,48,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1058, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,244,48,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2976, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,244,48,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3918, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,244,48,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4186, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,244,48,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1451, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.

திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,244,48,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2275, மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன்.

திரு. G. அசோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஒய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய *50* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.28,244,48,90,000/–ல் ரூ.100/–* குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *2838*, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஒய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய *50* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.28,244,48,90,000/–ல் ரூ.100/–* குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *3132*, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஒய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய *50* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.28,244,48,90,000/–ல் ரூ.100/–* குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் *3039*, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார்.

திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஒய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய *50* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற *ரூ.28,244,48,90,000/–ல் ரூ.100/–* குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4438, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.*

திரு. ஆர். கணேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,244,48,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4560, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,244,48,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2822, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.*

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,244,48,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4211, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.*

திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,244,48,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3021, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன்.

திருமதி வானதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,244,48,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3029, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,244,48,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3546, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதிய ஓய்வூதியத் திட்டத்தை கைவிட்டு, பழைய ஓய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,244,48,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2021 செப்டம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3673, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,244,48,90,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கான விளக்கங்களை அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

@ 526 முதல் 598 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, நிதித் துறை, மனிதவள மேலாண்மைத் துறை மற்றும் ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வூக்கால நன்மைகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. மேலும், கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கான விளக்கங்களை அளிக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று 8 மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் எட்டு மானியக் கோரிக்கைகள் மீதும் சேர்த்தே பேசலாம். மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் மற்றும் பதிலுரை முடிக்கப்பெற்று, சரியாக 2–00 மணிக்கு வாக்கெடுப்பிற்கு விடப்பட வேண்டும். இன்றைக்கு பிற்பகல் 2–00 மணிக்கு Guillotine நேரம். ஆகவே, அதற்கு முன்னதாக எல்லோரும் சரியாக, தங்களது உரைகளை முடித்துத்தர வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. இசக்கி சுப்பையா விவாதத்தைத் தொடங்கி வைக்க இருக்கிறார். அவரோடு சேர்ந்து மொத்தம் நான்கு உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் பத்து, பத்து நிமிடங்கள் பேசலாம். ஆகவே, எல்லா மானியக் கோரிக்கைகள்மீதும் பேசுகின்ற உறுப்பினர்கள் 10 நிமிடங்களுக்கு மிகாமல் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலாவதாக திரு. இசக்கி சுப்பையா அவர்களை அன்போடு அழைக்கிறேன்.

@ 599 முதல் 819 வரையிலான பக்கங்களில் இணைப்பு III, IV, V, VI & VII ஆக அச்சிடப்பட்டுள்ளன.

2021 செப்டம்பர் 13]

திரு. இசக்கி சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைக் கருவில் சுமந்த தாய்க்கும், தன் தோளில் சுமந்த என் தந்தைக்கும் முதலில் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மண்ணில் இருந்தாலும், விண்ணில் இருந்தாலும், மங்காப் புகழோடு இருக்கும் மாசற்ற தலைவர், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) தன்னையே கரைத்து, தரணியை உயர்த்திய தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருவடிகளுக்கும் என் வணக்கங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நெஞ்சில் பட்டதை நேர்படச் சொல்லி, ஒளி படைத்த கண்ணோடும், உறுதி கொண்ட நெஞ்சோடும், தெளிவுபெற்ற மதியோடும், நாளும் எங்களை வழிநடத்தும் மாண்புமிகு கழக இணை ஒருங்கிணைப்பாளர், எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) அன்பு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், அண்மையில் அரசால் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கைக்கு, தனது நீண்ட அனுபவத்தால், நேர்த்தியாக பத்திக்கு பத்தி தன் அறிக்கைமூலம் பதில் தந்த அடக்கத்தின் அடையாளம், மாண்புமிகு முன்னாள் முதல்வர், கழக ஒருங்கிணைப்பாளர் அன்பு அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி), எனக்குப் பேச வாய்ப்புத் தர பரிந்துரைத்த கழகத்தின் சட்டப் பேரவைக் கொறடா முன்னாள் அமைச்சர் மரியாதைக்குரிய அன்பு அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணிக்கும், கழகத்தின் இணை ஒருங்கிணைப்பாளர்கள் உள்ளிட்ட மூத்த முன்னோடிகள், முன்னாள் அமைச்சர் பெருமக்கள், இச்சட்டப் பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் என் அன்புகலந்த பணிந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையை அலங்கரிக்கக்கூடிய பேரவைத் தலைவராக, என் மாவட்டத்தைச் சேர்ந்த தாங்கள் இருப்பதற்கு எனது வாழ்த்துக்களைப் பதிவு செய்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் என் அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் உள்ளூர்க்காரர் என்றாலும், எனக்கு ஒதுக்கப்பட்ட நேரம்

தவிர ஒரு நிமிடம்கூட அதிக நேரம் எடுக்கமாட்டேன் என்ற உத்தரவாதத்துடன் எனது கருத்துகளைப் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகழ்வாய்ந்த இந்த சட்டப் பேரவையின் கண்ணியத்தை, தரத்தை, இங்கு வந்து உரையாற்றிய தலைவர்களின் மாண்பை நாம் அறிவோம். அப்படிப்பட்ட புகழ்வாய்ந்த சட்டப் பேரவையில் எனது கருத்துகள் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, பொதுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, மாநில சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை, மனிதவள மேலாண்மைத் துறை, ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் உள்ளிட்ட பலதரப்பட்ட துறைகளை உள்ளடக்கியது. கடலுக்குள் சென்று மூழ்கி மூச்சடக்கி, முத்து எடுப்பதுபோல இன்று என்னுடைய பணி உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய விவாதத்தில் பொதுத் துறை மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையில் அரசுப் பணியாளர்களின் நலன் குறித்தும் அவர்களது நிருவாக முறை, பயிற்சி, பதவி உயர்வு, சட்டத் திருத்தம் என்று பல விஷயங்கள் இருக்கின்றன. அரசு ஊழியர்களின் ஓய்வு வயதை 58–லிருந்து 60 ஆக உயர்த்தியது, மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் இன்று அரசு ஊழியர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான, முறையான அகவிலைப்படியை 1–1–2022 முதல் வழங்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். பொதுவாக, மத்திய அரசு அறிவித்த ஒருசில நாட்களிலேயே மாநில அரசும் அகவிலைப்படியை உயர்த்தி வழங்குவதே மரபு. ஆனால் பின்னோக்கி அகவிலைப்படியை அறிவித்திருப்பது அரசு ஊழியர்கள் மத்தியில் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இவ்வரசு மத்திய அரசு அறிவித்த, 1–7–2021 முதலே அகவிலைப்படி உயர்வை வழங்கிட கருதிப்பார்க்கும் என எண்ணுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் ஏதாவது அரசுத் துறை, அரசு சார்ந்த பொது நிறுவனங்களில் வயதுவரம்பு உயர்த்தப்படாமல் இருந்தால், உதாரணத்திற்கு, தொழில் துறையைச் சார்ந்த Tidel Park ஊழியர்கள் உத்தரவு இன்னும் வரவில்லை என்று சொல்கிறார்கள். அதனை ஆராய்ந்து அவர்களது வயது வரம்பை எந்தப்பாகுபாடும் இன்றி உயர்த்த வேண்டுகிறேன். அதுபோலவே

இன்றைய அரசின் தேர்தல் வாக்குறுதியில் பழைய ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதுகுறித்து எந்த அறிவிப்பும் இன்று வரையிலும் இல்லை. அதனையும் நிறைவேற்றுவீர்கள் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையில் காலியாக உள்ள பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் விரைந்து நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன். நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், கூர்நோக்கு ஆய்வோடு பார்த்ததில், பல்வேறு துறைகளில் கருணை அடிப்படை நியமனங்களைப் பொறுத்தவரையில், அவர்களது விண்ணப்பங்கள் முறையாக வழங்கினாலும்கூட, முன்னுரிமைப் பட்டியல் பேணப்பட்டு பல வருடங்கள் காக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதவி என்பது தேவைப்படும்போது செய்வது. எரிகின்ற தீபத்தைவிட ஏற்றுகின்ற கரம் உயர்ந்தது. இருளில் இருக்கின்றபோது மனிதர்களுக்கு வெளிச்சம் தேவைப்படுகின்றது. அதுபோல் அரசு ஊழியர்கள் பணியில் இருக்கின்றபோது இறக்க நேரிட்டால் அந்தக் குடும்பம் வறுமையில் நிற்கக்கூடாது என்பதற்காக, உருவாக்கப்பட்டதே இந்தப் பணியிடம். இதற்குப் பெயரே கருணை அடிப்படையிலான நியமனம். கருணை அடிப்படையிலான நியமனங்களை கால விரயமின்றி வழங்குவதற்கு இந்த அரசு புதிய வழிமுறைகளை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று மனிதாபிமானத்தோடும், அரசு ஊழியர்களின் நலன் கருதியும் கோரிக்கையாக வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முயற்சியும், பயிற்சியும் தொடர்ச்சியாக இருந்தால் வெற்றி நிச்சயம். அந்தவகையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் சோர்வைப் போக்கவும், அவர்கள் புத்துணர்வு பெறவும், துறைசார் பயிற்சிகளோடு தன்னம்பிக்கை, மனிதவள பயிற்சி, நேர நிருவாகம், நகைச்சுவை ஆற்றல், விரைந்து முடிவெடுக்கும் திறன் இவற்றை உள்ளடக்கிய நவீன பயிற்சியை இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு உள்ளடக்கி தனியார் நிறுவனங்களில் வழங்குவதைப்போல அண்ணா மேலாண்மை பயிற்சி மையத்தில் வழங்குவதற்கு வழிவகை செய்யலாம்.

[திரு. இசக்கி சுப்பையா] [2021 செப்டம்பர் 13

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் தலைத் துறையாகவும், தலையாயத் துறையாகவும் இருப்பது நிதித் துறை.

''இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.''

அதாவது, நிதி ஆதாரங்களை வகுத்து, அரசிற்கு வருவாயைப் பெருக்கி, அதனை முறையாகத் திட்டமிடுவதுதான் நல்லாட்சிக்கு இலக்கணம் என்று வள்ளுவப் பெருந்தகை வகுத்துள்ளார். அந்தவகையில் நிதித் துறை அரசின் வருவாயைப் பெருக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு பொதுமக்களின் நலன் பாதுகாத்து வளர்ச்சிப் பாதையில் ஓர் அரசு செல்ல உந்துசக்தியாக இருக்க வேண்டும். அதைவிடுத்து கடந்த காலங்களில் நடந்தவற்றை ஆராய்ந்துகொண்டே இருந்தால், அது அரசின் சீரிய நிருவாகத்தினை மேம்படுத்தாது என்பது பொருளாதார வல்லுநர்களின் கருத்து.

ஓய்வூதியதாரர்களுக்கு வழங்க வேண்டிய ஆயுள் சான்றினை மருத்துவர்களிடமோ, அரசு அலுவலர்களிடமோ கையொப்பம் பெற்று வழங்க வேண்டுமென நிர்ப்பந்தம் செய்யாமல், அனைத்து ஓய்வூதியதாரர்களும் தங்களது இல்லத்தில் இருந்தபடியே, மின்னஞ்சல் வழியாகவும் அனுப்புவதற்கு வழிவகை செய்ய வேண்டுகிறேன். இது காலநேரத்தை, பணிச்சுமையைக் குறைத்து, ஓய்வூதியதாரர்களின் பெருஞ்சுமையைக் குறைக்கும் என்று கருதுகிறேன். அதுபோல பெற்றோர்கள் பல son–களைப் பெற்றிருந்தாலும் கடைசியில் அவர்களைக் காப்பது பென்சன் மட்டுமே. அந்தவகையில் ஓய்வுபெறக்கூடிய பணியாளர்களுக்கு கிடைக்க வேண்டிய பணப் பயன்களை தனியார் நிறுவனங்களைப்போல ஓய்வுபெற்ற 15 நாட்களுக்குள் கிடைப்பதற்கு அரசு வழிவகை செய்தால் வயது முதிர்வு காரணமாக அவர்களுக்கு ஏற்படும் மனச்சுமையை அரசு நிவர்த்தி செய்வதுபோல் அமையும். அதுபோல, சட்டமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை ரூ.20,000/–லிருந்து ரூ.25,000/– ஆக உயர்த்தியதற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு, அதனை ரூ.50,000/– ஆக உயர்த்தினால் மிக்க நன்றி.

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் ஓய்வூதியம் என்பது ஒரு மனிதனுக்கு அந்திமகாலத்தில் ஆறுதலாக அமையும் அருமருந்து. எனவே, முதியோர் ஓய்வூதியம் உரிய வகையில், உரிய காலங்களில், மாண்புமிகு எங்கள் அண்ணன்

எடப்பாடியார் அரசு, கடந்த காலங்களில் வழங்கியதுபோல் எவ்வித தங்குதடையின்றி வழங்கிட இவ்வரசு எல்லா வகைகளிலும் துணைநிற்கும் என்று நான் மனதார நம்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்தவரை, பேரவை நடைபெறும் காலங்களில் அவர்களின் அவசிய, அத்தியாவசிய காரணங்களுக்காக சொந்த ஊருக்குப் பயணப்பட்டு, மீண்டும் பேரவை நிகழ்ச்சிக்கு பங்குபெற வரவேண்டிய சூழல். இதுபோன்ற காலத்தைக் கணக்கிட்டு, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்குவதைப்போல் விமானப் பயணம் மேற்கொள்ள அனுமதி வழங்க வேண்டுகின்றேன். இதற்காக ஓராண்டு காலத்திற்கு இவ்வளவு பயணம் மேற்கொள்ளலாம் என்று அரசு வரன்முறைப்படுத்தலாம். மேலும், பாராளுமன்ற உறுப்பினர்களைப்போல் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இரயிலில் பயணம் செய்வதற்கு விலையில்லா பயணச் சீட்டு வழங்க ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை 3 கோடி ரூபாயாக்கியது எங்கள் எடப்பாடியார் அண்ணன் அரசு. அதை 5 கோடி ரூபாயாக உயர்த்தினால் மிக்க நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் உறுப்பினர் பணி என்பது மிகப்பெரிய பேறு. பரந்து விரிந்த ஜனநாயக நாட்டில் மக்கள் நம்பிக்கையோடு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்கள் பணியாற்றுவதற்காக உறுப்பினர்கள் பேரவைக்கு அனுப்பிவைக்கப்படுகின்றார்கள். இவர்களின் மொத்த எண்ணிக்கை 234 மட்டுமே. அதில் மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு அமைச்சர்கள், மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், அரசு தலைமைக் கொறடா போன்ற பணியிடங்களைத் தவிர்த்து, எண்ணிக்கை வாயிலாகப் பார்த்தால் மிகக் குறைவாகத்தானிருக்கும். எனவே, அவர்களுக்கென்று ஒரு தனி உதவியாளரை Personal Assistant-ஐ நியமித்துக்கொள்ள அரசு கருதிப் பார்க்க வேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) அல்லது அரசுத் துறையில் பணியாற்றும் யாரேனும் ஒரு நபரை மாற்றுப் பணியில் வைத்துக்கொள்ள இந்த அரசு உதவினால்கூட சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மக்களுக்கும் இது ஒரு பாலமாக அமையும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கோ அல்லது அவர்களைச் சார்ந்தவர்களுக்கோ ஏற்படும் மருத்துவச் செலவுகளை அரசே ஏற்க வழிவகை செய்ய கருதிப் பார்க்க வேண்டுகின்றேன்.

அதுபோல்,பேரவை நடைபெறும் நாட்கள் அதிகப்படுத்தப்படும், மக்களின் பிரச்சினைகளுக்காக கூடுதல் நேரமும், நாட்களும் அதிகரிக்கப்படும் என்று தேர்தல் காலங்களில் சொல்லப்பட்டது. ஜனநாயக நாட்டில் மக்களுக்கு பாலமாக இருப்பது சட்டப் பேரவை. இங்கு பேரவை உறுப்பினர்கள் தங்களது கருத்துகளைச் சுதந்திரமாக, போதிய நேரத்தோடு எடுத்துரைப்பதற்கு வசதியாக இருக்கும் என்பது என்னுடைய அன்பான வேண்டுகோள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாட்டின் வளர்ச்சியில் நீதித் துறையின் பங்கு என்பது அஸ்திவாரம் போன்றது. ஓடுகின்ற தேரின் அச்சாணி போன்றது நீதித் துறை. ‘தாமதிக்கப்பட்ட நீதி, மறுக்கப்பட்ட நீதியாகும்’ என்று சட்டப் பழமொழி உண்டு. அந்தவகையில் நீதித் துறை மேம்பாடடைய நீதித் துறையில் காலியாக இருக்கும் பணியிடங்களை நிரப்பிட, நீதித் துறைக்கு கால அவகாசம், சூழ்நிலைக்கு ஏற்ப, தேவைப்படும். பணிக்குரிய வசதி வாய்ப்புகளை இந்த அரசு உடனுக்குடன் செய்து தர வேண்டுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக மாற்றிட தொலைநோக்கு திட்டம், 2023-ஐக் கண்டவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அரசின் பல்வேறு துறைகளில் மாற்றத்தையும், மக்களுக்கு ஏற்றத்தையும் தருவதற்காக, 2011 மே மாதம் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை என்பதை உருவாக்கி, தனி அமைச்சகம் நியமித்த அரசு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு.

அரசின் திட்டங்களைக் கண்காணித்து செயல்முறைப்படுத்தி, ஓய்வில்லாமல் தொடர்ச்சியாகக் கொண்டு சென்றால் மட்டுமே, மக்களின் வாழ்வில் பூந்தோட்டம் பிறக்கும் என்கின்ற நம்பிக்கையோடு அம்மாவின் அரசும், அதைத் தொடர்ந்து அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையை மிகமிக நேர்த்தியோடு வழிநடத்தினார்கள்.

இங்கே ஒரு செய்தியை நான் வலியுறுத்தக் கடமைப் பட்டுள்ளேன். எந்தவொரு திட்டமும் மாண்புமிகு உறுப்பினரின்

வளர்ச்சிக்காக, தனிமனிதனின் தேவைக்காக இங்கே உருவாக்கப்படுவதல்ல. நாட்டு மக்கள் வளம் பெறவும், நலன் பெறவும் வகுக்கப்படுவதே அரசின் திட்டங்கள். அந்தவகையில் இன்று சத்துணவு என்று சொன்னவுடன், காலங்கள் கடந்தாலும் நம் கண்முன்னே இருப்பது சத்துணவுத் திட்டமும், பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களின் உருவமும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுபோல, புரட்சித் தலைவி அம்மா என்று சொன்னவுடன், மாணவர்களுக்கான விலையில்லா மடிக்கணினி, மிதிவண்டி, அம்மா இருசக்கர திட்டம், கறவை மாடு, ஆடு, கோழி, தாலிக்குத் தங்கம், திருமண நிதியுதவி, முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், அம்மா உணவகம், சூரிய மின்சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள் திட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்லவில்லை, நீங்களே சொல்லிவிட்டீர்கள், 10 நிமிடங்களுக்குமேல் நான் பேசமாட்டேன் என்று. 10 நிமிடங்கள் முடிந்து 11 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. இசக்கி சுப்பையா: இரண்டே நிமிடங்களில் முடித்துவிடுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எடுத்துக்கொள்ளுங்கள். முடித்துவிடுங்கள்.

திரு. இசக்கி சுப்பையா: இப்படி பல்வேறு திட்டங்களின்மூலம் பயனடைந்தவர்கள், பயனடைய இருப்பவர்களில் ஜாதி, மத, இன பேதம் கிடையாது. கட்சி பாகுபாடு கிடையாது. மக்களுக்கு தேவைப்பட்ட திட்டங்களே இங்கு சட்டங்களாக வகுக்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைக் குறிப்பு என்பது எந்தக் காலத்திலும் அழியாதது. இங்கு பேசுவது யாரானாலும் மறுக்க முடியாத, வரலாற்று நிகழ்வாக இருக்கும் என்பதுதான் என்னுடைய கருத்து. தமிழ் திராவிடம், தமிழர் நலன், தமிழர் வளர்ச்சி ஆகியவற்றைக் குறித்து மிகுந்த அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, பதவியேற்று சுமார் 100 நாட்களைக் கடந்துவிட்ட நிலையில், 7 பேர் விடுதலை குறித்து என்ன செய்யப் போகிறீர்கள் என்பதை மாமன்றமும், மக்கள் மன்றமும் தெரிந்துகொள்ள ஆசையாக இருக்கின்றன.

'ஒரு நாட்டினுடைய உயிர் நாடி ஜீவநதிகளே. அந்தவகையில் மேகதாது அணை கட்டுவதைத் தடுப்பதற்கு கூட்டங்களும், கடிதங்களும், கோரிக்கைகளும் தீர்வாகாது என்ற முறையில் செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டும்' என்று ஜூலை 20, 2019 அன்று அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த இன்றைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதேசபையில் வலியுறுத்தியதை நான் மீண்டும் இன்று வலியுறுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாரையும் குறை சொல்வதோ, வஞ்சகமாகச் செய்திகளை வெளிப்படுத்துவதோ என்னுடைய நோக்கம் அல்ல. ஓர் அரசுக்கு மக்கள் பிரதிநிதி நியாயமானவற்றை எடுத்துச்சொல்வது கடமையாகும். அந்த வகையில், கச்சத்தீவு, காவேரி மற்றும் மேகதாது பிரச்சினைக்கான தீர்வைக் கண்டிட, மத்திய அரசில் நீண்ட நாட்கள் அங்கம் வகித்த இந்த அரசு தற்போது ஆட்சிக்கட்டிலுக்கு வந்திருக்கிறது. 100 நாட்களைக் கடந்துவிட்ட நிலையில், விரைவில் இவற்றுக்கான தீர்வைக் கண்டிடுவீர்கள் என நான் நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த பத்து ஆண்டுகால அரசின் செயல்பாடுகளை ஒரு வினாடி எண்ணிப்பாருங்கள். தமிழகம் மின் மிகை மாநிலம் என்ற பெயர், கல்வித் துறையில் பிற மாநிலங்களுக்கு முன்னோடி, மக்கள் நல்வாழ்வுத் துறையில் எழுச்சிமிகு மாற்றங்கள், உள்ளாட்சித் துறையைப் பொறுத்தவரையில், கிராமம் கிராமமாக தெரு விளக்கு, தரமான சாலை, தங்கு தடையில்லா குடிநீர், சட்டமும் காவலும் நேரத்தோடு செய்தது இவையெல்லாம் உதாரணங்கள் மட்டுமே. கடந்த அரசின் நல்லாட்சிக்குச் சான்றாக பலமுறை பல்வேறு துறைகளில் மத்திய அரசால் வழங்கப்பட்ட விருதுகள், மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அரசுக்குக் கிடைத்த ISI முத்திரையாக அமைந்தது. மனித வளம் பேணி தமிழகம் வளர, அமைதி, வளம், வளர்ச்சி நோக்கி பீடுநடை போட திட்டங்களை நடைமுறைப்படுத்தவும், சட்டங்களைச் செயல்படுத்தவும், மனித வள மாண்போடு போற்றப்படவும் இந்த அரசு துணை நிற்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை இந்தப் பேரவைக்கு இரண்டாவது முறையாக அனுப்பிவைத்த

அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு கோடானு கோடி நன்றிகள். என் ஆயுள் முழுவதும் இந்தப் பகுதி மக்களுக்கு இன்றும், என்றும் நன்றியோடு இருப்பேன் என்ற கருத்தினைப் பதிவு செய்து, என் தொகுதிக்குத் தேவையான அவசியமான, அத்தியாவசியமான தேவைகளைப் பட்டியலிட்டு முறையாகத் தங்களிடம் தனியே வழங்கினாலும்கூட, இரண்டு நிமிடங்களில்கூட இல்லை, ஒரு நிமிடத்தில் ஒருசிலவற்றை மட்டும் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேச்சு பேச்சாக இருக்க வேண்டும். நீங்களும் மீறக் கூடாது. நானும் மீறக் கூடாது.

திரு. இசக்கி சுப்பையா: திருநெல்வேலிகாரர்கள் பேச்சு மாற மாட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையை முடித்துவிடுங்கள்.

திரு. இசக்கி சுப்பையா: நான் தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். மிக்க நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேசுங்கள். முக்கியமானவற்றைச் சொல்லிவிட்டு முடித்துவிடுங்கள்.

திரு. இசக்கி சுப்பையா: ஒரு simple விஷயம். திருநெல்வேலி மாவட்டத்திற்கு தலைமை மருத்துவமனை அமைக்க வேண்டும். அதற்கான செயல்திறன் அடிப்படையில், அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனைதான் number one ஆக உள்ளது. அதை அமைத்துத் தருவீர்கள் என நான் நம்புகிறேன். அது தங்களுக்கும் தெரியும். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்திற்கு ஒரு தலைமை மருத்துவமனையை செயல்திறன் நியதிப்படி அம்பாசமுத்திரத்தில் அமைத்துத் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானும் உங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவன், எனது தொகுதியில், வள்ளியூரில் அரசு தலைமை மருத்துவமனை அமைத்துத் தரக் கேட்டிருக்கிறேன்.

திரு. இசக்கி சுப்பையா: செயல்திறன் வள்ளியூரில் அதிகமாக இருந்தால் அங்கு அமைத்துக்கொடுங்கள். அம்பாசமுத்திரத்தில் அதிகமாக இருந்தால் எனது தொகுதியில் அமைத்துக்கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மீதமுள்ள தொகுதிக் கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள். பதிவு செய்து கொள்கிறோம்.

திரு. இசக்கி சுப்பையா: எங்கள் தொகுதி விவசாய பூமி. அந்த பூமியில் 7 canals இருக்கின்றன. அந்த 7 canals-க்கும் சிமெண்ட் லைனிங் அமைத்துக் கொடுத்தால், தண்ணீர் வீணாகாமல் இருக்கும். வருடா வருடம் annual maintenance செலவு குறையும். மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களிடம் இதை செய்து தர வேண்டுமென்று ஒரு கோரிக்கையாக நான் வைக்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு, தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம் குறித்து, தாமிரபரணி river bed-ன் southern side-ல்தான் என்னுடைய தொகுதி முழுவதும் வருகிறது. அங்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைத்துக்கொடுத்தால் நன்றாக இருக்கும்.

அதேபோன்று, எனது தொகுதியில் ஓர் அரசுக் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சரை கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற வேறு சில கோரிக்கைகளும் இருக்கின்றன. அவற்றை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் கொடுத்துவிடுகிறேன். பரிசீலனை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

தொகுதிக் கோரிக்கைகள்:

அம்பாசமுத்திரம் தொகுதியில் உள்ள சொரிமுத்து அய்யனார் கோயிலில் பலரும் வந்து தங்கி தங்கள் நேர்த்திக் கடனைச் செய்து, வழிபாடு நடத்திவருகிறார்கள். ஆனால், சில சமயங்களில் வனத் துறையினரால் இக்கோயிலுக்குச் செல்வதற்குத் தடை விதிக்கப்படுகிறது. அந்தத் தடையை நீக்கிட உதவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அம்பாசமுத்திரம் தொகுதியில் உள்ள அகத்தியர் அருவி, மணிமுத்தாறு அருவி, பாபநாசம், சொரிமுத்து அய்யனார் ஆலயம் ஆகியவற்றோடு, மணிமுத்தாறு பூங்காவைச் சீர்செய்து, புதுப்பித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வாழை மற்றும் காய்கறி அதிகம் விளையும் இப்பகுதியில் கரையாறிலிருந்து திருவனந்தபுரத்திற்கான மலை வழிச்

சாலையைச் செப்பனிட்டு, சீர்செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அம்பாசமுத்திரம் தொகுதியில் ஒரு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியையும், மதுரா கோட்ஸ் ஆலை நவீனமயமாக்கப்பட்டதால் வேலையின்றி இருக்கும் தொழிலாளர்களுக்காக இந்தப் பகுதியில் ஒரு தொழிற்சாலையையும் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன் அவர்கள்.*

***திரு. நிவேதா எம். முருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதிக் காவலர், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களை வணங்குகிறேன். 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்ற பேரறிஞர் அண்ணா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ், தமிழ், தமிழ் என்று தனது இறுதி மூச்சு வரை தமிழுக்காகவும், தமிழினத்திற்காகவும் உழைத்த, இந்தியத் திருநாட்டின் அரசியலை வழிநடத்திய செம்மொழி நாயகர், தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஜனநாயக மாண்பைப் பாதுகாக்கின்ற, சட்டம் இயற்றுகின்ற இவ்வரலாற்றுச் சிறப்புமிக்க மாமன்றத்தில் எனது அறிமுக உரையை நிகழ்த்த வாய்ப்பளிக்கப்பெற்ற நான். மிகவும் பிற்படுத்தப்பட்ட, எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன், என்னை. கழகப் பொதுக் குழு உறுப்பினர், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர், ஒன்றியப் பெருந்தலைவர், ஒன்றியச் செயலாளர் என அங்கீகரித்து, என்மீது நம்பிக்கை வைத்து, மாவட்டப் பொறுப்பாளர் பொறுப்பினைத் தந்த, பெருமைமிகு நமது கழகத் தலைவர் அவர்கள் வழிகாட்டுதலின்படி, நடந்து முடிந்த நாடாளுமன்ற, உள்ளாட்சி மற்றும் சட்டமன்றத் தேர்தல்களில் 100 சதவீதம் வெற்றியைப் பெற்றோம். இன்று என்னையும் மக்கள் பணியாற்றிட வாய்ப்பளித்த நமது திராவிட அரசின் தளபதி, 14 வயதில் கழகக் கொடியை கையில் ஏந்தி, பொது வாழ்க்கையில் அடியெடுத்து வைத்து, தொடர்ந்து, உழைப்பால், சிந்தனையால் பெரியாராக, கருத்தில் அண்ணாவாக, கொள்கையில் கலைஞராக

களமாடி, ஏழை, எளிய மக்களின் உயர்வுக்காக தனி அமைச்சகம் தொடங்கி, 7½ கோடி தமிழர்களின் நல்வாழ்வுக்காக அயராது பாடுபட்டுவருகின்ற மக்களின் மாண்புமிகு முதல்வர், எங்களது குடும்பத் தலைவர் அவர்களுக்கு இத்தருணத்தில் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நண்பகல் 12–00

இளைஞர்களின் எழுச்சி நாயகர், ஒற்றைச் செங்கல்லை வைத்து எதிரிகளின் சாம்ராஜ்யத்தில் வெற்றி வாகை சூடிய, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடுத்த அத்தியாயமே! எங்களின் சின்னவரே! எதிர்கால மன்னவரே! (மேசையைத் தட்டும் ஒலி) எங்களின் சின்னவரே! எதிர்கால மன்னவரே! எங்கள் கழகத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்டுவரும் சேப்பாக்கம் தொகுதியின் செல்லப்பிள்ளை, எங்கள் மாவட்டத்தின் பேரப்பிள்ளை அவர்களுக்கு இந்தத் தருணத்தில் நன்றியை உரித்தாக்குகிறேன். திருவெண்காட்டின் திருவிளக்கு; எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு; எனக்குப் பிரச்சாரம் செய்த எங்களது அண்ணியார் அவர்களுக்கு இந்தத் தருணத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இம்மன்றத்தில் பொன்விழா கண்ட மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் இந்த நேரத்திலே எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். கழகத்தின் ஒன்றுபட்ட தஞ்சை மண்டலத்தின் தளகர்த்தராகவும், கழக முன்னோடியாகவும், எனது பூம்புகார் தொகுதியில் மேக்கிரிமங்கலத்தில் பிறந்த முன்னாள் அமைச்சர் ஐயா திரு. கோ.சி. மணி அவர்கள் பிறந்த நாளான இன்று அவரை இந்த அவையில் நினைவுகூர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்து மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் நான் வெற்றிபெற தீவிர பிரச்சாரம் மேற்கொண்ட விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர்

2021 செப்டம்பர் 13] [திரு. நிவேதா எம். முருகன்]

அண்ணன் திரு. தொல். திருமாவளவன் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழர்தம் பண்பாட்டிற்கும், கலாச்சாரத்திற்கும், வணிகத்திற்கும் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் கைவண்ணத்தில் உருவான கற்புக்கரசி கண்ணகியின் சிலப்பதிகாரம் கண்ட வரலாற்றுப் பெருமைமிக்க பூம்புகார் எனது தொகுதி. 20 ஆண்டுகளுக்குப்பின் கழக சட்டப் பேரவை உறுப்பினராக எனக்கு வாக்களித்து வெற்றிபெறச் செய்த எனது பூம்புகார் தொகுதி வாக்காளப் பெருங்குடிமக்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல் எனது வெற்றிக்கும், எனது மாவட்டத்திலுள்ள சீர்காழி, மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதிகளின் வெற்றிக்கும் பணியாற்றிய கழக முன்னோடிகளுக்கும், கழக நிருவாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், அதன் நிருவாகிகளுக்கும் முதற்கண் நன்றியையும், வணக்கத்தையும் இந்த நேரத்திலே உரித்தாக்கிக்கொள்கிறேன். என்னை ஈன்றெடுத்த பெற்றோர்கள் நினைவில் வாழும் தந்தையார் முனுசாமி அவர்களையும், தாயார் அமராவதி அம்மையார் அவர்களையும் இந்த நேரத்தில் நினைவுகூர்கிறேன். எனது இல்லத்தரசி, மகள், மருமகன், மகன்கள், நண்பர்கள், உறவினர்கள் ஆகியோருக்கும் இந்தத் தருணத்தில் நன்றியை நினைவுகூர்கிறேன்.

தமிழ் நிலப்பரப்பில் முதன்முதலில் தமிழ் எழுத்து அச்சுக் கோர்வை இயந்திரம் அறிமுகப்படுத்திய கடிதாசிப்பட்டறை பொறையார் நான் பிறந்த ஊர். தேசப் பிதா காந்தியடிகள் அவர்களுக்கு முதன்முதலில் விடுதலை வேட்கையை விதைத்த வள்ளியம்மை அவர்கள் பிறந்த தில்லையாடியும், இந்தியாவிலேயே முதன்முதலில் 1718 ஆம் ஆண்டு கட்டப்பட்ட புதிய எருசலேம் தேவாலயம் உள்ள தரங்கம்பாடியும், இந்தியாவிலேயே முதன்முதலில் மணிவிழா, சதாபிஷேகம் நடத்த வருகைதரும் சிறப்பு திருத்தலம் திருக்கடையூர் திருக்கோயிலும், இராமாயணத்தை தமிழில் இயற்றிய கம்பர் பிறந்த தேரழுந்தூரும், உள்ளடக்கி காவேரி கடலில் கலக்கும் பகுதி என்பதால் காவிரிப்பூம்பட்டினம் என்றழைக்கப்படும் பூம்புகார் என்பது எனது தொகுதியாகும்.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நூற்றாண்டு பெருமைகொண்ட இந்தச் சட்டமன்றத்தில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய திருவுருவப்

படத்தை குறுகிய காலத்தில் மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களது திருக்கரங்களால் சட்டமன்றத்தில் திறந்துவைத்து பெருமை சேர்த்த நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்திய அரசியல் வரலாற்றில் குறுகிய நாட்களில் மக்கள் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி, இன்றைக்கு இந்திய மாநில முதல்வர்களில் சிறந்த முதல்வர் என்று, கடந்த 10 ஆண்டுகளில் மன்றத்தில் இல்லாத ஜனநாயகத்தையும், மாநில சுயாட்சி உரிமையையும், சமூக நீதியையும் நிலைநாட்டிக் கொண்டிருக்கின்ற மன்றம் என இந்திய அரசியல் தலைவர்கள், தமிழக, இந்திய ஊடகங்கள் என எல்லோரும் பாராட்டக்கூடிய முதல்வர் நமது தலைவர் அவர்கள். பேரவை விதி 110 என்றாலே கடந்த 10 ஆண்டுகளாக சமூக வலைதளங்களில் கேலியும் கிண்டலுமாக இருந்த நிலையை மாற்றி தற்போது பேரவை விதி 110 என்றால் தினமும் என்ன அதிசயம் நிகழப் போகிறது என்ற எதிர்பார்ப்பு நிலையை உருவாக்கி, அதில் முத்தாய்ப்பாக 80 ஆண்டுகாலம் தமிழ் சமுதாயத்தில் உழைத்த போராளி, 60 ஆண்டு கால சட்டமன்ற உறுப்பினர், 50 ஆண்டு கால திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், காலம் முழுவதும் வரலாறாகவே வாழ்ந்த மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நினைவிடம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை அறிவித்தமைக்கு இத்தருணத்தில் எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-05

மேலும், மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு என்று ஜாதி ஒழிப்பு, பெண்ணடிமைத்தனம் ஒழிப்பு என வாழ்ந்த பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் பிறந்த நாளை சமூக நீதி நாளாக அறிவித்து, அரசு விழாவாக நடத்தப்படும் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பினை அறிவித்தமைக்கு இத்தருணத்தில் எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று, 1881 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பில் பூர்வ தமிழர் என பதியச் சொன்ன அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என அறிவித்தமைக்கும், தமிழ்நாடு ஆதி திராவிடர்-பழங்குடியினர் நல ஆணையம் அமைக்கப்படும் என அறிவித்தமைக்கும், செக்கிழுத்த

செம்மல் கப்பலோட்டிய தமிழர் வ.உ. சிதம்பரனார் அவர்களின் 150–வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அவரது தியாகத்தை, பெருமையைப் போற்றும் விதமாக, 10–க்கும் மேற்பட்ட திட்டங்களை அறிவித்தமைக்கும், (மணியடிக்கப்பெற்றது) இலங்கைத் தமிழர்கள் கல்வி, மருத்துவம், வாழ்வுரிமைக்கு நிதி ஒதுக்கீடு, கல்வி உதவித் தொகையை 4 மடங்காக உயர்த்தியது, மொத்தத்தில் 317 கோடியே 40 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்தது ஆகியவற்றிற்காகவும், அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டமைக்கும்; இட ஒதுக்கீடுப் போராட்டத்தில் துப்பாக்கியால் சுடப்பட்டு பலியான 21 சமூகப் போராளிகளுக்கு மணிமண்டபம் கட்டித் தரப்படும் என்று விதி எண் 110–ன்கீழ் அறிவித்து பெருமை சேர்த்துள்ளமைக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் நேரம் கடந்துசெல்கிறது. மானியக் கோரிக்கையின்மீது பேசுங்கள்.

திரு. நிவேதா எம். முருகன்: தேர்தலுக்கு முன்பு, ‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’ என்று புகார் பெட்டியை வைத்தபோது, எதிர்க்கட்சிகள் கேலியும், கிண்டலும் செய்தன. அதனை மாற்றும் வகையில், ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், இந்திய வரலாற்றிலேயே ‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’ என்ற தனிப் பிரிவு அமைத்து, அதற்கு சிறப்பு அதிகாரியை நியமித்து, பெறப்பட்ட 3,51,486 மனுக்களில் 1,76,268 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. இது இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டம் என்று எல்லோரும் பாராட்டுகின்றனர். அதற்காக நமது மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சியில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை உயர்த்தித் தருவதாகச் சொன்னார்கள். செய்தார்களா? அறிவிப்பது மட்டும்தான் அவர்களது வழக்கம். எங்கள் மாண்புமிகு முதல்வர் அதையும் செயலாக்கம் செய்திருக்கிறார். சொன்னதை மட்டும் செய்கிற ஆட்சியாக மட்டும் இல்லாமல்; சொல்லாததையும் செய்கிற ஆட்சியாக இந்த ஆட்சி இருக்கிறது. அதேபோன்று, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் மருத்துவப்படி

குறைவாக இருக்கிறது. அதை உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.மேலும்,முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், குடியிருப்புகளில் 5 நாட்களுக்கு மட்டுமே தங்க அறைகள் ஒதுக்கப்படுகின்றன. அதை 10 நாட்களாக அதிகரித்தால் அவர்களுக்கு ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராக தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தொகுதி மேம்பாட்டு நிதி வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனது தொகுதியைப் பொறுத்தவரையில், 100 ஊராட்சிகள் இருக்கின்றன; 70 கி.மீ. சுற்றளவு இருக்கிறது. ஒரு ஊராட்சிக்கு 5 இலட்சம் ரூபாய் என்று வைத்துக்கொண்டாலே, 100 ஊராட்சிகளுக்கு 5 கோடி ரூபாய் தேவைப்படும். கொடுப்பது 3 கோடி ரூபாய்தான்; அது போதாது. ஆனால், தமிழக அரசோ பல கோடி ரூபாயை திட்டங்களுக்காகச் செலவு செய்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியாக 5 கோடி ரூபாய் கொடுத்தால் ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.(மேசையைத் தட்டும் ஒலி) இது அனைத்து உறுப்பினர்களுடைய வேண்டுகோள் ஆகும். அரசியல்வாதிகளுக்கு வங்கிகளில் லோன் தருவதில்லை. எனக்கு இல்லை. சரியாக லோன் கட்டுகிற அனைவருக்கும் முன்னுரிமை கொடுத்து லோன் கொடுக்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்லாமல், தேர்தல் கமிஷன், வாக்காளர் பட்டியல் வரைவு அனுப்பும்போதெல்லாம், அப்பட்டியலிலிருந்து 10 ஆண்டுகளுக்கு முன்பு இறந்தவர்கள் பெயர்களை எடுக்காமல் அனுப்புகிறது. அதற்கு தனி கவனம் எடுத்து, இறந்தவர்கள் பெயர், வாக்காளர் பட்டியலில் வராத அளவிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் 600 வாக்காளர்கள்தான் இருக்கிறார்கள். அதில் 10 சதவிகிதத்திற்கும் மேல் இறந்தவர்களுடைய பெயர் இருக்கிற காரணத்தினால் வாக்காளர் list-ல் எண்ணிக்கை ஏறிக்கொண்டே இருக்கிறது. அதனால் அதில் கவனம் எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) அடுத்து, என்னுடைய தொகுதிப் பிரச்சினை மட்டும்தான்.

பிற்பகல் 12–10

சிறப்புக்கெல்லாம் சிறப்பாய் தமிழகத்தில் சிறப்பான ஆட்சியை வழிநடத்திக்கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக எனது தொகுதி மக்களின் கோரிக்கையை முன்வைக்கிறேன்.

காவேரி கடைமடைப் பகுதி அதிகம் உள்ள எனது தொகுதியில் வேளாண்மையும், மீன்பிடித் தொழிலும் பிரதானமானது. வரலாற்றுச் சிறப்புமிக்க பூம்புகாரை உருவாக்கிய தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு சிலப்பதிகார கலைக்கூடம் பகுதியில் அவரது முழுவுருவச் சிலை அமைக்க வேண்டுமென என் தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பூம்புகார், தரங்கம்பாடி சுற்றுலாப் பகுதியினை தொன்மை மாறாமல் புதுப்பித்து, சுற்றுலாத் தலமாக மேம்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். திருவிளையாட்டம் மற்றும் கங்காதரபுரம் ஊராட்சிகளில் புதிதாக ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். செம்பனார்கோவிலில் புதிதாக உழவர் சந்தை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இயற்கைச் சீற்றத்தால் சேதமடையும் வாழைகளுக்கு வழங்கப்படும் நஷ்டஈட்டை இருமடங்காக உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆட்சியில் நியாய விலைக் கடைகளில் தரம் குறைந்த அரிசி மட்டுமே வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு, இன்று *2–00* மணிக்கு guillotine நேரம் இருக்கிறது. ஆகவே, அதற்குள் இன்று விவாதத்தை முடித்தாக வேண்டும். உங்கள் தொகுதிக் கோரிக்கைகள் எல்லாம் நீங்கள் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பில் சேர்த்துக்கொள்ளப்படும். முக்கியக் கோரிக்கைகளை மட்டும் பேசிவிட்டு மற்றவற்றை என்னிடம் கொடுத்துவிடுங்கள்.

திரு. நிவேதா எம். முருகன்: ஒரே ஒரு நிமிடம். (குறுக்கீடு) முக்கியமான கோரிக்கை ஒன்றே ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். தற்போது புதிதாக அரசு பொறுப்பேற்ற பின் நல்ல அரிசி வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அரிசி ஆலைகளில் அரிசியைத்

தரம் பிரிப்பதற்கு இயந்திரம் வைக்கப்படும் என அறிவித்த மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

டெல்டா மாவட்டங்களில் ஊராட்சிக்கு ஊராட்சி நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்மூலம் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. மேற்கண்ட நெல் கொள்முதல் நிலையங்களில் மழை பெய்யும்போது, போதுமான பாதுகாப்பு இல்லாத காரணத்தினால், கொள்முதல் செய்கிற நெல் வீணாகிப்போகிறது. இதிலும் பல தவறுகள் நடைபெறுகின்றன. எதிர்காலங்களில் நெல் கொள்முதல் செய்யும்போதே, கூட்டுவதற்கும், உலர்த்துவதற்கும் தேவையான இயந்திரங்களை நெல் கொள்முதல் நிலையங்களில் வாங்குவதன் மூலமும், வட்டார அளவில் 5 அல்லது 6 இடங்களில் நெல் சேமிப்புக் கிடங்குகளை ஏற்படுத்தி, அங்கேயே நெல் கொள்முதல் செய்து சேமித்து வைப்பதன் மூலமும். நெல் வீணாகாமல், மக்களுக்கு தரமான அரிசி கிடைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும்.

வேளாண்மை பொறியியல் துறை மூலமாக வழங்கப்பட்ட வாடகை உழவர் இயந்திரங்கள், வட்டார அளவில் வழங்கப்படும் என்று அறிவித்தமைக்கு மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் கடற்கரையோர மீனவர் கிராமங்களான சின்னூர்பேட்டை, சந்திரபாடி, தரங்கம்பாடி, குட்டியாண்டூர், பெருமாள்பேட்டை, தாழம்பேட்டை, புதுப்பேட்டை, சின்னங்குடி, சின்னமேடு, வானகிரி, பூம்புகார், புதுக்குப்பம் ஆகிய ஊர்களில் நிலத்தடி நீர் உப்பாக இருக்கிறது. அதன் காரணத்தால் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நம்பி மட்டுமே குடிநீர் இணைப்புகள் உள்ளன. இணைப்புகள் நம்பர் 114, 134, 295 ஆகிய குடிநீர் இணைப்புகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. நிவேதா எம். முருகன்: இதோ முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நேரம் ஆகிவிட்டது. நீங்கள் பேச ஆரம்பித்து 12 நிமிடங்கள் ஆகிவிட்டன.

2021 செப்டம்பர் 13]

திரு. நிவேதா எம். முருகன்: *ஒரே ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன், முடிந்துவிட்டது. 15 ஆண்டுகளாகப் பழுதடைந்துள்ள குழாய்களை மாற்றிவிட்டு புதிதாக குழாய்களை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதிதாக மின் மோட்டார் பொருத்தினால் ஏதுவாக இருக்கும். மேலும், அங்குள்ள சந்திரபாடி, சின்னங்குடி பகுதிகளில் மீன் உலர்தளம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பெருமாள்பேட்டை, புதுப்பேட்டை, தாழம்பேட்டை ஆகிய பகுதிகளில் கடல் அரிப்பைத் தடுப்பதற்கு கல் தடுப்புச் சுவர் அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், சின்னங்குடி, வானகிரி, சந்திரபாடி ஆகிய மீன்பிடி கிராமங்களில் ஆற்று முகத்துவாரங்களைத் தூர் வாரி கரை அமைத்து, பலப்படுத்தி படகு நிறுத்தும் தளம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சங்கரன்பந்தல், திருக்கடையூர் ஆகிய பகுதிகளுக்கு . . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கதிரவன் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. கதிரவன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் தொகுதிக் கோரிக்கைகள் அனைத்தும் பதிவு செய்யப்படும். உங்கள் தொகுதிக் கோரிக்கைகளை என்னிடம் கொடுங்கள். (குறுக்கீடுகள்) நன்றி சொல்லி முடியுங்கள். (குறுக்கீடுகள்) நன்றி சொல்லி முடியுங்கள்.*

திரு. நிவேதா எம். முருகன்: *ஒரே ஒரு நிமிடம். ஜெர்மனியைச் சேர்ந்த சீகன் பால் அவர்கள் முதல் முறையாக தமிழகத்தில் பொறையார் கிராமத்தில் 1716 ஆம் ஆண்டு காகிதப் பட்டறையில் அச்சு மை தயாரித்து, தமிழ் எழுத்துக்களை இயந்திரம்மூலம் அச்சேற்றினார். மேலும், அவர் ஒரு நாள்காட்டியை அச்சிட்டு வெளியிட்டார், பெண்களுக்கான கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் தமிழ் மக்களுக்குப் பாடுபட்ட சீகன் பால் அவர்களுக்கு தரங்கம்பாடியில் அவரது நினைவிடம் அமைந்துள்ள பகுதியில் மணிமண்டபம் அமைத்துத் தருமாறும், தேர்தல் வாக்குறுதியில் கூறியதை நடைமுறைப்படுத்துமாறும் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

பிற்பகல் 12-15

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சீ. கதிரவன் அவர்கள். (குறுக்கீடு)*

திரு. சீ. கதிரவன்: *ஜனநாயகத்தின் பிறப்பிடமாம் இம்மாமன்றத்தினை செம்மையுற வழி நடத்திச் செல்லும். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், திரு. நிவேதா எம். முருகன் நன்றி மட்டும் சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. நிவேதா எம். முருகன்: *நான் கொடுக்கின்ற அனைத்துக் கோரிக்கைகளையும் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டு, நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

தொகுதிக் கோரிக்கைகள்:

பூம்புகார், செம்பனார்கோவில், சங்கரன்பந்தல், பெரம்பூர், மேக்கிரிமங்கலம் ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகங்கள் முழுவதுமாக சேதமடைந்த நிலையில் உள்ளன. இவற்றை இடித்துவிட்டு புதிய கட்டடங்கள் கட்ட வேண்டும். அதுபோல், பற்றாக்குறையாக உள்ள கால்நடை மருத்துவர், உதவியாளர் மற்றும் மருந்தாளுநர்கள் பணியிடங்கள் நிரப்பப்பட ஆவன செய்யுமாறு கேட்டுகொள்கிறேன்.

திருவாவடுதுறை, காவேரிப்பூம்பட்டினம், வடகரை, ஆக்கூர், சின்னங்குடி, செம்பனார்கோவில் மற்றும் அசிக்காடு, தில்லையாடியில் உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் செம்பனார்கோவில் பகுதியில் புதிய அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

திருக்கடையூர், சங்கரன்பந்தல் ஆகிய பகுதிகளில் புதிய காவல் நிலையம் அமைத்துத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

பாலையூர், செம்பனார்கோவில் பகுதிகளில் புதிய தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

செம்பனார்கோவில்-மேலப்பாதி, ஆறுபாதி-மேலையூர், முடிகண்டநல்லூர்-கீழையூர், திருவிடைக்கழி-பூச்சாத்தனூர், பெரம்பூர்-எரளாச்சேரி, கங்காதரபுரம்-கொண்டாங்கி சாலை,

எழுமகளூர்-A கிளியனூர் சாலை, மாந்தை சந்தைவெளி-கீழமாந்தைச் சாலை, கொக்கூர்–ஆற்றங்கரைச் சாலை, பெரும்பூர்–அறிவாளி மங்கலம் ஆகிய சாலைகளைச் செப்பனிட்டு அவற்றில் பழுதடைந்துள்ள பாலங்களைச் சீரமைத்துத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆணைகோவில், திருக்கடையூர், கிள்ளியூர், மடப்புரம், மண்மலை ஆகிய கிராமங்களுக்கான சாலைகளைச் சீரமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்லணை-பூம்புகார் நெடுஞ்சாலையினை அகலப்படுத்தி மேம்படுத்தித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தரங்கம்பாடி–ஆடுதுறை சாலை சுமார் 45 கிலோ மீட்டர். அதில் 90 சதவீதம் வீரசோழன் ஆற்றங்கரையில் செல்கிறது. அதில் அதிக இடங்களில் வளைவுகளும், குறுகலான சாலைகளுமாக இருப்பதால், அதிக விபத்துக்கள் ஏற்படுகின்றன. தேவைப்படும் இடங்களில் இருபுறமும் கான்கிரீட் தடுப்புச் சுவர் அமைத்து, சாலையை மேம்படுத்தித்தர வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

ஆக்கூர், மயிலாடுதுறை நெடுஞ்சாலையில் விடுபட்ட பகுதிகளை அகலப்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

புதிதாகப் பிரிக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்டத்தில் புதிய மருத்துவக் கல்லூரி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செம்பனார்கோவிலைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுகா உருவாக்க வேண்டுகிறேன்.

57 ஊராட்சிகளை உள்ளடக்கிய செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து தரங்கம்பாடியை தலைமையிடமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியத்தை உருவாக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய தொகுதியில் உள்ள கோமல், ஆக்கூர், பரசலூர் போன்ற பெரிய ஊராட்சிகளைப் பிரித்துத் தர வேண்டுகிறேன்.

மங்கைநல்லூர் கடைவீதியில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க புறவழிச்சாலை அமைக்க வேண்டுகிறேன்.

மேலப்பெரும்பள்ளம், நக்கம்பாடி, திருக்கடையூர், மங்கைநல்லூர், சங்கரன்பந்தல், தேரழுந்தூர், கிளியனூர் ஆகிய

ஆரம்ப சுகாதார நிலையங்கள் பழுதடைந்துள்ளன. அவற்றைச் சீரமைத்துத் தர வேண்டுகிறேன். வடகரை, பரசலூர், பெரம்பூர் ஆகிய இடங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்டித் தருவதற்கும், 30 படுக்கைகள் கொண்ட பொறையார் மருத்துவமனை மற்றும் 20 படுக்கைகள் கொண்ட தரங்கம்பாடி மற்றும் குத்தாலம் ஒன்றியம், கோனேரிராஜபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கடந்த 10 ஆண்டுகளாக இரவு நேரங்களில் மருத்துவர்கள் இல்லை. அங்கே இரவு நேர மருத்துவர்களை நியமிக்க வேண்டுகிறேன்.

பொறையாரிலிருந்து, சங்கரன்பந்தல், நல்லாடை, காருகுடி, நல்லம்பல், கொல்லுமாங்குடி வழியாக பேரளம் செல்வதற்குப் புதிய பேருந்து இயக்க வேண்டுகிறேன்.

எனது தொகுதியில் செம்பனார்கோவில்-முடிதிருச்சம் பள்ளியில் இயங்கிவந்த இந்திய உணவுக் கழக சேமிப்புக் கிடங்கு கடந்த 19 ஆண்டுகளுக்கும் மேலாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதனை மீண்டும் துவக்கிட ஒன்றிய அரசை வலியுறுத்திடுமாறு, மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆங்கிலேயர் காலத்தில் துவங்கப்பட்ட மயிலாடுதுறை-தரங்கம்பாடி இரயில் போக்குவரத்து கடந்த 1983 ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டது. மயிலாடுதுறை-தரங்கம்பாடி, காரைக்கால் வரை நீட்டிப்பு செய்து மேற்படி இரயில் போக்குவரத்தை மீண்டும் துவங்க வேண்டும். இது திருக்கடையூர் பகுதிக்கு 60 ஆம், 80 ஆம் கல்யாணம் செய்துகொள்ள இந்தியா முழுவதுமிருந்து வருகைதரும் பக்தர்களுக்கும், அதுபோல் நாகூர், வேளாங்கண்ணி, திருநள்ளாறு ஆகிய ஆன்மீகத் தலங்களுக்கு செல்லும் பக்தர்களுக்கும், பள்ளி, கல்லூரி செல்லும் மாணவ, மாணவிகளுக்கும், மீனவர்களுக்கும், பொதுமக்களுக்கும், பெரிதும் பயனுள்ளதாக இருக்கும். ஆகையால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒன்றிய அரசை வலியுறுத்தி மேற்படி திட்டத்தை பெற்றுத் தர வேண்டுமாய் தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தரங்கம்பாடி தாலுகா, அனந்தமங்கலத்தில் உள்ள மிகவும் பிரசித்தி பெற்ற இராஜகோபாலசுவாமி திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்திட அறிவிப்பு வெளியிட்ட மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மேற்படி ஆனந்தமங்கலம் திருக்கோயில் சிலை பல ஆண்டுகளுக்கு

முன்பு திருட்டுப் போனது; தற்பொழுது சிங்கப்பூரில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதனை மீட்டுத்தர வேண்டும் என தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மயிலாடுதுறை நகராட்சியிலுள்ள பாதாளச் சாக்கடை பல இடங்களில் பழுதடைந்துள்ளது. அதைச் சரி செய்வதற்கும், மேற்கண்ட பாதாளச் சாக்கடை கழிவு நீரானது கடந்த 10 ஆண்டு காலமாக சுத்திகரிப்புச் செய்யப்படாமல், எனது தொகுதியிலுள்ள ஆறுபாதி ஊராட்சி, சத்தியவாணன் வாய்க்காலில் கலந்து சுகாதாரச் சீர்கேடும், துர்நாற்றமும் வீசுகிறது. அதனைச் சரி செய்து தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

மயிலாடுதுறையில் உள்ள சர்க்கரை ஆலை நீண்ட, நெடுநாட்களாக செயல்படாமல் இருக்கின்றது. அதை மீண்டும் துவக்கிட வேண்டுமாய் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சீ. கதிரவன் அவர்கள்.

திரு. சீ. கதிரவன்: ஜனநாயகத்தின் பிறப்பிடமாம் இம்மாமன்றத்தினைச் செம்மையுற வழிநடத்திச் செல்லும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை வணங்குகிறேன்.

செம்மொழிக்கு செம்மையுறு மாநாடு நடத்தி செம்மார்ந்து நிற்கச் செய்தவர்; குறளுக்கு ஓவியம் கண்டு வள்ளுவனுக்கு வானுயர் உருவம் அமைத்து நெஞ்சுக்கு நீதியாகத் திகழ்பவர்; பெண்களின் முன்னேற்றத்திற்கு அடித்தளமிட்டவர்; அனைவருக்கும் கல்வி கிடைக்க பல வழிவகைகளைச் செய்தவர்; விவசாயத்திற்கு இலவச மின்சாரம் தந்து இந்திய நாடே வியக்கும்வண்ணம் விவசாயத்தினை மேன்மையுறச் செய்தவர். மனுநீதிச் சோழன் ஆட்சி புரிந்த சோழவள நாட்டில் பிறந்து, தமிழகத்தின் மூவேந்தராகவும், முத்தமிழறிஞராகவும் விளங்கிய டாக்டர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு மனிதன் சிறந்த மனிதனாக, பண்பட்ட மனிதனாகத் திகழ வேண்டுமென்றால் கல்விப் பணி மட்டும் போதாது, சமுதாயப் பணியும் ஆற்ற வேண்டுமென்ற உயரிய நோக்கத்தோடு மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட எனக்கு வாய்ப்பு வழங்கியதோடு மட்டுமின்றி, பிரச்சாரம் செய்து

அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்து, 100 ஆண்டு கண்ட இம்மாமன்றத்தில் உரையாற்றுவதற்கு நல்வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த தமிழகத்தின் எழுச்சி நாயகன், தலைதாழ்ந்த தமிழகத்தை 100 நாட்களிலேயே தலை நிமிர்ந்து ஒளிரச் செய்தவர், வரலாற்று வேந்தர் (மேசையைத் தட்டும் ஒலி) திராவிடத்தின் உதய சூரியன், செம்மொழிக் காவலரின் செல்வன், கழகத் தலைவர், பெண் சமுதாயத்தின் பாதுகாவலர், நம் தமிழகத்தை தொலைநோக்கு முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லக்கூடிய நம் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இம்மாமன்றத்தில் அனைவரின் கவனத்தையும், உள்ளத்தையும் தன் முதல் உரையிலேயே ஈர்த்து, தன் தந்தையைப்போல அன்புள்ளம் கொண்ட இளைஞர்களின் இதய வேந்தன், இளைய தளபதி, இளம் சூரியன், இளைய தலைவர், அசாத்திய செயல் வீரர், இளைஞர்களின் விடிவெள்ளி, நாளைய தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரம் அண்ணன் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், கழக முன்னோடிகளுக்கும், இம்மாமன்றத்தில் பேச நேரம் ஒதுக்கித் தந்த அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அனைத்து கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும் நன்றிகலந்த வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏழை மாணவர்களின் வாழ்வை ஏற்றம் பெறச் செய்தவர், விடா முயற்சியின் சொந்தக்காரர், தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தின் வேந்தர், தனலட்சுமி சீனிவாசன் குழுமத்தின் நிறுவனர் மற்றும் தலைவர், எனது வாழ்வின் உற்ற தோழனாக, வழிகாட்டியாக, என் வாழ்வில் அனைத்துமாக, என் வாழ்வில் எல்லா வளங்களையும் எனக்கு அளித்த என் தந்தை உயர்திரு ஆ. சீனிவாசன் அவர்களின் பொற்பாதத்தினை இம்மாமன்றத்தில் வணங்கி மகிழ்கிறேன்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கால் நூற்றாண்டுக்கு மேலாக மக்களின் இதயங்களைக் கவர்ந்தவரும், திருச்சி உள்ளாட்சித் தேர்தலில் 100 சதவிகித வெற்றியைப் பெற்றுத் தந்தவரும், சட்டமன்றத் தேர்தலில் 100 சதவிகித வெற்றியைப் பெற்றுத்

தந்தவரும், வருகின்ற நகர்ப்புறத் தேர்தலில் 100 சதவிகித வெற்றியைப் பெற்றுத் தரப் போகின்றவரும், மாநாடு என்றால் நேரு, நேரு என்றால் மாநாடு; speed என்றால் நேரு, நேரு என்றால் speed என்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் அழைக்கப்பட்டவரும், மேலும், என்னுடைய சட்டமன்றத் தேர்தல் களப் பணியில் எனக்கு வழிகாட்டியாக, உறுதுணையாக இருந்த செயல் வீரர், கழகத்தின் முதன்மைச் செயலாளர், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. கே.என். நேரு அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அல்லும் பகலும் அயராது பணியாற்றிய திருச்சி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முசிறி சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு காடுவெட்டியார் திரு. என். தியாகராஜன் அவர்களுக்கும், ஒன்றியச் செயலாளர்கள் திரு. வி.எஸ்.பி. இளங்கோவன், திரு. செந்தில்குமார், திரு. காட்டுக்குளம் கணேசன், திரு. இராமச்சந்திரன், திரு. கே.கே. ஆர். சேகரன் மற்றும் நகரச் செயலாளர்கள் திரு. ராஜசேகர், திரு. சிவசண்முகக் குமார், பொதுக் குழு உறுப்பினர் திரு. சீனிவாச பெருமாள், ஒன்றிய துணைப் பெருந்தலைவர் திரு. கே.வி.ஏ. செந்தில்குமார், கிளைச் செயலாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சித் தோழர்கள் அனைவருக்கும் வணக்கத்துடன்கூடிய நன்றியை நெஞ்சார உரித்தாக்குகிறேன்.

சிறந்த மக்கள் பணியாற்றுவேன் என்று என்மீது நம்பிக்கை வைத்து தங்கள் வீட்டுப் பிள்ளையாகக் கருதி, தமிழகத்தில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் முதல் 10 இடங்களில் வெற்றி பெறச் செய்த மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். என் மக்கள் என்மீது வைத்த நம்பிக்கைக்கு ஏற்ப பாத்தியமாய் என்றும் செயல்படுவேன் என்று இம்மாமன்றத்தில் உறுதி கூறுகிறேன். இம்மாமன்றத்தில் இன்றைய நிகழ்வுகளில் முத்தாய்ப்பு வைத்ததுபோல் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை மூலமாகச் செயல்படுத்திவரும் மக்களைத் தேடி மருத்துவம் மற்றும் பல சிறப்பான செயல்பாடுகளுக்கிடையே அனைத்துத் துறைகளிலும் வியக்கத்தக்க முன்னேற்றத்தை அடையும் இலக்குடன் ஜனநாயகம், மதச் சார்பின்மை, பன்முகத்தன்மை, சமூக நீதி, கூட்டாட்சித் தத்துவம் உள்ளிட்ட அடிப்படை அம்சங்களை சிரமேற்றி நடத்தி, செயல்படுத்தி, நம் தமிழகத்தை வெற்றிப் பாதையில் வழிநடத்திச் செல்லும் நம் மாண்புமிகு முதல்வர் அவர்களின் கனிவான கவனத்திற்கு, எனது தொகுதிக்குட்பட்ட கோரிக்கைகளை

இம்மாமன்றத்தின் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கூற விழைகிறேன்.

பிற்பகல் 12–20

எனது தொகுதியில் பல ஆண்டுகளாக ஏரிக்கு நீர்வரத்து இல்லாமல், அப்பகுதி முழுவதும் வறண்டு போய் குடிநீருக்கே தண்ணீர் இல்லாமல் விவசாயிகள் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். எனவே, காவேரி ஆற்றில் வீணாகும் தண்ணீரை திருத்தலையூர் ஏரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள சித்தாம்பூர் ஏரி, கோமங்கலம் ஏரி, நெய்வேலி ஏரி, திருத்தியமலை ஏரி மற்றும் புலிவலம் ஏரி போன்ற ஏரிகளில் மின்மோட்டார் நீரேற்றம் மூலமாகவோ அல்லது பாசன வாய்க்கால்கள் மூலமாகவோ நிரப்பினால், இப்பகுதியிலுள்ள, 50 கிராமங்களில் இருக்கின்ற மக்களின் குடிநீர்த் தட்டுப்பாடு முற்றிலுமாக நீங்கி, நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து, அனைத்து விவசாய நிலங்களும் செழிப்புறும். எனவே, இந்த நீண்டநாள் கோரிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையோடு, அவர்கள் வாயிலாக, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அண்ணன் திரு. துரைமுருகன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களிடம், என்னுடைய தொகுதி சம்பந்தமான எந்தவொரு கோரிக்கையையும் நான் வைக்க வேண்டியதில்லை. ஏனென்றால், டாக்டர் test எடுத்துதான் நோய்க்கு treatment செய்வார். ஆனால், எங்களுடைய அமைச்சர் அவர்கள் எங்களுடைய குறையை அறிந்து, நாங்கள் கேட்பதற்கு முன்பே நிறைவேற்றித் தருவார்கள்.

எனது தொகுதியில் உள்ள சமயபுரம் முதல் மண்ணச்சநல்லூர் செல்லும் சாலையை இருவழித் தடங்களாக அகலப்படுத்துமாறும், திருச்சி முதல் துறையூர் சாலை மற்றும் நொச்சியம் முதல் மண்ணச்சநல்லூர் சாலையை பல்வழித்தடங்களாக அகலப்படுத்துமாறும் கேட்டுக்கொள்கிறேன். மேல்பத்து ஊராட்சியிலுள்ள பாலத்தினை மக்கள் மயானத்திற்கும், விவசாய இடுபொருட்களை எடுத்துச்செல்வதற்கும் பயன்படுத்துவதால், மேல்பத்து பாலத்தைப் புதுப்பித்துக் கட்டித் தருமாறும், கோபுரப்பட்டி, பாச்சூர் இடையேயுள்ள கல்பாலம் மிகவும் சேதமடைந்துள்ளதால், இப்பாலத்தினை சீரமைத்துத் தருமாறும் மாண்புமிகு நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்களின்

வாயிலாக மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அண்ணன் திரு. எ.வ. வேலு அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மண்ணச்சநல்லூர் தாலுகா, முதன்முதலில் டாக்டர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டது. மண்ணச்சநல்லூர் சட்டமன்றத் தொகுதியில், முதன்முதலில் நம்முடைய முதலமைச்சர் அவர்களின் தலைமையில்தான் தி.மு.க. வெற்றி பெற்றது. ஆகவே, என்னுடைய தொகுதியை தமிழகத்தின் முன்மாதிரி தொகுதியாக மாற்றுவதற்கு, திருச்சி மாவட்டத்திற்குட்பட்ட மண்ணச்சநல்லூர், முசிறி, லால்குடி மற்றும் துறையூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளை ஒன்றிணைத்து, திருச்சி மாவட்டத்திலிருந்து பிரித்து, மண்ணச்சநல்லூர் தொகுதியை மையமாகக் கொண்டு, தனி மாவட்டமாக அமைத்துத் தருமாறு மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி ஆன்மிக திருத்தல பூமியாகத் திகழ்கிறது. ஏனென்றால், உலகப் பிரசித்திபெற்ற சமயபுரம் திருக்கோயில், ஓமாந்தூர் கோயில், உத்தமர் கோயில், திருவெள்ளறை கோயில், திருவாசி கோயில், திருப்பைஞ்ஞீலி கோயில், திருப்பட்டூர் கோயில் ஆகிய திருக்கோயில்கள் நிறைந்த பகுதியாக உள்ளது. எனவே, உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து பலதரப்பட்ட மக்கள் வந்து செல்கின்றார்கள். ஆகவே, இந்தப் பகுதிகளிலுள்ள சாலைகள் மற்றும் சாலைகளின் இருபுறங்களிலும் பக்தர்களின் வசதிக்காக, நடைபாதை, பக்தர்கள் தங்குமிடம், கழிப்பிட வசதிகள், குடிநீர்த் தொட்டிகள் ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும், கல்யாண மண்டபம் கட்டித் தர வேண்டுமென்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள திருவெள்ளறை ஊராட்சி மற்றும் சிறுகனூர் ஊராட்சிகளில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்றும், கொணலை, ஓமாந்தூர் மற்றும் பெரகம்பி ஊராட்சிகளுக்கு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர வேண்டுமென்றும் மற்றும் ஓமாந்தூர் அரசு மருத்துவமனையில் சித்த மருத்துவப் பிரிவிற்கு தனிக் கட்டடம் மற்றும் சுற்றுச்சுவர்

அமைத்துத் தர வேண்டுமென்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் அரசு சார்ந்த எந்தவொரு கல்லூரியும் இல்லாத காரணத்தினால், மண்ணச்சநல்லூர் தொகுதிக்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஒன்றை அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் அதிகளவில் பட்டதாரி இளைஞர்கள் வேலையின்றி இருப்பதால், அதனைக் கருத்தில்கொண்டு, தொழிற்பேட்டை, சிப்காட் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலுள்ள மண்ணச்சநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, திருவெள்ளறை அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளை மாதிரி மேல்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமெனவும், நெய்வேலி நடுநிலைப் பள்ளி, காட்டுக்குளம் நடுநிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன். திருத்தியமலை, திருவெள்ளறை மற்றும் பூனாம்பாளையம் ஊராட்சிகளிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்களுக்குப் போதுமான வகுப்பறைகள் இல்லாமல் சிரமப்படுகின்றார்கள். எனவே, அப்பள்ளிகளுக்குப் புதிய கட்டடங்கள் அமைத்துத் தர வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலுள்ள திருவாசி ஆதி திராவிடர் மேல்நிலைப் பள்ளியில் கழிப்பறை வசதியில்லாத காரணத்தினால், மாணவர்கள் சிரமப்பட்டு வருகின்றனர். எனவே, அப்பள்ளிக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்பு வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–25

மேலும், நேரமின்மை காரணமாக, பின்வரும் என்னுடைய தொகுதி சம்பந்தமான கோரிக்கைகளை இப்பேரவையில் நான் படித்ததாகக் கருதி, அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்து, நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் பெருமக்களைக் கேட்டுக்கொள்கிறேன். மண்ணச்சநல்லூர் தொகுதி மக்களின் நீண்ட காலக் கோரிக்கைகளை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கையோடு தமிழகம் தலைநிமிர வழிகாட்டி, அசாத்திய உழைப்பு, அசர வைக்கும் திட்டமிடல், அசர வைக்கும் செயலாக்கம் என்று நம் தமிழகத்திற்காக, அல்லும் பகலும் அயராது பாடுபடும் நம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வணங்கி, மீண்டும் வணங்கி, நன்றிகூறி விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). நன்றி வணக்கம். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

***திரு. R. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். தமிழகத்தில் இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஆட்சிக்கெல்லாம் முன்னோடியாக இருந்து பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களை தமிழகத்திற்குச் செதுக்கிய சிற்பி, கடையெழு வள்ளல்களுக்கும் பிறகு, கல்வி வள்ளலாக தமிழகத்திலே கல்வி மறுமலர்ச்சியை ஏற்படுத்திய, அகில இந்திய காங்கிரஸ் தலைவராக இருந்து எங்களையெல்லாம் வழிநடத்திய, பெருந்தலைவர் கர்மவீரர் காமராஜர் அவர்களை வணங்கி, எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னையும், இந்தச் சபையில் பங்குகொள்வதற்கு வாய்ப்பளித்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவர் அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், இளம் தலைவர், வருங்கால பாரதப் பிரதமர் ராகுல் காந்தி அவர்களுக்கும், தமிழக காங்கிரஸ் கமிட்டி தலைவர் சொல்லின் செல்வர் திரு. கே.எஸ். அழகிரி அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது வெற்றிக்கு கடுமையாக உழைத்த இரண்டு அமைச்சர்கள் எங்களது மாவட்டத்தில் உள்ளார்கள், மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுக்கும், அண்ணன் மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சி.வெ. கணேசன்

அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது வெற்றிக்கு இடியும், மின்னலும்போல விருத்தாசலம் கடைவீதியில், திடீரென்று வந்து இறங்கி, என்னுடன் நடந்து வந்து வாக்கு சேகரித்து, 'எனக்கு வாக்களியுங்கள்' என, என்னைக் காட்டி, எனக்கு வாக்கு கேட்ட தலைவர், தமிழக மக்கள் நெஞ்மெல்லாம் நிறைந்திருக்கும் தமிழக முதல்வர், ஆசிய கண்ட தலைவர்களுக்கெல்லாம் முன்னோடியாக விளங்கும் தலைவர் தமிழக முதல்வர் மாண்புமிகு தளபதி அவர்களுக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது வெற்றிக்கு உழைத்த மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணித் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இரவு பகல் பாராது எனது வெற்றிக்காக அரும்பாடுபட்டு வாக்கு சேகரித்த எனது நெஞ்சத்தில் நிறைந்திருக்கும் எனது மனைவி, என் பிள்ளைகள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் இந்த மாமன்றத்திலே நன்றியைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். என்னை வெற்றிபெறச் செய்த விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், தோழமைக் கட்சி உள்ளிட்ட அனைத்து வாக்குச்சாவடி முகவர்களுக்கும், விழிப்போடு இருந்து பணியாற்றிய வாக்கு எண்ணிக்கை முகவர்களுக்கும், எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக வரலாற்றில் சிறந்த முன்னுதாரணமாக, வேளாண்மைக்கென்று ஒரு தனி நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிற தமிழக அரசிற்கும், இந்திய இறையாண்மைக்கும், ஒற்றுமைக்கும் எதிராக ஒன்றிய அரசு கொண்டு வந்த குடியுரிமை பாதுகாப்புச் சட்டத்தை விலக்குவதற்கான முன்னுதாரணமாக சட்டத்தைக் கொண்டு வந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீட் தேர்வை தமிழகத்திலிருந்து முழுவதுமாக இரத்து செய்யவேண்டும் என்ற கொள்கையில் உறுதியோடு இருக்கின்ற இவ்வரசைப் பாராட்டுகிறேன்.

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட விவசாயப் பழங்குடியின மக்கள் வாழ்கின்ற தொகுதி எனது தொகுதியாகும். சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த எனக்கும் இதுபோன்ற திட்டங்கள் மிகவும் பயனளிக்கும், நன்மை தரும். ஆகவே, இதுபோன்ற நலத் திட்டங்களைக் கொண்டு வந்த

2021 செப்டம்பர் 13] [திரு. R. ராதாகிருஷ்ணன்]

இவ்வரசாங்கத்திற்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது தொகுதியில் மாண்புமிகு கழகத் தலைவர், தமிழக முதல்வர் அண்ணன் தளபதி அவர்கள் விருத்தாசலம் மாநகரில் நடைபெற்ற, 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' நிகழ்ச்சியில் சுமார் 25 ஆயிரம் பேர் கலந்துகொண்ட நிகழ்ச்சியில், தாங்கள் கலந்து கொண்ட அந்த சிறப்பு நிகழ்ச்சியில், எட்டு வயது சிறுமி சஞ்சனா எழுந்து "2 தொகுதிகள் இருந்தன. 4 தொகுதிகள் கொண்ட மாவட்டமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இங்கு 9 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. விருத்தாசலத்தை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கண்டறிந்த சோழர், திருமுதுகுன்றத்தை, தலைநகரமாகக் கொண்டு ஆண்டுள்ளார் என்பது வரலாறு. அப்படிப்பட்ட ஊரைத் தலைமையிடமாகக் கொண்டு, புதிய மாவட்டத்தை உருவாக்கவேண்டும். இங்கு இரயில்வே நிலையம், தலைமை மருத்துவமனை, பழமலைநாதர் கோயில், விருத்தாசலம், கொளஞ்சியப்பர் கோயில், மணிமுத்தாறு இவை அனைத்தும் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க நகரை மாவட்டத் தலைநகரமாக மாற்றவேண்டும் என்று கோரிக்கை வைக்கிறேன்" என்று அச்சிறுமி கூறியதற்கு, சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு, நிச்சயம், விருத்தாசலம், மாவட்டத் தலைநகரமாக உருவாக்கப்படுமென்று உறுதி அளித்தீர்கள்.

பிற்பகல் 12–30

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

ஆகவே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விருத்தாசலத்தை மாவட்டத் தலைநகராக அறிவிக்க வேண்டுமென்ற என் தாழ்மையான வேண்டுகோளை விருத்தாசலம் தொகுதி மக்களுடைய வேண்டுகோளாகச் சமர்ப்பிக்கின்றேன். 2013 ஆம் ஆண்டு வேப்பூர் ஊராட்சியைத் தலைமையிடமாகக் கொண்டு வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் தொடங்கப்பட்டு, 9 ஆண்டுகள் ஆகியும் இதுவரை ஊராட்சியாகவே உள்ளது. அதனை பேரூராட்சியாகத் தரமுயர்த்தித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். விருத்தாசலத்தை மையமாகக் கொண்டு பெண்கள் அரசு கலைக் கல்லூரி அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். விருத்தாசலம் பேருந்து நிலையம், மிகுந்த இட நெருக்கடியில் உள்ளதால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் புறவழி பேருந்து நிலையம் ஒன்றை உருவாக்கித் தருமாறு

கேட்டுக்கொள்கிறேன். விருத்தாசலம் அரசு மருத்துவமனையை அரசு பொது மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். விருத்தாசலத்தைச் சுற்றி பழமைவாய்ந்த அருள்மிகு பழமலைநாதர் ஆலயம், ஸ்ரீ கொளஞ்சியப்பர் ஆலயம், ஸ்ரீ வில்வனேஸ்வரர் ஆலயம் ஆகிய திருக்கோயில்கள் உள்ளதால், சுற்றுலாத் தலம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். மிகவும் பழமை வாய்ந்த Ceramics தொழில்நுட்பக் கல்லூரியை மேம்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வேப்பூர் வட்டம், கொளப்பாக்கம் கிராமத்தின் அருகில் சேப்பாக்கம் கிராமத்தில் கோமுகி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதன்மூலம் இப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து. சுற்றியுள்ள பல கிராமங்களில் விவசாயிகள் பயனடைவார்கள். இதனால் வேளாண் சாகுபடி அதிகரிக்கும். இதனைத் துரிதப்படுத்தி, உடனடியாகச் செய்து தருமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

1989 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் துவக்கப்பட்ட TANCEM Stoneware Pipe factory, பின்பு வந்த ஆட்சியாளர்களால் கண்டுகொள்ளாமல் மூடப்பட்டுவிட்டது. இத்தொழிற்சாலையில் மீண்டும் உற்பத்தி தொடங்கப்பட்டால், 300 நிரந்தரத் தொழிலாளர்களுக்கும், 500 ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும் வேலை கிடைக்கும். ஆகவே, இத்தொழிற்சாலையைத் திறந்து, தொழிலாளர்களின் வாழ்வில் விளக்கேற்றி வைக்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மயூரா, கோமுகி, மணிமுத்தாறு எனும் மூன்று நதிகள் சங்கமமாகும் இடத்தில் அமைந்துள்ள நல்லூர் ஸ்ரீ வில்வனேஸ்வரர் திருக்கோயில், திருப்பணி செய்தும், நீண்ட ஆண்டு காலமாக கும்பாபிஷேகம் நடைபெறாமல் உள்ளது. அவ்வாலயத்திற்கு கும்பாபிஷேகம் செய்து தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வேப்பூரில் இயங்கி வரும் அரசு மருத்துவமனையைத் தரமுயர்த்தி, கூடுதலாக மருத்துவர்களை நியமித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை

உறுதித் திட்டத்தை 100 நாட்களிலிருந்து 150 நாட்களாக அறிவித்ததற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி. இந்த 100 நாள் வேலைத் திட்டத்தினை விவசாயிகளுக்கும் பயன்படுத்தினால் அரசு கொடுக்கிற சம்பளத்தோடு சேர்த்து, விவசாயிகளும் ஒரு சம்பளத்தைக் கொடுப்பதற்கான ஒரு வழிவகை செய்தால், விவசாயிகளுக்கும் நல்ல பலன் இருக்கும். கூலி வேலை செய்பவர்களுக்கும் கூடுதலாக சம்பளம் கிடைக்க வாய்ப்பிருக்கும். இன்றைக்கு கூலி உயர்ந்திருப்பதால், சுலபமாக விவசாயம் செய்ய முடியாத ஒரு நிலை இருக்கிறது. இதனை நாம் விவசாயத்திற்குப் பயன்படுத்தினோம் என்றால், விவசாயிகள் நன்றாக விவசாயம் செய்வதற்கு ஒரு வாய்ப்பாக இது அமையும். அது நம் நாட்டிற்கு வளர்ச்சியை உருவாக்கும் என்பதைத் தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளும் வளர்ச்சி பெறுவார்கள்.

NLC நிறுவனத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் தண்ணீர் தட்டுப்பாடு, சாலை வசதியின்மை, காற்று மாசு போன்றவை உள்ளன. NLC உபரி நீரை பாலக்கொல்லை ஏரிக்கு அனுப்பினால் விவசாயமும் பெருகும்; பொது மக்களின் வாழ்வாதாரமும் மேம்படும். நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான விருத்தாசலம்–காட்டுகூடலூர் சாலையில் கோட்டேரி–வீரட்டிகுப்பம் இடையில் வனத் துறைக்கு இடையே ஒரு கிலோ மீட்டர் தூரம் தார்ச்சாலை உள்ளது. இது குறுகிய சாலையாக இருப்பதால் அடிக்கடி இப்பகுதியில் விபத்துகள் ஏற்படுகின்றன. இச்சாலையை பொதுமக்களின் நலன் கருதி விரிவுபடுத்தித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அந்த ஒரு கிலோ மீட்டருக்கு அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் 7 மீட்டர் சாலையாக இருக்கின்றது. அந்த 1 கிலோ மீட்டர் 3.75M சாலையாக இருப்பதால், அங்கே நிறைய விபத்துகள் நடக்கின்றன. ஆகவே, அச்சாலையை விரிவுபடுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் முந்திரி சாகுபடி செய்யும் விவசாயிகள் பெருமளவில் வசித்து வருகின்றனர். முந்திரி அறுவடையின்போது முந்திரிக்கொட்டை, பழம் என தனியாகப் பிரிக்கப்பட்டு கொட்டையைப் பயன்படுத்திக் கொண்டு முந்திரிப் பழங்களைப் பயன்படுத்தாமல் கீழே கொட்டி விடுகின்றனர். அந்தப் பழங்களைச் சேமித்து அவற்றின் சாற்றின்மூலம் paint மற்றும் ரசாயனப் பொருள்கள் தயாரிக்கப் பயன்படுத்தினால் விவசாயிகளுக்கும்,

நமது அரசாங்கத்திற்கும் வருமானம் கிடைக்க ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்களால் திறக்கப்பட்ட ஐவதுகுடி, ரூபநாராயணநல்லூர் ஆகிய கிராமங்களில் உள்ள சமத்துவபுரங்களில் கடந்த ஆட்சியிலிருந்து தண்ணீர் பற்றாக்குறையும், சாலைகள் சேதமடைந்தும் உள்ளதால் தண்ணீர் பற்றாக்குறையைப் போக்கியும் மற்றும் சாலைகளைச் சீரமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன். வீராரெட்டிகுப்பம்-நெய்வேலி, நல்லூர்-தொரவளூர், வேப்பூர்-மரூர் ஆகிய வழித்தடங்களில் உள்ள சாலைகள் மிகவும் சேதமடைந்தும் குறுகலாகவும் உள்ளதால் அடிக்கடி சாலை விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே, அதனைக் கருத்தில்கொண்டு, பொதுமக்களின் நலன்கருதி, அச்சாலைகளை விரிவுபடுத்தி, புதிதாகச் சாலைகளை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–35

இருப்பு ஊராட்சியில் அமைந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சுற்றிலும் சுற்றுச் சுவர் அமைத்துத் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

பாலக்கொல்லை, குப்பநத்தம் ஊராட்சி, ஆழிச்சிகுடி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைத்துத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

கருவேப்பிலங்குறிச்சியில் இயங்கிவரும் அரசு மேல்நிலைப் பள்ளியில் 6, 7, 8 ஆம் வகுப்பு மாணவர்கள் கட்டட வசதியில்லாமல் திறந்தவெளியில் அமர்ந்து கல்வி பயின்று வருகின்றனர். எனவே, இப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

கோட்டேரி ஊராட்சியில் இயங்கிவரும் உயர்நிலைப் பள்ளிக்குப் போதிய இடமில்லாமல் உள்ளது. எனவே, அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலத்தைப் பள்ளிக்கு வழங்கி, பள்ளிக் கட்டடம் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பள்ளிக்கூடத்திற்கும் இடமில்லை; நீங்கள் பேசுவதற்கும் இங்கு நேரமில்லை.* (குறுக்கீடு) *உரையை முடித்துவிடுங்கள்.*

திரு. R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய முதன்மைப் பேச்சு. ஆலடி ஊராட்சியைச் சுற்றிலும் உள்ள பல கிராமங்கள் மற்றும் ஊராட்சிகளில் ஏதேனும் தீ விபத்துகள் ஏற்பட்டால், 25 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள விருத்தாசலத்திலிருந்துதான் தீயணைப்பு வாகனம் வரவேண்டியுள்ளது. ஆகவே, ஆலடியில் தீயணைப்பு நிலையம் ஒன்றை உருவாக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

1961 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் விருத்தாசலத்தில் நிறுவப்பெற்ற குறு, சிறு பீங்கான் தொழிற்சாலை சரிவர இயங்காத நிலை உள்ளது. இங்கு மண் தட்டுப்பாடு உள்ளது. இதனைக் கண்டறிந்து செயல்படுத்தித் தருமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உங்களுடைய தொகுதியைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். அவற்றை என்னிடத்தில் கொடுத்தால், அவைக்குறிப்பில் பதிவு செய்துகொள்ளலாம். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.*

திரு. R. ராதாகிருஷ்ணன்: M.L.A. Fund *ரூ.3 கோடியாக உள்ளதை, ரூ.5 கோடியாக உயர்த்தித் தருமாறும் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)* M.L.A.*–க்களுக்கு இரண்டு உதவியாளர்களை அமர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதனை நன்றாகச் சொல்லுங்கள். ஒவ்வொரு* M.L.A. *விற்கும் இரண்டு உதவியாளர்கள் வேண்டும் என்று தெளிவாகச் சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

திரு. R. ராதாகிருஷ்ணன்: M.L.A.*–க்களுக்கு* pension *தொகையை ரூ.50,000/– ஆக உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)* M.L.A.*–க்களுக்கு அவர்களுடைய தொகுதியில் தனி வீடு கட்டித் தருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது தவறாகப் போய்விடும். நன்றி சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. R. ராதாகிருஷ்ணன்: M.L.A. *சம்பளம், ரூ.35,000/– என்றிருப்பதை உயர்த்தி ரூ.2,50,000/– தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே இருக்கிற வீட்டில் மட்டும் குடியிருந்து சந்தோஷமாக தொகுதி மக்களுக்கு நன்மை செய்யுங்கள். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. R. ராதாகிருஷ்ணன்: M.L.A., சம்பளம் டெல்லியில் வழங்கப்படுவது மாதிரியும், ஒரு சில மாநிலங்களில் கொடுப்பதைப்போன்றும், நம்முடைய மாநிலத்திலும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளைத் தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை நான் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றும், அவற்றை நிறைவேற்றித் தருமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

விருத்தாசலத்திலுள்ள குறு, சிறு, பீங்கான் தொழிற்சாலைக்குத் தேவையான மண் மற்றும் இதர பொருட்கள் தங்குதடையின்றி கிடைக்கவும், பீங்கான் தொழிலில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களின் நலனைக் காத்திடவும் வேண்டும்.

திருஆரூரான் சர்க்கரை ஆலை, பெண்ணாடம், அருணா சர்க்கரை ஆலைக்குக் கொண்டு செல்லப்பட்ட கரும்பிற்கான நிலுவைத் தொகையினை வழங்க அரசு ஆவன செய்யவேண்டும்.

கடந்த மூன்று ஆண்டுகளாக மக்களுக்குப் பயன்படாமல் மூடப்பட்டுள்ள மேற்கண்ட ஆலையை அரசே ஏற்று நடத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வேப்பூரில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, போக்குவரத்துப் பணிமனை, உழவர் சந்தை ஆகியவற்றை பெருந்தலைவர் காமராஜர், கலைஞர் ஆகியோரின் பெயரில் அமைத்திட ஆவன செய்ய வேண்டும்.

NLC நிறுவனத்திற்கு தொடக்கத்தில் நிலம் கொடுத்த கிராம மக்களுக்கு தனிச் சிறப்பு அரசாணையின்மூலம் வழங்கப்பட்ட நிலம் மற்றும் வீட்டிற்கு பொதுமக்களின் 70 ஆண்டுக்கால கனவான பட்டா கிடைக்க அரசு வழிவகை செய்ய வேண்டும்.

மங்கலம்பேட்டை பேரூராட்சியில் சாக்கடைக் கழிவுகள் திறந்தவெளியில் விடப்படுவதால் அருகிலுள்ள பள்ளிப்பட்டு, கோவிலானூர் ஆகிய இரு கிராம பொதுமக்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குள் அரிஜன மக்களை அழைத்துக்கொண்டு ஆலயப் பிரவேசம் நடத்திய தியாகி வைத்தியநாத ஐயர் அவர்களுக்கு மதுரையில் மணிமண்டபம் அமைக்க வேண்டும்.

சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை மேலும் ரூ.5,000/– உயர்த்தித் தர வேண்டும். சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு மத்திய அரசு வழங்கிவரும் உதவித் தொகையோடு மாநில அரசு வழங்கும் உதவித் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டும். சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு வழங்கப்பட்டு வரும் மருத்துவப் படியான ரூ.500/–ஐ ரூ.1,000/– ஆக உயர்த்தித் தர வேண்டும். சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் மகன்/மகள்களுக்கு சுமார் 50 வயது முதல் 60 வயது வரை கடந்திருக்கும். ஆகவே, கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் அளிக்கப்படும் முன்னுரிமையை சுதந்திரப் போராட்ட தியாகிகளின் பேரன், பேத்திகளுக்கு அளிக்க வேண்டும்.

சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்மூலம் வழங்கப்படும் வீட்டுமனை, காலிமனை ஒதுக்கீட்டில் தனியாக 5 சதவிகிதம் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர், திரு. ராதாகிருஷ்ணன் அவர்கள் சேதமடைந்த சாலைகள் விரிவுபடுத்துதல், புதிய சாலைகள் அமைத்தல் பற்றி சொன்னார்கள். அந்தக் கருத்தையொட்டி, இங்கேயிருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஒரு கருத்தை இந்த அவையில் பதிவு செய்ய நான் விரும்புகிறேன்.

ஊராட்சி சாலைகள், ஒன்றியச் சாலைகளையெல்லாம் தரமான சாலைகளாக, குறிப்பாக, நெடுஞ்சாலைத் துறையின் அளவிலே அமைக்கப்படவேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள், தேர்தல் நேரத்திலே தேர்தல் வாக்குறுதியாகக் குறிப்பிட்டார்கள்.

இப்பொழுது ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே, இந்த ஐந்து ஆண்டு காலங்களிலே ஊராட்சி சாலைகள், ஊராட்சி ஒன்றியச் சாலைகள் என 10,000 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் கண்டறியப்பட்டு, அவற்றையெல்லாம் சீர் செய்ய வேண்டுமென்று துறைக்கு அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அப்படிப்பார்த்தால், ஓராண்டுக்கு 2,000 கிலோ மீட்டர் என்கிற அடிப்படையில், ஊராட்சி, ஒன்றியச் சாலைகளை நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக எடுத்து, அவற்றையெல்லாம் செப்பனிடவேண்டுமென்று உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால், இந்தக் கோரிக்கைகள் எப்படி முறையாக வரவேண்டுமென்று சொன்னால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள்மூலமாக வந்தால்தான் அது முறையாக இருக்கும். எனவே, பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள் ஊராட்சி சாலைகளைத் தரமுயர்த்த வேண்டும், ஒன்றியச் சாலைகளைத் தரமுயர்த்தவேண்டும் என்று எனக்குக் கடிதம் கொடுக்கின்றார்கள். அவற்றை நான் கணக்கிலே எடுத்துக்கொண்டு, அவற்றைத் துறைக்கு அனுப்பினால் அது சரியாக இருக்காது என்று ஏற்கெனவே துறையின் சார்பாக தலைமைச் செயலாளர் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு, அதனடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே எங்களைப் பணித்திருக்கிறார்கள். எனவே, ஊராட்சி ஒன்றியச் சாலைகள், ஊராட்சி சாலைகள் தரமுயர்த்தும் கோரிக்கைகள் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக வந்தால்தான் அவற்றைத் துறையின் சார்பாக முறையாகச் செப்பனிட முடியும். எனவே, இதனைக் கருத்தில்கொண்டு, ஊராட்சி சாலைகள் மற்றும் ஒன்றியச் சாலைகளைத் தரமுயர்த்தும் கோரிக்கைகள், தேர்தல் நடைபெற்றிருந்தால், ஒன்றியக் குழுத் தலைவர் மற்றும் ஆணையாளர் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு, பின்னர் துறைக்கு வந்தால்தான், அது சரியாக இருக்கும். எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் ஊராட்சி சாலைகளை, ஒன்றியச் சாலைகளை தரமுயர்த்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய பரிந்துரையோடு துறைக்கு அனுப்பினால், அந்தச் சாலைகள் முறையாக அமைக்கப்படும் என்பதை அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தகவலாகத் தெரிவித்து நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலுரை. மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 12–40

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்த வாய்ப்பு எனக்குக் கிடைத்திருப்பது ஒரு பெரிய அதிசயம். முதலில் நான் எனது தனிப்பட்ட நிகழ்வு ஒன்றை மட்டும் சொல்லிவிட்டு, ஐந்து துறைகளின்மீதான பதிலுரை மற்றும் பல வெட்டுத் தீர்மானங்களுக்கு பதில்கள் வழங்க வேண்டியிருக்கிறது.*

சுமார் 20 ஆண்டுகளுக்குமுன், செப்டம்பர் 11, 2001 அன்று ஒரு பெரிய தீவிர நிகழ்வு தீய சக்திகளால், extremists groups *ஆல்* terrorist event *ஒன்று* World Trade Centre*-ல் நடந்தது. அன்றைக்கே, அந்த* World Trade Centre*-ல் அந்த* plane *கட்டடத்தை மோதும்போது அதன்* basement*-ல் இருந்தவன் நான். ஏதோ, தலையெழுத்து நன்றாக இருந்ததனாலோ அல்லது ஏதோ ஒரு வரத்தினாலோ அதைத் தாண்டி இரண்டு மூன்று நாட்கள், இந்தப் பக்கம் அந்தப் பக்கம் நடந்திருந்தால், உயிரிழக்கின்ற சூழ்நிலையில் இருந்த என்னை 20 ஆண்டுகளுக்குப் பிறகு, தனி நபர் உயர்வை உதறிவிட்டு, பொது வாழ்க்கைக்கு வந்து, சட்டமன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் என்னை உட்காரவைத்து, அழகுபார்த்து, இந்த வாய்ப்பை எனக்கு அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் மீண்டும் மீண்டும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

5 துறைகளின்மீது இன்றைக்கு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர், திரு. இசக்கி சுப்பையா அவர்கள் தெளிவாக சில கோரிக்கைகளை வைத்தார்கள். அவருக்கு முதலில் தெளிவாக point, point *ஆக புள்ளிவிவரத்துடன், பதில் சொல்லிவிட்டு துறையின்மீதான பதிலுரைக்குச் செல்கிறேன்.*

D.A. *குறித்து கூறினார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் 1–1–2022 முதல் வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். நான் பல உதாரணங்களை எடுத்துக் காண்பித்திருக்கிறேன், 2001–2006 மற்றும் 2016–2021 வரை இருந்த அ.தி.மு.க. அரசால் பல முறை ஒத்திவைக்கப்பட்டு, சூழ்நிலைக்கேற்ப அதிகரிக்கப்பட்டது. ஏற்கெனவே போட்ட திட்டத்தைத் தாண்டி,*

ஒரு பெருந்தன்மையோடு, நல்லெண்ணத்தோடு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூடுதலாக 1,600 கோடி ரூபாய் செலவில், 1–1–2022 என மாற்றியிருக்கிறார். அதை திரு. சுப்பையா அவர்களுக்கு நான் நினைவூட்டுகிறேன்.

கருணை அடிப்படையில் வழங்கும் வேலைவாய்ப்புகளை மேலும் தெளிவாக்க வேண்டும், சிறப்பிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார். அதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், விதி 110–ன்கீழ் அவற்றில் இருக்கின்ற குளறுபடிகள் மற்றும் தெளிவாக இல்லாத சூழ்நிலைகளைத் திருத்தி செய்வோம் என்று அறிவித்திருக்கிறார்கள்.

அடுத்து training குறித்து, பயிற்சி வழங்கப்படுவது சிறப்பிக்கப்பட வேண்டும் என்று கூறினார்கள். அதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பவானிசாகர் பயிற்சி குறித்தும், Distance learning குறித்தும், மாவட்டவாரியாக வாய்ப்பளிக்கப்பட்டு, அனைவரும் சென்று ஒரே இடத்தில் 6 வாரங்கள் தங்குவதற்கான வாய்ப்பையும், தேவையையும் குறைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று அறிவித்திருக்கிறார். இந்த மனித வள மேலாண்மைத் துறைக்கான அறிவிப்புகளில், மேலும் கூடுதல் பயிற்சிகளை சிறப்பிப்பதற்கான முயற்சிகளை, சில முடிவுகளை அறிவிக்கப்போகிறேன்.

ஓய்வூதியம் பெறுவதற்கான ஆவணங்கள், e–mail மூலமாகவும், நேரில் வராத அளவிற்கு சிறப்பிக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார். ஓரளவிற்கு ஏற்கெனவே அது எங்கள் கவனத்தில் இருக்கிறது. சில கட்டாய விதிமுறைகள், அதாவது உயிருடன் இருக்கிறார்களா, இல்லையா என்பது தெரியாமல் தொடர்ந்து வழங்கிக்கொண்டிருக்க முடியாது என்கின்ற சூழ்நிலைகளில் அவற்றை எந்த affidavit–ஐ, எந்த அதிகாரியிடம் பெற்றால் போதுமானதாக இருக்கும் என்பதை ஆய்வு செய்து, அதனையும் சிறப்பிக்க அல்லது, அந்தப் பணியைச் சுலபமாக்குவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

முதியோர் ஓய்வூதியத்தைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடன், எங்களுடைய ஆலோசகர்களும் சொன்ன கருத்து, உடனடியாக 10 சதவிகிதம் அதற்கான எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்று கூறி, என் தொகுதியில்கூட, தாமதமானதாகக் காத்திருந்த சுமார் 80 நபர்களுக்கு நானே இரண்டு வாரங்களுக்கு முன்னால் சென்று

2021 செப்டம்பர் 13] [முனைவர் பழனிவேல் தியாக ராஜன்]

ஓய்வூதியம் கொடுத்தேன். இத்திட்டம், கட்சி வேறுபாடு இல்லாமல், அனைத்துத் தொகுதிகளிலும், அனைத்து சூழ்நிலைகளிலும் இருக்கின்ற எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்பதை இலக்காக வைத்து, யாருக்கெல்லாம் அந்த உரிமை இருக்கிறதோ, அவர்களையெல்லாம் கைவிடாமல், அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று இந்த அரசு முயற்சிகளை எடுத்துக்கொண்டேயிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த இரண்டு கோரிக்கைகள், என் கையில் இல்லை. அது மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் அந்தத் துறைக்கு அமைச்சர் என்பதால், அவர் தெளிவாக பதிலளிப்பார்கள் என்று நினைவூட்டுகிறேன். தொகுதி மேம்பாட்டு நிதியைப் பற்றி பலர் பேசினார்கள். அது சட்டமன்றம் குறித்த மானியக் கோரிக்கை. மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய துறை. அவர் பதிலளிப்பார்.

பிற்பகல் 12–45

அதேபோல் voter list-ல் நிறைய பிரச்சினைகள் இருக்கின்றன. உண்மை. Voter list நீங்கள் மாநகரங்களில் போய் பார்த்தீர்களென்றால், உறுதியாக 10, 15 சதவிகிதம் தவறான entry–கள் இருக்கின்றன. எந்த Computerised model–லில் பார்த்தாலும் அதை உறுதிப்படுத்த முடியும். அதனால்தான் polling percentage, ஒரு காலத்தில் படிப்பு அதிகம், உணர்வுகள் அதிகம், என்று இருக்கின்ற மாநகரங்களில், polling அதிகமாகவும், கிராமப்புறங்களில் polling குறைவாகவும் இருந்தது. இன்று exact reverse ஆகிவிட்டது. ஏனென்றால் அந்த list சரியில்லை. கிராமப்புறங்களில் list சரியாக இருக்கிறது. அதையும் திருத்துவதற்கு முயற்சி எடுக்கப்படும். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் துறையில் வருவதனால் அது குறித்து பேசுவார் என்று கூறுகிறேன்.

சுமார் ஒரு மாதத்திற்கு முன், இந்த அவையில் திருத்தப்பட்ட வரவு–செலவுத் திட்டத்தை தாக்கல் செய்தோம். அன்றைக்கு துவக்க நேரத்தில் ஒரு குறள் படித்தேன்.

“இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு”

அதாவது உருவாக்க வேண்டும், உருவாக்கியதற்குப் பிறகு அரசுக்குச் சரியான பங்கு வரவேண்டும். அதை ஒழுங்காகப் பாதுகாப்போடு வைத்திருக்க வேண்டும். அதை எப்படிப் பிரித்துக் கொடுப்பதென்று சிறப்பாகச் செய்வதுதான் நல்ல அரசு. இயற்றலும்

என்றால் வளர்ச்சியை உருவாக்குவது, அதாவது GSDP growth பொருளாதாரத்தின் வளர்ச்சி rate-ஐ அதிகரிப்பது; ஈட்டலும்– அதில் சரியான சதவிகிதம் அரசாங்கத்திற்கு வரவேண்டும், காத்தலும்—தவறு செய்யாமல், தவறாகப் பயணித்துப் போகாமல், தவறான நபரால் கையெடுக்காமல் வைப்பது காத்தலும் ஆகும். காத்து வகுத்தலும்-இது முக்கியமான ஒரு கொள்கை, தத்துவம். ஏனென்றால் எந்த அளவிற்கு நிதி மேலாண்மை சிறப்பாக இருக்கிறதோ அந்த அளவிற்குத்தான் ஓர் அரசாங்கத்தினுடைய செயல்பாடு, மேலாண்மை, ஆளுமை சிறப்பாக இருக்க முடியும்.

பலர் இங்கே கூறும்போது, நிதியை சில number–ல் சொல்கிறார்கள். இந்த வருடத்தில் இத்தனை ஆயிரங்கள் இருந்தன, அந்த வருடத்தில் அத்தனை ஆயிரங்கள் இருந்தன, இந்த வருடத்தில் இத்தனை ரூபாய் இருந்தது என்று. நிதியைப் பொறுத்தவரையில் எப்போதெல்லாம் நிதியைப்பற்றி பேசுகிறோமோ இரண்டு முக்கியமான கூடுதல் தகவல்கள் தேவை. ஒன்று நேரம் அல்லது காலம். "Time is money" என்று சொல்வார்கள் சில இடங்களில். யாரெல்லாம் finance படிக்கிறோமா அவர்கள் சொல்வார்கள், ரூபாய் என்றால் என்றுடைய ரூபாய், inflation– பணவீக்கத்தினுடைய effect எடுக்கப்பட்டதா, எடுக்கப்படாததா? இல்லை nominal என்பதா? என்றைக்கு கைக்கு வரும், என்றைக்கு கையிலிருந்து கொடுக்க வேண்டும். ஆனால், இங்கு வழிகாட்டுதலாக இருந்து, இன்னும் இருக்கும் தலைவர் கலைஞர் திருவுருவப் படத்தில் அடியில் இருக்கின்ற வார்த்தைகளை நான் திரும்ப வழிமொழிகிறேன். "காலம் பொன்போன்றது" உண்மையிலேயே காலத்தின் அடிப்படையில்தான் நிதியுடைய அருமையைச் சொல்ல முடியும். ஏன்? 1 ரூபாய்க்கு 10 வருடங்களுக்கு முன்னால் என்ன மதிப்பு இருந்தது, 10 வருடங்களுக்குப் பிறகு என்ன மதிப்பில் இருக்கிறது. இது inflation அடிப்படையில்தான் சொல்ல முடியும். அதேபோல், compounding-1 ரூபாயை Bank–ல் போட்டு 5 சதவிகிதம் வட்டிக்கு போட்டால், அது 3 வருடங்களுக்கு பிறகு 15 சதவிகிதம் கொடுக்காது, கிட்டத்தட்ட 20 சதவிகிதம் வரும். அதுதான் effect of compounding. அதேபோல், inflation–னும் compounding. ஆனால், ஒரு எளிமையான ஒரு formula–வை நான் இங்கே கூற விரும்புகிறேன். அதற்கு பெயர் Rule of 72. அதாவது 6 சதவிகிதம் வட்டி இருந்தால், 12 வருடங்களில் 1 ரூபாய் 2 ரூபாயாக ஆகும். இல்லை 10 சதவிகிதம் inflation ஆக இருந்தால் இன்றைக்கு இருக்கின்ற 1 ரூபாய்க்கு வாங்கக்கூடிய பொருளுக்கு நாளைக்கு,

7 வருடத்தில் 2 ரூபாய் தேவைப்படும். அந்தப் பொருளை வாங்குவதற்கு Rule of 72, அதாவது Interest rate multiplied by number of years of compounding. இந்த அடிப்படையில் பார்க்க வேண்டும். இதைச் செய்யாவிட்டால் நமக்கு எண்ணிக்கையை வைத்து தவறான கருத்து பதிவாகும்.

நான் ஒரே ஓர் உதாரணம் சொல்கிறேன். இரண்டு, மூன்று நாட்களுக்கு முன் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர், காவல் மற்றும் தீயணைப்புத் துறை மானியக் கோரிக்கையில் கூறினார் என்ற தகவல். அவர் சொன்னார் "2010–2011–ல் உங்கள் ஆட்சி முடியும்போது, வெறும் 2,962 கோடி ரூபாய்தான் நீங்கள் காவல் துறைக்கு ஒதுக்கினீர்கள். எங்கள் ஆட்சி முடியும்போது அது 8,826 கோடி ரூபாய், அது மூன்று மடங்கிற்கு அருகில் வந்துவிட்டது" என்று கூறினார். ஆனால், effect of inflation, effect of growth கணக்கு போடாததால் இது தவறான ஒரு நோக்கத்தை உருவாக்கும். நான் முழு விவரம் சொல்கிறேன். 2005–2006–ல் கழக ஆட்சி வரும்போது, தலைவர் கலைஞர் ஆட்சி வரும்போது, அந்த மானியத்தில் வெறும் 1,309 கோடி ரூபாய்தான் இருந்தது. ஐந்தே ஐந்து வருடத்தில் 3,185 கோடி ரூபாய், அதாவது ஒரு ரூபாய் செலவு செய்து கொண்டிருந்த இடத்தில், 2.43 ரூபாய் செலவு செய்கின்ற அளவிற்கு ஐந்தே, ஐந்து வருடத்தில் உயர்த்தினார் தலைவர் கலைஞர். ஆனால், இந்தக் கடைசி பத்து வருட ஆட்சியில். 2011–ல் ஒரு ரூபாய் செலவு செய்து கொண்டிருந்தோம். இன்றைக்கு வெறும் 2.52 ரூபாய்தான். அப்போது 2.43 ரூபாய் ஐந்து வருடத்தில் நம்முடைய கழக ஆட்சியில் உயர்த்தினோம். பத்து வருடங்களில் வெறும் 2.52 ரூபாய்தான். என்றைக்கும் number–ஐ ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மூன்றில் ஒரு வகையில் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். ஒன்று inflation effect–ஐ எடுத்து விட்டு, real growth–ன் அடிப்படையில் பார்க்க வேண்டும். அதற்காகத்தான் வெள்ளை அறிக்கையை வெளியிட்டிருக்கிறோம்.

பிற்பகல் 12–50

2006–2007–லிருந்து 2010–2011 வரை தமிழ்நாட்டில் வளர்ச்சி real growth. Inflation effect எடுத்த பிறகு 10.15 சதவிகிதம், அதுவே 2011–2012 முதல் 2015–2016–க்கு 6.7 சதவிகிதமாக மிகவும் சரிந்து விட்டது. 2016–2017 முதல் 2019–2020 கொரோனா காலத்தில் சேர்க்க வேண்டாம் என விட்டு விட்டதினால், அது 7.22 சதவிகிதமாகத்தான் இருந்தது. So, real basis–ல் பார்க்க வேண்டுமென்றால். யாருடைய திட்டம்,

மேலாண்மை, வளர்ச்சிக் காலம் எப்படி இருந்தது என்பதைச் சொல்ல முடியும்.

அப்படி இல்லையா, இரண்டாவது வகையில் பார்க்கலாம். உற்பத்தியில் எத்தனை சதவிகிதம் நமக்கு வருமானம் வருகிறது. உற்பத்தியில் எத்தனை சதவிகிதம் நம்முடைய கடன் அல்லது உற்பத்தியில் எத்தனை சதவிகிதம் நாம் செலவு செய்கின்றோம். அந்த அடிப்படையில் பார்த்தால் 2006–லிருந்து 2011 வரை உற்பத்தியில் 12.27 சதவிகிதம் revenue expense ஆக, வட்டியைக் கழித்துவிட்டால், வட்டி இல்லாத செலவுகளாக 12.27 சதவிகிதம் இருந்தது. அதற்குமேல் வருவாய்க் கணக்கில் 0.32 சதவிகிதம், உற்பத்தியில் உபரியாக வைத்து 2.18 சதவிகிதம் மட்டும் கடனாக வாங்கி, 2½ சதவிகிதம் முதலீடு செய்யப்பட்டது. ஆனால், 2011–2016–ல் பார்த்தால் வெறும் 11.55 சதவிகிதம்தான் செலவு. வட்டியில்லாத செலவு. அதையும் செலவு செய்வதற்கு, உற்பத்தியில் 0.26 சதவிகிதம் கடன் வாங்கித்தான் இந்தச் செலவு செய்ய முடிந்தது. அதனால், முதலீடு இன்னும் சரிந்து 2.36 சதவிகிதம் ஆனது. 2016–2021–ல் பார்த்தால், அதுவும் சரிந்து, 10.01 சதவிகிதம்தான் மொத்தச் செலவு. அதனைச் செலவு செய்வதற்கு 1.83 சதவிகிதம் உற்பத்தியில் கடன் வாங்கி, அதனால் வெறும் 1.85 சதவிகிதம்தான் முதலீடு செய்யப்பட்டது. இது ஏன் முக்கியம் என்றால், 2016–ல் என் கன்னிப் பேச்சில் RBI அறிக்கை, Reserve Bank of India–வின் அறிக்கையை நான் அன்றைக்கே சுட்டிக்காட்டி பேசினேன். RBI அறிக்கையிலும் textbook–லும் என்ன சொல்கிறது என்றால், எந்தெந்த மாநிலங்கள் கடனை முதலீடுக்காக வாங்குகிறார்களோ அவர்களுக்கெல்லாம் வளர்ச்சி எதிர்காலத்தில் சிறப்பாக இருக்கும். எந்தெந்த மாநிலங்கள் கடனைச் செலவு செய்ய வாங்குகிறார்களோ, அங்கு எதிர்கால வளர்ச்சி சரிந்துவிடும். இரண்டாவது சொன்னது, எந்தெந்த மாநிலங்களில் வருமானத்தில் வட்டியைக் குறைத்து கட்டுகிறார்களோ, அங்கெல்லாம் சிறப்பாக இருக்கும். எங்கெல்லாம் கூடுதலாகக் கட்டுகிறார்களோ எதிர்காலத்தில் வளர்ச்சி சரியும். Textbook–ல் சொன்னதும், RBI–ல் சொன்னதும் correct ஆக நடந்திருக்கிறது. ஒரு காலத்தில் ஒரு ரூபாய் வருமானத்தில் 12 பைசாவாக கட்டிக் கொண்டிருந்த வட்டி, இன்றைக்கு 20 பைசாவிற்குமேல் போய்விட்டது. அதனால் வளர்ச்சி சரிந்துவிட்டது. அதனைத்தான் GDP–யில் காண்பிக்கிறோம்.

அதேபோல் ஒரு காலத்தில், தலைவர் கலைஞர் காலத்தில் ஒரு ரூபாய் கடன் வாங்கினால், அதையும் வருவாய் உபரியையும் சேர்த்து வைத்து 100 சதவிகிதம் கடன், முதலீட்டிற்கு மட்டும் பயன்படுத்தப்பட்டது. ஆனால், இந்தக் கடைசி ஐந்து வருடத்தில் ஒரு ரூபாய் கடன் வாங்கினால், கிட்டத்தட்ட 50 சதவிகிதம், 50 பைசா, வருவாய்ப் பற்றாக்குறைக்காக செலவு செய்யப்பட்டு, மீதமிருக்கும் வெறும் 50 சதவிகிதம்தான் மூலதனத்திற்குச் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12–55

இங்கே உறுப்பினர் திரு. சுப்பையா பேசும்போது, ஒரு திட்டத்தை, ஒரு முழு special vision, ஒரு தொலைநோக்குத் திட்டத்தைப் பற்றி பேசினார். அந்தத் திட்டத்தை நானும் பல ஆண்டுகளாக ஆய்வு செய்துகொண்டே இருக்கிறேன். அந்தத் திட்டம் 'Vision 2023' – முன்னாள் முதலமைச்சர் அம்மையாரால் உருவாக்கப்பட்ட ADB, World Bank, எல்லாவற்றின் உதவியோடும் Vision 2023 என்று உருவாக்கப்பட்ட திட்டம். நான் 2016–ல் முதன்முதலில் MLA ஆனவுடன் ஒரு கேள்வி கேட்டேன். காலம் மிக முக்கியமானது. நீங்கள் சொல்கிறீர்கள், 10 வருடங்களில் ஒன்றை மூன்று ஆக்கப்போகிறேன் என்று. அப்படி என்றால் முதல் மூன்று வருடங்களில் பத்து சதவிகிதம், 15 சதவிகிதம் வளர்ச்சி வந்திருந்தால் பத்து வருடங்கள் கழித்து ஒன்றை மூன்றாக்க முடியும். முதல் மூன்று வருடங்களில் இது வரவில்லை, அதனால் இந்த இலக்குகளை உங்களால் அடையவே முடியாது, தயவுசெய்து இலக்கையாவது மாற்றியடையக்கூடிய இலக்காக மாற்றிக்கொள்ளுங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று கேட்டேன். அப்பொழுது சில அமைச்சர்கள் எழுந்து சொன்னார்கள், நீங்கள் போடும் கணக்கு சரியில்லை, இதுவரையிலும் 5, 7 சதவிகிதம்தான் வளர்ந்திருந்தாலும் எதிர்காலத்தில் 20 சதவிகிதம் வளர்ந்து உற்பத்தியை ஒன்றிலிருந்து மூன்றாக்குவதையெல்லாம் செய்வோம் என்றார்கள். Ofcourse இயற்கைக்கு எதிராக எதுவும் நடக்க முடியாது. நடக்கவில்லை. ஆனால், குறிப்பாக ஒன்றை இந்த 'Vision 2023'–ல் சொல்லவேண்டுமென்று சொன்னால், அம்மையார் சொல்லியிருக்கிறார்கள், கடன், மூன்று சதவிகிதம் உற்பத்தியில் மட்டும்தான் எடுக்க முடியும். மூன்று சதவிகிதம் எடுத்து மூலதனம் செய்தால், வளர்ச்சி என்ன ஆனாலும் பத்து, பன்னிரெண்டு சதவிகிதத்திற்கு மேல் போகாது. ஆகையால், அனைவருக்கும்

தெரியும், மூலதனத்தினைக் கூட்டினால் வளர்ச்சி கூடும். ஆனால், என்னுடைய கனவு மூன்று சதவிகிதம் கடனாக எடுத்து ஒன்றரை சதவிகிதம் வருவாய்க் கணக்கில் உபரியாக வைத்து அதற்குமேல் Off–Balance sheet vehicle *வைத்து, தற்போது உள்ள* Tamil Nadu Infrastructure Fund Management Corporation Limited *போன்ற ஒரு நிறுவனத்தை உருவாக்கி, அதில் ஒரு சதவிகிதம், ஒன்றரை சதவிகிதம் எடுத்து, மொத்தம் ஆறு சதவிகிதம் முதலீடு செய்து, அதன்மூலம் வளர்ச்சியை ஆண்டுக்கு 12–லிருந்து 14, 15, 16 சதவிகிதம் ஆக்கப்போகிறோம். திட்டம் நல்ல திட்டம், ஆனால் நான் பலமுறை சொன்னதுபோல், 3+1½ +1½–க்கு பதிலாக மூன்றிலேயே ஒன்றரை சதவிகிதம் வருவாய் பற்றாக்குறைக்கு போய்விட்டது. அப்போது மூன்று,* minus *ஒன்றரை ஆகிவிட்டது. பற்றாக்குறை ஒன்றரை ஆக இருக்கும்போது உபரி இருக்க வாய்ப்பில்லை. அதற்குமேல் ஒரு ஆச்சரியம் என்னவென்றால், இந்த* Off–Balance sheet vehicle–*ஐப் பார்த்தீர்களென்றால்,* Tamil Nadu Infrastructure Fund Management Corporation Limited, *7 வருடங்கள் இயங்கியிருக்கின்றதே தவிர இதுவரையிலும் ஒரு* project–*க்கும் பெரிய மூலதனம் கண்டுபிடிக்கவே இல்லை. இதுபோல் ஒரு* fund management – *நானும்* Banking–*ல் இருந்தவன், ஒரு* fund management company *6, 7 வருடங்கள் உயிரோடு இருந்து ஒரு* project–*க்குக்கூட* finance *கொடுக்காததை நான் வாழ்க்கையில் பார்த்ததே இல்லை. எனவே, அங்கு பல மாற்றங்களைக் கொண்டுவரவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலோடு அதையெல்லாம் திருத்திக்கொண்டிருக்கிறோம். அதனால் நான் சொல்ல வேண்டியது, இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலை ஒரு நாளிலோ, ஒரு வருடத்திலோ, ஒரு ஆட்சியினாலோ உருவாகவில்லை. பத்து வருடங்களோடு தொடர்ந்து நடந்த ஒரு மேலாண்மை சரிவினால், மூலதனக் குறைவினால், வருவாய் இழப்பினால், பலமுறை கூறிதான் இங்குவந்து அமர்ந்திருக்கிறோம். பல உறுப்பினர்கள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்களில் இதனை எப்படித் திருத்தப்போகிறோம், இதனை எப்படி ஒழுங்காக்கப் போகிறோம் என்று கேட்டிருக்கிறார்கள். நான்* technical *ஆக இரண்டே இரண்டு கருத்துக்களைச் சொல்லிவிட்டு, இந்த பதிலுரையை முடித்துக்கொள்கிறேன்.*

நம்முடைய இலக்கு வருமானத்தில் வட்டியை 20 சதவிகிதத்திலிருந்து திரும்ப 11, 12 சதவிகிதத்திற்குக் கொண்டுவருவது.

2021 செப்டம்பர் 13] [முனைவர் பழனிவேல் தியாக ராஜன்]

இதனை இரண்டே இரண்டு வகைகளில்தான் செய்ய முடியும். ஒன்று இருக்கின்ற கடனை restructure செய்து, இன்று கொடுக்கின்ற 8 சதவிகிதம் வட்டிக்குப் பதிலாக ஐந்து, ஆறு, ஆறரை எனக் குறைத்து, அதனால் numerator – வட்டியைக் குறைக்க முடியும். அந்த முயற்சியையும் எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆனால், அதைவிட சிறப்பான வகை, வளர்ச்சியை, வட்டி சதவிகிதம் அதிகரிக்கும் rate–டுடன் வளர்ச்சி rate–னை மிகவும் அதிகரித்தால், automatic ஆக அந்த 20, 21–லிருந்து 18, 17, 16, 15, 14, 13, 12, 11 என்று வரும். அதனால் நமது இலக்கு வளர்ச்சியை அதிகரிப்பது. ஆங்கிலத்தில், பொருளாதாரத்தில் சொல்வார்கள், "A rising tide lifts all boats." அதாவது கடல் மட்டம், இரவு, பகலில் ஏறுவதும், இறங்குவதும் போல், கடல் மட்டம் ஏறும்போது அனைத்துப் படகுகளையும் சமமாகத் தூக்கும். So, we fix ot of our problems with growth. வளர்ச்சியை உருவாக்குவது, வேலைவாய்ப்பை உருவாக்குவது, அரசுக்கு வருமானம் உருவாக்குவது, இவைதான் இருப்பதிலேயே முக்கியமான இலக்கு.

பிற்பகல் 1–00

அந்தவகையில், எப்படி கடனைக் குறைக்கப்போகிறீர்கள் என்று பலர் கேட்டிருக்கிறார்கள். கடனைக் குறைப்பதற்கும் இரண்டு வகைகள்தான் இருக்கின்றன. ஒன்று, ஒன்றிய அரசாங்கம் திருப்பித்திருப்பி கூறிக்கொண்டிருக்கின்றமாதிரி, ஏதோவொரு மக்கள் சொத்தை விற்று, அந்தக் கடனை விடுவிக்க வேண்டும்; அதாவது monetization அல்லது asset monetization; இப்பொழுது, குத்தகைக்கு விட்டு எடுப்பது என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'Airports, Railway stations, Ports இவற்றையெல்லாம் விற்பதற்கு எங்களுக்கு விருப்பமில்லை' என்று ஏற்கெனவே கடிதம் எழுதியிருக்கிறார். இது மக்கள் சொத்து; strategic assets. இதையெல்லாம் monetization செய்வதற்கு எங்களுக்கு விருப்பமில்லை. வேறு assets இருக்கின்றன. அவற்றை தேவைப்படும் நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்வோம். ஆனால், debt to GDP ratio–ஐக் குறைப்பதற்கு, இருப்பதிலேயே சிறந்த வழி, GDP–யை உயர்த்துவது, வளர்ச்சியை உயர்த்துவது. வளர்ச்சியை உயர்த்தினால், அதாவது கடன் rate அதிகமாக வளர்ந்தால்,

[முனைவர் பழனிவேல் தியாக ராஜன்] [2021 செப்டம்பர் 13

automatic ஆக, அந்த ratio-வையும், இன்றைக்கு இருக்கின்ற 26, 27, 28 சதவிகிதத்திலிருந்து, முன்பிருந்த 16, 17, 18 சதவிகிதத்திற்குக் கொண்டுபோகலாம். பல உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானத்தில் இந்தமாதிரி கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். அதற்கு இது ஒரு தெளிவான விளக்கமாக இருக்கும் என்று கருதுகின்றேன்.

வளர்ச்சியின் முக்கியத்துவத்திற்கு நாம் எந்தவிதத்திலும் குறைந்த கவனம் செலுத்த முடியாது; இதுதான் இருப்பதிலேயே முக்கியமாக கவனம் செலுத்த வேண்டியது. ஏனென்றால், the effect of compounding, நான் சொன்ன Rule of 72-ன்படி பார்த்தீர்களென்றால், ஏற்கெனவே நாம் போடுகின்ற திட்டங்களெல்லாம், in today's money, இன்றைய பணத்தில். இன்றைய பணத்திற்கும், போன வருட பணத்திற்கும் இரண்டு வேறுபாடுகள் இருக்கின்றன. ஒன்று, பண வீக்கம். Inflation ஆல் பணத்தின் value மாறியிருக்கிறது. இரண்டாவது, வளர்ச்சியினால், real growth, அதாவது, inflation-உடைய effect-ஐ எடுப்பதால். இந்த நம்பர் மிகவும் பெரிய நம்பர். வித்தியாசத்திற்கு ஓர் உதாரணத்தைச் சொல்கின்றேன்.

காவல் துறை மானியத்தில் 2006-லிருந்து 2011 வரை, ரூபாய் கணக்கில் 5 ஆண்டுகளுக்கு ஒவ்வோர் ஆண்டும் கிட்டத்தட்ட 20 சதவிகிதம் மானியம் உயர்த்தப்பட்டது. ஏனென்றால், some of it is inflation; some of it is real growth. ஆனால், 2011-லிருந்து 2021 வரை, சராசரியாக ஒவ்வோர் ஆண்டும் வெறும் 9.64 சதவிகிதம்தான் உயர்த்தப்பட்டது. Half the rate, not even ten percent.

இதேமாதிரி Fire and rescue, தீயணைப்புத் துறையில். 19.59 சதவிகிதம் 2006-லிருந்து 2011 வரைக்கும் ஒவ்வோர் ஆண்டுக்கும் அத்தனை சதவிகிதம் அதிகரித்தது. 2011-லிருந்து 2021 வரைக்கும் வெறும் 7.41 சதவிகிதம். இதையெல்லாம் சேர்த்துச் சொன்னால், இரண்டே இரண்டு கணக்குகள் சொல்கின்றேன்.

வட்டிச் செலவு. வட்டிச் செலவு 2006–2011-க்கு ஆண்டுக்கு 10.19 சதவிகிதம் உயர்ந்தது. ஆனால், கடைசி 10 வருடங்களாக 16.36 சதவிகிதம் வளர்ந்திருக்கின்றது. அதனால்தான் நம்முடைய வட்டிச் சுமை இவ்வளவு பெரியதாக இருக்கின்றது. அதேசமயம் வட்டியில்லாத செலவு, வட்டியைக் கழித்துவிட்டு செய்கின்ற செலவைப் பார்த்தால், 2006–2011-ல் 19.48 சதவிகிதம் உயர்ந்து கடைசி 10 வருடங்களாக வெறும் 11.6 சதவிகிதம்தான் வளர்ந்திருக்கின்றது.

இதை நம்பர் கணக்கில் சொல்ல வேண்டுமென்றால், 2006–2007–ல் பட்ஜெட் சுமார் 47,000 கோடி ரூபாய். 2010–2011–ல் பட்ஜெட் கிட்டத்தட்ட 100 சதவிகிதம், double ஆகி, 94,000 கோடி ரூபாய்.

2015–2016–ன் பட்ஜெட் 1,73,000 கோடி ரூபாய், வெறும் 84 சதவிகிதம் அதிகரிப்பு. 2020–2021–ன் பட்ஜெட் 2,90,000 கோடி ரூபாய். வட்டியில்லாத செலவு, வெறும் 68 சதவிகிதம்.

ஆனால், எல்லா கேள்விக்கும் ஒரே பதில், சீரிய மேலாண்மை, சிறப்பான வளர்ச்சி, தவறுகளை திருத்துவது, வருமானத்தைப் பெருக்குவது. அதற்காகத்தான் பல முயற்சிகளைச் செய்திருக்கின்றோம்.

இதைத் திருத்துவதற்கு, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அண்ணன் திரு. மூர்த்தி அவர்களுடன் இணைந்து, சட்டத்தையும் திருத்தியிருக்கிறோம்; விதிமுறையையும் திருத்தியிருக்கின்றோம்; முதலீடும் செய்திருக்கின்றோம். இத்துடன் நிதித் துறை மற்றும் Planning–ஐ முடித்துவிடுகிறேன். இன்னும் 2 துறைகள் இருக்கின்றன. முதலாவதாக, மனித வள மேலாண்மைத் துறை பற்றி சில கருத்துகளைச் சொல்லி, அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

பிற்பகல் 1–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லுங்கள். 2 மணிக்கு கில்லட்டின் நேரம். அது தங்களுக்குத் தெரியும். தகவலுக்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: சரி. பலருக்கும் தெரியும். மனித வள மேலாண்மைத் துறை அரசுக்கு மிக முக்கியமான துறையாகும். அரசின் செயல்பாடுகளைச் செம்மையாக மேற்கொள்ள திறமையான பணியாளர்கள் அவசியம். அவர்களை உருவாக்குவதற்கும், ஊக்கமளிப்பதற்கும் பயிற்சி கொடுப்பதற்காகவும் உருவாக்கப்பட்ட துறை இத்துறை. இந்தத் துறையில், TNPSC–Tamil Nadu Public Service Commission, பயிற்சித் துறை, (Training Department), தமிழ்நாடு தகவல் ஆணையம் (Tamil Nadu Information Commission), லோக் ஆயுக்தா, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு (DVAC) மற்றும் Vigilance Commission ஆகியவை இருக்கின்றன. இந்தத் துறையைச் சிறப்பிப்பதற்கு ஏற்கெனவே பல்வேறு நடவடிக்கைகள்

எடுக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சில நடவடிக்கைகள் பற்றிக் கூறியிருக்கிறார்கள். சுமார் 9 இலட்சத்து 50 ஆயிரம் அரசுப் பணியாளர்கள் இருக்கும் இத்துறையில், இன்றைக்கு எல்லா வகையான training-ம் இல்லை. அவர்களுக்கு compensation எல்லாவற்றையும் கொடுப்பதற்குப் பல முயற்சிகள் எடுத்துக்கொண்டு வருகிறோம். அதையொட்டி நான் சில அறிவிப்புகளை மட்டும் இங்கே படித்து, இத்துறையைப் பற்றிய எனது உரையை முடித்துக்கொள்கிறேன். முக்கியமான அறிவிப்புகளுக்கு மட்டும் நான் விளக்கம் கூறுகிறேன். இல்லையென்றால், நான் படித்துவிடுகிறேன்.

அறிவிப்புகள்

1. போட்டித் தேர்வுகளில் தமிழ்மொழி பாடத்தாள் கட்டாயமாக்கப்படுதல்

தமிழக அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்கள் மற்றும் மாநில பொதுத் துறை நிறுவனங்களில் உள்ள பணியிடங்கள் அனைத்திலும், தமிழக இளைஞர்களை 100 சதவீதம் நியமனம் செய்யும்பொருட்டு, தேர்வு முகமைகளால் நடத்தப்படும் அனைத்து போட்டித் தேர்வுகளிலும் தமிழ்மொழி பாடத் தாள் தகுதித் தேர்வாகக் கட்டாயமாக்கப்படும்.

எங்கெல்லாம் போட்டித் தேர்வுகள் இருக்கின்றனவோ, அதில் உறுதியாக தமிழ் மொழி பாடத் தாள் அனைத்து அரசாங்கப் பணிகளுக்கும், அனைத்து பொதுத் துறை நிறுவனங்களுக்கான தேர்வுகளிலும் கட்டாயமாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. வேலைவாய்ப்பில் முன்னுரிமை

வேலைவாய்ப்பகங்கள் வழியாக நிரப்பப்படுகின்ற அரசுப் பணியிடங்களில் பின்வரும் இனத்தவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்:

(i) கொரோனா தொற்றால் பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள்

(ii) முதல் தலைமுறை பட்டதாரிகள்

(iii) தமிழக அரசுப் பள்ளிகளில் தமிழ்மொழியில் பயின்ற நபர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

3. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் புலனாய்வுகளைக் கூர்மைப்படுத்திட மென்பொருள் மற்றும் வல்லுநர்களின் சேவை

ரூ.1.10 கோடி (ரூபாய் ஒரு கோடியே பத்து இலட்சம் மட்டும்) செலவில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்கக வழக்கு விசாரணைகளில், இணையவழி வங்கி சேவையின் வாயிலான பணப்பரிமாற்றம் மற்றும் தரவுகளின் பகுப்பாய்விற்காக மென்பொருள் நிறுவுவதுடன், நிபுணத்துவம் பெற்ற பட்டயக் கணக்கர், இணையதள குற்ற தடயவியல் நிபுணர், ஓய்வு பெற்ற வங்கி அலுவலர்கள் மற்றும் ஓய்வு பெற்ற வருமான வரி ஆய்வாளர்/அலுவலர்கள் ஆகியோரின் சேவைகளும் பயன்படுத்தப்படும்.

இதற்காக ரூ.1.10 கோடி நிதி ஒதுக்கி, அவர்களுக்கு infrastructure, technology *போன்றவை அதிகரிக்கப்படும்.*

4. புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட 6 வருவாய் மாவட்டங்களில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகங்கள் ஏற்படுத்துதல்

புதியதாகத் தோற்றுவிக்கப்பட்ட செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, மயிலாடுதுறை, ராணிப்பேட்டை, தென்காசி மற்றும் திருப்பத்தூர் ஆகிய வருவாய் மாவட்டங்களில் ரூ.2.93 கோடி (ரூபாய் இரண்டு கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சம் மட்டும்) செலவில் ஆறு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகங்கள் ஏற்படுத்தப்படும்.

5. கொரோனா பெருந்தொற்று காரணமாக வயது உச்ச வரம்பு உயர்த்துதல்

கொரோனா பெருந்தொற்று காரணமாக, பணியாளர் தெரிவு முகமைகளால் (Recruiting Agencies) *நடத்தப்படும் அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் தாமதமானதால், நேரடி நியமன வயது உச்ச வரம்பு இரண்டு ஆண்டுகளாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

கொரோனா பெருந்தொற்று காரணமாக பலர் அவர்களுடைய தேர்வுகளைச் சரியான நேரத்தில் எழுத முடியவில்லை. TNPSC Group–I, Group–II, Group–IV. *அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கும் வகையில், வயது உச்சவரம்பு இரண்டு ஆண்டுகள் உயர்த்தப்படும்.*

[முனைவர் பழனிவேல் தியாக ராஜன்] [2021 செப்டம்பர் 13

(மேசையைத் தட்டும் ஒலி) எங்கெல்லாம் 35 வயது உச்சவரம்பு என்றிருக்கிறதோ அது 37 ஆகவும், 37 ஆக இருந்தால் அது 39 ஆகவும் உயர்த்தப்படும்.

6. அரசுப் பணி நியமனங்களில் பெண்களுக்கான ஒதுக்கீட்டினை 40 சதவீதமாக உயர்த்துதல்

மாற்றத்தை ஊக்குவிப்பதில் பாலின சமத்துவம் முக்கியமானது என்பதை உணர்ந்து, நேரடி நியமனம்மூலம் மேற்கொள்ளப்படும் அரசுப் பணி நியமனங்களில் பெண்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் ஒதுக்கீடு 30 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக உயர்த்தப்படும். இதற்குரிய சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

7. தகவல் தொழில்நுட்ப அடிப்படையில் ஆய்வு நடவடிக்கைகளை மேம்படுத்துதல்

தலைமைச் செயலக ஆய்வுக் குழுக்கள் மற்றும் மாவட்ட ஆய்வுக் குழுக்களால் மேற்கொள்ளப்படும் திடீர் ஆய்வுகள் மற்றும் விரிவான ஆய்வுகளின் உரிய பலன்களை உடனுக்குடன் பெறுவதற்காக ஆய்வுப் பிரிவிற்கு ரூ.15 இலட்சம் (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) செலவில் மடிக்கணினிகள் மற்றும் அதனைச் சார்ந்த மென்பொருட்கள் வழங்கப்படும். அதாவது, எங்கள் துறையில் உள்ள Inspection Departments அனைத்தையும் சிறப்பிக்கவுள்ளோம்.

அண்ணா மேலாண்மை நிலையத்தை இன்னும் 4, 5 வகைகளில் சிறப்பிக்கலாம் என்று முடிவெடுத்திருக்கிறோம். ஏனென்றால், அண்ணா மேலாண்மை நிலையம், Anna Institute of Management என்பது ஒரு முக்கியமான Training Institute ஆகும். அதைப் பற்றி ஒவ்வொன்றாக நான் சொல்கிறேன்.

8. அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு மிகு மின்சாரம் வழங்குதல்

மாநிலத்தின் முதன்மைப் பயிற்சி நிறுவனமான அண்ணா மேலாண்மை நிலையத்திற்குச் சீரான மின்சாரம் பெறப்படுவதை உறுதி செய்ய 500 கே.வி.ஏ. திறன் கொண்ட ஸ்விட்ச் கியர் அமைப்புடன் இரு மின்மாற்றிகள் ரூ.4 கோடி (ரூபாய் நான்கு கோடி மட்டும்) செலவில் அமைக்கப்படும்.

2021 செப்டம்பர் 13] [முனைவர் பழனிவேல் தியாக ராஜன்]

அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு 500 கே.வி.ஏ. திறன் கொண்ட இரண்டு டிரான்ஸ்பார்மர்கள் அமைக்கப்போகிறோம்.

9. அண்ணா மேலாண்மை நிலைய பணியாளர்களுக்கான வாடகைக் குடியிருப்புகள்

அண்ணா மேலாண்மை நிலையத்தில் 2005 ஆம் ஆண்டில் பணியாளர்களுக்காக ஆறு வாடகைக் குடியிருப்புகள் கட்டப்பட்டன. தற்போது கூடுதல் பணியாளர்களுக்காக அண்ணா மேலாண்மை நிலைய வளாகத்திலேயே ரூ.3.50 கோடி (ரூபாய் மூன்று கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் கூடுதல் பணியாளர் வாடகைக் குடியிருப்பு அமைக்கப்படும்.

10. 53 வயதைக் கடந்த தொகுதி 'அ மற்றும் 'ஆ' அலுவலர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி

'அ' மற்றும் 'ஆ' பிரிவு அரசுப் பணியாளர்களில் 53 வயதுக்கு உட்பட்டவர்களுக்கே பிரத்யேகமாகப் பயிற்சி நடத்தப்படுகிறது. இதற்கு மாறாக, 53 வயதைக் கடந்த அலுவலர்களுக்கு பொதுவான தலைப்புகளான மனித வள மேலாண்மை, நேர மேலாண்மை, தலைமைப் பண்புகள் மற்றும் பொதுமக்கள் நல்லுறவு போன்ற பிரிவுகளில் அவர்களின் வயது மற்றும் பணி முதிர்ச்சி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வகுப்பறை அல்லா சூழலில் நடத்துவதற்கு கூடுதலாக ரூ.2 கோடி (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) அண்ணா மேலாண்மை நிலையத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

பிரிவில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஏற்கெனவே 53 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு ஒரு பயிற்சி நடத்தப்படுகிறது. 53 வயதிற்குமேல் உள்ளவர்களுக்கும் இதுபோன்ற பயிற்சி அளிப்பதற்கு ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

பிற்பகல் 1–10

11. அண்ணா மேலாண்மை நிலையத்தில் சிறப்புப் பயிற்சி அளித்தல்

மாநில அரசுப் பணியில் உள்ள இடைநிலை ஆசிரியர்கள் முதல் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் வரை குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் மற்றும் அங்கன்வாடி ஊழியர்கள், சத்துணவுப் பணியாளர்கள், அரசு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ்

பணிபுரியும் அரசு விடுதிக் காப்பாளர்கள் மற்றும் முறையான பயிற்சி பெறாத அனைத்துத் துறை பணியாளர்களுக்கும் அண்ணா மேலாண்மை நிலையத்தில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும். இதற்காக ரூ.2 கோடி (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) ஒதுக்கீடு செய்யப்படும்.

மாநில அரசுப் பணியில் உள்ள இடைநிலை ஆசிரியர்கள், மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் வரை அனைவருக்கும் நல்ல வகையில் பயிற்சி கொடுப்பதற்கு 2 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

12. காட்சி ஊடகப்பாதை – படப்பிடிப்பு தளம் அமைத்தல்

அண்ணா மேலாண்மை நிலையத்தின் AIM TN காட்சி ஊடகப்பாதை செயல்பாட்டினை மேம்படுத்தும் வகையில் ரூ.50 இலட்சம் (ரூபாய் ஐம்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் பிரத்யேகமாக ஒரு படப்பிடிப்புத் தளம் (Studio) அமைக்கப்படும் மற்றும் அதற்கான அனைத்து உபகரணங்களும் வாங்கப்படும்.

Digital studio ஒன்று Anna Institute of Management–ல் உருவாக்கி, அதன் மூலமாக training classes வெளிப்படைத் தன்மையுடன் broadcast செய்யப்படும்.

13. இரண்டு புதிய மினி பேருந்துகள் வாங்குதல்

முதன்மைப் பயிற்சி நிறுவனமான அண்ணா மேலாண்மை நிலையத்தில் மாநில/மத்திய அரசு மற்றும் பொதுத் துறை நிறுவன அலுவலர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. பல்வேறு இடங்களிலிருந்து வரும் பயிற்சியாளர்கள் அண்ணா மேலாண்மை நிலையத்தை வந்தடையவும், அங்கிருந்து பயிற்சி தொடர்பாக தலைமைச் செயலகம் உள்ளிட்ட பல இடங்களுக்குச் செல்லவும், பயிற்சியாளர்களின் போக்குவரத்து வசதிக்காக ரூ.40 இலட்சம் (ரூபாய் நாற்பது இலட்சம் மட்டும்) செலவில் 2 புதிய மினி பேருந்துகள் வாங்கப்படும்.

Training–க்கு வருபவர்கள் வந்து செல்வதற்காக இரண்டு புதிய mini bus Anna Training Institute–க்கு வழங்கப்படும்.

14. புதிதாக கணினி/உபகரணங்கள் வாங்குதல்

அகில இந்திய குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையம் மற்றும் ‘அ’ (ம) ‘ஆ’ பிரிவு அடிப்படை பயிற்சி நிலையத்தில்

2021 செப்டம்பர் 13] [முனைவர் பழனிவேல் தியாக ராஜன்]

கணினி ஆய்வகத்தினைப் புதுப்பிக்கும்பொருட்டு ரூ.81 இலட்சம் (ரூபாய் எண்பத்தியொரு இலட்சம் மட்டும்) செலவில் கணினிகள், அச்சுப்பொறிகள் மற்றும் உபகரணங்கள் வாங்கப்படும்.

கடைசியாக, கூடுதல் Training செய்கிறவர்களுக்கும், infrastructure உருவாக்குவதற்கும் 81 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கணினி உபகரணங்கள் வழங்கப்படும். இது மனித வள மேலாண்மைத் துறை சார்ந்தது.

கடைசியாக இந்த சிறப்புத் திட்டமிடுதல் துறையில் ஒரேயொரு அறிக்கையை இங்கே சமர்ப்பித்திருக்கிறோம். அதைப்பற்றி சில வார்த்தைகள் மட்டும் நான் கூற விரும்புகிறேன். இது உங்களுடைய computer-ல் இருக்கின்றது. Budget speech-ன்போது கடைசி 10 ஆண்டுகளில் பேரவை விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எத்தனை; எத்தனை நிறைவேற்றப்பட்டன; அதன் மதிப்பு என்ன; எந்தத் திட்டங்களெல்லாம் நிலுவையில் இருக்கின்றன; எந்தெந்தத் திட்டங்கள் கைவிடப்பட்டுள்ளன என்பது குறித்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு ஒரு synopsis, அதாவது ஒரு குறுகிய விளக்கம் சொல்லவேண்டுமென்றால், இந்த 10 ஆண்டுகளில் 1,704 அறிவிப்புகள்; யோசித்துப் பாருங்கள்; 10 ஆண்டுகளில் பேரவை விதி 110-ன்கீழ் 1,704 அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அதன் மொத்த மதிப்பு 3.2 இலட்சம் கோடி ரூபாய். இந்த ஆண்டினுடைய Appropriation bill-உடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த ஆண்டின் முழு பட்ஜெட் மதிப்பு 3.25 இலட்சம் கோடி ரூபாய். கடந்த 10 ஆண்டுகளில் பேரவை விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்டது மட்டும் 3.27 இலட்சம் கோடி ரூபாய்க்கான அறிவிப்புகள். இன்னும் இந்த அறிவிப்புகளை ஆண்டுதோறும் வகுத்துப் பார்த்தால், சில ஆண்டுகள் மொத்த பட்ஜெட்டில் இருக்கின்ற விருப்ப செலவுகளைவிட கூடுதலாக அறிவிப்புகள் வந்திருக்கின்றன.

2013–2014 ஆம் ஆண்டு 292 அறிவிப்புகள். அதற்கான மொத்தத் தொகை 56,346 ஆயிரம் கோடி ரூபாய். ஆனால், அந்த காலகட்டத்தில் மாநிலத்திற்கு மொத்த வருமானமே 1,08,000 கோடி ரூபாய். கொஞ்சம் கடனையும் சேர்த்து மொத்த செலவு 1,09,000 கோடி ரூபாய். அதில் ஓய்வூதியம், ஊதியம், கட்டாயச் செலவுகளை எடுத்துவிட்டால் விருப்பச் செலவு மொத்தமே 41,674 கோடி ரூபாய். அப்படியெனில் பேரவை விதி 110-ல் அறிவிக்கப்பட்டவைக்கு மட்டும் மொத்த செலவுக்கு 135 சதவிகிதமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதை

[முனைவர் பழனிவேல் தியாக ராஜன்] [2021 செப்டம்பர் 13

எப்படி நிறைவேற்ற முடியும்? உறுதியாக நிறைவேற்ற முடியாது. அதனால் பட்ஜெட்டை எடுத்துப் பார்த்தால், கிட்டத்தட்ட அரசாங்கத்தின் தகவல் அடிப்படையில்—நான் தனித்தனியாகச் சென்று ஆய்வு செய்யமுடியவில்லை. ஆனால் இந்த 1,704 அறிவிப்புகளில் அரசாங்கத்தின் தகவல் அடிப்படையில் 1,167 அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதனுடைய மொத்தத் தொகை 87,405 கோடி ரூபாய். 537 அறிவிப்புகளுக்கான மொத்தத் தொகை 2,40,000 கோடி ரூபாய். அதற்கான அறிவிப்புகள் இன்னும் செயல்படுத்தப்படவில்லை. சில அறிவிப்புகள் கைவிடப்பட்டன; சில அறிவிப்புகளுக்கு அரசாணைகூட வெளியிடப்படாமல் இருக்கின்றன. சில அறிவிப்புகளுக்கு கொஞ்சம் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சில அறிவிப்புகளுக்கு நிதி எதுவும் ஒதுக்கப்படவில்லை. இதில் ஒருசிலவற்றை மட்டும் கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன். 398 அறிவிப்புகள், மொத்த மதிப்பு 1,47,092 கோடி ரூபாய். இன்னும் Government Order-ரோ, Administrative sanction-ஓ வெளியிடவே இல்லை. 143 அறிவிப்புகளுக்கு 76,619 கோடி ரூபாய். இன்னும் ஒரு ரூபாய்கூட ஒதுக்கப்படவில்லை. அறிவிப்பு வெளியிடப்பட்டுவிட்டது, ஆனால் நிதி ஒதுக்கப்படவில்லை. 20 அறிவிப்புகளுக்கு 9,741 கோடி ரூபாய். அவற்றுக்கு இன்னும் orders-ஓ instructions-ஓ வெளியிடப்படவில்லை. இதில் இரண்டு, மூன்று உதாரணங்களை மட்டும் சொல்லி நான் என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–15

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி தாலுகாவில் ரூபாய் 24 ஆயிரம் கோடியில் 2X800 மெகா வாட் திறன் கொண்ட Ultra Mega Power Project உருவாக்கப்படும். இதனால், 2,400 மெகா வாட் மின்சாரம் கூடுதலாக வரும் என்று 1–9–2015 அன்று அறிவிக்கப்பட்டது. அறிவிக்கப்பட்டு 6 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. இன்னும் எந்த வேலையும் நடைபெறவில்லை.

அதேபோன்று, Pollution-ஐ பொறுத்தவரையில், நாமக்கல், சேலம், ஈரோடு மாவட்டங்களில் உள்ள 900 குறு மற்றும் சிறு Dyeing & bleaching units-ன், pollution effect-ஐ குறைப்பதற்காக 700 கோடி ரூபாய் செலவில் பொது சுத்திகரிப்பு நிலையம் உருவாக்கப்படும் என்று 2014 ஆம் ஆண்டு, 7 வருடங்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்டது. அதுவும் முடியவில்லை.

எதற்காக இவற்றையெல்லாம் சொல்கிறேன் என்றால், ஒரு ஜனநாயக நாட்டில் பின்பற்றப்பட வேண்டிய ஒரு மரபு, ஒரு விதிமுறை இருக்கிறது. அதற்குப் பெயர், வரவு-செலவுத் திட்டம், (நிதிநிலை அறிக்கை) அதை மாமன்றத்தில் சமர்ப்பித்து, மானியக் கோரிக்கைகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றி, அதனடிப்படையில், ஓர் அரசாங்கம் மேலாண்மை செய்ய வேண்டும்; இது ஜனநாயக நாட்டில் பின்பற்றப்பட வேண்டிய ஒரு மரபு ஆகும். ஆனால், ஒவ்வோராண்டும், 100 சதவிகிதம், 120 சதவிகிதம், 150 சதவிகிதம் என திட்டமிட்டதற்கு மேல் அறிவிக்கப்பட்டால், அவற்றையெல்லாம் நிறைவேற்றவே முடியாது என்பது தெளிவான உண்மை. அவ்வாறு அறிவிக்கப்படுவதனால் பல்வேறு பிரச்சினைகள் உருவாகின்றன. எனவே, இவற்றை முற்றிலும் கைவிட்டு, எதற்காக நிதி ஒதுக்கப்படுகிறதோ, அதற்காக மட்டும் அறிவிப்பு வெளியிட்டு அல்லது அறிவிப்பு வெளியிட்டவுடன் நிதியை உருவாக்குகிற வழிமுறைகளை நமக்கு வழிகாட்டியாக இருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்துவார்; அந்த வழியில் நாங்கள் அனைவரும் செல்வோம் என்று கூறிக்கொள்கிறேன்.

இதுவரை கிட்டத்தட்ட 10 வெட்டுத் தீர்மானங்களுக்கும் நான் பதிலளித்துள்ளேன் என்று கருதுகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் அளித்த வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு, 5 மானியக் கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தருமாறு நான் வேண்டி கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* (குறுக்கீடு) *என்ன?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்குப் பிறகு வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *இதற்கு மேலும் சந்தேகமா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், உட்காருங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.* (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒன்றுமில்லை. (குறுக்கீடு) அவருக்கு நான் பிறகு வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் பேசலாம்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொஞ்ச நேரம்தான் பேசுவேன். முக்கியமான விஷயத்தைப் பற்றித்தான் பேசப் போகிறேன். தற்போது சட்டமன்றத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் மூன்று கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். முதலாவதாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சம்பளத்தை உயர்த்த வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். (சிரிப்பு) நீங்கள் கோரிக்கை வைத்திருக்கிறீர்கள் என்று சொல்கிறேன். இரண்டாவதாக, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்படும் 3 கோடி ரூபாய் நிதியை முழுவதுமாக எங்கள் தொகுதிக்காகக் கொடுங்கள் என்று கேட்கிறீர்கள். இந்தக் கையில் கொடுத்து, இந்தக் கையில் வாங்கிவிடாதீர்கள் என்று கேட்கிறீர்கள் அல்லவா! மூன்றாவதாக, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை உயர்த்த வேண்டும் என்று கேட்டிருக்கிறீர்கள். (குறுக்கீடு) வந்துவிட்டேன். (சிரிப்பு) நான் எத்தனையோ வருடங்களாக இந்தச் சபையில் இருந்திருக்கிறேன். ஆனால், இந்த மானியக் கோரிக்கையில் நான் பேசியது இல்லை. ஏனென்றால், எதிர்க்கட்சியில் இருந்தபோது, எங்கள் கட்சியில் என்ன சொல்வார்கள்? 'யாரும் சம்பள உயர்வு வேண்டும் என்று கேட்கக் கூடாது' என்று சொல்வார்கள். நாங்களும் அதைப் பற்றி பேச மாட்டோம். ஆளுங்கட்சியாகிவிட்டோம் என்று வைத்துக்கொள்ளுங்கள், 'ஆளுங்கட்சியினர் சம்பள உயர்வு வேண்டும் என்று கேட்கக் கூடாது' என்று சொல்வார்கள். ஆகையினால், நான் என்ன செய்வேன் என்றால், ஒரு 10 பேரை கிளப்பி விட்டுவிடுவேன். (சிரிப்பு) அவர்களைப் பேச வைத்து, ஒருவழியாக அதைச் செய்ய வைத்துவிடுவோம். ஆனால், அதுபோன்று யாரையும் இன்றைக்கு நான் கிளப்பவில்லை. கிளப்பாமலேயே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன் அவர்கள், சம்பள உயர்வு வேண்டும் என்று கேட்டுவிட்டார். பாவம், அவர் புது MLA. அவருக்குத் தெரியாது. சம்பளத்தை உயர்த்தலாம், அது ஒன்றும் பிரச்சினை இல்லை. ஆனால், இந்த நேரத்தில் உயர்த்தினால் நன்றாக இருக்குமா என்பதை மட்டும் கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். நாடே

கொரோனாவில் பாதிக்கப்பட்டிருக்கிறது. பத்திரிகையை எடுத்துப் பார்த்தால், 'இன்றைக்கு கொரோனா பாதிப்பு அதிகரித்தது, இன்றைக்கு கொரோனா பாதிப்பு குறைந்தது, இன்றைக்கு 300 பேர் இறந்தார்கள், இன்றைக்கு 200 பேர் இறந்தார்கள்' என்று செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. மூன்றாவது அலை வேறு வரும் என்று சொல்கிறார்கள். ஆகையினால், இந்த நேரத்தில் நாம் சம்பளத்தை உயர்வு செய்தால், ஒரு மாதிரியாகப் பேசுவார்கள். கொடுப்பதை பற்றி எங்களுக்கு ஒன்றும் இல்லை; அது ரொம்ப சுலபம். ஆனால், உங்களுக்கே மனசாட்சி உறுத்தும் என்பதால்தான் நாங்கள் இந்த முறை வேண்டாம் என்று நினைக்கிறோம். இன்னும் ஒரு 6 மாதம் கழித்து, அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடர், வரும் மார்ச் மாதம் கூடும். அப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிச்சயமாகக் கொடுப்பார் என்ற நம்பிக்கையில் சொல்கிறேன். இது ஒன்று.

இரண்டாவதாக, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டிற்காக ரூபாய் 3 கோடி கொடுக்கிறோமே! இதை முழுவதும் எங்கள் தொகுதிக்காக செலவு செய்யக் கொடுங்கள் என்று கேட்கிறீர்கள். (சிரிப்பு) அதை 5 கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்கிறீர்கள். அதுவும் அதே மாதிரிதான். சில பேர் 4 கோடி ரூபாயாக உயர்த்த வேண்டும் என்றார்கள். நான் 5 கோடி ரூபாய் என்றே சொல்லிவிட்டேன். முடிந்தால் கொடுப்போம், இல்லையென்றால் 3 கோடி ரூபாயே கொடுக்கலாம். இந்த மூன்று கோடி ரூபாயில்கூட, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புவது என்னவென்றால், இந்த மூன்று கோடி ரூபாயை முழுவதுமாக எங்களுக்குக் கொடுக்க வேண்டும். தொகுதியில் எது எது முக்கியம் என்று பார்த்து நாங்கள் செலவு செய்யப்போகிறோம். இதையெல்லாம் உறுப்பினர்களா எடுத்துப் போகப்போகிறார்கள்? இல்லை. தொகுதிக்குத்தான் செய்யப்போகிறார்கள். சில திட்டங்களுக்கு அரசாங்கத்திடம் கேட்டால் கொடுக்கமாட்டேன் என்று சொல்வார்கள். அந்த நேரத்திற்கு உதவும் என்பதால் கேட்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் அதில் முடிவெடுக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–20

மூன்றாவது, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கான pension. அதுவும் கொடுக்கவேண்டுமென்பதில் நான் மிகவும்

முக்கியமானவன். யார் அடுத்த முன்னாள் உறுப்பினர் என்பதை யார் கண்டார்கள்? (சிரிப்பு) இன்றைக்கு இருப்போர் நாளைக்கு இல்லை. ஆகையினால், இப்போது சொல்லி வைத்தால் பின்னால் நமக்கு உதவாதா? ஆகையினால் என்னைக் கேட்டால் ரூ.10,000/– என்ன, ரூ.25,000, ரூ.50,000/– கூட கொடுக்கலாம். ஏனென்றால் பின்னால் உதவுமல்லவா? ஆனால், சொல்வது சுலபம், செய்வது கஷ்டம். நீங்களே அவர்களுக்கு 5,000/– ரூபாய் ஏற்றப்போகிறோம் என்று சொன்னீர்கள். ஆனால், செய்யவில்லை. ஏனென்றால், உங்களுக்குக் கையைக் கடித்துவிட்டது. அதனால், பேசாமல் விட்டுவிட்டீர்கள். ஆகையினால், 5,000/– ரூபாய் கூடுதலாகக் கொடுப்போம் என்று அவர்கள் ஆளுங்கட்சியாக இருந்தபோது சொன்னார்கள். ஆனால், அதை ஏற்றாமல் போய்விட்டார்கள். அவர்கள் எதையெதை சொல்லி செய்யவில்லையோ, அவற்றையெல்லாம் நீங்கள், பல திட்டங்களைச் செய்துகொண்டிருக்கிறீர்கள். ஆகையினால், இந்த இரண்டையும் மாண்புமிகு முதல்வருடைய பார்வைக்கே நான் விட்டுவிடுகிறேன். ஒன்று, தொகுதி மேம்பாடு, ரூ.3 கோடி சமாச்சாரம். இரண்டாவது, இந்த ரூ.5,000/– பென்ஷன் சமாச்சாரம். மூன்றாவது, நான் மாண்புமிகு முதலமைச்சரிடம் ஒன்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். முன்பெல்லாம், முதலமைச்சராக பக்தவத்சலம் அவர்கள் இருந்த காலத்திலெல்லாம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியத்தை ரூ.5,000/– உயர்த்துவதற்கான சட்டமுன்வடிவு வருகிறது. அதை நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி மேம்பாட்டு நிதியாக ரூ.3 கோடி வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதிலே அரசு சில norms–ஐ விதித்து, அவர்கள் கொஞ்சம் பணத்தை அரசுக்குச் செலுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, நான் இங்கே தெரிவிக்க விரும்புவது, ஏற்கெனவே வழங்கப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய அந்த 3 கோடி ரூபாய், முழுமையாக சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதியாக

வழங்கப்படவிருக்கிறது என்பதையும் மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.* (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *என்ன? அந்த 3 கோடி ரூபாயும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதிக்காக உங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதில் எந்தவிதமான* norms*–ம் கிடையாது,* without norms. *அரசாங்கமும் எதுவும் கேட்கமாட்டார்கள். அதற்குக் கொடு, இதற்குக் கொடு, சத்துணவுக்கு பணம் கட்டுங்கள், இதற்குக் பணம் கட்டுங்கள் என்று எதுவும் கேட்கமாட்டார்கள். எல்லாம் உங்கள் இஷ்டத்திற்குத்தான். கைதட்டினால் என்ன!* (மேசையைத் தட்டும் ஒலி) *பலத்த கை தட்டுங்கள் பார்க்கலாம்.* (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

ஆக, கடைசியாக இன்னும் ஒன்று கேட்க வேண்டும் என்பது எனது ரொம்ப நாள் விருப்பம். காமராஜரும், பக்தவத்சலமும் முதலமைச்சராக இருந்த காலத்தில் அவர்கள் ரோட்டில் வந்தார்களென்றால் ஒரு siren *ஒலிக்கும். அப்போது முதலமைச்சரின் வண்டி போகிறது என்று தெரிந்துகொள்ளலாம். ஆனால், கலைஞர் வந்தபோது அந்த சைரன், அந்த சங்கு ஊதவில்லை. கலைஞர் சொன்னார், 'ஊதுகிறவன் கடைசி காலத்தில் ஊதுவான்யா, இப்போதே ஏன் ஊதிக்கொண்டு போகிறீர்கள்' என்று சொல்லி அதை எடுத்துவிட்டார். ஆனால், முதலமைச்சரோ, அமைச்சர்களோ அந்த வண்டியில் போகும்போது, வண்டியின் மேல் பகுதியில் ஒரு* red light *எரியும். அந்த* red light *எரிவதைப் பார்த்தால் முதலமைச்சர் போவது தெரியும். ஆனால், சென்ற ஆட்சியில் அந்த* red light*–ஐ ஏன் எடுத்தார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கு உச்ச நீதிமன்றத்திலே ஒரு* ruling *போட்டு அதை எடுக்கச் சொல்லி அதை எடுத்துவிட்டார்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *அதை எடுத்துவிட்டார்கள். ஆனால், எங்களிடத்திலுள்ள அதிகாரிகள் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: D.S.P.-வரை வைத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: எங்கள் அதிகாரிகள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் சொல்கிறேன். என்கூட வரும் Chief Engineer வண்டியில் red light எரிகிறது. நான் போனேனென்றால், எனது வண்டியை security வண்டி என்று நினைத்துவிட்டு அவர்களுடைய வண்டிகளை முதலில் விட்டுவிடுகிறார்கள். (சிரிப்பு) இது என்ன நிலைமையென்று எனக்குப் புரியவில்லை. ஆகையினால், ஒன்று, அவர்களுடைய வண்டிகளிலும் அந்த red light-ஐ எடுத்துவிட வேண்டும். (சிரிப்பு) இல்லையென்றால் எங்களுக்கும் கொடுக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் முதலமைச்சர் செய்யவேண்டும்.

இன்றைய கோரிக்கை மீதான விவாதத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அந்த 5,000 ரூபாயை பென்ஷனில் சேர்த்துக் கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, 3 கோடி ரூபாயை நாம் கேட்டவண்ணம் தந்திருக்கிறார். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரக் கேட்டுவிடுங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு உறுப்பினர்களால் இங்கே கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் நீங்கள் பெருமகிழ்ச்சியுடன் வாபஸ் வாங்கிக்கொண்டு, திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை, இந்த demands-ஐ நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(இ) கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.190,67,69,000/–. மூலதனக் கணக்கில் ரூ.123,25,01,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.10,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஈ) கோரிக்கை எண் 38–பொதுத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 38–பொதுத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"பொதுத் துறை பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,060,15,51,000/–. மூலதனக் கணக்கில்

ரூ.2,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.6,50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(உ) கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.630,12,66,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஊ) கோரிக்கை எண் 1-மாநில சட்டமன்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 1-மாநில சட்டமன்றம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மாநில சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.76,78,03,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,00,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(எ) கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.46,38,26,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

(ஏ) கோரிக்கை எண் 16-நிதித் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 16-நிதித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,358,41,23,000/-, மூலதனக் கணக்கில் ரூ.620,00,01,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.126,56,53,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஐ) கோரிக்கை எண் 35-மனித வள மேலாண்மைத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 35-மனித வள மேலாண்மைத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மனித வள மேலாண்மைத் துறை பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.121,72,54,000/–, மூலதனக் கணக்கில் ரூ.5,87,27,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.50,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

(ஒ) கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.28,244,48,90,000/–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பிற்பகல் 1–30

9. அறிவிப்புகள்

(அ) பல்கலைக்கழக அமைப்புகளில் அலுவல்சாரா உறுப்பினர்களாகப் பணிபுரிய சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பின்வரும் பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு, மேலாண்மைக் குழுமம் மற்றும் கல்விக் குழு ஆகியவற்றில் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாகப் பணிபுரிய மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களிடமிருந்து முறையாக வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

அழகப்பா பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை, திரு. செ. முருகேசன், பாரதியார் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை, திரு. ஈ.ஆர். ஈஸ்வரன், திரு. ஆர். கணேஷ், பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை, திரு. ரா. இளங்கோ, திரு. ப. அப்துல் சமது, மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை, திரு. ஆ. வெங்கடேசன், திரு. மு. பூமிநாதன், திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ், திரு. வி.வி. ராஜன் செல்லப்பா, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை, திரு. எம்.சி. சண்முகையா, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், பெரியார் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை, திரு. ட்டி. இராமச்சந்திரன், திரு. இரா. அருள், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை, டாக்டர் நா. எழிலன், திரு. க. கணபதி, தமிழ் பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை, திரு.

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

டி.கே.ஜி. நீலமேகம், திரு. ம. பிரபாகரன், சென்னை பல்கலைக்கழகம் ஆட்சிமன்றப் பேரவை, திரு. அ. வெற்றிஅழகன், திரு. வி.ஜி. இராஜேந்திரன், திரு. ஜோசப் சாமுவேல், திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி, திரு. கோ. செந்தில்குமார், திருமதி கு. மரகதம் குமரவேல், அண்ணா பல்கலைக்கழகம் ஆட்சிக் குழு, திரு. உதயநிதி ஸ்டாலின், (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணாமலை பல்கலைக்கழகம் ஆட்சிக் குழு, திரு. ம. சிந்தனை செல்வன், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் ஆட்சிக் குழு, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மேலாண்மைக் குழுமம், திரு. தி. வேல்முருகன், தமிழ்நாடு ஜெ ஜெயலலிதா மீன் வளப் பல்கலைக்கழகம் மேலாண்மைக் குழுமம், திரு. வி.பி. நாகைமாலி, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மேலாண்மைக் குழுமம், திரு. A.J. மணிக்கண்ணன் மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் கல்விக் குழு, திரு. A.P. நந்தகுமார், திரு. க.சொ.க. கண்ணன்.

தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்புத்தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்புத்தாள் அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கின்றேன்.

மேற்குறிப்பிட்டுள்ள பல்கலைக்கழகங்களின் அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு காலங்களாகும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்நாளோடு அப்பல்கலைக்கழகத்தின் அமைப்பில் அவர் வகித்துவரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2021 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

தொடர்ச்சி

(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

10. அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதிகள் 30, 130, 132 ஆகியவற்றைத் தளர்த்தக் கோரும் அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"சட்டமன்றப் பேரவை விதிகள் 30, 130 மற்றும் 132 ஆகியவற்றைத் தளர்த்தி, பேரவையில் இன்று அறிமுகம் செய்யப்பட்ட 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2021), 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2021), 2021 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2021), 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2021), 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2021) மற்றும் 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2021) ஆகியவை இன்றே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 1–35

11. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2021), மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2021)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 13-9-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

9. அறிவிப்புகள்–*தொடர்ச்சி*

(இ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, பேரவையில் ஆய்வு செய்ய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

11. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)–*தொடர்ச்சி*

(ஆ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2021), மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2021)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 13-9-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/ 2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(இ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2021), மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2021)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

பிற்பகல் 1–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 6 வரை, திருத்தங்கள் இல்லை.

@ 9-9-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

பிரிவுகள் 2 முதல் 6 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2021 செப்டம்பர் 13

(ஈ) பாரதியார் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2021), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2021)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 13-9-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"*2021 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்*"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(உ) தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத் தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) நீக்கறவு சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத் தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்)*

நீக்கறவு சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2021), மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத் தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) நீக்கறவு சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2021)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள். சுருக்கமாக இந்தச் சட்டமுன்வடிவு பற்றி ஒரு வரியில் சொல்லுங்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களாட்சித் தத்துவத்தின் நான்கு தூண்களில் ஒன்றானது நிருவாகம். நிருவாகத்தின் அடிப்படையில் விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்ட அம்மாவின் அரசு, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியாரின் நல்லாட்சியில், 2019 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத் தொழில் மற்றும் சேவைகள் சட்டம் கொண்டுவரப்பட்டது. தமிழகத்தில் கரும்பு, பருத்தி, மூலிகைப் பயிர்கள் பயிரிடுவது, இறைச்சி கோழி உற்பத்தி போன்றவை பல ஆண்டுகளாக ஒப்பந்த முறையில் நடக்கின்றன. எனினும், ஒப்பந்த சாகுபடியில் பங்குபெறும் விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க சட்டமில்லை. இதனைக் கருத்தில்கொண்டுதான் மாண்புமிகு அம்மாவின் அரசில் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணையம் மற்றும் சேவைகள் சட்டம், 2019 இம்மாமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. இச்சட்டம் அரசிதழில் வெளியாகியுள்ளது. தேசிய அளவில் ஒப்பந்த சாகுபடிக்கென்று பிரத்யேகமாக அம்மாவின்

@ 28-8-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2021 செப்டம்பர் 13] [திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி]

அரசு முதன்முதலாக தனிச் சட்டத்தை வடிவமைத்தது. இச்சட்டத்தின்படி நெல் உள்ளிட்ட தானிய வகைகள், பருப்பு வகைகள், எண்ணெய்வித்துக்கள், நார் வகைகள், காய், கனிகள், நறுமணப் பொருட்கள், கால்நடை உற்பத்திப் பொருட்கள், வனப் பொருட்கள், பட்டுக் கூடு, பட்டு இழை, கரும்பு உள்ளிட்ட 110 பொருட்களை ஒப்பந்த சாகுபடியில் ஒப்பந்தம் செய்து விளை பொருட்களை விற்பனை செய்ய வழிவகை செய்யப்பட்டது. இந்தச் சட்டத்தின்படி கொள்முதலாளர் அல்லது உணவு பதப்படுத்தும் நிறுவனத்துடன் விவசாயிகள் ஒப்பந்தம் செய்யும்போது, அன்றைய தினத்தின் விலையையே பொருட்களைப் பரிமாற்றம் செய்யும்போது நிர்ணயிக்கும் வகையில் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. அதிக விளைச்சல் காரணமாக விலை வீழ்ச்சி ஏற்படும் நேரங்களில் விவசாயிகள் பெரும் இழப்புக்கு ஆளாகின்றனர்.

பிற்பகல் 1–45

இந்த புதிய ஒப்பந்தச் சட்டத்தால் விவசாயிகளுக்கு எவ்வித பொருள் அல்லது பண இழப்பும் ஏற்படாது. விரும்புவோர் ஒப்பந்த சாகுபடி முறையில் சேரலாம். இச்சட்டத்தால் தரிசு நிலங்கள், பயனற்ற நிலங்கள், விவசாயம் செய்யப்படாத நிலங்கள் பயன்பாட்டுக்கு வரும். விலை வீழ்ச்சியடையும் காலங்களில் விவசாயிகளைக் காப்பாற்ற இச்சட்டம் உதவும். பயிர்க் காப்பீடு, அரசு சலுகைகளையும் பெறலாம்.

மண்ணுக்கு மருதாணி பூசி, நிலத்தில் மரகதப் போர்வை போர்த்தி அழகு பார்க்கும் விவசாயிகளின் நலனுக்காக இந்த நீக்கறவுச் சட்டமுன்வடிவை எதிர்ப்பதோடு, இதனை மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அரசை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கேட்டுக்கொள்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தால், ஒப்பந்தத்தில்—விவசாயிகளிடமிருந்து தேவைக்காக அதிகக் கட்டணம் வசூலிக்கப்படும். ஏனென்றால், அதிகக் கட்டணம் வசூலிக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்படும். நிறுவனத்திடமிருந்து மட்டும்தான் இடுபொருட்கள் பெறவேண்டும் என்ற கட்டாயம்

[திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்] [2021 செப்டம்பர் 13

ஏற்படும். தரத்தைக் காரணம் காட்டி விலையைக் குறைக்கலாம். விவசாயிகள் கொண்டுவந்த பொருட்களின் தரத்தைக் காட்டி விலையைக் குறைக்கக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும். அதேபோல, விலை குறைவான காலங்களில் கொள்முதல் செய்யாமல் தவிர்க்கலாம். இந்தச் சட்டம் வந்தது என்றால், விலை குறையும்போது, அதனைக் கொள்முதல் செய்யாமலேயே தவிர்க்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும். அதேபோன்று நீதிமன்றங்களை அணுகுவதற்கு வழி கிடையாது. எனவே, விவசாயிகள் தங்களுடைய குறைகளை நீதிமன்றங்களின் மூலமாக தீர்த்துக்கொள்ள, கேட்கக்கூடிய வாய்ப்பு மறுக்கப்படுகிறது. விளைபொருட்களின் விலைக்கு எந்தவித உத்தரவாதமும் கிடையாது. இச்சட்டம், கொள்முதல் செய்யும் நபர்களுக்கு அல்லது நிறுவனங்களுக்கு பாதுகாப்பாக மட்டுமேதான் உள்ளது. அதனால்தான், இந்தச் சட்டத்தை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் மற்றும் கால்நடை ஒப்பந்தப் பண்ணைத் தொழில் மற்றும் சேவைகள் (ஊக்குவிப்பு மற்றும் எளிதாக்குதல்) நீக்கறவுச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஊ) தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல்

(முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2021), மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2021)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்', ஆம். வேளாண்மையைச் செய்து, வாழ்கின்றதில் கிடைக்கின்ற சிறப்பு வேறு எந்தத் தொழிலிலும் இல்லையென்ற ஔவை பிராட்டியாரின் கூற்றினை முழுமைப் பெறச் செய்ய வேண்டுமானால், பல்வேறு தடைகளைக் கடந்துதான் விவசாயிகள் அந்தச் சிறப்பைப் பெற முடியும் என்பதை நம்மில் யாரும் மறுக்க முடியாது. அவ்வாறு உள்ள தடைகளில் விளைபொருள் விற்பனை என்பது ஒரு முக்கிய காரணியாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 'நமக்கு இன்னலும், இடையூறும் இருக்கத்தான் செய்யும். ஆனால், நமது உழைப்பு ஒருநாளும் வீண்போகாது' என்றார். அண்ணா அவர்களின் எண்ணக் குவியல்களை உண்மையாக்கும் விதமாக விளைபொருட்களின் விலை ஏற்ற இறக்கங்களினால் விவசாயிகள் பாதிப்படையாமல் இருக்க சரியான விலை விவரம், சந்தை நிலவரம் ஆகியவற்றை விவசாயிகள் அறியவும், சேமிப்பைப் பயன்படுத்தி, இன்னல்களைக் கடந்து, இனிய வாழ்வை விவசாயிகள் பெறவேண்டும் என்ற உன்னத உந்துதலின் வெளிப்பாடுதான் வேளாண் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்துதல் துறை உருவாக்கப்பட்டதன்

@ 8-9-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2021 செப்டம்பர் 13] [திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி]

அடிப்படையாகும். வேளாண்மை விற்பனைத் துறை சட்டம், 1987, பிரிவு 10, துணைப் பிரிவு 2-ன்கீழ் உருவானதுதான் வேளாண்மை விற்பனைக் குழு. இந்தக் குழு, விவசாயிகளின் இன்னல்களை முற்றிலும் அறிந்தவர்களைக்கொண்டு செயல்படுவதினால்தான் விவசாயிகளுக்கு உண்மையான பலன்கள் சென்றடையும் என்பதன் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. 16 உறுப்பினர்களாக குறு, சிறு விவசாயிகள், அந்தந்தப் பகுதிகளில் அறிவிக்கை செய்யப்பட்ட விவசாய விளைபொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய உற்பத்தியாளர்கள், அரசு அலுவலர்கள் என்று, இந்தக் குழு அனைவரையும் உள்ளடக்கியதாகச் செயல்படும், ஒரு குழுவாக உருவாக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லுங்கள்.

பிற்பகல் 1-50

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: அதனடிப்படையில்தான், 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்விதமாக, இந்தக் குழு, ஜனநாயக அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டு, செயல்பட்டு வந்தது. மேலும், இவ்வாறு அமைக்கப்பட்ட இக்குழு, சிறப்பாகத் தொடங்கி செயல்பட்டுவந்த காலத்தில், ஜனநாயக மரபை மீறி, இந்தக் குழுவானது, நடப்பு ஆண்டான 2021 ஆம் ஆண்டில், ஜூலை மாதம் 23 ஆம் நாளன்று கலைக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலானது, ஜனநாயக நடைமுறையை மீறி செயல்படும் செயல் மட்டுமின்றி, விவசாயிகளின் நலனைப் பாதிக்கக்கூடிய ஒரு முடிவாகும். எனவே, விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க வேண்டிய கடமை கொண்ட அரசு, ஜனநாயக முறைப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசு, ஜனநாயக முறைப்படி உருவாக்கப்பட்ட இந்த வேளாண்மைக் குழுவினைக் கலைத்துவிட்டு, அதற்கான சட்டமுன்வடிவினை இந்த அவையில் நிறைவேற்ற முயல்வது, ஜனநாயகத்திற்கு எதிரானதாகும் என்பதால், இந்தச் சட்டமுன்வடிவை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்ப்பதோடு, இதனை மீண்டும் மறு பரிசீலனை செய்ய வேண்டும் என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக, அரசைக் கேட்டுக்கொண்டு, ‘உயிர்களுக்கு உணவளிப்பது, உழவர்களின் கையில், உழவர்களை வாழவைப்பது, ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் கையில்’ என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரையை முடித்துவிட்டார்கள். நீங்கள் உரையாற்றலாம்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு இதே குழு அப்போதும் இருந்தது. அது, எங்களுடைய அரசால் நியமிக்கப்பட்டதென்று அப்போதே அதன் காலம் முடிவதற்கு முன்பாகவே, இதே எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள், 2011 ஆம் ஆண்டில், அக்குழுவைக் கலைத்தார்கள். கலைத்தவர்கள் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுகின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 9 ஆண்டுக்காலமாக குழு நியமிக்கப்படாமல், கடைசியில் போகிறபோக்கில், 30-12-2020-லிருந்து, 26-2-2021 வரை, 24 குழு உறுப்பினர்களை நியமித்தார்கள். ஒரே காலகட்டமாக போடாமல், படிப்படியாக நியமித்தார்கள். 24 பேர்தான் பொறுப்பு. அதிலும் இரண்டு குழு உறுப்பினர்கள் நியமிக்கப்படவில்லை. இதுவரை நியமிக்கப்படவில்லை. இன்னும் சொல்லப்போனால், இந்த ஆட்சி மாற்றத்திற்குப் பிறகு, அவர்களுடைய நடவடிக்கைகள் சரியாக இல்லாத காரணத்தினால், திரும்பப் பெறும்வகையில், இந்தக் குழுவைக் கலைத்துவிட்டு, தனி அலுவலர் பதவி வேண்டுமென்று கோரிக்கையை அவையின்முன்பு வைக்கின்றோம். அதே ஆட்சியில்தான் கிட்டத்தட்ட 9 வருடங்கள் தனி அலுவலர் ஆட்சி புரிந்தார்கள். கடந்த 10 ஆண்டுக்காலமாக, இந்தக் குழுவையே அமைக்காமல், தனி அலுவலரை வைத்துக்கொண்டே 6 மாதங்கள், 6 மாதங்களாக வைத்துக்கொண்டு, அந்த நிருவாகத்தை நடத்தினார்கள். ஆட்சி முடிவதற்கு முன்புதான் குழுவை நியமித்திருக்கின்றார்கள். எனவேதான், நாங்கள் இந்தக் குழுவைக் கலைத்துவிட்டு, புதிய குழுவை நியமிக்க இருக்கின்றோம். அதற்கு வசதியாக தனி அலுவலரின் பதவிக் காலத்தை, 30–11–2020 முதல் 29–11–2021 வரை ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிப்பது அவசியமாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1–55

(எ) தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2021), மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2021)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 8-9-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நிலம் கையகப்படுத்துதல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுச் (இரண்டாம் திருத்தம்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுச் (இரண்டாம் திருத்தம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2021), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுச் (இரண்டாம் திருத்தம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2021)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 7-9-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுச் (இரண்டாம் திருத்தம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஐ) தமிழ்நாடு நீக்கறவு செய்தல் (இரண்டாம்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் (இரண்டாம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2021), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் (இரண்டாம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2021)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

@ 9-9-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பிரிவுகள் 2, 3 மற்றும் இணைப்புப் பட்டியல் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் (இரண்டாம்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[2021 செப்டம்பர் 13

(ஒ) தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2021), மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2021)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 9-9-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–00

பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(ஓ) தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2021), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2021)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைய தமிழகத்தை ஆளும் திராவிட முன்னேற்றக் கழக அரசு அங்கம் வகித்த காங்கிரஸ் கூட்டணி ஆட்சிக்காலத்தில், மத்திய அரசினால் 21–12–2010–ல் நீட் தேர்வு குறித்து அறிவிப்பு வெளியிடப்பட்டது. அப்போது, திரு. குலாம் நபி ஆசாத் அவர்கள், மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக இருந்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய திரு. காந்தி செல்வன் அவர்கள், சுகாதாரத் துறையின் இணை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார். 2011 ஆம் ஆண்டில் அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தது முதல் 2016 ஆம் ஆண்டு வரை மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச

@ 13-9-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2021 செப்டம்பர் 13] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

நீதிமன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்தி, தமிழகத்திற்கு நீட் தேர்விலிருந்து விலக்கு பெற்றார்கள். உச்ச நீதிமன்றம், (குறுக்குடு) இது முக்கியமானது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன். நீங்கள் சொன்னதுதான். அந்தச் சட்டம் வந்தவுடனேயே நீங்களும் ஆதரவு தெரிவித்து மாமன்றத்தில் ஒரு சட்டம் கொண்டு வந்து, ஜனாதிபதி ஒப்புதல் பெற்று, அம்மையார் இருக்கிற வரை, அது இல்லை. அதையும் சேர்த்து பதிவு செய்துவிடுங்கள்.* (குறுக்கீடு)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொல்வதை நீங்கள் முழுமையாகச் சொல்லியிருக்கிறீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. உங்களுக்காகத்தான் சொன்னேன்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *தயவுசெய்து நீங்கள் நடுநிலையோடு இருக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நடுநிலையோடுதான் உங்களுக்காகச் சொல்கிறேன்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்கள் சொல்கிற பதிலைத்தான் நீங்கள் சொல்கிறீர்கள். நீங்கள் நடுநிலையோடு இருக்க வேண்டும். நீங்களே பதில் சொல்லிவிட்டால் அமைச்சர்களுக்கு வேலையில்லாமல் போய்விடும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு* gap *இருக்கிறது. அதை நிரப்பி விடுங்கள் என்பதற்காகச் சொன்னேன்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றம் 9–5–2016–ல் நீட் தேர்வின் மூலமாகத்தான் மருத்துவ மாணவர்களின் சேர்க்கை நடைபெற வேண்டுமென்று தீர்ப்பளித்துள்ளது. அம்மாவின் அரசால் தமிழகத்திற்கு நீட் தேர்விலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று 2017 ஆம் ஆண்டு சட்டசபையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, சட்டமுன்வடிவு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. ஆனால், மத்திய அரசு அதற்கான ஒப்புதலை*

வழங்கவில்லை. மசோதாவிற்கு ஒப்புதல் வரும் வரை 85 விழுக்காடு தமிழகப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கும், 15 விழுக்காடு மத்திய-மாநில பள்ளிகளில் படித்த மாணவர்களுக்குமென மக்கள் நல்வாழ்வுத் துறை, G.O. No. 233, நாள் 22-6-2017-ல் அரசாணை வெளியிட்டது. இந்த அரசாணை 14-7-2017 அன்று சென்னை உயர் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது. மேலும், உச்ச நீதிமன்றமும் நிராகரித்து உத்தரவு வழங்கியது. இந்தச் சூழ்நிலையில் ஒரு வழக்கறிஞர் குறிப்பிட்டதை நான் இங்கே, இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். 'இனி யாராலும், இந்தியாவில் நீட் தேர்வை ஒழிக்க முடியாது' என்று இதற்காக வாதாடிய வழக்கறிஞர் பேட்டி அளித்துள்ளார். அந்தச் செய்தி எல்லா ஊடகங்களிலும் வந்தது.

Covid 2019-னைத் தொடர்ந்து தேசிய நுழைவு மற்றும் தகுதித் தேர்வினை 2020-2021 ஆம் கல்வியாண்டிற்கு இரத்து செய்து, 12 ஆம் வகுப்பில் பெற்ற மதிப்பெண் அடிப்படையில் மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் சேர்க்கையினைக் கொண்டு வரும் வகையில் மருத்துவக் கழகச் சட்டம், 1956 மற்றும் பல் மருத்துவச் சட்டம், 1948 மற்றும் அதனுடன் தொடர்புடைய இதரச் சட்டங்களில் தொடர்புடைய பிரிவுகளில் உரிய திருத்தங்களை மேற்கொள்ள ஓர் அவசரச் சட்டத்தினை உருவாக்கித் தர வேண்டி மாண்புமிகு பாரதப் பிரதமர் மற்றும் மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு என் தலைமையிலான அம்மாவின் அரசு 8-7-2018 அன்று கடிதம் அனுப்பியது. மேலும், 25-8-2020-ல் நடைபெற்ற மாநில சுகாதாரத் துறையின் செயலாளர்களுக்கான காணொளி கூட்டத்தின்மூலம் தமிழக அரசின் மேற்கூறிய நிலைப்பாடு மீண்டும் எடுத்துரைக்கப்பட்டது. 2016-ல் நீட் தேர்விலிருந்து ஓராண்டுக்காலம் விலக்கு கேட்டு அனுமதி பெற்றார் மாண்புமிகு அம்மா அவர்கள். அதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டிற்கு நீட் தேர்விலிருந்து நிரந்தர விலக்கு கேட்டு மத்திய அரசிடம், அம்மாவின் அரசு தொடர்ந்து வலியுறுத்தி வந்தது.

பிற்பகல் 2-05

2019-ல் மருத்துவம் பயில, அரசுப் பள்ளிகளில் பயின்ற வெறும் ஆறு மாணவர்கள் மட்டுமே தேர்வு பெற்றனர். இந்த நிலையை மாற்றிட வேண்டுமென்று அம்மாவின் அரசு உறுதிபூண்டது. அன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவர்களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் கோரிக்கை வைக்கவில்லை.

பொது மக்களும் கோரிக்கை வைக்கவில்லை. இந்தநிலையில், அரசுப் பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு 7.5 சதவிகிதம் உள்ஒதுக்கீடு சட்டமுன்வடிவை அம்மா அவர்களின் அரசு கொண்டுவந்து நிறைவேற்றி அதனை அமல்படுத்தியது. (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் ஏழையெளிய, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட சுமார் 435 மாணவர்களின் மருத்துவராகும் கனவு இன்றைக்கு நனவாக்கப்பட்டுள்ளது. பல் மருத்துவர்கள் ஆகும் கனவும் நனவாக்கப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்லாமல், அவர்களின் மருத்துவக் கல்விக் கட்டணத்தை அரசாங்கமே ஏற்றுக்கொண்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) நீட் தேர்வை அம்மா அவர்களின் அரசு கடுமையாக எதிர்த்த போதிலும், தமிழக அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களைத் தயார்படுத்தும் வகையில் பாடத் திட்டத்தினை மாற்றியமைத்ததோடு, மாவட்டந்தோறும் சிறந்த வல்லுநர்களைக் கொண்டு நீட் தேர்வுக்கு சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு நம்முடைய மாணவர்கள் நீட் தேர்விலே கலந்துகொண்டு போட்டித் தேர்வில் அதிக மதிப்பெண்களைப் பெற்று இன்றைக்கு மருத்துவர்களாக, பல் மருத்துவர்களாக வருவதற்கு அம்மா அவர்களின் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதுபோல், 2011 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி முடிவுக்கு வந்தபோது 1,945 பேர்களுக்குத்தான், இடம் அன்றையதினம் இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்த காரணத்தினாலே 11 புதிய மருத்துவக் கல்லூரிகள் துவக்கப்பட்டன. அத்தோடு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோதும் பல மருத்துவக் கல்லூரிகளைத் துவக்கினார்கள். மருத்துவக் கல்லூரிகளில் இடங்கள் அதிகரிக்கப்பட்டன. அதன்மூலமாக சுமார் 5,200 இடங்களில் இன்றைக்கு மருத்துவ மாணவர்கள் சேர்ந்து படிக்கின்ற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த பத்தாண்டு காலத்தில் 2011–லிருந்து 2021 வரை மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக சுமார் 3,255 பேர் புதிதாக மருத்துவம் மற்றும் பல் மருத்துவப் படிப்பில் சேர்ந்து படிக்கும் வாய்ப்பை மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு உருவாக்கித் தந்துள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தற்போதைய திராவிட முன்னேற்றக் கழக அரசு, ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. ஏ.கே. ராஜன் அவர்கள் தலைமையில் நீட் தேர்வினால் ஏற்படக்கூடிய பின் விளைவுகள் குறித்து அறிய

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [2021 செப்டம்பர் 13

அமைத்த குழு உச்ச நீதிமன்றத்தின் வரம்புக்கு எதிராக அமைக்கப்பட்டுள்ளது என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கிற்கு பதில் மனு தாக்கல் செய்த திராவிட முன்னேற்றக் கழக அரசு, நீட் தேர்வினால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றி மட்டுமே இந்தக் குழு ஆராயும் என்றும், இந்தக் குழுவின் பரிந்துரை நீட் தேர்வு நடைபெறுவதற்கு எந்தவிதமான இடையூறும், பாதிப்பும் ஏற்படுத்தாது என்றும், உச்ச நீதிமன்ற உத்தரவுக்கு முரணாகவோ, மத்திய அரசின் சட்டங்களுக்கு எதிராகவோ இந்தக் குழு அமைக்கப்படவில்லை என்றும் உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

மேலும், இது அரசின் கொள்கை முடிவு, இதற்கு எதிராக யாரும் மனு தாக்கல் செய்யமுடியாது என்றும், இந்தக் குழு அமைக்கப்பட்டதால், அந்த மனுதாரர் எந்தவிதத்திலும் பாதிக்கப்படவில்லை என்றும் தெரிவித்து, மாண்புமிகு உயர் நீதிமன்ற நீதிபதிகள் அளித்த 14 பக்கத் தீர்ப்பில், இந்த அரசு தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில் உள்ள வாசகங்களை அப்படியே குறிப்பிட்டு, குழு அமைத்தது அரசின் கொள்கை முடிவு என்பதற்காக இந்த மனுவை தள்ளுபடி செய்கிறோம் என்றும் கூறியுள்ளது. இதுதவிர, இந்தக் குழு நீட் தேர்வை இரத்து செய்ய அமைக்கப்பட்டுள்ளது என்று எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை. ஓய்வுபெற்ற நீதியரசர் மரியாதைக்குரிய திரு. ஏ.கே. ராஜன் குழுவின் பரிந்துரையைச் செயல்படுத்துவதன்மூலம் நீட் தேர்வு இரத்து செய்யப்படும் என்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பதில் மனுவில் தி.மு.க. அரசு குறிப்பிடவில்லை.

நான் நீட் தேர்வு குறித்து, காலையில், அவசர முக்கியத்துவம், வாய்ந்த ஒரு நிகழ்வில் பேசும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில கருத்துகளைத் தெரிவித்தார். இன்று நீட் சம்பந்தமாக சட்டமன்றத்தில் தீர்மானம் ஒன்றை அரசு தாக்கல் செய்யவுள்ளதாகவும், அப்போது நீங்கள் கொண்டுவந்த இலட்சணத்தைப் பாருங்கள். நாங்கள் கொண்டுவரும் சட்டமுன்வடிவைப் பாருங்கள் என்று கூறினார். நீங்கள் கொண்டுவந்த இலட்சணத்தையும் நாங்கள் பார்த்தோம். நாங்கள் கொண்டுவந்த அதே சட்டமுன்வடிவு. (மேசையைத் தட்டும் ஒலி) List–III இல் entry 25 என்ற பிரிவின்கீழ்தான் இச்சட்டமுன்வடிவையும் கொண்டுவந்துள்ளீர்கள். கூடுதலாக ஓய்வுபெற்ற நீதியரசர் ராஜன் கமிட்டியின் பரிந்துரை பற்றி குறிப்பிட்டுள்ளீர்கள். நேற்று மத்திய

2021 செப்டம்பர் 13] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

அரசு கொண்டுவந்த சட்டத்தை எதிர்த்து மாநில அரசு சட்டம் இயற்றமுடியுமா? இது ஒரு கேள்விக்குறியாக உள்ளது. பல்வேறு வழக்கறிஞர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும். ஏற்கெனவே உச்ச நீதிமன்றம் நீட் சம்பந்தமான தீர்ப்பையும் வழங்கியுள்ளது என்பதையும் அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். தமிழ்நாட்டு மக்களின் நன்மைக்காக, முன்னேற்றத்திற்காக அரசு கொண்டுவரும் நல்ல பல சட்டங்களை அம்மாவினுடைய அரசு வரவேற்கும். அதனால், தற்போது நீட் சம்பந்தமாக இந்த அரசு கொண்டுவரும் சட்டமுன்வடிவை வரவேற்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீட் தேர்வு குறித்து கொண்டுவந்துள்ள அரசின் தீர்மானத்தை வரவேற்று அமர்ந்துள்ளீர்கள். நன்றி. நன்றி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் சம்பந்தமாகக் கொண்டுவந்துள்ள இந்த மசோதாவினை வரவேற்பதாக நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உள்ளபடியே அதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே, ஜல்லிக்கட்டு தீர்மானம் வந்தபோதும் தி.மு.க. எதிர்க்கட்சியாக இருந்தாலும், அரசியல் பார்க்காமல் நாங்களும் ஆதரித்தோம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல 'நீட்' தேர்வு தொடர்பாக கடந்த ஆட்சியில் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.க. அப்போதே வரவேற்றிருக்கிறது. நீங்கள் வெளிநடப்பு செய்த நேரத்திலே, இந்த நீட் பிரச்சினை தொடர்பாக நான் பேச ஆரம்பித்தேன். அப்போது நீங்கள் வெளிநடப்பு செய்த காரணத்தினாலே, இங்கேயிருந்து நீங்கள் கேட்க முடியாவிட்டாலும், நான் என்ன பேசினேன் என்பதை வெளியிலே போய் கேட்டுத் தெரிந்துகொண்டீர்கள். அதற்கும் மகிழ்ச்சி; என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பிற்பகல் 2–10

நான் கேட்கிற ஒரே கேள்வி, நீட் பிரச்சினையைப் பொறுத்தவரைக்கும், இந்தச் சட்டமன்றத்திலே இரண்டு

மசோதாக்களை நிறைவேற்றி, அரசின் மூலமாக நாம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தோம். அதை அவர்கள் அப்போது திருப்பியனுப்பி இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால், அந்தத் தகவலை ஏன் சட்டமன்றத்திலே அன்றைக்கு இருந்த அ.தி.மு.க. ஆட்சி சொல்லவில்லை? (மேசையைத் தட்டும் ஒலி) என்பதுதான் என்னுடைய கேள்வி. இருந்தாலும் அதைப்பற்றியெல்லாம் பேசி, பிரச்சினையை உருவாக்குவதற்கு நான் தயாராக இல்லை. ஏனென்றால், மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் தற்கொலை செய்து கொண்டு மாளக்கூடிய ஒரு கொடுமை நடந்து கொண்டிருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்துவதற்காக நல்ல நோக்கத்தோடு ஒருங்கிணைந்து இந்த அவையில் இருக்கக்கூடிய எல்லாக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலே, இந்தத் தீர்மானத்தை நீங்கள் தயவுகூர்ந்து, வரவேற்று இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று மீண்டும் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள், சுருக்கமாக ஒரு வரியில் சொல்லுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை எப்படி சுருக்கமாகச் சொல்ல முடியும்? அவர் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து, நான் சொல்கின்றேன, NEET-ஐப் பற்றி நிறைய பதிவுகள் இருக்கின்றன.

திரு. கு. செல்வபெருந்தகை: ஒரு நிமிடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதனால் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: 'காங்கிரஸ் அரசாங்கத்தால் இது கொண்டு வரப்பட்டது; காந்தி செல்வனில் ஆரம்பித்து, குலாம் நபி ஆசாத் வரைக்கும்' சொல்லி முடித்திருக்கிறார். இந்த அவையில் இது யாரால் கொண்டுவரப்பட்டது; எப்படி கொண்டு வரப்பட்டது; யாருக்கு எதிராக கொண்டு வரப்பட்டது; என்பதை நாங்கள் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கின்றோம். ஆகையால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், சிறிது மணித் துளிகள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லுங்கள்.

2021 செப்டம்பர் 13]

திரு. கு. செல்வபெருந்தகை: *நான் சுருக்கமாகச் சொல்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் அரசு எப்படியிருக்க வேண்டுமென்றால், ஆங்கிலேய பேராசிரியர் சொல்கின்றார். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அதன் உள்ளுக்குள்ளே போகாதீர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *சரி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களே, 'மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், வரவேற்கிறேன் என்று, சொல்லிவிட்ட பிறகு, மீண்டும் அதற்குள் நுழைந்து விவகாரத்தை நான் வளர்க்க விரும்பவில்லை. நல்ல முடிவோடு நிறைவேற்றித் தாருங்கள்' என்று கேட்டார்கள். ஆனால், நீங்கள் இப்போது மீண்டும் அதையே திரும்ப யாரால் கொண்டு வரப்பட்டது என்று கேட்டால், அதற்குப் பதில் சொல்வார்கள். மீண்டும் பிரச்சினை வரும். ஒரு சுமூக முடிவு வரும்போது, நீங்கள் யார் கொண்டு வந்தார்கள் என்று பேசி, என்ன ஆகப் போகிறது இப்போது? ஒன்றுமில்லை; ஆகையால், நீங்களும் சேர்ந்து ஆதரியுங்கள், அவ்வளவுதான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதை ஆதரிக்கிறேன் என்று மட்டும் சொல்லுங்கள். இது வரவேற்கத்தக்க விஷயம்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஆதரிக்கின்றோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆளுங்கட்சி, பிரதான எதிர்க்கட்சி இரண்டும். . .*

திரு. கு. செல்வபெருந்தகை: *நாங்கள் ஆதரிக்கின்றோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி.*

திரு. கு. செல்வபெருந்தகை: *அவர் ஒரு குற்றச்சாட்டு வைத்திருக்கிறார். அந்தக் குற்றச்சாட்டிற்குப் பதில் சொல்ல வேண்டாமா! இந்த அவையில் அந்தக் குற்றச்சாட்டு பதியப்பட்டிருக்கின்றது. நான் சொல்கின்றேன். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், ஒன்றைக் கேட்டுவிட்டு பேசுங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்லவில்லை. அதில் பேசவேண்டுமென்றால் 100 விஷயங்கள் பேசலாம். எல்லோருக்கும் தெரியும். உங்களுக்கு மட்டுமில்லை. இந்த அவையில் நிறைய பேருக்குத் தெரியும். அதனால் தயவுசெய்து, காலத்தின் அருமையைக் கருதி, ஆளுங்கட்சியும், பிரதான எதிர்க்கட்சியும் வரவேற்ற ஒரு தீர்மானத்தை, வரவேற்கிறேன் என்று சொல்லி முடியுங்கள். நீங்கள் பண்பாகப் பேசுபவர்; அவ்வாறு பேசி முடியுங்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் இதை வரவேற்கிறோம். அதில் மாற்றுக் கருத்து எங்களுக்கு இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதோடு முடியுங்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *ஆனால், அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்றால், முன்னாள் மத்திய அமைச்சர் குலாம் நபி ஆசாத். குலாம் நபி ஆசாத், எங்கே வந்தார் இங்கே? காந்தி செல்வன் எங்கே வந்தார்? அதைச் சொல்ல வேண்டாமா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். உட்காருங்கள் ஒரு நிமிடம். நான் சொல்கிறேன். நம்முடைய* UPA Government*-ல் வந்தது என்று சொல்கிறார்கள். அதில் ஒன்றும் தவறு கிடையாது.* Introduce *செய்தார்கள். இப்போது பாருங்கள், நானே உங்களுக்குப் பதில் சொல்கிறேன். அதாவது, இதே அவையில் எல்லோருமாகச் சேர்ந்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, கலைஞர் இருக்கும்போது ஜனாதிபதி ஒப்புதல் பெற்றுதான் அது இவ்வளவு நாள் நடந்தது. இப்பொழுது அந்தச் சட்டத்தைக்கூட உச்ச நீதிமன்றத்தில் கேட்கும்போது சொல்லவில்லை என்பதுதான் பிரச்சினை. அதுகூட உங்களுக்குத் தெரியும். நீங்கள் இதோடு முடித்துவிடுங்கள். ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுத் தவறுகளை இந்த அவையில் பதிவு செய்யக்கூடாது. காங்கிரஸ் அரசு எங்கே கொண்டு வந்தது? அதைத்தான் நான் கேட்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சொல்லியாகிவிட்டது.*

2021 செப்டம்பர் 13]

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்குத் தெரியவில்லை. தெரியப்படுத்த வேண்டாமா! சட்டம்—நான் என்ன சொல்கிறேன்,. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இங்கே கேளுங்கள். உங்களுக்கு நிறைய தெரியும்.* UPA Government-*ல்* introduce *செய்தார்கள் என்று சொன்னதிலே என்னவாகிவிட்டது, அது வந்தது இல்லையா! (குறுக்கீடு) விட்டுவிடுங்கள். நீங்கள் அடுத்ததற்கு வாருங்கள். (குறுக்கீடு) பேசுங்கள், பதிவு செய்யுங்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *நான் பதிவு செய்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சுருக்கமாக முடியுங்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *இந்திய மருத்துவக் கழகம் என்பது* autonomous body. *இங்கே எப்படி* Bar Council of India *இருக்கிறதோ, அதேமாதிரி, ஒரு* autonomous body. *காங்கிரஸ் பேரரசு அப்போது சொன்னால், கேட்க வேண்டிய நிலையில் அவர்கள் இல்லை. எங்கே காங்கிரஸ் பேரியக்கம் சொன்னது?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, அதைப் பதிவு செய்யுங்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *காங்கிரஸ் அரசும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஆட்சியில் இருக்கும்போது பரிந்துரை வழங்கலாம். ஆணை வழங்கமுடியாது. இதுதான்* autonomous body-*க்கும் அரசாங்கத்திற்கும் உள்ள வித்தியாசம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி, நீங்கள் பதிவு செய்துவிட்டீர்கள். நன்றி, நன்றி, நன்றி, வரவேற்று அமருங்கள். அடுத்தது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு) போதும், போதும். நிறைய பேசலாம். (குறுக்கீடு) உங்களுக்கு எவ்வளவு விஷயங்கள் தெரியும் என்று எனக்குத் தெரியும். இதில் ஒரு மணி நேரத்திற்கு பேசுவதற்கு உங்களிடம்* subject *இருக்கிறது. (குறுக்கீடு) சரி, ஒரு வரியில் முடியுங்கள். ஒரு வரியில் முடியுங்கள்.*

பிற்பகல் 2–15

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் மணித்துளிகளை நான் வீணாக்க மாட்டேன் என்பதை நீங்கள் நன்கு அறிந்தவர்கள். 2016 ஆம்*

ஆண்டு தேர்தலில் பாளையங்கோட்டையில் அம்மையார் ஜெயலலிதா அவர்கள் என்ன பேசினார்கள்? எங்கள் இயக்கம் இருக்கும்வரை NEET தேர்வை உள்ளே வர விடமாட்டோம் என்று சொன்னார்களே? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த அம்மையார் (குறுக்கீடு) அதற்கடுத்து பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள். (குறுக்கீடு) போதும். தாராளமாக, நிறைய பேசியாகிவிட்டது. போதும். (குறுக்கீடு) சரி ஒரு வரியில் பதிவு செய்யுங்கள். (குறுக்கீடு) பதிவு செய்யுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: இதுவரை 13 பிள்ளைகள் இறந்திருக்கிறார்கள். நேற்றைக்கு ஒரு பிள்ளை இறந்திருக்கிறான். இதற்கெல்லாம் யார் காரணம்? யார் பொறுப்பேற்பது? அதைப்பற்றிச் சொல்ல வேண்டுமல்லவா? (குறுக்கீடு) இவர்கள் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். என்னைப் பேச விடவேண்டுமல்லவா? (குறுக்கீடு) என்னைப் பேச விட்டால்தான் என்னால் சொல்ல முடியும். Please.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இது தேவையில்லை. இந்தச் சட்டமுன்வடிவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். பிரதான எதிர்க்கட்சியினர் இதை வரவேற்றிருக்கிறார்கள். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். நீங்களும் இதை வரவேற்பதாக நான் பதிவு செய்துகொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள். (குறுக்கீடுகள்) இதை முடித்துவிட்டு கடைசியாக வாய்ப்பு தருகிறேன். (குறுக்கீடு) நான் இதை முடித்துவிட்டு பின்னர் அனைத்தையும் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை, இதை வரவேற்று அமருங்கள். (குறுக்கீடு) சரி வரவேற்று அமருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் என்னைப் பார்த்துப் பேசுங்கள். திரு. செல்வபெருந்தகை, பேசுங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: நான் என்ன சொல்கிறேன் என்றால், இந்தக் குழந்தைகளின் உயிரிழப்பிற்கு, தற்கொலைக்கு யார் பொறுப்பேற்பது? நான் அதைப் பதிவு செய்ய வேண்டாமா? அதைச் சொல்ல வேண்டும். அதைப்பற்றிப் பதிவு செய்ய வேண்டும். (குறுக்கீடு) நீலிக்கண்ணீர் வடிக்கக் கூடாது.

2021 செப்டம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. செல்வபெருந்தகை அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். அது தேவையா, தேவையில்லையா என்பதைப் பற்றிக்கூட நான் பேச விரும்பவில்லை. ஆகவே, நல்ல நோக்கத்திற்காக இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அவர்கள் தற்கொலை செய்துகொண்டதற்கு யார் காரணம்? அவரவர்கள் மனசாட்சிக்கு நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அதை விவாதித்துக்கொண்டிருந்தால், இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதில் பல சங்கடங்கள் இருக்கின்றன, சச்சரவுகள் இருக்கின்றன என்ற ஒரு கெட்ட பெயர் நம்முடைய அரசுக்கு வந்துவிடும். இங்கிருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கும் வந்துவிடும். எனவே, நான் அருள்கூர்ந்து கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பல குற்றச்சாட்டுகளையெல்லாம் சொன்னார்கள். ஆனால், அந்தக் குற்றச்சாட்டுகளுக்கெல்லாம், அவர்கள் வெளிநடப்பு செய்திருந்தபோது நானே விளக்கம் சொல்லிவிட்டேன். அதனால்தான், இப்போது நான் அதைப்பற்றி மீண்டும் விளக்க விரும்பவில்லை. அதனால், அதே அடிப்படையில் நான் திரு. செல்வபெருந்தகை அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றுவதில் சச்சரவுகளை ஏற்படுத்தி, பல குழப்பங்களை ஏற்படுத்த வேண்டாம் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள். (குறுக்கீடு) வரவேற்கிறீர்கள்தானே? அந்த* bill *கொண்டுவரும்போது அதை எதிர்க்கவில்லையே!*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த* bill*-ஐக் கொண்டுவந்தபோது நான் அறிமுக நிலையிலேயே எதிர்க்க வேண்டுமென்று எழுந்திருந்து, பலமுறை வாய்ப்பு கேட்டு நின்று பார்த்தேன். எனக்கு கொஞ்சமும் நேரம் ஒதுக்கித் தரவில்லை. முன் வரிசையில் அமர்ந்திருக்கும் எல்லா மாண்புமிகு அமைச்சர்களும் இதற்கு சாட்சி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் அதற்காகச் சொல்லவில்லை.* NEET *தேர்வு தேவையில்லை என்று தமிழ்நாட்டில் பாரதிய ஜனதா கட்சி ஒரு* stand *எடுப்பீர்கள். ஏனெனில், காவேரி பிரச்சினையில் கர்நாடக மாநிலத்தில் ஒரு* stand *இருக்கும்; தமிழகத்தில் ஒரு* stand *இருக்கும். அதில் ஒன்றும் தவறு இல்லையே! வரவேற்று அமருங்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *நான் சொல்வதை மட்டும் பதிவு செய்யுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கண்டிப்பாகப் பதிவு செய்யப்படும். பேசுங்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *21-12-2010 அன்று மத்தியில் காங்கிரஸ் கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும் இருந்தது. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கிறேன் அல்லது எதிர்க்கிறேன், இரண்டே வார்த்தையில் சொல்லுங்கள். (குறுக்கீடு) வரவேற்கிறீர்கள் அல்லவா?*

திரு. நயினார் நாகேந்திரன்: *இரண்டு நிமிடங்களில் நான் பேச வந்த கருத்தைப் பதிவு செய்துவிடுகிறேன். நான் பேச வந்த கருத்தைச் சொல்லிவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: NEET *தேர்வு தமிழ்நாட்டிற்குத் தேவையா, தேவையில்லையா? நம்முடைய பிரதான எதிர்க்கட்சி, உங்களுடைய கூட்டணிக் கட்சி, முக்கியமான கட்சி, தமிழ்நாட்டில் உங்கள் கட்சியையும் சேர்த்து தலைமை தாங்கிய கட்சி இதை வரவேற்றிருக்கிறது. நீங்களும் ஒரு முடிவெடுங்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *கூட்டணிக் கட்சியின் முடிவு வேறு; எங்கள் கட்சியின் முடிவு வேறு. அதாவது,* NEET *தேர்வை 2010 ஆம் ஆண்டு காங்கிரஸ். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010 ஆம் ஆண்டிலிருந்து வேண்டாம். தற்போது 2021. 11 வருடங்கள் ஆகிவிட்டன. தற்போதைய விஷயத்தை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) இதை மட்டும் சொல்லுங்கள்,* please.

2021 செப்டம்பர் 13]

திரு. நயினார் நாகேந்திரன்: நான் சொல்லிவிடுகிறேன். NEET தேர்வு வேண்டாம் என்று தற்போது ஒரு தீர்மானம் கொண்டுவந்திருக்கிறீர்கள். தமிழ்நாடு அரசாங்கத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு Group 1 முதல் 8 வரை, TNPSC–மூலம் தேர்வு எழுதவைக்கிறீர்கள். மாவட்ட ஆட்சித் தலைவராக வருவதற்கு IAS தகுதித் தேர்வு இருக்கிறது. மாவட்டத்தில் சட்டம்–ஒழுங்கு சரியாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் அதைப் புரிந்துகொண்டுவிட்டேன். நீங்கள் முன்னாள் அமைச்சராக இருந்தவர்கள். உங்களுக்கு நிறைய விஷயங்கள் தெரியும். நான் அதை understand செய்துகொண்டுவிட்டேன். (குறுக்கீடு) அதாவது, 12 வருடங்கள் படித்துவிட்டு, +2 மதிப்பெண் அடிப்படையில்தான் மாணவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது சரியா, தவறா என்று சொல்லி அமருங்கள். Please.

பிற்பகல் 2–20

திரு. நயினார் நாகேந்திரன்: நான் சொல்லிவிட்டு முடிவில் சொல்கிறேன். இரண்டு நிமிடங்கள் time கொடுங்கள். அதாவது, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் மிகவும் பின்னுக்குப் போகாதீர்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: NEET தேர்விற்கு முன்னர் தமிழ்நாட்டில் தேர்ச்சி பெற்றவர்களுடைய விகிதாச்சாரம் வெறும் 50 percent–தான். NEET வந்ததற்குப் பிறகு Human physiology, Biochemistry, Anatomy படித்தவர்கள் 85 சதவிகிதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி, நன்றி. புள்ளிவிவரங்களை நீங்கள் நன்றாக படித்திருக்கிறீர்கள். 12 வருடங்கள் படித்து, 12–வது வகுப்பு தேர்வு எழுதிய mark தேவையா? தேவையில்லையா?

திரு. நயினார் நாகேந்திரன்: NEET ஒரு தகுதித் தேர்வு. இதனால் நமக்கு நிறைய benefits இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், உரையை முடித்துவிடுங்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: நான் சொல்வதைக் கேளுங்கள். அதாவது, கடந்த வருடம் (குறுக்கீடு) அக்டோபர் 20 ஆம் தேதி. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தமாதிரி புள்ளிவிவரங்களை எல்லாம் சொல்லும்போது, ஏதாவது ஓர் ஆதாரத்தோடு, ஓர் அறிக்கை–report எதையாவது சொல்லி கொடுக்கவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டாவது, UPSC–யிலும் சரி, TNPSC–யிலும் சரி, தேர்வுக்குப் பிறகு interview வைத்து பல வகைகளில் mark கொடுத்து, அதன்பிறகு தேர்ந்தெடுக்கின்றோம். அதனால், அதை ஒப்பிட்டுப் பார்ப்பது சரியில்லை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமருங்கள், please.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு அகில இந்திய அளவில் NEET தேர்வு எழுதியவர்கள் மொத்தம் 13,66,945 பேர். அதில், 7,71,500 பேர் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மட்டும் 99,610 பேர் NEET தேர்வு எழுதியிருக்கிறார்கள். அதில் வெற்றி பெற்றவர்கள் 57,219 பேர். ஆகவே, தேர்ச்சி விகிதம் நாளுக்குநாள் கூடிக்கொண்டுதான் இருக்கின்றது. அதுமட்டுமல்ல, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மக்கள்தொகை கூடும். படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டிருக்கிறது. நீங்கள் பேசியது போதும். மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர், நீங்களும் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தமாதிரி புள்ளிவிவரங்களை எல்லாம் கொடுக்கும்போது கூடுதலாக உறுப்பினர் என்ன சொல்லவேண்டுமென்றால், எத்தனை பேர் fees கட்டி பயிற்சி எடுத்தார்கள்; எத்தனைபேர் இரண்டு வருடங்கள், மூன்று வருடங்கள் திரும்பத் திரும்ப பயிற்சி எடுத்து எழுதினார்கள்; எத்தனை ஏழை, எளிய மக்களுக்கு வாய்ப்பு கிடைத்தது என்கிற அடிப்படைகளை

2021 செப்டம்பர் 13] [முனைவர் பழனிவேல் தியாக ராஜன்]

எல்லாம் சொல்லிவிட்டு, புள்ளிவிவரங்கள் சொல்லவேண்டும். பொத்தாம்பொதுவாக, நிறைய அதிகரித்துக்கொண்டிருக்கிறது என்று நீங்கள் சொன்னால், அது சரியாகாது என்று நான் கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்று நீங்கள் சொல்ல ஆரம்பித்துவிடாதீர்கள். சுருக்கமாக மட்டும் சொல்லுங்கள். ஆதரிக்கிறீர்களா, எதிர்க்கிறீர்களா என்பதை மட்டும் சொல்லச் சொல்லுங்கள். எவ்வளவு நல்லவர் நீங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தமிழ்நாட்டின் நலன் கருதி உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, NEET தேர்வில் எத்தனைபேர் தேர்ச்சி பெற்றார்கள், எத்தனைபேர் கலந்துகொண்டார்கள் என்பது முக்கியமல்ல. எத்தனைபேர் தற்கொலை செய்துகொண்டு மாண்டிருக்கிறார்கள்? நேற்றுவரை தனுஷுடன் சேர்த்து 15 பேர் மாண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் மனதில் வைத்துதான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். ஆகவே, அவர்களுடைய தியாகம் வீண்போகக்கூடாது என்பதுதான் இந்த அரசினுடைய இலட்சியம். எனவே, அதற்கேற்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் தமது எண்ணத்தை வெளிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பாரதிய ஜனதா கட்சி சட்டமன்ற உறுப்பினர், இந்தச் சபையில் நீங்கள் உங்கள் கட்சியின் தலைவராக இருக்கின்றீர்கள். தமிழ்நாடு நலன் கருதி, மாணவர்கள் நலன் கருதி நல்ல முடிவு சொல்லுங்கள். (குறுக்கீடு) ஒன்றும் தவறில்லை.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்த சட்டமுன்வடிவை பாரதிய ஜனதா கட்சி எதிர்த்து, நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், ஒரு வரியில் சொல்லுங்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *12 இலட்சம் மாணவ–மாணவிகள் தேர்வு எழுதுகிறார்கள். அவ்வளவுபேருக்கும் எதிராகச் செல்கிறீர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தில் சட்டம் இயற்றினால் அது செல்லுபடியாகுமா? வழக்கறிஞர் பெருமக்கள் எல்லாம் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்களே என்று மாண்புமிகு பிரதான எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்திருக்கிறார். இதே சட்டமன்றத்தில் அவர்கள் கட்சியின் சார்பாக ஜல்லிக்கட்டுக்கு தி.மு.க. கட்சியின் ஆதரவோடு நிறைவேற்றிய. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும்.*

திரு. தி. வேல்முருகன்: *அந்தத் தீர்மானத்தை நாடாளுமன்றம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) அதேமாதிரியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த சட்டத்தை . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், இந்தச் சட்டத்தை* pass *பண்ணிவிடலாம். போதும் (குறுக்கீடு) நிறைய பேசியாகிவிட்டது, போதும். (குறுக்கீடு) நிறைய பேசியாகிவிட்டது, போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, ஒரு வார்த்தை சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, ஒரு வார்த்தை போதும். (குறுக்கீடு) திரு. ஜி.கே. மணி, இறுதியாக ஒரு வார்த்தை சொல்லுங்கள், போதும்.*

பிற்பகல் 2–25

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், பேச வாய்ப்பு கொடுக்கிறீர்கள். இது ஒரு முக்கியமான தீர்மானம்.*

கட்சி வரிசைப்படி பேச வாய்ப்பு கொடுங்கள். இல்லையென்றால் கீழேயிருந்து கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கையை உயர்த்தியிருந்தால் வாய்ப்பு தந்திருப்பேன். நீங்கள் கையை உயர்த்தவில்லை. இப்போதுதான் கையை உயர்த்தினீர்கள்.

திரு. ஜி.கே. மணி: நான் முன்பே கையை உயர்த்தினேன், நீங்கள் பார்க்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அது காலையில். அப்போது நான் வாய்ப்புத் தந்துவிட்டேன்.

திரு. ஜி.கே. மணி: நெல்லையினுடைய பாசத்திற்குப் போய்விட்டீர்கள்; என்னை விட்டுவிட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நீட் தேர்வு குறித்த சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, அதனை வரவேற்கிறேன் அல்லது எதிர்க்கிறேன் என்று ஒரு வரியில் சொல்லுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற சட்டமுன்வடிவு தமிழ்நாட்டிற்கு மிக மிக முக்கியம் என்ற காரணத்தால், இதை பாட்டாளி மக்கள் கட்சி மனதார வரவேற்கிறது, நன்றி தெரிவிக்கிறது. அதற்குக் காரணம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், போதும், போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன், இச்சட்டமுன்வடிவை வரவேற்கிறேன் அல்லது எதிர்க்கிறேன் என்று ஒரு வரியில் சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. சிந்தனை செல்வன், ஒரு வரியில் சொல்லுங்கள். பேசுங்கள் திரு. சிந்தனை செல்வன். (குறுக்கீடு) நேரமாகிவிட்டது. இல்லையெனில் நிறைய பேசலாம்.

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆகஸ்ட் 15 ஆம் தேதி, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ரொம்ப பழைய விஷயத்தைப் பற்றி பேச வேண்டாம். தற்போதைய விஷயத்தைப் பற்றி பேசுங்கள்.

திரு. ம. சிந்தனை செல்வன்: நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஆகஸ்ட் 15 ஆம் தேதி கொடியேற்றியபோது, தேசியக் கொடி பட்டொளி வீசி வானை நோக்கி உயர்ந்தது. இன்று 10 கோடி தமிழர்களின் தன்மானம், (மேசையைத் தட்டும் ஒலி) மாநில சுயாட்சி உரிமைக்கான கனவு, (மேசையைத் தட்டும் ஒலி) உயர்ந்து பட்டொளி வீசிப் பறக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அனிதாவின் அந்தக் கடைசி நிகழ்வில் கலந்துகொண்டு, கண்ணீரோடு திரும்பியவர்களில் நானும் ஒருவன் என்கிற அடிப்படையில், எழுச்சித் தமிழர்களின் சார்பில், விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில், நெஞ்சார, நெஞ்சார, நெஞ்சார இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று, ஆதரித்து, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள், வரவேற்று, நன்றி சொல்லுங்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்கள் நலன் கருதி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நீட் தேர்வு குறித்து கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் உளமார வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதியை நிலைநாட்டும் வகையில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற நீட் தேர்வுக்கான மசோதாவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை, எளிய வீட்டுப் பிள்ளைகள் மருத்துவக் கல்வி பெறுவதற்காக, அவர்களின் சமூக நீதியை

நிலைநாட்டுவதற்காக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்த நீட் சம்பந்தப்பட்ட இந்தச் சட்டமுன்வடிவிற்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் ஆதரவு தெரிவித்து, பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயிர்க்கொல்லியாக மாறக்கூடிய நீட் தேர்வு தமிழகத்திற்குத் தேவையில்லை என்பதை நிலைநாட்டக்கூடிய வகையில், சமூக நீதியை நிலைநாட்டக்கூடிய வகையில், மாநிலங்களுடைய உரிமைகளை நிலைநாட்டக்கூடிய வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவை முழுமையாக வழிமொழிந்து மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்று அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீட் தேர்வு நடைபெற ஆரம்பித்த பிறகு, பல இலட்சம் ரூபாய் செலவு செய்கின்ற மாணவர்கள்தான் அதில் அதிக மதிப்பெண் பெற முடிகின்றது. இது மிகப் பெரிய தொழிலாக தமிழகத்திலே மாறியிருக்கிறது. அதற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்கின்ற வகையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை வரவேற்கின்றோம், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள்.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற நீட் தேர்வு பற்றிய மசோதாவை புரட்சி பாரதம் ஆதரிக்கின்றது, நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பா.ஜ.க. தவிர்த்து, அனைத்து சட்டமன்றக் கட்சிகளினுடைய தலைவர்கள் இந்தச் சட்டமுன்வடிவை வழிமொழிந்திருக்கிறார்கள், வரவேற்றிருக்கிறார்கள். அறிமுக நிலையிலேயே, இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டு நான் பேசியிருக்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்தச் சட்டமுன்வடிவை ஒருமனதாக ஏற்று, நிறைவேற்றித் தர வேண்டுமெனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவுகள் 2 முதல் 14 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 14 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2–30

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

(ஔ) தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2021), மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2021)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 15 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 15 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 7-9-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(அஅ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்*

44/2021), மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2021)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 13-9-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்” எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

(அஆ) தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2021), மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2021)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன் அவர்கள், சுருக்கமாகப் பேசுங்கள். உங்கள் உரையை அழகாக, சுருக்கமாகப் பதிவு செய்யுங்கள்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு ஏற்கெனவே இருக்கின்ற மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் 3 ஆண்டுகளாக உள்ளதை 2 ஆண்டுகளாகக் குறைக்க வழிவகை செய்கிறது. 3 ஆண்டுகள் தொடர்ந்து நீடிக்கும்போது மாவட்டங்களிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் முழுமைபெற ஏதுவாக இருக்கும். மேலும், திருக்கோயிலில் அதிகளவில் தன்னார்வலர்கள்மூலம் உதவிகள் பெற்று திருப்பணிகள் செய்ய ஏதுவாக இருக்கும். மேலும், முன்னாள் முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களுடைய நல்லாட்சியில் அம்மா அரசால் நியமிக்கப்பட்ட குழு என்ற வகையில் இவர்களை மாற்றி புதிய உறுப்பினர்களை நியமனம் செய்யும் நோக்கில் இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது. ஏற்கெனவே இருக்கின்ற சட்டமுன்வடிவைத் தொடர மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2–35

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தம் என்பது 2012 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டம், 1959, 2012

@ 13-9-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2021 செப்டம்பர் 13] [திரு. பி.கே. சேகர்பாபு]

ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்டது. திருத்தம் செய்யப்பட்ட பிறகு 2019 ஆம் ஆண்டு வரை 7 ஆண்டு காலம் இந்து சமய அறநிலையத் துறைக்கு எந்தவிதமான மாவட்டக் குழுக்களும் அமைக்கப்படவில்லை. அதன் பிறகு 2019 ஆம் ஆண்டு அவசர, அவசரமாக மாவட்டக் குழுக்களை அமைத்தார்கள். அதன் பிறகு அமைக்கப்பட்ட குழுக்கள் முழுமையாக அமைக்கப்பட்டதா என்றால் 27 மாவட்டங்களில்தான் அமைக்கப்பட்டன. ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு, அதில் 7 குழுக்களின் உறுப்பினர்கள் அவர்களாக முன்வந்து தங்கள் ராஜினாமா கடிதத்தைத் தந்திருக்கின்றார்கள். அப்படியென்றால், 11 உடன் 7 சேர்த்தால் 18 மாவட்டங்களுக்கு தற்போது மாவட்டக் குழுக்கள் இல்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் இயங்குகின்ற இந்த அரசு என்பது ஆன்மீகத்தில் ஒரு பொற்காலமாகத் திகழ்வதால் பலதரப்பட்ட மக்கள், அரசியலுக்கு அப்பாற்பட்டு, நன்கொடையாளர்கள், ஆன்மீகவாதிகள், அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற பெரியவர்களை ஒருங்கிணைத்தது இந்தக் குழுக்களுக்கு நியமிக்க வேண்டுமென்று சட்டம் சொல்கிறது. இந்தச் சட்டத்தின்படி பார்த்தால், இந்தக் குழுக்களில் நியமிக்கப்படுபவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் தான் பதவிக்காலம் இருக்கின்றது. ஆனால், குழுக்களுக்கு 3 ஆண்டுகள் என்று பதவிக்காலம் நிர்ணயம் செய்யப்படுகிறது. யார் ஒருவர் அதிகாரத்தில் இருக்கின்றாரோ, அவர் அமைக்கின்ற குழுக்களுக்கு குறைந்த அளவு ஆண்டுகள்தான் பதவிக்காலம் இருக்க வேண்டும். ஆனால், அவர் கொடுக்கின்ற உத்தரவிற்கு 3 ஆண்டுகள் அதிகாரம் இருக்கின்றது. அதிகாரத்திலே இருப்பவர்களுக்கு 2 ஆண்டுகள் இருக்கின்றது. இதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசியபோது இது ஆன்மீக பூமியாக மாறுவதால், நிறைய பேருக்கு, ஆன்மீகவாதிகளுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். அதைச் சார்ந்து திருப்பணி செய்பவர்களுக்கு ஒரு நல்வாய்ப்பாக அமைய வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் 3 ஆண்டுகள் என இந்தச் சட்டத்தில் இருந்ததை இரண்டு ஆண்டுகளாகக் கொண்டு வருகிறோம். இதில் அரசியல் மனமாச்சரியங்கள் எதுவும் இல்லை. ஏற்கெனவே 18 மாவட்டக் குழுக்கள் அமைக்கப்படாமல் இருக்கின்றன. 2012 ஆம் ஆண்டிலிருந்து கிட்டத்தட்ட 9 ஆண்டுகள் மாவட்டக் குழுக்களே அமைக்கப்படவில்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விரைந்து நடைபெற வேண்டி திருப்பணிகள், அனைவருக்கும் வாய்ப்பு என்று கருதுவதால்தான்

இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். முன்பு இருந்த மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர், நீங்கள் செய்யத் தவறிய பணிகளை செய்வதற்காகத்தான் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்ற காரணத்தால் நீங்களும் இதை மீண்டும் ஒரு முறை எழுந்து ஆதரிக்க வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2021 செப்டம்பர் 13] *[பேரவைத் தலைவர்]*

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஇ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2021), மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை

[முனைவர் பழனிவேல் தியாக ராஜன்] [2021 செப்டம்பர் 13 சட்டமுன்வடிவு எண் 35/2021)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 5 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 8-9-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 2–40

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஈ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2021), மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு

[முனைவர் பழனிவேல் தியாக ராஜன்] [2021 செப்டம்பர் 13

(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2021)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 9 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 9 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 8-9-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஉ) தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2021), மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வெ. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2021)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

@ 6-9-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 13]

மாண்புமிகு சி.வெ. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நலநிதிய (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஊ) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2021),* மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் *அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வெ. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2021)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

[2021 செப்டம்பர் 13

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

@ 6-9-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2021 செப்டம்பர் 13]

மாண்புமிகு சி.வெ. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 2–45

(அஎ) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தம்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2021),* மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் *அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வெ. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2021)@ *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 6-9-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வெ. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தம்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

9. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஈ) தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையச் சட்டமுன்வடிவு, 2021 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையச் சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

11. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) –

தொடர்ச்சி

(அஏ) தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையச் சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2021), மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2021)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 20 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 20 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 9-9-2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2021) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

12. பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கங்கள். சாதாரண ஆசிரியராக இருந்த என்னை, இந்த இருக்கையில் அமர வைத்து, இந்தப் பணியைச் செய்வதற்கு வாய்ப்பைத் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை என்னுடைய பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து திறம்படச் செயலாற்றும் மாண்புமிகு பேரவை முன்னவர் மற்றும் அமைச்சர் பெருமக்களே, அருமைச் சகோதரர் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு தலைமைக் கொறடா அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, சட்டமன்றக் கட்சித் தலைவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பு வணக்கங்கள்.*

தலைமைச் செயலாளர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகளே, பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் எனது வணக்கங்கள்.

பதினாறாவது சட்டமன்றப் பேரவைக்கு 6-4-2021 அன்று பொதுத் தேர்தல் நடைபெற்று, 2-5-2021 அன்று தேர்தல் முடிவுகள் வெளியாகி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், 7-5-2021 அன்று புதிய அமைச்சரவை பதவியேற்றது.

பிற்பகல் 2-50

பதினாறாவது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடர், 11-5-2021, 12-5-2021 மற்றும் 21-6-2021 முதல் 24-6-2021 வரை நடைபெற்றது. இரண்டாம் கூட்டத் தொடர், 13-8-2021 முதல் தொடங்கி, 13-9-2021, இன்றுவரை நடைபெற்றுள்ளது.

இக்கூட்டத் தொடர்களில் பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பின்வருமாறு:

பேரவை கூடிய மொத்த நாட்கள் — 28 நாட்கள்
(ஆளுநர் உரையாற்றிய நாள் உட்பட)

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

மாலையிலும் பேரவை கூடிய நாட்கள் — 1 நாள் (8–9–2021)

அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம் — 126 மணி 3 நிமிடங்கள் (13–9–2021 பிற்பகல் 2 மணி வரை)

21–6–2021 அன்று மாண்புமிகு ஆளுநர் அவர்கள் பேரவையில் உரையாற்றினார்கள்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் மற்றும் பதிலுரை—

நடைபெற்ற மொத்த நாட்கள் — 3 நாட்கள்

உரையாற்றிய உறுப்பினர்கள் — 22 பேர்

உரையாற்றிய நேரம் — 9 மணி 54 நிமிடங்கள்

அதில் ஆளுங்கட்சியினர் — 10 பேர் பேசிய நேரம் 3 மணி 6 நிமிடங்கள்

பிரதான எதிர்க்கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த 5 உறுப்பினர்கள், 4 மணி 23 நிமிடங்கள் உரையாற்றியுள்ளனர். நேரம் போதவில்லை என்று வெளியே சென்று சொன்னீர்களே, அதற்காகச் சொல்கிறேன்.

இதர கட்சியினர் — 7 பேர் பேசிய நேரம் 2 மணி 25 நிமிடங்கள்

மாண்புமிகு முதலமைச்சர் பதிலுரை ஆற்றிய நேரம் — 42 நிமிடங்கள்

[பேரவைத் தலைவர்] [2021 செப்டம்பர் 13

நிதி அலுவல்கள்—

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வரலாற்றில் முதன்முறையாக, 2021–2022 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கை, வேளாண்மை—நலத் துறை தொடர்பான நிதிநிலை அறிக்கை ஆகியவை காகிதமில்லா நிதிநிலை அறிக்கைகளாக, e-Budget–ஆக இப்பேரவைக்கு அளிக்கப்பட்டன.

2021–2022 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 13–8–2021 அன்றும், 2021–2022 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையை முதன்முறையாக மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் 14–8–2021 அன்றும் மின்னணு முறையில் பேரவைக்கு அளித்தார்கள்.

திருத்திய நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம் மற்றும் பதிலுரை நடைபெற்ற நாட்கள்	*— 4 நாட்கள்*
பங்கேற்ற உறுப்பினர்கள்	*— 22*
உரையாற்றிய நேரம்	*— 11 மணி 41 நிமிடங்கள்*
அதில் ஆளுங்கட்சியினர்	*— 11 பேர் பேசிய நேரம் 5 மணி 13 நிமிடங்கள்*

பிரதான எதிர்க்கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த 4 உறுப்பினர்கள் 2 மணி 39 நிமிடங்கள் உரையாற்றியுள்ளனர். அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள், இந்த 4 நாட்களில் 2 நாட்கள் அவைக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதர கட்சியினர்	*— 7 பேர் பேசிய நேரம் 3 மணி 49 நிமிடங்கள்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பதிலளித்த நேரம்	— 58 நிமிடங்கள்
மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் பதிலளித்த நேரம்	— 56 நிமிடங்கள்

மானியக் கோரிக்கைகள்—

விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற மொத்த நாட்கள்	— 16
உரையாற்றிய உறுப்பினர்கள்	— 134
உரையாற்றிய நேரம்	— 43 மணி 36 நிமிடங்கள்
அதில் ஆளுங்கட்சியினர்	— 69 பேர் பேசிய நேரம் 21 மணி 30 நிமிடங்கள்

பிரதான எதிர்க்கட்சியான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த 28 உறுப்பினர்கள் 12 மணி 01 நிமிடம் உரையாற்றியுள்ளனர். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் இரண்டு நாட்கள் அவைக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

இதர கட்சியினர்	— 37 பேர் பேசிய நேரம் 10 மணி 05 நிமிடங்கள்
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது பொறுப்பில் உள்ள துறைகள் சம்பந்தமாக பதிலளித்த நேரம்	— 39 நிமிடங்கள்
தனது பொறுப்பிலுள்ள துறைகள் மட்டுமல்லாமல் இதர துறைகள் தொடர்பான விவாதங்களிலும் உறுப்பினர்களின் கருத்துகளுக்கு உடனுக்குடன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்த நேர்வுகள்	— 13 முறைகள் 9 நிமிடங்கள்

மாண்புமிகு அமைச்சர்கள் பதிலுரையாற்றிய மொத்த நேரம்	—	18 மணி 59 நிமிடங்கள்

வெட்டுத் தீர்மானங்கள்—

வரப்பெற்றவை	—	4.630
அனுமதிக்கப்பெற்றவை	—	3,998
அவையில் முன்மொழியப்பெற்றவை	—	1,093

வினாக்கள்—விடைகள்—

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 11–8–2011 அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வினா எடுத்துக்கொள்ளப்பட்டு பதிலளிக்கப்பட்டது. அதன் பின்னர், 10 ஆண்டுகளுக்குப் பிறகு, சரியாகச் சொன்னால் 10 ஆண்டுகள், 32 நாட்களுக்குப் பிறகு, பதினாறாவது பேரவையின் முதல் வினாவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வினா பேரவையில் 31–8–2021 அன்று எடுத்துக்கொள்ளப்பட்டு பதிலளிக்கப்பட்டது என்பதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலளித்த முதல் வினா எதிர்க்கட்சி உறுப்பினர் எழுப்பியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

11–5–2021–ல் இப்பேரவைக் கூட்டம் தொடங்கியது முதல் 13–9–2021 வரை உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட மொத்த வினாக்கள்	—	24,501
அளித்த உறுப்பினர்கள் எண்ணிக்கை	—	146
அனுமதிக்கப்பெற்றவை	—	18,228
உடுக்குறியிட்டவை	—	9,584
உடுக்குறியிடாதவை	—	8,642
குறுகிய கால வினா	—	2

பிற்பகல் 2–55

வினா கொடுத்தவர்களில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

வ. எண்	**உறுப்பினர் பெயர்**	**கட்சி**	**வினாக்களின் எண்ணிக்கை**
1.	திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி	தி.மு.க.	*7,685*
2.	திரு. ஜி.கே. மணி	பா.ம.க.	*6,478*
3.	திரு. ச. அரவிந்த் ரமேஷ்	தி.மு.க.	*3,583*
4.	திரு. இரா. அருள்	பா.ம.க.	*2,914*
5.	திரு. பூண்டி கே. கலைவாணன்	தி.மு.க.	*1,291*

உடுக்குறியிட்ட வினாக்கள்—

அவையில் விடையளிக்கப்பட்டவை	—	*45*
மொத்த துணை வினாக்கள்	—	*115*

அவையில் அதிக அளவு வினாக்களுக்கு விடையளித்த அமைச்சர்களில் முதல் இரண்டு நிலைகளில் இருப்பவர்கள்—

வ. எண்	**அமைச்சர்**	**வினாக்களின் எண்ணிக்கை**
1.	மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்	
	மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்	தலா *4*
	மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்	
	மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்	
2.	மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்	*3*

வினாக்கள்–விடைகள் எடுத்துக்கொள்ளப்பெற்ற மொத்த நாட்கள்	—	*7*

உடுக்குறியிடாத வினாக்கள்—

உடுக்குறியிடாதவையாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் — 400

சிறப்புக் கவன ஈர்ப்பு—

அவசரத் தன்மை வாய்ந்த மிக முக்கியமான பொருட்கள் குறித்த சிறப்புக் கவன ஈர்ப்பு (Special Mention) *என்ற வகையில் அவையில் எடுத்துக்கொள்ளப்பெற்றவை — 12*

மாண்புமிகு முதலமைச்சர் பதிலளித்தவை (கூடுதல் விளக்கம்) — 2-9-2021 அன்று 2 நிமிடங்கள்

உரையாற்றிய உறுப்பினர்கள் — 14

எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த நேரம் — 1 மணி 7 நிமிடங்கள்

தகவல் கோரல்—

தகவல் கோரல் என்ற முறையில் அவ்வப்போது முக்கியப் பிரச்சினைகள் அவையில் எழுப்ப அனுமதிக்கப்பட்டு பதிலளித்த நேர்வுகள் — 7

மாண்புமிகு முதலமைச்சர் பதிலளித்தவை — 3 நேர்வுகள் 9 நிமிடங்கள் (18-8-2021, 7-9-2021 மற்றும் 13-9-2021)

உரையாற்றிய உறுப்பினர்கள் — 17

எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த நேரம் (அமைச்சர்களின் பதிலுரை உட்பட) — 52 நிமிடங்கள்

கவன ஈர்ப்புகள்—

உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்றவை — 349

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 13] *[பேரவைத் தலைவர்]*

கவன ஈர்ப்பாக அனுமதிக்கப்பெற்றவை — 81

அவையில் விளக்கம் அளிக்கப்பெற்றவை — 7

அரசினர் சட்டமுன்வடிவுகள்—

வரப்பெற்றவை — 30

நிறைவேற்றப்பெற்றவை — 30

நிறைவேற்றப்பெற்ற முக்கிய சட்டமுன்வடிவுகள்

பேரவையில் நிறைவேற்றப்பட்ட முக்கியமான சட்டமுன்வடிவுகள் பற்றி சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

1) பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், மீன் வளம், சட்டம் போன்ற தொழிற்கல்விப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு அனைத்து இட ஒதுக்கீட்டுப் பிரிவுகளிலும், ஏழரை விழுக்காடு இடங்கள் முன்னுரிமையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யும் வகையில், 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இளநிலை தொழிற்கல்வி படிப்புகளுக்கான சேர்க்கைச் சட்டமுன்வடிவு 26–8–2021 அன்று பேரவையில் அறிமுகம் செய்யப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

2) 8–9–2021 அன்று பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினைத் தொடர்ந்து ஆதி திராவிடர்கள், பழங்குடியினர் ஆகியோருடைய சட்டபூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுடைய முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், 'தமிழ்நாடு ஆதி திராவிடர்–பழங்குடியினர் மாநில ஆணையம்' என்கிற புதிய அமைப்பு ஒன்றை தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் வகையில் நிறுவ கொண்டுவரப்பட்ட சட்டமுன்வடிவு இன்று (13–9–2021) அன்று பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

3) நீட் தேர்வை இரத்து செய்து +2 மதிப்பெண் அடிப்படையில் இளநிலை மருத்துவப் படிப்புகளில் சேர்வதற்கான சட்டமுன்வடிவு இன்று (13–9–2021) ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

அரசினர் தனித் தீர்மானம்—

வரப்பெற்றவை	—	3
நிறைவேற்றப்பெற்றவை	—	3

அரசினர் தனித் தீர்மானங்கள்

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்களது 50 ஆண்டுக் கால சட்டமன்றப் பணியினைப் பாராட்டும் வகையில், "தமிழ்நாடு சட்டமன்றத்தில் 1971 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை 10 முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பல்வேறு துறைகளில் அமைச்சராகச் செயல்பட்டு, மாநிலத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டிருக்கிறார்; பாடுபட்டுக் கொண்டிருக்கின்றார்; அவையின் மாண்பைக் காப்பதிலே ஒரு நல்ல வழிகாட்டியாகச் செயல்பட்டு வருகிறார்; மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அண்ணன் அவர்களை இந்தப் பேரவை மனதாரப் பாராட்டுகிறது" என்னும் தீர்மானம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 23-8-2021 அன்று முன்மொழியப்பெற்று நிறைவேற்றப்பெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

2) மத்திய அரசால் கொண்டுவரப்பட்டுள்ள வேளாண் சட்டங்களைத் திரும்பப்பெறக் கோரும் அரசினர் தனித் தீர்மானம், 28-8-2021 அன்று பேரவையில் நிறைவேற்றப்பெற்றது.

பிற்பகல் 3-00

3) இந்தியக் குடியுரிமைத் திருத்தச் சட்டம், 2019-ஐ இரத்து செய்யக் கோரும் அரசினர் தனித் தீர்மானம் 8-9-2021 அன்று பேரவையில் நிறைவேற்றப்பெற்றது.

விதி 110-ன்கீழ் அறிக்கைகள்—

மொத்தம் அளிக்கப்பெற்றவை	—	10
மாண்புமிகு முதலமைச்சர் அளித்தவை	—	10

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ் சிறப்பான அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள். அவற்றுள் முக்கியமானவற்றை அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு ரூபாய் 39 கோடி மதிப்பீட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) நினைவிடம் அமைத்தல் குறித்து 24–8–2021 அன்றும், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு புதிய வீடுகள் கட்டுதல், அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், அவர்களுக்கு வாழ்க்கைத் தர மேம்பாடு நிதி ஒதுக்குதல், முகாம் வாழ் மாணவர்களின் கல்வியை மேம்படுத்துதல் ஆகியவை குறித்து 27–8–2021 அன்றும், அயோத்திதாச பண்டிதரின் நினைவாக வடசென்னையில் மணிமண்டபம் அமைத்தல் குறித்து 3–9–2021 அன்றும், தந்தை பெரியார் பிறந்த செப்டம்பர் 17 ஆம் நாளை ஆண்டுதோறும் 'சமூக நீதி நாள்' ஆகக் கொண்டாடுவது குறித்து (மேசையைத் தட்டும் ஒலி) 6–9–2021 அன்றும் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு தொல்லியல் துறைமூலம் மேற்கொள்ளப்படும் அகழாய்வில் ஆதிச்சநல்லூருக்கு அருகே, சிவகளைப் பறம்புப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட நெல்மணிகளை ஆய்வு செய்ததில், முதுமக்கள் தாழியில் கண்டெடுக்கப்பட்ட நெல்மணிகளின் காலம் கி.மு. 1155 எனக் கண்டறியப்பட்டதன் அடிப்படையில், 'தண்பொருநை' என்றழைக்கப்பட்ட தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் 3200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை அறிவியல் ஆய்வுகளின் அடிப்படையில் உறுதிசெய்ய முடிகிறது என்ற அறிவிப்பினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 9–9–2021 அன்று அறிவித்தார்கள். மேலும், ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின்போது கிடைத்த அரிய பொருட்களை அழகுறக் காட்சிப்படுத்தும் விதமாக, திருநெல்வேலி நகரில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன வசதிகளோடு 'பொருநை அருங்காட்சியகம்' என்ற பெயரில் அருங்காட்சியகம் அமைக்கப்படும் எனவும் அறிவித்தார்கள்.

இவை தவிர, இதர அறிவிப்பாக, செக்கிழுத்த செம்மல் வ.உ.சி. அவர்களைப் பெருமைப்படுத்தக்கூடிய வகையில், வ.உ.சி. அவர்களுடைய 150–வது பிறந்த நாள் விழா அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று ஏற்கெனவே மாண்புமிகு

[பேரவைத் தலைவர்] [2021 செப்டம்பர் 13

முதலமைச்சர் அவர்கள் தனது முதல் சுதந்திர தின உரையிலேயே குறிப்பிட்டிருந்தார்கள். அதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டு வ.உ.சி.-யின் 150-வது ஆண்டாக வருகிற காரணத்தால், சென்னை காந்தி மண்டபத்தில் உள்ள வ.உ. சிதம்பரனார் அவர்கள் சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டிருக்கக்கூடிய மண்டபம் பொலிவூட்டப்பட்டு, அங்கு அன்னாரது மார்பளவு சிலை திறந்து வைத்தல், தூத்துக்குடி மாநகரின் முதன்மைச் சாலையான மேல பெரிய காட்டன் சாலை, இனி 'வ.உ. சிதம்பரனார் சாலை' என அழைக்கப்படுதல், தனது வாழ்நாளின் முக்கிய நாட்களை கோவை சிறையிலே கழித்த வ.உ. சிதம்பரனார் அவர்களுடைய முழு உருவச் சிலையானது, கோயம்புத்தூர் வ.உ. சிதம்பரனார் பூங்காவில் அமைக்கப்படுதல் உள்ளிட்ட சிறப்பான 14 அறிவிப்புகளை 3-9-2021 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

கூட்டுறவு வங்கிகளில் ஐந்து சவரன் வரை நகைக் கடன் பெற்ற ஏழை, எளியவர்களுக்கு மட்டும் தள்ளுபடி செய்தல் குறித்த நெறிமுறைகள் பற்றிய அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 13-9-2021, இன்று அறிவித்தார்கள்.

பேரவைக் குழுக்கள் அவைக்கு அளித்த அறிக்கைகள்—

மதிப்பீட்டுக் குழு	—	2
பொது கணக்குக் குழு	—	3
பொது நிறுவனங்கள் குழு	—	3
விதிகள் குழு	—	1
அரசு உறுதிமொழிக் குழு	—	1

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—

(அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும்	—	48
(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்	—	141

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

உறுப்பினர்கள் வருகை—

11–5–2021 முதல் 13–9–2021 வரை பேரவைக் கூட்டம் நடைபெற்ற அனைத்து நாட்களிலும் பேரவைக்கு வருகை புரிந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை மொத்தம் 65. நேரத்தின் அருமை கருதி இப்பட்டியல் இணைப்பாக@ சேர்த்துக்கொள்ளப்படுகிறது.

நூலகம்—

முதல் மற்றும் இரண்டாம் கூட்டத் தொடர்களில் சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர்	—	137
வழங்கப்பெற்ற நூல்கள்	—	685
புதியதாக வரப்பெற்ற நூல்கள்	—	2

நடவடிக்கைக் குறிப்புகள்—

உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரைகள் (குறுக்கீடுகள் தவிர)	515
தட்டச்சு செய்யப்பெற்ற மொத்தப் பக்கங்கள்	5,527
மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்ற நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை	803
தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகளுக்கு அனுப்பப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை	142

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

@ 816 முதல் 819 வரையிலான பக்கங்களில் இணைப்பு VIII ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[பேரவைத் தலைவர்] [2021 செப்டம்பர் 13

பிற்பகல் 3-05

சிறப்பு நிகழ்வுகள்

1) தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது திருவுருவப் படத் திறப்புவிழா 2-8-2021 அன்று மாலை 5-00 மணியளவில் நடைபெற்றது. (மேசையைத் தட்டும் ஒலி) இவ்விழாவில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தலைமையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு இந்திய குடியரசுத் தலைவர் அவர்கள் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தார்கள்.

2) தமிழக வரலாற்றில் முதல் முறையாக 2021-2022 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியவை முறையே 13-8-2021 மற்றும் 14-8-2021 ஆகிய தேதிகளில் மின் நிதிநிலை அறிக்கைகளாக, (e-Budget) *பேரவைக்கு அளிக்கப்பட்டன. மின் நிதிநிலை அறிக்கைகள் பேரவையில் அளிக்கப்படும்போது, மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் பார்வையிடுவதற்கு வசதியாக ஒவ்வோர் உறுப்பினரின் மேசைகளிலும்* All-in-One PC-*க்களும், கையடக்க கணினியும் பொருத்தப்பட்டு நிதிநிலை அறிக்கைகள் காட்சிப்படுத்தப்பட்டன.*

பேரவையில் பத்திரிகையாளர்களின் வசதிக்காக பெரிய திரை கொண்ட Display Units *அமைக்கப்பட்டு உரிய பகுதிகள் காட்சிப்படுத்தப்பட்டன. மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தொடுதிரை கையடக்க கணினியில்* PDF *வடிவிலும் நிதிநிலை உரைகளைக் காணும் வகையில் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.*

3) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 75-வது சுதந்திர தின விழாவில் முதன்முறையாக, கோட்டைக் கொத்தளத்தில் கொடியேற்றி வைத்து சிறப்புரையாற்றினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

4) 16-வது பேரவைக்கு புதிதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி 23-8-2021 மற்றும் 24-8-2021 ஆகிய இரு நாட்களில் மாலை 4-00 மணி முதல் 6-00 மணி வரை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்ற

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

முன்னாள் உறுப்பினர்கள் விடுதியில் 10-வது தளத்தில் அமைந்துள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது.

“காகிதமில்லா சட்டமன்றம்” என்னும் திட்டத்தினைச் செயல்படுத்திடும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு கையடக்க தொடுதிரை கணினி (Samsung S7+Tablet) மற்றும் அதில் பொருத்தக்கூடிய சிம் கார்டுகள் வழங்கப்பட்டன. கையடக்கக் கணினியின் செயல்பாடு மற்றும் ஆவணங்களைப் பதிவிறக்கம் செய்வது குறித்த கணினிப் பயிற்சி 7-9-2021 மற்றும் 9-9-2021 ஆகிய நாட்களில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டது.

5) நீர்வளத் துறைக்கான மானியக் கோரிக்கை, முதன்முறையாக, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களால், 23-8-2021 அன்று பேரவையில் வைக்கப்பட்டது.

6) குடிசை மாற்று வாரியம் என்பது, ‘தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்’ எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு பேரவையில் அறிவிக்கப்பட்டது.

பேரவை நடைபெற உதவிய அனைவருக்கும் நன்றியுரை—

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவைக் கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாகவே அவைக்கு வந்திருந்து பேரவை நடவடிக்கைகள் சிறப்பாக அமைய எனக்குப் பெரிதும் உதவியாக இருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கேள்வி நேரம் உட்பட அனைத்து விவாதங்களிலும் கலந்துகொண்டு, உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துகளை உன்னிப்பாகக் கவனித்து, அவர்கள் தெரிவிக்கும் கோரிக்கைகள் குறித்து உடனுக்குடன் உரிய விளக்கங்களை அளித்துள்ளார்கள். மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்களில் அமைச்சர்கள் பதிலுரையின்போது, பதிலுரையை முழுமையாகக் கவனித்து பேரவை நடவடிக்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வந்துள்ளார்கள். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையில் விவாதிக்கப்படும் பொருளிலிருந்து விலகிச் சென்று அல்லது அவை மரபுக்கு அப்பாற்பட்டு உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கையில், தனக்கே உரித்தான பாணியில் அவையின் விதிமுறைகள் மற்றும் மரபுகளைச் சுட்டிக்காட்டி

தனது கருத்துகளை உறுதிபட தெரிவித்து, இப்பேரவையை செம்மையாக நடத்துவதிலே எனக்கு பேருதவியாக இருந்த மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றம் கண்ணியத்தோடும், ஜனநாயக ரீதியிலும் அனைவருடைய கருத்துகளின் அடிப்படையில் செயல்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. கே.பி. முனுசாமி, திரு. ஜி.கே. மணி மற்றும் திரு. நயினார் நாகேந்திரன் ஆகியோர் கருத்துகள் தெரிவித்துள்ளனர் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகின்றேன்.

மேலும், கொரோனா இரண்டாவது அலை பாதிப்பினைத் தொடர்ந்து உரிய பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்றி பேரவையைச் சிறப்புற நடத்துவதில் பேருதவி செய்த மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் உள்ளிட்ட—பெயரைச் சொல்லாத அமைச்சர்கள் எல்லோரும் சேர்ந்து—அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 3–10

பேரவை நிகழ்ச்சிகள் இனிதே நிறைவேறவும், உறுப்பினர்கள் விவாதங்களிலே சிறப்பாகப் பங்கேற்கவும் உதவி புரிந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா, சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது கனிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேரவைக் கூட்டம் இனிதே நடைபெற அனைத்து உதவிகளையும் செய்த தலைமைச் செயலாளர் டாக்டர் வெ. இறையன்பு, இ.ஆ.ப. அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர்களுக்கும் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இக்கூட்டத் தொடர் சிறப்பாக நடைபெற அனைத்து வகைகளிலும் உதவிய, நிதித் துறை, உள் துறை, பொதுப் பணித்

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

துறை, பொதுத் துறை, நகராட்சி நிர்வாகத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, தகவல் தொழில்நுட்பவியல் துறை மற்றும் செய்தித் துறை உள்ளிட்ட அனைத்து துறைச் செயலாளர்கள், செய்தித் துறை இயக்குநர் மற்றும் அலுவலர்கள் ஆகிய அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

“காகிதமில்லா பட்ஜெட்” (e-Budget) சமர்ப்பித்திட ஆக்கமும், ஊக்கமும் அளித்திட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், இத்திட்டத்தினை சிறப்புற செயல்படுத்திட உதவி செய்த மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அலுவலக உயர் அலுவலர்களுக்கும் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை முதன்மைச் செயலாளர் அவர்களுக்கும் மற்றும் துறை அலுவலர்களுக்கும் என்னுடைய நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

இப்பெருமை மிக்க பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி, காகிதமில்லா பட்ஜெட் மற்றும் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் ஆவணங்களை மென்பொருள் வடிவில் இங்கே காணும் வகையில், மிகக் குறுகிய காலத்தில் intranet உருவாக்கி சிறப்பு செய்த தேசிய தகவல் மையத்தின் (NIC) அனைத்து அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், காகிதமில்லா பட்ஜெட் (e-Budget) சமர்ப்பித்திடும் அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைத்துப் பணியாற்றிய சட்டமன்றப் பேரவைச் செயலாளர் தலைமையிலான National e-Vidhan Application-NeVA குழுவினரை மனதாரப் பாராட்டுகிறேன்.

பதினாறாவது சட்டமன்றப் பேரவையின் முதல் மற்றும் இரண்டாம் கூட்டத் தொடர்களின் அலுவல்கள் சிறப்புற நிறைவேற, அனைத்து வகைகளிலும் எனக்கு உறுதுணையாக இருந்து, மிகச் சிறந்த முறையில் உதவிபுரிந்த பேரவைச் செயலாளர் திரு. கி. சீனிவாசன் அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

மேலும், பேரவை சிறப்புச் செயலாளர், கூடுதல் செயலாளர்கள் உள்ளிட்ட பேரவையின் அனைத்து அலுவலர்களுக்கும் மற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும், பொதுப் பணித் துறைமூலம்

ஒலிபெருக்கி வசதி செய்து கொடுத்த பொறியாளர்களுக்கும், ஏனைய பணியாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று, பாதுகாப்பு ஏற்பாடுகளை திறம்பட செய்திட்ட காவல் துறைத் தலைவர், சென்னை காவல் ஆணையர் உள்ளிட்ட அனைத்து காவல் துறை அதிகாரிகளுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவை வளாகம் அமைந்துள்ள கலைவாணர் அரங்கின் மூன்று தளங்களையும் முறையாகப் பராமரித்து, கொரோனா தடுப்பு விதிமுறைகளைப் பின்பற்றி தூய்மையோடு இருக்க சிறப்புறப் பணியாற்றிய துப்புரவுப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது பாராட்டுகளையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சட்டமன்றப் பேரவையின் நிகழ்ச்சிகளை அன்றாடம் சிறப்புற ஒளிபரப்புச் செய்ய உதவிய தமிழ்நாடு திரைப்பட பிரிவினருக்கும், ஒலிவாங்கிகளை இயக்கும் ரேடியோ பிரிவினருக்கும், சட்டமன்ற நிகழ்வுகளை சிறந்த முறையில் மக்களுக்கு எடுத்துச்சென்ற அகில இந்திய வானொலி, பொதிகை தொலைக்காட்சி, தனியார் தொலைக்காட்சிகள், நாளிதழ்கள், பத்திரிகைகள், ஊடகங்கள், சமூக வலைதளங்கள், செய்தி நிறுவனங்கள், செய்தியாளர்கள், நிருபர்கள் மற்றும் புகைப்பட கலைஞர்கள் என அனைவருக்கும் எனது நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அனைவருக்கும் பாதுகாப்பு வழங்கிய அனைத்துப் பேரவைக் காவலர்களுக்கும் (Watch and Wards) பேரவையின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், கிட்டத்தட்ட 32 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த அவை ஜனநாயக முறையில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்றில்லாமல், (மேசையைத் தட்டும் ஒலி) அனைவரும் இணைந்து இந்த சபையில் மக்கள் பிரச்சினையை எடுத்து வைத்து மாண்போடு நடந்து கொண்டிருக்கின்றார்கள் என்றால், அதற்கு முழு மூலக் காரணமாக இருந்தவர், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நடுநிலையோடு என்னை நடந்துகொள்ள பணித்த காரணத்தினால், நான் இந்தப் பணியைச் செய்து, இந்தச் சபைக்கு மிகப் பெரிய ஒரு பெருமை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது

2021 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

என்றால், அதற்குக் காரணம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காட்டிய வழிகாட்டுதல்தான். ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசும்போதுகூட, முதல் நாளே உறுப்பினர்களுடைய பெயர்களை கையிலே வாங்கி, எவ்வாறு பேச வேண்டும்; யாருடைய மனமும் புண்படக்கூடிய அளவிற்குப் பேசக் கூடாது என்று அறிவுறுத்திப் பேச வைத்த மாண்புமிகு முதலமைச்சர் என்றால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் என்று நான் அதை பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–15

இது எனது அரசு என்று அல்ல, என் அரசு அல்ல, இது நமது அரசு என்று சொல்கின்ற அளவிற்குச் சிறப்பாக நடத்துகின்றார். (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது அன்று சொன்னார்; ஒரு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிக்குச் சென்றால், எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருந்தால்கூட தொலைபேசியில் தொடர்புகொண்டு, 'வாருங்கள் நிகழ்ச்சி இருக்கிறது' என்று முதல் நாளே சொல்கின்ற மாண்பு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இருந்து வரப்பெற்ற காரணத்தினால்தான், இப்போது இருவரும் ஒன்றாக, ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்றில்லாமல், சிறப்பாக இந்தச் சபை நடத்தப்பட்டது. ஆனால், பேரவைத் தலைவர் அவர்களுக்குத்தான்– ஆளுங்கட்சிக்காரர்கள், எதிர்க்கட்சிக்காரர்களுக்கு அதிகமாகப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுக்கிறார் என்றும், எதிர்க்கட்சியில் இருக்கின்றவர்கள் எங்களுக்குப் பேச வாய்ப்பில்லை என்றும் சொல்லுகிறார்கள் என்றால், இதுவே நான் நடுநிலையோடு இருக்கிறேன் என்பதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக, நான் என்னை எடுத்துக்கொள்கிறேன். இதற்கு முழு மூலக் காரணம், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான். ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று பாராமல் அனைவரையும் அரவணைத்து சென்று கொண்டிருக்கிறார்கள் என்றால், நான் பின்னோக்கிப் பார்க்கின்றேன். கிட்டத்தட்ட 32 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தப் பேரவையில் ஜனநாயகம் மலர்ந்திருக்கிறது. உங்கள் அனைவரின் சார்பாகவும், உங்களுக்கும் நான் என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பேரவையில் நானும்

இருக்கின்றேன், நீங்களும் இருக்கின்றீர்கள். அந்த நேரத்தில் இந்த சம்பவம் எனக்குப் பெருமை தருகிறது என்று கூறிக்கொள்கிறேன்.

10. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளபடியே இந்த மன்றத்தை, மாண்புமிகு முதல்வர் அவர்களை, இங்கு நடந்த விதத்தை அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறீர்கள். ஆனால், எங்களைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பிலே சொல்கிறேன். நீங்கள் முதல்முறையாக, இந்த சட்டமன்றப் பேரவைத் தலைவர் பொறுப்பிலே உட்கார்ந்து, இவ்வளவு சிறப்பாக நடத்துவீர்களா என்று நாங்கள் முதலில் கொஞ்சம் ஐயப்பட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்களே, 'இப்போது தலைவர் அவர்கள் எல்லாவற்றிலும் தேர்ந்துவிட்டார்' என்று அடிக்கடி சொல்வார்கள்.*

காரணம், அந்த இடத்திலே உட்காருகிறவர்கள்–மாண்புமிகு திரு. தனபால் போன்று இருக்க வேண்டும். பேச மாட்டார்கள். யார் அதிகம் பேசாமல் இருக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் அந்த இடம் லாயக்கு. ஆனால், நீங்களோ (சிரிப்பு) பெரிய பேச்சாளர். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களால் பேசாமல் இருக்க முடியவில்லை. பேசாமல் இருக்க வேண்டியிருக்கிறது. என்ன செய்வது? ஆனால், இதுவரை, பேசுகின்ற அந்த ஆவலை அடக்கிக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்தீர்களே, அதற்கே உங்களுக்கு கோடி நமஸ்காரம் செய்ய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் சில நேரங்களில் உங்களுக்குக் கை கொடுத்தது. அதுவே பலமாகவும் அமைந்து போய்விட்டது. ஏன் என்று கேட்டீர்களென்றால், சில நேரங்களில் மற்றவர்கள் எல்லாம், 'order, order உட்காருங்கள்' என்பார்கள். ஆனால், நீங்கள் அவர்களோடு சேர்ந்துகொண்டு, 'நீங்கள் இதைத்தானே பேசப் போகிறீர்கள், இதைத்தானே சொல்லப் போகிறீர்கள்'

2021 செப்டம்பர் 13] [திரு. துரைமுருகன்]

என்று சொல்லி, நல்லவிதமாக அவையை நடத்தி இருக்கிறீர்களே, உள்ளபடியே எங்கள் அனைவரின் பாராட்டும் ஒட்டுமொத்தமாகச் சேர்ந்திருக்கிறது. நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மூன்றாவது. நான் எத்தனையோ சபையைப் பார்த்திருக்கிறேன். ஆனால், இந்தச் சபையை, எந்தவிதமான சலசலப்பும் இல்லாமல், தகராறும் இல்லாமல் நீயா, நானா என்ற நிலை இல்லாமல், கட்டிக் காத்திருக்கிறீர்களே, அதற்கும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரின் சார்பிலும், எல்லா உறுப்பினர்களின் சார்பிலும் உங்களுக்கு எங்களின் பணிவான பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறோம். நீங்கள் ஒரு வரலாறை படைத்திருக்கிறீர்கள். ஆனால், அடுத்த முறை எங்களை இங்கே உட்கார வைக்காமல் பழைய சட்டசபைக்குக் கூட்டிக்கொண்டு போங்கள். ஏனென்றால், இங்கே உட்கார்ந்தாலே ஏதோ ஓரத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பது போன்று இருக்கிறது. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–18 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ.) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

33. 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நுகர்வோர் பாதுகாப்பு (மாநில ஆணையம் மற்றும் மாவட்ட ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் சம்பளம், படிகள் மற்றும் பணி நிலைமைகள்) விதிகளை இயற்றியது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (எச்1) துறையின் 25-6-2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 48-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2019 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 35/2019) 105(1) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

34. 2-12-2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம்-II, பிரிவு-2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/CTR/793(a)/2020 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்து 31-3-2021 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் அரசாணை (நிலை) எண் 72-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

35. தமிழ்நாடு கட்டட-மனை, விற்பனை ஒழுங்குமுறை குழுமம், 2016 ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் மனை விற்பனை (ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டத்தின் 85(1) மற்றும் (2)(i)-ன்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு 2018 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டட-மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமம் (பொது) ஒழுங்குமுறை விதிகளை இயற்றியது குறித்து. [2016 ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் மனை விற்பனை (ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 16/2016) 86(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

36. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் (i) 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய (மின் கட்டண வீதத்தினை நிர்ணயம் செய்வதற்கான விதிமுறைகள் மற்றும் வரையறைகள்) ஒழுங்குமுறை விதிகளுக்கு திருத்தம் செய்தது குறித்து 26-5-2021 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./மிக/5/3-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (ii) 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்வழங்கல் விதித்தொகுப்பிற்கு திருத்தம் செய்தது குறித்து

2021 செப்டம்பர் 13]

26–5–2021 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./வவி/7–45–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

37. 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வெடிமருந்து நிறுவனத்தின் முப்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

38. 2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் ஐம்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

39. 2017–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தின் ஆண்டறிக்கை மற்றும் தணிக்கை அறிக்கை. [2016 ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் மனை விற்பனை (ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 16/2016) 77(4) மற்றும் 78(2) பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

40. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தின் ஆண்டறிக்கை மற்றும் தணிக்கை அறிக்கை. [2016 ஆம் ஆண்டு கட்டடம் மற்றும் மனை விற்பனை (ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 16/2016) 77(4) மற்றும் 78(2) பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

41. 2017–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தணிக்கை அறிக்கை. [1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 47(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

42. 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் கழகத்தின் ஐம்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

43. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் முப்பத்து ஏழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

44. 2017–2018 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தொகுப்பு தணிக்கை அறிக்கை. [2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/2014) 20 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

45. 2018–2019 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தொகுப்பு தணிக்கை அறிக்கை. [2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/2014) 20 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

46. 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (வருவாய் மற்றும் பொருளாதாரப் பிரிவு). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

47. 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (இணக்கத் தணிக்கை). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

48. 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் நிதிக் கணக்குகள் (தொகுதி 1 மற்றும் 2) (ஆங்கிலம்) மற்றும் நிதி ஒதுக்கக் கணக்குகள் (ஆங்கிலம்) ஆகியவற்றை உள்ளடக்கிய குறுந்தகடு. [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2021 செப்டம்பர் 13]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

118. பதினைந்தாவது நிதி ஆணையத்தின் முதன்மை அறிக்கையின் சுருக்கமும் அதன் பரிந்துரைகள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளக்கக் குறிப்பும் (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

119. 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாடு மற்றும் புதுப்பிப்பு நிதியத்தின் பதினான்காவது ஆண்டறிக்கை. (தமிழ்–ஆங்கிலம்)

120. 2018–2019 ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் ஆண்டறிக்கை. (தமிழ்–ஆங்கிலம்)

121. மானியக் கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

122. மானியக் கோரிக்கை எண் 38–பொதுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

123. மானியக் கோரிக்கை எண் 38–பொது (தேர்தல்கள்)த் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

124. மானியக் கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

125. மானியக் கோரிக்கை எண் 16–நிதித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

126. நிதித் துறை பற்றிய மக்கள் சாசனம், 2021. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

127. மானியக் கோரிக்கை எண் 35–மனித வள மேலாண்மைத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

128. மானியக் கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2021–2022. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

129. சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (தொல்லியல்) துறையின் 'பொருநை'–ஆற்றங்கரை நாகரிகம் என்கிற சிறு நூல். (தமிழ்)

130. மதிப்பீட்டுக் குழுவின் ஒன்றாவது அறிக்கை. (2021–2022)

131. மதிப்பீட்டுக் குழுவின் இரண்டாவது அறிக்கை. (2021–2022)

132. பொதுக் கணக்குக் குழுவின் ஒன்றாவது அறிக்கை. (2021–2022)

133. பொதுக் கணக்குக் குழுவின் இரண்டாவது அறிக்கை. (2021–2022)

134. பொதுக் கணக்குக் குழுவின் மூன்றாவது அறிக்கை. (2021–2022)

135. பொது நிறுவனங்கள் குழுவின் ஒன்றாவது அறிக்கை. (2021–2022)

136. பொது நிறுவனங்கள் குழுவின் இரண்டாவது அறிக்கை. (2021–2022)

137. பொது நிறுவனங்கள் குழுவின் மூன்றாவது அறிக்கை. (2021–2022)

138. அரசு உறுதிமொழிக் குழுவின் ஒன்றாவது அறிக்கை. (2021–2022)

139. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (ஒன்றாவது பட்டியல் (2021)) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

140. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (இரண்டாவது பட்டியல் (2021)) (வரிசை எண்கள் 1 முதல் 200 வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

141. 2011–2012 முதல் 2020–2021 வரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–ன்கீழ் அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்புகளின் நிலை குறித்த விவரம் அடங்கிய மின்னணு புத்தகம்.

———————

14. இணைப்புகள்

இணைப்பு–I

(1 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல்கள் 1 மற்றும் 2)@

—

பட்டியல்-1

1—

கட்டுமானப் பொருட்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துதல்

வினா எண் 1234—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கட்டுமானப் பொருட்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

ஆம். கட்டுமானப் பொருட்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்த அரசு தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

2—

ஏரி தூர்வாருதல்

வினா எண் 1269—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி நகராட்சியில் உள்ள சித்தேரி மற்றும் பெரிய ஏரியைத் தூர்வார அரசு முன்வருமா?

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி பெரிய ஏரி மற்றும் சித்தேரியினை ரூ.70.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர்வாருதல் உள்ளிட்ட பணிகளை புனரமைக்க அரசின் ஒப்புதல் பெற்றவுடன் பணிகள் மேற்கொள்ளப்படும்.

3—

மலைகளின் நீரை ஏரிகளில் நிரப்புதல்

வினா எண் 1273—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி ஒன்றியம், மலைகோட்டாலம் ஊராட்சியில் உள்ள மலைகளிலிருந்து வரும் நீரை வாய்க்கால் அமைத்து கனங்கூர், சித்தேரி, சாத்தனூர், எஸ்.ஓகையூர் மற்றும் ஈயனூர் ஏரிகளுக்கு கொண்டு செல்ல அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

சித்தேரி, சாத்தனூர் மற்றும் ஈயனூர் ஏரிகள் பொதுப் பணித் துறை கட்டுப்பாட்டின்கீழ் இல்லை. அவை தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். எனவே, இம்மூன்று ஏரிகளுக்கும் வாய்க்கால் அமைக்கும் பணி பொதுப் பணித் துறையில் மேற்கொள்ள இயலாது. கனங்கூர் ஏரி மற்றும் எஸ். ஓகையூர் ஏரிகளுக்கு வாய்க்கால் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

4—

வாய்க்கால் தூர்வாருதல்

வினா எண் 1274—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி ஒன்றியம், தென்கீரனூர் ஏரிக்கு நீர் வரும் வாய்க்காலைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி ஒன்றியம், தென்கீரனூர் ஏரிக்கு செல்லும் வரத்து வாய்க்கால் குடிமராமத்து திட்டம் 2020-2021-ன்கீழ் தூர்வாரப்பட்டது.

5—

சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதி

வினா எண் 02—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சி, 27-வது வார்டு, ரோஜா தோட்டம் பகுதிக்கு சாலை வசதி மற்றும் மழைநீர் வடிகால் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட ரோஜா தோட்டம் பகுதிக்கு சாலை வசதி மற்றும் மழைநீர் வடிகால் வசதி ஏற்படுத்த TNSUDP *திட்ட நிதியின்கீழ் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.*

6—

மார்க்கெட் அமைத்தல்

வினா எண் 06—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் பெருநகராட்சிக்கு உட்பட்ட இரும்புலியூர் பகுதியில் அறநிலையத் துறைக்குச் சொந்தமான

இடத்தைப் பெற்று புதிய பெரிய மார்க்கெட் பகுதி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் நகராட்சி, துரைசாமி காய்கறி மார்க்கெட் தற்போது சண்முகம் சாலையையொட்டி இயங்கி வருகிறது. மேற்கு தாம்பரம் டி.டி.கே. நகர் பைபாஸ் சாலை சர்வீஸ் ரோடு அருகே அறநிலையத் துறைக்குச் சொந்தமான காலி இடம் உள்ளது. கொரோனா ஊரடங்கு காலத்தில் தற்காலிக மார்க்கெட்டாக திறந்தவெளியில் இப்பகுதியானது மாற்று இடமாக பயன்படுத்தப்பட்டது. மேற்படி இடத்தில் நகராட்சிக்கு மார்க்கெட் அமைக்க முன்னுழைவு அனுமதி கோரப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கும்பட்சத்தில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

7—

பாதாள சாக்கடைத் திட்டம்

வினா எண் 09—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் பெருநகராட்சியில் நடைபெற்றுவரும் பாதாள சாக்கடைத் திட்டத்தினை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் நகராட்சி, பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் ரூ.160.97 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று

2021 செப்டம்பர் 13]

வருகின்றன. இதில், நகராட்சிமூலம் கிழக்கு தாம்பரம் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் 98 சதவீத பணிகள் முடிக்கப்பட்டு, முடிவுற்ற பகுதிகளில் பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. மீதமுள்ள பகுதிகளில் விரைவில் முடிக்கப்படும். மேற்கு தாம்பரம் பகுதியில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் வாரியம்மூலம் 90 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டு, முடிவுற்ற பகுதிகளில் வீட்டிணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. மீதமுள்ள பணிகள் டிசம்பர் 2021-க்குள் முடிக்கப்படும்.

8—

குடிநீர் வசதி

வினா எண் 11—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் பெருநகராட்சி, ராதா நகர், திருப்பூர் குமரன் தெருவில் உள்ள "அதிதி" அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் வசிக்கும் மக்களுக்கு பாலாற்று குடிநீர் வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண் 32-ல் உள்ள "அதிதி" அடுக்குமாடி குடியிருப்பு பகுதியில் சுமார் 300 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இப்பகுதி மக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்கும்பொருட்டு புதியதாக குடிநீர் பகிர்மான குழாய்கள் பதிக்கும் பணி நகராட்சிமூலம் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.30.00 இலட்சத்திற்கு மன்றத்தின் நிருவாக அனுமதி பெறப்பட்டு, தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் நிலையில் உள்ளது.

[2021 செப்டம்பர் 13

9—

மழைநீர் வடிகால் வசதி

வினா எண் 14—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, பீர்க்கன்கரணை 15-வது வார்டு இந்திரா நகர், பாரதிதாசன் நகர் மற்றும் ஏ.எஸ். ராஜன் நகர், கஸ்தூரி நகர் பகுதிகளில் மழைக்காலங்களில் வீடுகளில் நீர் புகுந்துவிடுகிறது. இந்த நீரை பாப்பான் கால்வாயில் சென்றடைய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், பீர்க்கன்கரணை தேர்வு நிலை பேரூராட்சியின் 15-வது வார்டுக்குட்பட்ட அன்னை இந்திரா நகர், பாரதிதாசன் நகர், ஏ.எஸ். ராஜன் நகர் மற்றும் கஸ்தூரி நகர் பகுதிகளில் 449 குடியிருப்பு வீடுகள் உள்ள நிலையில் இப்பகுதியில் ஏற்கெனவே பேரூராட்சியின்மூலம் 2017-2018 ஆம் ஆண்டு பொது நிதியின்கீழ் ரூ.46.00 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

மேற்படி பகுதிகள் தாழ்வான பகுதிகள் என்பதால் அதிகப்படியான மழை பொழியும்போது தாம்பரம் நகராட்சிக்குட்பட்ட இரும்புலியூர் மற்றும் பீர்க்கன்கரணை ஏரியிலிருந்து வெளியேறும் உபரிநீரால் வெள்ளநீர் வீடுகளில் புகுந்துவிடுகிறது. இவற்றினை தடுக்கும் வகையில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி நிதிநிலைக்கேற்ப ஆய்வு செய்யப்படும்.

10—

சாலை விரிவாக்கம்

வினா எண் 16—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2021 செப்டம்பர் 13]

(அ) தாம்பரம் தொகுதி, சிட்லபாக்கம் பேரூராட்சி, அண்ணா தெரு முதல் சேலையூர் மகாலட்சுமி நகர் வரை இணைக்கும் சிட்லபாக்கம்—செம்பாக்கம் பிரதான சாலையை விரிவுபடுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், சிட்லபாக்கம் பேரூராட்சிக்குட்பட்ட அண்ணா தெரு முதல் மகாலட்சுமி நகர் வரை இணைக்கும் சாலை 14-வது நிதிக்குழு மானியம் 2020-2021-ன்கீழ் ரூ.145.00 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் தார்ச் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. மேலும், சிட்லபாக்கம்-செம்பாக்கம் பிரதான சாலையை அகலப்படுத்திட போதிய இடவசதி இல்லை.

11—

வடிகால் வசதி

வினா எண் 17—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, சிட்லபாக்கம் ஏரியில் இருந்து வெளியேற்றப்படும் உபரிநீரை கங்கை அம்மன் கோவில் பின்புறம் உள்ள குளத்தில் வந்து சேரவும், நிலத்தடி நீர் உயரவும் ஒரு பைப்லைனை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். இப்பேரூராட்சியின் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான சிட்லபாக்கம் ஏரியில் இருந்து வெளியேற்றப்படும் உபரிநீரை பைப்லைன்மூலம் அண்ணா தெரு

வழியாக கங்கையம்மன் கோயில் குளத்தில் சென்றடைய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிதிநிலைக்கேற்ப பணிகள் மேற்கொள்ளப்படும்.

12—

நடைபாதை கடைகள் அகற்றுதல்

வினா எண் 28—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மேற்கு தாம்பரம், சண்முகம் சாலையில் உள்ள அரசு கிளை நூலகம் முன்புறம் உள்ள நடைபாதை கடைகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொரோனா தொற்று காலம் என்பதால், சிறுகடை வியாபாரிகளுக்கான சங்கக் கூட்டம் கடந்த 2 ஆண்டுகளாக நடத்தப்படவில்லை. விரைவில் சிறு கடை வியாபாரிகள் கூட்டம் நடத்தப்பட்டு அதில் எடுக்கப்படும் முடிவுக்கேற்ப அரசு நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது.

13—

பேருந்து நிறுத்தம் அமைத்தல்

வினா எண் 70—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சி, கடப்பேரி பகுதிக்கென தனியாக ஒரு பேருந்து நிறுத்தம் (bus stop) அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம், வார்டு எண்-02-ல், கடப்பேரி பகுதியில் தாம்பரம் நகர் பகுதி பொதுமக்களின் போக்குவரத்து வசதிக்காக அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி பேருந்து நிலையம் அப்பகுதி மக்களுக்கு போதுமானதாக உள்ளதால் கடப்பேரி பகுதியில் பேருந்து நிறுத்தம் அமைக்க வேண்டியதன் அவசியம் எழவில்லை.

14—

சாலை வசதி

வினா எண் 98—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, புதுபெருங்களத்தூர், புத்தர் நகர் 6-வது தெருவிற்கு சாலை வசதி செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருங்களத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண் 7, புத்தர் நகர் 6-வது தெருவில் 32 குடியிருப்புகள் மற்றும் சுமார் 110 பொது மக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியானது பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான சித்தேரி நீர்பிடிப்புப் பகுதியில் அமைந்துள்ளது. எனவே, இப்பகுதியில் உள்ள ஆக்கிரமிப்பாளர்களுக்கு சாலை வசதி போன்றவற்றை ஏற்படுத்திக்கொடுக்க வழிவகை ஏதும் இல்லை.

சட்டமன்ற TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2021 செப்டம்பர் 13

15—

மழைநீர் வடிகால்வாய்களுக்கு மூடி அமைத்தல்

வினா எண் 101—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, பெருங்களத்தூர் பேரூராட்சி, 14-வது வார்டில் உள்ள அனைத்து தெருக்களிலும் மழைநீர் வடிகால்வாய்களுக்கு கான்கிரீட் மூடி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருங்களத்தூர் பேரூராட்சியானது 7.354 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், சுமார் 40,000 மக்கள்தொகையும், 15 வார்டுகள் மற்றும் 12,000 குடியிருப்புகளும் கொண்டுள்ள பேரூராட்சியாகும். இப்பேரூராட்சியில் 94.325 கி.மீ. சாலை உள்ளது மற்றும் 40.180 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பேரூராட்சியில் 14-வது வார்டுக்குட்பட்ட அனைத்து தெருக்களிலும் மழைநீர் வடிகால்வாய்களுக்கு கான்கிரீட் மூடி அமைப்பதற்கு நிதி நிலைக்கேற்ப ஆய்வு செய்யப்படும்.

16—

மழைநீர் வடிகால்வாய் அமைத்தல்

வினா எண் 104—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, பெருங்களத்தூர் பேரூராட்சியை சேர்ந்த ஸ்ரீபரமேஸ்வரா நகரில் மழைநீர் வடிகால் கால்வாய் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருங்களத்தூர் பேரூராட்சியானது 7.354 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், சுமார் 40,000 மக்கள்தொகையும், 15 வார்டுகள் மற்றும் 12,000 குடியிருப்புகளும் கொண்டுள்ள பேரூராட்சியாகும். இப்பேரூராட்சியில் 94.325 கி.மீ. சாலை உள்ளது மற்றும் 40.180 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளது. பெருங்களத்தூர் பேரூராட்சியில் வார்டு எண் 14, ஸ்ரீபரமேஸ்வரா நகர் பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைப்பதற்கு நிதி நிலையின் அடிப்படையில் ஆய்வு செய்யப்படும்.

17—

மின்விளக்கு அமைத்தல்

வினா எண் 105—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, பெருங்களத்தூர் பேரூராட்சி, பார்வதி நகரில் உள்ள அனைத்து தெருக்களிலும் LED ஆற்றல்மிகு மின் விளக்குகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருங்களத்தூர் பேரூராட்சியானது 7.354 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், சுமார் 40,000 மக்கள்தொகையும், 15 வார்டுகள் மற்றும் 12000 குடியிருப்புகளும் கொண்டுள்ள பேரூராட்சியாகும். இப்பேரூராட்சியில் 517 தெருக்களில் மொத்தம் 2868 மின் விளக்குகள் கம்பங்களில் பொருத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், 2019-2020 ஆம் ஆண்டு பொது நிதியின்கீழ் 41 எண்ணிக்கை சோடியம் உயர்கோபுர மின் விளக்குகளை LED மின்விளக்குகளாக மாற்றியமைக்கப்பட்டுள்ளன. மேலும், புதியதாக 2 எண்ணிக்கை சோலார் மின் விளக்குகளும்

TRUTH ALONE TRIUMPHS

அமைக்கப்பட்டுள்ளன. பெருங்களத்தூர் பேரூராட்சி, 14-வது வார்டுக்குட்பட்ட பார்வதி நகரில் உள்ள அனைத்து தெருக்களிலும் படிப்படியாக LED *மின் விளக்குகள் மாற்றியமைப்பதற்கு நிதி நிலைக்கேற்ப ஆய்வு செய்யப்படும்.*

18—

குடிநீர் வசதி

வினா எண் 106—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, பீர்க்கன்கரணை பேரூராட்சிக்கு பாலாற்று நீர் அல்லது வீராணம் குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், பீர்க்கன்கரணை தேர்வு நிலை பேரூராட்சியில் கடந்த 2000 ஆம் ஆண்டு பொன்விழா ஆண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ரூ.221.72 இலட்சம் மதிப்பீட்டில் 3 குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மொத்த கொள்ளளவு 22.00 இலட்சத்தில் கட்டப்பட்டு, பேரூராட்சியின் சொந்த குடிநீர் ஆதாரத்தைக் கொண்டு 15 வார்டுகளிலும் உள்ள 7500-க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் மற்றும் சிறு வணிக நிறுவனங்களிலும் உள்ள பொதுமக்களுக்கு தினசரி 70 LPCD *வீதம் சீராக விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.*

இந்நிலையில் தற்போது இப்பேரூராட்சி பகுதியில் பாலாற்று நீர் அல்லது வீராணம் குடிநீர் வழங்கும் தேவை எழவில்லை.

19—

மயானபூமி அமைத்தல்

வினா எண் 109—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2021 செப்டம்பர் 13]

(அ) தாம்பரம் தொகுதி, பீர்க்கன்கரணை பேரூராட்சி பகுதியில் முஸ்லீம் மதத்தவர்களுக்கு மயான பூமி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், பீர்க்கன்கரணை தேர்வு நிலை பேரூராட்சி, வேலு நகர் பகுதியில் கிராம சர்வே எண் 183/1 ஏரியும், தாங்கல் பகுதியில் 1.47 ஏக்கர் பரப்பளவில் மயானமும் அமைந்துள்ளன. இதில் 0.78 ஏக்கர் பரப்பளவில் இந்துக்களுக்கான மயானமாகவும், 0.69 ஏக்கர் கிருஸ்துவர்களுக்கான மயானமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், இப்பேரூராட்சி எல்லையினையொட்டி ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பெருங்களத்தூர் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட குண்டுமேடு பகுதி மற்றும் தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கடப்பேரி பகுதிகளில் உள்ள முஸ்லீம்களுக்கான மயான பூமியில் நல்லடக்கம் செய்து வருகின்றனர்.

20—

இணைப்புச் சாலை அமைத்தல்

வினா எண் 111—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சி, கடப்பேரி ஜெயா தெருவையும், லுத்திரன் சர்ச் தெருவையும் இணைக்கும் ஓர் இணைப்புச் சாலை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண் 4-ல், கடப்பேரி, ஜெயா தெரு மற்றும்

லுத்திரன் சர்ச் தெரு அமைந்துள்ளது. மேற்படி தெருக்களுக்கு இடைப்பட்ட பகுதியில் தனியாருக்கு சொந்தமான வீடுகள் உள்ளதால் இத்தெருக்களுக்கு இடையே இணைப்புச் சாலை அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை.

21—

சமுதாய நலக்கூடம் விரிவாக்கம்

வினா எண் 120—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சி, பஜனை கோவில் தெருவில் அமைந்துள்ள சமுதாய நலக் கூடத்தை விரிவுபடுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண் 37-ல் பஜனை கோவில் தெருவில் அமைந்துள்ள சமுதாய நலக் கூடத்தினை விரிவுபடுத்திட அப்பகுதியில் போதுமான இடவசதி இல்லாத காரணத்தினால், மேற்படி சமுதாய நலக் கூடத்தினை விரிவுபடுத்திட இயலாது.

22—

பாதாள சாக்கடை அமைத்தல்

வினா எண் 150—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்போரூர் தொகுதி, திருக்கழுக்குன்றம் பேரூராட்சியில் பாதாள சாக்கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள திருக்கழுக்குன்றம் பேரூராட்சி 11.2 சதுர கி.மீ. பரப்பளவு மற்றும் 2011 ஆம் ஆண்டிற்கான கணக்கெடுப்பின்படி, மக்கள் தொகை 29,391 கொண்டதாகும். தற்போதைய மக்கள் தொகை உத்தேசமாக 32,000 ஆகும். பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கும் அளவிற்கு மக்கள் தொகை இல்லாத காரணத்தினாலும், பாதாள சாக்கடைத் திட்டம் அமைப்பதற்குத் தேவையான மிகுதியான நிதி மற்றும் செயல்படுத்தத் தேவைப்படும் காலம் ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டும் திருக்கழுக்குன்றம் பேரூராட்சிப் பகுதியில் உருவாகும் கழிவுநீரின் அளவினைக் கருத்தில் கொண்டும், சிறிய பேரூராட்சிகளுக்கு உசிதமானதும், பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றாகவும் கசடுகழிவு மேலாண்மைத் திட்டம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

23—

சென்னைப் பெருநகரை இரண்டாகப் பிரித்தல்

வினா எண் 151—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்போரூர் தொகுதி, சென்னை பெருநகரத்தை ஒட்டியுள்ள நாவலூர் தொடங்கி திருப்போரூர், கானாத்தூர் தொடங்கி, கோவளம் வரை உள்ள பகுதிகளை சென்னை பெருநகரத்தோடு இணைத்து சென்னை பெருநகரை இரண்டாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இப்பொருள் தொடர்பான செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

24—

கலைஞர் உணவகம் அமைத்தல்

வினா எண் 181—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்போரூர் தொகுதியில் "கலைஞர் உணவகம்" அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேரூராட்சிகள் துறைமூலம் "கலைஞர் உணவகம்" அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

25—

கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

வினா எண் 184—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, தஞ்சாவூர் ஒன்றியம், சித்திரகுடி முதல் மேலவெளி வரையுள்ள 10 ஊராட்சிகளில் நிலத்தடி நீர் உப்பாக மாறியுள்ளதால், புதிய கொள்ளிடம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் ஒன்றியத்தில் சித்திரகுடி முதல் மேலவெளி வரையுள்ள 10 ஊராட்சிகளிலுள்ள 23 குடியிருப்புகளில்

2021 செப்டம்பர் 13]

குடிநீரின் தன்மை வரையறுக்கப்பட்ட அளவில் இல்லை. எனவே, இப்பகுதிகளுக்கு ஆற்று நீரைக் குடிநீராக வழங்க, ஊரக வளர்ச்சித் துறையின் பரிந்துரையைப் பெற்று, தோராயமாக ரூ.95.00 கோடி மதிப்பீட்டில் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. உத்தேசிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின்மூலம் நாளொன்றுக்கு தேவையான 3.00 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்க இயலும்.

26—

சாலை வசதி

வினா எண் 775—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, மாடம்பாக்கம் பேரூராட்சி, தேனுகாம்பாள் நகரில், 8-வது வார்டில் சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாடம்பாக்கம் பேரூராட்சி, வார்டு எண் 8, தேனுகாம்பாள் நகரில் 9 சாலைகள் உள்ளன. இந்த இடம் அருள்மிகு தேனுபுரீஸ்வரர் கோவிலுக்குச் சொந்தமான இடம். எனவே, அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமானதாலும், அறநிலையத் துறை, சட்டப் பிரிவு 78-ன்கீழ் வழக்கு உள்ளதாலும், தற்போதைய நிலையில் சாலை வசதி ஏற்படுத்த இயலாது.

எனவே, மேற்படி அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் வரும் தேனுகாம்பாள் நகரில் சாலை அமைக்க தற்போது வழிவகை இல்லை.

[2021 செப்டம்பர் 13

27—

கோயில் குளம் தூர்வாருதல்

வினா எண் 779—திரு. S.R. இராஜா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, பெருங்களத்தூர் பேரூராட்சியில் பொன்னியம்மன் கோயில் குளத்தைத் தூர்வாரி, நடைபாதைகளை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருங்களத்தூர் பேரூராட்சியானது 7.354 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், சுமார் 42,000 மக்கள்தொகையும், 15 வார்டுகள் மற்றும் 12,500 குடியிருப்புகளும் கொண்டுள்ள சிறப்புநிலைப் பேரூராட்சியாகும். பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மொத்தம் 5 குளங்கள் பேரூராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இதில் பொன்னியம்மன் கோயில் குளத்தினைத் தூர்வாரி, நடைபாதை அமைக்க நிதிநிலையின் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

28—

மின் மயான தகனமேடை அமைத்தல்

வினா எண் 780—திரு. S.R. இராஜா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, பெருங்களத்தூர் பேரூராட்சியில் மயானத்தில் மின் மயான தகன மேடை அமைத்து சுற்றுப்புறச் சுவர் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருங்களத்தூர் பேரூராட்சியானது 7.354 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும் சுமார் 42,000 மக்கள்தொகையும், 15 வார்டுகள் மற்றும் 12,500 குடியிருப்புகளும் கொண்டுள்ள சிறப்புநிலைப் பேரூராட்சியாகும். இப்பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மொத்தம் 4 எண்ணிக்கைகள் சுடுகாடு மற்றும் இடுகாடுகள் அமைந்துள்ளன. மேற்படி சுடுகாடு மற்றும் இடுகாடுகளில் அடிப்படை வசதிகளான மின் விளக்கு, ஆழ்துளைக் கிணறு மற்றும் சின்டெக்ஸ் தொட்டி மற்றும் சாலை அமைக்கப்பட்டும், 3 எண்ணிக்கை சுடுகாடுகளில் சுற்றுச் சுவர் அமைக்கப்பட்டும், 1 எண்ணிக்கை சுடுகாடு பகுதியில் முள் வேலி அமைக்கப்பட்டும் பராமரிக்கப்பட்டு வருகிறது.

பெருங்களத்தூர் பேரூராட்சி, வார்டு எண் 10, குண்டுமேடு பகுதியில் சுமார் 5 ஏக்கர் பரப்பளவு கொண்ட மேற்படி சுடுகாடு இந்து, முஸ்லிம் மற்றும் கிருத்துவர் ஆகிய மதத்தினரால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, மேற்படி சுடுகாடு பகுதியில் நவீன எரிவாயு தகன மேடை அமைப்பதற்கு நிதி நிலையின் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

29—

வடிகால் வசதி

வினா எண் 1020—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி நகரத்திலுள்ள அனைத்துக் குளங்களையும் தூர்வாரி, ஆக்கிரமிப்புகளை அகற்றி, வடிகால் வசதி செய்துதர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

மன்னார்குடி நகராட்சி எல்லைக்குள் மொத்தம் 92 குளங்கள் மற்றும் குட்டைகள் உள்ளன. நகராட்சியினால்

பராமரிக்கப்பட்டுவரும் 43 குளங்களில் சென்ற ஆண்டு வரை 20 குளங்கள் குடிமராமத்துப் பணியின்கீழ் ஆக்கிரமிப்பு அகற்றித் தூர்வாரப்பட்டுள்ளன. நகராட்சி பராமரிப்பில் மீதமுள்ள 23 குளங்களில் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்றி தூர்வாரி வடிகால் வசதி செய்யும் பணிகளை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

30—

பள்ளிக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 1031—முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி நகராட்சி அர்பன் மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடங்கள் கட்டவும், புதிய பாடப் பிரிவுகள் தொடங்கவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

மன்னார்குடி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 25, கோபாலசமுத்திரம், மேலவீதியில் நகராட்சி அர்பன் பேங்க் மேல்நிலைப் பள்ளி உள்ளது. இப்பள்ளியில் தற்போது மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை 140 ஆகும். மாணவ, மாணவிகள் படிப்பதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான வகுப்பறைகள், ஆய்வுக்கூடம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதியுடன்கூடிய கட்டடங்கள் போதுமானதாக உள்ளன. புதிய பாடப் பிரிவுகள் கல்வித் துறையால் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்பட்சத்தில புதிய கட்டுமானங்கள் சகல வசதியுடன் கட்டுவதற்கு நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

31—

கழிவுநீரகற்றும் நிலையம் அமைத்தல்

வினா எண் 1377— திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2021 செப்டம்பர் 13]

(அ) வேளச்சேரி தொகுதி, வேளச்சேரி பேபி நகர் பகுதியில் கழிவுநீரகற்றும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி பேபி நகரின் சாலையோர கழிவுநீரகற்றும் நிலையம் தற்போது நல்ல நிலையில் இயங்கிக்கொண்டிருக்கிறது. பேபி நகர், உதயம் நகர், ஆறுமுகம் நகர், மகாவீர் காலனி, பார்க் அவென்யூ, அண்ணா நகர், சச்சிதானந்தம் நகர், வீனஸ் காலனி ஆகிய பகுதிகளில் உருவாகும் கழிவுநீர் மேற்கூறிய கழிவுநீரகற்று நிலையத்திலிருந்து பெருங்குடி சுத்திகரிப்பு நிலையத்திற்கு சீதாபதி நகர் கழிவுநீரகற்று நிலையத்தின் வழியாக அனுப்பப்படுகிறது. நாளொன்றுக்கு 0.8 மில்லியன் லிட்டர் கழிவுநீர் சேகரிக்கப்பட்டு அகற்றப்பட்டு வருகிறது. எனவே, புதிதாக கழிவுநீரகற்றும் நிலையம் அமைப்பதற்கான அவசியம் எழவில்லை.

32—

குடிநீர் விநியோகம்

வினா எண் 1385— திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதியிலுள்ள பார்க் அவென்யு, உதயம் நகர், உதயம் நகர் விரிவாக்கம், ஆறுமுகம் நகர், அமிர்தம் அவென்யு ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு குழாய்கள்மூலம் தண்ணீர் விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதியிலுள்ள பார்க் அவென்யு, உதயம் நகர், உதயம் நகர் விரிவாக்கம், ஆறுமுகம் நகர், அமிர்தம்

அவென்யு ஆகிய பகுதிகளில் உள்ள அனைத்து தெருக்களிலும் குடிநீர்க் குழாய் அமைக்கப்பட்டு, வேளச்சேரி குடிநீர் பகிர்மான நிலையத்திலிருந்து தினமும் காலை 6 மணி முதல் 10 மணி வரை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட தெருக்களிலுள்ள குடிநீர்க் குழாய்கள் சுத்தம் செய்யப்பட்டு தற்பொழுது குடிநீர் சீராக அனைத்துத் தெருக்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.

33—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி புனரமைத்தல்

வினா எண் 1388— திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, தரமணி குடிநீர் நிலையம், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, தரமணிக் கோட்டம் 76,000 மக்கள் தொகையும், 216 தெருக்களையும் கொண்டதாகும். தரமணிக் கோட்டத்திற்கு, வேளச்சேரி குடிநீர்ப் பகிர்மான நிலையம் மற்றும் பள்ளிப்பட்டு குடிநீர்ப் பகிர்மான நிலையம்மூலம் தினமும் காலை 6.00 மணி முதல் காலை 11.00 மணி வரை சுமார் 5.00 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், குடிநீர் ஊர்திகள்மூலம் 30 நடைகள், 65 குடிநீர் தொட்டிகள் மூலமும் மற்றும் 12 தெரு நடைகள் மூலமும் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. தரமணி கோட்டத்தில் 96 பொதுக் குழாய்கள் பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளன. மேலும், பொதுமக்களின் மற்ற தேவைகளுக்கு 21 இந்தியா மார்க் 2 குழாய்கள் நிறுவப்பட்டு இயங்கிக்கொண்டிருக்கின்றன. வேளச்சேரி மற்றும் பள்ளிப்பட்டு குடிநீர் பகிர்மான நிலையங்கள்மூலம் தரமணிக் கோட்டத்திற்குப் போதுமான குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருவதால், பீலியம்மன்

2021 செப்டம்பர் 13]

கோயில் தெருவில் அமைந்துள்ள (தரமணி பேருந்து நிலையம் அருகில் உள்ள) பழைய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை புனரமைக்க வேண்டிய அவசியம் தற்பொழுது எழவில்லை என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

34—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி புனரமைத்தல்

வினா எண் 1391— திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, இந்திரா நகர் பகுதியிலுள்ள பழமைவாய்ந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, இந்திரா நகர் பகுதி, 45,000 மக்கள் தொகையும், 60 தெருக்களையும் கொண்டதாகும். இந்திரா நகர் பகுதிக்குப் பள்ளிப்பட்டுக் குடிநீர்ப் பகிர்மான நிலையத்திலிருந்து தினமும் காலை 4.00 மணி முதல் காலை 9.00 மணி வரை சுமார் 5.50 மில்லியன் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், குடிநீர் ஊர்திகள்மூலம் 12 தெரு நடைகள் மூலமும் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேலும், 60 பொதுக் குழாய்கள் பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளன. இதுதவிர, பொதுமக்களின் மற்ற தேவைகளுக்கு 09 இந்தியா மார்க் 2 குழாய்கள் நிறுவப்பட்டு இயங்கிக்கொண்டிருக்கின்றன. பள்ளிப்பட்டு குடிநீர் பகிர்மான நிலையங்கள்மூலம் இந்திரா நகர் பகுதிக்குப் போதுமான குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருவதால், இந்திரா நகர், 2-வது அவென்யூவில் அமைந்துள்ள பழைய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியைப் புனரமைக்க வேண்டிய அவசியம் தற்பொழுது எழவில்லை என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

[2021 செப்டம்பர் 13

35—

குடிநீர் வாரிய கட்டடம் கட்டுதல்

வினா எண் 1392— திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, அடையாறு பக்தவத்சலம் நகர் பகுதியிலுள்ள குடிநீர் வாரியக் கட்டடத்தைப் புனரமைத்து புதிய கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, நெ 24, 5-வது குறுக்குத் தெரு, பக்தவத்சலம் நகரில் பணிமனை அலுவலகம் 175 இயங்கி வருகிறது. தற்பொழுது கட்டடம் நல்ல முறையில் இருப்பதால், இதனைப் புனரமைக்க வேண்டிய அவசியம் தற்பொழுது இல்லை.

36—

குடிநீர் நிலையம் அமைத்தல்

வினா எண் 1395—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதியில் விஜயநகர் பைபாஸ் சாலையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதியில் 100 அடி பைபாஸ் சாலையில் தற்பொழுது ஒரு குடிநீர் பகிர்மான

2021 செப்டம்பர் 13]

நிலையம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையத்தில் 5.85 மில்லியன் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை குடிநீர்த் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது. இப்பகிர்மான நிலையத்திற்கு வீராணம் குடிநீர் மற்றும் நெம்மேலி கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையத்தின்மூலம் நாளொன்றுக்கு சுமார் 30 மில்லியன் லிட்டர் பெறப்பட்டு தினமும் காலையில் கிழக்கு வேளச்சேரி பகுதிக்கு (கோட்டம் 178, 179 மற்றும் 180) 16 மில்லியன் லிட்டர் குடிநீர் காலை 4.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதேபோன்று, மேற்கு வேளச்சேரி பகுதிக்கு (கோட்டம் 177 மற்றும் 178) மாலையில் 4.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை 14 மில்லியன் லிட்டர் அளவு போதுமான குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

37—

திறந்தவெளி கிணறு அமைத்தல்

வினா எண் 1423—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் பேரூராட்சி, புக்குளத்தில் புதிய திறந்தவெளிக் கிணறு அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

தியாகதுருகம் பேரூராட்சி, வார்டு எண் 10 மற்றும் 11 ஆகியவற்றை உள்ளடக்கிய பகுதியே புக்குளமாகும். இப்பகுதியில் மொத்தம் 496 குடியிருப்புகள் உள்ளன. இப்பகுதி மக்களுக்கு ரிஷிவந்தியம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் நாள்தோறும் 80,000 லிட்டரும், இப்பகுதியில் அமையப்பெற்ற ஆழ்துளைக் கிணறுமூலம் 40,000 லிட்டரும், ஆக மொத்தம் 1,20,000 லிட்டர் குடிநீர் தினந்தோறும் இப்பகுதி மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதன்மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 80 லிட்டருக்கும் அதிகமான அளவில் குடிநீர் கிடைக்கப்பெற்று வருகிறது. எனவே, தியாகதுருகம் பேரூராட்சியில் உள்ள புக்குளத்தில் புதியதாக திறந்தவெளிக் கிணறு அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

38—

அமைச்சுப் பணியாளர்கள் நியமனம்

வினா எண் 1456—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நகராட்சிகள் தரம் உயர்த்தப்படும்போது மக்கள் தொகைக்கு ஏற்ப அமைச்சுப் பணியாளர்கள் நியமனம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தரம் உயர்த்தப்படும் நகராட்சிகளுக்கு மக்கள் தொகைக்கு ஏற்பவும், நகராட்சிகள் பெறும் வருவாயின் அளவுகோலுக்கு ஏற்பவும், நகராட்சிகளின் பணியாளர் செலவினம் குறித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள சதவிகிதத்திற்கு மிகாமலும் தமிழ்நாடு நகராட்சி பொதுப் பணி விதிகளின்படி பணியிடங்களின் தரம் உயர்த்தி பணியாளர்கள் நியமனம் செய்வது குறித்து ஆய்வு செய்யப்படும்.

39—

மேலாளர், வருவாய் அலுவலர்களை தரமுயர்த்தி பணியமர்த்துதல்

வினா எண் 1457—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நகராட்சிகளின் தரம் உயர்த்தப்பட்ட நிலையில், அதற்கான மேலாளர் மற்றும் வருவாய் அலுவலர்களைத் தரம் உயர்த்தி பணியமர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தரம் உயர்த்தப்படும் நகராட்சிகளுக்கு மக்கள் தொகைக்கு ஏற்பவும் நகராட்சிகள் பெறும் வருவாயின் அளவுகோலுக்கு ஏற்பவும், நகராட்சிகளின் பணியாளர் செலவினம் குறித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள சதவிகிதத்திற்கு மிகாமலும் தமிழ்நாடு நகராட்சி பொதுப் பணி விதிகளின்படி மேலாளர் மற்றும் வருவாய் அலுவலர் பணியிடங்களைத் தரம் உயர்த்தி பணியாளர்கள் நியமனம் செய்வது குறித்து ஆய்வு செய்யப்படும்.

40—

கூடுதல் அமைச்சுப் பணியாளர்கள் நியமனம்

வினா எண் 1458—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நகராட்சிகளில் தற்போது கொரோனா சிகிச்சைக்காகக் கூடுதல் பணியாளர்களை அமர்த்தும்போது, அதற்கு ஏற்றாற்போல் அமைச்சுப் பணியாளர்களை பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொரோனா சிகிச்சைக்கு அதிக அளவில் களப் பணியாளர்களே தேவைப்படுகின்றனர். ஆனால், அமைச்சுப் பணியாளர்கள் அதற்கேற்றாற்போல் தேவையில்லை என்பதால் கூடுதலாக பணியமர்த்த வேண்டிய அவசியம் எழவில்லை.

41—

மழைநீர் வடிகால்வாய் அமைத்தல்

வினா எண் 1558—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

(அ) தாம்பரம் தொகுதி, பெருங்களத்தூர் பேரூராட்சி, மீனாட்சி அவென்யூ, பிரதான சாலையிலும், காளிகாம்பாள் கோவில் எதிர்ப்புற சாலையிலும் மழைநீர் வடிகால்வாய் மூடியுடன் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருங்களத்தூர் பேரூராட்சியில் அடங்கிய வார்டு எண் 15-க்குட்பட்ட மீனாட்சி அவென்யு பகுதியில், 1 முதல் 4 தெருக்களும், காளிகாம்பாள் கோவிலும் உள்ளன. இது 66 குடியிருப்புகளும் 208 மக்களும் வசித்துவரும் பகுதியாகும். மேற்படி தெருக்களில் மூடியுடன்கூடிய வடிகால்வாய் அமைப்பதற்கு நிதிநிலைமைக்கேற்ப ஆய்வு மேற்கொள்ளப்படும்.

42—

சாலைகள் அமைத்தல்

வினா எண் 1560—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, பெருங்களத்தூர் பேரூராட்சி, கண்ணன் அவென்யூ, பிரதான சாலை மற்றும் 2 மற்றும் 3-வது தெருக்களில் சாலைகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெருங்களத்தூர் பேரூராட்சி, கண்ணன் அவென்யூ பகுதியானது 1 முதல் 6 தெருக்களை உள்ளடக்கி, 151 குடியிருப்புகளில், 512 மக்கள் வசித்துவருகின்றனர். இப்பகுதியில் 2020-2021 ஆம் ஆண்டு முதல் பொது நிதியின்கீழ் ரூ.120.00 இலட்சம்

2021 செப்டம்பர் 13]

மதிப்பீட்டில் மூடியுடன்கூடிய மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவுற்றவுடன் கண்ணன் அவென்யூ 2 மற்றும் 3-வது தெருக்களில் சாலைகள் அமைப்பதற்கு நிதி நிலைக்கேற்ப பரிசீலனை மேற்கொள்ளப்படும்.

43—

சாலைகள் அமைத்தல்

வினா எண் 1561—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, பீர்க்கன்கரணை பேரூராட்சி, தேவநேசன் நகர், இமானுவேல் 2, 3, 4 தெருக்களில் தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, பீர்க்கன்கரணை பேரூராட்சியிலுள்ள தேவநேசன் நகர், இமானுவேல் 2, 3, 4 ஆகிய தெருக்கள் பொதுப் பணித் துறை ஏரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளாகும். எனவே, பேரூராட்சியின்மூலம் மேற்படி தெருக்களுக்கு தார்ச் சாலை அமைக்க வழிவகை இல்லை.

44—

ஊழியர்கள் பணி நிரந்தரம் செய்தல்

வினா எண் 1563—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, செம்பாக்கம் நகராட்சியில் 18 ஆண்டுகளாக தினக் கூலிகளாகப் பணிபுரியும் ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செம்பாக்கம் நகராட்சியில் மொத்தம் 11 தினக் கூலிப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இதில் 1-4-2003 முதல் தட்டச்சராக ஒரு பணியாளரும், மீதமுள்ள 10 தூய்மைப் பணியாளர்கள் 1-4-2013 முதல் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுக்கு தற்போதுவரை அரசாணை நிலை எண் 62, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 11-10-2017-ன்படி குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி தினக் கூலிப் பணியாளர்களை நகராட்சியில் பணி நிரந்தரம் செய்வதற்கு வழிவகை இல்லை.

45—

சேலம் புதிய பேருந்து நிலையத்தில் கடைகள் அகற்றுதல்

வினா எண் 2036—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு தொகுதி, சேலம் புதிய பேருந்து நிலையத்தில் பயணிகளுக்கு இடையூறாக உள்ள கடைகளை அகற்ற அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம் கோட்டம் எண் 24-க்குட்பட்ட புதிய பேருந்து நிலைய வளாகத்தில் மாநகராட்சி உரிமம் பெற்றுள்ள குத்தகைதாரர்கள், பயணிகள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் மட்டுமே கடைகள் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

2021 செப்டம்பர் 13]

46—

சமுதாயக் கூடம் அமைத்தல்

வினா எண் 2062—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, கோட்டம் எண் 18, காசகாரனூர் பகுதியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, கோட்டம் எண் 18, காசகாரனூர் பகுதியில் சர்க்கார் புறம்போக்கு அல்லது மாநகராட்சி நிருவாகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள் கண்டறியப்பட்டு புதிதாக சமுதாயக் கூடம் அமைக்க நிதி நிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

47—

கழிவுநீரோடை ஆழப்படுத்துதல்

வினா எண் 2088—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, 5-வது டிவிஷன், தோப்புக்காடு பகுதியில் கழிவு நீரோடையை ஆழப்படுத்தி, கழிவுநீர் குடிசைகளில் புகா வண்ணம் செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி வார்டு அலுவலகம், கோட்டம் 5-க்குட்பட்ட தோப்புக்காடு பகுதியில் கழிவுநீர் நீரோடையை ஆழப்படுத்தி, கழிவுநீர் வடிந்தோடும் வகையில் சீரமைத்திட ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் DPR *தயார்*

செய்யப்பட்டுள்ளது. எதிர்வரும் நிதியாண்டில் பணியினை மேற்கொள்ள ஆவன செய்யப்படும்.

48—

அடிப்படை வசதிகள் செய்தல்

வினா எண் 2097—திரு. இரா. அருள்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சி, கோட்டம் எண் 23, அம்மாசி நகர், பண்டத்துக்கரை வட்டம் பகுதியில் தார்ச் சாலை மற்றும் கான்கிரீட் சாலை அமைக்கவும், கழிவுநீர்க் கால்வாய், குடிநீர் வசதி ஏற்படுத்தித்தரவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, கோட்டம் எண் 23, அம்மாசி நகர் பகுதியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (IUDM) 2019-2020 ஆம் திட்டத்தின்கீழ் புதியதாக வடிகால் மற்றும் பேவர் பிளாக் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பகுதியில் குடிநீர்ப் பகிர்மான குழாய் வசதி ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டுள்ளது. விண்ணப்பம் அளிக்கும்பட்சத்தில் உடன் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மீதமுள்ள பகுதிகளில் வரும் நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ள ஆவன செய்யப்படும்.

49—

கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

வினா எண் 2111—திரு. இரா. அருள்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சி, ரெட்டியூர், கோட்டம் எண் 3, ஓம்சக்தி நகரில் புதிய கழிவுநீர்க் கால்வாய் அமைக்க அரசு முன்வருமா?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, ரெட்டியூர், கோட்டம் எண் 3, ஓம்சக்தி நகரில் புதிய கழிவுநீர்க் கால்வாய் அமைக்க நிதிநிலைமைக்கேற்ப பணி மேற்கொள்ள ஆவன செய்யப்படும்.

50—

பொதுச் சுகாதார வளாகம் அமைத்தல்

வினா எண் 2113—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம், ரெட்டியூர், கோட்டம் எண் 3, மோலக்கரடு பகுதியில் பொதுச் சுகாதார வளாகம் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம், ரெட்டியூர், கோட்டம் எண் 3, மோலக்கரடு பகுதியில் இடம் தேர்வு செய்யப்பட்டு உத்தேச மதிப்பீடு ரூ.35.00 இலட்சம் அளவில் புதியதாக பொதுச் சுகாதார வளாகக் கட்டடம் அமைக்க வரும் நிதியாண்டில் நிதிநிலைமைக்கேற்ப பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

51—

கான்கிரீட் சாலை அமைத்தல்

வினா எண் 2135—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, கோட்டம் எண் 24, எட்டிமரத்துவட்டம் பகுதியில் கான்கிரீட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

[*2021 செப்டம்பர் 13*

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம், கோட்டம் எண் 24-க்குட்பட்ட எட்டிமரத்துவட்டம் பகுதியில் கான்கிரீட் சாலை அமைக்க நிதிநிலைமைக்கேற்ப பணி மேற்கொள்ள ஆவன செய்யப்படும்.

52—

குடிநீர் இணைப்பு

வினா எண் 2140—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, 24-வது கோட்டம், பெரியேரிவயல்காடு, இட்டேரியில் குடிநீர் இணைப்பு வழங்கிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம், கோட்டம் எண் 25-க்குட்பட்ட பெரியேரிவயல்காடு பகுதிக்கு பழனியப்பா நகரில் உள்ள 10 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலமாக தனிக் குடிநீர் திட்டத்தில் 2015 ஆம் ஆண்டு முதல் சீரான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. புதிதாக இணைந்த பகுதிகளுக்கு பகிர்மானக் குழாய் அமைத்து குடிநீர் வழங்க, வரும் நிதியாண்டில் பணிகள் மேற்கொள்ள ஆவன செய்யப்படும்.

53—

கண்காணிப்பு கேமிரா அமைத்தல்

வினா எண் 2144—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2021 செப்டம்பர் 13]

சேலம், திருமணிமுத்தாறு கரையோரம் வசிக்கும் மக்கள் வீட்டு குப்பைகளை ஆற்றில் வீசுவதைத் தடுக்க கண்காணிப்பு கேமிராக்கள் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, திருமணிமுத்தாறு கரை அபிவிருத்திப் பணிகள் சீர்மிகு நகர திட்டத்தின்கீழ் ரூ.18.08 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. இப்பணியில் ஆற்றில் குப்பைகள் கொட்டப்படுவதைத் தவிர்க்க Weld mesh *கம்பி வேலி ஆற்றின் இருபுறமும் அமைக்கப்பட்டு வருகின்றன. மேலும், ஆங்காங்கே கண்காணிப்பு கேமராக்கள் பொருத்த உரிய நடைவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

54—

மழைநீர் வடிகால் அமைத்தல்

வினா எண் 2151—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, கந்தம்பட்டி, 24-வது கோட்டம், மாநகராட்சி பள்ளி முதல் இட்டேரி ரோடு வரை மழைநீர் வடிகால் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு அலுவலகம், கோட்டம் எண் 24-க்குட்பட்ட கந்தம்பட்டி மாநகராட்சி பள்ளி முதல் இட்டேரி ரோடு வரை மழை நீர் வடிகால் அமைக்க வரும் நிதியாண்டில் பணி மேற்கொள்வது தொடர்பாக பரிசீலிக்கப்படும்.

55—

இயற்கை உரம் உற்பத்தி

வினா எண் 670—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, பாமணி உர ஆலையில் இயற்கை உரம் உற்பத்தி செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

பாமணி உர ஆலையில் தற்போது உற்பத்தி செய்யப்படும் பாமணி 17:17:17 என்ற குறுணை வடிவிலான கலப்பு உரத்துடன் சேர்த்து இயற்கை உரம் உற்பத்தி செய்வதற்கான திட்ட அறிக்கை பெறப்பட்டு, சாத்தியக்கூறுகள் உள்ள நிலையில் இதற்கான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

56—

உரம் உற்பத்தியை அதிகப்படுத்துதல்

வினா எண் 671—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, பாமணி உர ஆலையில் உரம் உற்பத்தியை அதிகப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

பாமணி உர ஆலையின் பழமையான இயந்திரங்கள் அடிக்கடி பழுது ஏற்பட்ட காரணத்தினாலும், நாளொன்றுக்கான சராசரி உற்பத்தி 40 மெட்ரிக் டன்கள் என்ற அளவிலும் இருந்த நிலையில் இயந்திரங்களின் மறுசீரமைப்புப் பணி ரூ.110.00 இலட்சம் செலவில் துவக்கப்பட்டு, பணி முடிவுற்று 30-9-2019 முதல் சோதனை ஓட்ட முறையில் உற்பத்தி துவங்கப்பட்டது. தற்போது நாளொன்றுக்கான உற்பத்தி 70 மெட்ரிக் டன்களாக அதிகரித்துள்ளதுடன்,

2021 செப்டம்பர் 13]

உற்பத்தியாகும் குறுணை வடிவிலான பாமணி 17:17:17 கலப்பு உரத்தின் குருணைகளின் தரமும் மேம்பட்டுள்ளது.

பாமணி உர ஆலையில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் பாமணி 17:17:17 என்ற உரத்துடன் கூடுதலாக பாமணி 20:20:0 குருணை வடிவிலான கலப்பு உரமும் உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், பாமணி உர ஆலையில் தற்போது 2 முறை பிரிவுகளில் (Shift) உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. கொரோனா நோய்த் தொற்று காரணமாக பணியாளர்கள் 2 முறை பிரிவு உற்பத்திக்குப் போதுமான எண்ணிக்கையில் வரப்பெறாத நிலை உள்ளது. எனவே, கொரோனா நோய்த் தொற்று முழுவதும் குறையும் நிலையில் 3 முறை பிரிவுகளில் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு உர உற்பத்தியை அதிகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

57—

மண்புழு உரம் உற்பத்தி

வினா எண் 672—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, பாமணி உர ஆலையில் மண்புழு உரம் உற்பத்தியை அதிகப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:

பாமணி உர ஆலையில் கடந்த 2020-2021 ஆம் ஆண்டில் 3.250 மெ.டன் மண்புழு உரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. மண்புழு உரம் உற்பத்தியினை மாதம் ஒன்றுக்கு 5 மெ.டன் அளவிற்கு அதிகரித்து உற்பத்தி செய்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

58—

கலைக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 58—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரத்தில் அரசு கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி அமைந்துள்ள செங்கல்பட்டு மாவட்டத்தில் தற்பொழுது 3 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 6 அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் 17 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ / மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் தொகுதி, தாம்பரத்தில் புதியதாக ஓர் அரசு கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை.

59—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 486—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி அமைந்துள்ள திருவாரூர் மாவட்டத்தில் தற்பொழுது 2 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 7 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் இத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வி தேவைகளை நிறைவு செய்து வருவதால் மன்னார்குடி தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் புதியதாக பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 13]

60—

மகளிர் கலைக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 522—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, பூதலூர் அல்லது திருக்காட்டுப்பள்ளியில் மகளிர் கலைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, பூதலூர் அல்லது திருக்காட்டுப்பள்ளி அமைந்துள்ள தஞ்சாவூர் மாவட்டத்தில் தற்பொழுது 3 மகளிர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 3 இருபாலர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 5 அரசு உதவி பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 18 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ / மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதிக்கு உட்பட்ட பூதலூர் அல்லது திருக்காட்டுப்பள்ளியில் புதியதாக ஒரு மகளிர் கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

61—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைத்தல்

வினா எண் 523—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, பூதலூரில் இருபாலருக்கான பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி பூதலூர் அமைந்துள்ள தஞ்சாவூர் மாவட்டத்தில் தற்பொழுது இருபாலரும் பயிலும் ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, இரண்டு அரசு நிதி உதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 15 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் இத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் திருவையாறு தொகுதி, பூதலூர் பகுதியில் புதியதாக இருபாலரும் பயிலும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

62—

கலைக் கல்லூரியில் புதிய பாடப் பிரிவுகள்

வினா எண் 687—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் புதியதாக இளங்கலை பட்டப் படிப்பில் இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடப் பிரிவுகள் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சியில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழ், ஆங்கிலம், வணிகவியல், கணினி அறிவியல், கணிதம், வேதியியல் மற்றும் இயற்பியல் ஆகிய இளநிலை பாடப் பிரிவுகளுடனும், முதுகலையில் ஆங்கிலம், வணிகவியல், கணினி அறிவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடப் பிரிவுகளுடனும் செயல்பட்டு வருவதால் இக்கல்லூரியில் புதிதாக பாடப் பிரிவுகளுக்கான தேவை எழவில்லை.

TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 13]

63—

மகளிர் கலைக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 717—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, தரமணி, அண்ணா நகர் பகுதியில் உள்ள அரசுக்கு சொந்தமான காலி நிலத்தில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி அமைந்துள்ள சென்னை மாவட்டத்தில் தற்பொழுது 3 மகளிர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 4 இருபாலர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 6 மகளிர் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 8 இருபாலர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 12 மகளிர் சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 10 இருபாலர் சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ / மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்துவருவதால் சென்னை மாவட்டம், வேளச்சேரி தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் புதியதாக ஒரு கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

64—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 1154—திரு. சபா. ராசேந்திரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி அமைந்துள்ள கடலூர் மாவட்டத்தில் தற்பொழுது ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியும், ஓர் அரசு நிதி உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் 18 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் இத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால் நெய்வேலி தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் புதியதாக பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

65—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 1170—திரு. இரா. அருள்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டத்தில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் தற்பொழுது ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, ஓர் அரசு நிதி உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் 21 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் இத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், சேலம் மாவட்டத்தில் புதியதாக பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

66—

கலைக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 1171—திரு. இரா. அருள்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2021 செப்டம்பர் 13]

சேலம் மாநகரின் புறநகர் தென் பகுதியில் கலைக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

சேலம் (மேற்கு) தொகுதி அமைந்துள்ள சேலம் மாவட்டத்தில் தற்பொழுது 5 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 2 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 36 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ / மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், சேலம் மாவட்டம், சேலம் (மேற்கு) தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் புதியதாக ஒரு கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

67—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்குதல்

வினா எண் 1688—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி பகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதி அமைந்துள்ள தஞ்சாவூர் மாவட்டத்தில் தற்பொழுது ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, இரண்டு அரசு நிதி உதவி பெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 15 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை

நிறைவு செய்து வருவதால் கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் நகராட்சி பகுதியில் புதியதாக ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

68—

பல்கலைக்கழகம் துவக்குதல்

வினா எண் 1689—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் அரசு தன்னாட்சி கல்லூரியை மையமாகக் கொண்டு கணித மேதை இராமானுஜர் அவர்களின் பெயரில் புதிய பல்கலைக்கழகம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பாரதிதாசன் பல்கலைக்கழகம் 1982-ல் திருச்சியில் நிறுவப்பட்டது. திருச்சி, தஞ்சாவூர், கரூர், பெரம்பலூர், அரியலூர், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் ஆகிய ஒன்பது மாவட்டங்களைச் சேர்ந்த கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றுள்ளன. தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த கும்பகோணத்தில் உள்ள அனைத்து கல்லூரிகளும் இப்பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்ற கல்லூரிகளாக இயங்கி வருகின்றன. இப்பல்கலைக்கழகம் திருச்சி, தஞ்சாவூர், கரூர், பெரம்பலூர், அரியலூர், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் ஆகிய ஒன்பது மாவட்டங்களில் உள்ள மாணவர்களின் உயர் கல்வித் தேவையை நிறைவு செய்து வருகிறது. இந்நிலையில் கும்பகோணம் அரசு தன்னாட்சி கல்லூரியை மையமாகக் கொண்டு கணித மேதை இராமானுஜர் அவர்களின் பெயரில் புதிய பல்கலைக்கழகம் தொடங்குவது குறித்து கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2021 செப்டம்பர் 13]

69—

கலைக் கல்லூரியில் புதிய பாடப் பிரிவுகள் துவக்குதல்

வினா எண் 1690—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம், அரசினர் ஆடவர் கலைக் கல்லூரியில் இளங்கலையில் உயிர் வேதியியல், முதுகலையில் தாவரவியல், புள்ளியியல் ஆகிய புதிய பாடப் பிரிவுகள் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம், ஆடவர் கலைக் கல்லூரியில் 17 இளநிலை பாடப் பிரிவுகளுக்கும், 11 முதுகலை பாடப் பிரிவுகளுக்கும், 6 அறிவியல் நிறைஞர் மற்றும் 6 முனைவர் பட்டங்களுக்கும் மாணவர் சேர்க்கை நடைபெற்று செயல்பட்டு வருகிறது. எனவே, கும்பகோணம் அரசினர் ஆடவர் கலைக் கல்லூரியில் இளங்கலையில் உயிர் வேதியியல், முதுகலையில் தாவரவியல், புள்ளியியல் ஆகிய புதிய பாடப் பிரிவுகள் துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

70—

கலைக் கல்லூரியில் புதிய பாடப் பிரிவுகள் துவக்குதல்

வினா எண் 1691—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் உள்ள அரசினர் மகளிர் தன்னாட்சி கல்லூரியில் ஆய்வியல் நிறைஞர் (M.Phil.) பாடப் பிரிவை நடப்பு ஆண்டில் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2021 செப்டம்பர் 13

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் அரசினர் மகளிர் தன்னாட்சி கல்லூரிக்கு அருகாமையில் உள்ள 6 அரசு கலைக் கல்லூரிகளில், M.Phil. *பாடப் பிரிவு நடைபெற்று வருவதால் கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் உள்ள அரசினர் மகளிர் தன்னாட்சி கல்லூரியில் ஆய்வியல் நிறைஞர் (*M.Phil.*) பாடப் பிரிவை நடப்பு ஆண்டில் துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

71—

உள்விளையாட்டு அரங்கம் அமைத்தல்

வினா எண் 1692—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கும்பகோணம் அரசினர் மகளிர் கல்லூரியில் நவீன முறையில் உள்விளையாட்டு அரங்கம் (*Indoor Stadium*) கட்ட அரசு ஆவன செய்யுமா ?*

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

*கும்பகோணம் அரசினர் மகளிர் கல்லூரியில் தற்போது 4,635 மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். இக்கல்லூரியில் ஏற்கெனவே 6.17 ஏக்கர் பரப்பளவில் விளையாட்டு மைதானம் ஒன்று பயன்பாட்டில் உள்ளது. இக்கல்லூரியில் நவீன முறையில் உள்விளையாட்டு அரங்கம் (*Indoor Stadium*) அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.*

72—

விளையாட்டு மைதானம் அமைத்தல்

வினா எண் 1693—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2021 செப்டம்பர் 13]

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் அரசினர் மகளிர் கல்லூரியில் கூடுதலாக விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் அரசினர் மகளிர் கல்லூரியில் தற்போது 4,635 மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். இக்கல்லூரியில், ஏற்கெனவே 6.17 ஏக்கர் பரப்பளவில் விளையாட்டு மைதானம் ஒன்று பயன்பாட்டில் உள்ளது. எனவே, இக்கல்லூரியில் கூடுதலாக விளையாட்டு மைதானம் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

73—

விடுதிக்குக் கட்டடம்

வினா எண் 1694—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்பகோணம் அரசினர் மகளிர் கல்லூரியில் (தன்னாட்சி) உள்ள மாணவியர் முதன்மை விடுதியில் கூடுதலாக 12 அறைகள் கொண்ட தனிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் அரசினர் மகளிர் கல்லூரியில் ஏற்கெனவே 24 அறைகள் கொண்ட முதன்மை விடுதி ஒன்று தற்போது பயன்பாட்டில் உள்ளது. இக்கல்லூரியில் முதன்மை விடுதியில் கூடுதலாக 12 அறைகள் கொண்ட தனிக் கட்டடம் கட்டுவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

74—

கல்லூரி நூலகத்திற்கு கட்டடம்

வினா எண் 1695—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்பகோணம் அரசினர் மகளிர் தன்னாட்சி கல்லூரியில் உள்ள நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

கும்பகோணம் அரசினர் மகளிர் கல்லூரியில் உள்ள நூலகமானது ஏற்கெனவே 4 வகுப்பறைகளை இணைத்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் உள்ள நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

75—

விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்புதல்

வினா எண் 1696—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் அரசினர் மகளிர் கல்லூரியில் காலியாக உள்ள விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு கல்லூரிகளில் 2012-2013 ஆம் கல்வியாண்டு முதல் 2016-2017 ஆம் கல்வியாண்டு முடிய ஏற்பட்ட

2021 செப்டம்பர் 13]

2,331 காலிப் பணியிடங்களை நிரப்பிட அரசால் அனுமதிக்கப்பட்டு ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மூலம் 4-10-2019 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

76—

விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்புதல்

வினா எண் 1697—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் அரசினர் ஆடவர் கல்லூரியில் காலியாக உள்ள விரிவுரையாளர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு கல்லூரிகளில் 2012-2013 ஆம் கல்வியாண்டு முதல் 2016-2017 ஆம் கல்வியாண்டு முடிய ஏற்பட்ட 2,331 காலிப் பணியிடங்களை நிரப்பிட அரசால் அனுமதிக்கப்பட்டு ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மூலம் 4-10-2019 அன்று அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

77—

கௌரவ விரிவுரையாளர்களை பணி நிரந்தரம் செய்தல்

வினா எண் 1698—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் அரசினர் தன்னாட்சி கலைக் கல்லூரி மற்றும் அரசினர் மகளிர் தன்னாட்சி கலைக் கல்லூரியில் பணிபுரியும் கௌரவ விரிவுரையாளர்களை பணி நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2021 செப்டம்பர் 13

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள அரசு கலை அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் ஏற்பட்ட உதவிப் பேராசிரியர் காலிப் பணியிடங்களில் முறையான உதவிப் பேராசிரியர்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நியமிக்க கால அவகாசம் தேவைப்படும் நிலையில், மாணவர்களின் கல்வி கற்கும் சூழலில் பாதிப்பு ஏற்படாவண்ணம் தற்காலிக ஏற்பாடாக, கௌரவ விரிவுரையாளர்களைக் கொண்டு மாணவர்களுக்கு வகுப்புகள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. பல்வேறு காலகட்டங்களில், அரசுக் கல்லூரிகளில் கௌரவ விரிவுரையாளர்களாகப் பணிபுரிந்து வருபவர்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

78—

காலிப் பணியிடங்களை நிரப்புதல்

வினா எண் 1699—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் அரசினர் மகளிர் கல்லூரியில் காலியாக உள்ள அலுவலகப் பணியாளர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் அரசினர் மகளிர் கல்லூரிக்கு ஒப்பளிக்கப்பட்ட 12 அலுவலகப் பணியாளர்களில் 1 உதவியாளர் பணியிடம் மட்டுமே தற்போது காலியாக உள்ளது. உதவியாளர் பணியிடம், இளநிலை உதவியாளர் பணியிடத்திலிருந்து பதவி உயர்வின்மூலம் நிரப்பப்படும் பணியிடம் ஆகும். தற்போது உதவியாளர் பதவி உயர்வுக்கு தகுதியான நபர்கள் யாரும் இல்லாத நிலையில் தகுதி பெற்றபின் அப்பணியிடம் நிரப்பப்படும்.

2021 செப்டம்பர் 13]

79—

காலிப் பணியிடங்களை நிரப்புதல்

வினா எண் 1700—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் அரசினர் ஆடவர் கல்லூரியில் காலியாக உள்ள அலுவலகப் பணியாளர் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் அரசினர் ஆடவர் கல்லூரிக்கு ஒப்பளிக்கப்பட்ட 19 ஆசிரியரல்லா பணியிடங்களில் 4 உதவியாளர்கள், 1 தட்டச்சர் மற்றும் 1 அலுவலக உதவியாளர், ஆக மொத்தம் 6 பணியிடங்கள் மட்டுமே காலியாக உள்ளன. உதவியாளர் பதவி உயர்விற்கு தற்போது தகுதியான நபர்கள் எவரும் இல்லை. மேலும், தட்டச்சர் பணியிடம் நேரடி நியமனம்மூலம் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தாலும், அலுவலக உதவியாளர் பணியிடம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம்மூலம் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

80—

சாலை சீரமைத்தல்

வினா எண் 25—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் GST சாலையில், சண்முகம் சாலைக்கு செல்லும் சாலை இணைப்பு துண்டிக்கப்பட்டதால், அதனை சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் GST *சாலையில், சண்முகம் சாலையை நேரடியாக இணைப்பதற்கான சாத்தியக்கூறு அறிக்கை தயாரித்து அதனடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

81—

பாலம் கட்டுதல்

வினா எண் 45—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, மாரனேரி-சோழகம்பட்டி சாலை, கல்லணைக் கால்வாய் ஆற்றில் பழமையான குறுகலான உயர்மட்ட பாலத்தை அகற்றி, புதியதாக கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, மாரனேரி-சோழகம்பட்டி சாலை கி.மீ.4/8-ல் கல்லணைக் கால்வாய் ஆற்றில் பழமையான குறுகலான உயர்மட்டப் பாலத்தை அகற்றி, புதியதாக பாலம் கட்ட ரூ.543.36 இலட்சம் நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு, வடிவமைப்பு மற்றும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

82—

பாலம் கட்டுதல்

வினா எண் 46—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, கடம்பன்குடி-பொன்விளைந்தான்பட்டி சாலை, வேப்பங்குடி அருகே கல்லணைக் கால்வாய் ஆற்றில்

2021 செப்டம்பர் 13]

பழமையான குறுகலான உயர்மட்ட பாலத்தை அகற்றி, புதியதாக கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, கடம்பன்குடி-பொன்விளைந்தான்பட்டி சாலை கி.மீ.0/2-ல் வேப்பங்குடி அருகே கல்லணைக் கால்வாய் ஆற்றில் பழமையான குறுகலான உயர்மட்டப் பாலத்தை அகற்றி, புதியதாக கட்ட ரூ.642.17 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் பெறப்பட்டு வடிவமைப்பு மற்றும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

83—

இருவழிச் சாலை அமைத்தல்

வினா எண் 207—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, கல்லணையிலிருந்து வேங்கூர் வழியாக திருவெறும்பூர் செல்லும் ஒரு வழிச் சாலையை இரு வழிச் சாலையாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, திருவெறும்பூர் கல்லணை சாலை (மா.மு.சா.306) கி.மீ.4/6-9/4 வரையுள்ள 4.80 கி.மீ. சாலைப் பகுதியில் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. தடுப்புச் சுவர் அமைக்கும் பணி முடிவுற்றவுடன் சாலையை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணி துவங்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[*2021 செப்டம்பர் 13*

84—

இரயில்வே மேம்பாலப் பணி

வினா எண் 484—திரு. T.R.B. ராஜா: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நீடாமங்கலத்தில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணியின் தற்போதைய நிலையை தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

நீடாமங்கலத்தில் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க மற்றும் நிலம் கையகம் செய்ய ரூ.10.67 கோடி நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகள் மற்றும் நில எடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன அப்பணிகள் முடிந்தவுடன் கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

85—

தடுப்புச் சுவர் கட்டுதல்

வினா எண் 570—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, மகாதேவபுரம்-கச்சமங்கலம் மாரனேரி சாலையில் தடுப்புச் சுவர் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, மகாதேவபுரம்-கச்சமங்கலம் மாரனேரி சாலை தடுப்புச் சுவர் கட்டும் பணியானது நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2021 செப்டம்பர் 13]

86—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 571—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, தோகூர்-அய்யம்பேட்டை சாலையில் பிரியும் அம்பதுமேல்நகரம் சாலையை அகலப்படுத்தி, மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, தோகூர்-அய்யம்பேட்டை சாலையில் பிரியும் அம்பதுமேல்நகரம் சாலையை போக்குவரத்து செறிவின் அடிப்படையிலும், நிதி நிலைக்கேற்பவும் முன்னுரிமை அடிப்படையில் அகலப்படுத்தி மேம்பாடு செய்யப்படும்.

87—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 575—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, நடுக்காவேரி-அள்ளூர் சாலை பிரியும் கடம்பன்குடி சாலையை அகலப்படுத்தி, மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, நடுக்காவேரி-அள்ளூர் சாலை பிரியும் கடம்பன்குடி சாலையை போக்குவரத்துச் செறிவின் அடிப்படையிலும், நிதிநிலைக்கேற்பவும் முன்னுரிமை

அடிப்படையில் அகலப்படுத்தி மேம்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

88—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 576—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, பெரம்பலூர்-மானாமதுரை தேசிய நெடுஞ்சாலையில் பிரியும் மேலஉத்தமநல்லூர் சாலையை அகலப்படுத்தி, மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, பெரம்பலூர்-மானாமதுரை தேசிய நெடுஞ்சாலையில் பிரியும் மேலஉத்தமநல்லூர் சாலையினை போக்குவரத்துச் செறிவின் அடிப்படையிலும், நிதிநிலைக்கேற்பவும் முன்னுரிமை அடிப்படையில் அகலப்படுத்தி மேம்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

89—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 577—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, அலமேலுபுரம் பூண்டி செங்கரையூர் கொள்ளிடம் பாலம் சாலையை மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, அலமேலுபுரம் பூண்டி செங்கரையூர் கொள்ளிடம் பாலம் சாலையினை வரும்

2021 செப்டம்பர் 13]

நிதியாண்டில் நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் மேம்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

90—

சாலையை அகலப்படுத்துதல்

வினா எண் 580—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, கண்டியூர்-நெடார்-திருக்கருக்காவூர் சாலையை அகலப்படுத்தி, மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, கண்டியூர்-நெடார்-திருக்கருக்காவூர் சாலையில் கி.மீ.0/0-2/0 வரை அகலப்படுத்தி மேம்படுத்தும் பணியானது 2020-2021 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.251.75 இலட்சம் மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டு பணியானது செயலாக்கத்தில் உள்ளது.

91—

சாலையை மேம்படுத்துதல்

வினா எண் 581—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, வெண்ணாறு-வெட்டாறு ரெகுலேட்டர் முதல் பள்ளியக்கரகாரம் வரை சாலையை மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, வெண்ணாறு-வெட்டாறு ரெகுலேட்டர் முதல் பள்ளியக்கரகாரம் வரையுள்ள சாலை கி.மீ.0/0-9/2-ல் கி.மீ.6/0-9/2 வரை 2018-2019 ஆம் ஆண்டு திட்டம் சாராப் பணியில் மேம்பாடு செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. மீதமுள்ள சாலைப் பகுதி முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

92—

சாலையை தரம் உயர்த்துதல்

வினா எண் 582—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, புதுக்குடி-ராயமுண்டான்பட்டி சாலையை இருவழிச் சாலையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, புதுக்குடி-ராயமுண்டான்பட்டி சாலை கி.மீ.0/0-4/0-ல் கி.மீ.1/2-3/0 வரையிலான சாலைப் பகுதியானது 2018-2019 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, ரூ.32.80 இலட்சம் செலவில் பணி முடிவுற்று நல்ல நிலையில் உள்ளது. மீதமுள்ள சாலைப் பகுதியானது முன்னுரிமை அடிப்படையில் மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

93—

சாலையை தரம் உயர்த்துதல்

வினா எண் 583—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2021 செப்டம்பர் 13]

(அ) திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளி-பட்டுக்கோட்டை சாலையில் 5/10 கி.மீ. பிரியும் விண்ணமங்கலம்-ஒரத்தூர்-மேகளத்தூர் சாலையை இருவழிச் சாலையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளி-பட்டுக்கோட்டை சாலையில் 5/10 கி.மீ. பிரியும் விண்ணமங்கலம்-ஒரத்தூர்-மேகளத்தூர் செல்லும் சாலை கி.மீ.0/0-8/440-ல் கி.மீ.4/6-5/0 (ம) 5/4-7/0 வரையுள்ள சாலைப் பகுதிகள் 2018-2019 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு பணி முடிவுற்று நல்ல நிலையில் உள்ளது. எஞ்சியுள்ள சாலைப் பகுதிகளை அகலப்படுத்தும் பணியானது முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

94—

ஒருவழி மேம்பாலம் அமைத்தல்

வினா எண் 1348—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, குருநானக் கல்லூரி மற்றும் பைபாஸ் ரோடு இருபுறங்களிலிருந்தும் ஹால்டா சின்னமலை சிக்னல் வரை ஒருவழி மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி பிரதான சாலையில் சின்னமலையிலிருந்து வேளச்சேரி புறவழிச் சாலை சந்திப்பு வரையில் உள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக விரிவான சாத்தியக்கூறு அறிக்கை ரூ.18.29 இலட்சத்திற்கு

TRUTH ALONE TRIUMPHS

அரசாணை எண் 161, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் (எச்.டபிள்யு-1) துறை, நாள் 19-12-2019-ல் ஒப்புதல் பெறப்பட்டு, சாத்தியக்கூறு அறிக்கை பெறப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. சாத்தியக்கூறு பணி முடிவடைந்தவுடன் பணி குறித்த விவரங்கள் இறுதி செய்யப்படும்.

95—

வேளாண்மை விரிவாக்க மையத்திற்குக் கட்டடம்

வினா எண் 547—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதியிலுள்ள தேவங்குடி வேளாண்மை விரிவாக்க மையத்திற்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி, தேவங்குடியில் துணை வேளாண்மை மையத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ.40 இலட்சம் செலவில் நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

96—

நிலம் வகைமாற்றம் செய்தல்

வினா எண் 08—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் பெருநகராட்சியில் பழைய தாம்பரம் சர்வே எண் 298, 300 மற்றும் 341 ஆகிய பகுதிகளை அரசு புறம்போக்கு ராயித்து மனைகள் என்று உள்ளதை கிராம நத்தம் என்று வகைப்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் உள்ள 32 கி.மீ. உட்பட்ட சென்னை மாநகர் சூழ் (*Belt Area*) பகுதிகளில் நில ஒப்படை/வீட்டுமனை ஒப்படை செய்ய தடையாணை உள்ளதாலும், சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கை தொடர்பான இடமானது தடையாணைக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ளதால், அரசு புறம்போக்கு நிலங்களை கிராம நத்தமாக வகைப்பாடு மாற்றம் செய்ய நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி வழிவகை இல்லை.*

97—

பட்டா வழங்குதல்

வினா எண் 13—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் பெருநகராட்சி, 2-வது வார்டு, கடப்பேரி, மௌலானா நகர் பகுதியில் கடந்த 10 ஆண்டுகளாக வசிப்பவர்களுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 1135, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 17-3-1962-ன்படி சென்னை மாநகர், காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் உள்ள 32 கி.மீ. உட்பட்ட சென்னை மாநகர் சூழ் பகுதிகளுக்கு வீட்டுமனை நில ஒப்படை செய்ய தடையாணை விதிக்கப்பட்டுள்ள நிலையில், சட்டமன்ற உறுப்பினர்

குறிப்பிட்டுள்ள பகுதி தடையாணைக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ளதால் நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி இலவச பட்டா வழங்க வழிவகை இல்லை.

98—

வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் 87—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சியைச் சேர்ந்த கேப்டன் சசிகுமார் விரிவில் உள்ள பன்னிரண்டு குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 1135, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 17-3-1962-ன்படி சென்னை மாநகர், காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் உள்ள 32 கி.மீ. உட்பட்ட சென்னை மாநகர் சூழ் பகுதிகளுக்கு வீட்டுமனை நில ஒப்படை செய்ய தடையாணை விதிக்கப்பட்டுள்ள நிலையில், சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள பகுதி தடையாணைக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ளதால் நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி இலவச பட்டா வழங்க வழிவகை இல்லை.

99—

நிலம் வகைமாற்றம் செய்து பட்டா வழங்குதல்

வினா எண் 88—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2021 செப்டம்பர் 13]

(அ) தாம்பரம் தொகுதி, பீர்க்கன்கரணை பேரூராட்சி, 3-வது வார்டு பகுதி மக்களுக்கு நிலவகை மாற்றம் செய்து பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகர், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் உள்ள 32 கி.மீ. உட்பட்ட சென்னை மாநகர் சூழ் (*Belt Area*) பகுதிகளில் நில ஒப்படை/வீட்டுமனை ஒப்படை செய்ய தடையாணை உள்ளதாலும், சட்டமன்ற உறுப்பினர் கோரிக்கை தொடர்பான இடமானது தடையாணைக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ளதாலும், அரசு புறம்போக்கு நிலங்களை கிராம நத்தமாக வகைப்பாடு மாற்றம் செய்ய நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி வழிவகை இல்லை.*

100—

முதியோர் உதவித் தொகை வழங்குதல்

வினா எண் 90—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதியில் முதியோர் உதவித் தொகைக்காக மனு செய்தவர்களுக்கு முதியோர் உதவித் தொகை விரைவாக வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதியில் முதியோர் உதவித் தொகைக்காக மனு செய்தவர்களுக்கு முதியோர் உதவித் தொகை

விரைவாக வழங்க ஆவன செய்யப்படும். முதியோர் உதவித் தொகை கோரி மனு செய்தவர்களுக்கு 30 தினங்களுக்குள் அரசு வழிகாட்டுதல்படி தகுதியின் அடிப்படையில் முதியோர் உதவித் தொகை வழங்கப்படும்.

101—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 92—திரு. S.R. இராஜா: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, கிழக்கு தாம்பரம், இராமகிருஷ்ணாபுரத்தில் 50 ஆண்டுகளுக்கு மேலாக வசித்து வரும் 800 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 1135, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 17-3-1962-ன்படி சென்னை மாநகர், காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் உள்ள 32 கி.மீ. உட்பட்ட சென்னை மாநகர் சூழ் பகுதிகளுக்கு வீட்டுமனை நில ஒப்படை செய்ய தடையாணை விதிக்கப்பட்டுள்ள நிலையில், சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள பகுதி தடையாணைக்கு உட்பட்ட பகுதியில் அமைந்துள்ளதால் நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி இலவச பட்டா வழங்க வழிவகை இல்லை.

102—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 281—திரு. சு. ரவி: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2021 செப்டம்பர் 13]

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், மோசூர் ஊராட்சி, அம்பேத்கர் நகர் பகுதியில் ஏரி புறம்போக்கில் குடியிருக்கும் ஏழை எளிய மக்களுக்கு மாற்று இடத்துடன் பட்டா வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், மோசூர் ஊராட்சி, அம்பேத்கர் நகர் பகுதி, நம்மானேரி பெரிய ஏரியில் சுமார் 350 வீடுகள் கட்டி 30 வருடங்களுக்கு மேலாக வசித்து வருகின்றனர். இவர்கள் இந்து ஆதி திராவிடர், கிருத்துவ ஆதி திராவிடர் மற்றும் இந்து அருந்ததியர் வகுப்பைச் சேர்ந்தவர்கள். மேற்படி புலம் நீர்நிலை புறம்போக்கு என்பதால் இவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க மேற்படி கிராமத்தில் மாற்று இடமாக மேய்க்கால் புறம்போக்கு, கல்லாங்குத்து புலத்தினை புலத்தணிக்கை மற்றும் அளவீடு செய்து தகுதியான நபர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

103—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 774—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, மாடம்பாக்கம் பேரூராட்சியில், தேனுகாம்பாள் நகர் மற்றும் பெரியார் நகரில் கிராம நத்தம் பகுதியில் வசிக்கும் சுமார் 1,500 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2021 செப்டம்பர் 13*

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, மாடம்பாக்கம் பேரூராட்சி, தேனுகாம்பாள் நகர்ப் பகுதியில் அருள்மிகு தேனுபுரீஸ்வரர் கோயில் பெயரில் உள்ள பட்டா நிலத்தில் குடியிருந்து வரும் 350 குடும்பங்களுக்கு தகுதியின் அடிப்படையில் மாற்று இடத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் விதிகளுக்கு உட்பட்டு குடியிருப்புகள் கட்டித்தர அரசு கனிவுடன் நடவடிக்கை மேற்கொள்ளும். மேலும், தாம்பரம் தொகுதி, மாடம்பாக்கம் பேரூராட்சி, மாடம்பாக்கம் கிராமம், பெரியார் நகரில் உள்ள கிராம நத்தத்தில் குடியிருக்கும் 5 நபர்களுக்கு ஏற்கெனவே பட்டா வழங்கப்பட்டுவிட்டது. அப்புலத்தில் மீதமுள்ள இடத்தில் அரசு மருத்துவமனையும், குளமும் அமையப்பெற்று காலியிடம் இல்லாத நிலையில் உள்ளது. குளம் புறம்போக்கில் குடியிருந்து வரும் 200 குடும்பங்களுக்கு தகுதியின் அடிப்படையில் விதிகளுக்கு உட்பட்டு மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டு பட்டா வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

104—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 1399—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர் வடக்கு மாடவிதி பூந்தோட்டம் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர் வடக்கு மாடவீதி, பூந்தோட்டம் பகுதியானது வருவாய்த் துறை

2021 செப்டம்பர் 13]

ஆவணங்களில் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயிலின் பெயரில் உள்ளது. கோயில் நிலங்களில் பட்டா வழங்குவதற்கு மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ள சூழ்நிலையில், அங்கு வசித்து வரும் தகுதியான மக்களுக்கு விதிகளுக்கு உட்பட்டு மாற்று இடத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின்மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித்தர இவ்வரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

105—

தொழிற்சாலை அமைத்தல்

வினா எண் 287—திரு. சு. ரவி: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, எஃகு நகரில் மூடியிருக்கும் டென்னிஸ் இரும்பு தொழிற்சாலைக்குச் சொந்தமான நிலங்களை கையகப்படுத்தி, அங்கு புதிய தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிப்காட் நிறுவனம் எந்தவொரு தொழிற்சாலையையும் எந்தவொரு பகுதியிலும் நேரடியாக அமைப்பதில்லை. இந்நிறுவனம், தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தர தொழில்கள் தொடங்க ஏதுவாக தொழில் வாய்ப்புள்ள பகுதிகளில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய தொழிற் பூங்காக்களை ஏற்படுத்தி பராமரித்து வருகிறது. சிப்காட் நிறுவனம், இதுவரை, 15 மாவட்டங்களில், ஆறு சிறப்பு பொருளாதார மண்டலங்கள் உட்பட 24 தொழில் பூங்காக்களை, சுமார் 34,900 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தி பராமரித்து வருகின்றது.

சிப்காட் நிறுவனம், புதிய தொழிற் பூங்காக்களை உருவாக்குகையில், ஒரு தொழிற் பூங்காவினை ஏற்படுத்தும் அளவிற்கு குறிப்பிட்ட அப்பகுதியில் ஒருங்கிணைந்த போதிய நிலம் இருப்பு, சாலை, இரயில் மற்றும் விமானப் போக்குவரத்து வசதி

மற்றும் தண்ணீர், மின்சாரம் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கான வாய்ப்பு மற்றும் அப்பகுதியில் காணப்படும் தொழில்மனை தேவை போன்ற அனைத்து சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்த பின்னரே புதிய தொழிற் பூங்கா அமைக்க முடிவு செய்யப்படுகிறது.

அரக்கோணம் தொகுதியில் மேற்குறிப்பிட்டுள்ள தளத்தில் தொழிற் பூங்கா அமைப்பது தொடர்பான அனைத்து சாத்தியக்கூறுகளும் ஆராயப்பட்ட பின்னரே இதுபற்றி முடிவு எடுக்கப்படும். அதனடிப்படையில் தொழிற்பூங்கா அமைக்க முடிவு செய்யப்படும்.

106—

தொழிற்சாலைகள் அமைத்தல்

வினா எண் 507—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி நகரில் புதிய தொழிற்சாலைகள் துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிப்காட் நிறுவனம் தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்கள் தொடங்க ஏதுவாக தொழில் வாய்ப்புள்ள பகுதிகளில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய தொழிற் பூங்காக்களை ஏற்படுத்தி பராமரித்து வருகிறது. இந்நிறுவனம், இதுவரை, 15 மாவட்டங்களில், ஆறு சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உட்பட 24 தொழிற் பூங்காக்களை, சுமார் 34,900 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தி பராமரித்து வருகின்றது.

சிப்காட் நிறுவனம், புதிய தொழிற் பூங்காக்களை உருவாக்குகையில், ஒரு தொழிற் பூங்காவினை ஏற்படுத்தும் அளவிற்கு குறிப்பிட்ட அப்பகுதியில் ஒருங்கிணைந்த போதிய நிலம் இருப்பு, சாலை, இரயில் மற்றும் விமானப் போக்குவரத்து வசதி

2021 செப்டம்பர் 13]

மற்றும் தண்ணீர், மின்சாரம் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கான வாய்ப்பு மற்றும் அப்பகுதியில் காணப்படும் தொழில்மனை தேவை போன்ற அனைத்து சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்த பின்னரே புதிய தொழிற்பூங்கா அமைக்க முடிவு செய்யப்படுகிறது.

மன்னார்குடி நகரில் சிப்காட் தொழிற் பூங்கா அமைக்கும் உத்தேசம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

107—

சிப்காட் தொழிற்பேட்டை

வினா எண் 692—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை துவங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

சிப்காட் நிறுவனம், தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்கள் தொடங்க ஏதுவாக தொழில் வாய்ப்புள்ள பகுதிகளில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய தொழிற்பூங்காக்களை ஏற்படுத்தி பராமரித்து வருகிறது. இந்நிறுவனம், இதுவரை 15 மாவட்டங்களில், ஆறு சிறப்பு பொருளாதார மண்டலங்கள் உட்பட 24 தொழில் பூங்காக்களை சுமார் 34,900 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தி பராமரித்து வருகின்றது.

சிப்காட் நிறுவனம், புதிய தொழிற்பூங்காக்களை உருவாக்குகையில், ஒரு தொழிற் பூங்காவினை ஏற்படுத்தும் அளவிற்கு குறிப்பிட்ட அப்பகுதியில் ஒருங்கிணைந்த போதிய நிலம் இருப்பு, சாலை, இரயில் மற்றும் விமானப் போக்குவரத்து வசதி மற்றும் தண்ணீர், மின்சாரம் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கான வாய்ப்பு மற்றும் அப்பகுதியில் காணப்படும் தொழில்மனை தேவை போன்ற அனைத்து சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்த பின்னரே புதிய தொழிற்பூங்கா அமைக்க முடிவு செய்யப்படுகிறது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தையொட்டி அமைந்துள்ள கடலூர் மாவட்டத்தில், சிப்காட் நிறுவனம்மூலம் 2,670 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு தொழிற்பூங்கா இரண்டு நிலைகளாக ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தையொட்டி அமைந்துள்ள விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டத்தில், சிப்காட் நிறுவனம்மூலம் 694 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு தொழிற்பூங்கா ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தொழிற்பூங்காவில் நிலம், தொழில் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்ய தயார் நிலையில் உள்ளது. இதன்மூலம் கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்குட்பட்ட தொழில்முனைவோர்களும் பயன் பெறுவர்.

எனினும், கள்ளக்குறிச்சி தொகுதிகுட்பட்ட கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் போதிய நிலம் மேற்கண்டவாறு கண்டறியப்படுகையில் இம்மாவட்டத்தில் சிப்காட் நிறுவனம்மூலம் புதிய தொழிற்பூங்கா ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

108—

பணி நிரந்தரம் செய்தல்

வினா எண் 1157—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, NLC நிறுவனத்தில் அப்ரண்டீஸ் முடித்தவர்களை பணி நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

இல்லை, என்.எல்.சி. இந்தியா நிறுவனத்தில் அப்ரண்டீஸ் முடித்தவர்களை பணி நிரந்தரம் செய்வது தொடர்பாக தற்போதைய விதிகளில் வழிவகைகள் ஏதும் இல்லாததால் இவர்களை பணி நிரந்தரம் செய்யும் திட்டம் இல்லை என என்.எல்.சி. இந்தியா நிறுவனத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 13]

109—

ஒப்பந்தப் பணி வழங்குதல்

வினா எண் 1785—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, (NLC) நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தில் ஒப்பந்த பணிகளை தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு மட்டுமே வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

ஆம், என்.எல்.சி. இந்தியா நிறுவனம் ஒரு சில தற்காலிக வேலைகளை ஒப்பந்ததாரர்களுக்கு டெண்டர் முறைகள்மூலம் வழங்கி வருகிறது. இவ்வாறாக வழங்கப்பட்ட ஒப்பந்த பணிகள் செய்வதற்கு தேவையான தகுதிகள் உள்ள ஒப்பந்த தொழிலாளர்களை அந்தந்த ஒப்பந்ததாரர்களே தேர்ந்தெடுத்துக்கொள்கிறார்கள் என என்.எல்.சி. இந்தியா நிறுவனத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

110—

கூடுதல் கட்டடம்

வினா எண் 1974—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னையில் உள்ள செம்மொழித் தமிழ் ஆய்வு நிறுவனத்திற்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமானது தற்போது சென்னை, தரமணியில் உள்ள சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகத்தில் வாடகைக் கட்டடத்தில் செயற்பட்டு

வருகிறது. இந்நிறுவனத்திற்கு தமிழ்நாடு அரசால் பெரும்பாக்கத்தில் 16.586 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும், அந்நிலத்தினை சமன் செய்வதற்கு ரூ.145.65 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது. அந்நிறுவனத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்காக தற்போது ஒன்றிய அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடப் பணிகள் நிறைவுறும் தருவாயில் உள்ளன. எனவே, தற்போது செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு கூடுதல் கட்டடம் கட்ட தேவை எழவில்லை.

111—

பறக்கும் இரயில் பாதை அமைத்தல்

வினா எண் 229—திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்போரூர் தொகுதி, மாமல்லபுரம் - திருப்போரூர் - திருவான்மியூர் வரை பறக்கும் இரயில் பாதை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாமல்லபுரம் - திருப்போரூர் - திருவான்மியூர் வரை பறக்கும் இரயில் பாதை அமைப்பதற்கான கருத்துரு ஏதும் தமிழக அரசால் பெறப்படவில்லை. மேலும், இப்பொருள் தெற்கு இரயில்வே தொடர்பானது.

112—

வணிக வளாகம் கட்டுதல்

வினா எண் 736—திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர் கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலையில் உள்ள வீட்டு வசதி வாரிய நியாய விலைக்

2021 செப்டம்பர் 13]

கடைகளுடன்கூடிய பழைய வணிக வளாகத்தை இடித்துவிட்டு புதிய வணிக வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர், கல்கி கிருஷ்ணமூர்த்தி சாலையில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பழைய வணிக வளாகம் இடிக்கப்பட்டு திருவான்மியூரில் மேற்குறிப்பிட்ட நிலப்பரப்பில், புதியதாக பன்னடுக்கு அலுவலகம் மற்றும் வணிக வளாகம் ரூ.8.12 கோடி மதிப்பீட்டில் கட்ட (தூண்தளம் + 5 தளங்கள்) 1.142 தரைதள குறியீட்டின்படி, 1330.44 ச.மீ. கட்டடப் பரப்பில் (14321 ச.அடி) ஜனவரி 2021-ல் பணிகள் துவங்கப்பட்டு, வணிக வளாகத்திற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் ஜூலை 2022-ல் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

113—

வீட்டு வசதி வாரிய மனைகள்

வினா எண் 1248—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாநகரின் தென்பகுதி விரிவடைந்த நாமக்கல் சாலையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக மனைகள், வீடுகள் விற்பனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகரின் தென்பகுதியில் விரிவடைந்த நாமக்கல் சாலைப் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான நிலங்கள் எதுவும் இல்லாததால் மனைகள் மற்றும் வீடுகள் கட்டும் திட்டம் தற்போது இல்லை.

[2021 செப்டம்பர் 13

114—

குடியிருப்புகளைச் சீரமைத்தல்

வினா எண் 1681—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் பகுதியில் பழுதடைந்துள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்புகளை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, டாக்டர் மூர்த்தி சாலையில், 1976-1978 ஆம் ஆண்டு கட்டப்பட்ட 132 தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகள் சிதிலமடைந்த நிலையில் இருப்பதாக தெரிய வந்துள்ளதால் தொழில்நுட்ப வல்லுநர் குழு அமைக்கப்பட்டு இத்திட்டப் பகுதியில் உள்ள குடியிருப்புகளின் ஸ்திரத்தன்மை குறித்து ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தொழில்நுட்ப வல்லுநர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

115—

தெரு விளக்குகள் அமைத்தல்

வினா எண் 76—திரு. S.R. இராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சியைச் சேர்ந்த அரசன் அவென்யூ குடியிருப்புப் பகுதியில் தெரு விளக்குகள் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சியைச் சேர்ந்த அரசன் அவென்யூ குடியிருப்புப் பகுதியில் 7 தெரு விளக்குகள் ஏற்கெனவே 2020-2021 ஆம் ஆண்டு ஊராட்சி பொது நிதியில் அமைக்கப்பட்டு, அனைத்தும் தற்போது பயன்பாட்டில் உள்ளன.

116—

மழைநீர் வடிகால் கால்வாய் அமைத்தல்

வினா எண் 77—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சி, கேப்டன் சசிகுமார் நகர் விரிவு, நம்மாழ்வார் தெருவில் மழைநீர் வடிகால் கால்வாய் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சி, கேப்டன் சசிகுமார் நகர் விரிவு, நம்மாழ்வார் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்து மழைநீரினை வெளியேற்றிட அருகில் உள்ள இடங்கள் தனியார் விவசாய நிலங்களாக உள்ளதால், தற்போது கால்வாய் அமைக்க வழிவகை இல்லை.

117—

குடிநீர் வசதி

வினா எண் 78—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2021 செப்டம்பர் 13*

(அ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சியைச் சேர்ந்த கேப்டன் சசிகுமார் நகர் அடுக்குமாடி குடியிருப்புக்கு (JJM) ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தில் குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் தொகுதி, புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம், முடிச்சூர் ஊராட்சியைச் சேர்ந்த கேப்டன் சசிகுமார் நகரில் மொத்தம் 100 குடியிருப்புகள் உள்ளன. அந்தக் குடியிருப்புகளில், மொத்தம் 8 அடுக்குமாடி குடியிருப்புகள் உள்ளன. பொதுமக்களின் குடிநீர் அவசியத்தைக் கருத்தில் கொண்டு முடிச்சூர் ஊராட்சி பொது நிதியிலிருந்து ஒரு நபருக்கு 55 lpcd வீதம் கணக்கீடு செய்து மேற்காணும் குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

118—

நடைபாதை அமைத்தல்

வினா எண் 79—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சியைச் சேர்ந்த ரங்கா நகர் குளக்கரையை செப்பனிட்டு அதன்மீது மக்கள் நடை பயிற்சி செய்ய நடைபாதையை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சியில் உள்ள ரங்கா நகர் குளக்கரையை செப்பனிட்டு அதன்மீது

2021 செப்டம்பர் 13]

நடைபயிற்சி செய்ய நடைபாதை அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

119—

மழைநீர் வடிகால்வாய் அமைத்தல்

வினா எண் 81—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சி, ரங்கா நகர் குளத்திலிருந்து வெளியேறும் உபரி நீரை சீக்கனாள் ஏரியில் சென்று கலப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சி, ரங்கா நகர் குளத்திலிருந்து வெளியேறும் உபரி நீரை சீக்கனாள் ஏரியில் சென்று கலப்பதற்கு உரிய மழைநீர் வடிகால்வாய் ரூ.24.70 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் மேற்கொள்ள உரிய மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மாவட்ட நிருவாகத்திற்கு பிரேரணை அனுப்பப்பட்டு உரிய நிர்வாக அனுமதி பெறப்பட்டவுடன் பணி துவங்கப்படும்.

120—

கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலையம் அமைத்தல்

வினா எண் 180—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்போரூர் தொகுதியிலுள்ள நாவலூர், தாழம்பூர், படூர், கேளம்பாக்கம், கானாத்தூர், முட்டுக்காடு ஆகிய ஊராட்சிகளில்

மனித கழிவை சுத்திகரிக்கும் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்போரூர் தொகுதியிலுள்ள நாவலூரர், தாழம்பூர், படூர், கேளம்பாக்கம், கானாத்தூரர், முட்டுக்காடு ஆகிய ஊராட்சிகளில் எந்த ஓர் இடத்திலும் மனித கழிவை சுத்திகரிக்கும் நிலையம் அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் நிலுவையில் ஏதும் இல்லை.

121—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

வினா எண் 185—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, நரசநாயகபுரம் ஊராட்சி, வயலூர் கிராமத்தில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, நரசநாயகபுரம் ஊராட்சியில் 2034 மக்கள் தொகை உள்ளது. இந்த ஊராட்சியில் ஏற்கெனவே 7 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன. மேலும், ஜல்ஜீவன் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ரூ.12,29,000/- மதிப்பீட்டில் தனி நபர் வீட்டு குடிநீர் இணைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, தற்போது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்ட வேண்டிய நிலை ஏற்படவில்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 13]

122—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 186—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, வயலூர்-பஞ்சாரம் சாலையை சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு சட்டமன்றத் தொகுதி, தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வயலூர்-பஞ்சாரம் சாலை, தஞ்சாவூர்-கும்பகோணம் சாலையையும், பஞ்சாரம்-அம்மன்பேட்டை சாலையையும் இணைக்கும் இணைப்பு சாலையாக உள்ளது. இந்தச் சாலையில் 2019-2020 ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாடு திட்டத்தின்கீழ் 2.600 கி.மீ. நீளத்திற்கு வலுப்படுத்துதல் பணி மேற்கொள்ள ரூ.48.95 இலட்சம் மதிப்பீட்டில் நிருவாக அனுமதி பெறப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி துவங்கப்பட்டுள்ளது.

123—

இணைப்புச் சாலை அமைத்தல்

வினா எண் 272—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், உளியம்பாக்கம் ஊராட்சி, உளியம்பாக்கம் முதல் கார்கந்தாங்கால் வரை புதிய இணைப்புச் சாலை அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், உளியம்பாக்கம் முதல் கார்கந்தாங்கால் வரை புதிய இணைப்புச் சாலையை வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

124—

பள்ளிக்குக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 274—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், கீழாந்தூர் ஊராட்சி, பள்ளியாங்குப்பம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், கீழாந்தூர் ஊராட்சி, பள்ளியாங்குப்பம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளியில் தற்போது 45 மாணவ/மாணவிகள் கல்வி பயில்கிறார்கள். இப்பள்ளிக்கு ஏற்கெனவே ஒரு புதிய கட்டடம் 2019-2020 ஆம் நிதியாண்டில் ரூ.9.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இக்கட்டடம் அங்கு பயிலும் மாணவ/ மாணவிகளுக்கு போதுமானதாக இல்லை என்பதால், கூடுதல் பள்ளிக் கட்டடம் மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2021-2022 ஆம் நிதியாண்டில் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 13]

125—

ஏரியைத் தூர்வாருதல்

வினா எண் 276—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், காவனூர் ஊராட்சி, காவனூர் சம்மந்தாங்கல் ஏரியைத் தூர்வாரி சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், காவனூர் ஊராட்சி, காவனூர் செம்மாந்தாங்கல் ஏரியில் தூர்வார, வரும் நிதியாண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் (*MGNREGS*) திட்டத்தின்மூலம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.*

126—

ஏரியின் மதகைச் சீரமைத்தல்

வினா எண் 277—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், ஆணைப்பாக்கம் ஊராட்சி, ஆணைப்பாக்கம் பெரிய ஏரியின் மதகை சீரமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், ஆணைப்பாக்கம்

ஊராட்சி, ஆணைப்பாக்கம் பெரிய ஏரியின் மதகு சீரமைக்கும் பணி வரும் நிதியாண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் (MGNREGS) திட்டத்தின்மூலம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

127—

குளத்தைத் தூர்வாருதல்

வினா எண் 278—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், ஆணைப்பாக்கம் ஊராட்சி, ஆணைப்பாக்கம் மாதாகுளத்தை தூர்வாரி சீரமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், ஆணைப்பாக்கம் ஊராட்சி, ஆணைப்பாக்கம் மாதாகுளத்திற்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்மூலம் தூர்வாரி சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

128—

உடற்பயிற்சிக் கூடம் கட்டுதல்

வினா எண் 279—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், உளியம்பாக்கம் ஊராட்சியில் உடற்பயிற்சிக் கூடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், உளியம்பாக்கம் ஊராட்சியில் உடற்பயிற்சிக் கூடம் கட்டும் திட்டம் தற்போது அரசிடம் நிலுவையில் ஏதும் இல்லை.

129—

சுற்றுச்சுவர் கட்டுதல்

வினா எண் 737—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, வெங்கம்பாக்கத்தில் உள்ள அங்கன்வாடிக்கு சுற்றுச்சுவர் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சி, வெங்கம்பாக்கத்தில் உள்ள அங்கன்வாடிக்கு சுற்றுச்சுவர் அமைக்கும் பணிக்கு ரூ.9.00 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. இப்பணிக்கான தேவை உள்ளதால், மாநில அரசுத் திட்டத்தில் இப்பணியினை மேற்கொள்ள உத்தேசிக்கப்படுகிறது.

130—

தெருக்களைச் சீரமைத்தல்

வினா எண் 740—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2021 செப்டம்பர் 13

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, அன்னை சத்யா நகர் பகுதியைச் சேர்ந்த அம்பேத்கர் தெரு, ராமகிருஷ்ணர் தெரு மற்றும் பெரியார் தெருக்களைச் சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, அன்னை சத்யா நகர் பகுதியைச் சேர்ந்த அம்பேத்கர் தெரு, ராமகிருஷ்ணர் தெரு மற்றும் பெரியார் தெருக்களைச் சீரமைக்கும் திட்டம் தற்பொழுது அரசிடம் ஏதும் இல்லை.

131—

தெருக்களைச் சீரமைத்தல்

வினா எண் 743—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, அம்பேத்கர் நகரில் உள்ள அனைத்து தெருக்களையும் சீரமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, அம்பேத்கர் நகரில் உள்ள அனைத்து தெருக்களையும் (1,200 மீட்டர்) சீரமைக்க ரூ.60 இலட்சம் தேவைப்படுகிறது. இப்பணி தகுந்த நிதி ஆதாரம் கண்டறிந்து செயல்படுத்தப்படும்.

2021 செப்டம்பர் 13]

132—

பூங்கா அமைத்தல்

வினா எண் 747—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, வெங்கம்பாக்கம், திருவேங்கடம்புரத்தில் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சி, வெங்கம்பாக்கம், திருவேங்கடபுரத்தில் பூங்கா அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் நிலுவையில் இல்லை.

133—

சிறுவர் பூங்கா அமைத்தல்

வினா எண் 750—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, வெங்கம்பாக்கம் காலனியில் சிறுவர் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார்மலை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சி, வெங்கம்பாக்கம் காலனியில் சிறுவர் பூங்கா அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் நிலுவையில் இல்லை.

134—

சாலைகளைச் சீரமைத்தல்

வினா எண் 756—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, கஸ்பாபுரம் அண்ணா தெரு மற்றும் அன்னை தெரு, 1 மற்றும் 2-வது குறுக்குச் சாலைகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, கஸ்பாபுரம், அண்ணா தெரு மற்றும் அன்னை தெரு, 1 மற்றும் 2-வது குறுக்குச் சாலைகளைச் சீரமைக்கும் திட்டம் தற்பொழுது அரசிடம் இல்லை.

135—

சாலைகளைச் சீரமைத்தல்

வினா எண் 759—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரன்தென் ஊராட்சி, கணேஷ் நகர் 2-வது மற்றும் 3-வது குறுக்குத் தெருக்களை சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் தொகுதி, அகரன்தென் ஊராட்சி, கணேஷ் நகர் 2-வது மற்றும் 3-வது குறுக்குத் தெருக்களை சீரமைக்கும் திட்டம் தற்பொழுது அரசிடம் இல்லை.

136—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 762—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, கோகுல் நகர் பிரதான சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, கோகுல் நகர் பிரதான சாலையைச் சீரமைக்கும் திட்டம் தற்பொழுது அரசிடம் இல்லை.

137—

சிறுவர் பூங்கா அமைத்தல்

வினா எண் 764—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, அன்னை சத்யா நகர் பகுதியில் சிறுவர் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2021 செப்டம்பர் 13

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சி, அன்னை சத்யா நகர் பகுதியில் சிறுவர் பூங்கா அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் நிலுவையில் இல்லை.

138—

பேருந்து நிலையம் அமைத்தல்

வினா எண் 766—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, அன்னை சத்யாநகர் பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சி, சத்யா நகர் பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு ரூ.6.00 இலட்சம் மதிப்பீடு ஆகிறது. இப்பணிக்கான தேவை உள்ளதால், தகுந்த நிதி ஆதாரம் கண்டறிந்து இப்பணியினை மேற்கொள்ள உத்தேசிக்கப்படும்.

139—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 767—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2021 செப்டம்பர் 13]

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, அன்னை சத்யா நகர் பகுதியில் கண்ணகி தெரு மற்றும் முத்து மாரியம்மன் கோவில் தெருக்களைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சி, அன்னை சத்யா நகர் பகுதியில் கண்ணகி தெரு மற்றும் முத்து மாரியம்மன் கோவில் தெருக்களைச் சீரமைக்கும் திட்டம் தற்பொழுது அரசிடம் ஏதும் இல்லை.

140—

பெயர் பலகை வைத்தல்

வினா எண் 769—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, திருவாஞ்சேரி ஊராட்சியைச் சேர்ந்த ஸ்ரீராம் நகர் பகுதிக்கு சாலைகளின் பெயர் பலகை வைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட திருவாஞ்சேரி ஊராட்சியைச் சேர்ந்த ஸ்ரீராம் நகர் குடியிருப்புப் பகுதியில் உள்ள சாலைகளில் ஊராட்சி நிருவாகத்தின்மூலம் பெயர் பலகைகள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

141—

தார்ச் சாலையாக மாற்றுதல்

வினா எண் 770—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, திருவாஞ்சேரி ஊராட்சியைச் சேர்ந்த ஸ்ரீராம் நகர் குடியிருப்புப் பகுதியில் உள்ள சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, திருவாஞ்சேரியைச் சேர்ந்த ஸ்ரீராம் நகர் குடியிருப்புப் பகுதியில் உள்ள சாலைகளைத் தார்ச் சாலைகளாக மாற்ற ரூ.7 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. தகுந்த நிதி ஆதாரம் கண்டறிந்து சாலைகள் சீரமைக்கப்படும்.

142—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 781—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சியைச் சேர்ந்த J.J. தெரு சாலையைச் சரி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சியைச் சேர்ந்த J.J. தெரு சாலையைச் (110 மீட்டர்) சீரமைக்க ரூ.5.50 இலட்சம் தேவைப்படுகிறது. தகுந்த நிதி ஆதாரம் கண்டறிந்து இப்பணி செயல்படுத்தப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 13]

143—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 784—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சியைச் சேர்ந்த லட்சுமி நகர் பிரதான சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சியைச் சேர்ந்த லட்சுமி நகர் பிரதான சாலையைச் (150 மீட்டர்) சீரமைக்க ரூ.9 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தகுந்த நிதி ஆதாரம் கண்டறிந்து இப்பணி செயல்படுத்தப்படும்.

144—

நூலகத்தினை விரிவுபடுத்துதல்

வினா எண் 793—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சியில் உள்ள நூலகத்தினை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார்மலை

[2021 செப்டம்பர் 13

ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சியில் உள்ள நூலகமானது 2007-2008 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இந்நூலகத்தை மேம்படுத்த ரூ.1 இலட்சம் மதிப்பீடு எனவும், விரிவுபடுத்த ரூ.20 இலட்சம் மதிப்பீடு எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. தகுந்த நிதி ஆதாரம் கண்டறிந்து பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

145—

உடற்பயிற்சிக் கூடம் அமைத்தல்

வினா எண் 794—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சியில் ஓர் உடற்பயிற்சி கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார்மலை ஊராட்சி ஒன்றியம், அகரம்தென் ஊராட்சியில் ஓர் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் நிலுவையில் இல்லை.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

146—

பாலம் கட்டுதல்

வினா எண் 894—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, மேலபுனவாசல் ஒன்றிய சாலை, ஆனந்த காவேரி வாய்க்காலில் புதிய அகலமான பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, மேலபுனவாசல் ஒன்றிய சாலை, ஆனந்த காவேரி வாய்க்காலில் பழுதடைந்த பாலத்தினை இடித்து அப்புறப்படுத்திவிட்டு 7.5 மீட்டர் அகலம், 8.50 மீட்டர் நீளம் உள்ள புதிய பாலம் அமைத்திட உத்தேச மதிப்பீடு ரூ.35,00,000/- ஆகும். இப்பாலம் அமைக்கப்பட வேண்டிய அவசியத்தைக் கருத்தில் கொண்டு வரும் நிதி ஆண்டில் நபார்டு திட்டம் அல்லது வேறு ஏதேனும் ஒரு திட்டத்தில் முன்னுரிமை அடிப்படையில் பணி மேற்கொள்ளப்படும்.

147—

தார்ச்சாலை அமைத்தல்

வினா எண் 895—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, தென்பெரம்பூர் வெட்டாறு கரையிலிருந்து தென்பெரம்பூர் ஆதி திராவிடர் தெரு வரை ஒன்றிய சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை தார்ச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, தென்பெரம்பூர் வெட்டாறு கரையிலிருந்து தென்பெரம்பூர் ஆதி திராவிடர் தெரு வரை ஒன்றிய சாலையை 2021-2022 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் தேர்வு செய்து ஓரடுக்கு கப்பி சாலையாக ரூ.11,00,00/- மதிப்பீட்டில் மேம்பாடு செய்யப்படும்.

148—

தார்ச்சாலை அமைத்தல்

வினா எண் 896—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவையாறு தொகுதி, தஞ்சாவூர் புறவழிச் சாலை வடகால் கிராமம் முதல் வெண்ணலோடை கிராமம் வரை ஒன்றிய சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை தார்ச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, வடகால் கிராமம் முதல் வெண்ணலோடை கிராமம் வரை உள்ள சாலை தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்தது ஆகும். இச்சாலையின் மொத்த நீளம் 100 மீட்டர். இச்சாலை வெள்ள நிவாரண நிதி 2017-2018 திட்டத்தின்கீழ் ரூ.7.63 இலட்சம் மதிப்பீட்டில் 26-7-2021 அன்று தார் தளம் பணி முடிக்கப்பட்டுள்ளது.

149—

தார்ச்சாலை அமைத்தல்

வினா எண் 897—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, வண்ணாரப்பேட்டை மயான சாலையை தார்ச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, வண்ணாரப்பேட்டை மயான சாலையை தார்ச் சாலையாக

2021 செப்டம்பர் 13]

மாற்ற ரூ.17.50 இலட்சம் தேவைப்படுகிறது. இப்பணி, முன்னுரிமை அடிப்படையில் ஏதேனும் ஒரு திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

150—

மயான சாலை சீரமைத்தல்

வினா எண் 932—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், பைங்காநாடு ஊராட்சி, இராஜவிநாயகர் தெரு மயான சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், பைங்காநாடு இராஜவிநாயகர் தெரு மயான சாலையைச் சீரமைக்க 400 மீ. நீளத்திற்கு உத்தேச மதிப்பீடு ரூ.8.66 இலட்சம் நிதி தேவைப்படும். இந்தச் சாலைப் பணியினை 2021-2022 ஆம் நிதி ஆண்டு அரசின் சாலை திட்டப் பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதியில் முன்னுரிமை அடிப்படையில் எடுத்து மேம்பாடு செய்ய உத்தேசிக்கப்படுகிறது.

151—

சுற்றுச்சுவர் கட்டுதல்

வினா எண் 937—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், மகாதேவப்பட்டினம் மேற்கு பள்ளிக்குச் சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். மன்னார்குடி ஒன்றியம், மகாதேவப்பட்டினம் ஊராட்சி, கீழப்பேட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு மேற்குப் பக்கம் 269 மீ. நீளம் உள்ள சுற்றுச்சுவர் அமைக்க ரூ.18.11 இலட்சம் மற்றும் கிழக்குப் பக்கம் 70 மீ. நீளமுள்ள சுற்றுச்சுவர் அமைக்க ரூ.4.71 இலட்சமும் மதிப்பீடு செய்யப்பட்டு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்மூலம் அமைப்பதற்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

152—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 945—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், காரிக்கோட்டையில் சமுதாயக்கூடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், காரிக்கோட்டையில் சமுதாயக்கூடம் கட்டுவதற்கு 2020-2021 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்ட நிதியில் ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் நிருவாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

153—

கட்டடம் கட்டுதல்

வினா எண் 951—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 13]

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், மரவாக்காடு ஊராட்சி மன்றத் தலைவர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி வட்டாரம், மரவாக்காடு ஊராட்சிக்கு ஊராட்சி மன்ற அலுவலகம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் புதிதாகக் கட்டித் தர உத்தேசிக்கப்படும்.

154—

சமையல் கூடம் கட்டுதல்

வினா எண் 952—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், தென்பாதி ஊராட்சி, நடுநிலைப் பள்ளியில் சமையல் கூடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியத்தில், தென்பாதி ஊராட்சி ஒன்றிய அரசு நடுநிலைப் பள்ளியில், சமையல் கூடம் ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (RCSIDS) முன்னுரிமை அடிப்படையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

155—

பள்ளிக்குக் கட்டடம்

வினா எண் 965—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், சுந்தரக்கோட்டை நடுநிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், சுந்தரக்கோட்டை நடுநிலைப் பள்ளிக்கு 6 வகுப்பறை கட்டடம் உள்ளது. அப்பள்ளியில் 175 மாணவர்கள் பயின்று வருகின்றனர். அம்மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கட்டட வசதி உள்ளது. எனவே, புதிய வகுப்பறை கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

156—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 969—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், மேலநெம்மேலியில் சமுதாயக்கூடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், மேலநெம்மேலி ஊராட்சியில் 2014-2015 பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சமுதாயக்கூடம் கட்டப்பட்டு, தற்போது நல்ல நிலையில் உள்ளது. எனவே, புதிதாக சமுதாயக்கூடம் கட்டுவதற்குத் தேவை எழவில்லை.

157—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 973—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2021 செப்டம்பர் 13]

(அ) மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், மகாதேவப்பட்டினத்தில் சமுதாயக்கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், மகாதேவப்பட்டினம் ஊராட்சியில் 6 குக்கிராமங்கள் உள்ளன. ஊராட்சியின் மக்கள் தொகை 6,500 ஆகும். சமுதாயக்கூடம் கட்டுவதற்கு போதுமான இடவசதி இந்த ஊராட்சியில் உள்ளது. ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில் சமுதாயக்கூடம் கட்ட உத்தேசிக்கப்படுகிறது.

158—

பாலம் சீரமைத்தல்

வினா எண் 975—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், கூப்பாசிக்கோட்டை கிராமத்தில் போக்கு வாய்க்கால் பாலத்தை சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், கூப்பாசிக்கோட்டை கிராமத்தில் போக்கு கால்வாய்ப் பாலம் தற்போது 10 பைப் கல்வெர்ட் பாலமாக உள்ளது. இப்பாலம் பைங்காடு, கூப்பாசிக்கோட்டை இணைக்கும் வகையில் உள்ளதால், புதிய பாலம் அமைக்கப்பட்டால் சுமார் 1500 பேர் பயனடைவார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு இப்பணியினை நபார்டு திட்டத்தின்கீழ் வரும் நிதியாண்டில் பாலமாகக் கட்டிட இப்பணிக்கு முன்னுரிமை அளித்து நிறைவேற்ற உத்தேசிக்கப்படுகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

159—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 979—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், பரவாக்கோட்டை ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், பரவாக்கோட்டை ஊராட்சியிலுள்ள 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள தொகுப்பு வீடுகளை பழுது நீக்கம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

160—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 987—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், சேரி ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், சேரி ஊராட்சியிலுள்ள 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள தொகுப்பு வீடுகளை பழுது நீக்கம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

2021 செப்டம்பர் 13]

161—

பொது சுகாதார வளாகம் கட்டுதல்

வினா எண் 995—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், ராமாபுரம் ஊராட்சி, வாஞ்சூரில் பொது சுகாதார வளாகம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், ராமாபுரம் ஊராட்சி, வாஞ்சூரில் பொது சுகாதார வளாகம் கட்டுவதற்கு அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு இடம் ஏதும் இல்லை. மேலும், இவ்வூராட்சியில் அனைவருக்கும் தனி நபர் கழிவறை உள்ளதால், பொது சுகாதார வளாகம் கட்டவேண்டிய அவசியம் எழவில்லை.

162—

இணைப்புச் சாலை சீரமைத்தல்

வினா எண் 997—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், இடையர்நத்தம் ஊராட்சி, திருமக்கோட்டை சாலை-சுந்தரக்கோட்டை ஆற்றங்கரை இணைப்புச் சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், சுந்தரக்கோட்டை வரை 1.5 கி.மீ. ஓரடுக்கு கப்பி சாலை

அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள திருமக்கோட்டை இணைப்புச் சாலை 570 மீ ஆகும். இச்சாலை ஆற்றங்கரை ஒன்றிய சாலை என்பதால் கள ஆய்வு மேற்கொண்டு, பொதுப் பணித் துறையிடம் அனுமதி பெற்று பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்படுகிறது.

163—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 991—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், திருமக்கோட்டை ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், திருமக்கோட்டை ஊராட்சியிலுள்ள 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு, மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள தொகுப்பு வீடுகளை பழுது நீக்கம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

164—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 1038—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், தென்பாதி ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், தென்பாதி ஊராட்சியிலுள்ள 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள தொகுப்பு வீடுகளை பழுது நீக்கம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

165—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 1039—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், வடபாதி ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், வடபாதி ஊராட்சியிலுள்ள 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு, மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள தொகுப்பு வீடுகளை பழுது நீக்கம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

166—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 1040—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், சேரன்குளம் ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?

[*2021 செப்டம்பர் 13*

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், சேரன்குளம் ஊராட்சியிலுள்ள 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டடப்பட்டு மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள தொகுப்பு வீடுகளை பழுது நீக்கம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

167—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 1045—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், ஏத்தக்குடி ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், ஏத்தக்குடி ஊராட்சியிலுள்ள 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டடப்பட்டு, மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள தொகுப்பு வீடுகளை பழுது நீக்கம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

168—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 1046—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2021 செப்டம்பர் 13]

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், சவலக்காரன் ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், சவலக்காரன் ஊராட்சியிலுள்ள 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு, மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள தொகுப்பு வீடுகளை பழுது நீக்கம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

169—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 1054—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், நெடுவாக்கோட்டை ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், நெடுவாக்கோட்டை ஊராட்சியிலுள்ள 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு, மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள தொகுப்பு வீடுகளைச் சீர்செய்வதற்காக முழுமையான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு இவ்வூராட்சியில் பழுதடைந்துள்ளதாக கணக்கீடு செய்யப்படும் அனைத்து வீடுகளையும் புதுப்பித்துத் தர நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2021 செப்டம்பர் 13

170—

பாலம் சீரமைத்தல்

வினா எண் 1058—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், எடகீழையூர், பெரியார் நகர் பாலத்தை சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் வட்டாரம், எடகீழையூர் பெரியார் நகர் பாலத்தை ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்க 2021-2022 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பணிகள் துவங்கப்படும்.

171—

சாலையை அகலப்படுத்தி சீரமைத்தல்

வினா எண் 1062—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், தளிக்கோட்டையிலிருந்து கருவாக்குறிச்சி காலனி கருவாக்குறிச்சி-ஒவேல்குடி சாலையை அகலப்படுத்தி சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் வட்டாரம், தளிக்கோட்டையிலிருந்து கருவாக்குறிச்சி காலனி, கருவாக்குறிச்சி-ஒவேல்குடி சாலை, 4.450 கி.மீ. நீளமுடையது. இச்சாலையினை சீரமைக்க PMGSY-II *2021-2022 ஆம் ஆண்டு*

2021 செப்டம்பர் 13]

திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் கோரி பணிகள் துவங்கப்படும்.

172—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 1064—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், செட்டிச்சத்திரம் ஊராட்சியில் சமுதாயக்கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், செட்டிச்சத்திரம் அய்யம்பேட்டை ஊராட்சியில், செட்டிச்சத்திரம் குக்கிராமத்தில் சுமார் 65 குடும்பங்கள் மட்டும் குறைந்த அளவில் வசித்துவருவதால், இக்குக்கிராமத்தில் அமைந்துள்ள மகளிர் சுய உதவிக் குழு கட்டடத்தினை பயன்படுத்தி வருகின்றனர். எனவே, புதிய சமுதாயக்கூடம் கட்டுவதற்கான அவசியம் எழவில்லை.

173—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 1065—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், சோனாப்பேட்டை மேற்கில் சமுதாயக்கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், சோனாப்பேட்டை மேற்கு குக்கிராமத்தில் சுமார் 180 குடும்பங்கள் மட்டும் குறைந்த அளவில் வசித்து வருவதால் இக்குக்கிராமத்தில் அமைந்துள்ள மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடத்தினைப் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, புதிய சமுதாயக்கூடம் கட்டுவதற்கான அவசியம் எழவில்லை.

174—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 1066—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், ஆதனூரில் சமுதாயக்கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டாரம், மன்னார்குடி தொகுதி, ஆதனூரில் சமத்துவபுரத்தில் ஏற்கெனவே சமுதாயக்கூடம் உள்ள நிலையில் புதியதாக சமுதாயக்கூடம் கட்ட அவசியம் எழவில்லை.

175—

சமுதாயக்கூடம் கட்டுதல்

வினா எண் 1069—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2021 செப்டம்பர் 13]

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், மேலாளவந்தசேரி ஊராட்சி, அந்தோணியார் கோவில் தெருவில் சமுதாயக்கூடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், மேலாளவந்தசேரி ஊராட்சி, அந்தோணியார் கோவில் தெருவில் சுமார் 160 குடும்பங்கள் மட்டும் குறைந்த அளவில் வசித்து வருவதால் சுமார் 2.00 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள புதுதேங்குடி ஊராட்சி சமுதாயக் கூடத்தினை உபயோகித்து வருகின்றனர். எனவே, புதிய சமுதாயக்கூடம் கட்டுவதற்கான அவசியம் எழவில்லை.

176—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 1072—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், கட்டக்குடி ஊராட்சி, அண்ணாநகர் சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

மன்னார்குடி சட்டமன்றத் தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், கட்டக்குடி ஊராட்சி, அண்ணாநகர் சாலை 400 மீ. நீளமுடையது. இச்சாலையை ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் 2021-2022 ஆம் ஆண்டு மாநில நிதிக் குழு மானியம் (மாவட்ட ஊராட்சி) நிதியில் இச்சாலையை சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[*2021 செப்டம்பர் 13*

177—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 1073—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், கட்டக்குடி ஊராட்சி, சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், கட்டக்குடி ஊராட்சி சாலை 1.200 கி.மீ. நீளமுடையது. இச்சாலையை ரூ.36.00 இலட்சம் மதிப்பீட்டில் TNRRIS *2021-2022 திட்டத்தில் மேற்கொண்டு சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

178—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 1074—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், கட்டக்குடி பாரதிதாசன்புரம் சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் வட்டாரம், கட்டக்குடி பாரதிதாசன்புரம் சாலை 300 மீ. நீளமுடையது. அதனை ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்க 2021-2022 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பணிகள் துவங்கப்படும்.

2021 செப்டம்பர் 13]

179—

தெரு விளக்கு வசதி

வினா எண் 1078—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட நீடாமங்கலம் ஒன்றியம், செருமங்கலம் ஊராட்சி, அப்பரசம்பேட்டை மயானத்திற்கு தெரு விளக்கு வசதி செய்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் வட்டாரம், செருமங்கலம் ஊராட்சி, அப்பரசம்பேட்டை மயானத்திற்கு தெரு விளக்கு வசதி செய்துதர ரூ.60,000 மதிப்பீட்டில் 15-வது நிதிக் குழு மானியத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

180—

தெரு விளக்கு வசதி

வினா எண் 1079—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், கட்டக்குடி ஊராட்சி, சின்ன காரக்கோட்டை மயானத்திற்கு தெரு விளக்கு வசதி செய்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் வட்டாரம், கட்டக்குடி ஊராட்சி, சின்ன காரக்கோட்டை மயானத்திற்கு ரூ.60,000 மதிப்பீட்டில் 2021-2022 ஆம் ஆண்டு ஊராட்சி பொது நிதியில் தெரு விளக்கு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[*2021 செப்டம்பர் 13*

181—

சாலை சீரமைத்தல்

வினா எண் 1080—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், எடகீழையூர் முடுக்குத் தெரு சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், எடகீழையூர் முடுக்குத் தெரு சாலை 2.500 கி.மீ. நீளமுடையது. ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் TNRRIS *2021-2022 ஆம் ஆண்டில் சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

182—

சாலை சீரமைத்தல்

வினா எண் 1081—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், கட்டக்குடி ஊராட்சி, உடையார் தெரு சாலையைச் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் வட்டாரம், கட்டக்குடி ஊராட்சி, உடையார் தெரு சாலை 600 மீ. நீளமுடையது. அதனை ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்க 2021-2022 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பணிகள் துவங்கப்படும்.

2021 செப்டம்பர் 13]

183—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 1082—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், வடுவூர் வடபாதி ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், வடுவூர் வடபாதி ஊராட்சியிலுள்ள 15 தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க ரூ.7.50 இலட்சம் மதிப்பீடு ஆகும். இவ்வீடுகளைச் சீரமைக்க தகுந்த நிதி ஆதாரத்தைக் கண்டறிந்து, பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

184—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 1083—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், எடகீழையூர் ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், எடகீழையூர் ஊராட்சியிலுள்ள 25 தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க ரூ.12.50 இலட்சம் மதிப்பீடு ஆகும். இவ்வீடுகளைச் சீரமைக்க தகுந்த நிதி ஆதாரத்தைக் கண்டறிந்து, பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

185—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 1084—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், வடுவூர் தென்பாதி ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், வடுவூர் தென்பாதி ஊராட்சியிலுள்ள 41 தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க ரூ.20.50 இலட்சம் மதிப்பீடு ஆகும். இவ்வீடுகளைச் சீரமைக்க தகுந்த நிதி ஆதாரத்தைக் கண்டறிந்து, பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

186—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 1085—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், ஆதனூர் ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், ஆதனூர் ஊராட்சியிலுள்ள 14 தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க ரூ.7.00 இலட்சம் மதிப்பீடு ஆகும். இவ்வீடுகளைச் சீரமைக்க தகுந்த நிதி ஆதாரத்தைக் கண்டறிந்து, பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 13]

187—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 1086—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், அனுமந்தபுரம் ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், அனுமந்தபுரம் ஊராட்சியிலுள்ள 52 தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க ரூ.26 இலட்சம் மதிப்பீடு ஆகும். இவ்வீடுகளைச் சீரமைக்க தகுந்த நிதி ஆதாரத்தைக் கண்டறிந்து, பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

188—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 1087—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், ஒளிமதி ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், ஒளிமதி ஊராட்சியிலுள்ள 13 தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க ரூ.6.50 இலட்சம் மதிப்பீடு ஆகும். இவ்வீடுகளைச் சீரமைக்க தகுந்த நிதி ஆதாரத்தைக் கண்டறிந்து, பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2021 செப்டம்பர் 13

189—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 1088—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், அய்யம்பேட்டை ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், செட்டிச்சத்திரம் அய்யம்பேட்டை ஊராட்சியிலுள்ள 12 தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க ரூ.6.00 இலட்சம் மதிப்பீடு ஆகும். இவ்வீடுகளைச் சீரமைக்க தகுந்த நிதி ஆதாரத்தைக் கண்டறிந்து, பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

190—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 1089—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், பொதக்குடி ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், பொதக்குடி ஊராட்சியிலுள்ள 18 தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க ரூ.9.00 இலட்சம் மதிப்பீடு ஆகும். இவ்வீடுகளைச் சீரமைக்க தகுந்த நிதி ஆதாரத்தைக் கண்டறிந்து, பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 13]

191—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 1090—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், ரிஷியூர் ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், ரிஷியூர் ஊராட்சியிலுள்ள 11 தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க ரூ.5.50 இலட்சம் மதிப்பீடு ஆகும். இவ்வீடுகளைச் சீரமைக்க தகுந்த நிதி ஆதாரத்தைக் கண்டறிந்து, பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

192—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 1091—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், மேலாளவந்தசேரியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், மேலாளவந்தசேரி ஊராட்சியிலுள்ள 10 தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க ரூ.5.00 இலட்சம் மதிப்பீடு ஆகும். இவ்வீடுகளைச் சீரமைக்க தகுந்த நிதி ஆதாரத்தைக் கண்டறிந்து, பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2021 செப்டம்பர் 13

193—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 1092—முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், கீழாளவந்தசேரியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், கீழாளவந்தசேரி ஊராட்சியிலுள்ள 8 தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க ரூ.4.00 இலட்சம் மதிப்பீடு ஆகும். இவ்வீடுகளைச் சீரமைக்க தகுந்த நிதி ஆதாரத்தைக் கண்டறிந்து, பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

194—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 1093—முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், புதுதேவங்குடி ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், புதுதேவங்குடி ஊராட்சியிலுள்ள 9 தொகுப்பு வீடுகளைச்

2021 செப்டம்பர் 13]

சீரமைக்க ரூ.4.50 இலட்சம் மதிப்பீடு ஆகும். இவ்வீடுகளைச் சீரமைக்க தகுந்த நிதி ஆதாரத்தைக் கண்டறிந்து, பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

195—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 1094—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், வெள்ளக்குடி ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், வெள்ளக்குடி ஊராட்சியிலுள்ள 20 தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க ரூ.10.00 இலட்சம் மதிப்பீடு ஆகும். இவ்வீடுகளைச் சீரமைக்க தகுந்த நிதி ஆதாரத்தைக் கண்டறிந்து, பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

196—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 1095—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், பொதக்குடி ஊராட்சி, சேகரையிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், பொதக்குடி ஊராட்சி, சேகரையிலுள்ள 19 தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க ரூ.9.50 இலட்சம் மதிப்பீடு ஆகும். இவ்வீடுகளைச் சீரமைக்க தகுந்த நிதி ஆதாரத்தைக் கண்டறிந்து, பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

197—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 1096—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், அதங்குடி ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், அதங்குடி ஊராட்சியிலுள்ள 12 தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க ரூ.6.00 இலட்சம் மதிப்பீடு ஆகும். இவ்வீடுகளைச் சீரமைக்க தகுந்த நிதி ஆதாரத்தைக் கண்டறிந்து, பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

198—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 1097—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2021 செப்டம்பர் 13]

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், அரிச்சபுரம் ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், அரிச்சபுரம் ஊராட்சியிலுள்ள 11 தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க ரூ.5.50 இலட்சம் மதிப்பீடு ஆகும். இவ்வீடுகளைச் சீரமைக்க தகுந்த நிதி ஆதாரத்தைக் கண்டறிந்து, பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

199—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 1098—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், கானூர் அன்னவாசல் ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், கானூர் அன்னவாசல் ஊராட்சியிலுள்ள 11 தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க ரூ.5.50 இலட்சம் மதிப்பீடு ஆகும். இவ்வீடுகளைச் சீரமைக்க தகுந்த நிதி ஆதாரத்தைக் கண்டறிந்து, பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

200—

தொகுப்பு வீடுகள் சீரமைத்தல்

வினா எண் 1099—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், ராயபுரம் ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளைச் சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், ராயபுரம் ஊராட்சியிலுள்ள 17 தொகுப்பு வீடுகளைச் சீரமைக்க ரூ.8.50 இலட்சம் மதிப்பீடு ஆகும். இவ்வீடுகளைச் சீரமைக்க தகுந்த நிதி ஆதாரத்தைக் கண்டறிந்து, பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 13]

பட்டியல் 2

1—

தொகுப்பு வீடுகளைச் சீரமைத்தல்

வினா எண் 1100—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், சித்தமல்லி ஊராட்சியில் உள்ள தொகுப்பு வீடுகளை சீரமைத்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், சித்தமல்லி ஊராட்சியில் உள்ள 12 தொகுப்பு வீடுகளை சீரமைக்க ரூ.6 இலட்சம் மதிப்பீடு ஆகும். இவ்வீடுகளை சீரமைக்க தகுந்த நிதியாதாரத்தைக் கண்டறிந்து, பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2—

தொகுப்பு வீடுகளைச் சீரமைத்தல்

வினா எண் 1101—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், பரப்பனாமேடு ஊராட்சியில் உள்ள தொகுப்பு வீடுகளை சீரமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், பரப்பனாமேடு ஊராட்சியில் உள்ள 17 தொகுப்பு வீடுகளை

சீரமைக்க ரூ.8.50 இலட்சம் மதிப்பீடு ஆகும். இவ்வீடுகளை சீரமைக்க தகுந்த நிதியாதாரத்தைக் கண்டறிந்து, பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3—

தொகுப்பு வீடுகளைச் சீரமைத்தல்

வினா எண் 1102—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், கோவில்வெண்ணி ஊராட்சியில் உள்ள தொகுப்பு வீடுகளை சீரமைத்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், கோவில்வெண்ணி ஊராட்சியில் உள்ள 12 தொகுப்பு வீடுகளை சீரமைக்க ரூ.6 இலட்சம் மதிப்பீடு ஆகும். இவ்வீடுகளை சீரமைக்க தகுந்த நிதியாதாரத்தைக் கண்டறிந்து, பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 1105—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், பேரையூர் ஊராட்சி, ஓவேல்குடி அய்யனார் கோவில் தெரு சாலையை சீரமைக்க அரசு முன்வருமா?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் வட்டாரம், பேரையூர் ஊராட்சி, ஓவேல்குடி அய்யனார் கோவில் தெரு சாலை, 200 மீட்டர் நீளமுள்ள சாலையை ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் சீரமைக்க 2020-2021 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பணிகள் துவங்கப்படவுள்ளன.

5—

சுற்றுச் சுவர் கட்டுதல்

வினா எண் 1122—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், செருமங்கலம் ஊராட்சி, காஞ்சிக்குடிக்காடு தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், செருமங்கலம் ஊராட்சி, காஞ்சிக்குடிக்காடு தொடக்கப் பள்ளியில் 2017-2018 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (MLACDS) சுற்றுச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது. எனவே, புதிய சுற்றுச் சுவர் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

6—

சுற்றுச் சுவர் கட்டுதல்

வினா எண் 1123—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

[2021 செப்டம்பர் 13

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், வடுவூர் வடபாதி கொண்டையூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், வடுவூர் வடபாதி கொண்டையூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் ஏற்கெனவே கடந்த வருடமே எடுத்துக்கொள்ளப்பட்டு, முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. எனவே, தற்போது கூடுதலாக சுற்றுச் சுவர் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

7—

சுகாதார வளாகம் கட்டுதல்

வினா எண் 1128—முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், அய்யம்பேட்டை அம்பலக்காரத் தெருவில் பொது சுகாதார வளாகம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், அய்யம்பேட்டை, அம்பலக்காரத் தெருவில் சுகாதார வளாகக் கட்டடம் கட்ட 2021-2022 ஆம் ஆண்டு 15-வது நிதிக் குழு மானிய (Tied) திட்டத்தின்கீழ் இப்பணி சேர்க்கப்பட்டுள்ளது.

8—

தொகுப்பு வீடுகளைச் சீரமைத்தல்

வினா எண் 1138—முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —

2021 செப்டம்பர் 13]

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், கட்டக்குடி ஊராட்சியில் உள்ள தொகுப்பு வீடுகளை சீரமைத்து தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், கட்டக்குடி ஊராட்சியில் உள்ள 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள தொகுப்பு வீடுகளை பழுது நீக்கம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

9—

தொகுப்பு வீடுகளைச் சீரமைத்தல்

வினா எண் 1144—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், பேரையூர் ஊராட்சியிலுள்ள தொகுப்பு வீடுகளை சீரமைத்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஆம். திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், பேரையூர் ஊராட்சியிலுள்ள 25 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டு மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள தொகுப்பு வீடுகளை பழுது நீக்கம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

10—

ஊராட்சியை உருவாக்குதல்

வினா எண் 1406—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

[2021 செப்டம்பர் 13

கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் ஒன்றியம், ஈசாந்தை ஊராட்சியிலுள்ள நாட்டார்மங்கலம் துணை கிராமத்தை தனி ஊராட்சியாக உருவாக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் ஒன்றியம், ஈசாந்தை ஊராட்சியிலுள்ள நாட்டார்மங்கலம் துணை கிராமத்தை தனி ஊராட்சியாக உருவாக்குவது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

11—

கழிவுநீர் வாய்க்கால் அமைத்தல்

வினா எண் 1412—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் ஒன்றியம், அம்மகளத்தூர் ஊராட்சியில் தேரோடும் வீதியில் கழிவுநீர் வாய்க்கால் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சின்னசேலம் ஒன்றியம், அம்மகளத்தூர் ஊராட்சியில் தேரோடும் வீதியின் மொத்த நீளம் 285 மீட்டர் ஆகும். மேற்காணும் வீதியில் இரண்டு பக்கமும் கழிவுநீர் வாய்க்கால் அமைக்கப்பட வேண்டியுள்ளது. இதன் தொடர்ச்சியாக மேற்படி கழிவு நீரை வெளியில் கொண்டுசெல்ல 270 மீட்டர் நீளம் வடிகால் தேவைப்படுகிறது. இப்பணியினை 2021-2022 ஆம் ஆண்டிற்கான மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டத்தின்கீழ் நிருவாக அனுமதி பெற்று இப்பணி செயல்படுத்தப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 13]

12—

சாலையைப் புதுப்பித்தல்

வினா எண் 1413—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் ஒன்றியம், கூகையூர் முதல் வி.மாமந்தூர் சாலை, வி.மாமந்தூர் முதல் வீரபயங்கரம் சாலையை புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் ஒன்றியம், கூகையூர் முதல் வி.மாமந்தூர் சாலை வரை உள்ள தார்ச் சாலையின் நீளம் 4,550 மீ. ஆகும். மேற்படி தார்ச் சாலை 2015-2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாடு திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு தற்பொழுது பழுதடைந்த நிலையில் உள்ளது. எனவே, மேற்படி சாலையினை பிரதம மந்திரி கிராம சாலை திட்டத்தின்கீழ் (*PMGSY Phase-III*) எடுத்துக்கொள்ள முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு, நிருவாக அனுமதி பெறப்பட்டவுடன் பணி செயல்படுத்தப்படும். மேலும், வி.மாமந்தூர் முதல் வீரபயங்கரம் வரையிலான தார்ச் சாலையின் மொத்த நீளம் 3,795 மீ. ஆகும். மேற்படி சாலை பிரதம மந்திரி கிராம சாலை திட்டத்தின்கீழ் (*PMGSY Phase-III *2017-2018) எடுத்துக்கொள்ளப்பட்டு, பணி முடிக்கப்பட்டுள்ளது. தற்போது, மேற்படி சாலை 3 ஆம் ஆண்டு பராமரிப்பு காலத்தில் உள்ளது. இச்சாலை தற்பொழுது நல்ல நிலையில் உள்ளது என்பதால், மேம்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.*

13—

கழிவுநீர் வாய்க்கால் அமைத்தல்

வினா எண் 1414—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஒன்றியம், நீலமங்கலம் ஊராட்சியில் உள்ள நரிக்குறவர் காலனி மற்றும் புதிய நகர்களுக்கு கழிவுநீர் வாய்க்கால் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி, கள்ளக்குறிச்சி ஒன்றியம், நீலமங்கலம் ஊராட்சியில் உள்ள நரிக்குறவர் காலனியில் தெற்கு தெரு, நடுத் தெரு, மெயின் ரோடு, கிழக்கு தெரு, மேற்கு தெரு என மொத்தம் 5 தெருக்கள் உள்ளன. இதில் கிழக்கு தெருவில் மட்டும் சுமார் 65 மீட்டர் நீளத்திற்கு வடிகால் வாய்க்கால் உள்ளது. மீதியுள்ள தெருக்கள் 2021-2022 ஆம் ஆண்டுக்கான 15 ஆம் நிதிக் குழு திட்டத்தில் செயல்படுத்தப்படும்.

14—

குடியிருப்புகளைப் பராமரித்தல்

வினா எண் 1415—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் ஒன்றியம், இராயர்பாளையம் ஊராட்சி, நரிக்குறவர் காலனியில் உள்ள தொகுப்பு வீடுகள் மற்றும் இலங்கை அகதியினர் குடியிருப்புகளை பராமரிப்பு செய்ய அரசு முன்வருமா?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் ஒன்றியம், இராயர்பாளையம் ஊராட்சி, நரிக்குறவர் காலனியில், 1979-1980 ஆம் நிதியாண்டில் அரசு திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள 21 ஓட்டு வீடுகள், 11 சாய்வுதள கான்கிரீட் வீடுகள் தற்போது மேற்கூரை மற்றும் தரைதளம் பழுதடைந்த நிலையில் உள்ளன. உரிய நிதியாதாரம் கண்டறிந்து இப்பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், இராயர்பாளையம் ஊராட்சியிலுள்ள இலங்கை அகதியினர் குடியிருப்பு பராமரிப்பு வருவாய்த் துறை தொடர்புடையது.

15—

ஊராட்சியைப் பிரித்தல்

வினா எண் 1425—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஒன்றியம், தியாகை ஊராட்சியில் உள்ள செருவல் துணை கிராமத்தை தனி ஊராட்சியாகப் பிரிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஒன்றியம், தியாகை ஊராட்சியில் உள்ள செருவல் துணை கிராமத்தை தனி ஊராட்சியாகப் பிரிப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2021 செப்டம்பர் 13

16—

ஊராட்சியைப் பிரித்தல்

வினா எண் 1428—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்குப் விடையளிப்பாரா —*

கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஒன்றியம், உச்சிமேடு ஊராட்சியிலுள்ள புது உச்சிமேடு கிராமத்தை தனி ஊராட்சியாக பிரிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஒன்றியம், உச்சிமேடு ஊராட்சியிலுள்ள புது உச்சிமேடு கிராமத்தை தனி ஊராட்சியாகப் பிரிப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

17—

ஊராட்சியைப் பிரித்தல்

வினா எண் 1444—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஒன்றியம், சிறுவங்கூர் ஊராட்சியில் உள்ள ரோடு மாமனந்தல் கிராமத்தை தனி ஊராட்சியாகத் பிரித்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி ஒன்றியம், சிறுவங்கூர் ஊராட்சியில் உள்ள ரோடு மாமனந்தல் கிராமத்தை தனி ஊராட்சியாக, பிரிப்பது தொடர்பான கருத்து ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

2021 செப்டம்பர் 13]

18—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 1496—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், தணிகைபோளூர் ஊராட்சி, வாணியம்பேட்டை கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், தணிகைபோளூர் ஊராட்சி, பாலகிருஷ்ணாபுரம் காலனியில் ஏற்கெனவே ஒரு சமுதாயக் கூடம் உள்ளது. வாணியம்பேட்டை பகுதி, பாலகிருஷ்ணாபுரம் பகுதிக்கு ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ளதாலும், இரண்டும் தணிகைபோளூர் ஊராட்சியின் குக்கிராமங்கள் என்பதாலும் இன்னொரு சமுதாயக் கூடம் வழங்க வழிவகை இல்லை.

19—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 1498—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், கிழவனம் ஊராட்சி, கிழவனம் முதல் பெரிய கடம்பூர் வரையுள்ள மண் சாலையை தார்ச் சாலையாக அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், கிழவனம் ஊராட்சி, கிழவனம் முதல் பெரிய கடம்பூர் வரையுள்ள மண் சாலை கிழவனம் ஊராட்சிக்குச் சொந்தமான ஏரிக்கரையின்மேல் சுமார் 450 மீட்டர் வரை உள்ளது. அடுத்து வரும் மண் சாலை தனியார்களுக்குச் சொந்தமான பட்டா நிலங்களில் உள்ளது. எனவே, இந்தச் சாலையை தார்ச் சாலையாக மாற்ற வழிவகை இல்லை. மேலும், கிழவனம் முதல் கடம்பூர் செல்ல செம்பேடு வழியாக உள்ள தார்ச் சாலை நல்ல நிலையில் உள்ளது.

20—

சிமெண்ட் சாலை அமைத்தல்

வினா எண் 1497—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், மிட்டாபேட்டை ஊராட்சி, காந்தி நகர் பகுதியில் 1, 2, 3-வது தெருவிற்கு சிமென்ட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், மிட்டாபேட்டை ஊராட்சி ஒன்றியம், மிட்டாபேட்டை ஊராட்சியில் காந்தி நகர் குடியிருப்பு பகுதி என்பது இல்லை. மாற்றாக சாந்தி நகர் பகுதியில் 1, 2, 3-வது தெருக்களில் முதல் தெரு மட்டும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், 2021-2022-ன்கீழ் நிருவாக அனுமதி வரப்பெற்று பணி துவங்கும் நிலையில் உள்ளது. மீதமுள்ள

2021 செப்டம்பர் 13]

2-வது மற்றும் 3-வது தெருக்களுக்கு வரும் நிதியாண்டில் 2022-2023 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் பணி செயல்படுத்தப்படும்.

21—

அங்கன்வாடி மையத்திற்கு கட்டடம்

வினா எண் 1499—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், வேடல் ஊராட்சி, வேடல் கிராமத்திலுள்ள அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், வேடல் ஊராட்சி, வேடல் கிராமத்தில் அங்கன்வாடி மையத்திற்கு புதிய கட்டடம் வரும் நிதியாண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்மூலம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

22—

சாலை அமைத்தல்

வினா எண் 1504—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், தண்டலம் ஊராட்சி, தண்டலம் பள்ளக்காலனி பெருமாள் கோவில் தெருவில் சிமென்ட் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2021 செப்டம்பர் 13*

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், தண்டலம் ஊராட்சி, தண்டலம் பள்ளக்காலனிக்கு ஏற்கெனவே பெருமாள் கோயில் தெருவில் சிமென்ட் சாலை அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

23—

சுகாதார வளாகம் கட்டுதல்

வினா எண் 1512— திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அம்மனூர் கிராமத்தில் மகளிர் சுகாதார வளாகம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அம்மனூர் கிராமத்தில் மகளிர் சுகாதார வளாகம் ஏற்கெனவே உள்ளதால், தற்போதைக்கு அவசியம் ஏற்படவில்லை. மாற்றாக பழுது ஏற்பட்ட பகுதியில் பழுது நீக்கம் செய்து பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

24—

நிழற்குடை அமைத்தல்

வினா எண் 1566—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2021 செப்டம்பர் 13]

சேலம் மாவட்டம், சேலம் ஒன்றியம், அய்யம்பெருமாம்பட்டி ஊராட்சி, பழையூர் பஸ் நிறுத்தத்திற்கு பயணிகள் நிழற்குடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் ஒன்றியம், அய்யம்பெருமாம்பட்டி ஊராட்சி, பழையூர் பஸ் நிறுத்தத்திற்கு பயணிகள் நிழற்குடை ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க இயலும். அதற்குப் போதுமான இட வசதி உள்ளது. எனவே, ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் நிழற்குடை அமைத்துத் தர உத்தேசிக்கப்படுகிறது.

25—

கழிவுநீர்க் கால்வாய் அமைத்தல்

வினா எண் 1567—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், சேலம் ஒன்றியம், அய்யம்பெருமாம்பட்டி ஊராட்சி, பழையூர் அத்திக்குட்டை ஏரிப் பகுதிகளில் கழிவுநீர்க் கால்வாய் ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

அய்யம்பெருமாம்பட்டி ஊராட்சி, பழையூர் அத்திக்குட்டை ஏரிப் பகுதியில் கழிவுநீர் வெளியேற்ற இட வசதி இல்லாததால் இப்பணிகளை மேற்கொள்ள சாத்தியக்கூறு இல்லை.

26—

குடிநீர் வசதி ஏற்படுத்துதல்

வினா எண் 1568—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

சேலம் மாவட்டம், சேலம் ஒன்றியம், அய்யம்பெருமாம்பட்டி ஊராட்சியில் அனைத்து குடியிருப்புகளுக்கும் மேட்டூர் குடிநீர் வசதி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் ஊராட்சி ஒன்றியம், அய்யம்பெருமாம்பட்டி ஊராட்சியில் அனைத்து குடியிருப்புகளுக்கும் மேட்டூர் குடிநீர் வசதி ஏற்படுத்தும் வகையில் சம்ப் அமைக்கும் பணிகள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தற்போது நடைபெற்று வருகின்றன.

27—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 1572—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

சேலம் மேற்கு தொகுதி, சேலம் ஊராட்சி ஒன்றியம், மல்லமூப்பம்பட்டி பஞ்சாயத்தில் சித்தனூர் பஸ் ஸ்டாப் முதல் மூலக்கடை பஸ் ஸ்டாப் வரை புதியதாக தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் மேற்கு தொகுதி, மல்லமூப்பம்பட்டி பஞ்சாயத்தில் சித்தனூர் பேருந்து நிறுத்தம் முதல் மூலக்கடை பேருந்து நிறுத்தம் வரை சுமார் 1.2 கி.மீ. தார்ச் சாலை ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க இயலும். அதற்குப் போதுமான இடவசதியும் உள்ளது. TNRRIS திட்டம் மற்றும் ஒன்றிய பொது நிதி ஆகியவற்றிலிருந்து இப்பணிகளை மேற்கொள்ள பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

2021 செப்டம்பர் 13]

28—

தார்ச் சாலையாக மாற்றுதல்

வினா எண் 1573—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

சேலம் மேற்கு தொகுதி, சேலம் ஒன்றியம், மல்லமூப்பம்பட்டி பஞ்சாயத்து, காந்தி நகர் பசுபதை கடை முதல் மயானம் வரையுள்ள கப்பிச் சாலையை தார்ச் சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் மேற்கு தொகுதி, மல்லமூப்பம்பட்டி ஊராட்சி, காந்தி நகர் பசுபதை கடை முதல் மயானம் வரையுள்ள சாலை தற்போது தார்ச் சாலையாக பயன்பாட்டில் உள்ளது.

29—

கழிவுநீர் வசதி

வினா எண் 1580—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

சேலம் மாவட்டம், சேலம் ஒன்றியம், தளவாய்ப்பட்டி ஊராட்சி, ஏரி காலனி ஊர்ப்பகுதி, MVS *நகர் பகுதிகளில் கழிவுநீர் வசதி ஏற்படுத்த அரசு முன்வருமா?*

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

தளவாய்ப்பட்டி ஊராட்சி, ஏரி காலனி ஊர்ப்பகுதி, MVS *நகர் பகுதிகளில் கழிவுநீர் வசதி ஏற்படுத்த போதுமான இட வசதி உள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் செயல்படுத்தப்படும் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் இப்பணி மேற்கொள்ளப்படும்.*

[2021 செப்டம்பர் 13

30—

பைப் லைன் அமைத்தல்

வினா எண் 1991—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

சேலம் மேற்கு தொகுதி, அயோத்தியாபட்டணம் ஒன்றியம், எம்.பாலப்பட்டி ஊராட்சி, கோவிந்தராஜபட்டணம் முதல் எம். பாலப்பட்டி புதுகாலனி வரை GI மற்றும் P.V.C. பைப் லைன் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மேற்கு தொகுதி, எம்.பாலப்பட்டி ஊராட்சி, கோவிந்தராஜபட்டணம் முதல் புதுகாலனி வரை GI மற்றும் P.V.C. பைப் லைன் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் அமைக்கப்பட்டுள்ளது. கோவிந்தராஜபட்டணம் பகுதிகளிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீரேற்றம் செய்ய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மெயின் பைப் லைன் போதிய அழுத்தம் இல்லாமையால் இப்பகுதிக்கு மேட்டூர் குடிநீர் வராமையால், உள்ளூர் மின் மோட்டார்மூலம் மட்டுமே குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, போதிய நீர் அழுத்தத்துடன் நீரேற்றம் செய்ய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்மூலம் புதிய பைப்லைன் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

31—

தார்ச் சாலை அமைத்தல்

வினா எண் 1993—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

சேலம் மேற்கு தொகுதி, ஓமலூர் ஒன்றியம், டால்மியா சீனிவாச நகர் உடைந்த பாலம் முதல் டால்மியா வரை தார்ச் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் மேற்கு தொகுதி, ஓமலூர் ஒன்றியம், டால்மியா சீனிவாச நகர் உடைந்த பாலம் முதல் டால்மியா வரை TNRRIS *2019-2020 ஆம் ஆண்டு திட்டத்தில் ரூ.20.17 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இத்தார்ச்சாலைமூலம் சுமார் 2,000 பொதுமக்கள் பயன்பெறுவார்கள்.*

32—

தகன மேடை அமைத்தல்

வினா எண் 1997—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

சேலம் மேற்கு தொகுதி, ஓமலூர் ஒன்றியம், உடைந்த பாலம், டால்மியா சீனிவாசா நகர் முதல் தாழம்பூ நகர் வரையுள்ள பகுதிக்கு இடுகாட்டிற்கு தகன மேடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

*ஓமலூர் ஒன்றியம், வெள்ளக்கல்பட்டி ஊராட்சியில் உள்ள உடைந்த பாலம் பகுதிக்கு இடுகாட்டிற்கு தகன மேடை அமைக்க சாத்தியக்கூறு உள்ளது. இதற்குத் தேவையான மதிப்பீடு ரூ.3.50 இலட்சம், திட்டப் பணியினை மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின்மூலம் (*Mahatma Gandhi National Rural Employment Guarantee Scheme*) மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். டால்மியா சீனிவாசா நகர், தாழம்பூ நகர் பகுதி மக்கள் தாழம்பூ ஓடையில் இறந்தவர்களை அடக்கம் செய்து வருகின்றனர். தற்போது, அடக்கம் செய்துவரும் பகுதி நீர்ப்பிடிப்புப் பகுதியாக உள்ளதால் தகன மேடை அமைக்க சாத்தியக்கூறு இல்லை.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — வாய்மையே வெல்லும் — TRUTH ALONE TRIUMPHS

33—

ஆழ்துளைக் கிணறு, சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல்

வினா எண் 2013—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

சேலம் மேற்கு தொகுதி, ஓமலூர் ஒன்றியம், செம்மண் கூடல் ஊராட்சி, கச்சி வள்ளியமானூரில் இரண்டு இடங்களில் புதியதாக ஆழ்துளைக் கிணறு மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், செம்மண் கூடல் ஊராட்சி, கச்சி வள்ளியமானூரில் இரண்டு இடங்களில் புதியதாக ஆழ்துளைக் கிணறு மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைக்க சாத்தியக்கூறு உள்ளது. ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் சின்டெக்ஸ் டேங்க் அமைக்க ரூ.10 இலட்சம் மதிப்பீடு ஆகும். 15-வது நிதிக் குழு மானியம் அல்லது ஒன்றிய பொது நிதிமூலம் இப்பணியினை மேற்கொள்ள பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

34—

நிழற்குடை கட்டுதல்

வினா எண் 2032—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

சேலம் மேற்கு தொகுதி, ஓமலூர் ஒன்றியம், பாரதி நகர், மஞ்சுள்ளாம்பள்ளம், டால்மியா போர்டில் பயணியர் நிழற்குடை கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் மேற்கு தொகுதி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், வெள்ளக்கல்பட்டி ஊராட்சி, டால்மியா போர்டு

2021 செப்டம்பர் 13]

பகுதியில் உள்ள பாரதி நகர் மற்றும் மஞ்சுள்ளாம்பள்ளம் ஆகிய பகுதிகள் டால்மியா போர்டு முதல் பரவைக்காடு செல்லும் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான தார்ச் சாலையினை ஒட்டியுள்ள குடியிருப்புப் பகுதிகளாக உள்ளதால் இந்த இரண்டு பகுதிகளிலும் நிழற்குடை அமைக்க போதிய இடவசதி இல்லாத காரணத்தால், நிழற்குடை அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

35—

புதிய சாலை அமைத்தல்

வினா எண் 2123—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

சேலம் மேற்கு தொகுதி, அயோத்தியாபட்டணம் ஒன்றியம், எம்.பாலப்பட்டி ஊராட்சி, பிள்ளையார் கோயில் முதல் புதுகாலனி சுடுகாடு வரை New Formation Road *அமைத்துத் தர அரசு முன்வருமா?*

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டணம் ஒன்றியம், எம். பாலப்பட்டி ஊராட்சி அலுவலகம், மெயின்ரோடு கனரா வங்கி முதல் புதுகாலனி சுடுகாடு வரை கான்கிரீட் சாலை உள்ளது. சுடுகாடு முதல் இடுகாடு வரை 300 மீட்டர் தூரத்திற்கு புதிய சாலை அமைக்கப்பட வேண்டியுள்ளது. இச்சாலையினை MGNREGS *திட்டத்தின்கீழ் கழிவுநீர் வாய்க்காலுடன்கூடிய ஓரடுக்கு கப்பிச் சாலை ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்படுகிறது.*

36—

கட்டடம் கட்டுதல்

வினா எண் 2229—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —*

(அ) திருவையாறு தொகுதி, பிரமன்பேட்டை ஊராட்சி ஒன்றியம், தொடக்கப் பள்ளி சமையல் கூடத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். திருவையாறு ஊராட்சி ஒன்றியம், பிரமன்பேட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் சமையல்கூடம் மிகவும் பழுதடைந்துள்ளது. ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சமையல்கூட கட்டடம் வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் கட்டித் தர முடிவு செய்யப்பட்டுள்ளது.

37—

கட்டடம் கட்டுதல்

வினா எண் 2230—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —*

(அ) திருவையாறு தொகுதி, மகாராஜபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி சமையல் கூடத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆம். திருவையாறு ஊராட்சி ஒன்றியம், மகாராஜபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியின் சமையல்கூடம் மிகவும் பழுதடைந்துள்ளது. ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சமையல்கூட கட்டடம் வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் கட்டித் தர முடிவு செய்யப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 13]

38—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 2237—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —*

(அ) திருவையாறு தொகுதி, கடுவெளி ஊராட்சி, சிலேத்புரம் வெட்டிக்கரை சாலை பழுதாகியுள்ளதை சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, கடுவெளி ஊராட்சி, சிலேத்புரம் வெட்டிக்கரை சாலையின் நீளம் 1,615 மீட்டர் ஆகும். இங்கு 30 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். தமிழ்நாடு ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2021-2021-ன்கீழ் ரூ.28.11 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்கும் பணியானது 20-9-2021-க்குள் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.

39—

சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 2246—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —*

(அ) திருவையாறு தொகுதி, திங்களூர் பிள்ளையார் கோயில் முதல் மாதா கோயில் வரை உள்ள சாலை பழுதடைந்துள்ளதை சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2021 செப்டம்பர் 13

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, திருவையாறு ஊராட்சி ஒன்றியம், ராயம்பேட்டை ஊராட்சி, பிள்ளையார் கோயில் முதல் மாதா கோயில் வரை உள்ள பழுதடைந்த தார்ச் சாலையின் நீளம் 850 மீட்டர் ஆகும். இப்பகுதியில் சுமார் 350 பேர் வசிக்கின்றனர். இச்சாலை ரூ.15.50 இலட்சம் மதிப்பீட்டில் ஊரக சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்தப்படும்.

40—

சுற்றுச் சுவர் அமைத்தல்

வினா எண் 2297—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —*

(அ) சேலம், ஓமலூர் ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சி, எல்லாயூர் பகுதியிலுள்ள சுடுகாட்டிற்கு சுற்றிலும் சுற்றுச் சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், செம்மண்கூடல் ஊராட்சி, எல்லாயூர் பகுதியில் உள்ள சுடுகாட்டைச் சுற்றிலும் 1,000 மீட்டர் சுற்றுச் சுவர் அமைக்க ரூ.60.00 இலட்சம் மதிப்பீடு ஆகும். மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்மூலம் இப்பணி மேற்கொள்ளப்படும்.

41—

மயானப் பாதை, தகன மேடை அமைத்தல்

வினா எண் 2640—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

2021 செப்டம்பர் 13]

நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி, கண்ணுத்தோப்பு கிராம மயானப் பாதை மற்றும் தகன மேடை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வடக்குத்து ஊராட்சி, கண்ணுதோப்பு கிராம மயானப் பாதை மற்றும் தகன மேடை அமைக்க மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ளப்படும்.

42—

சுகாதார வளாகம் கட்டுதல்

வினா எண் 2720—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அவ்வை நகர் பகுதியில் மகளிர் சுகாதார வளாகம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, அவ்வை நகர் பகுதியில் ஏற்கெனவே மகளிர் சுகாதார வளாகம் உள்ளது. தற்போது, அதிலுள்ள பழுதுகளை சரி பார்த்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, தற்போது புதியதாக மகளிர் சுகாதார வளாகம் கட்ட அவசியம் எழவில்லை.

43—

சுகாதார வளாகம் கட்டுதல்

வினா எண் 2721—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, ஆண்டர்சன்பேட்டை பகுதியில் மகளிர் சுகாதார வளாகம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், அம்மனூர் ஊராட்சி, ஆண்டர்சன்பேட்டை பகுதியில் 1,200 மக்கள் வசிக்கிறார்கள். அங்கு அனைத்து வீடுகளிலும் தனிநபர் கழிவறை உள்ளதால், அப்பகுதியில் புதியதாக மகளிர் சுகாதார வளாகம் கட்டித் தர தேவை எழவில்லை.

44—

காரியமேடை அமைத்தல்

வினா எண் 2737—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், இச்சிபுத்தூர் ஊராட்சி, இச்சிபுத்தூர் கிராம மயானத்தின் அருகில் காரியமேடை அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், இச்சிபுத்தூர் ஊராட்சி, இச்சிபுத்தூர் கிராம

2021 செப்டம்பர் 13]

மயானத்திற்கு அருகில் காரியமேடை அமைத்துத் தர வரும் 2022-2023 ஆம் ஆண்டில் ஊராட்சி பொது நிதியின்மூலம் இப்பணியினை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

45—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 2740—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், மேல்பாக்கம் ஊராட்சியில் சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், மேல்பாக்கம் ஊராட்சியில் சமுதாயக் கூடம் கட்டித் தர ஊராட்சியில் போதுமான இடவசதி இல்லாத காரணத்தினால், இப்பணியினை செயல்படுத்த வழிவகை இல்லை.

46—

பூங்காவை சீரமைத்தல்

வினா எண் 22—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —*

(அ) மேற்கு தாம்பரம், கடம்பேரி மௌலானா நகரில் உள்ள தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியப் பகுதியில் ஒதுக்கப்பட்ட பூங்காவை சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேற்கு தாம்பரம், கடம்பேரி மௌலானா நகரில் சாலை உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளன. இத்திட்ட பகுதிக்கான ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்தில் பொதுப் பயன்பாடு வகைப்பாட்டின்கீழ் விளையாட்டுத் திடலுக்கான பகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சாலை உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகளுடன் விளையாட்டுத் திடல் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் தொடர் பராமரிப்பிற்காக தாம்பரம் நகராட்சிக்கு ஒப்படை செய்யப்பட்டுள்ளது. எனவே, சீரமைப்புப் பணிகளை தாம்பரம் நகராட்சிமூலம் செயல்படுத்தலாம்.

47—

குடிசை மாற்று வாரிய சரகம் உருவாக்குதல்

வினா எண் 146—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —*

(அ) செங்கல்பட்டு மாவட்டத்தில் குடிசை மாற்று வாரிய வட்டம் உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டத்தில் குடிசை மாற்று வாரியத்திற்கு தனி சரகம்/கோட்டம் உருவாக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் பரிசீலனையில் இல்லை.

2021 செப்டம்பர் 13]

48—

அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 694—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா —*

கள்ளக்குறிச்சி நகராட்சியில் வசிக்கும் வீடு இல்லாத ஏழை மக்களுக்கு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின்மூலம் புதியதாக அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி நகராட்சியில் வசிக்கும் வீடு இல்லாத ஏழை மக்களுக்கு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின்மூலம் புதியதாக அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சங்களுக்கு மிகாமல் மனைக்கான உரிமத்துடன் சொந்த வீடு இல்லாத குடும்பங்களுக்கு 325 சதுரடி கட்டட பரப்பிற்கு குறையாமல் தாமாகவே வீடு கட்டிக்கொள்ளும் திட்டத்தின்கீழ் (Beneficiary Led Construction) ரூ.2.10 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

49—

வீடுகள் கட்டுதல்

வினா எண் 732—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —*

(அ) வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர் குப்பம் கடற்கரை சாலைப் பகுதியிலுள்ள சிங்காரவேலன் நகர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய வீடுகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, திருவான்மியூர் குப்பம் கடற்கரை சாலைப் பகுதியிலுள்ள சிங்காரவேலன் நகர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய வீடுகள் கட்டுவதற்கான செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

50—

பன்னடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 733—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —*

(அ) வேளச்சேரி தொகுதி, கானகம் பகுதியில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின்மூலம் பன்னடுக்குமாடி வீடுகள் புதியதாக கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, கானகம் பகுதியில் தற்போதுள்ள சிதிலமடைந்த குடியிருப்புகளில் வசித்துவரும் குடியிருப்புதாரர்கள் மத்தியில் குடியிருப்புகளை இடித்து மறு கட்டுமானம் செய்ய வேண்டுமென்றும், இடிக்கக் கூடாது என்றும் இருவேறு முரண்பட்ட கருத்துகள் நிலவி வருகின்றன. விதிமுறைகளின்படி அனைத்து குடியிருப்புதாரர்களின் ஒருமித்த சம்மதத்தின் அடிப்படையில் மட்டுமே மறு கட்டுமானம் செய்ய இயலும். எனவே, குடியிருப்புதாரர்கள் மத்தியில் கருத்தொற்றுமை ஏற்படும்பட்சத்தில் மட்டுமே அங்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் மேற்கொள்ள இயலும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 13]

51—

அடுக்குமாடிக் குடியிருப்பு கட்டுதல்

வினா எண் 735—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, அடையாறு மல்லிகைபூ நகர் கரையோரம் வசிக்கும் மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, அடையாறு மல்லிகைபூ நகர் கரையோரம் வசிக்கும் மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு கட்டுவதற்கான செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

52—

தொழிற்சாலை துவங்குதல்

வினா எண் 1158—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, மரவள்ளிக்கிழங்கு மதிப்புக் கூட்டும் தொழிற்சாலை துவங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டத்தில் மரவள்ளிக்கிழங்கிலிருந்து மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் அமைத்திட தனியார் தொழில்முனைவோர் யாரேனும்

முன்வந்தால் தமிழக அரசு அறிவித்துள்ள திட்டங்களின்கீழ், தகுதியின் அடிப்படையில் வங்கிக் கடன் பெற்று தொழிற்சாலை துவங்க அரசு ஆவன செய்யும்.

53—

சேமிப்புக் கிடங்கு அமைத்தல்

வினா எண் 1229—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், முத்துநாயக்கன்பட்டி ஊராட்சியில் தயாரிக்கப்படும் கயிறுகளை சேமிக்க சேமிப்புக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சேலம் மத்திய கயிறு விற்பனை தொழிற்கூட்டுறவுச் சங்கத்தின்மூலம் ஏற்கெனவே உறுப்பினர்கள் உற்பத்தி செய்யும் கயிறுகளை கொள்முதல் செய்து சங்கத்தின் சேமிப்புக் கிடங்குமூலம் இருப்பு வைத்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

எனவே, புதியதாக சேலம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், முத்துநாயக்கன்பட்டி ஊராட்சியில் தயாரிக்கப்படும் கயிறுகளை சேமிக்க புதிய சேமிப்புக் கிடங்கு அமைத்திட வாய்ப்புகள் ஏதும் இல்லை.

54—

தொழிற்பேட்டைகள் துவங்குதல்

வினா எண் 1230—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் நகரின் தென் பகுதியில் ஆத்தூர் நெடுஞ்சாலையை ஒட்டிய பகுதிகளில் ஜவுளி மற்றும் பொறியியல் தொழில்களுக்கான தொழிற்பேட்டைகள் துவங்க அரசு முன்வருமா?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

சேலம் மாநகரினைச் சுற்றியுள்ள பகுதிகளில் தொழிற்பேட்டை அமைக்க தகுந்த காலி இடம் இல்லாத நிலையில், தனியார் தொழிற்சங்கங்கள் குறைந்தபட்சம் 50 ஏக்கர் அளவுள்ள நிலத்தினை கண்டறிந்து தொழிற்பேட்டை அமைக்க முன்வரும்பட்சத்தில் அரசு மானியமாக ரூ.15 கோடி வரை அளித்து தமிழ்நாடு சிட்கோ நிறுவனம்மூலம் தொழிற்பேட்டை தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

55—

பத்திரிகையாளர் ஓய்வூதியம் உயர்த்துதல்

வினா எண் 1972—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தில் வழங்கப்படும் ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தில் வழங்கப்படும் ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

56—

நிவாரண நிதி உயர்த்துதல்

வினா எண் 1973—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

(அ) தமிழகத்தில் மறைந்த பத்திரிகையாளர்கள் குடும்பத்ினருக்கு வழங்கப்படும் நிவாரண நிதியை உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மறைந்த பத்திரிகையாளர்கள் குடும்பத்தினருக்கு தற்போது வழங்கப்படும் நிவாரண நிதியை உயர்த்தி வழங்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

57—

காமராஜர் சிலை அமைத்தல்

வினா எண் 1979—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாத்தூர் தொட்டிபாலம் அருகில் பெருந்தலைவர் காமராஜரின் சிலையை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

மாத்தூர் தொட்டிபாலம் அருகில் பெருந்தலைவர் காமராஜரின் சிலையை அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

58—

மேற்பார்வையாளர் பணி வழங்குதல்

வினா எண் 63—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அங்கன்வாடி மையங்களில் பத்து வருடம் பணியாற்றியவர்களுக்கு மேற்பார்வையாளர் பணி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அங்கன்வாடி பணியாளர்களுக்கு மேற்பார்வையாளர் நிலை-2 ஆக பணி நியமனம் வழங்கிட பத்து ஆண்டுகள் என்ற காலவரையறை ஏதும் இல்லை. அங்கன்வாடி பணியாளர்/பெண் சத்துணவு அமைப்பாளர்களுக்கு அவரவர்கள் பணியில் சேர்ந்த நாளின் அடிப்படையிலும், SSLC *தேர்வில் தேர்ச்சி பெற்று அச்சான்றிதழுக்கான உண்மைத்தன்மை பெறப்பட்டதன் அடிப்படையிலும் அப்பணியாளர்கள் பணியில் சேர்ந்த நாளினை அடிப்படையாகக் கொண்டு ஒருங்கிணைந்த முதுநிலைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, அன்றைய தேதியில் உள்ள காலிப் பணியிடங்களின் அடிப்படையில் மேற்பார்வையாளர் நிலை-2/ஊர் நல அலுவலர் (மகளிர்) ஆகப் பணி நியமனம் வழங்கப்படுகின்றது.*

1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை பணி நியமனம் செய்யப்பட்ட அங்கன்வாடி பணியாளர்கள்/பெண் சத்துணவு அமைப்பாளர்களுக்கு 2018 ஆம் ஆண்டிற்கான முதுநிலைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, சமூக நல ஆணையரின் செயல்முறை நடவடிக்கைகள் ந.க.எண்.16122/நிர்.3(2)/2018, நாள் 24-7-2019-ன்படி 542 சத்துணவு அமைப்பாளர்கள்/அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு மேற்பார்வையாளர் நிலை-2/ஊர் நல அலுவலர் (மகளிர்) ஆகப் பணி நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

59—

மறுவாழ்வு மையங்கள் நிறுவுதல்

வினா எண் 232—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருப்போரூர் தொகுதியில் மறுவாழ்வு மையங்கள் (*De-addiction Centre*) நிறுவ அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) தற்போது, செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் தொகுதியில் போதை தடுப்பு மறுவாழ்வு மையங்கள் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை. மத்திய அரசின் நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த மறுவாழ்வு மற்றும் சிகிச்சை மையங்கள் (Integrated Rehabilitation Centre for addicts) என்ற திட்டத்தின்கீழ் செங்கல்பட்டு மாவட்டத்தில், கலைச்செல்வி கருணாலயா சோஷியல் வெல்பர் சொசைட்டி, போதை தடுப்பு மற்றும் மறுவாழ்வு மையம், எண் 12, 1-வது தளம், ரங்கநாதன் நகர், அகரம் முதன்மைச் சாலை, சேலையூர், தாம்பரம்-600 073 என்ற முகவரியில் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மேற்கண்ட தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்மூலம் 2020-2021 ஆம் ஆண்டில் 179 குடி மற்றும் போதை பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு பயன்பெற்றுள்ளனர்.

(ஆ) வினா எழவில்லை.

60—

அங்கன்வாடி மையக் கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 495—முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், மரவாக்காடு ஊராட்சி, சித்தேரிதளம் திடலில் அங்கன்வாடி மையக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி வட்டாரம், 95-மரவாக்காடு-II ஊராட்சி, சித்தேரி கிராமத்தில் ஓர் அங்கன்வாடி மையம் 1982 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு

2021 செப்டம்பர் 13]

வருகிறது. இம்மையக் கட்டடம் 2018 ஆம் ஆண்டில் வீசிய கஜா புயலால் சேதமடைந்ததனால், 2019-2020 ஆம் ஆண்டில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.11.50 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 19-12-2020 அன்று நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

61—

அங்கன்வாடி மையக் கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 496—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், மகாதேவப்பட்டினம் ஊராட்சி, வடக்கு சீதாரத்தில் அங்கன்வாடி மையக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி வட்டாரம், மகாதேவப்பட்டினம் ஊராட்சி, வடக்கு சீதாரத்தில் அங்கன்வாடி மையம் தற்போது வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு 2020-2021 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் ரூ.10.19 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 25-2-2021 அன்று நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

62—

மோட்டார் சைக்கிள் வழங்குதல்

வினா எண் 519—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் மூன்று சக்கர மோட்டார் சைக்கிள் வழங்கும் செயகுறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் கோரி கால்கள் பாதிப்படைந்த கைகள் நல்ல நிலையில் உள்ள மாற்றுத் திறனாளிகள் விண்ணப்பிக்கும்பட்சத்தில், அவர்களின் உடல்தகுதி மற்றும் பாதுகாப்பினை கருத்தில்கொண்டு, மருத்துவ அலுவலர், வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் ஆகியோர் அடங்கிய மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழுவினரால் தெரிவு செய்யப்பட்டு தகுதியுடைய கல்வி பயிலும் மாணவ/மாணவிகளுக்கு முன்னுரிமை அடிப்படையிலும், அரசுப் பணியாளர்கள் தவிர்த்து இதர பணிபுரிபவர்கள் மற்றும் சுய தொழில்புரியும் மாற்றுத் திறனாளிகளுக்கு தகுதி மற்றும் பதிவு மூப்பின் அடிப்படையிலும் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் மாவட்டந்தோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

63—

சத்துணவுப் பணியாளர்கள் காலிப் பணியிடங்கள் நிரப்புதல்

வினா எண் 1240—திரு. இரா. அருள்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரசுப் பள்ளிகளில் காலியாக உள்ள சத்துணவுப் பணியாளர்கள் பணியிடங்களை நிரப்ப அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தை திறம்பட செயல்படுத்த ஒவ்வொரு சத்துணவு மையத்திற்கும் சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.

2021 செப்டம்பர் 13]

தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலுள்ள சத்துணவு மையங்களில் ஏற்பட்டுள்ள சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் காலிப் பணியிடங்களை நிரப்ப தகுதிவாய்ந்த நபர்களிடம் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கக் கோரி 25-8-2020 முதல் 1-10-2020-க்குள் சென்னை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் பத்திரிகை செய்தி வெளியிடப்பட்டு, விண்ணப்பங்கள் பெற்று பட்டியலிடப்பட்டு, விண்ணப்பதாரர்கள் பட்டியல் இறுதி செய்த பின்னர் நேர்காணல் நடத்தி தகுதிவாய்ந்த நபர்களைத் தேர்வு செய்ய திட்டமிடப்பட்டிருந்தது.

ஆயினும், கொரோனா நோய்த் தொற்று பரவல் முற்றிலும் நீங்காத நிலையில் சத்துணவுப் பணியாளர் காலிப் பணியிடங்களை நிரப்ப, நடத்தப்படும் நேர்காணலின்போது கூட்டம் அதிகளவில் சேர வாய்ப்புள்ளதாலும், கொரோனா பெருந்தொற்று பரவக்கூடிய சூழல் அதிக அளவில் ஏற்படும் என்ற காரணத்தினாலும், சத்துணவுப் பணியாளர் நேர்காணல் மற்றும் தேர்வு நடவடிக்கைகள் அனைத்து மாவட்டங்களிலும் உடனடியாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. கொரோனா பெருந்தொற்று ஊரடங்கு கட்டுப்பாடுகள் முற்றிலும் நீக்கப்பட்டு இயல்பு நிலை திரும்பிய உடன் உரிய விதிகளின்படி அனைத்து மாவட்டங்களிலும் சத்துணவு பணியாளர் காலிப் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

64—

கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 1627—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவையாறு தொகுதி, திருப்பழனத்தில் பழுதடைந்துள்ள அங்கன்வாடி மையத்திற்கு மாற்றாக புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, திருப்பழனத்தில் 1977 ஆம் ஆண்டு முதல் அங்கன்வாடி மையம் அரசு சொந்தக்

கட்டடத்தில் செயல்பட்டு வந்தது. இம்மையக் கட்டடம் பழுதடைந்த காரணத்தினால் குழந்தைகள் நலன் கருதி தற்போது மையம் கிராம சேவைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு 2021-2022 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம்/சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்து புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

65—

கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 1633—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவையாறு தொகுதி, சாத்தனூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் பழுதடைந்துள்ள சமையல் கூடத்திற்கு மாற்றாக புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு ஊராட்சியில் உள்ள சாத்தனூர் அரசு உயர்நிலைப் பள்ளி சத்துணவு மையத்தில் 150 பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர். இப்பள்ளி சத்துணவு சமையல்கூடம் 2009-2010 ஆம் நிதியாண்டில் புதியதாக கட்டப்பட்டு, நல்ல நிலையில் நாளது வரை செயல்பட்டு வருகிறது. ஆகவே, இம்மையத்திற்கு புதியதாக கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

66—

ஒருங்கிணைந்த காப்பகம் அமைத்தல்

வினா எண் 1711—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2021 செப்டம்பர் 13]

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் ஆதரவற்ற குழந்தைகள், பெண்கள் மற்றும் முதியவர்களுக்கு ஒருங்கிணைந்த காப்பகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) தற்போது கும்பகோணம் தொகுதியில் ஆதரவற்ற குழந்தைகள், பெண்கள் மற்றும் முதியவர்களுக்கு ஒருங்கிணைந்த காப்பகம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

67—

மோட்டார் சைக்கிள் வழங்குதல்

வினா எண் 1713—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் ஒரு கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கும் மோட்டார் சைக்கிள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒரு கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்குவது தொடர்பாக அரசால் பரிசீலனை மேற்கொண்டு உரிய முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

[2021 செப்டம்பர் 13

68—

அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 1807—திரு. சு. ரவி: மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், மேல்பாக்கம் ஊராட்சி, கும்பினிப்பேட்டை அருந்ததிபாளையத்தில் அங்கன்வாடி மையக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், மேல்பாக்கம் ஊராட்சி, கும்பினிப்பேட்டை பகுதியில் கும்பினிப்பேட்டை ரோட்டுத் தெரு மையம், கும்பினிப்பேட்டை அருந்ததியர் காலனி மையம் என இரண்டு மையங்கள் செயல்படுகின்றன.

கும்பினிப்பேட்டை ரோட்டு தெரு அங்கன்வாடி மையம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையக் கட்டடம் 2004 ஆம் ஆண்டு தனியார் (எல் அண்டு டி) நிறுவனத்தினரால் புதுப்பிக்கப்பட்டு, தற்போது மையக் கட்டடம் நல்ல நிலையில் உள்ளது.

கும்பினிப்பேட்டை அருந்ததியர் காலனி அங்கன்வாடி மையம் 2004 ஆம் ஆண்டு முதல் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இம்மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு சர்வே எண் 27/1பி5 மற்றும் புது எண் 186/6-ல் இடம் தேர்வு செய்யப்பட்டு, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிருவாக அனுமதியும், நிதி ஒப்பளிப்பும் வேண்டி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

2021 செப்டம்பர் 13]

69—

அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 1809—திரு. சு. ரவி: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், இச்சிபுத்தூர் ஊராட்சி, ஈசளாபுரம் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் புதிய அங்கன்வாடி மையக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், இச்சிபுத்தூர் ஊராட்சி, ஈசளாபுரம் ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் இலவசக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் அங்கன்வாடி மையத்திற்கு 2020-2021 ஆம் ஆண்டிற்கான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

70—

கல்லூரி துவக்குதல்

வினா எண் 166—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்போரூர் தொகுதியில் மீனவர் பகுதிகளில் மீன்வளக் கல்லூரி, கடல்சார் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்போரூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள வாணியஞ்சாவடியில் தமிழ்நாடு டாக்டர் ஜெ ஜெயலலிதா பல்கலைக்கழகத்தின்மூலம் மீன்வள முதுகலை பட்ட மேற்படிப்பு நிலையம் 2017 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. ஆகையால், திருப்போரூர் தொகுதியில் மீனவர் பகுதிகளில் மீன்வளக் கல்லூரி, கடல்சார் கல்லூரி தொடங்க தற்போது திட்டம் ஏதுமில்லை.

71—

சிற்றுந்து இயக்குதல்

வினா எண் 29—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு இயக்கப்பட்ட சிற்றுந்துகளை (Small Bus) மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொரோனா பெருந்தொற்றால் பயணிகளின் பயன்பாடு மிகக் குறைவாக இருப்பதால், தாம்பரம் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தற்போதும் S6 எண் கொண்ட இரண்டு சிற்றுந்துகளோடு ஏனைய வழித்தடங்களின் பேருந்துகளும் இப்பகுதியில் பொதுமக்களின் நலன் கருதி மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்றன.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 13]

72—

பேருந்து இயக்குதல்

வினா எண் 51—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளி-செங்கிப்பட்டிக்கு பூதலூர், ஆவாரம்பட்டி, முத்துவீரகண்டியன்பட்டி, வீரமரசன்பேட்டை, நந்தவனப்பட்டி, முத்தாண்டிப்பட்டி ஆகிய பகுதிகளின் வழியாக நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளி, செங்கிப்பட்டி, பூதலூர், ஆவாரம்பட்டி, முத்துவீரகண்டியன்பட்டி, வீரமரசன்பேட்டை, நந்தவனப்பட்டி, முத்தாண்டிப்பட்டி தடத்தில் ஏற்கெனவே புறநகர் தட பேருந்து எண் 476B இயக்கப்பட்டு வருகிறது. இதனை பொதுமக்கள் நன்கு பயன்படுத்தி வருகின்றனர். இவ்வழித்தட நீளம் 38 கி.மீ. ஆகும். கோரிக்கை வழித்தடமானது 35 கிலோ மீட்டருக்குமேல் உள்ளதால் நகரப் பேருந்து இயக்க வழிவகை இல்லை.

73—

பேருந்து இயக்குதல்

வினா எண் 52—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, தஞ்சாவூர்-பூண்டி மாதா கோயிலுக்கு ரெட்டிபாளையம், கரம்பை, ஆலங்குடி, கல்விராயன்பேட்டை, பூதலூர், திருக்காட்டுப்பள்ளி ஆகிய வழித்தடத்தில் நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை வழித்தடத்தில் தஞ்சாவூர் நகர் 2 கிளை தடம் எண் 7 மூலம் தற்பொழுது தஞ்சாவூர் ரெட்டிபாளையம், கரம்பை, வண்ணாரப்பேட்டை வரை பேருந்து இயக்கப்படுகிறது மற்றும் பூதலூர் முதல் திருக்காட்டுப்பள்ளி வரை 20 நிமிடத்திற்கு ஒரு பேருந்து தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள இந்தப் பேருந்து வசதி போதுமானதாகும்.

74—

பேருந்து இயக்குதல்

வினா எண் 53—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் போக்குவரத்துக் கழகம் பேருந்து தடம் எண் 476B-ஐ திருக்காட்டுப்பள்ளி வழி ஆவாரம்பட்டி, கந்தர்வக்கோட்டைக்கு மீண்டும் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை வழித்தடமான திருக்காட்டுப்பள்ளி-கந்தர்வக்கோட்டை ஆவாரம்பட்டி தடத்தில் தடம் எண் 476B ஆவாரம்பட்டி பாலம் வேலை முடிவடைந்ததால் மீண்டும் ஜூலை 2021 ஆம் மாதம் முதல் இயக்கப்பட்டு வருகிறது.

75—

பேருந்து இயக்குதல்

வினா எண் 54—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2021 செப்டம்பர் 13]

(அ) தஞ்சாவூர்-பூதலூர் வரை இயக்கப்படும் தடம் எண் 50 பேருந்தை மருத்துவக் கல்லூரி, ஆலங்குடி வழியாக அய்யனாபுரம் வரை நீட்டித்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் மண்டலம், தஞ்சாவூர் நகர்-2 கிளை பேருந்து தடம் எண் A50 மூலம் 10 நடைகள் தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையத்திலிருந்து மருத்துவக் கல்லூரி, ஆலங்குடி வழியாக பூதலூர் வரை இயக்கப்பட்டு வருகிறது. மேலும், தடம் எண் B27 மூலம் 8 நடைகளும், தடம் எண் A88 மூலம் 4 நடைகளும் பூதலூர், அய்யனாபுரம் வரை இயக்கப்பட்டு வருகிறது. தஞ்சாவூரிலிருந்து மருத்துவக் கல்லூரி, பூதலூர் வழியாக அய்யனாபுரம் வரை பகுதி பகுதியாகப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போதுள்ள இந்த பேருந்து வசதி போதுமானதாகும்.

76—

சிற்றுந்துகள் இயக்குதல்

வினா எண் 65—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, பீர்க்கன்கரணை பேரூராட்சி பகுதியில் இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட S89 மற்றும் S90 சிற்றுந்துகளை (Small Bus) மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, பீர்க்கன்கரணை பேரூராட்சிப் பகுதியில் இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட சிற்றுந்து

தடம் எண் S89 மற்றும் S90, கொரோனா பெருந்தொற்று காரணமாக பயணிகள் பயன்பாடு மிகக் குறைவாக இருந்ததால் இயக்கத்திலிருந்து விலக்கிக்கொள்ளப்பட்டது. மீண்டும், இச்சிற்றுந்து வழித்தடங்களில் வழித்தட எண்கள் 55V, 500, 579C போன்ற பேருந்துகள் பொதுமக்கள் நலன் கருதி மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்றன.

77—

பேருந்து இயக்குதல்

வினா எண் 72—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரத்திலிருந்து பெருங்களத்தூர், மண்ணிவாக்கம் வழியாக படப்பைக்கு நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது தாம்பரத்திலிருந்து பெருங்களத்தூர், மண்ணிவாக்கம், படப்பை, ஒரகடம் வழியாக வாலாஜாபாத்திற்கு தடம் எண் 579C-ல் 5 பேருந்துகள் பயணிகளின் பயன்பாட்டிற்கு ஏற்ப மாநகர் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்றன.

78—

நகரப் பேருந்து

வினா எண் 302—திரு. சு. ரவி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், வளர்புரம் கிராமம் வரை சென்று வரும் நகரப் பேருந்தை கிருஷ்ணாபுரம் வரை நீட்டிப்பு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், வளர்புரம் கிராமம் வரை சென்று வரும் நகரப் பேருந்தை கிருஷ்ணாபுரம் வரை நீட்டிக்க ஆய்வு செய்யப்பட்டதில், சாலை மேம்படுத்தப்பட்டபின் பேருந்து இயக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக, அரக்கோணத்திலிருந்து கிருஷ்ணாபுரத்திற்கு அருகிலுள்ள வளர்புரம் கிராமத்திற்கு தடம் எண் T8 பேருந்து வாயிலாக 3 நடைகள் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன.

79—

பேருந்து இயக்குதல்

வினா எண் 303—திரு. சு. ரவி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, திருத்தணி முதல் நாகவேடு வழியாக அரும்பாக்கம் வரை இயக்கப்பட்ட தடம் எண் T8 மற்றும் இயக்கப்பட்டு நிறுத்தப்பட்ட தடம் எண் T12 பேருந்தை தக்கோலம் முதல் உரியூர் வரை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோரிக்கையில் உள்ள தடம் எண் T8 மற்றும் தடம் எண் T12 ஆகியன மக்களின் பயன்பாடு மிகவும் குறைவாக இருந்த காரணத்தினால், தட சீரமைப்பு செய்து நிறுத்தப்பட்டுள்ளது. மேலும், தடம் எண் T12 மோசூர் இரயில்வே கேட்டில் 4 இரயில்வே பாதைகள் உள்ளதால், அதிகப்படியாக எக்ஸ்பிரஸ் சரக்கு இரயில்கள் மற்றும் மின்சார யூனிட் வண்டிகள் உட்பட நாளொன்றுக்கு 288 இரயில்கள் செல்வதால் கேட் திறந்து

விட அதிக நேரம் பிடிக்கிறது. பயணிகளும் அதிக சிரமத்திற்கு ஆளாகின்றார்கள். மேலும், இந்த தட பேருந்து இயக்கப்படும் மற்ற ஊர்களுக்கு செல்வதிலும், கால அட்டவணைப்படி பின்பற்ற முடியாமல், காலதாமதமாக இயக்கப்பட்டு, மக்கள் பயன்பாடு இல்லாமல் ஆகிறது.

80—

பேருந்து இயக்குதல்

வினா எண் 536—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடியிலிருந்து இடையர் எம்பேத்தி கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி முதல் இடையர் எம்பேத்தி வரையிலான வழித்தடம் 6 கி.மீ. என்பதால் மேற்படி வழித்தடம் நகரப் பேருந்து வழித்தடமாகும். காரிக்கோட்டை பிரதான சாலையிலிருந்து இடையர் எம்பேத்தி கிராமம் 2 கி.மீ. தொலைவில் உள்ளது. தற்போது, மன்னார்குடி-தஞ்சாவூர் வழித்தடத்தில் இயக்கப்படும் அனைத்து பேருந்துகளும் காரிக்கோட்டை பேருந்து நிறுத்தத்தில் நிறுத்தம் செய்த பயணிகளை ஏற்றி, இறக்கி செல்கிறது.

81—

பேருந்து இயக்குதல்

வினா எண் 538—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடியிலிருந்து தேவங்குடி வழியாக கற்கோவில்-கருவேலங்குளம் கிராமத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி-கற்கோவில் (வழி:தேவங்குடி, கருவேலங்குளம்) வரை தட நீளம் 16 கி.மீ. ஆகும். தற்போது, மன்னார்குடி முதல் தேவங்குடி வரை 12 கி.மீ. வழித்தடத்தில் தடம் எண் 366 மூலம் தினசரி 14 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

82—

பேருந்து இயக்குதல்

வினா எண் 540—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி இராஜகோபாலசுவாமி கோயிலுக்கு அனைத்து பகுதிகளிலிருந்தும் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மன்னார்குடி பேருந்து நிலையத்திலிருந்து மன்னார்குடி இராஜகோபாலசுவாமி கோயில் வழியாக நகர மற்றும் புறநகர் தடப் பேருந்துகள் முத்துபேட்டை, திருத்துறைப்பூண்டி, திருவாரூர், கும்பகோணம், பட்டுக்கோட்டை, திருச்சி, தஞ்சாவூர், சென்னை, திருப்பூர், மதுரை, காரைக்குடி, நாகப்பட்டினம் மற்றும் புதுக்கோட்டை ஆகிய தடங்களில் ஏற்கெனவே இயக்கப்பட்டு வருகின்றன.

83—

பேருந்து இயக்குதல்

வினா எண் 541—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2021 செப்டம்பர் 13

மன்னார்குடியிலிருந்து-பைங்காநாடு-இராதாநரசிம்மபுரம்-தென்பரை-தோணித்துறை வழியாக முத்துப்பேட்டைக்கு புதிய வழித் தடத்தில் பேருந்து இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மன்னார்குடியிலிருந்து பைங்காநாடு-இராதாநரசிம்மபுரம்-தென்பரை-தோணித்துறை வழியாக முத்துப்பேட்டை தடத்தினை தட ஆய்வு செய்தபோது தட நீளம் 39 கி.மீ. ஆக உள்ளது. மன்னார்குடியிலிருந்து தோணித்துறை வழியாக முத்துப்பேட்டை செல்லும் வழித்தடத்தில் தடம் எண் 450C, 450D மற்றும் 450E ஆகிய பேருந்துகள்மூலம் 30 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

மேலும், மன்னார்குடியிலிருந்து பைங்காநாடு-இராதாநரசிம்மபுரம்-தென்பரை வரை தடம் எண் A9A தடம் மூலமாக தினசரி 10 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், தென்பரையிலிருந்து தோணித்துறை பாலம் 1 கி.மீ. தொலைவில் உள்ளது. இருப்பினும், பகுதி பகுதியாக பேருந்து வசதி உள்ளது.

84—

பேருந்து இயக்குதல்

வினா எண் 542—முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், எடமேலையூரிலிருந்து தஞ்சாவூருக்கு இயங்கி வந்த பேருந்தை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

எடமேலையூர் முதல் தஞ்சாவூர் வரையிலான வழித்தடத்தில் பயணிகளின் பயன்பாடு குறைவு காரணமாக தடம் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. எனவே, தற்போது இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்கிட வழிவகை இல்லை.

2021 செப்டம்பர் 13]

85—

பேருந்து இயக்குதல்

வினா எண் 543—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், எடமேலையூரிலிருந்து நீடாமங்கலத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

எடமேலையூர் முதல் நீடாமங்கலம் தடத்தில் மூவாநல்லூர், செட்டிக்காடு, எடகீழையூர், எடமேலையூர், சோனாபேட்டை, செட்டிசத்திரம், முன்னவால்கோட்டை, காளாச்சேரி, பூவனூர் வழியாக தட ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சாலை வசதி நன்றாக உள்ளது. மேலும், மன்னார்குடி, புள்ளவராயன்குடிகாடு தட நீளம் 20 கி.மீ. ஆகும். இத்தடத்தில் தடம் எண் 364 முதல் தினசரி 10 நடைகள் இயக்கப்படுகின்றன. மேலும், பூவனூர்-நீடாமங்கலம் தடம் மன்னார்குடி-கும்பகோணம் பிரதான சாலையில் உள்ளதால், மேற்படி தடத்தில் 15 நிமிட இடைவெளியில் பேருந்து இயக்கப்படுகிறது.

86—

பேருந்து இயக்குதல்

வினா எண் 663—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடியிலிருந்து-கண்டிதம்பேட்டை-உள்ளிக்கோட்டை-வடசேரி வழியாக பட்டுக்கோட்டைக்கு இயக்கப்பட்ட தடம் எண் 20 பேருந்தை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மன்னார்குடி-பட்டுக்கோட்டை வழி கண்டிதம்பேட்டை, உள்ளிக்கோட்டை, வடசேரி வழித்தடத்தில் பயணிகளின் பயன்பாடு குறைவு காரணமாக தடம் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. எனவே, தற்போது இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்கிட வழிவகை இல்லை.

87—

பேருந்து இயக்குதல்

வினா எண் 664—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பட்டுக்கோட்டையிலிருந்து-மதுக்கூர்-திருமக்கோட்டை வழியாக தென்பரை தோணித்துறை வரை பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோரிக்கை வழித்தடமான பட்டுக்கோட்டை-மதுக்கூர்-திருமக்கோட்டை-தெற்கு தென்பரை -தோணித்துறை தடநீளத்தில், தற்பொழுது பட்டுக்கோட்டையிலிருந்து துவரங்குறிச்சி-மதுக்கூர்-திருமக்கோட்டை வரை இயக்கப்படுவதை நீட்டித்து தெற்கு தென்பரை வரை மட்டுமே இயக்க இயலும். இதன் தடநீளம் 35 கி.மீ. மேலும், தோணித்துறை வரை தடநீளம் 38 கி.மீ. ஆகும். 36 கி.மீ. மட்டுமே நகரப் பேருந்து இயக்க இயலும். மேலும், தோணித்துறை வரை நீட்டித்து இயக்கினால் ஏற்கெனவே இயக்கி வரும் இயக்க நேரகாலம் மாறி ஏற்கெனவே பலன் பெற்றுவரும் திருமக்கோட்டை வரை உள்ள கிராம மக்கள் பாதிப்புக்குள்ளாவார்கள். எனவே, தற்போது உள்ள பேருந்து வசதியே போதுமானதாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 13]

88—

பேருந்து இயக்குதல்

வினா எண் 665—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி நகரத்தில் உள்ள வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மன்னார்குடி மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கென, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுகா, 03 மூவாநல்லூர் கிராம புல எண் 261/1B-ல் அரசு புறம்போக்கு புஞ்சை தரிசு வகைப்பாட்டில் 0.86.00 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட நிலம், போக்குவரத்துத் துறைக்கு நிலமாற்ற முன் நுழைவு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், மேற்படி அலுவலகத்திற்கு ஓட்டுநர் தேர்வு தளத்துடன்கூடிய சொந்தக் கட்டடம் கட்டுவதற்கென 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.197.48 இலட்சம் ஒதுக்கீடு செய்து, அரசாணை வெளியிடப்பட்டு பொதுப் பணித் துறையினரால் தற்போது கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

89—

பேருந்து இயக்குதல்

வினா எண் 1286—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சியிலுள்ள போக்குவரத்து பணிமனையினை வெளிப்பகுதிக்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சியில் தற்போது இயங்கிவரும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்)

லிமிடெட் பணிமனை கள்ளக்குறிச்சி பேருந்து நிலையத்திலிருந்து 0.5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. நகருக்கு வெளியில் இடம் கிடைக்கப்பெற்று பணிமனை அமைக்கப்பட்டால் கள்ளக்குறிச்சி பேருந்து நிலையத்திற்கும் பணிமனைக்கும் இடையே பேருந்துகள் வருவாய் அற்ற கிலோ மீட்டர் ஆக (Dead KM) நேரிடும். இதனால் டீசல் விரயம் மிக அதிகம் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆகையால், தற்போது கள்ளக்குறிச்சி பணிமனையை நகருக்கு வெளியில் மாற்றி அமைக்க இயலாது.

90—

பேருந்து இயக்குதல்

வினா எண் 1287—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சியிலிருந்து திருப்பதிக்கு குளிர்சாதன பேருந்து புதியதாக இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சியிலிருந்து தடம் எண் 377A மற்றும் 377C ஆகிய இரண்டு குளிர்சாதன பேருந்துகள் வாயிலாக திருப்பதிக்கு காலை 10-00 மணி மற்றும் இரவு 22-30 மணிக்கு பொதுமக்கள் வசதிக்காக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

91—

பேருந்து இயக்குதல்

வினா எண் 1288—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி பேருந்து நிலையத்திலிருந்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் ஆட்சியர் அலுவலகம் வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி பேருந்து நிலையத்திலிருந்து கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தற்சமயம் நகரப் பேருந்துகள் T13, T37, T25 மூலம் தினசரி 18 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், கள்ளக்குறிச்சி பேருந்து நிலையத்திலிருந்து மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வழியாக T4A, T4B, T9A, T9B, T34 ஆகிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, மேற்கூறிய பேருந்து வசதிகளே போதுமானதாகக் கருதப்படுகிறது.

92—

பேருந்து இயக்குதல்

வினா எண் 1290—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா*—

கள்ளக்குறிச்சியிலிருந்து கும்பகோணம், ஈரோடு மற்றும் கன்னியாகுமரி ஆகிய பகுதிகளுக்கு புதிய வழித்தடத்தில் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக, கள்ளக்குறிச்சி-விருத்தாசலம், கும்பகோணம் வழித்தடத்தில் பகுதி வாரியாக பேருந்து வசதி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், கள்ளக்குறிச்சியிலிருந்து ஈரோடு வழித்தடத்தில் சேலம் கோட்டம் வாயிலாக 6 புறநகர் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு வரையறுக்கப்பட்டது வாயிலாக, கன்னியாகுமரியிலிருந்து சென்னைக்கு தடம் எண் 282 Ultra Deluxe-*ல் 4 பேருந்துகள் வாயிலாக 4 நடைகள் வீதம் இரு முனைகளிலிருந்தும் தினசரி இயக்கப்படுகின்றன.*

93—

பேருந்து இயக்குதல்

வினா எண் 1293—திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சியிலிருந்து மேல்மலையனூருக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி-மேல்மலையனூர் வழித்தடத்தில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக, கள்ளக்குறிச்சியிலிருந்து விழுப்புரம், செஞ்சி வழியாகவும், திருவண்ணாமலை வழியாகவும் 10 நிமிட இடைவெளியில் நகர் மற்றும் புறநகர் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

94—

பேருந்து இயக்குதல்

வினா எண் 1294—திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி-இந்திலி-சிறுவத்தூர் நாட்டார்மங்கலம் கருங்குழி-ஈரியூர் மாங்குலம்-மங்களூர் வழியாக திட்டக்குடிக்கு புதிய வழித்தடத்தில் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக, கள்ளக்குறிச்சி முதல் கருங்குழி

2021 செப்டம்பர் 13]

ஈரியூர், மாங்குலம் வரையுள்ள வழித்தடத்தில் 2 நகரப் பேருந்துகள் வாயிலாக 18 நடைகளும், கள்ளக்குறிச்சி முதல் தொழுதூர், வேப்பூர் வழியாக திட்டக்குடி வழித்தடத்தில் 2 பேருந்துகள் வாயிலாக 6 நடைகளும் பேருந்து வசதி அளிக்கப்பட்டு வருகிறது.

95—

பேருந்து இயக்குதல்

வினா எண் 1295—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சியிலிருந்து மதுரைக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சியிலிருந்து மதுரை வரையுள்ள வழித்தட நீளம் 296 கிலோ மீட்டர் ஆகும். கள்ளக்குறிச்சியிலிருந்து 25 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள உளுந்தூர்பேட்டையிலிருந்து மதுரைக்கு 30 நிமிட இடைவெளியில் பேருந்து வசதி அளிக்கப்பட்டு வருகிறது. எனவே, கள்ளக்குறிச்சியிலிருந்து மதுரை செல்லும் பயணிகள் புறநகர் பேருந்துகளைப் பயன்படுத்தி உளுந்தூர்பேட்டை வந்தடைந்து மேற்காணும் பேருந்து வசதியினை பயன்படுத்தி மதுரை செல்லலாம்.

96—

பேருந்து இயக்குதல்

வினா எண் 1296—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி ஒன்றியம், புக்கிரவாரி இரயில் நிலையத்திலிருந்து கள்ளக்குறிச்சி வழியாக சென்னைக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக, கள்ளக்குறிச்சியிலிருந்து சென்னைக்கு 15 நிமிட இடைவெளியில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. புக்கிரவாரி கிராமத்திலிருந்து கள்ளக்குறிச்சிக்கு தடம் எண்கள் T6, T15, T36 மற்றும் T17 வாயிலாக தினசரி 36 நடைகள் இயக்கப்படுகின்றன. எனவே, புக்கிரவாரி கிராமத்திலிருந்து சென்னை செல்லும் பயணிகள், இந்நகரப் பேருந்துகள் வாயிலாக கள்ளக்குறிச்சி வந்தடைந்து, மேற்கூறிய பேருந்து வசதிகளைப் பயன்படுத்தி சென்னைக்கு செல்லலாம்.

97—

பேருந்து இயக்குதல்

வினா எண் 1297—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி-விளம்பார்—வாணவரெட்டி புக்கிரவாரி—பெருமங்கலம்-உலகியநல்லூர் கருங்குழி—செம்பாகுறிச்சி மற்றும் அடரி வழியாக விருத்தாசலம் வரை புதிய வழித்தடத்தில் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக, கள்ளக்குறிச்சி-விளம்பார்-வாணவரெட்டி புக்கிரவாரி—பெருமங்கலம்-உலகியநல்லூர் கருங்குழி—செம்பாகுறிச்சி மற்றும் அடரி வழியாக விருத்தாசலம் வழித்தடத்தில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் பகுதி வாரியாக பேருந்து வசதி அளிக்கப்படுகிறது.

2021 செப்டம்பர் 13]

98—

பேருந்து இயக்குதல்

வினா எண் 1326—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, இந்திரா நகர் பகுதியிலிருந்து பிராட்வே மற்றும் கோயம்பேடு பகுதிகளுக்கு இயக்கி நிறுத்தப்பட்ட தடம் எண் 18, 5, 23 பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோரிக்கை வழித்தடத்தில் பயணிகளின் பயன்பாடு குறைவானதால், இவ்வழித்தடங்கள் இயக்கத்திலிருந்து நிறுத்தப்பட்டன. எனினும், தற்போது இந்திரா நகர் வழியாக போதுமான எண்ணிக்கையில் பயணிகளின் பயன்பாட்டிற்கு ஏற்ப தடம் எண் 6D (பெசன்ட் நகர்-சுங்கச்சாவடி), தடம் எண் 109T (திருவொற்றியூர்-கோவளம்) ஆகிய வழித்தடங்களில் மாநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

மேலும், தடம் எண் 6D-ன் பேருந்துகளைப் பயன்படுத்தி இந்திரா நகர் பயணிகள் அடையாறு பணிமனை பேருந்து நிறுத்தம் வந்தடைந்தால், அவ்வழியாக இயக்கப்படும் தடம் எண் 78 (திருவான்மியூர்-கோயம்பேடு பேருந்து நிலையம்)-ல் 17 பேருந்துகளைப் பயன்படுத்தி கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம் வந்தடையலாம். தற்போது இயக்கத்தில் உள்ள 109T மற்றும் 6D வழித்தடங்கள் பிராட்வே வழியாகவே இயக்கப்படுகின்றன.

99—

புதிய கட்டடம் கட்டுதல்

வினா எண் 1327—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, சாஸ்திரி நகர் பேருந்து பணிமனையைப் புனரமைத்து புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, சாஸ்திரி நகர் பேருந்து பணிமனையானது பெசன்ட் நகர் பேருந்து நிலையமாக தேவையான கட்டட வசதிகளுடன் பயணிகள் பயன்பாட்டில் உள்ளது. எனவே, அப்பணிமனையைப் புனரமைத்து புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழாது.

100—

கிளை அலுவலகம் அமைத்தல்

வினா எண் 1328—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, வேளச்சேரியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு கிளை அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரியின் மொத்த மக்கள் தொகை 1,43,991 ஆகும். இதில் 18 வயதுக்கு மேற்பட்டோர் 92,202 ஆவர். மேலும், வேளச்சேரியில் 2,651 போக்குவரத்து வாகனங்கள் மட்டுமே இதுநாள் வரை பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும், வேளச்சேரியிலிருந்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், சென்னை (தெற்கு) அலுவலகத்திற்கு இடைப்பட்ட தூரம் 5.7 கி.மீ. மட்டுமே ஆகும். புதிய அலுவலகம் அமைத்தால் மிக அதிகமாக

2021 செப்டம்பர் 13]

நிருவாகச் செலவு ஏற்படும் [(தோராயமாக தொடரும் செலவினம் ரூ.36,76,000/- (ஒரு வருடத்திற்கு) மற்றும் தொடரா செலவினமாக ரூ.15,38,000/- அரசுக்கு செலவினம் ஏற்படும்).]

மேலும், வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின் சேவைகள் தற்போது இணையம் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாறு, வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின் சேவையைப் பெற Faceless Service *விரைவில் தொடங்கப்பட உள்ளதால், பொதுமக்கள் தங்கள் இல்லத்திலிருந்தே வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தின் சேவையைப் பெறலாம்.*

மேற்கண்ட காரணங்களினால், வேளச்சேரியில் பகுதி அலுவலகம் தற்போது அமைக்க அவசியம் எழவில்லை.

101—

நவீன பேருந்து நிலையம் அமைத்தல்

வினா எண் 1329—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, அடையாறு போக்குவரத்துப் பணிமனையை புனரமைத்து நவீன பேருந்து நிலையமாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் வணிக வளாகங்களுடன் பணிமனைகளை நவீனமயமாக்கி வருவாய் ஈட்டுதல் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்ட 16 பணிமனை/ பேருந்து நிலையங்களில் அடையாறு பணிமனையும் நவீனப்படுத்த தேர்வு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு உள்கட்டமைப்பு வளர்ச்சிக் குழுமம் (*TNIDB*) மூலம் நிதி உதவியுடன் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனத்தின் (*TNIFMC*) ஒருங்கிணைப்புடன் விரிவான சாத்தியக்கூறு அறிக்கை (*DFR*) தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிமனையை*

நவீனப்படுத்துவதுடன் வணிக வளாகங்களும் அமைக்கப்படுவதால் போக்குவரத்துக் கழகத்திற்கு கூடுதல் வருவாயும் ஈட்டப்படும்.

102—

சிற்றுந்து இயக்குதல்

வினா எண் 1331—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, விஜயநகர் பேருந்து நிலையத்திலிருந்து விமான நிலையத்திற்கு ஆலந்தூர் வழியாக சிற்றுந்து (மினி பேருந்து) இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரியிலிருந்து தடம் எண்கள் 51A-ல் 29 பேருந்துகள், 3-ல் 13 பேருந்துகள், V51-ல் 23 பேருந்துகள், A51-ல் 18 பேருந்துகள், D70-ல் 36 பேருந்துகள், M70-ல் 13 பேருந்துகள், 570-ல் 39 பேருந்துகள், 570 extn.-ல் 12 பேருந்துகள் மடுவன்கரை வழியாக இயக்கப்பட்டு வருகின்றன. வேளச்சேரியிலிருந்து விமான நிலையம் செல்லும் பயணிகள் இப்பேருந்துகளைப் பயன்படுத்தி மடுவன்கரை வந்தடைந்தால், அங்கிருந்து தடம் எண்கள் G18-ல் 9 பேருந்துகள், E18-ல் 34 பேருந்துகள், 21G-ல் 30 பேருந்துகள், B18-ல் 7 பேருந்துகள் வாயிலாக ஆலந்தூர் வழியாக ஏர்போர்ட் சென்றடையலாம். எனவே, இப்பேருந்து வசதிகளே போதுமானதாக கருதப்படுகிறது.

103—

சிற்றுந்து இயக்குதல்

வினா எண் 1336—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, தரமணி இரயில் நிலையத்திலிருந்து பெருங்குடி இரயில் நிலையம், உதயம் நகர், பேபி நகர், விஜய

2021 செப்டம்பர் 13]

நகரம் வழியாக கிண்டி ரேஸ்கோர்ஸ் இரயில் நிலையத்திற்கு சிற்றுந்து (மினி பேருந்து) இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தரமணி இரயில் நிலையத்திலிருந்து பெருங்குடி இரயில் நிலையம், உதயம் நகர், பேபி நகர், விஜய நகரம் வழியாக கிண்டி ரேஸ்கோர்ஸ் இரயில் நிலையத்திற்கு சிற்றுந்து (மினி பேருந்து) இயக்க தற்போது சாத்தியமில்லை.

104—

உயிரியல் பூங்கா அமைத்தல்

வினா எண் 173—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்போரூர் தொகுதியிலுள்ள வனப் பகுதியில் வன உயிரியல் பூங்கா அமைக்கவும், இரயில் மற்றும் படகு சவாரி தொடங்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா திருப்போரூர் தொகுதிக்கு மிக அருகில் அமைந்துள்ளது. இந்த உயிரியல் பூங்கா, இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பூங்காவாகவும், தென்கிழக்கு ஆசியாவின் அதிக பரப்பளவு உள்ள பெரிய உயிரியல் பூங்காக்களில் ஒன்றாகவும் 602 ஹெக்டேர் பரப்பளவுடன் வண்டலூர் இரயில் நிலையத்திற்கு மிக அருகில் அமைந்துள்ளது. திருப்போரூர் தொகுதிக்கு உட்பட்ட முட்டுக்காட்டில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்மூலம் படகு சவாரி ஏற்கெனவே துவங்கி செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட சுற்றுலா வசதிகளே போதுமானதாக அரசு கருதுகிறது.

105—

வனவிலங்குகளுக்கு கொரோனா தொற்று ஏற்படாமல் பாதுகாத்தல்

வினா எண் 1191—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வனவிலங்குகளுக்கு கொரோனா தொற்று ஏற்படாமல் பாதுகாக்க மருத்துவக் கண்காணிப்பு குழுக்கள் அமைத்து, சிறப்பு பயிற்சி வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

*கோவிட்-19 நோய்த் தொற்று வனவிலங்குகளுக்கு பரவாமல் தடுக்கவும், குறைக்கவும் மற்றும் மேற்கண்ட பணிகளில் ஈடுபடும் அலுவலர்களுக்கு உரிய வழிகாட்டுதல்களை வழங்கவும், தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர், சுற்றுச்சூழல், பருவநிலை மாற்றம் மற்றும் வனத் துறை அவர்களின் தலைமையில் ஆறு உறுப்பினர்களைக் கொண்ட மாநில அளவிலான பணிக்குழு (*State Level Task Force*) ஒன்றினை அரசு அமைத்துள்ளது. இக்குழு பணியாளர்களுக்கு உரிய வழிகாட்டுதல்களை வழங்கி வருகிறது. பணியாளர்களுக்கு வனவிலங்குகளை கையாளும்போது பின்பற்ற வேண்டிய கோவிட்-19 வழிமுறைகள் பற்றிய பயிற்சி ஏற்கெனவே அளிக்கப்பட்டுள்ளது.*

106—

சிங்கங்களுக்கு கொரோனா தொற்று ஏற்படாமல் பாதுகாத்தல்

வினா எண் 1193—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உயிரியல் பூங்காக்களில் வாழும் சிங்கங்களை கொரோனாவிலிருந்து பாதுகாக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் உள்ள உயிரியல் பூங்காக்களில், சென்னை வண்டலூரில் உள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில்

2021 செப்டம்பர் 13]

மட்டுமே சிங்கங்கள் உள்ளன. தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக நிபுணர்கள் மற்றும் தேசிய அளவில் உள்ள உயிரியல் பூங்காக்களின் கால்நடை மருத்துவர்களால் பரிந்துரைக்கப்பட்ட வழிமுறைகளைப் பின்பற்றி அவற்றினை கொரோனா தொற்றிலிருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

107—

கொரோனா தொற்று உறுதி செய்தல்

வினா எண் 1194—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உயிரியல் பூங்காக்களில் விலங்குகளுக்கு வழங்கும் இறைச்சிகளில் கொரோனா தொற்று இல்லை என்பதை உறுதி செய்து, விலங்குகளுக்கு வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

விலங்கியல் பூங்காக்களில் உள்ள விலங்குகளுக்கு வழங்கப்படும் மீன், பழங்கள் மற்றும் இறைச்சி போன்ற உணவுகள், தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தினர் வழங்கியுள்ள வழிகாட்டுதலின்படி உரிய முறையில் சுத்தப்படுத்திய பின்னரே வழங்கப்படுகிறது.

TRUTH ALONE TRIUMPHS

108—

உயிரியல் பூங்கா பணியாளர்களுக்கு கொரோனா தடுப்பூசி

வினா எண் 1195—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உயிரியல் பூங்காக்களில் பணியாற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் 2 கொரோனா தடுப்பூசிகள் போட்டிருப்பதை உறுதிப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்:

ஆம். தமிழகத்தில் உயிரியல் பூங்காக்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டு வருவதை அரசு உறுதிப்படுத்தி வருகிறது. உயிரியல் பூங்காவில் பணியாற்றும் பணியாளர்களில் மருத்துவ தகுதியுடைய நபர்களுக்கு முதல் மற்றும் இரண்டாம் தவணை தடுப்பூசி உரிய கால இடைவெளியில் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், மருத்துவக் காரணங்களால் சில நபர்களுக்கு தடுப்பூசி செலுத்த இயலவில்லை. மருத்துவக் காரணங்களால் தடுப்பூசி செலுத்த இயலாத பணியாளர்கள், வாரந்தோறும் நடத்தப்படும் RT-PCR *சோதனை முகாமில்* RT-PCR *சோதனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள். சோதனை முடிவின் அடிப்படையில் கொரோனா தொற்று இல்லாத விலங்கு காப்பாளர்கள் மட்டுமே விலங்கு இருப்பிடத்தினுள் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.*

109—

குடும்ப அட்டை வழங்குதல்

வினா எண் 26—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் பெருநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்துள்ளவர்களுக்கு குடும்ப அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் மண்டலத்தில் 31-5-2021 நிலவரப்படி 1,47,578 குடும்ப அட்டைகள் நடைமுறையில் இருந்தன. ஜுன் 2021 முதல் ஆகஸ்ட் 2021 வரை தாம்பரம் மண்டலத்தில் புதிய குடும்ப அட்டை கோரி 4,539 விண்ணப்பங்கள் வரப்பெற்றன.

2021 செப்டம்பர் 13]

அவற்றில் தல விசாரணைக்குப் பின்னர் 2,032 குடும்ப அட்டைகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், மீதமுள்ள விண்ணப்பங்களில் தகுதியுள்ள நபர்களுக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

110—

நியாய விலைக் கடைகளில் மாஸ்க் மற்றும் சானிடைசர்

வினா எண் 30—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதியில் நியாய விலைக் கடைகள் மூலமாக மாஸ்க் மற்றும் சானிடைசர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2020 ஆம் ஆண்டில் கொரோனா நோய்த் தொற்று பரவலைத் தடுக்கும்பொருட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகள் மூலமாக முகக் கவசங்கள் வழங்கப்பட்டன. தற்போது நியாய விலைக் கடைகள் மூலமாக குடும்ப அட்டைதாரர்களுக்கு முகக் கவசங்கள் மற்றும் சானிடைசர் ஏதும் வழங்கப்படுவதில்லை.

111—

நெல் மூட்டைகள் மழையில் நனைவதைத் தடுத்தல்

வினா எண் 2184—திரு. இரா. அருள்: *மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரசு நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் மூட்டைகள் மழையில் நனைந்து வீணாவதைத் தடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்:

மாவட்டங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறப்பது குறித்தும், அவற்றின் செயல்பாடுகள் குறித்தும் மற்றும் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லினை பாதுகாப்பாக சேமிப்பது குறித்தும் விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் தமிழ்நாடு அரசால் அரசாணை (நிலை) எண் 60, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 16-7-2021-ல் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் நேரடி கொள்முதல் நிலைய பணிகள் குறித்து தொடர்ந்து கண்காணித்திட மாவட்ட ஆட்சியர் தலைமையில் உள்ள கண்காணிப்புக் குழுமூலம் நெல் கொள்முதல் பணிகள் குறித்து தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு விவசாயிகள் எவ்வித பாதிப்புக்கும் உள்ளாகாதவாறு, நெல் கொள்முதல் பணிகள் நடைபெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் மூட்டைகள் மழையில் நனைந்து வீணாவதைத் தடுக்க 10,000 தார்பாய்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

112—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 18—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் பெருநகராட்சி, 27-வது வார்டு, ரோஜா தோட்டம் பகுதியில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் பெருநகராட்சி, 27-வது வார்டு, ரோஜா தோட்டம் பகுதிக்கு, அருள் நகர் SS-1 100 கே.வி.ஏ. மின்மாற்றி வாயிலாக 105 மின் இணைப்புகளுக்கு (வீடு-95 மற்றும்

2021 செப்டம்பர் 13]

வணிகம்-10) சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. இம்மின்மாற்றியில் தற்போது இணைக்கப்பட்டிருக்கும் மின்பளு 81 கே.வி.ஏ. ஆக உள்ளது.

எனினும், எதிர்கால மின் தேவையை உத்தேசித்து அப்பகுதியில் கூடுதலாக ஒரு புதிய அருள் நகர் SS-II *100 கே.வி.ஏ. மின்மாற்றி அமைப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு தளவாடங்கள் பெறப்பட்டு, விரைவில் நிறுவப்பட்டு இயக்கத்திற்கு கொண்டுவரப்படும்.*

113—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 19—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, மாடம்பாக்கம் ஸ்ரீராம் நகர் பகுதியில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, மாடம்பாக்கம் ஸ்ரீராம் நகர் பகுதிக்கு பொன்னுசாமி அண்ட் கோ 250 கே.வி.ஏ. மின்மாற்றி வாயிலாக 38 மின் இணைப்புகளுக்கு (வீடு-35, வணிகம்-1 மற்றும் தொழிற்சாலை-2) சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வந்தது. எனினும், எதிர்கால மின் தேவையை உத்தேசித்து அப்பகுதியில் கூடுதலாக ஒரு புதிய ஸ்ரீராம் நகர் 100 கே.வி.ஏ. மின்மாற்றி நிறுவப்பட்டு இயக்கத்தில் உள்ளது.

114—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 56—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சி, கடப்பேரி ஜெயா தெரு, ஸ்ரீநிவாச தெரு மற்றும் ராஜகோபால் தெருவில் உள்ள மின்மாற்றியை 250 மெகா வாட் திறன் கொண்ட மின்மாற்றியாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் நகராட்சி, கடப்பேரி ஜெயா தெரு, ஸ்ரீநிவாச தெரு மற்றும் ராஜகோபால் தெருவிற்கு 2.7 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள 110/33-11 கி.வோ. கடப்பேரி துணை மின் நிலையத்திலிருந்து 3 X 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றிகள் வாயிலாக 11 கே.வி. சிட்லபாக்கம் மின்னூட்டிமூலம் மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. இத்துணை மின் நிலையத்தின் மொத்த உச்ச மின்பளு 26.76 எம்.வி.ஏ. ஆகும்.

கடப்பேரி ஜெயா தெரு, ஸ்ரீநிவாச தெரு மற்றும் ராஜகோபால் தெரு உள்ளிட்ட பகுதிகளுக்கு ஜெயா நகர் SS-II 100 + 100 கே.வி.ஏ. ஆகிய இரண்டு மின்மாற்றிகள் வாயிலாக மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது.

115—

மின் இணைப்பு வழங்குதல்

வினா எண் 57—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சி, லட்சுமி நகரில் மின் இணைப்பு வழங்கப்படாத வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, முடிச்சூர் ஊராட்சி, லட்சுமி நகரில் மின் இணைப்பு வழங்கப்படாத வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க வட்டாட்சியர் அவர்களிடமிருந்து தடையில்லா சான்று வழங்கும்பட்சத்தில் ஆவன செய்யப்படும்.

116—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 492—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா*—

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், முன்னவால்கோட்டை குடியிருப்புப் பகுதிகளுக்கு தனி மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், முன்னவால்கோட்டை குடியிருப்புப் பகுதிகளுக்கு முன்னவால் கோட்டை-1 100 கே.வி.ஏ. மற்றும் முன்னவால்கோட்டை-1 கூடுதல் 100 கே.வி.ஏ. ஆகிய மின்மாற்றிகளிலிருந்து மின் விநியோகம் சீரான முறையில் வழங்கப்பட்டு வருகிறது.

117—

எரிவாயு சுழலி நிலையத்தை இயக்குதல்

வினா எண் 493—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா*—

மன்னார்குடி தொகுதி, திருமக்கோட்டை தமிழ்நாடு எரிவாயு சுழலி நிலையத்தை முழுதிறனுடன் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாளுக்கு நாள் எண்ணெய் கிணறுகளிலிருந்து கிடைக்கப்பெறும் எரிவாயுவின் அளவு குறைந்து வருவதால், திருமக்கோட்டை எரிவாயு சுழலி மின் நிலையத்தை முழு திறனுடன் இயக்குவது சாத்தியமில்லை.

118—

பணி நிரந்தரம் செய்தல்

வினா எண் 494—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, திருமக்கோட்டை எரிவாயு சுழலி மின் நிலையத்தில் பணிபுரியும் ஒப்பந்தத் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி, திருமக்கோட்டை எரிவாயு சுழலி மின் நிலையத்தில் பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளர்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின்மூலம் நேரடியாக பணி நியமனம் செய்யப்பட்டவர்கள் அல்ல. ஆகவே, மேற்காணும் ஒப்பந்தப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய இயலாது.

119—

மின்மாற்றியை மாற்றியமைத்தல்

வினா எண் 525—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, செம்பாக்கம் நகராட்சி, சுந்தர் அவென்யூ, ரூபி குடியிருப்பு (A Block) அருகில் அமைந்துள்ள

2021 செப்டம்பர் 13]

மின்மாற்றியை வேறிடத்தில் மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, செம்பாக்கம் நகராட்சி, சுந்தர் அவென்யூ, ரூபி குடியிருப்பு (A Block) அருகில் அமைந்துள்ள மின்மாற்றியை வேறிடத்தில் மாற்றியமைக்க உரிய தொகையினை செலுத்தும்பட்சத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

120—

மின்கம்பங்களை மாற்றியமைத்தல்

வினா எண் 705—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, செம்பாக்கம் நகராட்சியைச் சேர்ந்த ஏரியில் உள்ள மின்கம்பங்களை வேறு இடத்தில் மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, செம்பாக்கம் நகராட்சியைச் சேர்ந்த ஏரியில் உள்ள மின்கம்பங்களை வேறிடத்தில் மாற்றியமைக்க கள ஆய்வு மேற்கொள்ள அரசு ஆவன செய்யும்.

121—

தானியங்கி மின் கட்டணம் செலுத்தும் இயந்திரம் அமைத்தல்

வினா எண் 716— திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2021 செப்டம்பர் 13

(அ) வேளச்சேரி தொகுதி, தரமணி டைடல் பூங்கா அருகில் உள்ள மின்வாரிய அலுவலகத்தில் தானியங்கி மின் கட்டணம் செலுத்தும் இயந்திரம் (ATM Payment Machine) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, தரமணி டைடல் பூங்கா அருகில் உள்ள மின்வாரிய அலுவலகத்தில் தானியங்கி மின் கட்டணம் செலுத்தும் இயந்திரம் (ATM Payment Machine) அமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

122—

மின் கம்பத்தை மாற்றியமைத்தல்

வினா எண் 1200— திரு. இரா. அருள்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் 5-வது டிவிஷன் குறுக்குத் தெருவின் நடுவே உள்ள மின் கம்பத்தை மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

சேலம் 5-வது டிவிஷன் குறுக்குத் தெருவின் நடுவே உள்ள மின் கம்பத்தை மாற்றியமைப்பதற்கு வாரிய விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

123—

கேங்மேன்களை பணியமர்த்துதல்

வினா எண் 1975—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2021 செப்டம்பர் 13]

தமிழ்நாடு மின்வாரியத்தில் கேங்மேன்களை (GANGMAN) புதியதாக நியமிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு மின் உற்பத்தி வாரியத்தில் கேங்மேன்களை புதியதாக நியமிக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

124—

நெசவாளர்களின் வாழ்வை மேம்படுத்துதல்

வினா எண் 1169—திரு. இரா. அருள்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஊரடங்கு காலத்தில் கடுமையான பாதிப்பிற்குள்ளான நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

ஊரடங்கு காலத்தில் கடுமையான பாதிப்பிற்குள்ளான நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும்பொருட்டு அரசு, நெசவாளர்களுக்கு நிவாரண நிதியுதவி வழங்குவது, நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட ஜவுளி இரகங்களை அவர்களின் இருப்பிடத்திற்கே சென்று பெற்று கூலி வழங்குவது மற்றும் பல்பொருள் தொகுப்பு வழங்குவது போன்ற அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

125—

அலுவலகக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 1680— திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2021 செப்டம்பர் 13

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் உள்ள கதர் கிராமத் தொழில் வாரிய அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் துணை இயக்குநர் (பட்டு) கும்பகோணம் அலுவலகமானது ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான கட்டடத்தில் வாடகை அடிப்படையில் இயங்கி வருகின்றது. இக்கட்டடம் கும்பகோணம் நகரின் மையப் பகுதியில் போதுமான இடவசதியுடன் இருப்பதாலும் ஊராட்சி ஒன்றியத்திற்கு சொந்தமான இடம் என்பதாலும் தற்போது புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

126—

ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்துதல்

வினா எண் 299—திரு. சு. ரவி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், அரிகலபாடி ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி ஊராட்சி ஒன்றியத்தில் அரிகலபாடி கூடுதல் ஆரம்ப சுகாதார

2021 செப்டம்பர் 13]

நிலையம் செயல்பட்டு வருகிறது. அரசு ஆணை (நிலை) எண் 142, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 30-04-2007-ன்படி நெமிலி ஊராட்சி ஒன்றியத்தில் புன்னை பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகவும், அரசு ஆணை (நிலை) எண் 295, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 22-08-2017-ன்படி பனப்பாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகவும் தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றன. எனவே, இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அரிகலபாடி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

127—

மருத்துவமனையை நவீனமயமாக்குதல்

வினா எண் 603— திரு. S.R. இராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தாம்பரம் தொகுதி, தாம்பரம் சானடோரியம் அரசு நெஞ்சக நோய் மருத்துவமனையில், கொரோனா சிகிச்சை அளித்து வருவதால் பழைய OP பகுதியை நவீனமயமாக்க மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நவீன புறநோயாளிகள் பிரிவில் கொரோனா வகைப்படுத்துதல் மையம் தற்காலிக முறையில் செயல்பட்டு வருகிறது. எனவே, புறநோயாளிகள், பழைய புறநோயாளிகள் பிரிவில் சிகிச்சை பெறுகிறார்கள். கொரோனா நோய்த் தொற்று குறைந்தவுடன், வகைப்படுத்துதல் மையத்தில் செயல்பாடுகள் விலக்கிக்கொள்ளப்படும். பழைய நோயாளிகள் பிரிவு பள்ளமான பகுதியில் இருப்பதால் அப்பிரிவை நவீனமயமாக்க உகந்ததாக இல்லை. தேவைப்படின் அரசு இதுதொடர்பாக பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளும்.

TRUTH ALONE TRIUMPHS

[2021 செப்டம்பர் 13

128—

ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்துதல்

வினா எண் 623— திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, பூதலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, பூதலூரில் 30 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வந்த அரசு ஆரம்ப சுகாதார நிலையம், அரசாணை எண் 233, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 23-9-2016-ன்படி 60 படுக்கை வசதிகளுடன்கூடிய "வட்ட அரசு மருத்துவமனையாக" தரம் உயர்த்தப்பட்டு, தற்போது மக்களின் பயன்பாட்டில் உள்ளது. இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 333 வெளிநோயாளிகளும், 20 உள் நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். திருவையாறு தொகுதி, பூதலூர் ஆரம்ப சுகாதார நிலையம், தற்போது வட்ட அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

129—

குளிர்சாதன வசதி செய்தல்

வினா எண் 624— திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, திருவையாறு வட்ட மருத்துவமனையில் பிணவறைக்கு குளிர்சாதன (Freezer) வசதி செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, திருவையாறு அரசு மருத்துவமனை 44 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் பிணவறை உள்ளது. மாதமொன்றுக்கு சராசரியாக 5 பிரேதங்கள் மட்டுமே பிரேத பரிசோதனைக்கு வருவதால், உடனடியாக பிரேத பரிசோதனை செய்யப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. குறைந்த எண்ணிக்கையிலான பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்படும் இம்மருத்துவமனைக்கு அத்தியாவசிய தேவைக்கேற்ப புற ஆதார அடிப்படையில் ஒரு பிரேத குளிரூட்டு சாதனம் வாடகை அடிப்படையில் சில்லறை செலவினத்தின்மூலம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

130—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 667— முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், எடகீழையூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப

[2021 செப்டம்பர் 13

சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. எடகீழையூர் கிராமத்தின் மக்கள்தொகை 6,249 ஆகும். இவ்வூராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இத்துணை சுகாதார நிலையம் பேரையூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்தது. எடகீழையூர் கிராமம், நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள் தொகை 1,28,011 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள எடகீழையூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

131—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 668— முனைவர் T.R.B. ராஜா: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், தேவங்குடியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. இவ்வினாவில் குறிப்பிட்டுள்ள தேவங்குடியின் சரியான பெயர் புதுதேவன்குடி என்பதாகும். இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையம் உள்ளது. இத்துணை சுகாதார நிலையம், பொதக்குடி ஆரம்ப சுகாதார

2021 செப்டம்பர் 13]

நிலையத்தைச் சார்ந்தது. இக்கிராமம் நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் 6 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், புதுதேவன்குடி கிராமத்திலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் பொதக்குடி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. எனவே, திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஊராட்சி ஒன்றியம், புதுதேவன்குடி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

132—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 669—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஒன்றியம், கர்ணாவூர் ஊராட்சி, பாமணியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. பாமணி கிராமம், மன்னார்குடி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 2 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், பாமணி கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் மன்னார்குடி அரசு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. எனவே, திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம்,

[2021 செப்டம்பர் 13

பாமணி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

(ஆ) தேவை எழவில்லை.

133—

ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

வினா எண் 1283—திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதி, அம்மகளத்தூர், நைனார்பாளையம், பெத்தானூர், மேலூர், கூத்தக்குடி மற்றும் முடியனூர் பகுதிகளில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கை வசதி கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில் மேலூர் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. அரசாணை (நிலை) எண் 142, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 30-04-2007-ன்படி கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்தில், மேலூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டு 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாத ஊராட்சி ஒன்றியத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை தரம் உயர்த்துதல் என்பது அரசின் கொள்கை முடிவாகும்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்தில் ஆறு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அரசாணை (நிலை)

2021 செப்டம்பர் 13]

எண் 293, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 12-10-2001-ன்படி சின்ன சேலம் ஊராட்சி ஒன்றியத்தில் கச்சிராயப்பாளையம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்தில், நைனார்பாளையம், அம்மகளத்தூர் மற்றும் பெத்தானூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

கள்ளக்குறிச்சி மாவட்டம், தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியத்தில் ஐந்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அரசாணை (நிலை) எண் 320, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 29-09-2003-ன்படி தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியத்தில் தியாகதுருகம் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்டு 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

எனவே, கள்ளக்குறிச்சி மாவட்டம், தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியத்தில், கூத்தக்குடி மற்றும் முடியனூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

TRUTH ALONE TRIUMPHS

134—

சார்—பதிவாளர் அலுவலகம் அமைத்தல்

வினா எண் 597—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, பூதலூர் வட்டம், பூதலூரில் சார்-பதிவாளர் அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் பதிவு மாவட்டம், பூதலூரில் சார்-பதிவாளர் அலுவலகம் 1-8-1914 முதல் ஏற்கெனவே இயங்கி வருவதால், திருவையாறு தொகுதி, பூதலூர் வட்டம், பூதலூரில் சார்-பதிவாளர் அலுவலகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் வரப்பெறவில்லை.

135—

மண்டல அலுவலகம் அமைத்தல்

வினா எண் 1361—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதியில் வணிக வரித் துறையின் மண்டல அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒரு வணிக வரி மண்டல அலுவலகத்தின்கீழ் சுமார் 6 முதல் 8 வணிக வரிவிதிப்பு வட்டங்கள் அமையப்பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் மட்டுமே ஒரு மண்டல அலுவலகம் அமைக்க இயலும். வேளச்சேரி 2,158 வணிகர்களை மட்டுமே கொண்ட ஒரு வரிவிதிப்பு வட்டம் ஆகும். எனவே, அங்கு ஒரு மண்டல அலுவலகம் அமைக்க வேண்டிய தேவை எழவில்லை.

136—

கட்டடம் கட்டுதல்

வினா எண் 1363—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2021 செப்டம்பர் 13]

(அ) வேளச்சேரி தொகுதி, வேளச்சேரி பத்திரப் பதிவு அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?.

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி சார்-பதிவாளர் அலுவலகம் தற்போது தனியார் வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த அலுவலகத்திற்கென சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண் 4, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 17-01-2014-ன்படி உத்தரவிடப்பட்ட நிலையில், கட்டடம் கட்ட நிலம் கிடைக்காத காரணத்தால் அரசாணை (நிலை) எண் 90, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, நாள் 2-8-2017-ல் இவ்வொதுக்கீடு சேலையூர் சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது. தற்போது வேளச்சேரி சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட நிலம் தேர்வு செய்து தருமாறு பதிவுத் துறைத் தலைவரால் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். நிலம் தேர்வு செய்யப்பட்டபின் அரசின் நிதி நிலைமைக்கேற்ப சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும்.

137—

கட்டடம் கட்டுதல்

வினா எண் 2156—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகர், தாதகாப்பட்டி சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு SV *இராமசாமி நகர், நெசவாளர் காலனி பகுதியில் காலியாக உள்ள இடத்தில் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

தாதகாப்பட்டி சார்-பதிவாளர் அலுவலகம், மானசரோவர் பள்ளி அருகில் உடையாப்பட்டியில் சேலம் (கிழக்கு) ஒருங்கிணைந்த பதிவுத் துறை வளாகத்தில், புதியதாக கட்டப்பட்டுள்ள அரசுக் கட்டடத்தில் 19-11-2020 முதல் செயல்பட்டு வருவதால் தற்போது புதிய அரசு கட்டடம் கட்டுவதற்கான அவசியம் எழவில்லை.

138—

GST வரியை தவணை முறையில் செலுத்துதல்

வினா எண் 2158—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கடந்த ஜூலை 2017 முதல் செப்டம்பர் 2020 வரை நிலுவையிலுள்ள GST வரியை கட்டும் வணிகர்களுக்கு முழுமையாக ஒரே தவணையில் வரி முழுவதையும் செலுத்தாமல் தவணை முறையில் கட்டுவதற்கு ஒன்றிய அரசை மாநில அரசு வலியுறுத்த முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017-ல் பிரிவு 80-ன்கீழ் சுயவரிவிதிப்பு முறையில் வரி செலுத்துவோரால் தாக்கல் செய்யப்படும் அறிக்கையின்படி செலுத்தப்பட வேண்டிய வரியினை தவணை முறையில் செலுத்த சட்டப்படி வழிவகை இல்லை என்பதால், செலுத்தப்பட வேண்டிய வரி முழுவதையும் ஒரே தவணையில்தான் செலுத்த வேண்டும்.

139—

GST வரி கட்டுவதற்கான கால அவகாசம் நீட்டித்தல்

வினா எண் 2159—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2021 செப்டம்பர் 13]

கடந்த ஜூலை 2017 முதல் GST *வரி கட்டாதவர்கள் (செப்டம்பர் 2020 வரை) தற்போது* GST *வரி கட்ட மத்திய நிதி அமைச்சகம் 30-8-2021 வரை கொடுத்துள்ள கால அவகாசத்தை (கொரோனா தொற்று பரவல் காரணமாக) வரும் 31-12-2021 வரை நீட்டித்துக் கொடுக்க ஒன்றிய அரசை வலியுறுத்த மாநில அரசு முன்வருமா?*

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டம், 2017-ன்கீழ் ஜூலை 2017 முதல் செப்டம்பர் 2018 வரையிலான காலத்திற்கு ஜி.எஸ்.டி.ஆர்-3பி அறிக்கையினை 22-12-2018 முதல் 31-3-2019 வரையிலான காலத்தில் தாக்கல் செய்யும் வரி செலுத்துவோருக்கு தாமதக்கட்டணம் முழுவதுமாக விலக்கு அளிக்கப்பட்டது. மேலும், ஜூலை 2017 முதல் ஜூலை 2020 வரையிலான காலத்திற்கு 1-7-2020 முதல் 30-9-2020 வரை தாக்கல் செய்யப்படும் ஜி.எஸ்.டி.ஆர்-3பி அறிக்கைகளுக்கு தாமதக் கட்டணம் ரூ.500/- ஆக குறைக்கப்பட்டது. மேலும், செலுத்த வேண்டிய வரி ஏதுமில்லா இனங்களில் தாமதக் கட்டணம் முழுவதுமாக விலக்கு அளிக்கப்பட்டது. மேலும், ஜூலை 2017 முதல் ஏப்ரல் 2021 வரையிலான காலத்திற்கு ஜி.எஸ்டி.ஆர்-3பி அறிக்கையினை 01-06-2021 முதல் 31-08-2021 வரை தாக்கல் செய்யும் வரி செலுத்துவோருக்கு தாமதக் கட்டணம் ரூ.1000/-ஆக குறைக்கப்பட்டது. மேலும், மேற்கூறிய காலத்திற்கு தாமதமாக தாக்கல் செய்யப்பட்ட அறிக்கைகளில் செலுத்த வேண்டிய வரி ஏதுமில்லா இனங்களில் தாமதக் கட்டணம் ரூ.500/- ஆக குறைக்கப்பட்டது. எனவே, போதுமான கால அவகாசம் ஏற்கெனவே பலமுறை அளிக்கப்பட்டுள்ளதால், 31-12-2021 முடிய காலத்தினை நீட்டிப்பு செய்வதற்கு வழிவகை இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

140—

பத்திரப் பதிவு முறைகளை எளிமையாக்குதல்

வினா எண் 3333—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் பத்திரப்பதிவு முறைகளை எளிமையாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தின் பத்திரப் பதிவு முறைகளை எளிமையாக்கும்வண்ணம் பதிவுத் துறையில் கணினிமயமாக்கல் திட்டம் (ஸ்டார்) 6-2-2000 அன்று அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

மாநிலம் முழுவதும் பொதுமக்களுக்கு சீராக, எளிமையாக, வெளிப்படையாக, பாதுகாப்பாக வழங்கும் நோக்குடன் இணையம் சார்ந்த வலை அடிப்படையிலான ஒருங்கிணைந்த மென்பொருள் ஸ்டார் 2.0 உருவாக்கப்பட்டு தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பொது மக்கள் ஒரே வருகையில் பதிவுப் பணிகள் நிறைவடைந்து, ஆவணத்தை திரும்பப் பெற்றுச் செல்லவேண்டும் என்ற நோக்கத்தில் தொடங்கப்பட்ட மேற்காணும் திட்டத்தின்மூலம் பதிவு செய்யப்படும் ஆவணங்களில் களப்பணி தேவைப்படும் இனங்கள் தவிர பிற ஆவணங்கள் பதிவு நாள் அன்றே உரிய நபரிடம் வழங்கப் பெறுவதால் பொதுமக்கள் ஒரேமுறை அலுவலக வருகையிலேயே ஆவணப்பதிவு முடிந்த அன்றே பதிவு பெற்ற ஆவணங்களை திரும்பப் பெற்று பயனடைகிறார்கள்.

141—

GST வரியைக் குறைத்தல்

வினா எண் 3334—திரு. இரா. அருள்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பல பொருட்களுக்கு (குறிப்பாக பல கட்டுமான பொருட்களுக்கு) 28% GST *விதிக்கப்படுகிறது. இந்த 28%* GST *வரியை 18 சதவிகிதமாக குறைக்க ஒன்றிய அரசை மாநில அரசு வலியுறுத்த முன்வருமா?*

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

சிமென்ட், மார்பிள், கிரானைட் ஆகியவை மட்டுமே 28% ஜி.எஸ்.டி வரிக்குட்படுகிறது. ஏனைய கட்டுமானப் பொருட்கள் 18% / 12% / 5% வரி விகிதங்களுக்கு உட்பட்டுள்ளன. மேலும், இவற்றின் மீதான வரி குறைப்பு குறித்து, ஜி.எஸ்.டி வரி விகிதங்கள் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றத்தால் சீரமைக்கப்படும்போது பரிசீலிக்கப்படும்.

142—

திருக்குளம் தூர் வாருதல்

வினா எண் 5315—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்போரூர் தொகுதி, திருப்போரூர் அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில் திருக்குளத்தை தூர் வாரி, நடுவில் நீர் ஊற்று மற்றும் அழகு மின்விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில். எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:-

(அ) மற்றும் (ஆ) திருப்போரூர், அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில் திருக்குளம் நல்ல நிலையில் உள்ளது. இத்திருக்குளத்தின் நடுவில் நீராழி மண்டபம் அழகுற அமைக்கப்பட்டுள்ளது. இத்திருக்குளம் தூர் வாருவதற்கு தற்போது அவசியம் எழவில்லை. இத்திருக்கோயிலில் 29-07-2021 அன்று இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் ஆய்வின்போது அறிவுறுத்தியபடி தற்போது சுற்றுச்சுவர் அழகுபடுத்தும் பணிக்கான நடவடிக்கை திருக்கோயில் நிருவாகத்தால் மேற்கொள்ளப்பட உள்ளது.

143—

சிறப்புப் பொருளாதார திட்டத்தை செயல்படுத்துதல்

வினா எண் 1242—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஊரடங்கு காலத்திற்கு பின்பு தமிழக பொருளாதாரத்தை மீட்டெடுக்க சிறப்பு பொருளாதார திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்:

கோவிட் பெரும் தொற்றினால் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்ட சூழ்நிலையில், பொறுப்பேற்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்கு பொருளாதார ஆலோசனை வழங்குவதற்காக உலகின் தலைசிறந்த பொருளாதார வல்லுநர்களை உள்ளடக்கிய பொருளாதார ஆலோசனைக் குழுவினை அரசு உருவாக்கியுள்ளது. இக்குழுவின் முக்கிய நோக்கங்களில் ஒன்று, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான ஆலோசனைகளை வழங்குவதாகும். இக்குழுவின் முதற்கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் 9-7-2021 அன்று காணொளி காட்சிமூலம் நடைபெற்றது.

இக்குழு பொருளாதாரத்தை மீட்டெடுக்க வழங்கியுள்ள முதற்கட்ட ஆலோசனை குறித்து சம்பந்தப்பட்ட துறைகளின் கருத்துகளைக் கேட்டறிந்தபின் உரிய நடவடிக்கையினை அரசு விரைவில் மேற்கொள்ளும்.

144—

சமுதாயக் கூடம் கட்டுதல்

வினா எண் 552—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2021 செப்டம்பர் 13]

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், கோவில்வெண்ணி தர்காஸ்ஸில் சமுதாயக் கூடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்:

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், கோவில்வெண்ணி தர்காவில் சமுதாயக் கூடம் கட்டுவது தொடர்பாக போதுமான இடம் இருக்கும்பட்சத்தில் அத்தர்காவின் முத்தவல்லி முன்மொழிவு வழங்கினால், தமிழ்நாடு வக்ஃபு வாரியம் உரிய விசாரணை செய்து அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளும். மேலும், தேவைப்படின் மத்திய வக்ஃபு கழகத்தின்மூலம் கடனுதவி பெற பரிந்துரை செய்யும்.

145—

பகுதிநேர நூலகத்திற்கு அனுமதி வழங்குதல்

வினா எண் 20—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, மாடம்பாக்கம் பேரூராட்சி, ரமணா நகரில் சட்டமன்ற உறுப்பினர் நிதியில் கட்டப்பட்ட பகுதிநேர நூலகத்திற்கு அனுமதி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், தாம்பரம் தொகுதி, மாடம்பாக்கம் பேரூராட்சி, ரமணா நகரில், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் புதிய கட்டடம் கட்டப்பட்டு, பகுதிநேர நூலகம் 25-2-2021 அன்று திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

146—

கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுதல்

வினா எண் 513—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், மகாதேவப்பட்டினம் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மகாதேவப்பட்டினம், அரசு மேல்நிலைப் பள்ளியின் மொத்த நிலப்பரப்பு 5 ஏக்கர் ஆகும். அதில், 1 ஏக்கர் பரப்பளவு விளையாட்டு மைதானமாக உள்ளது. இப்பள்ளியில் 189 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் 7 வகுப்பறைகள், 3 அறிவியல் ஆய்வகம், 1 அலகு மாணவர் கழிவறை, 1 அலகு மாணவியர் கழிவறை மற்றும் குடிநீர் வசதி மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமானதாக உள்ளது. இப்பள்ளியில் 13 ஆசிரியர்கள் மாணவ/மாணவிகளுக்கு கல்வி கற்பித்து வருகிறார்கள்.

மகாதேவப்பட்டினம், அரசு மேல்நிலைப் பள்ளிக்கு 5 ஏக்கர் நிலப் பரப்பளவு உள்ளது. மேலும், மாணவ/மாணவியர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான வகுப்பறைகள் உள்ளதால் கூடுதலாக வகுப்பறைகள் கட்ட அவசியம் எழவில்லை.

147—

சுற்றுச்சுவரை சீரமைத்தல்

வினா எண் 514—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், மகாதேவப்பட்டினம் மேல்நிலைப் பள்ளியில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட சுற்றுச்சுவரை சீரமைக்க அரசு முன்வருமா?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மகாதேவப்பட்டினம், அரசு மேல்நிலைப் பள்ளியில் கஜா புயலால் பாதிக்கப்பட்ட சுற்றுச்சுவரை சீரமைக்க ஏற்கெனவே மன்னார்குடி ஊராட்சி ஒன்றியத்தால் அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே, சுற்றுச்சுவரை சீரமைக்க அவசியம் எழவில்லை.

148—

வகுப்பறை கட்டடம் கட்டுதல்

வினா எண் 520—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவையாறு தொகுதி, பூதலூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பழுதடைந்துள்ள ஐந்து வகுப்பறை கட்டடத்தை அகற்றி, புதியதாக பத்து வகுப்பறை கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

பூதலூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ஐந்து வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்ட போதுமான இடவசதி இல்லை. பழைய கட்டடத்தை பொதுப் பணித் துறைமூலம் இடித்து அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நாள்வரை கட்டடம் இடிக்கப்படவில்லை. ஆகவே, புதியதாக பத்து வகுப்பறைகள் கட்ட இயலாத நிலை உள்ளது.

149—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 674—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சின்னசேலம் ஒன்றியம், அம்மகளத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை சின்னசேலம் ஒன்றியம், அம்மகளத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

150—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 676—திரு. மா. செந்தில்குமார்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கள்ளக்குறிச்சி தொகுதி, வாணவரெட்டி, விளம்பார், ஏமப்பேர் ஆகிய பகுதிகளிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை கள்ளக்குறிச்சி தொகுதி, வாணவரெட்டி, விளம்பார், ஏமப்பேர் ஆகிய பகுதிகளிலுள்ள உயர்நிலைப் பள்ளிகள் நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது.

2021 செப்டம்பர் 13]

151—

கூடுதல் வகுப்பறை கட்டுதல்

வினா எண் 678—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் மொத்த நிலப்பரப்பு 6 ஏக்கர் 10 சென்ட் ஆகும். அதில், 4 ஏக்கர் பரப்பளவு விளையாட்டு மைதானமாக உள்ளது. இப்பள்ளியில் 1,641 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் 24 வகுப்பறைகள், 5 மாணவர்கள் கழிவறை, சுற்றுச்சுவர் மற்றும் குடிநீர் வசதி மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப போதுமானதாக உள்ளது. இப்பள்ளியில் 45 ஆசிரியர்கள் மாணவ/மாணவிகளுக்கு கல்வி கற்பித்து வருகிறார்கள்.

கள்ளக்குறிச்சி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் புதியதாக கட்டப்பட்ட 14 வகுப்பறைகள் மற்றும் 2 ஆய்வகக் கட்டடங்களில் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்காக அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அதனால், வகுப்பறைகள் பற்றாக்குறையாக உள்ளன. கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. கட்டுமானப் பணிகள் முடிவுற்றவுடன் ஆட்சியர் அலுவலகம் செயல்பட்ட இடமானது மீளவும் பள்ளிக்கு ஒப்படைக்கும்பொழுது தேவையான வகுப்பறைகள் மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப போதுமானதாக அமையும். எனவே, கூடுதல் வகுப்பறைகள் கட்ட அவசியம் எழவில்லை.

152—

நூலகத்தைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 707—திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதி, அடையாறு, காந்தி நகர் பகுதியில் உள்ள நூலகத்தை நவீன முறையில் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை மாவட்டம், வேளச்சேரி தொகுதி, அடையாறு, காந்தி நகர் பகுதியில் உள்ள வட்டார நூலகம் 30-11-1981-ல் திறக்கப்பட்டு, 6,542 சதுரடி பரப்பளவு கொண்ட சொந்தக் கட்டடத்தில் குழந்தைகள் பிரிவு, மகளிர் பிரிவு, கணினி பிரிவு, குடிமையியல் பணிப் பிரிவு, குறிப்புதவிப் பிரிவு மற்றும் சொந்த நூல்கள் படிக்கும் பிரிவு ஆகிய பிரிவுகளுடன் அனைத்து நவீன வசதிகளுடனும் நல்ல நிலையில் மைய நூலகத்திற்கு இணையாக செயல்பட்டு வருவதால், இந்நூலகத்தினைத் தரம் உயர்த்தும் அவசியம் எழவில்லை.

153—

பள்ளி மாணவர்களுக்கு மழை கோட் வழங்குதல்

வினா எண் 710—திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளச்சேரி தொகுதியில் உள்ள அரசு மற்றும் மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மழை கோட் (மழைக் கவசம்) வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 204, பள்ளிக் கல்வி (ஆதே.வா) துறை, நாள் 15-11-2016-ன்படி மலைப் பிரதேசத்தில் உள்ள அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகளில் சத்துணவு பெறும் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு மழைக் காலங்களில் எவ்வித சிரமமுமின்றி பள்ளிக்கு வருகைபுரிய மழைக் கோட்டு, பூட்ஸ் மற்றும் காலுறைகள் வழங்கப்பட்டு வருகின்றன. சமவெளிப் பகுதிகளில் அமைந்துள்ள பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மழைக் கோட்டு வழங்கப்படுவதில்லை.

எனவே, வேளச்சேரி தொகுதியில் உள்ள அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மழைக் கோட் (மழைக் கவசம்) வழங்கும் அவசியம் எழவில்லை.

154—

வேளாண் பாடப் பிரிவிற்கு ஆசிரியர் நியமனம்

வினா எண் 1150—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, மருங்கூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் வேளாண் பாடப் பிரிவிற்கு ஆசிரியரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நெய்வேலி சட்டமன்றத் தொகுதி, மருங்கூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 6-6-2015 முதல் வேளாண் பாடப் பிரிவு துவங்கப்பட்டு பெற்றோர் ஆசிரியர் கழகத்தின்மூலம் பகுதிநேர தொழிற்கல்வி ஆசிரியர் நியமனம் செய்யப்பட்டு, வேளாண் பாடப் பிரிவு கற்பிக்கப்பட்டு வருகிறது. இப்பள்ளியில் வேளாண் பாடப் பிரிவில் ஆசிரியர்/மாணவர் விகிதாச்சாரப்படி போதிய மாணவர் எண்ணிக்கை இல்லை என்பதால் வேளாண் பாடப் பிரிவிற்கு ஆசிரியர் பணியிடம் அனுமதிக்க வழிவகை இல்லை.

[2021 செப்டம்பர் 13

155—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1173—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகராட்சி, ரெட்டியூர் கோட்டம் எண் 3, ரெட்டியூர் பகுதியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை, சேலம் மாநகராட்சி, ரெட்டியூர் கோட்டம் எண் 3, ரெட்டியூர் பகுதியில் உள்ள உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது.

156—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1175—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாநகரின் குகை, தாதகாப்பட்டி, கிச்சிப்பாளையம் பகுதிகளில் உள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய/நகராட்சி/மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த

2021 செப்டம்பர் 13]

நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை சேலம் மாநகரில் உள்ள குகை மற்றும் தாதகாப்பட்டி பகுதிகளில் உள்ள நகரவை நடுநிலைப் பள்ளிகள் பூர்த்தி செய்யவில்லை. மேலும், கிச்சிப்பாளையத்தில் நகரவை தொடக்கப் பள்ளி மட்டுமே செயல்படுகிறது. எனவே, இப்பகுதியிலுள்ள நடுநிலை மற்றும் தொடக்கப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது.

157—

பள்ளிக்கு நவீன கழிப்பிட வசதி செய்தல்

வினா எண் 1177—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், சேலம் ஒன்றியம், தளவாய்ப்பட்டி ஊராட்சி, ஏரி காலனியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்கு நவீன கழிப்பிட வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், சேலம் ஒன்றியம், சேலம் மேற்கு தொகுதி, தளவாய்ப்பட்டி ஊராட்சி, ஏரி காலனியில் உள்ள சர்க்கார் கொல்லப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியின் மொத்த நிலப்பரப்பு 1.5 ஏக்கர் ஆகும். அதில் 7,830 சதுர மீட்டர் பரப்பளவு விளையாட்டு மைதானமாக உள்ளது. இப்பள்ளியில் 799 மாணவ/மாணவிகள் பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் 40 வகுப்பறைகள், 6 அறிவியல் ஆய்வகம், 6 மாணவர் கழிவறை, 6 மாணவியர் கழிவறை மற்றும் குடிநீர் வசதி மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப போதுமானதாக உள்ளன. இப்பள்ளியில் 34 ஆசிரியர்கள் மாணவ/மாணவிகளுக்கு கல்வி கற்பித்து வருகிறார்கள்.

தளவாய்ப்பட்டி ஊராட்சி, ஏரி காலனியில் உள்ள சர்க்கார் கொல்லப்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் மாணாக்கர்கள் எண்ணிக்கைக்கேற்ப போதுமான கழிப்பிட வசதிகள் உள்ளன. மேலும், மேற்படி கழிப்பறைகளை 2021-2022 ஆம் கல்வியாண்டில் ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்து மராமத்து செய்திடும்வகையில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2021 செப்டம்பர் 13

158—

நூலகம் கட்டுதல்

வினா எண் 1178—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேலம் மாநகர், தாதகாப்பட்டி பகுதி, S.V. இராமசாமி நகர் நெசவாளர் குடியிருப்பில் புதிய நூலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொதுமக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பகுதிநேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம்/கிளை நூலகம்/ முழுநேர நூலகமாகத் தரம் உயர்த்தப்படும். எனவே, சேலம் மாவட்டம், சேலம் மாநகர், தாதகாப்பட்டி பகுதி, S.V. இராமசாமி நகர் நெசவாளர் குடியிருப்புப் பகுதியில் பகுதிநேர நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் அப்பகுதியில் நேரடியாக நூலகம் கட்ட வழிவகையில்லை.

159—

போட்டித் தேர்வுகளில் பங்கேற்போர்க்கு தனிப் பயிற்சி வழங்குதல்

வினா எண் 1180—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ் வழிக் கல்வி பயிலும் அரசுப் பள்ளி மாணவர்கள் தொழில் கல்வி (professional Course) பயில போட்டித் தேர்வுகளில் பங்கேற்போர்க்கு தனிப் பயிற்சி வழங்க அரசு முன்வருமா?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

மருத்துவக் கல்வி நீட் போட்டித் தேர்வு மற்றும் IIT/JEE போன்ற தொழிற்கல்வி போட்டித் தேர்வு ஆகியவற்றிற்கு பயிற்சி பெற விருப்பம் தெரிவித்து பதிவு செய்த அரசுப் பள்ளி மாணவர்களுக்கு இணையதளம் வாயிலாகப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

160—

ஆசிரியர் தேர்வு வாரியத்தை அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் இணைப்பதை மறுபரிசீலனை செய்தல்

வினா எண் 1184—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சிறப்பாக செயல்பட்டுவரும் அரசு ஆசிரியர் தேர்வு வாரியத்தை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் இணைப்பதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசாணை எண் 1320, கல்வித் துறை, நாள் 17-8-1987-ன்படி ஆசிரியர் தேர்வு வாரியம் தோற்றுவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்போது ஆசிரியர் தேர்வு வாரியம்மூலம் பல்வேறு ஆசிரியர் பணியிடங்களுக்கான தெரிவு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆசிரியர் தேர்வு வாரியத்தை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் இணைப்பது சார்ந்து எவ்விதமான முன்மொழிவுகளும் அரசின் பரிசீலனையில் இல்லை.

161—

உடற்கல்வியைக் கட்டாயப் பாடமாக்குதல்

வினா எண் 1186—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2021 செப்டம்பர் 13

தமிழகத்தில் உள்ள தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர் பணியிடம் உருவாக்கி, உடற்கல்வியைக் கட்டாயப் பாடமாக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின்கீழ் இயங்கும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களால் வழங்கப்படும் தொடக்கக் கல்வி பட்டயப் பயிற்சியின் இரண்டாண்டு பணிமுன் பயிற்சியில் சேரும் மாணவர்களுக்கு உடற்கல்வி மற்றும் உடல் நலக் கல்வி கற்பித்தல் சார்ந்து பயிற்சி வழங்கப்படுகிறது. இந்தப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உடற்கல்வி மற்றும் உடல் நலக் கல்வி பாடத்தினை கற்பிக்கின்றனர். மேலும், அரசாணை (நிலை) எண் 177, பள்ளிக் கல்வித் (C2) துறை, நாள் 11-11-2011-ல் 100 குழந்தைகளுக்கு மேல் மாணவர் சேர்க்கையுள்ள அரசுப் பள்ளிகளில் 6-8 வகுப்புகளுக்கு 5,392 பகுதிநேர உடற்கல்வி ஆசிரியர் பணியிடங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அதனடிப்படையில் 664 நடுநிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 வகுப்புகளில் 100 மாணவர்களுக்கு மேல் உள்ள பள்ளிகளில் பகுதி நேர (உடற்கல்வி மற்றும் உடல் நலக் கல்வி - Health and physical Education*) ஆசிரியர்கள் 664 பேர் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.*

162—

செல்போன் செயலியில் அனைத்துப் பாடங்களும் அதிகாரப்பூர்வமாக பதிவேற்றம் செய்தல்

வினா எண் 1187—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பள்ளிக் கல்வித் துறை சார்பில் YouTube *போன்ற செல்போன் செயலி ஆரம்பித்து, அதில் பள்ளிக் கல்விக்குட்பட்ட அனைத்து வகுப்புகளுக்கும் உண்டான அனைத்துப் பாடங்களும் சிறந்த ஆசிரியர்களால் நடத்தப்பட்டு, அதிகாரப்பூர்வமாக பதிவேற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா?*

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கோவிட்-19 பெருந்தொற்று காலத்தில் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள கற்றல் இழப்பை ஈடு செய்யும்விதமாக 1 முதல் 12 வகுப்பு வரை உள்ள அனைத்துப் பாடங்களுக்கும் 8,558 அரை மணி நேரக் காணொளிகளை தமிழ்நாடு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், 32 மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களின் துணையுடன் உருவாக்கியுள்ளது. இக்காணொளிகள் யாவும் கல்வித் தொலைக்காட்சி அலை வரிசையில் ஒளிபரப்பாகின்றன. மேலும், 9 தனியார் தொலைக்காட்சி அலை வரிசை, 4 DTH *அலை வரிசை, 6 கேபிள் டிவி நெட்வொர்க் ஆகியவற்றிலும் ஒளிபரப்பாகின்றன. பின்னர், கல்வித் தொலைக்காட்சியின் அதிகாரப்பூர்வ* YouTube *அலைவரிசையில் இக்காணொளிகள் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.*

163—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1670—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், குமரன்குடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், குமரன்குடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு போதிய இட வசதி இல்லை. மேலும், 3 கி.மீ. சுற்றளவிற்குள் அரசு மேல்நிலைப் பள்ளி, சோழபுரம்

[2021 செப்டம்பர் 13

செயல்படுகிறது. இக்குடியிருப்பு தமிழ்நாடு இலவச கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011-ன்படி உயர் தொடக்கக் கல்வி வசதியுள்ள குடியிருப்பாக உள்ளதால், மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

164—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1672—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், கொற்கை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தில் கொற்கை என்ற இடத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி ஏதும் செயல்படவில்லை. எனவே, தரம் உயர்த்துதல் குறித்து வினா எழவில்லை.

165—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1674—திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், அசூர் ஊராட்சி, அசூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், அசூர் ஊராட்சி, அசூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

166—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1675—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், கொட்டையூரில் உள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய/நகராட்சி/மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், கொட்டையூர் நகராட்சி நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

167—

கூடுதல் வகுப்பறை கட்டுதல்

வினா எண் 1676—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், தாராசுரம் பேரூராட்சி, தாராசுரம் மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஒன்றியம், கும்பகோணம் தொகுதி, தாராசுரம், அரசு மேல்நிலைப் பள்ளியின் மொத்த நிலப்பரப்பு 12,922.5 சதுர மீட்டர் ஆகும். அதில் 4,000 சதுர மீட்டர் பரப்பளவு விளையாட்டு மைதானமாக உள்ளது. இப்பள்ளியில் மாணவ/மாணவியர்களின் எண்ணிக்கைக்கேற்ப அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தேவையான வகுப்பறைகளும் போதுமானதாக உள்ளன. எனவே, தாராசுரம், அரசு மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்ட அவசியம் எழவில்லை.

168—

நூலகத்திற்கு கட்டடம்

வினா எண் 1677—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, சோழபுரம் பேரூராட்சியில் உள்ள நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தொகுதி, சோழபுரம் பேரூராட்சி, சோழபுரம் மேலத் தெருவில் 1-3-2019 முதல் கிளை நூலகம் ஆசின்ன பள்ளிவாசல் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்நூலகத்திற்கு சொந்தக்

2021 செப்டம்பர் 13]

கட்டடம் கட்ட காலிமனை ஏதுமில்லை. எனவே, இந்நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு தற்போது அவசியம் எழவில்லை.

169—

பள்ளிக்கு விளையாட்டு மைதானம்

வினா எண் 1678—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், உள்ளூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு மைதானம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஒன்றியத்தில் உள்ளூர் பெண்கள் உயர்நிலைப் பள்ளி செயல்படவில்லை. அதற்கு பதிலாக உள்ளூர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி மட்டுமே செயல்பட்டு வருகின்றது.

உள்ளூர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஏற்கெனவே 1,67,079 சதுர அடி நிலப் பரப்பளவில் விளையாட்டு மைதானம் உள்ளது. எனவே, இப்பள்ளிக்கு மீண்டும் விளையாட்டு மைதானம் அமைக்க அவசியம் எழவில்லை.

170—

தொழிற்கல்வி பாடத் திட்டத்தில் சமையல் கலைப் பாடப் பிரிவு

வினா எண் 1725—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பன்னிரெண்டாம் வகுப்பு தொழிற்கல்வி (Vocational Course) பாடத் திட்டத்தில் சமையல் கலைப் பாடப் பிரிவைத் துவக்க அரசு ஆவன செய்யுமா?

[2021 செப்டம்பர் 13

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

2018-2019 ஆம் கல்வியாண்டில் தொழிற்கல்வி மற்றும் கலைப் பிரிவுகளில் முதன்மைப் பாடப் பிரிவுகளின் பெயர்கள் மற்றும் முதன்மைப் பாடங்களில் மாற்றம் செய்து கலைத்திட்ட வடிவமைப்புக் குழு மற்றும் உயர்மட்டக் குழு ஆகியவற்றின் பரிந்துரையினை ஏற்று அதனை நடைமுறைப்படுத்த மாநில பொது பள்ளிக் கல்வி வாரியம் ஒப்புதல் வழங்கியதற்கிணங்க 2018-2019 ஆம் கல்வியாண்டில் +1 வகுப்பிற்கும், 2019-2020 ஆம் கல்வியாண்டில் +2 வகுப்பிற்கும் நடைமுறைப்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டது. சமையல் கலை பாடப் பிரிவு தொடங்குவது குறித்து பரிந்துரை ஏதும் செய்யப்படவில்லை. தொழிற்கல்வி பாடப் பிரிவில் உணவக மேலாண்மை என்ற பாடத்தில் மனையியல், உணவக மேலாண்மை மற்றும் கணினி தொழில்நுட்பம் இடம்பெற்றுள்ளன. பள்ளிக் கல்வி அளவில் உணவக மேலாண்மை பாடங்கள் நடத்தப்பட்டு வருவதால், சமையல் கலைப் பாடத்தை தனிப் பாடமாக நடத்திட வேண்டிய அவசியம் எழவில்லை.

171—

மாணவர்களுக்கு டேப்-லெட் வழங்குதல்

வினா எண் 1726—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அரசுப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் 6 ஆம் வகுப்பு முதல் நடப்பு ஆண்டிலேயே டேப்-லெட் இலவசமாக வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

அரசுப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும், 6 ஆம் வகுப்பு முதல் டேப்-லெட் இலவசமாக வழங்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2021 செப்டம்பர் 13]

172—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1740—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, காமாட்சிபுரம் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, காமாட்சிபுரம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு போதிய இட வசதி இல்லை. மேலும், 3 கி.மீ. சுற்றளவிற்குள் அரசு மேல்நிலைப் பள்ளி, மனையேறிப்பட்டி மற்றும் ஆதி திராவிடர் நல உயர்நிலைப் பள்ளி, புதுக்குடி ஆகிய 2 பள்ளிகள் செயல்படுகின்றன. இக்குடியிருப்பு தமிழ்நாடு இலவச கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011-ன்படி, ஏற்கெனவே உயர் தொடக்கக் கல்வி பயில வசதி ஏற்படுத்தப்பட்ட குடியிருப்பாக உள்ளதால், மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

173—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1743—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, கூடலூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2021 செப்டம்பர் 13*

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, கூடலூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியானது 2004-2005 ஆம் கல்வியாண்டிலேயே தரம் உயர்த்தப்பட்டு நடுநிலைப் பள்ளியாகச் செயல்பட்டு வருகிறது.

174—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1745—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, ராஜேந்திரம் ஆற்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை திருவையாறு தொகுதி, ராஜேந்திரம் ஆற்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

175—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1746—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2021 செப்டம்பர் 13]

(அ) திருவையாறு தொகுதி, கூத்தூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை திருவையாறு தொகுதி, கூத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

176—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1747—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, செம்மங்குடி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை திருவையாறு தொகுதி, செம்மங்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

177—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1748—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, திருமலைசமுத்திரம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை திருவையாறு தொகுதி, திருமலைசமுத்திரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

178—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1749—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, நடுக்காவேரி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள

2021 செப்டம்பர் 13]

நிபந்தனைகளை திருவையாறு தொகுதி, நடுக்காவேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

179—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1751—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, வெள்ளாம்பெரமூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு தொகுதி, வெள்ளாம்பெரமூரில் உள்ள அரசு உதவிபெறும் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த விதிகளில் இடமிலலை.

180—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1752—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, இந்தலூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2021 செப்டம்பர் 13*

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை திருவையாறு தொகுதி, இந்தலூர் உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது.

181—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1753—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, கள்ளப்பெரம்பூர் 1-ம் சேத்தி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை திருவையாறு தொகுதி, கள்ளப்பெரம்பூர் 1-ம் சேத்தி உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது.

182—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1754—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2021 செப்டம்பர் 13]

(அ) திருவையாறு தொகுதி, கோவிலடி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை திருவையாறு தொகுதி, கோவிலடி உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது.

183—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1755—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, பனவெளி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை திருவையாறு தொகுதி, பனவெளி உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது.

[2021 செப்டம்பர் 13

184—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1758—திரு. துரை. சந்திரசேகரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, வரகூர் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை திருவையாறு தொகுதி, வரகூர் உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது.

185—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 1774—திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெய்வேலி தொகுதி, வேகாக்கொல்லை அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை

2021 செப்டம்பர் 13]

நெய்வேலி தொகுதி, வேகாக்கொல்லை அரசு நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

186—

நூலகம் அமைத்தல்

வினா எண் 1776—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, இந்திரா நகர் ஊராட்சியில் நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதி நேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொதுமக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், பகுதி நேர நூலகமானது கிளை நூலகமாகவோ, முழு நேர நூலகமாகவோ தரம் உயர்த்தப்படும். எனவே, கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, இந்திரா நகர் ஊராட்சியில் பகுதி நேர நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் நேரடியாக நூலகம் அமைக்க வழிவகையில்லை.

187—

நூலகம் அமைத்தல்

வினா எண் 1777—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, பெருமத்தூர் ஊராட்சியில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதி நேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொதுமக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், பகுதி நேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம்/ கிளை நூலகம்/ முழு நேர நூலகமாகத் தரம் உயர்த்தப்படும். எனவே, கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, பெருமாத்தூர் ஊராட்சியில் பகுதி நேர நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் நேரடியாக நூலகம் அமைக்க வழிவகையில்லை.

188—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 3821—திரு. சு. ரவி: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், பரமேஸ்வரமங்கலம் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், பரமேஸ்வரமங்கலம் அரசு உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 13]

189—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

வினா எண் 4495—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, சிட்லபாக்கம் பேரூராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை தாம்பரம் தொகுதி, சிட்லபாக்கம் பேரூராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது.

190—

இறகு பந்து உள் விளையாட்டு அரங்கம் அமைத்தல்

வினா எண் 24—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் பெருநகராட்சி, கடப்பேரி அமர்நகர் பகுதியில் இறகு பந்து உள்விளையாட்டு அரங்கம் (Indoor Stadium) அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2021 செப்டம்பர் 13

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் பெருநகராட்சி, கடப்பேரி அமர்நகர் பகுதியில் இறகு பந்து உள்விளையாட்டு அரங்கம் அமைப்பதற்கான திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

191—

பல்நோக்கு விளையாட்டு பயிற்சிக்கூடம் அமைத்தல்

வினா எண் 1161—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி, நகரப் பகுதியில் சர்வதேசத் தரத்தில் பல்நோக்கு விளையாட்டு பயிற்சிக்கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, வடக்குத்து ஊராட்சி, நகரப் பகுதியில் சர்வதேசத் தரத்தில் பல்நோக்கு விளையாட்டுப் பயிற்சிக்கூடம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

192—

விளையாட்டுத் திடல் அமைத்தல்

வினா எண் 1167—திரு. இரா. அருள்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஓமலூர் ஒன்றியம், உடைந்தபாலம் டால்மியா சீனிவாசா நகரில் விளையாட்டுத் திடல் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

ஓமலூர் ஒன்றியம், உடைந்தபாலம் டால்மியா சீனிவாசா நகரில் விளையாட்டுத் திடல் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

193—

விளையாட்டு வீரர்களுக்கு பயணச் செலவு, விடுதி மற்றும் உணவு வசதிகள்

வினா எண் 1686—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் அரசு அங்கீகாரம் பெற்ற விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் விளையாட்டு வீரர்களுக்கான பயணச் செலவை ஏற்கவும், விடுதி மற்றும் உணவு வசதிகள் செய்யவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்படும் அரசு அங்கீகாரம் பெற்ற மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு பயணப்படி மற்றும் தினப்படி வழங்கப்பட்டு வருவதுடன், விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் நாட்களில் தங்குமிட வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன.

[2021 செப்டம்பர் 13

194—

விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்புகள் உருவாக்குதல்

வினா எண் 1687—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழகத்தில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்புகளை உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல் - காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது, தமிழ்நாடு அரசு, தமிழகத்தில் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு அரசு வேலைவாய்ப்புகளை வழங்கி வருகிறது.

195—

பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு கொரோனா தொற்று இறப்பு ஏற்படின் இழப்பீடு வழங்குதல்

வினா எண் 2126—திரு. இரா. அருள்: *மாண்புமிகு தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தொழிலாளர் நல வாரிய பதிவு பெற்ற தொழிலாளர்கள் கொரோனா தொற்று மருத்துவச் செலவு, இறப்பு ஏற்படின் உரிய இழப்பீடு வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.வெ. கணேசன், தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

கோவிட்-19 தொற்று காலத்தில் நிவாரண நிதியாக ரூ.1,000/- பதிவு பெற்ற 17 அமைப்புசாரா நல வாரியத் தொழிலாளர்களுக்கு

2021 செப்டம்பர் 13]

3 தவணையாக வழங்கப்பட்டுள்ளது. முதல் தவணையாக ரூ.1,000/- வீதம் 23,16,067 பதிவு பெற்ற அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு ரூ.231,60,67,000/-ம், இரண்டாவது தவணையாக ரூ.1,000/- வீதம் 23,13,957 பதிவு பெற்ற அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு ரூ.231,39,57,000/-ம் மற்றும் மூன்றாவது தவணையாக ரூ.1,000/- வீதம் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த பகுதிகளில் 1,30,021 பதிவு பெற்ற அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு ரூ.13,00,21,000/-ம் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. ஆக மொத்தம் பதிவு பெற்ற 17 அமைப்புசாரா நல வாரியத் தொழிலாளர்களுக்கு கோவிட்-19 காலத்தில் நிவாரணமாக ரூ.476,00,45,000/- வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கோவிட்-19 காலத்தில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்கள், பதிவு பெறாத வெளி மாநிலத் தொழிலாளர்கள், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், மண்டலத் தொழிலாளர் ஆணையர் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் நல வாரியத்தில் பதிவு பெறாத வெளி மாநில ஓட்டுநர்கள் ஆகியவற்றைச் சார்ந்த 16,82,577 தொழிலாளர்களுக்கு ரூ.106,17,06,087/- செலவில் 15 கிலோ அரிசி, 1 கிலோ பருப்பு மற்றும் 1 கிலோ சமையல் எண்ணெய் அடங்கிய உணவு தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், பதிவு, புதுப்பித்தல், நலத் திட்ட உதவித்தொகைகள் ஒப்பளித்தல் மற்றும் வழங்குதல் போன்ற அமைப்புசாரா தொழிலாளர்களின் நல வாரிய பணிகள், மாவட்ட அளவில் சேலம், தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) மூலம் நிருவகிக்கப்பட்டு வருகிறது என்றும், மேலும் பதிவு பெற்ற அமைப்புசாரா தொழிலாளர்கள் கொரோனா தொற்று ஏற்பட்டு இறக்கும் நேர்வில், அவர்களின் குடும்பத்தினருக்கு இயற்கை மரண நிதியுதவியாக ரூ.20,000/-ம் ஈமச் சடங்கு நிதியுதவியாக ரூ.5,000/-ம் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், ESI, PF *பிடித்தம் செய்யும் தொழிலாளர்களின் மாத ஊதிய உச்ச வரம்புத் தொகை ரூ.25,000/- (அடிப்படை சம்பளம் மற்றும் அகவிலைப்படி) இருக்கும்பட்சத்தில், அவர்களின் வேலையளிப்பவர் ரூ.20/-ம் மற்றும் தொழிலாளியிடம் ரூ.10/-ம் பிடித்தம் செய்து வருடா வருடம் ஒரு தொழிலாளிக்கு தொழிலாளர் நல நிதியாக ரூ.30/- சந்தாவாக செலுத்தும்பட்சத்தில் தொழிலாளியின் வாரிசுதாரருக்கு ரூ.30,000/- இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.*

196—

வெள்ளி கொலுசு செய்பவர்களுக்கு நல வாரியம் அமைத்தல்

வினா எண் 1226—திரு. இரா. அருள்: *மாண்புமிகு தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வெள்ளி கொலுசு செய்பவர்களுக்கான நல வாரியம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.வெ. கணேசன், தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

தங்கம் மற்றும் வெள்ளி பொருட்கள் செய்யும் தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கென 1-9-2006 அன்று தமிழ்நாடு பொற்கொல்லர் நல வாரியம் என்ற பெயரில் தனி நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி நல வாரியத்தில் 16,995 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளதுடன் 30,854 பயனாளிகளுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, கண் கண்ணாடி, ஓய்வூதியம் ஆகிய உதவித்தொகைகள் மற்றும் இயற்கை மரணம், விபத்து மரணம், விபத்து ஊனம் ஆகிய நிகழ்வுகளின்போது நலத் திட்ட உதவியாக ரூ.11,43,07,483/- வழங்கப்பட்டுள்ளது.

197—

கடற்கரை பகுதியில் நீர் விளையாட்டுகள் ஏற்படுத்துதல்

வினா எண் 163—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்போரூர் தொகுதி, கோவளம் தொடங்கி சட்ராஸ் வரையுள்ள கடற்கரை பகுதியில் நீர் விளையாட்டுகள் (water sports) ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2021 செப்டம்பர் 13]

விடை—

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டத்தில் சுற்றுலாத்தலங்கள் அதிகம் காணப்படுகின்றன. தமிழ்நாட்டில் யுனெஸ்கோ அறிவித்த ஐந்து உலக பாரம்பரிய சின்னங்களில் ஒன்றான மாமல்லபுரத்திலிருந்து 20 கி.மீ. தொலைவில் கோவளம் மற்றும் 15 கி.மீ. தொலைவில் சட்ராஸ் (சதுரங்கப்பட்டினம்) அமைந்துள்ளது.

கோவளம் கடற்கரையிலிருந்து 6 கி.மீ. தொலைவில் முட்டுக்காடு படகு குழாம் மற்றும் சட்ராஸ் பகுதியிலிருந்து 26 கி.மீ. தொலைவில் முதலியார்குப்பம் படகு குழாம் அமைந்துள்ளது. இவ்விரண்டு படகு குழாம்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், கோவளம் கடற்கரை பகுதியில் 'அலைச்சறுக்கு' (Surfing) நீர் விளையாட்டு தனியார் நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகிறது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் 'அலைச்சறுக்கு' விளையாட்டில் பங்கு கொள்ள ஆர்வம் காட்டி வருகின்றனர். எனவே, சட்ராஸ் பகுதியில் நீர் சாகச விளையாட்டு நடத்த தனியார் முகமைமூலம் சாத்தியக்கூறுகள் உள்ளதா என்பதை ஆராய்ந்து, சாத்தியக்கூறு அறிக்கை (Feasibility Study) பெறப்பட்டு சுற்றுலாத் துறை நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

198—

மயானத்திற்கு செல்லும் மண் சாலையை தார்ச் சாலையாக மாற்றுதல்

வினா எண் 1804—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், சித்தாம்பாடி ஊராட்சி, சித்தாம்பாடி ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியிலிருந்து மயானத்திற்கு செல்லும் மண் சாலையை தார்ச் சாலையாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

விடை—

மாண்புமிகு திருமதி நா. கயல்விழி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், சித்தாம்பாடி கிராம சர்வே எண் 352/3சி 0.23.50 ஹெக்டேர் பரப்பில் ஆதி திராவிடர் காலனிக்கு மயானம் உள்ளது. மேற்படி மயானத்திற்கு பாதை அமைக்கும் பொருட்டு தனி நபரிடமிருந்து நிலம் கையகப்படுத்தப்பட்டு கிராம கணக்குகளில் இணைப்பு சாலை என மாற்றம் செய்து பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேற்படி இடத்தில் தார்ச் சாலை அமைக்கும் பணி நடவடிக்கையில் உள்ளது.

199—

சமுதாய நலக் கூடம் அமைத்தல்

வினா எண் 1952—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், அத்தியூர் ஊராட்சி, ஆதி திராவிடர் தெருவில் சமுதாய நலக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி நா. கயல்விழி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மக்களின் எண்ணிக்கை, சமுதாயக் கூடம் கட்ட கிடைக்கும் இடம் மற்றும் தேவையான நிதி ஒதுக்கீடு ஆகியவைகளைக் கணக்கில்கொண்டு சமுதாயக் கூடங்கள் படிப்படியாக ஆண்டுதோறும் கட்டப்பட்டு வருகின்றன. கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், அத்தியூர் ஊராட்சி, ஆதி திராவிடர் தெருவில் புதிய சமுதாயக்

2021 செப்டம்பர் 13]

கூடம் கட்டுவது ஆதி திராவிட மக்கள் தொகை, அருகிலுள்ள சமுதாயக் கூடங்களின் எண்ணிக்கை, போதுமான இடம், நிதி ஒதுக்கீடு மற்றும் முன்னுரிமையின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும்.

200—

மயானச் சாலையைச் சீரமைத்தல்

வினா எண் 491—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், பைங்காநாடு ஊராட்சி, ஆதி திராவிடர் மயானச் சாலையைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி நா. கயல்விழி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

பைங்காநாடு ஊராட்சியில் ஆதி திராவிடர் மயானச் சாலை, 150 மீட்டர் தூரம்கொண்ட மண் சாலையாகும். இச்சாலையை நடப்பு நிதியாண்டில் MGNREGS திட்டத்தின்கீழ் ஒரடுக்கு கப்பி சாலையாக மாற்றிட முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. நிருவாக அனுமதி பெறப்பட்டவுடன் இப்பணிகள் தொடங்கப்படும்.

LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

இணைப்பு-II

(111 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 38—பொதுத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2021-2022

1. முன்னுரை

மாநிலத்தின் பொது நிருவாகத்தைக் கையாளும் துறையே பொதுத்துறை என்று அழைக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கட்டுப்பாட்டிலும், கண் பார்வையிலும் இயங்கும் இத்துறை தலையாயப் பணிகளை மேற்கொண்டு தன்னிகரில்லாத் தலைமைச் செயலகத்தின் தலையாகச் செயல்படுகிறது. பரபரப்பாகவும் சுறுசுறுப்பாகவும் விடுமுறை நாள்களிலும் அயராமல் பணியாற்றி வரும் முக்கியத் துறை இப்பொதுத்துறை.

நிருவாகத்தில் நேர்மை, நுனிக்கொம்பிலும் ஆணி வேரில் திட்டமிடுதலும் இருக்க வேண்டும் என்பதே திறன் மிகுந்த ஆளுகையின் இலக்கணம். இதை உறுதி செய்யும் வகையில் மாநிலத்தின் முக்கியப் பணிகளில் செயல்படும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள் ஆகியோரின் பணி அமைப்பை இத்துறையே கையாண்டு வருகிறது.

மாண்புமிகு ஆளுநரின் பதவி ஏற்பு, மாண்புமிகு முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள் ஆகியோரின் பதவி ஏற்பு ஆகிய மரபுசார் விழாக்களை நடத்தும் பணியை இத்துறையே கவனிக்கிறது. உயர் பெருமக்கள் வருகை புரிகிறபோதெல்லாம் மரபு நெறிகளில் ஏற்பாடுகள் செய்து, பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டு, அவர்களைப் புன்னகையோடும் பூங்கொத்தோடும் வரவேற்கிற பெரும் பொறுப்பு இத்துறைக்கு உண்டு. ஒன்றிய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சகத்தோடும், அயல்நாட்டுத் தூதரகங்களோடும் தொடர்புகொள்ளும் பணியும் இத்துறையால் செவ்வனே செய்யப்படுகிறது. மாவட்ட நீதிபதிகள், உயர் நீதிமன்ற சட்ட அலுவலர்கள் ஆகியோரின் நியமனத்தைத் திறம்படச் செய்கிறது இத்துறை. சென்னையில் உள்ள அரசு விருந்தினர் இல்லத்தையும், அரசு ஓய்வு இல்லத்தையும், உதகமண்டலத்தில்

2021 செப்டம்பர் 13]

உள்ள தமிழகம் விருந்தினர் இல்லத்தையும், புது டில்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தையும் பராமரித்தும், புதுப்பித்தும், ஒதுக்கீடு செய்தும் நிருவகித்து வருகிறது இத்துறை. பொதுத்துறை மேற்கொள்ளும் மற்ற பணிகள் இங்கே பட்டியலிடப்படுகின்றன.

அயல்நாட்டினர்

- அயல்நாட்டினர் சட்டம், 1946
- 'இ-சானட்' சேவைத் திட்டம்

நலன் பேணுதல்

- மாநிலத்தில் முகாம்களிலும், வெளிப்பகுதிகளிலும் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்களின் நலன் பேணுதல்
- வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன்
- முன்னாள் படைவீரர்கள் நலன், அவர்களது குடும்ப நலன், முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் (Tamil Nadu Ex-Servicemen's Corporation Limited (TEXCO)) நிருவாகம்
- சுதந்திரப் போராட்ட வீரர்கள், முன்னாள் இந்திய தேசிய இராணுவ வீரர்களுக்காக (Ex-INA) ஓய்வூதியம் வழங்குதல், நலப் பணிகளைச் செயல்படுத்துதல்

மனித உரிமைகள்

- மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993-ஐ செயல்படுத்துதல், மாநில மனித உரிமைகள் ஆணையம், தேசிய மனித உரிமைகள் ஆணையம் தொடர்பான பணிகள்

சட்டம், ஒழுங்கு

- சட்டம் ஒழுங்கினைப் பராமரித்தல், அது தொடர்பாக விசாரணை ஆணையங்களை அமைத்தல்
- தேசியப் பாதுகாப்புச் சட்டம், (National Security Act,(NSA)), 1980 அந்நியச் செலாவணி பாதுகாப்பு, கள்ளக்கடத்தல் நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம், 1974-ஐ (Conservation of Foreign Exchange and Prevention of Smuggling Activities Act,(COFEPOSA)) நடைமுறைப்படுத்துதல்

இராணுவம்

- தேசிய ஒருமைப்பாட்டுக் குழு, பன்மாநிலக் குழு, தென்மண்டலக் குழு உட்பட ஒன்றிய, மாநில அரசுகளுக்கு இடையேயான பொதுவான விவரங்கள் குறித்துக் கவனித்தல்
- இந்தியத் தரைப்படை, கப்பற்படை, விமானப்படை, கடலோரக் காவல்படை ஆகிய இராணுவத் துறைகளுடன் ஒத்துழைப்பு நல்குதல்

குறைதீர்த்தல்

- முதலமைச்சரின் தனிப்பிரிவில் பெறப்படும் மனுக்கள் மீது உரிய ஆய்வு செய்து தீர்வு காணுதல்
- உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையில் பெறப்படும் மனுக்கள் மீது உரிய ஆய்வு செய்து தீர்வு காணுதல்

மற்றவை

- தேசிய விழாக்களான சுதந்திரத் திருநாள், குடியரசுத் தினக் கொண்டாட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல்
- மாநில அரசின் விருதுகளைத் தகுதியுள்ள நபர்களுக்கு வழங்குவதற்கான பணிகளை மேற்கொள்ளுதல்
- ஒன்றிய அரசால் வழங்கப்படும் விருதுகளுக்கான தகுதியுள்ள நபர்களைத் தேர்வு செய்து ஒன்றிய அரசுக்குப் பரிந்துரை செய்தல்
- அமைச்சரவைக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல்
- பொது விடுமுறை மற்றும் உள்ளூர் விடுமுறை அறிவித்தல்
- தலைமைச் செயலகக் கட்டடங்களைப் பராமரித்தல், நிருவகித்தல்
- அரசு விமான போக்குவரத்துப்பிரிவு சம்பந்தமான பணிகளை நிருவகித்தல், கவனித்தல்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 13]

2. தமிழ்நாட்டிற்கு வருகைபுரிந்த மிக முக்கிய விருந்தினர்கள், அயல்நாட்டுத் தூதுவர்கள்

மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர், மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர், மாண்புமிகு இந்தியப் பிரதமர், வெளிநாட்டு அரசின் தலைமைப் பொறுப்பு வகிக்கும் பிரமுகர்கள், வெளிநாட்டு அமைச்சர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் / உயர் ஆணையர்கள் ஆகியோர் தமிழ்நாட்டுக்கு வருகைபுரியும் போது மரபு, பாதுகாப்பு ஏற்பாடுகள் பொதுத்துறையால் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், மாண்புமிகு ஆளுநர், மாண்புமிகு முதலமைச்சர், தலைமைச் செயலாளர் ஆகியோருடன் வெளிநாட்டு அமைச்சர்கள் / தூதுவர்கள் சந்திப்பு ஏற்பாடுகளையும் ஒன்றிய அரசின் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் இசைவுடன் பொதுத்துறை மேற்கொள்கிறது.

மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் 02.08.2021 முதல் 06.08.2021 வரை தமிழகத்திற்கு வருகை புரிந்தார். அவ்வருகையின்போது, தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழாவில் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின் திருவுருவப்படத்தைத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில், மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் 02.08.2021 அன்று திறந்து வைத்தார். மாண்புமிகு இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் அவர்கள் 29.06.2021 முதல் 02.07.2021 வரை தமிழகத்திற்கு வருகை புரிந்தார். கடந்த மே மாதம் 2021 முதல் 31.08.2021 வரை டேனிஷ் நாட்டைச் சேர்ந்த அயல்நாட்டுத் தூதுவர், பல்வேறு நாடுகளைச் சார்ந்த 11 அயல்நாட்டுத் துணைத் தூதுவர்களும், கப்பற்படையினைச் சார்ந்த உயர் அதிகாரி, கடலோரக் காவற்படையைச் சார்ந்த 2 உயர் அதிகாரிகளும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துள்ளனர்.

3. அரசு விருந்தினர் இல்லங்கள்

பொதுத்துறையின் கட்டுப்பாட்டில் அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், சென்னை; புதிய அரசு விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை; அரசு ஓய்வு இல்லம் சிந்தாதிரிப்பேட்டை, சென்னை; தமிழகம் அரசு விருந்தினர் இல்லம், உதகமண்டலம்; வைகை தமிழ்நாடு இல்லம், புது டெல்லி; பொதிகை தமிழ்நாடு இல்லம், புது டெல்லி ஆகிய அரசு விருந்தினர் இல்லங்கள் செயல்படுகின்றன.

[2021 செப்டம்பர் 13

3.1 அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், சென்னை

அரசு விருந்தினர் இல்லம் 7 அறைகளுடன் 1970-ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 1983 ஆம் ஆண்டு கூடுதல் கட்டடங்கள் பழைய விருந்தினர் இல்லத்தின் அருகே கட்டப்பட்டு விரிவுபடுத்தப்பட்டது. அரசு விருந்தினர் இல்லத்தில் 33 அறைகளில் 6 தொகுப்பு அறைகள், 11 சொகுசு அறைகள், 16 நிலையான அறைகள் உள்ளன. மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலுள்ள வரவேற்பு அலுவலர் (இணை மாநில மரபு அலுவலர்) இவற்றின் நிருவாகத்தைப் பொறுப்பேற்று நடத்துகின்றார்.

3.2 புதிய விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை

புதிய விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை, 2018-ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இவ்வில்லத்தில் 40 சொகுசு அறைகள், 4 சிறிய கூட்டரங்கம், 2 பெரிய கூட்டரங்கம், 2 உணவு அருந்தும் அறை, நவீன உடற்பயிற்சிக் கூடம் அமைந்துள்ளன. மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலுள்ள வரவேற்பு அலுவலர் (இணை மாநில மரபு அலுவலர்) இவற்றின் நிருவாகத்தைப் பொறுப்பேற்று நடத்துகின்றார்.

அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், புதிய அரசு விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம் ஆகிய விருந்தினர் இல்லங்களில் அரசு விருந்தினர் மற்றும் தொகைதரு விருந்தினர் தங்குவதற்கு www.sgh.tn.gov.in *என்னும் இணையத்தின் வலைதளப் பக்கத்தின் வாயிலாக முன்பதிவினைச் செய்யும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.*

3.3 அரசு ஓய்வு இல்லம், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை

சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள அரசு ஓய்வு இல்லம், சென்னைக்கு வருகைபுரியும் இளநிலை அரசு அலுவலர்கள் தங்குவதற்காக 25 அறைகளுடன் 1981-ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அக்கட்டடம் மிகவும் பழுதடைந்ததால், பிப்ரவரி, 2021-ல் இடிக்கப்பட்டு, புதிய அரசு ஓய்வு இல்லம் கட்டுவதற்கான பணிகள் நடைபெறுகின்றன.

மாவட்ட வருவாய் அலுவலர் நிலையிலுள்ள வரவேற்பு அலுவலரின் (இணை மாநில மரபு அலுவலர்) கட்டுப்பாட்டில்

2021 செப்டம்பர் 13]
அரசு விருந்தினர் இல்லம், புதிய அரசு விருந்தினர் இல்லம் ஆகியவற்றில் மொத்தம் 89 அலுவலர்கள் 24 மணி நேரமும் சுழற்சி முறையில், சீரான செயல்பாடு, விருந்தோம்பல் ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில் பணியாற்றி வருகின்றனர்.

3.4 தமிழகம் அரசு விருந்தினர் இல்லம், உதகமண்டலம்

இவ்விருந்தினர் மாளிகை, முன்பு ஜோத்பூர் மகாராஜாவினுடைய அரண்மோர் அரண்மனை என்று பெயர் கொண்ட மாளிகையானது, மிகவும் இரம்மியமான சூழலில் அமைந்துள்ளது. 1958-ம் ஆண்டு இந்த அரண்மனை தமிழக அரசால் வாங்கப்பட்டது. இவ்விருந்தினர் மாளிகை உதகமண்டலம் இரயில் நிலையம், மத்திய பேருந்து நிலையத்திலிருந்து 2.8 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. இம்மாளிகை 39 அறைகளுடன் (8 முக்கிய விருந்தினர் அறைகள், 29 அறைகள், 2 விடுதி அறைகள்) 36 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இவ்விருந்தினர் மாளிகையில் 200 பேர் அமரக்கூடிய அழகிய அவைக்கூடமும் 30 பேர் அமரக் கூடிய சிறிய அவைக் கூடமும் உள்ளன. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பல்வேறு குழுக்களின் ஆய்வுக் கூட்டங்கள், கருத்தரங்கங்கள் அவைக் கூடத்தில் நடத்தப்படுகின்றன.

இம்மாளிகையில் அறைகள் ஒதுக்கீடு செய்வது தொடர்பான ஆணைகள் இத்துறையால் வெளியிடப்படுகிறது. தமிழகம் விருந்தினர் மாளிகையில் வட்டாட்சியர் நிலையிலுள்ள வரவேற்பு அலுவலரின் கட்டுப்பாட்டில் 13 நிரந்தரப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

3.5 வைகை - தமிழ்நாடு இல்லம், புது டெல்லி

வைகை-தமிழ்நாடு இல்லம், புது டெல்லியிலுள்ள சாணக்யபுரி கௌடில்யமார்க் எண் 6-ல் 1.757 ஏக்கர் நிலத்தில் 1962-ஆம் ஆண்டு கட்டப்பட்டது, அதன் தொடர்ச்சியாக, 1976-ஆம் ஆண்டு மூன்று அடுக்குமாடியுடன் கட்டப்பட்டது. வைகை-தமிழ்நாடு இல்லத்தில் 7 சொகுசு அறைகளும் 40 அறைகளும் உள்ளன. இவ்வில்லத்தில் வரவேற்பு, உணவகம், இல்லக் காப்பகம், மின்சாரம், குடிநீர், குளிர்சாதனம் போன்றவற்றை பராமரிக்கும் அனைத்து முக்கியச் சேவைகள் தமிழ்நாடு இல்லத்தில் பணிபுரியும் அரசு ஊழியர்களால் செயல்படுத்தப்படுகிறது.

[2021 செப்டம்பர் 13

3.6 பொதிகை-தமிழ்நாடு இல்லம், புது டெல்லி

பொதிகை-தமிழ்நாடு இல்லம், புது டெல்லியிலுள்ள சாணக்யபுரி திக்கேந்தரஜித் மார்க், எண் 9-ல் 1.966 ஏக்கர் பரப்பளவில், 16.09.2004-இல் கட்டப்பட்டுப் பயன்பாட்டில் உள்ளது. இவ்வில்லத்தில் உணவகம், இல்லக் காப்பகம், பாதுகாப்பு, தோட்டப்பணிகள் அனைத்தும் தனியார் மயமாக்கப்பட்டு ஒப்பந்ததாரர்களால் செயல்படுத்தப்படுகிறது. தற்போது தமிழ்நாடு இல்ல நிருவாகக் கட்டுப்பாடு, செயல்பாடு கூடுதல் தலைமைச் செயலாளர் / உள்ளுறை ஆணையர்-I, உள்ளுறை ஆணையர்-II ஆகியோரைத் தனித்தனித் துறைத் தலைவர்களாகக் கொண்டு பொதுத்துறையின் முழுமையான கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது.

புது டெல்லி தமிழ்நாடு இல்லங்களில் அரசு விருந்தினர் மற்றும் தொகைதரு விருந்தினர் தங்குவதற்கு www.tnhouse.tn.gov.in என்னும் இணையத்தின் வலைதளப்பக்கத்தின் வாயிலாக முன்பதிவினைச் செய்யும் வசதி செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு இல்லங்களில் வழங்கப்படும் சேவைகள்:

- **வணிக மையம்:-** வைகை மற்றும் பொதிகை-தமிழ்நாடு இல்லத்தின் வணிக மையத்தில் செயலாக்க உதவிகள் கட்டண முறையில் விருந்தினர்களுக்குச் செய்து தரப்படுகிறது.

- அனைத்து விருந்தினர்கள் அறைகளிலும் கம்பியில்லாத இணையத் தொடர்பு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- நவீன ஒலி, ஒளி கருவிகளுடன் 90 பார்வையாளர்கள் அமரும் வசதி கொண்ட அரங்கம் பயன்பாட்டில் உள்ளது.

- பொதிகை-தமிழ்நாடு இல்லத்திலுள்ள மருத்துவ உதவி மையம் விருந்தினர்களுக்கும், அலுவலர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கும் குறைந்தபட்ச மருத்துவ உதவி வழங்கி வருகிறது. பொது மருத்துவர், திங்கள், புதன், வெள்ளிக் கிழமைகளில் மாலை 4.30 முதல் 6.00 மணி வரை பொதிகை-தமிழ்நாடு இல்லத்தில் மருத்துவ ஆலோசனை வழங்குகிறார்.

2021 செப்டம்பர் 13]

- உள் அரங்கு உடல்நலம் மேம்பாட்டு மையம், பொதிகை-தமிழ்நாடு இல்லத்திலும், வெளி அரங்கு உடல்நல மேம்பாட்டு மையம் இரண்டு தமிழ்நாடு இல்லங்களிலும், குழந்தைகள், விருந்தினர்களுக்கான பொழுதுபோக்கு மையம் வைகை-தமிழ்நாடு இல்லத்திலும் உள்ளன.

3.7 அரசு விருந்தினர், தொகைதரு விருந்தினர்

3.7.1 அரசு விருந்தினர்

தமிழகத்திற்கு வருகைதரும் மிக முக்கிய, முக்கியப் பிரமுகர்கள் மாண்புமிகு குடியரசுத் தலைவர், மாண்புமிகு குடியரசுத் துணைத்தலைவர், மாண்புமிகு பாரதப் பிரதமர், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, பிற மாநில ஆளுநர்கள், முன்னாள் குடியரசுத் தலைவர், முன்னாள் குடியரசுத் துணைத்தலைவர், முன்னாள் பாரதப் பிரதமர், மக்களவையின் சபாநாயகர், துணை சபாநாயகர், ஒன்றிய அமைச்சர்கள், மக்களவை மற்றும் மாநிலங்களவையின் எதிர்கட்சித் தலைவர், பிற மாநில முதலமைச்சர்கள், அமைச்சர்கள், நிதி ஆயோக் துணைத் தலைவர், பிற மாநில சபாநாயகர்கள், துணைச் சபாநாயகர்கள், இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர், ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட ஆணையத்தின் தலைவர்கள் / உறுப்பினர்கள், அயல்நாட்டுப் பிரமுகர்கள், மாண்புமிகு உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற நீதிபதிகள், ஒன்றிய அரசின் செயலாளர்கள் ஆகிய அனைவரும் அரசு விருந்தினர்களாக கருதப்பட்டு அவர்களுக்கு வரவேற்பு, தங்கும் வசதி, உணவு, மருத்துவச் சேவை, தொலைபேசி கட்டணம், போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. பாதுகாப்பு வசதிகள் ஒன்றிய அரசின் உள்துறை நிர்ணயித்துள்ள பட்டியலின்படி கொடுக்கப்படுகின்றன.

3.7.2 தொகைதரு விருந்தினர்

மரபு கையேட்டின்படி, அரசு விருந்தினர் பிரிவின் கீழ் வராதவர்கள் தொகைதரு விருந்தினர்களாக கருதப்படுவர். கட்டணம் செலுத்துதல் அடிப்படையில், தங்கும் வசதி, போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன.

07.05.2021 முதல் 31.08.2021 வரை அரசு விருந்தினர் இல்லங்களுக்கு வருகை புரிந்தோர் விவரம்:

வ. எண்.	விருந்தினர்	அரசு விருந்தினர் இல்லம், சேப்பாக்கம், சென்னை	புதிய அரசு விருந்தினர் இல்லம், ஓமந்தூரார் தோட்டம், சென்னை	தமிழகம் விருந்தினர் இல்லம், உதகமண்டலம்	தமிழ்நாடு இல்லம் பொதிகை/ வைகை, புதுடெல்லி
1.	அரசு விருந்தினர்	09	--	--	24
2.	தொகைதரு விருந்தினர்	154	212	580	620

4. அயல்நாட்டினர்

4.1 அயல்நாட்டினர் சட்டம், 1946

மாநில அரசுகளுக்கு ஒன்றிய அரசால் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடும் அயல்நாட்டினர், நுழைவிசை (visa) விதிகளை மீறும் அயல்நாட்டினரை அயல்நாட்டினர் சட்டம், 1946-ன்படி, அவர்களது நாட்டிற்குத் திருப்பி அனுப்புவதற்கான நடவடிக்கைகளை இத்துறை மேற்கொள்கிறது.

4.2 ‘இ-சானட்’ சேவைத் திட்டம்

மாநில அளவில், பொதுத்துறையானது வெளிநாடுகளில் உயர்கல்வி பயில்வதற்கு / பணிபுரிவதற்குத் தேர்வாகியுள்ள இந்தியர்களின் ஆவணங்களுக்கு சான்றளிப்பு வழங்குகிறது. சான்றிதழ்களின் உண்மைத் தன்மையை உரிய ஆவணம் வழங்கும் அதிகார அமைப்பிடமிருந்து சரிபார்க்கப்பட்டு இத்துறையால் முத்திரையிடப்படுகிறது. இச்சேவை இணையதளம் வாயிலாக வழங்குவதற்கு ஏதுவாக வெளியுறவுத்துறை அமைச்சகமானது, “இ-சானட்” (http://esanad.nic.in/) என்ற இணையதள முகப்பினைத் தேசிய தகவல் தொடர்பு மையம் (National Informatics Centre)

2021 செப்டம்பர் 13]

*வாயிலாகத் தொடங்கியுள்ளது. "இ-சானட்" என்பது தொடர்பற்ற (*Contactless*), தொகையற்ற (*Cashless*) மற்றும் காகிதமற்ற (*Paperless*) முறையில் முத்திரையிடும் சேவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டது. இச்சேவையில் ஒரு பகுதியாகச் சான்றிதழ்களின் உண்மைத் தன்மை சரிபார்க்கும் நடவடிக்கை மின்னணு பரிமாற்றம் (*Online*) மூலம், பின்னூட்ட கருத்துத் தெரிவிக்கும் முறையுடன் (*feedback Mechanism*), நெறிமுறைப்படுத்தப்பட்டுச் சான்றிதழ்களின் உண்மைத் தன்மை சரிபார்க்கும் நடைமுறையில் கூடுதல் பொறுப்புடனும், விரைவாகவும், சிக்கலில்லாமலும் (*Hassle free*) குறைந்த செலவில் தீர்வு காண்பது ஆகிய அம்சங்களைக் கொண்டுள்ளது.*

*இவ்விணைய வழி சான்றளிப்பு / 'அப்போஸ்டில்' பெறுவதற்காக விண்ணப்பிக்கப்படும் விண்ணப்பதாரரின் ஆவணங்கள் / சான்றிதழ்கள், ஆவணம் / சான்றிதழ் வழங்கும் அமைப்புடன் (*Document Issuing Authority(DIA)*) மற்றும் பொது (அயல் நாட்டினர்) துறையால் (தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரை) சரிபார்க்கப்பட்டுச் சான்றொப்பமிடப்பட்டு விண்ணப்பத்தாரர்களுக்கு விரைவு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும். தமிழகத்தில் 17 மாநில பல்கலைக்கழகங்கள், 13 நிகர்நிலை பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்வித்துறை, அரசு தேர்வுகள் இயக்ககம், நகராட்சி நிருவாக ஆணையரகம், பதிவுத்துறை ஆகியவை "இ-சானட்" இணையதளத்தில் இணைந்துள்ளன. இவ்விணையம் வழியாக 31.08.2021 வரை 14,893 சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன.*

5. இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வும், தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நலனும்

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு

-குறள் 734

முதன் முதலில் 1968-ஆம் ஆண்டு இலங்கை, பர்மா, வியட்நாம் ஆகிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்பிய தமிழ்நாட்டைப்

பூர்வீகமாகக் கொண்ட தமிழர்கள் நலன் பேணவும், வாழ்வாதார மேம்பாட்டிற்காகவும் தனியாகத் துறை உருவாக்கப்பட்டது. இந்நிலையில் 1983-ல் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாகப் பல்வேறு காலக்கட்டங்களில் 3,04,269 இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகத் தமிழ்நாட்டிற்கு வந்துள்ளனர். இதனால் தமிழ்நாட்டில் தஞ்சமடைந்த இலங்கைத் தமிழர்களுக்கான நலன், நிவாரணப் பணிகளை இத்துறை மேற்கொண்டு வருகிறது. மேலும், 2010-ஆம் ஆண்டு முதல் வெளிநாடுவாழ் தமிழர்கள் நலன் தொடர்பான பணிகளையும் மேற்கொள்ள ஆணையிடப்பட்டுச் செயல்படுத்தி வருகிறது.

தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 28.08.2021 அன்று சட்டமன்றப் பேரவையில் அறிவித்தபடி, இலங்கை அகதிகள் முகாம் என்பதை "இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்" எனப் பெயர் மாற்றம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

5.1 முகாம் வாழ் இலங்கைத் தமிழர்கள் நலன்

31.07.2021-ஆம் நாளிட்ட புள்ளி விவரங்களின்படி, 18,944 குடும்பங்களைச் சேர்ந்த 58,822 நபர்கள் மாநிலத்தில் உள்ள 29 மாவட்டங்களில் (திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள இரண்டு சிறப்பு முகாம்கள் உட்பட) 108 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஒன்றிய அரசு, மாநில அரசின் வழிகாட்டுதல்கள், நிர்ணயிக்கப்பட்ட விதிமுறைகளின்படி இருப்பிடம், குடிநீர், மின்சாரம், பல்வேறு நிவாரண உதவிகள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்கள் பாதுகாப்பான, கௌரவமான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை வாழ்வதற்கு வழி செய்யும் விதமாக ஒன்றிய அரசு வழங்கும் உதவிகளை மேம்படுத்தி தமிழ்நாடு அரசு வழங்குகின்றது. அதுமட்டுமின்றி, தமிழ்நாட்டில் உள்ள மக்களுக்கு வழங்கப்படுவது போன்று அனைத்துச் சமூக நலத் திட்டங்களையும் முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கும் விரிவுப்படுத்தியுள்ளது. இதற்கான முதல் ஆணை 20.11.2009-ல் வெளியிடப்பட்டது.

2021 செப்டம்பர் 13]

5.1.1 பணக்கொடை

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்குக் குறைந்தபட்ச வாழ்க்கை பாதுகாப்பு நிதியாக மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த பணக்கொடை, தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற பேரவை விதி எண் 110-இன் கீழ் 27.08.2021 அன்று அளிக்கப்பட்ட அறிவிப்பின் வாயிலாகக் கீழ்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், அரசுக்கு ஆண்டொன்றுக்குக் கூடுதலாக ரூ.21.49 கோடி செலவாகும்.

வ. எண்	**விவரம்**	**பழைய தொகை (ரூ.)**	**புதிதாக உயர்த்தப்பட்ட தொகை (ரூ.)**
1.	*குடும்பத் தலைவர்*	*1,000/-*	*1,500/-*
2.	*ஒவ்வொரு கூடுதல் உறுப்பினர் (12 வயது, அதற்கு மேல்)*	*750/-*	*1,000/-*
3.	*சிறியவர்கள் (12 வயதிற்கு உட்பட்டவர்கள்)*	*400/-*	*500/-*

5.1.2 துணிமணிகள்

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்குக் கோ–ஆப்டெக்ஸ் மூலம் ஒவ்வொரு வருடமும் இலவச துணிமணிகளும், இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை இலவச போர்வைகளும் வழங்கும் திட்டத்தில் ஒன்றிய அரசு நிர்ணயித்த விலையில் துணிமணிகள் வாங்கி வழங்க இயலாத நிலையில், நடப்பு ஆண்டிற்குப் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் அடிப்படையில் குடும்பம் ஒன்றிற்கு ரூ.1,790/-லிருந்து ரூ.3,473/-ஆக உயர்த்தி வழங்கப்படும் என்றும், இதற்கான கூடுதல் செலவினமாக அரசிற்கு ஆண்டொன்றுக்கு ரூ.3 கோடி செலவு ஆகும் என்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண் 110-இன் கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டது.

[2021 செப்டம்பர் 13

5.1.3 பாத்திரங்கள்

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள ரூ.250/- மதிப்பில் 8 வகையான சமையல் பாத்திரங்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இலவசமாக வழங்க இயலாத நிலையில், ரூ.1,296/- மதிப்பில் சேலம் இந்திய உருக்காலை நிறுவனம் மூலம் உயர்த்தப்பட்ட வீதத்தில் பாத்திரங்கள் வழங்கப்படும் என்றும் இதனால் அரசுக்கு ரூ.1.97 கோடி கூடுதலாகச் செலவினம் ஏற்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண் 110-இன் கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டது.

5.1.4 அரிசி மானியம்

முகாம் வாழ் இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு மாதந்தோறும் பெரியவர்களுக்கு 12 கிலோ மற்றும் 8 வயதிற்குட்பட்ட சிறியவர்களுக்கு 6 கிலோ வீதம் அரிசி வழங்கப்படுகின்றது. இதில் முதல் 20 கிலோ அரிசி இலவசமாகவும் கூடுதலான அரிசி கிலோ ஒன்றிற்கு ரூ.0.57க்கும் வழங்கப்படுகின்றது. ஏற்கெனவே வழங்கப்பட்ட அரிசிக்கான மானியத்தை இரத்து செய்து அவர்கள் பெறும் முழு அரிசி அளவும் விலையில்லாமல் வழங்கப்படும் என்றும், இதற்கான செலவுத்தொகையான ரூ.19 இலட்சத்தையும் அரசே ஏற்றுக்கொள்ளும் என்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண் 110-இன் கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டது. மேலும், சர்க்கரை, எண்ணெய் போன்ற இதர அத்தியாவசியப் பொருள்கள் மானிய விலையில் பொது விநியோகத் திட்டம் மூலம் விநியோகிக்கப்படுகின்றன.

5.1.5 விலையில்லா சமையல் எரிவாயு, அடுப்பு மற்றும் மானிய விலையில் எரிவாயு உருளை வழங்குதல்

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் மண்ணெண்ணெய் ஒதுக்கீடு மிகக்குறைந்த அளவிலேயே உள்ளது. பிரதம மந்திரி உஜ்வாலா திட்டத்தின் கீழும் இவர்களுக்கு எரிவாயு இணைப்புப் பெற இயலாத நிலை உள்ளது. எனவே, ஒவ்வொரு குடும்பத்திற்கும் விலையில்லா எரிவாயு இணைப்பு, இலவச அடுப்பு வழங்கப்படும் என்றும், இதற்காக அரசிற்கு ஒருமுறை செலவினம் ரூ.7 கோடி ஆகும் என்றும், அதனைத் தவிர குடும்பத்திற்கு 5 எரிவாயு உருளை

2021 செப்டம்பர் 13]

வீதம் ரூ.400/- மானியத் தொகை ரூ.3.8 கோடி ஆண்டுதோறும் வழங்கப்படும் என்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண் 110-இன் கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டது.

5.1.6 வீடுகள் மற்றும் அடிப்படை வசதிகள்

திண்டுக்கல் மாவட்டத்தில் தனியார் நிலங்களில் அமைக்கப்பட்டு இருந்த அடியனுத்து, தோட்டனுத்து மற்றும் கோபால்பட்டி இலங்கைத் தமிழர்கள் முகாம்களை ஒருங்கிணைத்து, கூவனுத்து கிராம அரசு நிலத்தில் 321 வீடுகளுடன் புதிய முகாம் அமைத்திட ரூ.17.17 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

கடந்த சில ஆண்டுகளாக முறையான அடிப்படை வசதிகளின்றி வாழ்ந்து வரக்கூடிய இலங்கைத் தமிழர்களுக்கு, இனி பாதுகாப்பான, கௌரவமான, மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை அமைத்துத் தருவதை உறுதிசெய்ய அவர்கள் தங்கியிருக்கும் முகாம்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என்றும், அவ்வாறு நடத்தப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில், இலங்கைத் தமிழர்களது முகாம்களில் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள 7,469 வீடுகள் ரூ.231.54 கோடி செலவில் புதிதாகக் கட்டித்தரப்படும் என்றும், இதில் முதற்கட்டமாக 3,510 புதிய வீடுகள் கட்டுவதற்கு ரூ.108.81 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும், முகாம்களில் உள்ள மின் வசதி, கழிப்பிட வசதி மற்றும் குடிநீர் வசதி போன்ற இதர அடிப்படை வசதிகளை மேம்படுத்திட ரூ.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன்கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டது.

5.1.7 இலங்கைத் தமிழர் வாழ்க்கைத் தர மேம்பாட்டு நிதி

ஆண்டுதோறும் இதர அடிப்படை வசதிகளைச் செய்து தர ஏதுவாக இலங்கைத் தமிழர் வாழ்க்கைத்தர மேம்பாட்டு நிதியாக ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற பேரவை விதி எண் 110-ன்கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டது.

[2021 செப்டம்பர் 13

5.1.8 செலவினம் மீளப்பெறுதல்

முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகளுக்கான மொத்த செலவினமும், முதலில் மாநில அரசால் செலவிடப்படுகிறது. பின்னர், மாநில தலைமை கணக்காயர் வழங்கும் தணிக்கைச் சான்றிதழின் அடிப்படையில், செலவு ஈடு செய்ய கருத்துருக்கள் ஒன்றிய அரசுக்கு அனுப்பப்படுகின்றன. 2020-2021 ஆம் நிதி ஆண்டில் மாநில அரசால் ரூ.124.61 கோடி செலவிடப்பட்டுள்ளது, இதில் ஒன்றிய அரசின் பங்கு தொகையான ரூ.67.07 கோடியில், ரூ.20 கோடி பெறப்பட்டுள்ளது. மீதத்தொகை ரூ.47.07 கோடி பெறுவதற்கான கருத்துருவும் ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.

5.1.9 கல்வி உதவித் தொகை

இலங்கைத் தமிழர் முகாம்களில் 12 ஆம் வகுப்பு வரை 11,012 மாணவர்கள் படிக்கின்றனர். இவர்களுக்கும் 12 ஆம் வகுப்பு வரை இலவசக் கல்வி திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர, தமிழ்நாட்டில் உள்ள மற்ற மாணவர்களுக்கு வழங்கப்படுவதைப் போன்று இலவச சீருடைகள், மதிய உணவு, புத்தகங்கள், இலவச பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டு வருகின்றன.

இத்துடன், மேற்படிப்பிற்காகத் தகுதியின் அடிப்படையில் இலங்கைத் தமிழ் மாணவர்கள் கலை, அறிவியல் கல்லூரிகளிலும், தொழில்நுட்பக் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் ஒற்றைச் சாளர முறையில், பொதுப்பிரிவின்கீழ்க் கலந்தாய்வில் கலந்துகொண்டு, சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், தமிழ்நாடு அரசால் நடத்தப்படும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையினர் நல விடுதிகள், தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் நல விடுதிகளில், தேவையின் அடிப்படையில் தலா 5 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களில், ஆண்டொன்றுக்குத் தோராயமாக, 750 மாணவர்கள் அரசு, பிற கல்லூரிகளில் கலை, அறிவியல், பட்டயம் உள்ளிட்ட தொழிற்படிப்புகள் படித்து வருகின்றனர். இவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன்கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டது.

2021 செப்டம்பர் 13]

வரிசை எண்	படிப்பு	கல்வி உதவித் தொகை ரூ.	தற்போது உயர்த்தப்பட்ட கல்வி உதவித் தொகை ரூ.
1.	தொழில்நுட்பப் பட்டயப் படிப்பு	2,500/-	10,000/-
2.	இளநிலை கலை, அறிவியல்	3,000/-	12,000/-
3.	இளநிலை தொழில் சார்ந்த படிப்புகள்	5,000/-	20,000/-

மேலும், பொறியியல் படிப்புப் பயிலுவதற்குத் தேர்ச்சிபெற்ற மாணவர்களில் மதிப்பெண் அடிப்படையில், முதல் 50 மாணவர்களுக்கு, அனைத்துக் கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம் ஆகியவற்றை அரசே ஏற்கும் என்றும், மேலும், வேளாண் / வேளாண் பொறியியல் பட்டப் படிப்பிலும் மதிப்பெண் அடிப்படையில் முதல் 5 மாணவர்களுக்கு மேற்சொன்ன கல்வி, விடுதிக் கட்டணங்களை அரசே ஏற்றுக் கொள்ளும் என்றும், அதுமட்டுமின்றி முதுநிலை பட்டப்படிப்புப் பயிலும் அனைத்து முகாம்வாழ் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களின் கல்வி, விடுதிக் கட்டணங்களை அரசே ஏற்றுக் கொள்ளும் என்றும், இதற்காக, ஆண்டுதோறும் ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற பேரவை விதி எண் 110-ன்கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டது.

5.1.10 சமூக மேம்பாட்டுத் திட்டங்கள்

5.1.10.1 டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித்திட்டம், முதலமைச்சரின் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்

இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

5.1.10.2 மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு பெண்கள் திருமண உதவித்திட்டம்

இலங்கைத் தமிழர்கள் குடும்பத்தைச் சேர்ந்த மகளிருக்கும் நீட்டிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

5.1.10.3 மகளிர் சுய உதவிக் குழு

தமிழ்நாட்டில் முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களில் 321 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அவர்தம் பொருளாதாரம், வாழ்க்கைத்தரம் மேலும் உயர ஏதுவாகச் சமுதாய முதலீட்டு நிதியாகத் தலா ரூ.50,000/- வழங்கப்பட்டுள்ளது.

மேலும், முகாம்களில் உள்ள 300 சுய உதவிக்குழுக்களுக்கு தொழில்கள் செய்ய ஏதுவாகச் சுழல் நிதி, சமுதாய முதலீட்டு நிதியாக, ஒவ்வொரு சுய உதவிக்குழுவுக்கும் தலா ரூ.1.25 இலட்சம் வழங்கப்படும் என்றும், அதுமட்டுமின்றி கடந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 321 சுயஉதவிக் குழுக்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்ட ரூ.50,000/- உடன் மேலும், ரூ.75,000/- வழங்கப்படும் என்றும், இதற்காக ரூ.6.16 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற பேரவை விதி எண் 110-ன்கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டது.

5.1.10.4 சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் மற்றும் துயர்துடைப்பு

மாதாந்திரப் பணக்கொடை மட்டுமில்லாமல், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு அவர்களில் மிகவும் நலிந்தோரைக் கருத்திற்கொண்டு சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் முகாம்களில் தங்கியுள்ள ஆதரவற்ற விதவைப் பெண்கள், வயது முதிர்ந்தவர்கள், மாற்றுத்திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்ட, மணமாகாத பெண்களுக்கு மாத ஓய்வூதியமாக ரூ.1,000/- வழங்கப்படுகிறது. முகாம்வாழ் இலங்கைத் தமிழர் குடும்பத்தில் இறப்பு ஏதும் ஏற்படின், அவ்வாறு இறந்த நபர்களின் குடும்பங்களுக்கு, இறுதிசடங்குகள் செய்திட ரூ.5,000/- வழங்கப்படுகிறது. மேலும், விபத்தின் காரணமாக இறப்பு ஏதும் ஏற்பட்டால், அவர்கள் குடும்பத்திற்கும் முதலமைச்சரின் இலங்கை தமிழர்களின் சிறப்பு நிவாரண நிதியிலிருந்து ரூ.50,000/- உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

5.1.11 முகாமில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு கோவிட்-19 நிவாரண உதவியாக ரூ.4,000/- வழங்குதல்

இந்த அரசு புதிதாகப் பதவியேற்ற பிறகு, தமிழ்நாடு அரசின் கோவிட் நிவாரண உதவித் தொகை ரூ.4,000/- வீதம் முகாம்களில் வசிக்கும் 18,944 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டது. இதற்காக, ரூ.7.58 கோடி செலவிடப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 13]

மேலும், 14 விதமான மளிகைப் பொருள்கள் (ரூ.465/- விலையில்) அடங்கிய பை முகாம்களில் வசிக்கும் 18,944 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கும் ரூ.88.08 இலட்சம் செலவில் அரசால் வழங்கப்பட்டுள்ளது.

5.1.12 திறன் மேம்பாட்டுப் பயிற்சி

முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், அவர்கள் தங்களது வேலைவாய்ப்புத் தகுதியினை உயர்த்திக்கொள்ளவும் வேலைவாய்ப்புடன்கூடிய திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கப்படும். இதற்காக 5,000 முகாம்வாழ் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற பேரவை விதி எண் 110-ன்கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டது.

5.1.13 சிறப்புமுகாம்

தற்போது தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி, இராமநாதபுரம் மாவட்டங்களில் தலா ஒரு சிறப்பு முகாம் உள்ளது. இம்முகாம்களில் குற்ற பின்னனி கொண்ட / விசாரணையில் உள்ள இலங்கைத் தமிழர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். 31.07.2021-இன் நிலவரப்படி 88 இலங்கைத் தமிழர்கள் வெளிநாட்டினர் சட்டம் 1946 – பிரிவு 3 (2) (இ)-ன்கீழ் சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய நடமாட்டம் சிறப்பு முகாம்களுக்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், இவர்களுக்குத் தினமும் ரூ.175/- மதிப்பில் சமைத்த உணவு அளிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

5.1.14 இலங்கைத் தமிழர்கள் சொந்த விருப்பத்தில் நாடு திரும்புதல்

தங்கள் சொந்த விருப்பத்தின் பேரில் இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விரும்பும் இலங்கைத் தமிழர்களுக்கு "வெளிச்செல் அனுமதி" தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களால் வழங்கப்படுகிறது. 2002 ஆம் ஆண்டு முதல் 31.03.2020 வரை UNHCR *உதவியுடன் 17,718 நபர்கள் இலங்கைக்குத் திரும்பியுள்ளனர்.*

5.2 முகாமிற்கு வெளியே வாழும் இலங்கைத் தமிழர்கள் நலன்

31.07.2021 அன்றைய நிலவரப்படி, 13,553 குடும்பங்களைச் சேர்ந்த 34,087 இலங்கைத் தமிழர்கள், தமிழ்நாட்டில் உள்ளூர் காவல்

[2021 செப்டம்பர் 13

நிலையங்களில் பதிவு செய்து கொண்டு முகாமிற்கு வெளியே வாழ அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

5.2.1 முகாமிற்கு வெளியே வசிக்கும் இலங்கை தமிழர்களுக்கு கோவிட்-19 சிறப்பு நிவாரண உதவியாக ரூ.4,000/- வழங்குதல்

இந்த அரசு புதிதாகப் பதவியேற்ற பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் காவல் நிலையத்தில் பதிவு செய்து வெளிப்பதிவில் வசித்து வரும் 13,553 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கும் ரூ.4,000/- வழங்கிடும் திட்டம் 19.06.2021 அன்று துவக்கி வைக்கப்பட்டது. இதற்கான செலவினம் ரூ.5.42 கோடி ஆகும்.

5.2.2 மிகைத்தங்கல் காலத்திற்கான அபராத தொகை தள்ளுபடி செய்தல்

இலங்கைத் தமிழர்களுக்கான விசா கட்டணம், மிகைத் தங்கலுக்கான அபராதத் தொகையானது ஒன்றிய அரசால் கணிசமாக உயர்த்தித் திருத்தியமைக்கப்பட்டுள்ள நிலையில், இலங்கைத் தமிழர்களில் சிலர் அதிகமான தொகை செலுத்தி மீள இலங்கைக்குத் திரும்ப இயலாத நிலை இருந்தது. சுயவிருப்பத்தின் பேரில் இலங்கைக்குத் திரும்பிச் செல்ல விருப்பம் தெரிவிக்கும் இலங்கைத் தமிழர்களின் கோரிக்கையின்மீது, விசா கட்டணம், மிகைத் தங்கலுக்கான அபராதத் தொகையினை இனம்வாரியாகத் தள்ளுபடி செய்ய மாநில அரசுக்கு ஒன்றிய அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டு, மேற்படி விசா, அபராதத் தொகைகள் தள்ளுபடி செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்கீழ் 31.07.2021-இன் நிலவரப்படி 805 குடும்பங்களைச் சார்ந்த 1,542 இலங்கைத் தமிழர்கள் பயனடைந்துள்ளனர்.

5.3 ஆலோசனைக் குழு

முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும், வெளிப்பதிவில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கும் உரிய உதவிகளை வழங்கிடவும், அடிப்படை வசதிகள் மேம்படுத்திடவும், குடியுரிமை வழங்குதல், அவர்களில் இலங்கைக்குத் திரும்புவோர்க்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்தல் போன்ற நீண்ட காலத்தீர்வினைக் கண்டறிய

2021 செப்டம்பர் 13]
ஏதுவாக மாண்புமிகு சிறுபான்மையினர் நலன், வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர், மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஒருவர், பொதுத் துறை செயலாளர், மறுவாழ்வுத் துறை இயக்குநர், பிற அரசு உயர் அலுவலர்கள், அரசு சாரா உறுப்பினர்கள், முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் பிரதிநிதி, வெளிப்பதிவில் வசிக்கும் இலங்கைத் தமிழர் பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய ஓர் ஆலோசனைக்குழு அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்ற பேரவை விதி எண் 110-இன்கீழ் 27.08.2021 அன்று அறிவிக்கப்பட்டது.

5.4 தாயகம் திரும்பியோர் மறுவாழ்வு

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த, சுமார் 4,61,639 நபர்கள் இலங்கையிலிருந்தும், 1,44,445 நபர்கள் பர்மாவிலிருந்தும், 2,055 நபர்கள் வியட்நாமிலிருந்தும் தாயகம் திரும்பியுள்ளனர். இவர்களில், பெரும்பான்மையினர் தமிழ்நாட்டிலும் மற்றவர்கள் கர்நாடகா, கேரளா, ஆந்திரா மாநிலங்களிலும் குடியமர்ந்துள்ளனர். இவர்களுக்குத் தமிழ்நாடு அரசு பல நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது.

5.4.1 பசுமை வீடுகள்

2018-2019 ஆம் ஆண்டில் ”சூரிய மின் சக்தியுடன்கூடியப் பசுமைவீடுகள்” திட்டத்தின்கீழ் கிராமபுறங்களில் 1,000 வீடுகள் கட்டுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, 840 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 160 வீடுகளில், அடித்தளம்-31, லின்டெல்-34, தளம்-60, பூச்சு வேலை-35 என்கிற பல்வேறு நிலைகளில் பணிகள் நடைபெற்றுவருகிறது.

5.4.2 அனைவருக்கும் வீடு

2019–2020 ஆம் ஆண்டில் ”அனைவருக்கும் வீடு” திட்டத்தின்கீழ் பேரூராட்சி மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் தாயகம் திரும்பியோருக்கு மொத்தம் 500 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவற்றில், 413 வீடுகள் கட்டுவதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், இதுவரை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலமாக 6 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மேலும், 103 வீடுகளில் கட்டுமானப்பணிகள் பல்வேறு நிலைகளில் (அடிதளம்-36, லின்டெல்-24,

தளம்-43) நடைபெற்று வருகின்றன. எஞ்சியுள்ள வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

5.4.3 தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி (REPCO BANK)

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டு வங்கி (REPCO BANK) இலங்கை, பர்மா, வியட்நாம், பிறநாட்டிலிருந்து தாயகம் திரும்பிய மக்களின் மறுவாழ்விற்காக ஒன்றிய அரசால் நிறுவப்பட்டு; ஒன்றிய அரசு, தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா மற்றும் கேரளா ஆகிய 5 தென்மாநில அரசுகளின் பங்கு மற்றும் தாயகம் திரும்பியோர் பங்கு ஆகியவற்றை முதலீடாகக் கொண்டு இயங்கிவருகிறது.

இந்த வங்கி முதன்முதலில் மெட்ராஸ் கூட்டுறவு சங்கங்களின் சட்டம், 53/1961-ன்கீழ் 09.09.1969 அன்று பதிவு செய்யப்பட்டது. மேலும், வங்கியின் நடவடிக்கைகள் 19.11.1969-ல், முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் துவக்கப்பட்டது. இந்த வங்கி ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகத்தின் FFR பிரிவின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ்ச் செயல்பட்டு வருகிறது. தற்பொழுது, இவ்வங்கி தென் மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளாவிலும் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலுமாக 108 கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது. 31.03.2021 வரையிலான வங்கியின் மூலதனத்தின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

வ. எண்	முதலீட்டாளர்கள்	மூலதனத் தொகை (இலட்சங்களில்)	சதவீதம்
1.	இந்திய அரசு	7632.00	49.46
2.	தமிழ்நாடு அரசு	713.00	4.62
3.	ஆந்திரப்பிரதேச அரசு	104.77	0.68
4.	தெலுங்கானா அரசு	74.88	0.49
5.	கேரள அரசு	61.16	0.40
6	கர்நாடக அரசு	17.47	0.11
7.	தாயகம் திரும்பியோர்	6827.63	44.24
	மொத்தம்	**15430.91**	**100.00**

2021 செப்டம்பர் 13]

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுமார் 1,56,000 தமிழின மக்கள் இலங்கையிலிருந்தும், சுமார் 1,44,000 தமிழின மக்கள் பர்மாவிலிருந்தும் இந்தியாவிற்குத் தாயகம் திரும்பியுள்ளனர். ஆரம்பகாலக் கட்டத்தில் அவர்கள் தேயிலை மற்றும் இரப்பர் தோட்டங்களில் மறுவாழ்விற்காகக் குடியேற்றப்பட்டனர். அவர்களுக்கு நூற்பாலைகள் மற்றும் தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பிற்கான பல திட்டங்களை இந்த வங்கியின் துணை கொண்டு தமிழ்நாடு அரசு செயல்படுத்தி உள்ளது.

தற்பொழுது, இவ்வங்கி தாயகம் திரும்பியோர்க்குக் கல்வி உதவித் தொகை, மருத்துவ உதவித் தொகை, குறைந்த வட்டியில் கடன் திட்டங்கள், ஆயுள் காப்பீட்டுத் திட்டம், இழப்பீட்டுத் தொகை (இறுதி சடங்கிற்காக), 10 மாணவர்களுக்கான உயர் கல்வி செலவு ஏற்பு, தாயகம் திரும்பிய குழந்தைகள் பயிலும் பள்ளிகளுக்குத் தண்ணீர் சுத்திகரிக்கும் இயந்திரம் வழங்குதல், பழுதடைந்த வீடுகளின் சீரமைப்பு, மாற்றுத் திறனாளிகளுக்குச் சிறப்பு இருக்கை அளித்தல் போன்ற பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இதுவரை சுமார் ஓர் இலட்சத்திற்கு மேற்பட்ட தாயகம் திரும்பியோர் இந்தத் திட்டங்களின்மூலம் பயன் பெற்றுள்ளனர். தாயகம் திரும்பியோருக்கு இந்தக் கூட்டுறவு வங்கியின்மூலம் செய்யப்பட்ட உதவித் தொகைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

வ.எண்	வருடம்	உதவித் தொகை ரூ. (இலட்சங்களில்)
1.	*2016-17*	*470.00*
2.	*2017-18*	*484.00*
3.	*2018-19*	*618.00*
4.	*2019-20*	*720.00*
5.	*2020-21*	*475.00*

5.5 வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன்

தமிழர்கள் வணிகத்தின் பொருட்டும், குடியமர்வின் பொருட்டும் தொன்றுதொட்ட காலம் முதல் அயல் நாடுகளுக்குச் சென்றுள்ளனர். வருடந்தோறும், பொருளாதார மேம்பாடு அடையும் பொருட்டு அதிக எண்ணிக்கையிலான தமிழர்கள்

[2021 செப்டம்பர் 13

வாழ்வாதாரத்திற்காகவும், பணி நிமித்தமாகவும், மேற்கல்வி காரணமாகவும் வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்து செல்கின்றனர். வெளிநாடு வாழ் தமிழர்களின் நலனுக்காக இந்த அரசானது வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்கள், ஒன்றிய அரசின் உதவியுடன்,பல்வேறு இன்னல்களால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு மருத்துவச் செலவுகள், துயரமடைந்த புலம்பெயர்ந்தோரை மீள அழைத்து வருதல் மற்றும் வெளிநாடுகளில் இறந்த தமிழர்களின் பூத உடல்களை இந்தியாவிற்குக் கொண்டு வருதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) “மாவட்ட நல அலுவலர் (வெளிநாடு வாழ் தமிழர்கள்)” ஆகவும், ஆட்சியர் அலுவலகத்தில் தலைமை மேலாளர் (குற்றவியல்) அவர்களின் பொறுப்பின்கீழ் உள்ள பிரிவானது “மாவட்ட நல மையம் (வெளிநாடு வாழ் தமிழர்கள்)” ஆகவும் செயல்பட்டு, மேற்படி பணிகளை மேற்கொண்டு வருகிறது.

5.5.1 சுழல் நிதி

வெளிநாடு வாழ் தமிழர்களின் நலனுக்காக இந்த அரசானது வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்கள், ஒன்றிய அரசின் உதவியுடன்,பல்வேறு இன்னல்களால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு, மருத்துவச் செலவுகள், துயரமடைந்த புலம்பெயர்ந்தோரை மீள அழைத்து வருதல் மற்றும் வெளிநாடுகளில் இறந்த தமிழர்களின் பூத உடல்களைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வருதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. வெளிநாடு வாழ் தமிழர்கள் நலனுக்குச் செலவிடுவதற்காகச் சுழல் நிதியாக ரூ.1 கோடி வழங்கப்பட்டுள்ளது. இச்செலவினத்தை அரசு பின்னர் ஈடு செய்கின்றது.

இத்தொகையிலிருந்து 2020-2021 ஆம் ஆண்டில், வெளிநாடுகளில் இறந்த 74 தமிழர்களின் பூத உடல்கள் கொண்டு வரப்பட்டு, இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊர்திகள்மூலம் அவர்களது சொந்த ஊர்களுக்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்காக 2020-2021 ஆம் நிதியாண்டில் ரூ.2.07 கோடி சுழல் நிதியிலிருந்து செலவிடப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 13]

5.5.2 வெளிநாடு வாழ் தமிழர் நல வாரியம் அமைத்தல்

கொரோனா தொற்றுக் காரணமாக வேலை இழந்த சுமார் 6,36,540 நபர்கள் "வந்தே பாரத்" திட்டத்தின் மூலம் விமானம் மூலமாகத் தமிழகம் திரும்பியுள்ளனர். அவர்களுக்குப் பல்வேறு நலத்திட்டங்களை உடனடியாகச் செயல்படுத்திட ஏதுவாக வெளிநாடு வாழ் தமிழர் நலச்சட்டம் 10(1)-ல் குறிப்பிட்டுள்ளவாறு "வெளிநாடு வாழ் தமிழர் நல வாரியம்" உருவாக்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்காணும் நலவாரியம் தற்சமயம் இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வு மற்றும் தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர்கள் நல ஆணையரகத்தில் ஒர் அங்கமாக இயங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

6. முன்னாள் படைவீரர்கள் நலன்

பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு

-குறள் 773

முப்படையில் பணிபுரிந்து கொண்டிருந்த வீரர்களின் பணியினைப் போற்றவும், ஓய்வுபெற்ற வீரர்களின் நலன் காக்கவும் முதன்முதலில் மெட்ராஸ் தரைப்படைவீரர் வாரியம் 1919 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டு, அதற்கான தேவைகள் முடிக்கப்பட்ட நிலையில் 1930 ஆம் ஆண்டில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. மீண்டும் 1943 ஆம் ஆண்டு அப்போதைய இந்திய அரசால் மெட்ராஸ் மாகாண தரைப்படை, கப்பற்படை, விமானப்படை வாரியங்கள் புனரமைக்கப்பட்டபோது மெட்ராஸ் தரைப்படை வீரர் வாரியமும் புனரமைக்கப்பட்டது.

1956 ஆம் ஆண்டில் மெட்ராஸ் மாநில தரைப்படை, கப்பற்படை, விமானப்படை வீரர்கள் வாரியம் எனவும், பின்னர் 1969 ஆம் ஆண்டில் "தமிழ்நாடு மாநில முப்படை வீரர்கள் வாரியம்" எனவும் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இவ்வாரியம், மாண்புமிகு ஆளுநர் அவர்களைப் புரவலராகவும், மாண்புமிகு முன்னாள் படைவீரர் நல அமைச்சர் அவர்களைத் தலைவராகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது.

1974 ல் தமிழ்நாடு முப்படை வீரர்கள் வாரியம் மற்றும் மெட்ராஸ் தொகுப்பு நிதி அலுவலகம் ஆகியவை

[2021 செப்டம்பர் 13

ஒருங்கிணைக்கப்பட்டு முன்னாள் படைவீரர் நல இயக்குநரகம் உருவாக்கப்பட்டுச் சமூக நலத் துறையின் நிருவாகக் கட்டுபாட்டின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. 1976-ல் முன்னாள் படைவீரர் நல இயக்குநரகம் பொதுத் துறையின் நிருவாகக் கட்டுபாட்டின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. இத்துறையின் நிருவாகச் செலவுகள் ஒன்றிய, மாநில அரசுகளால் 60:40 என்ற பங்கீட்டு விகிதத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்திய இராணுவத்திற்கு இளைஞர்களை அனுப்புவதில் தமிழ்நாடு பெருமளவில் பங்களித்து வருகிறது. முன்னாள் படைவீரர்கள், படைப்பணி புரிவோர் மற்றும் படைப்பணியில் இறந்தோர் ஆகியோரின் குடும்பத்தினருக்கு உதவிடும் வகையில் அரசு வகுக்கும் கொள்கைகளையும், திட்டங்களையும் முன்னாள் படைவீரர் நல இயக்ககம் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த சுமார் 2,500 படைவீரர்கள் ஒவ்வொரு ஆண்டும் படைப்பணியிலிருந்து ஓய்வு பெறுகின்றனர். முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தில் 1,27,654 முன்னாள் படைவீரர்கள் மற்றும் 55,570 கைம்பெண்கள் என மொத்தம் 1,83,224 நபர்கள் பதிவு செய்துள்ளனர். முன்னாள் படைவீரர்கள், அவர்களைச் சார்ந்தோரின் தேவைகளும், கோரிக்கைகளும் 30 மாவட்ட அலுவலகங்கள்மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

6.1 முன்னாள் படைவீரர் நலத் துறையின் முக்கியத் திட்டங்கள்/ நிதியுதவி கீழ்வருமாறு:-

(1)	தமிழ்நாடு அரசுத் திட்டங்கள்/ நிதியுதவிகள்
(2)	துறை சார்ந்த திட்டங்கள்/ நிதியுதவிகள்
	➢ கொடிநாள் நிதி ➢ தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி ➢ தொகுப்பு நிதி

6.2 தமிழ்நாடு அரசுத் திட்டங்கள் / நிதியுதவிகள்

6.2.1 வீரதீர செயல்களுக்கான விருது, போற்றத்தக்க பணிக்கான பதக்கம் பெற்றவர்களுக்கான பண முடிப்பு

வீரதீர செயல்களுக்கான வீர பதக்கங்கள், போற்றத்தக்க பணிபுரிந்தமைக்கான பதக்கங்களைப் பெற்றவர்களுக்கு அரசால்

2021 செப்டம்பர் 13]

பணமுடிப்பு வழங்கப்படுகிறது. 2021-2022 ஆம் நிதியாண்டில் முதல் நான்கு மாத காலத்தில், வீரப்பதக்கம், போற்றத்தக்க பணிக்காகப் பதக்கம் பெற்ற 2 வீரர்களுக்கு ரூ.2 இலட்சம் பணமுடிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் பிராந்திய இராணுவத்தில் பதக்கம் பெற்றவர்களில் ஒரு வீரருக்கு ரூ.4,000/-என 8 வீரர்களுக்கு மொத்தம் ரூ.32,000/- வழங்கப்பட்டுள்ளது.

6.2.2 போரில் உயிர் நீத்தோருக்கான கருணைத் தொகை

போர், சிவில் நிருவாகத்திற்கு உதவிடும் நடவடிக்கையின் போது உயிரிழந்த/ஊனமுற்ற படைவீரர்களின் தியாகத்தைப் போற்றும் வகையிலும், அவர்தம் குடும்பத்தினரின் துயர் நீக்கிடும் வகையிலும் ரூ.20 இலட்சம் வரை கருணைத் தொகை அரசால் வழங்கப்படுகிறது. மேலும், கருணைத் தொகை தமிழ்நாட்டைச் சேர்ந்த துணை இராணுவப்படையினருக்கும் வழங்கப்பட்டு வருகிறது. உயிரிழந்த படைவீரர்களின் வாரிசுதாரர் ஒருவருக்கு ரூ.20 இலட்சம் வீதம் மொத்தம் 4 வாரிசுதாரர்களுக்கு ரூ.80 இலட்சம், 2021-2022 ஆம் நிதியாண்டில் முதல் நான்கு மாத காலத்தில் வழங்கப்பட்டுள்ளது.

6.2.3 கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு

படைப்பணியில் உயிர்நீத்தோர், போர், போரையொத்த நடவடிக்கைகளில் உயிரிழந்தவர்தம் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படுகிறது. 2021-2022 ஆம் நிதியாண்டில் முதல் நான்கு மாத காலத்தில் 6 நபர்களுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

6.2.4 போர்ப் பணி ஊக்க மானியம்

தமது ஒரே மகன்/மகளைப் படைப்பணிக்கு அனுப்பிய பெற்றோர்களைக் கௌரவிக்கும் வகையில் ஒரு முறை மட்டும் ரூ.20,000/- மற்றும் வெள்ளிப் பதக்கமும், ஒன்றுக்கு மேற்பட்ட மகன் / மகளைப் படைப்பணிக்கு அனுப்பிய பெற்றோருக்கு ஒரு முறை மட்டும் ரூ.25,000/- தொகையுடன் வெள்ளிப் பதக்கமும் வழங்கப்படுகிறது.

6.2.5 மறு வேலைவாய்ப்பு அளித்தல்

முன்னாள் படைவீரர்கள் பெரும்பாலும் அவர்தம் இளம் வயதில் பல ஆண்டுகள் திறமையான பணிக்காலத்தினை மீதமாகக்

TRUTH ALONE TRIUMPHS

[2021 செப்டம்பர் 13

கொண்டு படைப் பணியிலிருந்து விலகுவதால், அவர்களுக்கு மறு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், தமிழ்நாடு அரசிலும், அரசுச் சார்ந்த துறைகளில் வழங்கப்படும் இட ஒதுக்கீடுகள் பின்வருமாறு:-

வ. எண்	விவரம்	இட ஒதுக்கீடு சதவீதம்
1.	பிரிவு "சி" பணியிடங்கள்	5
2.	அரசிலும், அரசுச் சார்ந்த நிறுவனங்களில் அடிப்படைப் பணியாளர்கள் பணியிடங்கள்	10
3.	வனக்காவலர் பணியிடங்கள்	10
4.	வனப்பாதுகாவலர் பணியிடங்கள்	5
5.	தேசிய மாணவர் படை அலுவலகங்களில் இலஸ்கர், ஓட்டுநர், இரவுக் காவலர்கள் பணியிடங்கள்	25
6.	சீருடைப் பணிப் பிரிவில் பிரிவு "சி" பணியிடங்கள்	5
7.	கால்நடை ஆய்வாளர்	5

2021-2022 ஆம் நிதியாண்டில் முதல் நான்கு மாத காலத்தில், அரசு / அரசு சார்ந்த / வங்கிகள் மற்றும் தனியார் நிறுவனங்களில் "சி" பிரிவில் 19 நபர்களும், "டி" பிரிவில் 8 நபர்களும் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

6.2.6 இராணுவப் பணியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் தொகுப்பு மானியம்

தமிழ்நாட்டிலிருந்து இராணுவப் பணியில் சேரும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளை ஊக்குவிக்கவும், இராணுவப் பணிப் பயிற்சி காலத்தின்போது ஏற்படும் செலவினங்களை எதிர்கொள்ள தொகுப்பு மானியம் (Lumpsum Grant) கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது:-

2021 செப்டம்பர் 13]

வ. எண்	விவரம்	தொகை ரூ.
1.	முப்படையில் நிரந்தர படைத்துறை அலுவலர் (Permanent Commissioned Officers) பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் (NDA / IMA / Naval / Air Force Academy) முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு	1,00,000/-
2.	முப்படையில் குறுகியகாலப் படைத்துறை அலுவலர் (Short Service Commissioned Officers) பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு	50,000/-
3.	இராணுவத்தில் இளநிலை படை அலுவலர்கள், இதர பதவிகளின் (Junior Commissioned Officer and Other Ranks) பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் முன்னாள் படைவீரர்களின் பிள்ளைகளுக்கு	25,000/-

2021-2022 ஆம் நிதியாண்டில் முதல் நான்கு மாத காலத்தில், 6 முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு ரூ.3.25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

6.2.7 பதினைந்து ஆண்டு கால இராணுவப் பணியினைப் பட்டதாரி கல்விக்கு இணையாகக் கருதுதல்

பத்தாம் வகுப்புத் தேர்ச்சிப் பெற்று இராணுவத்தில் பதினைந்து ஆண்டு காலம் பணியாற்றிய முன்னாள் படைவீரர்கள் மறுவேலை வாய்ப்பிற்கு சிவில் பிரிவில் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டப்படிப்பிற்கு நிகரான பட்டமாகக் கருதிட தமிழ்நாடு அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

இவ்வாணையினால் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், அரசு நிறுவனங்களில் பட்டப்படிப்புத் தகுதிகளுக்கான "சி" பிரிவு பணியிடங்களுக்கு முன்னாள் படைவீரர்களைத் தேர்வு செய்ய வழிவகை செய்கிறது.

6.2.8 இரு குடும்ப ஓய்வூதியம்

இராணுவத்தில் பணியாற்றி ஓய்வுபெற்று மறு வேலைவாய்ப்பின்மூலம் தமிழ்நாடு அரசில் சிவில் பணியாற்றிய

[2021 செப்டம்பர் 13

முன்னாள் படைவீரரின் வாரிசுதாரருக்கு, இராணுவக் குடும்ப ஓய்வூதியத்துடன் சிவில் பணிக்கான குடும்ப ஓய்வூதியமும் சேர்த்து இரு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இரு குடும்ப ஓய்வூதியம் தொடர்பான 129 விண்ணப்பங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றில் 99 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

6.2.9 கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு

பல்வேறு கல்வி நிலையங்களில் உயர் கல்விக்கு (மருத்துவ / பொறியியல் உட்பட) முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

வ. எண்	கல்வி பாடப்பிரிவு	இட ஒதுக்கீடு எண்ணிக்கை	குறிப்பு
1.	பொறியியல் (அண்ணா பல்கலைக்கழகம் –பொது)	150	
2.	பொறியியல் (அண்ணா பல்கலைக்கழகம் – Lateral Entry)	15	
3.	மருத்துவம்	10	
4.	பல் மருத்துவம்	1	
5.	பி.எஸ்சி., (செவிலியர்)	4	
6.	செவிலியர் பட்டயப் படிப்பு	60	
7.	ஆசிரியர் பயிற்சி	132	ஒவ்வொரு பயிலகத்திலும் 3 இடங்கள்
8.	ஆசிரியர் (இளங்கலை) படிப்பு	-	ஒவ்வொரு அரசுக் கல்லூரியிலும், அரசு உதவி பெறும் கல்லூரியிலும்- 1 இடம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 13]

வ. எண்	கல்வி பாடப்பிரிவு	இட ஒதுக்கீடு எண்ணிக்கை	குறிப்பு
9.	பி.எஸ்சி., (விவசாயம்)	6	
10.	பொறியியல் (விவசாயம்)	1	
11.	பி.எஸ்சி., (தோட்டக்கலை)	-	ஒவ்வொரு அரசு தொழில்நுட்பப் பயிலகத்திலும் தலா 1 இடம்
12.	தொழில் நுட்பப்பட்டயப் படிப்பு	80	
13.	தொழில் பயிற்சிப் பயிலகம் (ITI)	-	ஒவ்வொரு அரசு பயிலகத்திலும் தலா 5 இடங்கள்
14.	இளங்கலை சட்டப் படிப்பு (3 / 5 ஆண்டுகள்)	1 சதவீதம்	
15.	இளங்கலை பி.ஏ., / பி.எல்., (Hons)	1 சதவீதம்	
16.	இளங்கலை பட்டப் படிப்பு	-	ஒவ்வொரு கல்லூரியிலும் 6 இடங்கள்

6.2.10 கோயில் பாதுகாப்புப் படை

தமிழக கோயில்களிலுள்ள சிலைகள், நகைகள், உண்டியல் சேகரிப்புகள் மற்றும் விலையுயர்ந்த பொருள்களைப் பாதுகாப்பதற்காகக் கோயில் பாதுகாப்புப் படை நிறுவப்பட்டு, மாதந்தோறும் ரூ.7,300/- தொகுப்பூதியத்தில் 974 முன்னாள் படைவீரர்கள் கோயில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

6.2.11 தேர்தல் பாதுகாப்புப் பணி

நாடாளுமன்றம் / சட்டமன்றம் / உள்ளாட்சி மன்றத் தேர்தல்களின் போது பாதுகாப்புப் பணியில் இருக்கும் காவல்

துறையினருக்கு உதவிடும் வகையில் முன்னாள் படைவீரர்கள் தேர்தல் பாதுகாப்புப் பணிகளில் பயன்படுத்தப்படுகின்றனர். இவ்வகையில் சுமார் 10,000 முன்னாள் படைவீரர்கள் ஒவ்வொரு தேர்தலின்போதும் மதிப்பூதியம் அடிப்படையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

6.2.12 கோவிட்-19 பாதுகாப்புப் பணி

கோவிட்-19 பாதுகாப்புப் பணிக்காக 2,537 முன்னாள் படைவீரர்கள் சிறப்பு நேர்வாக மதிப்பூதியம் அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

6.3 கொடிநாள் நிதி

இந்நிதி மாண்புமிகு ஆளுநர் அவர்களைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு கொடிநாள் நிலைக் குழுவினால் நிருவகிக்கப்படுகிறது. மாண்புமிகு முன்னாள் படைவீரர் நல அமைச்சர் அவர்கள் இக்குழுவின் துணைத்தலைவர் ஆவார்.

முன்னாள் படைவீரர்களுக்கு, திருமணம், தொழில், குடியிருப்பு, மருத்துவம் தொடர்பான மானியங்கள், சிறார்களுக்கான கல்வி மேம்பாட்டு நிதியுதவி, பயிற்சித் திட்டங்களுக்கு நிதி வழங்குதல் ஆகியவற்றை நிறைவேற்றிட கொடிநாள் நிதி திரட்டப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 7-ம் நாள் முதல் அதற்கடுத்த ஆண்டின் டிசம்பர் 6-ம் நாள்வரை கொடி நாள் நிதி வசூல் செய்யப்படுகிறது. கொடிநாள் நிதி வசூல்மூலம் பெறப்படும் நிதியானது, தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி, தொகுப்பு நிதி ஆகிய இரு நல நிதிகள்மூலம் முன்னாள் படைவீரர்களுக்கும், அவர்களைச் சார்ந்தோருக்கான நல திட்ட உதவிகளைச் செயல்படுத்த பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

கொடிநாள் வசூல் நிதி இலக்கின் 5% தொகுப்பு நிதிக்கும், எஞ்சிய வசூல் தொகை தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதிக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. 2020-2021 ஆம் ஆண்டில் 31.07.2021 வரை ரூ. 14.68 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

படைவீரர் கொடி நாள் நிதிக்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு, வருமான வரிச் சட்டம், 1961-ன் பிரிவு எண் 80G (5) (Vi)-ன்கீழ் வருமான வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 13]

முன்னாள் படைவீரர்களுக்கான நலத்திட்டங்கள், சலுகைகள் பற்றிய விரிவான விவரங்களை உள்ளடக்கிய கொடிநாள் மலர் தமிழ், ஆங்கில மொழிகளில் ஆண்டுதோறும் வெளியிடப்பட்டு வருகிறது.

2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மக்கள் தொகை 6,76,98,000 ஆகும். மத்திய முப்படை வாரியத்தின் கடித எண் 532 (5) கே.எஸ்.பி/டி, நாள்.02.03.2021-ன்படி குடிமகனுக்கு ஒரு காசு வீதம் கணக்கீடு செய்து ஒன்றிய அரசின் பங்குத் தொகையாக 2017 முதல் 2020 வரையில் ஆண்டுக்கு ரூ.6,76,980/- வீதம் நான்கு ஆண்டுகளுக்கு ரூ.27,07,920/- மத்திய முப்படை வாரியத்திற்குச் செலுத்தப்பட்டுள்ளது.

6.4 தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதி

மாண்புமிகு முன்னாள் படைவீரர் நல அமைச்சர் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு முப்படைவீரர் வாரியம் செயல்படுகிறது. இவ்வாரியத்தில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் புரவலர் ஆவார். மேலும், அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் துணைத்தலைவர் ஆவார். ஒன்றிய / மாநில அரசுத் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

முன்னாள் படைவீரர் நலத் துறையின் இயக்குநர் அவர்களைத் தலைவராகக் கொண்டு தமிழ்நாடு முப்படைவீரர் வாரியத்தின் உட்குழுவான தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதிக் குழு செயல்படுகிறது.

கொடிநாள் வசூல் இலக்கின் 5% தொகுப்பு நிதிக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது போக, வசூலிக்கும் மீதத் தொகை, வைப்பு நிதியின் வட்டி, சொத்துகளிலிருந்து பெறப்படும் உரிமக் கட்டணம் ஆகியவை இந்நிதியின் நிதி ஆதாரமாகும்.

முன்னாள் படைவீரர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் இரண்டாம் உலகப்போர் நிதியுதவி, ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி, பல்வேறு வகையிலான மருத்துவ நிதியுதவிகள், திருமண நிதியுதவி, செயற்கை உபகரணங்களுக்கான நிதியுதவி, ஈமச்சடங்கு

நிதியுதவிகள் போன்றவை தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றன.

6.4.1 தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்படும் பல்வேறு நிதியுதவிகள் பின்வருமாறு:-

வ. எண்	நிதியுதவியின் பெயர்	தொகை ரூ.
அ) மாதாந்திர நிதியுதவி		
1.	இரண்டாம் உலகப்போர் (முன்னாள் படைவீரர்) நிதியுதவி	10,000/-
2.	உலகப்போர் (கைம்பெண்கள்) நிதியுதவி	4,000/-
3.	முதியோர் நிதியுதவி	4,000/-
4.	தொழுநோய் /காசநோயாளிகளுக்கான நிவாரணம் / மாற்றுத் திறனாளிகளுக்கான நிவாரணம்	5,000/-
5.	பக்கவாத நிவாரணம் / பார்வையற்றோருக்கான நிவாரணம்/புற்றுநோய் நிவாரணம்/மனவளர்ச்சிக் குன்றியச் சிறார்களுக்கான நிவாரணம், மனநோய் கொண்ட முன்னாள் படைவீரரின் மனைவி, கைம்பெண்களுக்கான நிவாரணம்	7,000/-
ஆ) இதர நிதி உதவிகள்		
1.	திருமண மானியம் (இரண்டு மகள்கள்)	25,000/-
2.	ஈமச்சடங்கு மானியம் (முன்னாள் படைவீரர்களுக்கு)	10,000/-
3	ஈமச்சடங்கு மானியம் (கைம்பெண்கள்)	7,000/-

இரண்டாம் உலகப் போர் முன்னாள் படைவீரர்களுக்கு வழங்கப்படும் ஆயுட்கால மாதாந்திர நிதியுதவி 2021-2022 ஆம் நிதியாண்டில் முதல் நான்கு மாத காலத்தில், 91 முன்னாள் படைவீரர்களுக்கும், 2,555 கைம்பெண்களுக்கும் என 2,646 பயனாளிகளுக்கு மொத்தம் ரூ.5.28 கோடி இந்நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 2021-2022 ஆம் நிதியாண்டில் முதல் நான்கு

2021 செப்டம்பர் 13]

மாத காலத்தில், 6,483 முன்னாள் படைவீரர்களுக்கும், அவர்களைச் சார்ந்தோருக்கும் இந்நிதியிலிருந்து பல்வேறு நிதியுதவியும் மானியங்களும் மொத்தம் ரூ.12.20 கோடி வழங்கப்பட்டுள்ளது.

6.4.2 இராணுவ ஆட்சேர்ப்பு முகாம்

இராணுவ ஆட்சேர்ப்பு முகாமிற்கு மாவட்ட நிருவாகம் மூலம் மேற்கொள்ளப்படும் செலவினத்திற்காக ஒரு முகாமிற்கு ரூ.6 இலட்சம் வீதம் ஆண்டிற்கு ஐந்து முகாம்களுக்கு ரூ.30 இலட்சம் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

6.4.3 முன்னாள் படைவீரர், அவர்களைச் சார்ந்தோரில் மகளிருக்கான திறன்மேம்பாட்டுப் பயிற்சி

முன்னாள் படைவீரர், அவர்களைச் சார்ந்தோருக்குத் தையற்பயிற்சி அளிப்பதற்காக வேலூர், கிருஷ்ணகிரி மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களில் தையல் அலகு செயல்பட்டு வருகிறது. இத்தையல் அலகுகளில் முன்னாள் படைவீரர்கள் அவர்தம் குடும்பங்களைச் சார்ந்த படைவீரர்களின் கைம்பெண்கள்/மனைவி/திருமணமாகாத மகள்/ திருமணமாகாத சகோதரிகள்/கைம்பெண் மகள்/விவாகரத்தான மகள்/ விவாகரத்தான சகோதரிகள் ஆகியோருக்கு ஆறு மாத காலத் தையற் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சிப் பெறுபவர்களுக்குப் பயிற்சி உதவித் தொகை நாளொன்றுக்கு ரூ.50/-ம், கச்சாப் பொருள் வழங்குவதற்கு மாதம் ரூ.1,000/-ம் வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சி முடித்தவர்களுக்கு ஒரு விலையில்லா தையல் இயந்திரமும் வழங்கப்பட்டு வருகிறது.

6.4.4 தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பயிற்சியில் தேர்ச்சிப் பெறுபவர்களுக்கான உதவித்தொகை

முன்னாள் படைவீரர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் தட்டச்சு, சுருக்கெழுத்துப் போன்ற தொழில்நுட்பப் பயிற்சியில் தேர்ச்சிப் பெறுபவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் உதவித் தொகை குறித்த விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	விவரம்	தொகை ரூ.
1.	*தமிழ், ஆங்கிலம் தட்டச்சு (கீழ்நிலை)*	*3,000/-*
2.	*தமிழ், ஆங்கிலம் தட்டச்சு (மேல்நிலை)*	*5,000/-*

3.	தமிழ், ஆங்கிலம் சுருக்கெழுத்து, தட்டச்சு (கீழ்நிலை)	7,000/-
4.	தமிழ், ஆங்கிலம் சுருக்கெழுத்து, தட்டச்சு (மேல்நிலை)	10,000/-

6.4.5 வீடு கட்டும் மானியம்

முன்னாள் படைவீரர்கள், அவர்தம் கைம்பெண்கள் (அவில்தார் படைத்தரம் வரையில்) வீடு கட்டுவதற்கு / வாங்குவதற்குப் பெறும் கடன் தொகைக்கு ரூ.1 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

6.4.6 படைவீரர் மாளிகை/முன்னாள் படைவீரர் மையம்/ முன்னாள் படைவீரர் நல இயக்கக வளாகம்

நலத் திட்டங்களுக்கான நிதிகளைத் திரட்டும் வகையில், படைவீரர் மாளிகை-10, முன்னாள் படைவீரர் மையம்-20 மற்றும் முன்னாள் படைவீரர் நல இயக்கக வளாகம்-1 ஆகியவை முன்னாள் படைவீரர் நல நிதியிலிருந்து கட்டப்பட்டுள்ளன. இதன்மூலம் கிடைக்கும் வருவாய், நல நிதியில் சேர்க்கப்படுகிறது. 2021-2022-ஆம் நிதியாண்டில் முதல் நான்கு மாத காலத்தில், இச்சொத்துகள் மூலம் ரூ.72,43,084/- வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

6.4.7 மின் ஆளுமைத் திட்டம்

முன்னாள் படைவீரர் நலத் துறையில் தேசியத் தகவல் மையத்தின்மூலம் மின் ஆளுமைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. முன்னாள் படைவீரர்கள், அவர்தம் குடும்பத்தைச் சார்ந்த கைம்பெண்களின் அனைத்து ஆவணங்களும் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு மின்னணுவியல் கழகம் மூலமாக ஒப்பந்த அடிப்படையில் ஒரு பணியாளர் நியமனம் செய்யப்பட்டு மின் ஆளுமையில் மாவட்ட அலுவலகங்களிலிருந்து பெறப்படும் குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ்க் கணினியில் நேரடியாகப் பதிவு செய்தல், அடையாள அட்டை வழங்குதல், முன்னாள் படைவீரர்களின் சிறார்கள் கல்லூரியில் சேர்வதற்கான சார்ந்தோர் சான்று வழங்கல், முன்னாள் படைவீரர்களின் வேலைவாய்ப்பிற்கான பதிவுகள் மின் ஆளுமைமூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2021 செப்டம்பர் 13]

6.5 தொகுப்பு நிதி

தொகுப்பு நிதி மாண்புமிகு ஆளுநர் அவர்களைத் தலைமையாகக் கொண்ட மாநில மேலாண்மைக் குழுவால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு முன்னாள் படைவீரர் நல அமைச்சர், அரசு தலைமைச் செயலாளர், தென்மண்டல இராணுவத் தளபதி ஆகியோர் இக்குழுவின் துணைத் தலைவர் ஆவார்கள். இந்நிதியின் நிலையான உட்குழு அரசு தலைமைச் செயலாளர் அவர்களைத் தலைவராகக் கொண்டு செயல்படுகிறது. கொடிநாள் நிதி இலக்கின் 5% மற்றும் வைப்பு நிதியின் வைப்புத் தொகையின் வட்டி ஆகியவை இந்நிதியின் நிதி ஆதாரம் ஆகும்.

இந்நிதியிலிருந்து போரில் உயிர் நீத்தோர் குடும்பத்தினர் மற்றும் போரில் ஊனமுற்ற முன்னாள் படைவீரர்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதுடன் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ்ப் பெறும் வங்கி கடன்களுக்கு வட்டி மானியமும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கான கல்வி மானியம் ரூ.500/- முதல் ரூ.25,000/- வரை பள்ளிக் கல்வியிலிருந்து முதுகலைக் கல்வி, தொழில்நுட்பக் கல்விக்கும் வழங்கப்படுகிறது. 2021-2022 ஆம் நிதியாண்டில் முதல் நான்கு மாத காலத்தில், 2,197 முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு இந்நிதியிலிருந்து ரூ.4.02 கோடி நிதியுதவிகள்/மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

6.5.1 சுய வேலை வாய்ப்புத் திட்டங்கள்

முன்னாள் படைவீரர்கள் பயனடையும் வகையில் சுயவேலைவாய்ப்பினை அதிகரித்திட அரசு முனைப்பாக உள்ளது. சுய வேலைவாய்ப்பிற்காகப் பெறப்படும் ரூ.10 இலட்சம் வரையிலான வங்கி கடன்களுக்கு 75% வட்டி மானியமும், சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.15 இலட்சம் வரையிலான வங்கிக் கடன்களுக்கு 100% வட்டி மானியமும் தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. 2021-2022 ஆம் நிதியாண்டில் முதல் நான்கு மாத காலத்தில், இத்திட்டங்களின்மூலம் 221 முன்னாள் படைவீரர்களுக்கும், 4 சுய உதவிக் குழுக்களுக்கும் ரூ.20,37,150/- மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

6.5.2 தொகுப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் பல்வேறு நிதியுதவிகள் பின்வருமாறு:-

வ. எண்	நிதியுதவியின் பெயர்	தொகை ரூ.
1.	போரில் வீர மரணம் அடைந்தோரின் வாரிசுதாரர்களுக்குக் கருணைத் தொகை	1,00,000/-
2.	போரில் ஊனமுற்றோருக்குக் கருணைத் தொகை	50,000/-
3.	போரில் வீர மரணம் அடைந்தோர், 50%-க்கு மேல் ஊனமுற்றோரின் மகள்களுக்குத் திருமண நிதியுதவி	1,00,000/-, 8 கிராம் தங்கம்
4.	போரில் 50%-க்குகீழ் ஊனமுற்றோரின் மகள்களுக்குத் திருமண நிதியுதவி	50,000/- , 8 கிராம் தங்கம்
5.	கல்வி உதவித் தொகை (பள்ளி கல்வி முதல் தொழிற்கல்வி வரையில்)	500/- முதல் 25,000/- வரை
6.	போரில் வீர மரணம் அடைந்தோர்/ ஊனமுற்றோருக்கு வீடு கட்ட மானியம்	50,000/-

7. தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ)

தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும் வகையில் தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் (டெக்ஸ்கோ), 1956 ஆம் ஆண்டின் நிறுவன (கம்பெனிகள்) சட்டத்தின்படி 28.01.1986 அன்று பதிவு செய்யப்பட்டு நிறுவப்பட்டது. இக்கழகமானது, முன்னாள் படைவீரர் நல இயக்ககத்தில் வேலைவாய்ப்பிற்காகப் பதிவு செய்துள்ள முன்னாள் படைவீரர்களைப் பல்வேறு ஒன்றிய, மாநில அரசு அலுவலகங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், ஏனைய வாரியங்களில் பாதுகாப்புப் பணியாளர்கள், ஓட்டுநர்கள், எழுத்தர்கள், தொலைபேசி இயக்குபவர், சுற்றுலாக் காவலர்கள், செவிலிய உதவியாளர்கள், தீயணைப்பாளர்கள், துப்பாக்கி ஏந்திய பாதுகாவலர்கள், காப்பாளர்கள் நிலையில் பணியமர்த்தக் கோரும் பணியிடங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தி மறுவேலைவாய்ப்பு வழங்கும் “மனித வள முகமையாக” செயல்பட்டு வருகிறது.

2021 செப்டம்பர் 13]

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின்மூலம், ஒன்றிய, மாநில அரசுத் துறைகள், ஏனையப் பொதுத் துறை நிறுவனங்கள், வாரியங்களில் 31.07.2021 நிலவரப்படி 6,429 பாதுகாவலர்கள், 932 ஓட்டுநர்கள், 21 எழுத்தர்கள், 15 தொலைபேசி இயக்குபவர்கள், 44 துப்பாக்கி ஏந்தியக் காவலர்கள், 8 செவிலியர் உதவியாளர்கள் ஆக மொத்தம் 7,449 முன்னாள் படைவீரர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இதில் 1,329 முன்னாள் படைவீரர்கள் ஒன்றியப் புனரமைப்புத் தலைவர் ஊதிய விகிதத்திலும் (14% சேவை கட்டணம்), 6,120 முன்னாள் படைவீரர்கள் தமிழ்நாடு குறும ஊதிய விகிதத்திலும் (12% சேவை கட்டணம்), பணியமர்த்தப்பட்டுள்ளனர். இது தற்சார்பு பெற்ற இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனமாகும்.

தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மானக் கழகம், கோரியதன் அடிப்படையில் "மின் திருட்டுத்தடுக்கும் படை" அமைக்கப்பட்டுத் தனித்திறன் வாய்ந்த 215 முன்னாள் அவில்தார்கள், முன்னாள் இளநிலை படைப்பணி அலுவலர்கள் நிலையில் பணியமர்த்தப்பட்டு, ரூ.204.52 கோடி அளவிற்கு மின் திருட்டுத் தடுக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, தமிழ்நாடு சுற்றுலாத் துறை கோரியதற்கிணங்க "சுற்றுலா பாதுகாப்புப் படை" அமைக்கப்பட்டு 31 சிறப்புத் தகுதி பெற்ற முன்னாள் படைவீரர்கள் தமிழ்நாட்டிலுள்ள இராமேஸ்வரம், உதகமண்டலம், மாமல்லபுரம், கன்னியாகுமரி, கொடைக்கானல் ஆகிய ஐந்து முக்கியச் சுற்றுலா தளங்களில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்திற்கு ரூ.19.19 கோடி செலவில் 760.16 சதுர மீட்டர் பரப்பளவில் நிலம் வாங்கப்பட்டு, 15,708.98 சதுர அடியில் புதிய அலுவலகக் கட்டடம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின்மூலம் கட்டப்பட்டு வருகிறது.

7.1 இதர நலத்திட்டங்கள்

முன்னாள் படைவீரர்களின் நலன் கருதி தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகம் கீழ்க்காணும் நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

- *4,848 முன்னாள் படைவீரர்களுக்கு ரூ. 69 இலட்சம் செலவில் தனித்திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.*

- *"விபத்துக் காப்பீட்டுத் திட்டம்" தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் பணியமர்த்தப்பட்ட அனைத்துப் பணியாளர்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டு, இறந்தவரின் வாரிசுதாரர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் ரூ.3 இலட்சம் வழங்கப்படுகிறது.*

- *"தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழக நல நிதித் திட்டம்" தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் முன்னாள் படைவீரர்களுக்காக ஆண்டுக்குத் தோராயமாக ரூ.2.76 கோடியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

- *"முழு உடல் பரிசோதனை திட்டம்" தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் அனைத்துப் பணியாளர்களுக்கும் தலா ரூ.3,000/- தொகுப்பின்கீழ் அரசு மருத்துவமனைமூலம் முழு உடல் பரிசோதனை செய்யும் வகையில் தொடங்கப்பட்டுள்ளது. 31.07.2021 வரை, 1,987 முன்னாள் படைவீரர்கள் இத்திட்டத்தின்கீழ்ப் பயனடைந்துள்ளனர்.*

8. மாநில மனித உரிமைகள் ஆணையம்

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்

-குறள்-972

1993 ஆம் ஆண்டின் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காகத் தமிழ்நாட்டில் மாநில மனித உரிமைகள் ஆணையம், 1997 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டு மாண்புமிகு தலைவர், மாண்புமிகு உறுப்பினர்கள் இருவரையும் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்த ஆணையம் துவங்கப்பட்ட முதல் ஆண்டில் 2,162 புகார் மனுக்கள் பெறப்பட்டன. அடுத்தடுத்த ஆண்டுகளில் புகார் மனுக்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து, 2020 ஆம் ஆண்டில் மட்டும் 11,998 புகார்கள் பெறப்பட்டுள்ளன. பொது மக்களிடம் மனித உரிமைகள் குறித்து ஏற்பட்டுள்ள விழிப்புணர்வே இதற்குக் காரணமாக அமைந்துள்ளது. 1997 ஆம் ஆண்டு துவங்கி, 2021-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் வரை, 2,22,674 புகார்கள் பெறப்பட்டு, அவற்றில் 1,94,453 புகார்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 13]

இவ்வாணையத்தின் நோக்கம், செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் நோக்கத்தோடு, சட்டம், உளவியல், குற்றவியல் மற்றும் மனித உரிமைகள் குறித்த கல்வி, பாடங்கள் பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு, தமிழ்நாடு மாநில மனித உரிமைகள் ஆணையத்தில், நிலையப்பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது.

ஆண்டுதோறும் டிசம்பர் திங்கள் 10 ஆம் நாள் மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படுகிறது. அந்நாளில், மனித உரிமைகள் பாதுகாப்புக் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் பொருட்டு ஆணையத்தால் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட ஆட்சியர்களால் இதர அலுவலர்கள் பணியாளர்களுடன் மனித உரிமைகள் தின உறுதி மொழி எடுத்துக்கொள்ளப்படுகிறது.

கோவிட்-19 பெருந்தொற்றின் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான தமிழக அரசின் நிலையான வழிகாட்டி நெறிமுறைகளைப் பின்பற்றவும், சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளதாலும், பொது மக்கள், குறிப்பாகப் பெண்கள், கர்ப்பிணிகள், முதியோர், மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் ஆணையத்திற்கு நேரில் வந்து புகார் அளிக்க இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு, இயங்கலை (on-line) மூலமாகப் புகார் அளிக்கும் வசதியை 07.12.2020 முதல் ஆணையம் ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் 31.08.2021 வரை ஆணையத்திற்கு 1316 புகார்கள் பெறப்பட்டுள்ளன.

9. தேசிய விழாக்கள், சிறப்பு நாள்கள், விருதுகள்

இந்தியத் தேசிய விழாக்களான சுதந்திரத் திருநாள் மற்றும் குடியரசுத் திருநாள் ஆகிய விழாக்களைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைப் பொதுத் துறை மேற்கொள்கிறது. இத்துறையானது, ஒவ்வோர் ஆண்டும் சுதந்திரத் தின விழாவின் போது, சென்னை - தலைமைச் செயலகத்தில் உள்ள கோட்டை கொத்தளத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றிவைத்து நாட்டு மக்களுக்கு உரையாற்றும் நிகழ்ச்சிக்கான பணிகளையும், குடியரசு தின விழா அன்று சென்னைக் கடற்கரையில், முப்படைகளும் உள்ளடக்கியச் சீருடைப் படையினரின் அணிவகுப்போடு பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகளின் ஆடல், பாடல் மற்றும் பல்வேறு மாநிலங்களின்

[2021 செப்டம்பர் 13

கலாச்சாரங்களைப் பிரதிபலிக்கும் கலைநிகழ்ச்சிகளுடன் ஆளுநர் அவர்களால் கொடியேற்றி வைக்கும் நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகளையும் மேற்கொள்கிறது.

ஒன்றிய அரசால் சிறப்பு நாளாக அறிவிக்கப்பட்டுள்ள தியாகிகள் நாளன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மாண்புமிகு அமைச்சர்கள், துறைச் செயலாளர்கள் மற்றும் தலைமைச் செயலக அலுவலர்கள் அனைவருக்கும் உறுதிமொழியேற்புச் செய்து வைக்கும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளையும் இத்துறை மேற்கொள்கிறது.

9.1 தகைசால் தமிழர் விருது

இந்த ஆண்டு முதல் சுதந்திரத் திருநாள் விழாவின் போது, தமிழ்நாட்டுக்கும் தமிழினத்தின் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியவருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் "தகைசால் தமிழர் விருது" வழங்கப்படுகிறது. இவ்விருதினைப் பெறும் விருதாளருக்கு ரூ.10.00 இலட்சத்திற்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. இந்த ஆண்டிற்கான "தகைசால் தமிழர்" விருது திரு. என். சங்கரய்யா அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

மேலும், மாநில அரசின் விருதுகளான, வீர தீரச் செயலுக்கான "அண்ணா பதக்கம்", துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான "கல்பனா சாவ்லா விருது" ஆகிய விருதுகளுக்கு தகுதியுடைய நபர்களைத் தெரிவு செய்யும் பணியிலும் பொதுத் துறை முக்கிய பங்காற்றுகிறது. இது தொடர்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் துறைச் செயலாளர்கள் ஆகியோரிடமிருந்து விவரங்கள் பெறப்பட்டு, விருது பெறுவோரைத் தெரிவு செய்யும் தேர்வுக் குழுவிற்கு (Selection Committee) அனுப்பும் பணியினை இத்துறை மேற்கொள்கிறது. தமிழ்நாடு அரசு, மத நல்லிணக்கத்திற்காகப் பாடுபட்டு உயிர்நீத்த திரு. கோட்டை அமீர் அவர்களின் பெயரால் 'கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம்' என்ற பதக்கத்தினை 2000 ஆம் ஆண்டில் தோற்றுவித்து, ஆண்டுதோறும் மத நல்லிணக்கத்திற்காகச் சிறந்த சேவையாற்றி வரும் ஒருவருக்குக் குடியரசு தின விழாவில், இப்பதக்கம் பெறுபவர்களுக்குப் பதக்கமும், ரூ.25,000/-ற்கான கேட்புக் காசோலையும் மற்றும் சான்றிதழும் வழங்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாகத் தகுதியான நபர்களைத் தெரிவு செய்யும் பணி பொதுத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2021 செப்டம்பர் 13]

ஒன்றிய அரசால் வழங்கப்படும் தேசிய விருதுகளான பாரத ரத்னா, பத்மவிபூஷண், பத்மபூஷண், பத்மஸ்ரீ, சர்தார் படேல் தேசிய ஒற்றுமை விருது, மத நல்லிணக்கத்திற்கான கபீர் புரஸ்கார் விருது, காந்தியடிகள் அமைதி பரிசு ஆகிய விருதுகளுக்கும், வீர தீரச் செயல்களுக்காக ஒன்றிய அரசால் வழங்கப்படும் விருதுகளான ஜீவன்ரக்ஷா பதக்கம், அசோக் சக்ரா, கீர்த்தி சக்ரா மற்றும் சௌர்ய சக்ரா போன்ற விருதுகளுக்கும், விருதாளர்களைத் தெரிவு செய்வது தொடர்பான பரிந்துரைகள் பொதுத்துறையின்மூலம் ஒன்றிய அரசுக்கு அனுப்பப்படுகின்றன.

10. முதலமைச்சரின் தனிப்பிரிவு

முதலமைச்சரின் தனிப் பிரிவு பொது மக்களின் குறைகளுக்குப் பயனுள்ள உரிய தீர்வு காண்பதிலும், அவர்களின் இடர்பாடுகளைக் களைவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. இப்பிரிவு, தனி அலுவலரின் தலைமையில் இயங்கி வருகிறது. பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் குறைகளை விரைவில் தீர்வு செய்வதை உறுதி செய்யும் பொருட்டுத் தனி அலுவலர் அரசின் அனைத்து நிலையிலுள்ள அலுவலர்களை நேரடியாகத் தொடர்பு கொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுற்றுப்பயணங்கள் மேற்கொள்ளும் போதும், அலுவலகம் மற்றும் இல்லத்திலும் நேரடியாகப் பொது மக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மற்றும் முதலமைச்சரின் தனிப்பிரிவில் பெறப்படும் மனுக்கள், ஆகியவை முறையாக எண்ணிடப்பட்டு மனுதாரரின் பெயர், முகவரி, கோரிக்கையின் விவரம் மற்றும் மனுவின் நகல் ஆகியன பதிவேற்றம் செய்யப்பட்டு சம்மந்தப்பட்ட துறைகள் / மாவட்டங்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணும் பொருட்டு அனுப்பி வைக்கப்படுகின்றன. அதன்பிறகு, அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையினைக் கண்காணிக்கவும், துரிதப்படுத்தவும் முதலமைச்சரின் தனிப்பிரிவு அனைத்துத் துறைகளிலும் / மாவட்ட அலுவலகங்களில் நியமிக்கப்பட்டுள்ள பற்றாளர்களுடன் அவ்வப்போது ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி, அம்மனுக்களின் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உடனுக்குடன் தீர்வுகள் காணப்படுகின்றன.

[2021 செப்டம்பர் 13

11. உங்கள் தொகுதியில் முதலமைச்சர்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின் பேரில் பொது மக்களின் குறைகளை உடனடியாகத் தீர்வு காணும் பொருட்டு, "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" என்ற புதிய துறை 07.05.2021 அன்று உருவாக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது தேர்தல் பரப்புரையின் போது பெறப்பட்ட மனுக்கள் 100 நாள்களுக்குள் தீர்வு காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க இத்துறை ஏற்படுத்தப்பட்டது. புதிதாக உருவாக்கப்பட்ட துறைக்கு இந்திய ஆட்சிப் பணி நிலையில் ஒரு சிறப்பு அலுவலர் தலைமை தாங்குகிறார். பிறதுறை மாற்றுப் பணி அலுவலர்களுடன், முதலமைச்சரின் தனிப்பிரிவு அலுவலகத்திலிருந்து பிரிவு அலுவலர், உதவி பிரிவு அலுவலர், தட்டச்சர் மற்றும் ஓர் உதவியாளர் அடங்கிய ஒரு பிரிவு "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" துறையுடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும், பெறப்பட்ட மனுக்களைப் பதிவு செய்யவும் மற்றும் தொழில்நுட்ப ஆதரவை பெறவும் தமிழ்நாடு மின் ஆளுமை முகமை நிறுவனத்திற்கு உத்தரவிடப்பட்டது.

08.05.2021 அன்று, மக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் அடங்கிய பெட்டிகளின் சாவியை மாண்புமிகு முதலமைச்சர் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையின் சிறப்பு அலுவலரிடம் வழங்கினார். பெட்டிகள் திறக்கப்பட்டு, கோரிக்கை மனுக்கள் மாவட்ட வாரியாக/ குறைவாரியாக (Grievance wise) பிரிக்கப்பட்டது. பின்னர், மின்னணு முறையில் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் பராமரிக்கப்படும் முதலமைச்சர் உதவி மையம் இணையதள முகப்பில் மனுக்கள் பதிவேற்றப்பட்டன. தகுதியான ஒவ்வொரு மனுவும் ஓர் அட்டை / கடிதம் கூட தவறவிடாது பதிவேற்றப்பட்டது.

மே மாதத்தில் கொரோனா நோய்த்தொற்று உச்சத்தில் இருந்தபோது 200 தரவு உள்ளீடு ஆபரேட்டர்கள் (Data Entry Operators) இம்மனுக்களை இணையதள முகப்பில் பதிவேற்றம் செய்தார்கள். பெருந்தொற்று நோய் பரவல் இருந்தபோதிலும், தாமதமின்றி கள மட்டத்தில் பொறுப்பான அதிகாரிகளுக்கு மனுக்களை அனுப்ப அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. மனுக்கள் பதிவேற்றம் செய்யப்பட்டவுடன், ஒரு குறுஞ்செய்தி மனுதாரரின் செல்லிடப்பேசி எண்ணுக்கு ஒப்புகை எண்ணுடன் அனுப்பப்பட்டது.

2021 செப்டம்பர் 13]

மின்னணு முறையில் பதிவேற்றப்பட்ட மனுக்கள் உடனடியாக மாவட்டங்களில் பரிசீலிக்கப்பட்டு, கள அலுவலர்களால் சரிபார்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" என்ற இத்துறையில் மனுக்கள் ஒப்படைக்கப்பட்டதிலிருந்து 10-வது நாளான 18.05.2021 அன்று, முதல் சுற்று நலத்திட்ட உதவிகள் மனுதாரர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சரால் வழங்கப்பட்டன. நீண்டகாலமாக நிலுவையில் உள்ள குறைகள் சம்பந்தப்பட்ட 549 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டன.

அதன்பிறகு ஒவ்வொரு பதினைந்து நாள்களுக்கு ஒருமுறை நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் ஏழு முறையும், சேலத்தில் ஒரு முறையும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். ஒவ்வொரு மாவட்டங்களிலும் மனுதாரர்களுக்கு மாண்புமிகு அமைச்சர்களால் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

இத்துறையின் செயல்பாடுக ள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நேரடியா கக் கண்காணிக்கப்படுகிறது. குறைகளை விரைவாகத் தீர்ப்பது மட்டுமல்லாமல், மனுக்களுக்குத் தரமான முறையில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் இத்துறை உறுதியாக உள்ளது.

மனுக்களுக்குத் தீர்வு காண்பது தொடர்பாகத் தலைமைச் செயலாளர், மாண்புமிகு முதலமைச்சரின் முதன்மை செயலாளர் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளின் செயலாளர்களால் உன்னிப்பாகக் கண்காணிக்கப்பட்டுத் தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. காலந்தாழ்த்தாது விரைவாகவும் மனுக்களுக்கு ஏற்கத்தக்க தீர்வு காண்பதை உறுதி செய்வதற்காகத் தினசரி ஆய்வு நடத்த மாவட்ட ஆட்சியர்கள் பணிக்கப்பட்டனர்.

*அனைத்துத் துறைகள் சார்ந்த மனுக்கள் நடவடிக்கை எடுக்கப்படுவது தொடர் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டு, மாவட்ட அளவில் ஒருங்கிணைப்பு (*Nodal*) அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, தினசரி ஆய்வுகள் நடத்தப்பட்டன. மொத்தமாக இத்துறையின்மூலம் 4,57,645 மனுக்களுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டது. மொத்த மனுக்களில் 45 சதவீதம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையைச் சேர்ந்ததாகும். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் தொழிலாளர்*

நலன் – திறன் மேம்பாட்டுத் துறை ஆகியவை தலா 16.2 சதவீதமும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை 4.3 சதவீதமும் மற்றும் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 4.2 சதவீதம் மனுக்களுக்கும் தீர்வு காண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

ஈரோடு (40,157), கோயம்புத்தூர் (38,226), திருப்பூர் (31,227), விழுப்புரம் (26,245) மற்றும் சேலம் (4,070) மாவட்டங்கள் மிக அதிகமான மனுக்களைக் கையாண்ட முதல் ஐந்து மாவட்டங்கள் ஆகும்.

சரியான களஆய்வுக்கு பிறகு தகுதியின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட துறைகளின் அதிகாரிகளால் முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு 2,29,216 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுக் கோரிக்கைக்குத் தகுந்தாற்போல் ஆணைகள் / நலத்திட்டங்கள் வழங்கப்பட்டன.

சரியான களஆய்வுக்குப் பிறகு, மனுதாரரை கண்டுபிடிக்க/ தொடர்பு கொள்ள முடியாத மனுக்கள் அல்லது குறிப்பிட்ட கோரிக்கைகள் இல்லாத மனுக்கள், நிலுவையில் உள்ள நீதிமன்ற வழக்குகள் தொடர்பான மனுக்கள் மற்றும் தற்போது நடப்பிலுள்ள அரசு திட்டங்களின்கீழ்த் தகுதிபெறாததன் காரணமாக 2,28,429 மனுக்கள் ஏற்க இயலவில்லை. இருப்பினும், மேற்குறிப்பிட்ட மனுதாரர்கள் தேவையான விவரங்களுடன் மாவட்ட நிருவாகத்தை அணுகினால், அவர்களின் கோரிக்கைகள்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

"உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை" 100 நாள்களில் 4.57 இலட்சம் மனுக்கள் மீது மாவட்ட நிர்வாகத்தின்மூலம் நடவடிக்கை எடுத்து முக்கியப் பங்கு ஆற்றியுள்ளது. வழக்கமாக 2 வருடங்களாக நடைபெறும் பணி 3 மாதத்திற்குள் முடிக்கப்பட்டுவிட்டது.

12. முடிவுரை

பொதுத்துறை மந்தனமான நிகழ்வுகளைக் கையாளுகிறது. எத்துறையாலும் கையாள முடியாத நேர்வுகள் பொதுத்துறையின் வசமே ஒப்படைக்கப்படுகின்றன. இத்துறை மரபுகளைப் பேணிக் காப்பதிலும், அவற்றை வழுவாமல் கடைப்பிடிப்பதிலும் மிகுந்த அக்கறை செலுத்துகிறது. மாநிலத்தின் பெருமையைக் கட்டிக் காக்கும் நம்பகத்தன்மை இத்துறையின் முக்கிய அடையாளமாகத்

2021 செப்டம்பர் 13]

திகழ்கிறது. நுண்ணிய தன்மை கொண்ட அனைத்துப் பொருண்மைகளும் இத்துறையால் கையாளப்படுகின்றன. பழைய ஆவணங்களைப் பாதுகாப்பதிலும், அவற்றின் துணையோடு கோப்புகளைக் கையாளுவதிலும் நிபுணத்துவம் கொண்டது இத்துறை. பலவித நிகழ்வுகளை, பல்வேறு தரப்பட்ட நேர்வுகளைக் கையாளும் இத்துறை நிருவாகம் நிமிர்ந்து நடப்பதற்கும் நேர்கொண்ட பாதையில் செல்வதற்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயல்படும் துறை.

[*2021 செப்டம்பர் 13*

தேர்தல்கள்

இந்தியாவில் தேர்தல்கள், அனைவரும் பங்குகொள்ளும் வகையில்,நேர்மையாகவும்,சுதந்திரமாகவும்,நம்பகத்தன்மையுடனும் நடைபெறுகின்றன. தேர்தல்கள் "ஜனநாயகத்தின் திருவிழாக்களாக" கருதப்படுகின்றன. மேலும், வாக்களிக்கும் உரிமைமூலம் தங்களின் உரிமையை தாங்களே நிர்ணயித்துக்கொள்ளும் இந்திய மக்களின் மனஉறுதியையும் தேர்தல்கள் கௌரவிக்கின்றன. இந்தியத் தேர்தல் ஆணையம், அரசியலமைப்புச் சட்டத்திற்குட்பட்டு சட்டப்படியான தனித்தியங்கும் அதிகார அமைப்பாக விளங்குகின்றது. தேர்தல்களை நேர்மையுடன் நடத்தி, மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்குரிய உரிமையினை தேர்தல் ஆணையம் நிலைநாட்டுகிறது.

இந்தியத் தேர்தல் ஆணையமானது, தலைமைத் தேர்தல் ஆணையர் மற்றும் இரு தேர்தல் ஆணையர்களைக் கொண்ட அமைப்பாகும். இந்திய அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 324-ன்கீழ், வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, மேற்பார்வை, நெறிப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றின்மூலம் வாக்காளர் பட்டியல்களை தயாரித்தல், நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றத்திற்கான அனைத்துத் தேர்தல்களை நடத்துதல், குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் பதவிகளுக்கான தேர்தல்களை நடத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும்.

மாநிலத்தில், தேர்தல் துறையின் தலைவராகச் செயல்படும் தலைமைத் தேர்தல் அதிகாரி, 1951 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின்படி, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளை ஏற்று செயல்படுத்துகின்றார். மாவட்ட அளவில், பொதுத் (தேர்தல்கள்)துறை மற்றும் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி, அனைத்து பணிகளையும் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்கள் அனைவரும் மாவட்டத் தேர்தல் அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். சென்னை மாவட்டத்திற்கு, பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையர், மாவட்டத் தேர்தல் அதிகாரியாக அறிவிக்கப்பட்டுள்ளார்.

பின்வரும் பணியாளர்கள் மாவட்டத் தேர்தல் அதிகாரிக்கு உதவுகின்றனர்:

2021 செப்டம்பர் 13]

i) வாக்காளர் பட்டியல் தயாரிப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்கு வாக்காளர் பதிவு அதிகாரிகள் (Electoral Registration Officers - EROs) மற்றும் உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகள் (Assistant Electoral Registration Officers - AEROs).

ii) தேர்தல் நடத்தும் பணிகளுக்கு தேர்தல் நடத்தும் அதிகாரிகள் (Returning Officers - ROs) மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அதிகாரிகள் (Assistant Returning Officers - AROs).

iii) ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் வாக்குச்சாவடி நிலை அலுவலர் (Booth Level Officer - BLO).

பொதுவாக வருவாய்க் கோட்ட அலுவலர்கள் நிலையில் உள்ளோர் வாக்காளர் பதிவு அதிகாரிகளாகவும், மாநகராட்சிப் பகுதிகளுக்குட்பட்ட தொகுதிகளுக்கு மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் துணை ஆணையர்கள் வாக்காளர் பதிவு அதிகாரிகளாகவும் உள்ளனர். சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை, பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலர்கள் அந்தந்த மண்டலங்களுக்குரிய வாக்காளர் பதிவு அதிகாரிகளாகச் செயல்படுகின்றனர். வட்டாட்சியர்கள் மற்றும் நகராட்சி ஆணையர்கள், மாநகராட்சி மண்டலப் பகுதிகளில் சம்பந்தப்பட்ட உதவி வருவாய் அலுவலர்கள் மற்றும் செயற்பொறியாளர்கள் அந்தந்த மண்டலங்களுக்குரிய உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

1. 2021-2022-ன் முக்கிய நிகழ்வுகள்

1.1. வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம், 2021

1950 ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் பிரிவு 21-ன்படி ஒவ்வொரு மக்களவை அல்லது மாநில சட்டமன்றப் பேரவைப் பொதுத் தேர்தல்கள் மற்றும் தற்காலிகமாக ஏற்படும் காலியிடத்திற்கான இடைத்தேர்தலுக்கு முன்பு சட்டமன்றத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யப்படுகிறது. சட்டமன்றத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல் திருத்தம் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரையின் அடிப்படையில் எந்த ஒரு வருடத்திலும் குறிப்பிட்ட தகுதியேற்படுத்தும் தேதியின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. பொதுவாக வாக்காளர்

[2021 செப்டம்பர் 13

பட்டியலின் வருடாந்திர திருத்தமானது ஒவ்வொரு வருடமும் ஜனவரி முதல் தேதியை தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

1-1-2021-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்ட புகைப்படத்துடன்கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தமானது கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட்டது:-

வரைவுப் பட்டியல் வெளியீடு	16-11-2020
கோரிக்கை/ மறுப்புரை அளிக்க கடைசி தேதி	15-12-2020
இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு	20-1-2021

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, மேற்குறிப்பிட்ட வாக்காளர் பட்டியல் திருத்தத்தில், வாக்காளர் பட்டியலில் இடம் பெற்ற சேர்த்தல்கள் / நீக்குதல்கள் / திருத்தங்கள் பின்வருமாறு:-

	ஆண்	**பெண்**	**மூன்றாம் பாலினம்**	**மொத்தம்**
சேர்த்தல்கள்	9,95,479	11,42,794	1,122	21,39,395
நீக்குதல்கள்	2,69,376	2,39,670	261	5,09,307
திருத்தங்கள்	1,64,019	1,45,185	88	3,09,292

கீழ்க்குறிப்பிட்ட விவரங்களின்படி, 20.1.2021 அன்று இறுதி வாக்காளர் பட்டியலில் மொத்தம் 6.27 கோடி வாக்காளர்கள் இருந்தனர்:-

	ஆண்	**பெண்**	**மூன்றாம் பாலினம்**	**மொத்தம்**
பொது வாக்காளர்கள்	3,08,38,473	3,18,28,727	7,246	6,26,74,446
பணித் தொகுதி வாக்காளர்கள்	71,110	1,743	0	72,853
மொத்தம்	3,09,09,583	3,18,30,470	7,246	6,27,47,299

2021 செப்டம்பர் 13]

1.2. தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல், 2021 மற்றும் 39.கன்னியாகுமரி மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தல்களில் பயன்படுத்துவதற்கான திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் தயாரித்தல்

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1950-ன்படி வேட்புமனுத் தாக்கலுக்கான இறுதி நாள் முதல் தேர்தல்கள் முடிவடையும் நாள் வரையிலான காலம் நீங்கலாக. வாக்காளர் பட்டியல்களின் திருத்தம் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது. 20-1-2021 முதல் 19-3-2021 (வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான கடைசி நாள்) வரை தொடர் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு கீழ்க்காணும் சேர்த்தல்கள், நீக்குதல்கள் மற்றும் திருத்தங்கள் செய்யப்பட்டன:-

	ஆண்	பெண்	மூன்றாம் பாலினம்	மொத்தம்
சேர்த்தல்கள்	1,32,163	1,53,041	187	2,85,391
நீக்குதல்கள்	46,989	42,652	241	89,882
திருத்தங்கள்	44,726	33,094	30	77,850

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல், 2021 மற்றும் 39.கன்னியாகுமரி மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தல் நடைபெற்றபோது மாநிலத்தில் வாக்காளர் பட்டியலில் இடம்பெற்ற 6.29 கோடி வாக்காளர்கள் விவரம் பின்வருமாறு:-

	ஆண்	**பெண்**	**மூன்றாம் பாலினம்**	**மொத்தம்**
பொது வாக்காளர்கள்	3,09,23,651	3,19,39,112	7,192	6,28,69,955
பணித் தொகுதி வாக்காளர்கள்	71,789	1,768	0	73,557
மொத்தம்	3,09,95,440	3,19,40,880	7,192	6,29,43,512

1.3. அ) தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல்கள், 2021

6-4-2021 அன்று பதினேழாவது, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் நடைபெற்றது. 2-5-2021 அன்று வாக்கு எண்ணிக்கை நடைபெற்று, முடிவுகள் அறிவிக்கப்பட்டன. பதிவான மொத்த வாக்குகள் 73.51 சதவீதமாகும்.

[2021 செப்டம்பர் 13

ஆ) 39. கன்னியாகுமரி மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தல், 2021

இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்தவாறு, தமிழகத்தில், 39.கன்னியாகுமரி மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தல் வாக்குப்பதிவு 6-4-2021 அன்றும், வாக்கு எண்ணிக்கை 2-5-2021 அன்றும் நடைபெற்றது.

தேர்தலானது, சுதந்திரமாகவும், நேர்மையாகவும், எவ்வித அசம்பாவிதமின்றியும் நடைபெற்றது. 39.கன்னியாகுமரி மக்களவைத் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் வாக்குப்பதிவு 69.45 சதவீதமாக பதிவானது.

1.4. தேசிய வாக்காளர் தினம், 2021

இந்தியத் தேர்தல் ஆணையம், தனது நிறுவன தினமான ஜனவரி 25 ஆம் தேதியை தேசிய வாக்காளர் தினமாக, 2011 ஆம் ஆண்டு முதல் கொண்டாடி வருகின்றது. 2021 ஆம் ஆண்டின் தேசிய வாக்காளர் தினத்தின் முக்கிய குறிக்கோள் “நம் வாக்காளர்களை அதிகாரமிக்க, விழிப்புணர்வு, பாதுகாப்பு மற்றும் தகவல் அறிந்தவர்களாக மாற்றுவோம்” என்பதாகும். தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தல் கோவிட்-19 நோய்த்தொற்று காலத்தில் நடைபெற இருந்ததால் தேர்தல் விழிப்புணர்வு தொடர்பான பெரும்பாலான நடவடிக்கைகள் இணைய வழியிலேயே நடத்தப்பட்டது.

தேசிய வாக்காளர் தினம், 2021 –முன்னேற்பாடு நடவடிக்கைகள்

தேசிய வாக்காளர் தினம், 2021 தொடர்பான முன்னேற்பாடு நடவடிக்கைகளாக பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது. இப்போட்டிகள் அனைத்தும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டும் குறிப்பாக மருத்துவ பணியாளர்களின் கோவிட்-19 நோய்த்தொற்று காலத்தில் சிறப்பாக பணியாற்றியமைக்காக ஊக்கப்படுத்தும் விதத்திலும் நடத்தப்பட்டது. சிறந்த போட்டியாளருக்கு மாநில அளவில் நடைபெற்ற தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டத்தில் பரிசுகள் வழங்கப்பட்டன.

தேசிய வாக்காளர் தினம், 2021 கொண்டாட்டம்

பதினொன்றாவது தேசிய வாக்காளர் தினமானது, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் மற்றும் மாநிலத்தின்

2021 செப்டம்பர் 13]

30,400 வாக்குச்சாவடி அமைவிடங்களிலும் தமிழகமெங்கும் கொண்டாடப்பட்டது. மாநிலம் முழுவதும் நடைபெற்ற தேசிய வாக்காளர் தின விழா கொண்டாட்டத்திற்காக மொத்தம் ரூ.2,11,25,000/- செலவிடப்பட்டது. இந்த ஆண்டு ஜனவரி 25 ஆம் நாள் மாநில அளவிலான தேசிய வாக்காளர் தினம் கலைவாணர் அரங்கத்தில் மாண்புமிகு தமிழக ஆளுநர் தலைமையில் சிறப்பாக நடத்தப்பட்டது. அந்நிகழ்வில், தேர்தல் விழிப்புணர்வுப் போட்டியில், மாநில அளவிலான மதிப்பீட்டுக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டு வெற்றிபெற்ற மாணவர்களை மாண்புமிகு தமிழக ஆளுநர் கௌரவித்தார். அவரது தலைமையில் தேசிய வாக்காளர் தின உறுதிமொழி அனைவராலும் ஏற்கப்பட்டது.

மேலும், 2021 குடியரசு தினவிழா அணிவகுப்பின்போது பொதுத் (தேர்தல்கள்) துறையின் சார்பில் 'ஒப்பனைக்காட்சி ஊர்தியும்' இடம் பெற்றது.

அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் தேசிய வாக்காளர் தின உறுதிமொழி எடுக்கப்பட்டது. ஒவ்வொரு வாக்குச்சாவடி அமைவிடங்களிலும், தேசிய வாக்காளர் தின உறுதிமொழி எடுக்கப்பட்டது.

1.5. வாக்காளர் தேர்தல் நடைமுறையில் பங்கேற்க முறையான அறிவூட்டல் (SVEEP)

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களின்படி, தமிழ்நாட்டில் பொது மக்களிடையே வாக்காளராகப் பதிவு செய்வது மற்றும் சமீபத்தில் நடந்து முடிந்த பொதுத் தேர்தல்கள், 2021-ல் மனசாட்சிப்படியும் 'சட்ட நெறிமுறைக்குட்பட்டு வாக்களிப்பது' ஆகியவை குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும், பல்வேறு அரசுத் துறைகளான தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, தெற்கு இரயில்வே, அனைத்திந்திய வானொலி, தூர்தர்ஷன் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்துடனும், மாவட்ட அளவிலும் ஒருங்கிணைந்து பங்கேற்பாளர்களாக செயல்பட்டன.

வாக்காளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதத்தில் தமிழ்நாடு சட்டப் பேரவைப் பொதுத் தேர்தல் 2021-ஐ முன்னிட்டு தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் "C-VIGIL" மற்றும்

"1950-வாக்காளர் உதவி எண்" என்ற விளம்பரங்கள் தமிழ்நாட்டின் முன்னணி நாளிதழ்களில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டன.

வாக்காளர் பங்கேற்பு என்பது தேர்தல் மேலாண்மையின் ஒருங்கிணைந்த பகுதியாகும். எனவே, இந்தியத் தேர்தல் ஆணையம், எவ்விதத் தூண்டுதலுமின்றி வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு "மனசாட்சிப்படி வாக்களித்தல்", "பணம் வாங்காமல் வாக்களித்தல்", "பயமின்றி வாக்களித்தல்" என்னும் நோக்கங்களோடு கையெழுத்து இயக்கம், பேரணிகள், கலை நிகழ்ச்சிகள் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், தொடர்புடைய அனைவரிடத்திலும் நம்பிக்கையேற்படுத்தும் வகையிலும், வாக்களிப்பினை ஊக்குவிக்கும் பொருட்டும் "C-VIGIL"என்ற செயலி பிரபலப்படுத்தப்பட்டு, இதன்மூலம் தேர்தல் தொடர்பான புகார்களைப் பெற்று, அவற்றின்மீது குறித்த நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவது உறுதிசெய்யப்பட்டது.

வாக்காளர் விழிப்புணர்வு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு மாவட்ட அளவிலான குழு மாவட்ட தேர்தல் அதிகாரி தலைமையிலும், பிற அரசுத் துறைகளை உறுப்பினர்களாகவும் கொண்டு அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டது. இக்குழுவானது மூன்றாம் பாலினத்தவர்கள், மாற்றுத் திறனாளிகள், மலைவாழ் மக்கள் ஆகியோரிடையே விழிப்புணர்வு பணியினை மேற்கொண்டது.

2. தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தலின்போது மேற்கொள்ளப்பட்ட சில முக்கிய முன்முயற்சிகள்:

அ) மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் (EVM) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவி (VVPAT)

1,01,532 வாக்குப்பதிவு கருவிகள், 47,258 கட்டுப்பாட்டு கருவிகள் மற்றும் 35,278 வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகள்(VVPAT)(எம்-3) ஆகியவை தொடக்கத்தில் தமிழ்நாட்டில் இருந்தன. இவற்றுடன் கூடுதலாக, பாரத மின்னணுவியல் நிறுவனத்தின் 54,400 வாக்குப்பதிவு கருவிகள், 72,400 கட்டுப்பாட்டு கருவிகள் மற்றும் 92,300 வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகள் (VVPAT) (எம்-3) ஆகியவை தமிழ்நாட்டில் உள்ள மாவட்டங்களின் சட்டமன்றத் தொகுதிகளுக்காக பிற

2021 செப்டம்பர் 13]

மாநிலங்களிலிருந்து பெறுவதற்கான ஆணை இந்தியத் தேர்தல் ஆணையத்தின் மூலமாக பிறப்பிக்கப்பட்டது.

தமிழகத்திற்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பிற மாநிலங்களிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கான ஆணை கிடைக்கப்பெற்றவுடன், வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகள் ஆகியவற்றை எடுத்து வருவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளும் கேட்டுக்கொண்டனர்.

2021 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல்கள் மற்றும் 39.கன்னியாகுமரி மக்களவை தொகுதிக்கான இடைத்தேர்தலின்போது பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்களின் விவரம் பின்வருமாறு:-

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல்கள், 2021

இயந்திரத்தின் வகை (EVM Model)	வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை	பயன்படுத்தப்பட்ட இயந்திரங்களின் எண்ணிக்கை		
		வாக்குப்பதிவு கருவிகள் (BUs)	கட்டுப்பாட்டு கருவிகள் (CUs)	VVPAT கருவிகள்
M-3 பாரத மின்னணுவியல் நிறுவனம்	88,937	1,26,922	88,937	88,937

39. கன்னியாகுமரி மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தல், 2021:-

இயந்திரத்தின் வகை (EVM Model)	வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை	பயன்படுத்தப்பட்ட இயந்திரங்களின் எண்ணிக்கை		
		வாக்குப்பதிவு கருவிகள் (BUs)	கட்டுப்பாட்டு கருவிகள் (CUs)	VVPAT கருவிகள்
M-3 பாரத மின்னணுவியல் நிறுவனம்	2243	2243	2243	2243

[2021 செப்டம்பர் 13

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, மேற்கண்ட தேர்தலில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்துடன் (EVMs) வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவியானது (VVPATs) அனைத்து வாக்குச் சாவடிகளிலும் பயன்படுத்தப்பட்டது.

நேரில் வர இயலாத வாக்காளர்களுக்கு தபால் வாக்கு அளிக்கும் முறை

தேர்தல் நடத்தும் விதிகள் (திருத்தப்பட்டது) 2019 மற்றும் 2020-ன்படி, வாக்களிக்க நேரில் வர இயலாத பின்வரும் வகையிலான வாக்காளர்களுக்கு தபால் வாக்குச் சீட்டு வசதியினை வழங்கலாம் என இந்தியத் தேர்தல் ஆணையம் ஜூலை 16, 2020-ல் முடிவு செய்தது:-

i) மூத்தகுடிமக்கள் (80 வயதிற்கு மேற்பட்டவர்கள்)

ii) வாக்காளர் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றுத்திறனாளி வாக்காளர்கள்

iii) கோவிட்-19 அறிகுறி உடைய அல்லது பாதிப்புக்குள்ளான நபர்கள்

iv) அத்தியாவசியப் பணியில் உள்ள வாக்காளர்கள்

இவ்வசதியானது, 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போது நடைமுறைப்படுத்தப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வாக்களிக்க நேரில் வர இயலாத வாக்காளர்கள், தபால்மூலம் வாக்களிக்க விரும்பினால், தேர்தல் அறிவிப்பு வெளியான நாளிலிருந்து தேர்தல் அறிவிக்கை வெளியிடப்பட்ட ஐந்து நாட்களுக்குள் அனைத்து விவரங்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட படிவம் 12-D தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வழங்க வேண்டும்.

இதன்படி, மொத்தம் 1,39,612 விண்ணப்பங்கள் பெறப்பட்டது. தேர்தல் நடத்தும் அதிகாரியின் பரிசீலனைக்குப் பிறகு 1,33,011 தபால் வாக்குகள் வழங்கப்பட்டது. வாக்குப் பதிவு அலுவலர்கள் குழு ஒன்று, மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் மற்றும் கோவிட்-19 அறிகுறி உடைய அல்லது பாதிப்புக்குள்ளான நபர்களின் வீடுகளுக்குச் சென்று தபால் வாக்கு பெறப்பட்டது.

2021 செப்டம்பர் 13]

மொத்தமாக 1,31,550 வாக்குகள் வாக்களிக்க நேரில் வர இயலாத வாக்காளர்களிடம் இருந்து பெறப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:-

வ.எண்.	வகை	இவ்வகையில் உள்ள மொத்த வாக்காளர்கள்	வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட படிவம் (12)D எண்ணிக்கை	வாக்காளர்களிடம் இருந்து திரும்ப பெறப்பட்ட படிவம் (12)D	வழங்கப் பட்ட தபால் வாக்குகளின் எண்ணிக்கை	வாக்களிக்க நேரில் வர இயலாத வாக்காளர்களிடமிருந்து பெறப்பட்ட தபால் வாக்குகளின் எண்ணிக்கை
1.	மூத்த குடிமக்கள் (80 வயதிற்கு மேல்)	*12,76,115*	*7,52,615*	*1,09,268*	*1,04,359*	*1,03,281*
2.	மாற்றுத் திறனாளி வாக்காளர்கள்	*4,54,917*	*3,06,871*	*30,105*	*28,539*	*28,167*
3.	கோவிட்-19 அறிகுறிஉடைய அல்லது பாதிப்புக்குள்ளான நபர்கள்	*198*	*105*	*35*	*28*	*28*
4.	அத்தியாவசியப் பணியிலுள்ள நபர்கள்	*336*	*306*	*204*	*85*	*74*
	மொத்தம்	**17,31,566**	**10,59,897**	**1,39,612**	**1,33,011**	**1,31,550**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

ஆ) செலவின கட்டுப்பாட்டுக்கான வழிமுறைகள்

இந்தியத் தேர்தல் ஆணையம், முறையற்ற வகையில் பணபலம் உபயோகிக்கப்படுவதைக் கட்டுப்படுத்தவும், நியாயமான மற்றும் நேர்மையான முறையில் தேர்தலை நடத்தவும், தேர்தல் செலவுக் கண்காணிப்பு முறையை ஏற்படுத்தியுள்ளது.

[2021 செப்டம்பர் 13

தேர்தல் செலவுக் கண்காணிப்பின்மீது இரு வழிகளில் கவனம் செலுத்தப்படுகிறது. முதலாவதாக அனுமதிக்கப்பட்ட, உண்மையாக சமர்ப்பிக்கப்படும் செலவினங்கள் பற்றிய அறிக்கை. இரண்டாவது, சட்டத்தினால் அனுமதிக்கப்படாத செலவின வகையாகும். தேர்தல் செலவுக் கண்காணிப்பு அமைப்பு உண்மையான செலவினங்கள் அனைத்தையும் வேட்பாளர்களின் கணக்கில் சேர்ப்பதுடன் தவறாகச் செயல்படுபவர்களின்மீது சட்டப்படியான நடவடிக்கை எடுப்பதுடன், தேவைப்படின் காவல் துறை மற்றும் சம்பந்தப்பட்ட மாஜிஸ்டிரேட்கள் முன்னிலையில் புகார் செய்யப்படுவதையும் உறுதி செய்கிறது.

மேற்கண்டவற்றை உறுதிப்படுத்துவதற்காக தேர்தல் செலவுக் கண்காணிப்புக்கென பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டன. 2021, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல்கள் மற்றும் 39.கன்னியாகுமரி மக்களவைத் தொகுதி இடைத் தேர்தல்களுக்காக, தமிழ்நாட்டில் 1946 பறக்கும் படைகள், 1894 நிலைக் கண்காணிப்புக் குழுக்கள், 234 வீடியோ கண்காணிப்புக் குழுக்கள், 234 வீடியோ பார்வையிடும் குழுக்கள் மற்றும் 234 கணக்குக் குழுக்கள் ஆகியவை அமைக்கப்பட்டன. மேலும் 119 செலவினப் பார்வையாளர்களும், 234 உதவி செலவினப் பார்வையாளர்களும் தேர்தல் செலவுக் கண்காணிப்புக்கென நியமிக்கப்பட்டனர். மேற்கண்ட குழுக்கள் 2021, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போது, பணப் பறிமுதலுக்கான நிலையான செயல்பாட்டு முறைகளைப் பின்பற்றி ரூ.236.70 கோடி மதிப்புள்ள பணம் மற்றும் ரூ.209.58 கோடி மதிப்புள்ள பிற பொருட்களைக் கைப்பற்றினர்.

இ) தேர்தல் நடத்தை விதிமுறைகளைத் தீவிரமாக நடைமுறைப்படுத்துதல்

இந்தியத் தேர்தல் ஆணையம் பொதுத் தேர்தல்களை நேர்மையான முறையில், சுதந்திரமான வழியில், நடத்த வேண்டும் என்ற உயரிய எண்ணத்தைக் கொண்டுள்ளது. இதன் தொடர்பாக, இந்தியத் தேர்தல் ஆணையம், தேர்தல் நடத்தை விதிமுறைகளை தீவிரமாக நடைமுறைப்படுத்த பல நடவடிக்கைகளை மேற்கொண்டது.

2021, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் மற்றும் 39.கன்னியாகுமரி மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தல் கால அட்டவணை 26-2-2021 அன்று அறிவிக்கப்பட்டவுடன் தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறைக்கு வந்தன.

2021 செப்டம்பர் 13]

ஈ) மத்திய ஆயுத காவல் படையினர், மாநிலக் காவல் துறையினர், முன்னாள் இராணுவத்தினர், ஓய்வு பெற்ற காவலர்கள் மற்றும் நாட்டு நலப்பணித் திட்ட மாணவர்கள்

பாதுகாப்புத் திட்டம் மற்றும் படைப் பரவலாக்கம் ஆகியவை நியாயமான மற்றும் அமைதியான தேர்தலை உறுதிப்படுத்தின. 2021, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலை அமைதியாக நடத்துவதற்காக, பதற்றமான மற்றும் அதிக பதற்றமுடைய வாக்குச்சாவடிகளைக் கண்டறிந்து அவற்றின்மீது அதிகக் கவனம் செலுத்துவதற்காக 300 கம்பெனி மத்திய ஆயுதப் பாதுகாப்புப் படையினர் பயன்படுத்தப்பட்டனர். மாவட்ட படைப் பரவலாக்கத் திட்டத்தின் அடிப்படையில், மண்டல அளவில் போதுமான நிலைப் படைகளைத் தேவையான சுற்றுக்காவல் படைகளின்மூலம் வலுவூட்டி அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டது. இது தவிர, மாநில பாதுகாப்புப் படையைப் பொறுத்தமட்டில், 74,162 தமிழ்நாடு ஆயுதப்படை காவலர்கள் மற்றும் 8,010 தமிழ்நாடு சிறப்புக் காவல் படையினர் பயன்படுத்தப்பட்டனர். வாக்குப் பதிவு முடிவுற்ற பிறகு 82 கம்பெனி மத்திய ஆயுதப் பாதுகாப்புப் படையினர் தக்க வைத்துக் கொள்ளப்பட்டு 75 வாக்கு எண்ணிக்கை மையங்களில் பணியமர்த்தப்பட்டனர்.

2021, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போது காவலர்களின் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் பொருட்டு, 35,000 (5,000 ஓய்வுபெற்ற காவல் துறை அதிகாரிகள்/காவல் துறை அல்லாத அதிகாரிகள் + 30000 பிற இன ஓய்வுபெற்ற காவலர்கள்/காவல் துறை அல்லாத பணியாளர்கள்) பணியாளர்களை தேர்தல் பாதுகாப்புப் பணிகளுக்காக 4-4-2021 முதல் 7-4-2021 வரை 4 நாட்களுக்கு நியமிக்கப்பட்டனர். கூடுதலாக, பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 10,401 (9,591 தேசிய நாட்டு நலப் பணித்திட்ட தன்னார்வலர்கள்+810 தேசிய மாணவர் படை தன்னார்வலர்கள்) தன்னார்வலர்கள் தேர்தல் நாளன்று வாக்குச்சாவடியில் வரிசை மேலாண்மைக்கு மட்டும் பயன்படுத்தப்பட்டனர்.

உ) பார்வையாளர்கள்

2021, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்காக, இந்தியத் தேர்தல் ஆணையம், 154 பொதுப் பார்வையாளர்கள், ஒரு சிறப்பு பொதுப் பார்வையாளர், 43 காவல் பார்வையாளர்கள், ஒரு சிறப்பு காவல் பார்வையாளர், 118 செலவினப் பார்வையாளர்கள் மற்றும்

[2021 செப்டம்பர் 13

இரண்டு சிறப்பு செலவினப் பார்வையாளர்கள் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டனர். மேலும் வாக்கு எண்ணும் பணிகளை மேற்பார்வையிட 234 பார்வையாளர்களும் இந்தியத் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டனர்.

ஊ) தேர்தல் நடத்தும் அதிகாரிகள், தேர்தல் மற்றும் வாக்கு எண்ணிக்கைப் பணியில் ஈடுபடும் பணியாளர்களுக்கான பயிற்சி

2021, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல்கள் மற்றும் 39.கன்னியாகுமரி மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலை திறம்பட நடத்துவதற்கு பல கட்டங்களாக தேர்தல் தொடர்பான பயிற்சிகள் கீழ்க்கண்டவாறு நடத்தப்பட்டது. (i) இந்தியத் தேர்தல் ஆணையத்தில் பயிற்சி பெறுதல் (ii) மாநில தலைமையகத்தில் பயிற்சி பெறுதல்(iii) மாவட்ட அளவில் பயிற்சி பெறுதல். பல்வேறு படிநிலைகளில் இந்தியத் தேர்தல் ஆணையம், தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் மாவட்ட தேர்தல் அதிகாரிகளால் கீழ்க்கண்டவாறு தேர்தல் அலுவலர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன:

வ. எண்	தேர்தல் அலுவலர்கள் விவரம்	பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை — பயிற்சிகளின் தொகுப்பு	பயிற்சி காலம் மற்றும் பயிற்சியாளர்கள்
1.	மாநில முதன்மை பயிற்சியாளர்கள்	50/ 10 தொகுப்பு	10-12-2020 முதல் 16-12-2020 வரை – இந்தியத் தேர்தல் ஆணையம்
2.	கோவிட்-19 வழிகாட்டுதலுக்கான பயிற்சி	40/ 1 தொகுப்பு	17-12-2020 -இந்தியத் தேர்தல் ஆணையம்
3.	தேர்தல் நடத்தும் அலுவலர்கள்	234/ 8 தொகுப்பு	27-1-2021 முதல் 30-1-2021 வரை-இந்தியத் தேர்தல் ஆணையம்
4.	தகவல் மற்றும் தகவல் தொடர்புக்கான முதன்மை பயிற்சியாளர்கள்	308/ 2 தொகுப்பு	5-2-2021 மற்றும் 8-2-2021 – இந்தியத் தேர்தல் ஆணையம்

2021 செப்டம்பர் 13]

வ. எண்	தேர்தல் அலுவலர்கள் விவரம்	பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை – பயிற்சிகளின் தொகுப்பு	பயிற்சி காலம் மற்றும் பயிற்சியாளர்கள்
5.	மாவட்ட தேர்தல் அலுவலர்கள்	36/ 1 தொகுப்பு மாவட்ட வாரியாக	15-2-2021 இந்தியத் தேர்தல் ஆணையம்
6.	மாவட்ட முதன்மை பயிற்சியாளர்கள்	360/ 1 தொகுப்பு மாவட்ட வாரியாக	15-2-2021 முதல் 19-2-2021 வரை-மாநில அளவிலான முதன்மை பயிற்சியாளர்கள்
7.	ஒருங்கிணைப்பு அதிகாரிகள்	612/ 1 தொகுப்பு மாவட்ட வாரியாக	15-2-2021 முதல் 19-2-2021 வரை – மாநில முதன்மை பயிற்சியாளர்கள்
8.	மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவியின் செயல்முறை பயிற்சி	111/ 1 தொகுப்பு மாநில அளவிலான	26-2-2021 – இந்தியத் தேர்தல் ஆணையம்
9.	மின்னணு முறையில் பரிமாறத்தக்க தபால் வாக்குகள் பயிற்சி	280/ 1 தொகுப்பு மாவட்ட வாரியாக	11-3-2021 – இந்தியத் தேர்தல் ஆணையம்
10.	காவல் துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர்கள்	83/ 1 தொகுப்பு மாவட்ட வாரியாக	18-3-2021 - தலைமை தேர்தல் அதிகாரி
11.	என்கோர் மற்றும் மின்னணு முறையில் பரிமாறத்தக்க தபால் வாக்குகள்	185/ 1 தொகுப்பு	8-4-2021 - இந்தியத் தேர்தல் ஆணையம்

வாக்குச்சாவடி தேர்தல் அலுவலருக்கான பயிற்சி தவிர, மாநில மற்றும் மாவட்ட தேர்தல் பயிற்சிகள் அனைத்தும் இணைய வழி மூலமாகவே நடத்தப்பட்டது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஏ) ஊடகங்களில் ஒளிபரப்பப்படும் அரசியல் விளம்பரங்கள் கண்காணிப்பு மற்றும் சான்றளிப்பு செய்வதற்காகவும், பணம் கொடுத்து செய்தி வெளியிடுவதை கண்காணிப்பதற்காகவும், மாநில மற்றும் மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுக்களை அமைத்தல்

தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்திலும், ஒவ்வொரு மாவட்டத் தேர்தல் அலுவலர்களின் அலுவலகங்களிலும், ஓர் ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு, அதன்மூலம் தொலைக்காட்சி / வானொலி மற்றும் சமூக ஊடகங்களில் வெளியிடப்படும் வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் அரசியல் சார்ந்த விளம்பரங்கள் கண்காணிக்கப்படுகின்றன. இக்குழுக்கள் அரசியல் சார்ந்த விளம்பரங்களை செய்தித்தாள் / வானொலி / தொலைக்காட்சி / கேபிள் சேனல்கள் மற்றும் அனைத்து சமூக வலைதளங்களில் வெளியிடுவதற்கு முன்னரே, தணிக்கை செய்து சான்றளிக்கும் அதிகாரம் பெற்றவை. மாவட்ட அளவிலான குழுக்கள், அரசியல் சார்ந்த விளம்பரங்களைக் கண்காணிப்பதுடன், அவை தொடர்பாக வரப்பெறும் புகார் மனுக்களின் மீதும், ஊடகங்களில் பணம் கொடுத்து வெளியிடப்படும் செய்திகள் மீதும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன. மாவட்ட அளவில் இப்புகார் மனுக்களின் மீது நடவடிக்கைகள் மேற்கொள்ள மாநில அளவிலான குழுவிடம் மேல்முறையீடு செய்யலாம்.

ஐ) தகவல் தொழில் நுட்பம்

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்திலும், அனைத்து மாவட்டத் தேர்தல் அதிகாரிகளின் அலுவலகங்களிலும், தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், மனிதவளம் மற்றும் தேவையான உள்கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட்பப் பயன்பாடுகள்

2021, தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல்கள் மற்றும் 39. கன்னியாகுமரி மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலின்போது கீழ்க்கண்ட செயலிகள் பயன்படுத்தப்பட்டன.

அ. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் IT & ICT முயற்சிகள்

1. ETPBS – *தபால் வாக்குகளை மின்னணு முறையில் மாற்றுவதற்கான ஏற்பாட்டு முறை*

2021 செப்டம்பர் 13]

2. cVIGIL
3. என்கோர் / சுவிதா மனுதாக்கல்
4. என்கோர் / சுவிதா அனுமதிகள்
5. என்கோர்/ சுவிதா –வாக்கு எண்ணுதல்
6. என்கோர்/ சுவிதா - EEMS (தேர்தல் செலவு கண்காணிப்பு அமைப்பு)
7. EMS- வாக்குப் பதிவு இயந்திர மேலாண்மை அமைப்பு
8. NGSP- தேசிய குறை தீர்க்கும் சேவை தளம்
9. வாக்குப் பதிவு நிலவரம் குறித்த கைபேசி செயலி
10. PwD (மாற்றுத்திறனாளிகள்) கைபேசி செயலி

ஆ. தலைமைத் தேர்தல் அதிகாரியின் IT & ICT முயற்சிகள்

11. மனுதாக்கல் -தலைமைத் தேர்தல் அதிகாரியின் வலைதளம்
12. தேர்தல் நடத்தை விதிமுறைகள்
13. பறிமுதல் அறிக்கை (பணம் / பொருட்கள்பறிமுதல்)
14. கருடா - பறக்கும் படைகள்/நிலையான கண்காணிப்புக் குழுக்கள், EVM/VVPAT வாகனங்கள் GPS கருவிகள்மூலம் கண்காணித்தல்
15. நட்சத்திர பேச்சாளருக்கான அனுமதிகள்
16. இந்தியத் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்ட பொது / காவல் / செலவினப் பார்வையாளர்கள் வருகையை கண்காணிக்கும் வலைதளம் மற்றும் கைபேசி செயலி
17. வாக்குப்பதிவு பணியாளர்களை கணினிமூலம் பரவலாக்குதல்
18. காவல் பணியாளர்களை பரவலாக்குதல்
19. நுண்பார்வையாளர்களை பரவலாக்குதல்
20. எண்ணுகை பணியாளர்களை பரவலாக்குதல்
21. தபால் வாக்குகள் அளித்தல் மற்றும் பெறுதலை ஆன்லைன் மூலம் கண்காணிக்கும் வலைதளம்
22. வாக்காளர்கள் தேர்தல் நடைமுறையில் பங்கேற்க அறிவூட்டல் (SVEEP)
23. TERDAL கைபேசி செயலி

24. PMS (வாக்குப்பதிவு கண்காணிப்பு அமைப்பு)
25. உயிர்மருத்துவக்கழிவுகள் அகற்றுதலை கண்காணிக்கும் கைபேசி செயலி/வலைதளம்
26. வாக்குச்சாவடியில் வரிசை நிலை அறிதல்.
27. நடவடிக்கைகளின்போது இணைய ஒளிபரப்பு
28. வாக்கு எண்ணிக்கை நிலவரம் மற்றும் முடிவுகள் – தலைமைத் தேர்தல் அதிகாரியின் வலைதளம்

மாநிலத் தொடர்பு மையம் (SCC)

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்தில், அழைப்புகளை ஏற்பதற்காக ஒரு நிரந்தர 4 இருக்கைகள் கொண்ட மாநிலத் தொடர்பு மையம் கட்டணமில்லா எண் 1800 4252 1950-ல் ஆண்டு முழுவதும் செயல்பட்டு வருகிறது. இதுவரை மொத்தம் 4,323 புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மாவட்டத் தொடர்பு மையம் (DCC)

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, மாவட்டத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தில், அழைப்புகளை ஏற்பதற்காக ஒரு நிரந்தர 2 இருக்கைகள் கொண்ட மாவட்டத் தொடர்பு மையம் கட்டணமில்லா எண் 1950-ல் ஆண்டு முழுவதும் செயல்பட்டு வருகிறது. இதுவரை 1,111 புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

GPS அடிப்படையிலான வாகன கண்காணிப்பு அமைப்பு

பறக்கும் படைகள்/நிலையான கண்காணிப்புக் குழுக்கள், வீடியோ கண்காணிப்புக் குழுக்கள், EVM/ VVPAT எடுத்துச் செல்லும் வாகனங்கள், மண்டலக் குழு வாகனங்கள், துரித நடவடிக்கை வாகனங்கள், EVM மீள பெறப்படும் வாகனங்கள் இருப்பிடத்தை கண்காணிக்கும் பொருட்டு GPS அடிப்படையிலான வாகன கண்காணிப்பு அமைப்புமூலம் செயல்படுத்தப்பட்டது.

இணைய ஒளிபரப்பு

46,207 (பிரச்சினைகளால் பாதிக்கப்படக்கூடிய மற்றும் மிகவும் பதற்றமான 11,449 வாக்குச்சாவடிகள் உள்பட) வாக்குச் சாவடிகளில் இணைய ஒளிபரப்பு செய்யப்பட்டது.

2021 செப்டம்பர் 13]

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை விநியோகம்

*இந்தியத் தேர்தல் ஆணையக் கடித எண் 22/2/*INST/ECI/FUNC/ ERD/ ER*/2014, நாள் 7-4-2017 இல் கூறப்பட்ட வழிகாட்டுதல்களின்படி, இந்தியாவில் முதல் முறையாக இந்திய அஞ்சல் துறையின் விரைவு அஞ்சல் சேவைமூலம் வாக்காளர்களுக்கு* PVC *வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகளை அவர்களின் இல்லத்திற்கே சென்று வழங்குவதற்கான ஏற்பாட்டினை இத்துறை செய்தது. அதன்படி சிறப்பு சுருக்க முறைத் திருத்தம் 2021-ன்போது, 21,39,395* PVC *வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் அச்சிடப்பட்டு இந்திய அஞ்சல் துறையின் விரைவு அஞ்சல் சேவைமூலம் வாக்காளர்களின் இல்லத்திற்கே சென்று விநியோகிக்கப்பட்டன. தொடர் திருத்த காலத்தில்* (Continuous Updation Period) *(அதாவது, 20-1-2021 முதல் வேட்புமனு தாக்கலுக்கு 10 நாட்களுக்கு முன்னர் வரை) 3,65,116* PVC *வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் அச்சிடப்பட்டு வாக்காளர்களுக்கு இந்திய அஞ்சல் துறையின் விரைவு அஞ்சல் சேவை மூலம் விநியோகிக்கப்பட்டன.*

வாக்காளர் தகவல் சீட்டுகள்

இந்தியத் தேர்தல் ஆணையம், தற்போது 99 சதவீதத்திற்கும் அதிகமான வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் 99 சதவீதத்திற்கும் அதிகமான நபர்களுக்கு ஆதார் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. இதனை கருத்தில் கொண்டு, புகைப்பட வாக்காளர் சீட்டு வாக்களிப்பதற்கான தனித்த அடையாள ஆவணமாக இனிமேல் ஏற்றுக்கொள்ளப்படாது என இந்தியத் தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது. இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, வாக்காளர் சீட்டுகளின் விநியோகம் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள்மூலம் 1-4-2021 அன்று நிறைவடைந்தது.

பிரெய்லி வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகளின் விநியோகம்

பார்வை குறைபாடுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் பிரெய்லி வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்க இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. இத்துறை தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், பிரெய்லி சிறப்பு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகளை 3,538 பார்வை

[2021 செப்டம்பர் 13

திறன் குறைபாடுள்ள வாக்காளர்களுக்கு விநியோகித்துள்ளது, 2019 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் முடிந்த பிறகும், 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்குமுன்பு வரையும், 41,599 பிரெய்லி வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் இத்துறையால் அனைத்து மாவட்டங்களுக்கும் ஏற்கெனவே விநியோகிக்கப்பட்டன.

பிரெய்லி வாக்காளர் தகவல் சீட்டு விநியோகம்

சாதாரண வாக்காளர் சீட்டுடன் கூடுதலாக பிரெய்லி வசதிகள் இடம் பெற்ற புகைப்பட வாக்காளர் சீட்டினையும் பார்வை குறைபாடுள்ள வாக்காளர்களுக்கு அச்சிட்டு விநியோகம் செய்ய இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. அதன்படி, 60,884 பிரெய்லி பிரத்யேக வாக்காளர் சீட்டுகள் விநியோகம் 3-4-2021 அன்று நிறைவடைந்தது.

3. 2021-2022-ல் மேற்கொள்ளப்படவுள்ள முக்கிய நிகழ்வுகள்

3.1. 1-1-2022-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறைத் திருத்தம்

1-1-2022-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்ட, வருடாந்திர வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தம் குறித்த கால அட்டவணையை, இந்தியத் தேர்தல் ஆணையம் கீழ்க்கண்டவாறு அறிவித்துள்ளது:

வரிசை எண்	செயல்பாடு	காலவரையறை
1.	**முன்-திருத்தச் செயல்பாடுகள்** (i) வாக்காளர் விவரங்களில் ஒத்த பதிவுகள்/பலமுறை பதிவுகள், தர்க்கப் பிழைகள் ஆகியவற்றை நீக்குதல் (ii) வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலமாக வீடு வீடாக சென்று சரிபார்த்தல் (iii) பிரிவுகளை உரிய முறையில் உருவாக்குதல் (iv) வாக்குச்சாவடி நிலையங்களை மறுசீரமைத்தல்	*9-8-2021 (திங்கட்கிழமை) முதல் 31-10-2021 (ஞாயிற்றுக்கிழமை) வரை*

2021 செப்டம்பர் 13]

திருத்தச் செயல்பாடுகள்		
2.	ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் வெளியீடு	1-11-2021 (திங்கட்கிழமை)
3.	ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் சமர்ப்பிப்பதற்கான காலம்	1-11-2021 (திங்கட்கிழமை) முதல் 30-11-2021 (செவ்வாய்க் கிழமை வரை)
4.	சிறப்பு முகாம் நடைபெறும் நாட்கள்	13-11-2021 (சனிக்கிழமை), 14-11-2021 (ஞாயிற்றுக்கிழமை), 27-11-2021 (சனிக்கிழமை) மற்றும் 28-11-2021 (ஞாயிற்றுக்கிழமை)
5.	ஏற்புரைகள் மற்றும் மறுப்புரைகள் மீது நடவடிக்கை எடுத்தல்	20-12-2021 (திங்கட்கிழமை)
6.	இறுதி வாக்காளர் பட்டியல் வெளியீடு	5-1-2022 (புதன் கிழமை)

3.2. கருடா (GARUDA)

கருடா (ஒருங்கிணைந்த இருப்பிட விவர மின்னிலக்கச் செயலி) என்பது வாக்குச் சாவடி நிலை அலுவலரின் அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைக்கும் கைபேசிக்குள் உருவாக்கப்பட்ட ஆண்டிராய்டு அடிப்படையிலான ஒரு செயலி ஆகும். வாக்குச் சாவடி நிலை அலுவலர்-வலைதளச் செயலியின் (BLONET App) அனைத்து சிறப்பு அம்சங்களையும் உள்ளடக்கிய வடிவமைப்பும் எளிதில் புரிந்துகொள்ளத்தக்க வகையில் ஒருங்கிணைந்து உருவாக்கப்பட்டதாகும். "கருடா" எனும் பெயரைப் போன்றே ஒருங்கிணைந்த கைபேசி அடிப்படையிலான இச்செயலி கீழ்க்காணும் கூறுகளை உள்ளடக்கியதாகும்:

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

1. சரிபார்ப்புப் பட்டியல் / வாக்காளர்கள் குறித்த கள ஆய்வு
2. வாக்குச் சாவடி மையத்தின் புவியியல் தகவல் அமைப்பின் (GIS) ஒருங்கிணைப்புகளை [அட்ச ரேகை (Latitude) மற்றும் தீர்க்க ரேகை (Longitude)] படம் பிடித்தல்
3. வாக்குச்சாவடியிலுள்ள உறுதி செய்யப்பட்ட குறைந்தபட்ச வசதிகள் (AMF) மற்றும் விரிவாக்கப்பட்ட குறைந்தபட்ச வசதிகள் (EMF) ஆகியவற்றின் நிலைகளை சமர்ப்பித்தல்
4. வாக்குச்சாவடி மையத்தின் புகைப்படங்கள் மற்றும் வாக்குச்சாவடி முகவரிகள் பதிவேற்றம்
5. செயலி மூலமாக படிவம் சமர்ப்பித்தல்

மேற்கண்ட கூறுகளை சிறப்பு சுருக்க முறைத் திருத்த காலத்திற்கு முன்பும், சிறப்பு சுருக்க முறைத் திருத்த காலத்தின் போதும், இச்செயலியை வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் பயன்படுத்தப்படும். அதனை மேலும் செம்மைப்படுத்துவதற்கான கருத்துகளை வழங்கவும், அனைத்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மேற்குறிப்பிட்ட (2,3 மற்றும் 4) சிறப்பம்சங்களை வாக்குச்சாவடிகள் அமைக்கும்பொழுது பயன்படுத்தலாம். இச்செயலி கூகுல் பிளே ஸ்டோரில் கிடைக்கப்பெறும்.

இந்தியத் தேர்தல் ஆணையத்தால் 10-8-2021 அன்று கருடா செயலி குறித்தநேரடி பயிற்சி (Live Demo) நிகழ்வுகள் காணொளிக் காட்சி மூலமாக நடத்தப்பட்டது. மேற்கண்ட பயிற்சியில் தலைமைத் தேர்தல் அலுவலகத்தின் மாநில அளவிலான முதன்மைப் பயிற்சியாளர்களும், தொழில்நுட்பக் குழுவினரும் பங்கேற்றனர். இதனைத்தொடர்ந்து, மாவட்ட அளவிலான மாவட்ட அலுவலர்கள் 24-8-2021 அன்று காணொளி காட்சிமூலம் நடத்தப்பட்டது.

3.3. 1-1-2022-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்ட வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தம் மற்றும் தேசிய வாக்காளர் தினம், 2022

1-1-2022-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்ட, வருடாந்திர வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தம் குறித்த கால அட்டவணையை, இந்தியத் தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டது. இச்சுருக்க முறைத் திருத்தத்துடன் விரிவான

2021 செப்டம்பர் 13]

*"வாக்காளர் தேர்தல் நடைமுறையில் பங்கேற்க முறையான அறிவூட்டல்" (*Systematic Voters Education and Electoral Participation*) (*SVEEP*) பரப்புரை செய்யப்படுகிறது. இந்தியத் தேர்தல் ஆணையத்தால் உருவாக்கப்பட்டுள்ள மக்களாட்சி மற்றும் தேர்தல் மேலாண்மைக்கான இந்திய சர்வதேசப் பயிற்சி நிறுவனத்தில்(*India International Institute of Democracy and Election Management *(*IIIDEM*) மூலம் தலைமை பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. அவர்கள்மூலம் உரிய அலுவலர்களுக்கு வாக்காளர் பட்டியல் திருத்தம் குறித்த பல கட்டப் பயிற்சிகளும் வழங்கப்படும். இதனைத் தொடர்ந்து, தேசிய வாக்காளர் தினம் 25-1-2022–ல் கொண்டாடப்படும்.*

4. நிதி ஒதுக்கீடு

தேர்தல் செலவுகளுக்கான நிதி ஒதுக்கீடு "2015.00. தேர்தல்கள்" என்ற பெருந்தலைப்பின்கீழ் மானியக் கோரிக்கை எண். 38.02.இல் இடம் பெற்றுள்ளது. 2021-2022 ஆம் நிதி ஆண்டில், தேர்தல் பணிகளுக்காக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள அதிகாரிகள் மற்றும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள், 1-1-2022–ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக்கொண்டு மேற்கொள்ளப்படவுள்ள புகைப்பட வாக்காளர் பட்டியல் தயாரித்தல், திருத்தம் மேற்கொள்ளுதல் மற்றும் புகைப்பட வாக்காளர் பட்டியல் அச்சிடுதல், புகைப்பட வாக்காளர் அடையாள அட்டை வழங்குதல் மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல், 2021 ஆகிய செலவினங்களுக்காக ரூ.795,88,84,000/- (ரூபாய் எழுநூற்று தொண்ணூற்றைந்து கோடியே எண்பத்தெட்டு இலட்சத்து எண்பத்து நான்காயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன செலவினங்களுக்கான மதிப்பீடுகள் சில முக்கிய இனங்களுக்கு தலைப்பு வாரியாக கீழே விவரமாக விவரிக்கப்பட்டுள்ளன:

102. தேர்தல் அதிகாரிகள்

AA. சட்டமன்றப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள்

தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் மாவட்டத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் தேர்தல் பணிக்காக நியமிக்கப்பட்டுள்ள

[*2021 செப்டம்பர் 13*

அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் ஆகியோரின் ஊதியம் மற்றும் படிகள், பயணச் செலவுகள், அலுவலகச் செலவினம், சில்லரைச் செலவினம், தொலைபேசிக் கட்டணங்கள் முதலான செலவினங்கள் இந்தத் துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. 2021-2022 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.29,19,05,000/-(ரூபாய் இருபத்தொன்பது கோடியே பத்தொன்பது இலட்சத்து ஐந்தாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் 50 சதவீதத்தினை ஒன்றிய அரசு திரும்ப அளிக்கும்.

103. புகைப்பட வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்

AA. சட்டமன்றப் பேரவைத் தொகுதிகள்

இம்மாநிலத்திலுள்ள அனைத்து சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் புகைப்பட வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்தல், திருத்துதல் மற்றும் அச்சிடுவதற்கான செலவினங்கள் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். இப்பணிக்காக நியமிக்கப்படும் தற்காலிக பணியாளர்களின் சம்பளம் மற்றும் படித்தொகைகள், வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு வழங்கப்படும் உழைப்பூதியம், எழுதுபொருள், அச்சிடும் செலவுகள் ஆகியவையும் இத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். மேலும், தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்களை பராமரிப்பதற்காக நிரந்தர அடிப்படையில் பணியமர்த்தப்பட்டுள்ள ஓர் உதவியாளர் மற்றும் ஒரு பதிவுரு எழுத்தர் ஆகியோருக்கு ஊதியம் மற்றும் படித்தொகைகள் ஆகியவை இத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும். தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பு, வாக்காளர் பட்டியல் தரவுதளத்தை பராமரித்தல், தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டங்கள், கோரிக்கைகள் மற்றும் மறுப்புரைகள் அளிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு தகவல் கடிதங்கள் அனுப்புவதற்கான அஞ்சல் கட்டணம் ஆகிய செலவினங்களும் இந்தத் துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2021-2022 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.142,33,24,000/-(ரூபாய் நூற்று நாற்பத்திரண்டு கோடியே முப்பத்து மூன்று இலட்சத்து இருபத்து நான்காயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் 50 சதவீதத்தினை ஒன்றிய அரசு திரும்ப அளிக்கும்.

2021 செப்டம்பர் 13]

AC. மேலவைத் தொகுதிகள்

மேலவைத் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் அச்சிடுதல் ஆகிய செலவினங்கள் இத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2021-2022 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.9,000/- (ரூபாய் ஒன்பதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

104. நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநில சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

AA. மக்களவைக்கும் சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் நடைபெறும் தேர்தல்கள்

மக்களவை மற்றும் சட்டமன்றப் பேரவைக்கு தேர்தல்கள் நடைபெறும்போது பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் (EVMs) மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகள் (VVPATs) ஆகியன இராணிப்பேட்டை, இராமநாதபுரம், விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலுள்ள தமிழ்நாடு வேளாண்பொருள் ஒழுங்குமுறை விற்பனைக்கூட கிடங்குகளிலும், திருவள்ளூர், சென்னை, விருத்தாசலம், கள்ளக்குறிச்சி, நாகப்பட்டினம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களிலுள்ள தமிழ்நாடு சேமிப்புக் கழக நிறுவனக் கிடங்குகளிலும் வைக்கப்பட்டுள்ளன. இக்கிடங்குகளுக்கான வாடகைக் கட்டணம் வழங்குவதற்கான செலவுகள் மேற்கண்ட இத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் செலவிடப்படும். 2021-2022 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.2,60,52,000/- (ரூபாய் இரண்டு கோடியே அறுபது இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்களில் 50 சதவீதத்தினை ஒன்றிய அரசு திரும்ப அளிக்கும்.

105. மக்களவைத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

AA. இடைத்தேர்தல்கள்

மக்களவைத் தொகுதிகளில் நடைபெறும் இடைத்தேர்தல் தொடர்பான அனைத்து செலவினங்களும் இத்துணைத் தலைப்பின்கீழ் பற்றுவைக்கப்படும். 39. கன்னியாகுமரி மக்களவைத்

தொகுதிக்கான இடைத்தேர்தல் 6-4-2021 அன்று நடைபெற்றது. நடைபெற்ற இடைத்தேர்தலுக்காக, வாக்குப்பதிவு மற்றும் வாக்கு எண்ணிக்கையில் ஈடுபடும் அலுவலர்கள், வாக்கு எண்ணிக்கை மையங்களில் தடுப்பு அரண் ஏற்படுத்துவதற்கான செலவு, பாரத மின்னணு (BEL) நிறுவன தொழில்நுட்ப அலுவலர்களுக்கான உழைப்பூதியம் மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்வதற்காக ரூ.6,18,00,000/- (ரூபாய் ஆறு கோடியே பதினெட்டு இலட்சம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், தற்பொழுது தமிழ்நாட்டிலிருந்து நாடாளுமன்றத்திற்கான மக்களவையில் காலியிடம் ஏதுமில்லை.

AB. மக்களவைத் தேர்தல்

மக்களவைக்கான பொதுத் தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் அனைத்தும் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. 17-வது மக்களவைக்கானப் பொதுத் தேர்தல் 18-4-2019 அன்று நடைபெற்றது.

2021-2022 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் மக்களவைத் தேர்தலுக்கான செலவினத்தொகை ரூ.1,00,25,000/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்தைந்தாயிரம் மட்டும்) எழுதுபொருள் மற்றும் அச்சிடும் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொதுத் தேர்தல் தொடர்பான அனைத்து செலவினங்களையும் ஒன்றிய அரசே ஏற்கின்றது. இச்செலவினங்கள் அனைத்தும் முதலில் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்பட்டு, பின்னர் ஒன்றிய அரசிடமிருந்து முழுமையாக திரும்பப் பெறப்படும்.

106. மாநில சட்டமன்றப் பேரவை தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்

AA. மாநில சட்டமன்றப் பேரவை

மாநில சட்டமன்றப் பேரவைக்கு நடைபெறும் பொதுத் தேர்தல்கள் மற்றும் மாநில பேரவைக்கான இடைத்தேர்தல்கள் இத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ்மேற்கொள்ளப்படும்.

2021, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுத் தேர்தலுக்காக, தற்காலிக ஊழியர்களின் சம்பளம், படிகள் மற்றும் பயணப்படிகள், பிரிவு எழுத்தர்களுக்கான கூலி, தேர்தல் பணிகளில் ஈடுபட்ட

2021 செப்டம்பர் 13]

அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கான மதிப்பூதியம், தொலைபேசிக் கட்டணங்கள், மிக முக்கியமான நிகழ்வுகளைப் புகைப்படம் எடுத்தல் போன்றவற்றுக்கான இதர சில்லரைச் செலவினங்கள், தேர்தல் பார்வையாளர்களுக்கான செலவினங்கள், வாக்குச் சாவடி வாக்குப்பதிவினை நேரடியாக பதிவு செய்தல் மற்றும் குறுந்தகவல்மூலம் வாக்குப்பதிவை கண்காணித்தல் தொடர்பான செலவினங்கள் இத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். தேர்தல் நடத்தை விதிமுறைகளை செயல்படுத்தவும், தேர்தல் செலவுகளைக் கண்காணிக்கவும் பறக்கும்படை, வீடியோ கண்காணிப்புக் குழு, நிலையான கண்காணிப்புக் குழு மற்றும் கணக்கு மதிப்பீட்டுக் குழு போன்ற பல குழுக்கள் கண்காணிப்பதற்காக ஏற்படுத்தப்படுகின்றன. GPS *அடிப்படையில் வாகன கண்காணிப்பு அமைப்பதற்கான செலவு மற்றும் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தின்மூலம் வாக்களிப்பது குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த தேர்தல் நாளன்று செய்யப்படும் விளம்பரத்திற்கான செலவினம், வாக்கு எண்ணும் மையங்களில் மேற்கொள்ளப்படும் தடுப்புகள் மற்றும் மின்விளக்கு வசதிகளுக்கான செலவினம், தேர்தலுக்குத் தேவையான பொருட்கள், எழுதுபொருட்களுக்கான செலவினம், "வாக்காளர் தேர்தல் நடைமுறையில் பங்கேற்க முறையான அறிவூட்டல்" பிரச்சாரத்திற்கான செலவினம், வாக்குப்பதிவு மற்றும் எண்ணிக்கையில் ஈடுபடும் அலுவலர்கள் மற்றும் பாரத மின்னணு* (BEL) *நிறுவன தொழில்நுட்ப அலுவலர்களுக்கான உழைப்பூதியம், மத்திய துணை இராணுவப் படை மட்டுமின்றி, ஓய்வுபெற்ற காவல் அதிகாரிகள் மற்றும் முன்னாள் இராணுவ வீரர்களுக்கு வழங்கப்படும் உழைப்பூதியம் ஆகியவையும் இத்துணைத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படும். தேர்தலின்போது பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் எரிபொருள், எண்ணெய் மற்றும் மசகுப் பொருட்களுக்கான செலவு, அச்சுக் கட்டணம் ஆகியவையும் இத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2021-2022 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.617,75,20,000/- (ரூபாய் அறுநூற்று பதினேழு கோடியே எழுபத்தைந்து இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும் அனைத்து செலவினங்களையும் மாநில அரசே ஏற்கும்.

[2021 செப்டம்பர் 13

AB. மாநில சட்டமன்ற மேலவை

மாநில சட்டமன்ற மேலவைத் தேர்தலுக்கான செலவினங்கள் இத்துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் பற்றுவைக்கப்படும். 2021-2022 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ.17,000/- (ரூபாய் பதினேழாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

108. வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்

AA. வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம்

வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டை வழங்குவதற்கான செலவினம் இத்துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். 2021-2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 3,00,19,000/- (ரூபாய் மூன்று கோடியே பத்தொன்பதாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தில் 50 சதவீதத்தினை ஒன்றிய அரசு திரும்ப அளிக்கும்.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் தலைமையின்கீழ் செயல்படும் முழு தேர்தல் நிர்வாக அமைப்பும், தனது பொறுப்பினை முற்றிலும் உணர்ந்துகொண்டு, பிழைகளற்ற வாக்காளர் பட்டியல்களைத் தயாரிக்கவும், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்துவதற்கும் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. இந்த மிகப் பொறுப்பான குறிக்கோளை அடைவதற்குத் தேவையான முழு ஒத்துழைப்பையும் இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு தமிழக அரசு வழங்கி வருகின்றது.

இணைப்பு-III

(112 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 36—திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2021-2022

முகவுரை

"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை"

(திருக்குறள் 512)

மாநிலத்திற்கான ஆண்டுத் திட்டங்கள் மற்றும் ஐந்தாண்டுத் திட்டங்களைத் தயாரித்தல் மாநிலத் திட்டச் செலவினங்கள், இருபது அம்சத் திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகிய திட்டங்களைக் கண்காணித்து ஆய்வு செய்தல், ஆகியவை திட்டம் மற்றும் வளர்ச்சி துறையில் முதன்மை பொறுப்புகளாக ஆரம்பக் காலத்தில் இருந்தன. மத்திய திட்டக் குழு கலைக்கப்பட்டு, வரவு செலவுத் திட்டத்தில், திட்டம் மற்றும் திட்டம் சாராத பகுதிகள் ஒன்றாக சேர்க்கப்பட்டதால் இத்துறையின் செயல்பாடுகள் மாற்றியமைக்கப்பட்டு, தமிழ்நாட்டில் வளர்ச்சி சார்ந்த திட்டங்களுக்கான நீண்டகால செயல் உத்திகள் அடிப்படையில் இலக்கு நிர்ணயித்தல், இடைப்பட்ட காலங்களில் செயல்படுத்த தேவையான வளர்ச்சி சார்ந்த திட்டங்களை முன்னிலைப்படுத்தல் மற்றும் அம்முயற்சிகளில் கொள்கை ஒருங்கிணைப்பினை உறுதிப்படுத்துதல் ஆகிய மாற்றங்களை உருவாக்குவதே இத்துறையின் பங்காகும். நிர்வாகத் துறைகளால் தயார் செய்யப்படும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்த கோப்புகளை இத்துறை கூர்ந்தாய்வு செய்கின்றது. முழுமையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக பல்வேறு அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்தும் மற்றும் மாநிலத் திட்டக் குழு, பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மற்றும் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகளின் வல்லுநர்களின் சிறப்புத் திறமைகளை பயன்படுத்தியும் கொள்கைகளை வகுக்கிறது. மேலும்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இத்துறை மத்திய திட்டக் குழுவிற்கு பதிலாக ஏற்படுத்தப்பட்ட புதிய அமைப்பான நித்தி ஆயோக் (NITI Aayog) உடன் கலந்துரையாடும் மாநில அரசின் முகமைத் துறையாகும்.

தற்பொழுது, வரவு செலவுத் திட்டத்தில், திட்டம் மற்றும் திட்டம் சாராத பகுதிகள் ஒன்றாக சேர்க்கப்பட்டு, மத்திய திட்டக் குழுவிற்கு பதிலாக, நித்தி ஆயோக் (NITI Aayog) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு, நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள், முதன்மையான நோக்கமாக உருவாக்கப்பட்டுள்ளது. இத்துறை நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் குறியீடுகளை அடைவதற்கு, வருங்காலத்தில் உலகத் தரத்திற்கு சமூக, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் காரணிகளை அடைய மற்ற துறைகளுடன் இணைந்து செயலாற்றுகிறது.

இத்துறை, நித்தி ஆயோக் (NITI Aayog) உடன் ஒருங்கிணைந்து கலந்துரையாடும் மற்றும் பிரகதி மற்றும் இ-சமிக்ஷா-வுக்கான மாநில அரசின் முகமைத் துறையாகும். பிரகதியின்கீழ் (PRAGATI-Pro-Active Governance and Timely Implementation) மாண்புமிகு பாரத பிரதமர் அவர்கள், மத்திய அமைச்சகங்கள் மற்றும் மாநில அரசுகளுடன் உயர் முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்கள் மற்றும் முன்னோடி திட்டங்களை நேரடியாக விவாதித்து அறிந்து கொள்கிறார். மேலும், அரசு மேற்கொள்ளும் புதிய முயற்சிகளுக்குத் தேவையான ஒருங்கிணைப்பு பணிகளையும், துறைகளிடமிருந்து பெறப்படும் பொருண்மைகள் குறித்த நடப்பு நிலையைப் பிரகதியின்கீழ் (PRAGATI) பதிவேற்றம் செய்கிறது.

மாநில திட்டக் குழு, பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை மற்றும் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை வல்லுநர்களின் சிறப்புத் திறமைகளை பயன்படுத்தியும் கொள்கைகளுக்கான ஆலோசனைகளை வழங்குகிறது. மேலும், தமிழ்நாடு புத்தாக்க முயற்சி வழியாக ஆதாரங்களின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட கொள்கைகளுக்கு திட்டச் செயலாக்கம் அளிக்கிறது.

மேலும், சிறப்பு முயற்சிகள் திட்டத்தின்கீழ் மேற்பார்வையிடப்பட்டு வரும் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் மற்றும் சில புதிய சிறப்பு முயற்சிகளாக (New Special Initiatives) முக்கியமான உட்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி குறித்த திட்டங்களின் முன்னேற்றத்தை வேகப்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

2021 செப்டம்பர் 13]

துறையின் வலைத்தளமான www.tn.gov.in/department/*23இல் இத்துறையின் செயல்பாடுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.*

1.0 முக்கிய நடவடிக்கைகள்

i. *நீண்டகால செயல் உத்திகளை செயல்படுத்துதல் மற்றும் இடைப்பட்ட கால செயல்பாட்டுத் திட்டமிடுதலை நடைமுறைப்படுத்துதல்;*

ii. *நித்தி ஆயோக் (*NITI Aayog*) அமைப்புடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்;*

iii. *மாநில நில பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம் வாயிலாக நிலம் மற்றும் நீர் பயன்பாடு குறித்து குறிப்பான திட்டங்களின் தயாரிப்பு மற்றும் செயல்பாடுகள், சுற்றுச்சூழல் காரணிகளான நிலம், காற்று மாசடைதல், புவி வெப்பமயமாதல் ஆகியவற்றின் தாக்கம் குறித்து ஆய்வு மேற்கொள்ளுதல்;*

iv. *நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகளை 2030-ல் அடைய மாநில அரசின் முயற்சிகளுக்கு அனைத்துத் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல் மற்றும் நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளை கண்காணித்தல்;*

v. *வளர்ச்சிக் குறியீட்டை அளவிடுதல் மற்றும் பெரிய திட்டங்களை மதிப்பீடு செய்தல்;*

vi. *முன்னேற விழையும் மாவட்டங்களை மாநில அளவில் ஒருங்கிணைத்தல் மற்றும் கண்காணித்தல்;*

vii. *பொருளாதார மற்றும் சமூகக் காரணிகளின் அடிப்படையில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளின் சீரான வளர்ச்சியை உறுதி செய்யும் பொருட்டு மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி மூலமாக செயல்படுத்தப்படும் திட்டங்களைக் கண்காணித்தல்;*

viii. *தமிழ்நாடு புத்தாக்க முயற்சித் திட்டங்களைப் பரிந்துரை செய்தல், நிர்வகித்தல் மற்றும் கண்காணித்தல்;*

ix. *அரசுத் துறைகளில் ஆதாரங்கள் அடிப்படையிலான கொள்கை உருவாக்கத்தை மேம்படுத்துதல்;*

[2021 செப்டம்பர் 13

x. *மாவட்ட திட்டக் குழுவின் ஓர் அங்கமாக செயல்படும் மாவட்ட திட்டப் பிரிவின் மூலமாக மாவட்டத்தின் வளர்ச்சி திட்டங்களின் தயாரிப்பினை மேற்பார்வையிடுதல்;*

xi. *பல்வேறு அரசுத் துறைகளை உள்ளடக்கிய சிறப்பு மற்றும் புதுமையான திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ஒருங்கிணைந்து செயல்படுதல்;*

xii. *பெரிய உள்கட்டமைப்பு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து தலைமைச் செயலாளர் அவர்களால் சீராய்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுதல்;*

xiii. *மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களுக்கு மாற்றாக மாநில நிதியிலிருந்து சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்துதல்;*

xiv. *வளர்ச்சித் திட்டங்கள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் ஆகியவற்றை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மூலமாக மதிப்பீடு செய்தல்;*

xv. *மாநில திட்டக் குழு, பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மற்றும் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகள் செயல்படுவதற்கான நிர்வாக வசதிகள் செய்தல்;*

xvi. *இருபது அம்சத் திட்டத்தின்கீழ் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் கண்காணிப்பு மற்றும் செயலாக்கம் குறித்து விவரங்கள் சேகரித்தல் மற்றும் தொகுத்தல்;*

xvii. *மாநில வருவாய் மதிப்பீடுகள், பொருளாதாரக் கணக்கெடுப்பு, வேளாண் கணக்கெடுப்பு, சமூகப் பொருளாதார ஆய்வுகள், சிறப்பு ஆய்வுகள், வயது முதிர்ந்தோரின் வாழ்வாதாரம் குறித்த ஆய்வு, மாநில பொருளாதாரத்தின் மாதாந்திர அறிக்கைகள் ஆகியவை குறித்து, பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறைமூலம் பொது மற்றும் தனியார் துறைகளிடமிருந்து புள்ளி விவரங்களை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் பரவச் செய்தல்;*

2021 செப்டம்பர் 13]

xviii. *சிறப்பு முயற்சிகள் பிரிவின்கீழ் 'மெட்ரோ இரயில் திட்டம்' போன்ற புதிய மற்றும் சிறப்பு திட்டங்களை செயல்படுத்துதல்; மற்றும்*

xix. *புதிய சிறப்பு முயற்சிகளாக முக்கியமான உள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சி குறித்த திட்டங்களின் முன்னேற்றத்தை வேகப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளுதல்.*

2.0 துறையின் செயல்பாடுகள்

2.1 நீடித்த வளர்ச்சி இலக்குகள்

➢ **முகவுரை**

2030 ஆம் ஆண்டிற்கான நீடித்த நிலைத்த வளர்ச்சிக்கான இலக்குகள் (SDGs) 2015-க்கான புத்தாயிரம் வளர்ச்சி இலக்குகளிடமிருந்து பெறப்பட்டது. பொருளாதார மேம்பாடு மற்றும் சமூக உள்ளடக்கம் ஆகியவற்றுடன் சுற்றுசூழல் நிலைத் தன்மையையும் முக்கியமான நிகழ்ச்சி நிரலாகக் கொண்டு உலகளாவிய மாநாடுகளின் தொடர்ச்சியான விவாதத்தின் அடிப்படையில், இந்த நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. செப்டம்பர் 2015-ல் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொது சபையில் இந்தியா உட்பட 193 நாடுகள், 17 இலக்குகள், 169 குறிக்கோள்கள் மற்றும் 300 உலகளாவிய குறிகாட்டிகளுடன் 1-1-2016-ல் நடைமுறைக்கு வந்த நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்கினை ஏற்றுக் கொண்டன.

2020 ஆம் ஆண்டு முதல் 2030 வரையிலான பத்தாண்டு காலம், செயல்பாட்டிற்கான பத்தாண்டு காலமாக (தசாப்தமாக) அறிவிக்கப்படுவதுடன், வறுமை மற்றும் பாலினச் சமத்துவம் முதல் பருவ நிலை மாற்றம், சமத்துவமின்மை மற்றும் நிதிப் பற்றாக்குறை உள்ளிட்ட, உலகத்தின் மிகப்பெரும் சவால்களை எதிர்கொள்வதற்கான நீடித்த தீர்வை எய்துவதற்கான வழிவகைகளை துரிதப்படுத்துதலை முன்னிறுத்துகிறது. இருப்பினும், உலகம் தழுவிய கொரோனா தொற்று பரவல், இப்பணிகளை துரிதப்படுத்துதலுக்கு மாறாக, உலகின் பல்வேறு நாடுகளை, குறிப்பாக சமூகம் மற்றும் பொருளாதார காரணிகளில், மிகவும் பாதகமான நிலைக்கு தள்ளியுள்ளது. இந்தியாவின் நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான தேசிய தன்னார்வ ஆய்வு 2020-ல், கோவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக இந்தியாவில்

[*2021 செப்டம்பர் 13*

வளர்ச்சிப் பணிகளுக்கான வேகம் சீர்குலைந்தது என்பதும் இதன்மூலம் மிகப்பெரிய அளவு சவால்கள் எதிர் கொள்ளப்பட வேண்டியுள்ளது என்பதும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. எனினும், வலுவான, ஒருங்கிணைந்த எதிர் வினையாற்றக்கூடிய அமைப்பை உருவாக்குதற்காக குடிமை சமுதாயத்துடனும், தொழில் துறையுடனும் கூட்டாண்மையை உருவாக்கியுள்ள மாநிலங்கள் மற்றும் தேசத்தின் மெச்சத்தக்க நெகிழ்வு திறன் ஆகியவை இத்தருணத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

2.1.1 நீடித்த வளர்ச்சி இலக்குகளின் 5 முக்கிய கொள்கைகள்

மக்கள்

வறுமை மற்றும் பசியை அவற்றின் அனைத்து வடிவங்களிலும் பரிமாணங்களிலும் முடிவிற்குக் கொண்டு வருவதற்கும், அனைத்து மனிதர்களும் கண்ணியத்திலும், சமத்துவத்திலும், ஆரோக்கியமான சூழலிலும் தங்கள் ஆற்றலை நிறைவேற்ற முடியும் என்பதை உறுதிப்படுத்துதல்.

புவி

புவியினை சீரழிவிலிருந்து பாதுகாக்க நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி அதன் இயற்கை வளங்களை நிலையான முறையில் நிர்வகித்தல் மற்றும் காலநிலை மாற்றம் குறித்த அவசர நடவடிக்கை எடுப்பதன்மூலம் இக்கால மற்றும் எதிர்கால தலைமுறையினரின் தேவைகளை பூர்த்தி செய்தல்.

செழுமை

அனைத்து மனிதர்களும் வளமான, நிறைவான வாழ்க்கையை அனுபவிக்க முடியும் என்பதனை உறுதி செய்தல் மற்றும் பொருளாதார, சமூக, தொழில்நுட்ப முன்னேற்றம் ஆகியவை இயற்கையுடனான நல்லிணக்கத்துடன் நடைபெறுதல்.

அமைதி

பயம் மற்றும் வன்முறையற்ற அமைதியான, நியாயமான, அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தினை உருவாக்குதல். அமைதியில்லாமல் நிலைத்த வளர்ச்சியினையும், நிலைத்த வளர்ச்சியில்லாமல் அமைதியையும் எட்ட இயலாது.

சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 13]

கூட்டாண்மை

உலகளாவிய ஒற்றுமையை வலுப்படுத்தும் மனப்பான்மையை அடிப்படையாகக் கொண்ட நிலையான அபிவிருத்திக்கான புத்துயிர் பெற்ற உலகளாவிய கூட்டாண்மை குறிப்பாக ஏழ்மையான மற்றும் மிகவும் பாதிக்கப்படக் கூடியவர்களின் தேவைகள், அனைத்து நாடுகள், பங்குதாரர்கள், மக்களின் பங்களிப்பின்மூலம் இந்த வளர்ச்சிக்கான இலக்குகளை செயல்படுத்த தேவையான வழிமுறைகளை திரட்டுதல்; எவர் ஒருவரும் விடுபடாவண்ணம் அனைவருக்கும் வளர்ச்சியை உறுதி செய்தலே நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முக்கிய அம்சமாகும்.

2.1.2 உலக அளவில் நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகள் மீதான முன்னேற்றத்தினை ஆய்வு செய்திட ஆண்டு தோறும் ஐக்கிய நாடுகளின் பொது மன்ற மாநாடு கூட்டப்படுகிறது. அனைத்து நாடுகளின் அடைவுகள் தரவுகள் வாயிலாக கண்காணிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள் ஒவ்வொரு ஆண்டும் நீடித்த வளர்ச்சி இலக்குகள் அறிக்கையை வெளியிடுகிறது.

2021 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் அறிக்கையின்படி, 162 உலக நாடுகளில் இந்தியா 60.1 மதிப்பெண்களுடன் 120 ஆவது நிலையில் உள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட உலகளாவிய குறிகாட்டிகளின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு இத்தரவரிசைப் பட்டியல் வெளியிடப்படுகிறது. இது தவிர ஒவ்வொரு நாடும் தாம் மேற்கொண்ட முயற்சிகளையும், அடைந்த முன்னேற்றத்தினையும், தன்னார்வ தேசிய ஆய்வு அறிக்கைகளை ஐக்கிய நாடுகள் அவையின் உயர்நிலை அரசியல் குழுவில் சமர்ப்பிக்கிறது. ஐக்கிய நாடுகளின் இம்முயற்சி உலக நாடுகளுக்கு நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைய மேற்கொண்ட முயற்சிகளை மற்ற நாடுகளுக்கு தெரிவிக்கும் வாய்ப்பாக அமைகிறது.

2.1.3 இந்தியாவும் நீடித்த வளர்ச்சி இலக்குகளும்

இந்தியாவில் இந்நீடித்த வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்தும் முகமையாக நித்தி ஆயோக் செயல்படுகிறது. நித்தி ஆயோக் அமைப்பு இந்தியாவிற்கான தன்னார்வ தேசிய ஆய்வு அறிக்கையை தயாரிக்கிறது. நித்தி ஆயோக் அனைத்து இந்திய

[2021 செப்டம்பர் 13

மாநிலங்களுடன் இணைந்து நீடித்த வளர்ச்சி இலக்குகளை நம் நாடு அடைவதற்கு பல செயல்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. 169 குறிக்கோள்களை அடைவதற்கு தேசிய அளவிலான 306 குறிகாட்டிகள் கண்டறியப்பட்டுள்ளன.

நித்தி ஆயோக் அமைப்பு 2018-ல் வெளியிட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்தியா அடிப்படை அறிக்கை தேர்ந்தெடுக்கப்பட்ட 13 இலக்குகளில் 39 குறிக்கோள்களுக்கான 62 குறிக்காட்டிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. டிசம்பர் 2019-ல் வெளியிடப்பட்ட நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய குறியீட்டு அறிக்கை 2.0, 16 இலக்குகளின் 54 குறிக்கோள்களுக்கு உட்பட்ட 100 குறிகாட்டிகளை கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்விரண்டு அறிக்கைகளிலும் தமிழ்நாடு தரவரிசைப் பட்டியலில் 3-வது இடத்தில் உள்ளது. நீடித்த வளர்ச்சி இலக்கு இந்திய தரவரிசை குறியீடு 2021-ல், 74 மதிப்பெண்களுடன் தமிழ்நாடு அகில இந்திய அளவில் இரண்டாம் நிலையில் உள்ளது.

இதற்கான தரவுகள் மத்திய அமைச்சகங்களின் இணைய வாயில்களிலிருந்தும், இரண்டாண்டு / மூன்றாண்டு / ஐந்தாண்டு கால இடைவெளிகளில் நடத்தப்படுகிற மாதிரி ஆய்வுகளிலிருந்தும் பெறப்படுகின்றன. டிசம்பர் 2019-ல் நித்தி ஆயோக் நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான இணையதள பலகையை நிறுவியுள்ளது. மத்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்டச் செயலாக்க அமைச்சகம் பல்வேறு குறிகாட்டிகளுக்கான தரவுகளை சேகரித்து இதற்கென நிறுவப்பட்டுள்ள ஓர் இணைய தளத்தில் அட்டவணைப்படுத்தி வருகிறது.

TRUTH ALONE TRIUMPHS

முன்னேற்றத்தை விரைவுபடுத்தவும், தொடர்ந்து மேம்பாடு அடைவதற்கும், தொடர்ந்த கண்காணிப்பும், கூட்டு முயற்சியும் இன்றியமையாதவை. இந்தியா நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கு ஒவ்வொரு மாநிலத்தின் பங்கேற்பும் அவசியமானதாகும்.

2.1.4 தமிழ்நாடும் நீடித்த வளர்ச்சி இலக்குகளும்

தமிழ்நாடு அரசு, அதனுடைய அடிப்படை கொள்கையான "அனைவருக்கும் அனைத்தும் கிடைக்கச் செய்தல்" என்பதை செயல்படுத்துவதில் உறுதியுடன் உள்ளது. மேலும், நீடித்த

2021 செப்டம்பர் 13]

வளர்ச்சி இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, பல்வேறு மக்கள் நலப் பணிகளுக்கான முயற்சிகளை செயலாக்கி வருகின்றது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், பல்வேறு வாய்ப்புக்களை உருவாக்குவதன்மூலம் ஒட்டு மொத்த வளர்ச்சியை ஏற்படுத்த இயலுவதோடு, செழிப்பான தமிழகத்தை உருவாக்க இயலும் என்பதை வலியுறுத்தியுள்ளார். மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகளில் ஒருவரும் விடுபடா வண்ணம் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பதில் கவனம் செலுத்துவதும் மற்றும் செயல்பாட்டிற்கான பத்தாண்டு காலத்திற்கான வளர்ச்சிக்கான பணிகளும் மற்றும் அதற்கான முன்னேற்றப் பணிகளும் ஐக்கிய நாடுகளின் நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான வரையறையுடன் பொருந்தியுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் புதிய விடியலுக்கான தொலைநோக்கு ஆவணத்தில், பொருளாதாரம், வேளாண்மை, நீர் ஆதாரம், கல்வி மற்றும் வேலைவாய்ப்பு, மருத்துவம், நகர்ப்புற வளர்ச்சி, உயர்தர ஊரக கட்டமைப்பு மற்றும் வளர்ச்சிக்கான சமூக நீதி ஆகிய ஏழு பெரிய துறைகள் கண்டறியப்பட்டுள்ளன. மாநிலம், அதன் துரிதப்படுத்தப்பட்ட, முழுமையான மற்றும் மாநிலத்தில் எவரும் விடுபடாவண்ணம் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகியவற்றில் வேட்கையுடன் இருக்கும்போது நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கீழ்வரும் 16 இலக்குகளும் தானாகவே எய்தப்பட இயலும்.

அனைத்து துறைகளும் தத்தம் கொள்கை விளக்கக் குறிப்பில் தமக்கு தொடர்புடைய நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த விளக்கம் இடம்பெற வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டன. மேலும், தமிழ்நாடு அகில இந்திய அளவில் நீடித்த வளர்ச்சி இலக்குகளில் முதல் இடத்தை பெறுவதோடு, உலக அளவில் தனது தரத்தை மேலும் உயர்த்தும் வண்ணம் அனைத்து துறைகளும் ஒன்றிணைந்து தமது செயல்பாட்டினை மேம்படுத்த வேண்டும் என்று எடுத்துரைக்கப்பட்டது.

நீடித்த வளர்ச்சி இலக்குகளை உலக நாடுகள் முழுமையாக எய்துவதற்கு இந்தியாவும் அதனை முழுமையாக அடைய வேண்டும். இந்தியா இந்த இலக்குகளை அடைவதற்கு தமிழகம் அனைத்து இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடைவதில் முன்னோடி மாநிலமாகத் திகழ வேண்டும்.

[2021 செப்டம்பர் 13

2.1.5 செயல்பாட்டிற்கான அமைப்பு முறை

தமிழகத்தில், நீடித்த வளர்ச்சி இலக்கின் முன்னேற்றத்தை கண்காணிக்கும் பணி, அரசு தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில் முகமை துறைகளின் செயலர்கள் உறுப்பினர்களாக உள்ள உயர் அதிகாரக் குழு அளவில் மேற்கொள்ளப்படுகிறது. திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையானது, அனைத்து துறைகளிலும் நீடித்த வளர்ச்சி இலக்கின் செயலாக்கத்தின் கண்காணிப்பில் ஒருங்கிணைப்பு அமைப்பாக உள்ளது. இதன் கீழ்வரும், மாநில திட்டக் குழு, இப்பொருள் தொடர்பான, கொள்கை அளவிலான விவாதங்களின்மூலம் அரசுக்கு கருத்துரு வழங்கும் பொறுப்பினையும், பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையானது, நீடித்த வளர்ச்சி இலக்கிற்கான தரவுகளை பெறுவது, ஒருங்கிணைப்பது தொடர்பான பணிகளுக்கான பொறுப்பினையும் கொண்டுள்ளது. இவ்வாறு, மாநிலத்தில் நீடித்த வளர்ச்சி இலக்கு தொடர்பான பணிகளுக்கான நிறுவனம் சார்ந்த அமைப்பு முறையை தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது.

அ) அரசு தலைமைச் செயலர் தலைமையில் மற்றும் துறைச் செயலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட உயர் அதிகாரக் குழு இதுவரை 3 முறை கூடி மாநிலத்தின் முன்னேற்றத்தினை ஆய்வு செய்துள்ளது.

ஆ) எட்டு கருப்பொருட்கள் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள பணிக் குழுக்கள் தொடர்புடைய துறைச் செயலர்களின் தலைமையின்கீழ் இதர துறைகளின் அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த திட்டமிடுதல், செயல்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் உயர் அதிகாரக் குழுவிற்கு அறிக்கை சமர்ப்பித்தல் ஆகிய பணிகளை செய்து வருகின்றன. இப்பணிக் குழுக்கள் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பணிவரன்முறைக்கேற்ப பலமுறை சந்தித்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

எட்டு கருப்பொருள் சார்ந்த பணிக் குழுக்கள், இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுடன் தொடர்புடைய மாநில அரசு மற்றும் ஒன்றிய அரசின் திட்டங்களை தொடர்புபடுத்துதல், குறி காட்டிகளை வரையறை செய்தல், நீடித்த வளர்ச்சி இலக்கில் மாநிலத்தில் முழுமையான முன்னேற்றத்தை எய்துவதற்காக

2021 செப்டம்பர் 13]

இலக்குகளையும் குறிக்கோள்களையும் கண்காணிப்பது மற்றும் திட்டங்களுடன் ஒருங்கிணைப்பது ஆகிய பணிகளை மேற்கொள்கிறது.

தமிழகத்தில் துறை தோறும் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்றத்தை தொடர்ந்து கண்காணிப்பதற்கும் மாநிலத் திட்டக் குழுவிற்கு அவை குறித்த தரவுகளும், உள்ளீடுகளும் அளிப்பதற்கும் ஏதுவாக துறைகளுக்கான நீடித்த வளர்ச்சி அலகுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மாவட்ட அளவில் நீடித்த வளர்ச்சி இலக்கிற்கான குழுக்கள்/ அலகுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்களின் தலைமையில் மாவட்ட அளவிலான ஓர் உயர்நிலைக் குழுவும், மாவட்ட ஆட்சியரின் தலைமையிலான மாவட்ட செயற்குழுவும் மற்றும் மாவட்ட அலுவலர்களை உள்ளடக்கிய மாவட்ட அளவிலான அலகுகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், அந்தந்த மாவட்ட அளவில் நீடித்த வளர்ச்சி இலக்குகளை எட்டுவதற்கு வேண்டிய பணிகளும் ஆய்வுக் கூட்டங்களும் இக்குழுக்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் நீடித்த வளர்ச்சி இலக்கின் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்கான, மாநில அளவிலான குறிக்காட்டிகளும், மாவட்ட அளவிலான குறிக்காட்டிகளும் மற்றும் வட்டார அளவிலான குறிக்காட்டிகளும் இறுதி செய்யப்பட்டுள்ளன. குறிக்காட்டி வரையறை இறுதி செய்யும் பணிகள் தொடர்புடைய துறைகள் பங்கேற்ற கலந்தாய்வுக் கூட்டங்களின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டும், எட்டப்பட வேண்டிய இலக்குகளும் துறைகளாலுமே உறுதி செய்யப்பட்டுள்ளன. இதன் முன்னேற்றத்தை கண்காணிப்பதற்காக, ஓர் இணையதள கண்காணிப்புப் பலகை நிறுவப்பட்டு அதில் குறிக்காட்டிகளுக்கான தரவுகள் தொடர்புடைய துறைகளால் பதிவேற்றம் செய்யப்படுகிறது.

அடுத்த ஆண்டிற்கான நீடித்த வளர்ச்சி இலக்கு இந்திய குறியீட்டில் தமிழகம் அகில இந்திய அளவில் முதல் நிலையில் இருக்கும் என்ற நம்பிக்கையை அளிக்கும் வகையில் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள் எதிர்காலத்திலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

இம்மாநிலம் 50 விழுக்காடு மக்கள் நகர்ப்புறப் பகுதிகளில் வசிக்கும் நகரமயமான மாநிலமாக உள்ளது. எனவே, நகர்ப்புறங்களிலும், மீள்குடியேற்ற பகுதிகளிலும் நீடித்த

[2021 செப்டம்பர் 13

வளர்ச்சி இலக்குகளை நடைமுறைப்படுத்தும் நோக்குடன், மிகப் பெருமளவிலான மீள்குடியேற்ற திட்டங்களை உள்ளடக்கிய, நகர்ப்புற குறிக்காட்டி வரையறையையும், மீள்குடியேற்ற குறிகாட்டி வரையறையையும் இறுதி செய்வதற்காக, உரிய துறைகளின் அலுவலர்கள் மற்றும் ஆய்வாளர்கள் பங்கேற்புடன் பல்வேறு கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, இறுதி செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது.

2.1.6 கண்காணிப்பு

உலகளாவிய குறிக்காட்டிகளும், ஐக்கிய நாடுகள் அவையின் ஆண்டு அறிக்கையும், நாடுகளின் தரவரிசை பட்டியலும், முன்னேற்றத்தினை அளவிடுதலின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. தேசிய அளவில் நித்தி ஆயோக் அமைப்பு ஆண்டு தோறும் வெளியிடும் நீடித்த வளர்ச்சி இலக்குகள் மீதான இந்திய குறியீட்டு அறிக்கைகள் வாயிலாக முன்னேற்றம் அளவிடப்படுகிறது.

எவை கண்காணிக்கப்படுகிறதோ,அவையே கவனிக்கப்படுகிறது. எவை மதிப்பிடப்படுகிறதோ, அவையே கவனத்தை ஈர்க்கிறது. மேலும் பங்கேற்பாளர்களிடையே போட்டியை ஏற்படுத்தி முன்னேற்றத்தினை விரைவுபடுத்த உதவி புரிகிறது என்பது கண்காணிப்பு மற்றும் மதிப்பிடுதலின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன.

2.1.7 இணையதள கண்காணிப்புப் பலகை

நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான இணையதள கண்காணிப்புப் பலகை தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் வடிவமைக்கப்பட்டு பொதுப் பயன்பாட்டிற்காக நிறுவப்பட்டது. இது நீடித்த வளர்ச்சி இலக்கின்கீழ் அரசின் பல்வேறு திட்டங்களின் தரவுகளின் கண்காணிப்பிற்கும் தரவுகளை காட்சியாக காணும் வகையிலும் தரவுகளை கையாளும் முயற்சியாகும். இந்த இணையதள கண்காணிப்பு பலகையின் வாயிலாக இலக்குகள்/குறிக்கோள்கள்/ குறிகாட்டிகள் ஆகியவற்றின் நிகழ்நேர முன்னேற்றத்தை காண இயலும்.

இந்த இணையதள கண்காணிப்பு பலகையில் தொடர்ந்து தரவுகளை உள்ளீடு செய்வது அனைத்து துறைகளின் குறிப்பாக துறைகள் தோறும் ஏற்படுத்தப்பட்ட அலகுகளின் பணியாகும். இந்த இணையதள கண்காணிப்பு பலகையில் துறைகள்

2021 செப்டம்பர் 13]

தாங்கள் மேற்கொண்ட சிறப்பு முயற்சிகளையும் பதிவிட இடமளிக்கப்பட்டுள்ளது. இந்த இணையதள கண்காணிப்பு பலகை தொடர்ந்து மெருகேற்றப்பட்டு அதிக தகவல்களை அளிக்கும் வண்ணம் அமைக்கப்பட்டு வருகிறது. இதன் வாயிலாக அரசின் கொள்கை முடிவு எடுப்போர், ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள், நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த ஆர்வம் கொண்டோர் எளிய வகையில் ஆய்வு செய்யும் வண்ணம் புதுமையான காட்சிப்படுத்துதலையும், தரவுகளை தேடுவதற்கு தேவையான கலன்களையும் கொண்டுள்ளது.

மாவட்ட அளவில் முன்னேற்றத்தினை கண்காணிக்கும் வகையில் மாவட்ட அளவிலான தரவுகளையும் அளிக்கிறது. இதனைத் தொடர்ந்து மாவட்ட மற்றும் வட்டார அளவிலான தரவுகளை அளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. தற்போது, மாவட்ட, வட்டார குறிக்காட்டிகள் வரையறை இறுதி செய்யப்பட்டுள்ளது. பன்னாட்டு ஜெர்மன் கூட்டமைப்புடன் (GIZ) இணைந்து நகர்ப்புறங்களுக்கான குறிக்காட்டிகள் வரையறை மற்றும் மீள் குடியேற்ற குறிக்காட்டிகள் வரையறை இறுதி செய்யப்படும் நிலையில் உள்ளது.

2.1.8 பகுப்பாய்வுகள் மற்றும் அறிக்கைகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான மாநில/மாவட்ட/ வட்டாரக் குறிக்காட்டிகள் வரையறைக்கான தரவுகளை பகுப்பாய்வு செய்வதும் மேலும் முன்னேற்றம் காண வேண்டிய துறைகளை கண்டறிவதும் மிகவும் இன்றியமையாததாகும். ஒவ்வொரு துறையிலும் உள்ள நீடித்த வளர்ச்சி இலக்கு அலகுகள் அவற்றின் ஒரு முக்கிய பணியாக, அத்துறை சார்ந்த இலக்குகளின் முன்னேற்றத்தையும், அவற்றிற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவது தொடர்பான விவரங்களையும் ஆவணமாக வெளியிடும். மாநிலத்திற்கான நீடித்த வளர்ச்சி இலக்கு தொலைநோக்கு ஆவணம் திருத்தப் பணிகள், பணிக் குழுவின் உள்ளீடுகள் மற்றும் அண்மையில் திருத்தியமைக்கப்பட்ட மாநிலத் திட்டக் குழுவால் (முந்தைய மாநில கொள்கை வளர்ச்சிக் குழு) மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையால் வெளியிடப்பட்டுள்ள நீடித்த வளர்ச்சி இலக்கு தரவு தாள் 2020, பல்வேறு இலக்குகள், குறிக்கோள்கள் மற்றும் குறிக்காட்டிகளில் மாநிலத்தின் முன்னேற்றத்தை காட்சியாக அளிக்கும் வகையில் உள்ளது.

[2021 செப்டம்பர் 13

2.1.9 திட்டங்களை இலக்குகளுடன் ஒருங்கிணைத்தல்

நீடித்த வளர்ச்சி இலக்குகளை ஒருங்கிணைக்கும் பொருட்டு, அனைத்து சார்நிலைத் துறைகளில் உள்ள மத்திய மற்றும் மாநில அரசு சார்ந்த திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இது திட்டங்களின் தாக்கத்தை நீடித்த வளர்ச்சி இலக்கின் கண்ணோட்டத்தின் வழியே அறிந்திட வழிவகை செய்கிறது.

2.1.10 திறன் வளர்ப்பு

நீடித்த வளர்ச்சி இலக்குகளின் அறிமுக நிலையிலேயே, 2017 ஆம் ஆண்டில் அனைத்துப் பணிக் குழுக்களாலும் தத்தமது உறுப்பு அலுவலர்களுக்கு, திறன் வளர்த்தல் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில ஊரக வளர்ச்சி நிறுவனத்தால், மாவட்ட மற்றும் வட்டார அளவிலான அலுவலர்கள் மற்றும் கிராம வறுமை ஒழிப்புக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, நீடித்த வளர்ச்சி இலக்குகளின் இணையதள கண்காணிப்புப் பலகையில் தரவுகளை பதிவேற்றம் செய்வது தொடர்பாக, சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கும் மற்றும் அத்தரவுகளை சரிபார்த்து அதனை உறுதி செய்வது குறித்து, துறைகளின் முகமை அலுவலர்களுக்கும் செயல்முறை பயிற்சிகளை நடத்தியுள்ளது. மேலும், நீடித்த வளர்ச்சி இலக்குகளை எட்டுவதற்கான உரிய திட்டங்களின் செயல்பாட்டினையும் அதன் முன்னேற்றத்தையும் வெளிப்படுத்தக்கூடிய வகையிலான ஆவணங்களை தயார் செய்வதற்கான பயிற்சிகளும் இவ்வலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சில இலக்குகள் பல்வேறு துறைகளின் ஒருங்கிணைப்பையும் பல்வேறு நிறுவனங்களுடனான கூட்டாண்மையையும் அத்தியாவசியமாக கொண்டுள்ளன. இவற்றிற்காக பல்வேறு கருத்தரங்குகளும், விவாத கூட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன.

திறன் வளர்ப்பு ஒரு தொடர் நடவடிக்கை ஆகும். ஏனெனில் நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த விழிப்புணர்வு முழுமையாக புரிந்துக் கொள்ளப்பட்டு துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்களோடு ஒன்றிணைத்தல் அவசியம் என்பதால், மாவட்ட, வட்டார, ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வளர்ச்சிக்கான திட்டங்கள் தீட்ட இயலும்.

2021 செப்டம்பர் 13]

அனைத்து துறைகளும் தமக்கான தகவல் கல்வி தொடர்பு திட்டங்களில் நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறித்த பயிற்சித் திட்டத்தினை ஒருங்கிணைக்குமாறு வலியுறுத்தப்படுகின்றன.

2.1.11 2020 ஆம் ஆண்டிற்குள் அடையப்பட வேண்டிய குறிக்கோள்கள்

நீடித்த வளர்ச்சி இலக்குகள் 2030 ஆம் ஆண்டில் அடையப்பட வேண்டியவை என்றாலும், அவற்றுள் சில குறிக்கோள்கள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதால், அவற்றின் தீவிரத்தன்மை மற்றும் அவற்றின்மீது உடனடியாக கவனம் செலுத்த வேண்டியதன் தேவையை உணர்ந்து, இவை 2020 ஆம் ஆண்டிற்குள் அடையப்பட வேண்டியவை என ஐக்கிய நாடுகள் அவை அறிவித்துள்ளது. சுற்றுச்சூழல் சீர்கேடு, தண்ணீர் பற்றாக்குறை, பேரிடர்களால் ஏற்படும் இழப்புகளைத் தணித்தல், சாலை விபத்துக்களால் நேரிடும் இறப்புகள் மற்றும் காயங்களின் எண்ணிக்கையை குறைத்தல், தாவர விலங்கின வகைகளைத் தக்க வைப்பதற்கான நடவடிக்கைகள், பருவநிலை மாற்றத்திற்கான மாநில செயல் திட்டம், மாநிலத்தில் பருவநிலை மீள் வளர்ச்சியினை எட்டுவதற்கான ஒரு பொதுத்தளத்தை உருவாக்குதல் ஆகியவை அதனுள் குறிப்பிடத்தக்கவையாகும். தமிழக அரசு இவற்றிற்கு முன்னுரிமை அளித்து இதற்கான பணிகளை ஏற்கெனவே துவக்கியுள்ளது. கொரோனா பெருந்தொற்று காரணமாக, இந்த இலக்குகளை எட்டுவதில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது என்பது உண்மையே. பல்வேறு துறைகளும் ஒருங்கிணைந்து இக்குறிக்கோள்களை அடைவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. பேரிடர் மேலாண்மை குறித்த சென்டாய் வரையறையின் வழிகாட்டுதல்படி, மாநில அரசு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துள்ளது. இதுபோன்று, சாலை விபத்துகளினால் நேரிடும் உயிரிழப்புகள் மற்றும் காயங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையை பாதியாகக் குறைத்தல் தொடர்பான நடவடிக்கைகள்மீது அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

2.1.12 மாநில குறிக்காட்டிகள் வரையறை

உலக அளவிலான குறிக்காட்டிகளின் (232) அடிப்படையில், நாட்டின் முன்னேற்றத்தினை அளவிடும் வகையில் தேசிய அளவிலான குறிக்காட்டிகள் (306) வரையறை செய்யப்பட்டுள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டு,

மாநிலத்தின் முன்னுரிமைகளை உள்ளடக்கி, மாநிலத்திற்கான தனித்துவமான குறிக்காட்டிகளையும் சேர்த்து மொத்தமாக 388 மாநில குறிக்காட்டிகள் பணிக் குழுக்கள் மற்றும் பல்வேறு தொடர்புடைய துறைகளால் வரையறை செய்யப்பட்டுள்ளன. தரவுகளை பெறுதல், பல்வேறு பணிகளுக்கான துறைகளை ஒருங்கிணைத்தல், நீடித்த வளர்ச்சி இலக்குகள் ஏற்படுத்தக்கூடிய நீண்ட கால விளைவுகளைக் குறித்த புரிதல் மற்றும் திட்டங்களின் விளைவுகளின் அடிப்படையில் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவை நீடித்த வளர்ச்சி இலக்குகளை செயல்படுத்துவதில் உள்ள சில முக்கிய சவால்களாகும். மாவட்ட குறிக்காட்டி வரையறையும் வட்டார குறிக்காட்டி வரையறையும் தற்போது இறுதி செய்யப்பட்டுள்ளன. நகர்ப்புற குறிக்காட்டி வரையறையும் மற்றும் மீள் குடியேற்ற குறிக்காட்டி வரையறையும் இறுதி செய்திடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகம் ஏற்கெனவே பல்வேறு துறைகளில் முன்னணியில் உள்ள சூழ்நிலையில், நீடித்த வளர்ச்சி இலக்கின் குறிக்காட்டிகளின் வாயிலாக அவற்றின் செயல்பாடுகளை அளவிடுதல், வெற்றியடைந்த திட்டங்களை பகிர்தல் மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்கினை தமிழகம் எய்துவதை உறுதி செய்திட தேவையான ஒருங்கிணைப்பினை கொண்டு வருதல் ஆகிய முயற்சிகளை இத்துறை மேற்கொள்கிறது.

2.2 ஆதாரங்கள் அடிப்படையில் கொள்கை வகுப்பது

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (பு.இ.2(ம)ம) துறையின் 2-9-2014 ஆம் நாளிட்ட அரசாணை நிலை எண் 81-ல் ஆணைகள் வெளியிடப்பட்டு, ஆதாரங்கள் அடிப்படையில் வறுமை ஒழிப்புத் திட்டங்களில் அதிகப் பயனை அடையும் வகையில் கொள்கைகளை வகுப்பதற்காக அரசானது, தெற்கு ஆசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல்–வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக (Abdul Latif Jameel - Poverty Action Lab) (J-PAL-SA) அமைப்புடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. அமெரிக்காவிலுள்ள, மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனத்தில் (Massachusets Institute of Technology, USA) செயல்படும் அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வகம் மிகவும் குறைந்த செலவிலும், செம்மையான முறையிலும் வறுமையைக் குறைக்கின்ற பல்வேறு கொள்கை முயற்சிகளை உருவாக்கவும், மதிப்பீடு செய்யவும் முனைப்பான ஆராய்ச்சியை செய்து

2021 செப்டம்பர் 13]

வருகின்ற உலகம் முழுவதும் உள்ள வெவ்வேறு பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் இருக்கும் சில சிறந்த பொருளாதார மேம்பாட்டு வல்லுநர்களையும், சமூக அறிவியலாளர்களையும் கொண்ட ஒரு கட்டமைப்பாகும்.

அரசுத் துறை அலுவலர்களின் திறனை மேம்படுத்தி, நடப்பு மற்றும் புதிய திட்டங்களின் மதிப்பீட்டாய்வுகளை திறமையாகச் செய்வதற்கு அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு நான்கு முக்கிய நடவடிக்கைகளின் வாயிலாக தமிழக அரசிற்கு உதவி செய்து வருகிறது. (i) நடப்பு ஆய்வுகளிலிருந்து உள்ளூர் சவால்களுக்கான நுண்ணறிவை செயல்படுத்த கொள்கை ஆய்வு உரையாடல்களை ஈடுபடுத்துவது (ii) சாத்தியமான அளவீட்டிற்கு ஏற்றபடி புத்தாக்கங்களை சோதித்து வடிவமைப்பது (iii) ஆதாரங்களை உருவாக்கவும் நுகரவும் அரசுத் திறனை வலுப்படுத்துவது (iv) முடிவு எடுத்தலில் நிர்வாகத் தரவுகளின் பயன்பாட்டை மேம்படுத்துவது.

இப்பணி பத்து அரசு துறைகள் மற்றும் ஜே-பாலை சேர்ந்த பதினைந்து ஆராய்ச்சியாளர்கள் உள்ளிட்ட 40 ஆராய்ச்சியாளர்களை உள்ளடக்கியது. தலைமைச் செயலாளரின்கீழ் அமைக்கப்பட்டுள்ள வழிகாட்டும் குழுவால், 2014 ஆம் ஆண்டிலிருந்து நடந்த ஐந்து வழிகாட்டும் குழுக் கூட்டங்களில், பதினாறு ஆய்வுகள் ஒப்புதல் அளிக்கப்பட்டு அவற்றில் எட்டு முன்னோடி மற்றும் வாய்ப்பு அறியும் ஆய்வுகளும், மூன்று முழு அளவிலான தாக்க விளைவுகளின் மதிப்பீட்டாய்வுகளும் ICDS மூலமாக தொற்று நோய்களின் தாக்கத்தை குறைப்பதற்கான தலைப்புகள் முதல் சிறார் நலன் பாதுகாப்பு மற்றும் கல்வியும் மேலும் முன் ஆரம்பப் பள்ளியில் கணித விளையாட்டு அடிப்படையிலான புத்தாக்க ஆய்வினையும் முடித்துள்ளது. குழு ஆய்வு உள்ளடக்கிய இரண்டு விளைவு மதிப்பீடுகளும் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள முதியோரின் நலம் பேணுவதற்கான புத்தாக்க சோதனையும் மற்றும் இரண்டு வாய்ப்பு அறியும் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கூட்டுக் கொள்கை உரையாடல்கள் மற்றும் மதிப்பீடுகளுடன் சேர்த்து ஜே-பால் உட்கட்டமைப்பை ஆதரிப்பதன்மூலம் உள் மதிப்பீடுகளிலிருந்து ஆதாரங்களை பயன்படுத்தவும், உருவாக்கம், பகுப்பாய்வு செய்யவும் பதினைந்து பட்டறைகள் வாயிலாக பணியாளர்களுக்கு பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது. இப்பயிற்சி பொருள் இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மற்றும்

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி துறை மற்றும் சமூக நலன் பணியாளர்களுக்கும் மற்றும் இந்திய குடிமையியல் பயிற்சியாளர்களுக்கும் அளிக்கப்படுகிறது. கருத்துகளுக்கு மாற்றாக மேம்பட்ட தரவு இயக்க முடிவு எடுத்தல் வழிகளுக்கான கருத்துக்களை பரிமாற்றம் செய்ய ஜே-பால் டி.ஏ.யு (J-PAL – DAU) உடன் இணைந்து தற்போது கொள்கை வெபினார் தொடர்களுக்கான தரவுகளை நடத்துகிறது.

முடிவுகளும் பரிந்துரைகளும் வழிகாட்டும் குழு மற்றும் ஆலோசனைக் குழுக்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அவற்றின் கண்டுபிடிப்பின் அடிப்படையிலான புத்தாக்கங்களும் மேம்பாடுகளும் தொடர்புடைய துறைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. தற்போது, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சமூகநலம் மற்றும் பெண்கள் மேம்பாடு, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு, பள்ளிக் கல்வி, வணிகவரி மற்றும் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் ஆகிய துறைகளுக்கு கொள்கை ஆராய்ச்சி ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

2.2.1 முக்கிய சாதனைகள்

தமிழ்நாட்டின் முறையான கொள்கை ஆராய்ச்சிக் கூட்டு, முக்கிய கொள்கைக் கேள்விகளைத் தெரிவிக்க, மதிப்பீடுகளின் பயன்பாட்டை ஒருங்கிணைக்க பல துறைகளுக்கு முறையான கட்டமைப்பை வழங்கியுள்ளது. முடிவெடுப்பதைத் தெரிவிக்க, தரவு மற்றும் ஆதாரங்களுக்கான தீவிர கோரிக்கையுடன் அரசு இப்போது ஒரு வலுவான கலாச்சாரத்தைக் கொண்டுள்ளது. குறிப்பாக, சுகாதார மற்றும் குடும்பநலத் துறைகள், சமூகநலம் மற்றும் பள்ளிக் கல்வித் துறைகளில் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. மேலும், அடிப்படை சிக்கல்களை நன்கு புரிந்து கொள்வதற்கும் மேம்பாடுகளைச் செய்வதற்கும் ஆராய்ச்சி நுண்ணறிவுகளைப் பயன்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நன்மைத் திட்ட (எம்.ஆர்.எம்.பி.எஸ்) ஆய்வு, தாய் மற்றும் குழந்தை ஆரோக்கியத்திற்கான திட்ட செயல்பாட்டை மேம்படுத்துவதற்காக அதன் தரவுச் சேகரிப்பு மற்றும் மேலாண்மை முறையை வலுப்படுத்த சுகாதாரத் துறையின் பல மேம்பாடுகளுக்கு வழிவகுத்தது. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை ஜே-பாலுடன் இணைந்து மேற்கொண்ட ஆய்வுகளில் முதியோர்

2021 செப்டம்பர் 13]

நிலை குறித்த முதற்கட்ட அடிப்படை குழு கணக்கெடுப்பு, மதிப்பீடுகளை கணக்கீடு செய்வதன்மூலம் முதியோரில் பெரும்பான்மையானோர் தனிமையில் வாழ்வதற்கான சவால்களை எதிர்கொள்ள மற்றும் தலையீடுகளை மதிப்பீடு செய்ய அரசு தூண்டியுள்ளது.

ஜே-பால் உடன் இணைந்த ஆராய்ச்சியாளர்கள் கடுமையான மதிப்பீட்டின்மூலம் தாக்கத்தை ஏற்படுத்தி ஒரு புதுமையான கணித விளையாட்டுத் திட்டத்தை இயக்குவதன் மூலம் சிறு வயதிலிருந்தே கணிதத் திறன்களை வலுப்படுத்த பள்ளிக் கல்வித் துறை முயன்று வருகிறது.

அரசுக் கொள்கை வகுப்பில் மதிப்பீடுகள் மற்றும் தரவின் பயன்பாட்டை வலுப்படுத்தவும், நிறுவனமயமாக்கவும் நிரல் மதிப்பீடுகளுக்கான வழிகாட்டுதல்களை வெளியிடுவதன்மூலம், கொள்கை வகுப்பில் மதிப்பீடுகளைப் பயன்படுத்துவதற்கான பொதுவான கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. மேம்பட்ட பகுப்பாய்வு மற்றும் பயனுள்ள முடிவெடுப்பதற்கு நிர்வாகத் தரவைப் பயன்படுத்துவதை ஆதரிக்க தரவுப் பகுப்பாய்வுப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மற்றும் மதிப்பீடு செயல்முறை ஆராய்ச்சி துறையால் உருவாக்கப்பட்ட தரவுகளின் பயன்பாட்டை மேம்படுத்த டிஜிட்டல் தரவு சேகரிப்பு தளங்களையும் (ம) ஒருங்கிணைந்த புதிய உத்தரவாதமான வழிமுறைகளையும் மேற்கொள்கிறது.

தமிழக அரசின் மிக முன்னுரிமையான கொள்கைத் திட்டங்களைக் கண்டறிந்து, அவற்றை விரிவுபடுத்துவதற்கு முன்பு, அவற்றின்மீது களஆய்வு மேற்கொண்டும், விவாதக் கூட்டங்கள் நடத்துவதன் மூலமும், இந்தியாவின் பிற பகுதிகளிலோ அல்லது உலகளவிலோ பரிசோதிக்கப்பட்ட புதுமையான கொள்கைகளைக் கண்டறிந்து அவற்றினை தமிழகத்தில் ஆய்வுக்குட்படுத்திட, தமிழக அரசும் தெற்காசியாவிற்கான அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பும் (J-PAL-SA) தொடர்புடைய முக்கிய துறைகளுடன் இணைந்து செயலாற்றி வருகிறது.

2.3 சிறப்பு முயற்சிகள்

அரசு, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் 2-11-2006 ஆம் நாளிட்ட 146 ஆம் (நிலை) எண் அரசாணையில்,

"பொது அதிகார பொருண்மைகளின்" கீழ் வரும் அலுவல் விதிகளின் முதலாவது அட்டவணையில் "சிறப்பு முயற்சிகள்" என்ற பொருண்மையை சேர்ப்பதற்கு ஆணைகள் பிறப்பித்தது. வெவ்வேறு துறைகளிடமிருந்து வரப்பெற்ற புத்தாக்கத் திட்டங்களை செயல்முறைபடுத்துவதும் அரசின் நடவடிக்கைக்கு முன்னுரிமை அளிப்பதும் சிறப்பு முயற்சிகள் பிரிவின் பொருண்மையாகும். நோக்கத்தினை சிறப்பு முயற்சியாக செயல்படுத்துவதற்கான விரிவான நடைமுறைக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டு, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையால் ஒருங்கிணைக்கப்படலாம். அதன் அடிப்படையில், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் 18-1-2007 ஆம் நாளிட்ட 10 ஆம் (நிலை) எண் அரசாணையில், சென்னை மெட்ரோ இரயில் திட்டம், இத்துறையின் கீழ், 'சிறப்பு முயற்சியாக' செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

2.4 இருபது அம்சத் திட்டம்-2006

இருபது அம்சத் திட்டமானது வறுமை ஒழிப்புக்கான தொகுப்பு திட்ட நடவடிக்கையாக, 1975 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 1982, 1986 மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்டது. தற்போது "இருபது அம்சத் திட்டம்-2006" எனப் பெயரிடப்பட்டுள்ளது.

வறுமை ஒழிப்பு, ஏழைகள் மற்றும் கீழ்மட்டத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவது ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டம் வறுமையினை குறைத்தல், வேலைவாய்ப்பினை பெருக்குதல், கல்வி, வீட்டுவசதி, சுகாதாரம், வேளாண்மை, நிலச்சீர்திருத்தம், நீர்ப்பாசனம், குடிநீர், நலிந்த பிரிவினரின் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு போன்ற குறிப்பிடத்தக்க அம்சங்களை கொண்டதாகும்.

இருபது அம்சத்திட்டம்-2006-ன்கீழ் குறித்த இலக்கு நிர்ணயிக்கப்பட்ட இனங்களின் செயல்பாடுகள் குறித்த காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள், திட்டங்களை செயல்படுத்தும் துறைகள் / நிறுவனங்களிடமிருந்து ஒவ்வொரு காலாண்டும் இத்துறையினால் சேகரிக்கப்பட்டு, தொகுக்கப்பட்டு மத்திய புள்ளிஇயல் மற்றும் திட்டச் செயலாக்க அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது,

2021 செப்டம்பர் 13]

3.0 துறைத் தலைவர்கள்

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள துறைகள்/நிறுவனங்கள் பின்வருமாறு:

(i) மாநில திட்டக் குழு (முந்தைய மாநில கொள்கை வளர்ச்சிக் குழு)

(ii) பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை

(iii) மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

(iv) சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL), ஒரு கூட்டுத்துறை நிறுவனம்.

3.1 மாநில திட்டக் குழு

மாநிலத்தின் வளர்ச்சி குறித்த செயல்பாடுகளின் மீது ஆலோசனைகளை அரசுக்கு பரிந்துரை வழங்க தமிழ்நாட்டில், முதன்முதலில் 1971 ஆம் ஆண்டு மே திங்கள் 25 ஆம் நாள் மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர் மு. கருணாநிதி, அவர்களால் மாநில திட்டக் குழு ஏற்படுத்தப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் ஓர் ஆலோசனை அமைப்பாக செயல்பட்டு வருகிறது. மாநில திட்டக் குழு, துணைத் தலைவர் அவர்களின்கீழ் வளர்ச்சி சார்ந்த முக்கிய துறைகளின் நிபுணர்களை உறுப்பினர்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

மாநில திட்டக் குழுவானது, மாநில கொள்கை வளர்ச்சிக் குழுவாக அரசாணை நிலை எண் 23, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மாதிகு) துறை, நாள் 23-4-2020-ல் மாற்றம் செய்யப்பட்டு, அதன் இன்றியமையாத பணிகளான இலக்கு நிர்ணயித்தல், கண்காணித்தல், மதிப்பீடுதல் மற்றும் கொள்கைக்கான ஆலோசனை வழங்குதல், கொள்கை ஒத்திசைவு உருவாக்குதல், சிறப்பு திட்டங்களைச் செயல்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு மாநில வளர்ச்சி திட்டப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், அண்மையில் அரசாணை (நிலை) எண் 133, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மாதிகு) துறை, நாள் 7-6-2021-ல், துணைத் தலைவர், முழுநேர உறுப்பினர் மற்றும் பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்ற 8 பகுதிநேர உறுப்பினர்கள் உள்ளிட்ட 10 நபர்களுடன் குழுவானது மறுசீரமைக்கப்பட்டுள்ளது.

[2021 செப்டம்பர் 13

இக்குழுவில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள், திட்டம் மற்றும் வளர்ச்சி துறை மற்றும் நிதித் துறை ஆகியோர் அலுவல்சார் உறுப்பினர்கள் ஆவார்கள். மாநில திட்டக் குழுவின் உறுப்பினர் செயலர் இதில் நிர்வாக பொறுப்பு வகிப்பார்.

தற்பொழுது, அரசாணை நிலை எண் 160, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மாதிகு) துறை, நாள்.25-8-2021-ல் மாநில கொள்கை வளர்ச்சி குழுவானது மாநில திட்டக் குழு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

3.1.1 மாநில திட்டக் குழுவின் முதன்மையான பணிகள்

(i) பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு, வறுமை போன்ற பேரியல் பொருளாதார வளர்ச்சிக் குறியீடுகளைக் கண்காணித்தல் மற்றும் திட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்கள் மற்றும் திட்டங்களைத் திருத்தியமைத்தல் ஆகியன குறித்து அரசுக்கு ஆலோசனை அளித்தல்.

(ii) தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை கண்காணித்து அதன் வளர்ச்சிக்கான அறிக்கைகளை அரசுக்கு தேவைப்படும் பொழுது அனுப்புதல்.

(iii) தமிழ்நாடு தொலைநோக்கு 2023 மற்றும் நீடித்த வளர்ச்சி இலக்குகள்-2030-ல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகளை அடைவதற்கும், ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு வழிகாட்ட நீண்டகால, நடுத்தர மற்றும் குறுகிய கால இலக்குகளை வகுப்பதில் மாநில அரசுக்கு உதவுதல்.

(iv) தமிழ்நாடு தொலைநோக்கு 2023 மற்றும் ஐக்கியநாட்டு பொதுசபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 2020, 2025 மற்றும் 2030-ல் அடைய வேண்டிய நீடித்த வளர்ச்சி இலக்குகள் மற்றும் நிதிக் குழுவின் காலஅளவு ஆகியவற்றிற்கு ஏற்றாற்போல் துறை சார்ந்த செயல்பாட்டு திட்டங்கள் மற்றும் அறிக்கைகளை உருவாக்குதல்.

(v) கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுப்பதற்கும் அவற்றை செயல்படுத்துவதை துரிதப்படுத்துவதற்கும், கொள்கை ஒத்திசைவு சிக்கல்களை முறையாக நிவர்த்தி செய்து, துறை மற்றும் துறை சார்ந்த சிக்கல்களைத் தீர்ப்பதற்கான ஒரு தளத்தை வழங்கும்.

2021 செப்டம்பர் 13]

(vi) அரசு சார்ந்த வல்லுநர்கள் மற்றும் தேசிய, பன்னாட்டு வல்லுநர்கள், கல்வி மற்றும் கொள்கை ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் இடையிலான கூட்டமைப்பை ஊக்குவித்தல்.

(vii) மாநிலத்திற்கு தேவையான குறியீடுகள் (எ.கா.) மனித வள மேம்பாடு குறியீடு, பாலின குறியீடு மற்றும் இதர குறியீடுகள் பன்னாட்டு மற்றும் தேசிய தரத்தில் வளர்ச்சி மற்றும் செயல்பாடுகளை அணுகுதல் மற்றும் உகந்த திட்டங்களுடன் அரசிற்கு ஆலோசனை வழங்குதல்.

(viii) தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், இந்திய அளவிலும் உலக அளவிலும் செயல்பட்டு வரும் பல முன்னோடியான நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் குறித்து தொடர்ந்து ஆய்வின் வாயிலாக அத்துறைகளில் செயல்படுத்தப்பட வேண்டிய நுட்பமான விளக்கங்களை அரசுக்கு வழங்குதல்.

(ix) தேசிய மற்றும் பன்னாட்டு வல்லுநர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் பிற முதலீட்டாளர்கள் கூட்டு சமூகத்தின்மூலம் அறிவு, புதுமை மற்றும் தொழில்முனைவோர் ஆதரவு அமைப்பை உருவாக்க உதவுதல்.

(x) துறைகளுக்கிடையேயான வேறுபாடுகள் மற்றும் ஒதுக்கீடுகள், ஒழுங்குமுறை ஆகியவற்றின் இலக்குகளை அடைவதற்கான கட்டாய கட்டமைப்பு உள்ளடக்கிய கொள்கை ஒத்திசைவு ஆலோசனைகளை வழங்குதல்.

(xi) நடைமுறையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்

அ. மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி

ஆ. மாநில புதுமை முயற்சிகள் திட்டம்

இ. மலை / வனப் பகுதிகளுக்கான சிறப்புத் திட்டம்

ஈ. தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியத்தின் செயல்பாடுகள்

(xii) இதேபோல், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பாதுகாப்பு மற்றும் ஒருவரும் விடுபடாமல் இருத்தல் என்ற கருத்தின் அடிப்படையில் அரசிற்கு ஆலோசனை வழங்குதல்.

(xiii) இந்திய அரசியல் அமைப்பு திருத்தச் சட்டம் 73 மற்றும் 74-ன் படி விரிவாக்கப்பட்ட அத்தியாவசியமான திட்டங்கள், வழிமுறைகள் மற்றும் விளைவுகள் குறித்து கருத்துரு அனுப்புதல்.

3.1.2 மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி

பல்வேறு பகுதிகளுக்கிடையே காணப்படும் சமூக பொருளாதார வளர்ச்சியை அளவிடக்கூடிய காரணிகளில் உள்ள ஏற்றத்தாழ்வினை குறைத்து மனிதவள மேம்பாட்டு குறியீட்டினை உயர்த்துவதே மாநில சமச்சீர் வளர்ச்சி நிதித் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் 2012-13 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. இத்திட்டமானது, தனிநபர் வருமானம், வேலைவாய்ப்பு, வறுமை, சுகாதாரம், கல்வி மற்றும் பாலின சமத்துவம் ஆகிய காரணிகளை உள்ளடக்கிய பின்தங்கிய வட்டாரங்களை மேம்படுத்துவதற்கென செயல்படுத்தப்படுகிறது.

ஒரு விரிவான ஆய்வு முறையின் வாயிலாக மாநிலத்தில் 105 பின்தங்கிய வட்டாரங்கள் கண்டறியப்பட்டு இத்திட்டம் அவ்வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மேலும், குடிசை வாழ்மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் பின்தங்கிய நகர்ப்புறங்களில் உள்ள வார்டுகளில் நான்கில் ஒரு பங்கு வார்டுகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவரை தலைவராகக் கொண்ட மாநில அளவிலான அதிகாரக் குழுவின் வழிகாட்டுதலின்படி முன்னோக்கு திட்டம் தயாரிக்கப்பட்டு, அதன்படி, திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்படுகின்றது. மாவட்ட அளவில், தொடர்புடைய துறைவாரி அலுவலர்களை ஈடுபடுத்தி மாவட்ட ஆட்சியரால் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

3.1.2.1 திட்டங்களுக்கான ஒப்புதல்

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின்கீழ் அமைக்கப்பட்ட மாநில அளவில் அதிகாரம் பெற்ற குழுவால், கடந்த 2020-21 ஆம் ஆண்டு வரை ரூ.596.64 கோடி மதிப்பிலான 747 திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் பின்வரும் காரணிகளை மேம்படுத்துகின்றன:

2021 செப்டம்பர் 13]

- *வருமானம் ரூ.102.65 கோடி மதிப்பீட்டில் 147 திட்டங்கள்*
- *வறுமை ரூ.74.30 கோடி மதிப்பீட்டில் 107 திட்டங்கள்*
- *வேலைவாய்ப்பு ரூ.57.93 கோடி மதிப்பீட்டில் 118 திட்டங்கள்*
- *கல்வி ரூ.82.81 கோடி மதிப்பீட்டில் 91 திட்டங்கள்*
- *சுகாதாரம் ரூ.227.97 கோடி மதிப்பீட்டில் 218 திட்டங்கள்*
- *பாலின சமத்துவம் ரூ.50.98 கோடி மதிப்பீட்டில் 66 திட்டங்கள்*

3.1.2.2 மலை/வனப்பகுதிகளுக்கான சிறப்பு கவன திட்டம்

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தின் உதவியுடன் மலை/ வனப் பகுதிகளை மேம்படுத்துவதற்கான சிறப்பு திட்டம் ஒன்று 2017-18 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் மலை/ வனப் பகுதிகளின் வளர்ச்சிக்காக 2019-2020 ஆண்டு வரை 55 திட்டங்கள் ரூ.98.03 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் வாயிலாக மலை/வனப் பகுதிகளில் பழங்குடியினர் வாழ்விடங்களில் தேவையான சாலை இணைப்பு வசதி, அடிப்படை வசதிகள், பள்ளிகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள், மதிப்பு கூட்டப்பட்ட மரம் தவிர்த்த பிற வன விளைபொருட்கள், வேளாண் பொருட்கள், மாணவியரின் கல்வி மேம்பாட்டிற்கான திட்டங்கள், பழங்குடியினர் பள்ளிகளில் இணை கல்விசார் செயல்பாடுகள், மாணவியருக்கான விடுதி வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

3.1.3 தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம்

தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டம், தமிழ்நாட்டை இந்தியாவிலேயே புத்தாக்கத்தின் இருப்பிடமாக உருவாக்குவதற்கும் அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்கும் அரசாணை நிலை எண் 93, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மாதிகு) துறை, நாள் 26.09.2014-ல் ஆணையிடப்பட்ட திட்டம் ஆகும். இத்திட்டம், புதுமைகளை வளர்ப்பதற்கான செயல்முறை மற்றும் இடர்பாடுகளைக் களைவதற்காக பல்வேறு புத்தாக்கத் திட்டங்கள் மற்றும் முன்னேற்ற நடவடிக்கைகளை விரைந்து செயல்படுத்த நிதி உதவி அளிக்கின்றது. இத்திட்டத்தினை செயல்படுத்த, அரசு ஏற்கெனவே

நடைமுறையிலிருந்த பகுதி-II திட்டத்தினை மாற்றியமைத்து புத்தாக்க முயற்சிகளை உள்ளடக்கிய திட்டங்களுக்கு நிதியளிக்கும் பொருட்டு மாநில புத்தாக்க நிதி என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிதியத்திற்காக, 2015-16 ஆம் ஆண்டு தொடக்க நிதியாக ரூ.150 கோடி ஒதுக்கீடு செய்தும், பிறகு தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு வருகிறது.

மேற்படி, திட்டத்தினை செயல்படுத்த விரிவான வழிமுறைகள் அரசாணை நிலை எண் 124, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மாதிகு) துறை, நாள். 24-10-2014-ல் புத்தாக்கத் திட்டங்களை தெரிவு செய்து பரிந்துரை செய்ய வழங்கப்பட்டுள்ளது.

2015-16 ஆம் ஆண்டு முதல் 2019-20 வரை 320 திட்டங்கள் சுமார் ரூ.632.88 கோடி மதிப்பில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்திற்கு 2020-21 ஆம் நிதியாண்டில் ரூ.100 கோடி வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், 2020-21 நிதியாண்டு முதல் சுற்றில் ரூ.64.02 கோடி அளவில் 10 திட்டங்கள் மூன்றாண்டு காலத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதுவரை 30 துறைகள் இத்திட்டத்தின்கீழ் தங்கள் துறைகளுக்கான முன்னோடி திட்டங்களை செயல்படுத்துவதற்கும், மாற்றுத் தொழில்நுட்பம் மூலம் உற்பத்தி பெருக்கம், கண்டறியப்பட்ட பிரச்சினைகளுக்கு ஆராய்ச்சி ஆய்வுகள்மூலம் தீர்வுகளை கண்டறிதல் போன்றவற்றிற்கு இந்நிதியை பயன்படுத்தியுள்ளது.

2020-21-ல் துறைவாரியாக பரிந்துரை செய்யப்பட்ட ஒதுக்கீடு மற்றும் திட்டங்களின் விவரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

வ. எண்	துறைகள்	ஒதுக்கீடு தொகை (கோடியில்)
1	வேளாண் மற்றும் அதனை சார்ந்த துறைகள்	6.45
2	தொழில் மற்றும் உட்கட்டமைப்பு துறைகள்	39.30
3	கல்வி மற்றும் இளைஞர் நலன் துறைகள்	18.27
	மொத்தம்	**64.02**

2021 செப்டம்பர் 13]

3.1.3.1 வேளாண் மற்றும் அதனை சார்ந்த துறைகள்

தமிழகத்தைச் சார்ந்த மீனவ இளைஞர்களுக்கு கடற்கரையோர உயிர்ப்பாதுகாப்பு மற்றும் நீர் மூழ்கும் பயிற்சி அளிக்கும் வகையில் உயிர் பாதுகாவலர் மற்றும் நீர் மூழ்குபவர் பயிற்சித் திட்டம், பண்ணைக் குட்டைகளில் பாலித்தின் உறைகளை பயன்படுத்தி குறுகியகால நீர்நிலைகளில் வேகமாக வளரக்கூடிய மீன்வளர்ப்பினை மேற்கொள்ளும் திட்டத்தின் வாயிலாக சமுதாயத்தில் வாழ்வாதாரம் மற்றும் ஏழ்மை நிலையினை நீக்குதல், வன உயிரின தாவர உண்ணிகளில் காணப்படும் பாக்டீரிய நோய்தொற்றுகளை விரைவாகவும் துல்லியமாகவும் குறைந்த செலவில் கண்டறிவதற்கான தொழிற் நுட்பத்தை உருவாக்கும் திட்டம், இந்தியாவில் முதன்முதலில் தமிழ்நாட்டு வனப் பகுதிகளில் மான்கள் மற்றும் யானைகளை பாதிக்கும் "ஜான்ஸ்" நோய் (MAP) தொற்றுகளை கண்டறியும் கருவியை உருவாக்கும் திட்டம் வாயிலாக வனஉயிர்களுக்கு உரிய பாதுகாப்பு அளித்தல், கடத்தப்படும் வனவிலங்குகளின் உடல் பாகங்கள் மற்றும் அவற்றை வடிவம் மாற்றி கடத்தும்போது அதனை ஆராய்ந்து அவை என்ன வகை உயிரினம் என்பதை துல்லியமாக கண்டறிவதற்கான டி.என்.ஏ. தொழில்நுட்பத்தை உருவாக்கும் திட்டம், பாலாறு மற்றும் திண்டுக்கல் மாவட்டம், புரந்தலை ஆறுகளில் கலக்கப்படும் தொழிற்சாலை கழிவுகளை நீக்கும் திலேப்பியா வகை மீன் இனத்தை செயற்கையாக உற்பத்தி செய்து சுகாதாரம், சுற்றுசூழல் பாதுகாப்பு மற்றும் வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் திட்டம்.

3.1.3.2 தொழில்கள் மற்றும் உள்கட்டமைப்பு துறை

சிப்காட் தொழில் புதுமை கண்டுபிடிப்பு மையம் திருப்பெரும்புதூர் மற்றும் ஓசூர் தொழில் பூங்கா வாயிலாக சுற்றுப்புற மேன்மை மற்றும் உள்ளூர் மக்களின் தொழில் உற்பத்தி பெருக்குதல், இ-ஆசிரியர் திட்டம்மூலம் தமிழ் கற்பித்தலை நவீன தொழில்நுட்பத்தின் வழி வழங்குதல், நிர்வாகத்தில் செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டுத் திட்டம் வழி அரசு செயல்பாடுகளில் ஏற்படும் குறைகளை நீக்குதல்.

3.1.3.3 கல்வி மற்றும் இளைஞர் நலத் துறை

மாற்றுத் திறனாளிகள் சமூகத்தினருக்கான பயன்பாட்டிற்கு பகுதி மற்றும் முழுமையாக தானியங்கக்கூடிய நுண்ணறிவுள்ள

புற உடற்கூடு மற்றும் செயற்கை கை உருவாக்கும் திட்டம். தமிழ்நாட்டிலுள்ள மந்தக் கழிவுகளை உயிர் உரங்களாக மாற்றுவதற்கான தொழில்நுட்ப திட்டத்தின்மூலம் திடக்கழிவுகள் மேலாண்மையை மேம்படுத்துதல்.

3.1.4 சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

தமிழ்நாட்டில் 2015-16 ஆம் ஆண்டிலிருந்து சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் துவங்குவதற்கு முன்னர் 1975-76 ஆம் ஆண்டு முதலாக ஒன்றிய அரசின் 90 சதவிகித நிதி உதவியுடனும், 10 சதவிகித நிதிக் கடன் அடிப்படையில் பெற்று பின்னர் மாநில பங்களிப்புடனும், மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் செயல்பட்டு வந்தது.

2015-16 ஒன்றிய அரசின் வரவுசெலவு திட்டத்தில், ஒன்றிய அரசு 2015-16 ஆம் ஆண்டு முதல் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களுக்கான ஒன்றிய அரசின் நிதியுதவி நிறுத்தப்படும் என்று அறிவித்தது. மேலும், மேற்படி திட்டங்களை மாநில அரசு, தன் சொந்த மாநில நிதியிலிருந்து தொடரலாம் எனவும் அறிவித்தது. அதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு அரசு 2015-16 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ.75.00 கோடி நிதி உதவியுடன் தமிழகத்தில் அமைந்துள்ள மலைப் பகுதிகளில் வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தை அறிவித்தது.

தற்பொழுது, சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் பதினோறு மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது. சிறப்புப் பகுதி மேம்பாட்டு திட்டமானது நிர்வாகம் மற்றும் கள ஆய்வு பணிகளுக்காக இரண்டு அலகுகளாக செயல்படுத்தப்பட்டு அலகு-1 ஆனது திட்ட இயக்குநர், மலைப் பகுதி மேம்பாட்டு வளர்ச்சி திட்டம் (அதாவது சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம்) அவர்களைத் தலைமையாகக் கொண்டு 1. நீலகிரி 2. கோயம்புத்துர் 3. திருப்பூர் மற்றும் 4. ஈரோடு ஆகிய 4 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அலகு-2 ஆனது குழுமத் தலைவர் (நிலப் பயன்பாடு) மாநில திட்டக் குழு தலைமையில் 1. திண்டுக்கல் 2. மதுரை 3. தேனி 4. விருதுநகர் 5. திருநெல்வேலி 6. தென்காசி மற்றும் 7. கன்னியாகுமரி ஆகிய 7 மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2021 செப்டம்பர் 13]

தமிழ்நாட்டில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த நிர்ணயிக்கப்பட்ட பகுதியானது கடல் மட்டத்தில் இருந்து 600 மீட்டருக்கு மேலான மலைப் பகுதிகளில் திட்டம் உருவாக்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல் ஆகும்.

இத்திட்டத்தில் வனம், குடியிருப்புப் பகுதிக்கு அருகில் அமையப்பெறாத மண்வளம் மற்றும் நீர் வளத்திற்கு சவாலாகப் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியை ஒட்டி அமைந்திருக்கும் இடைப்பட்ட பகுதியின் வளர்ச்சியில் கவனம் செலுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டமானது, நீர் மற்றும் நில வளர்ச்சிக்கும் மனித வாழ்வாதாரத்திற்கும் ஒரு தொடர்பை ஏற்படுத்துதலும், சுற்றுச் சூழல் பாதுகாப்பு, நீர்வாழ் உயிரினங்கள் பாதுகாப்பு மற்றும் நுண்நீர் பிடிப்புப் பகுதி அளவில் மலைவாழ் மக்களின் வாழ்வாதார வாய்ப்பை மேம்படுத்துதலும் இத்திட்டத்தின் குறிக்கோளாகும்.

மண்வளப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் மற்றும் வனப் பாதுகாப்பு, தோட்டக்கலை, வேளாண்மை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் மேம்பாடு, கால்நடை வளர்ப்பு, நெடுஞ்சாலை மற்றும் கிராமப்புற சாலைகள் அமைத்தல், நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்பின் கட்டமைப்பில் இடைவெளி நிரப்பும் விதமாக பணிகளை மேற்கொள்ளுதல், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம், நீர்வள மேம்பாடு மற்றும் மீன் வளர்ப்பு போன்ற பணிகள் தொடர்புடைய துறைகளின்மூலம் மேற்கொள்ளும் வகையில் சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

மாநில அளவில் உருவாக்கப்பட்ட உயர்நிலைக் குழுவினால் இத்திட்டத்திற்கான வழிகாட்டுதல்களை பின்பற்றியும், நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான நோக்கத்துடனும் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக ரூ.75.00 கோடி நிதி ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்பட்டு இதுவரை மார்ச், 2021 முடிய 2,345 திட்டங்களுக்கு ரூ.362.66 கோடி அளவிற்கு நிருவாக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 2021-22 ஆம் ஆண்டிற்காக வரவு-செலவு திட்டத்தில் ரூ.75.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகளை விரைவாக கண்காணிக்கும் பொருட்டு இணையதளத்தில் செயல்படும் வகையில் வலை கண்காணிப்பு அமைப்பு நிறுவப்பட்டுள்ளது.

[2021 செப்டம்பர் 13

3.1.5 தமிழ்நாடு நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம்

அரசாணை (நிலை) எண்.58, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள்(மாதிகு)துறை, நாள் 10-2-2011-ன்படி, தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியம் என்ற ஒரு நிலையான வாரியம், மாநில திட்டக் குழு துணைத் தலைவரை தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்டது. அரசாணை (நிலை) எண்40., திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (தொ.நு-1) துறை, நாள் 4-3-2015-ன்படி, தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியத்தின்கீழ் தமிழ்நாட்டில் உள்ள மலைப் பகுதிகளுக்கான மாவட்ட அளவிலான தொழில் நுட்பப் பிரிவு செயல்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தொழில்நுட்பப் பிரிவின் செயல்பாடானது, திண்டுக்கல், மதுரை, தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி போன்ற மேற்குத் தொடர்ச்சி மலை சார்ந்த மாவட்டங்களில் கள அமலாக்கத்தை மேற்பார்வை செய்வதாகும்.

இவ்வாரியத்தின் முக்கிய நோக்கங்களாவன:

- *நில வளத்தை மதிப்பீடு செய்தல், நிலக் கொள்கையை வகுப்பதில் அரசுக்கு அறிவுரைகள் வழங்குதல், மாறிவரும் நிலப்பயன்பாட்டிற்கு ஏற்ப ஓர் அறிக்கை மற்றும் சாத்தியமான முன்னுரிமைகள் போன்றவற்றை தயாரித்தல்.*

- *மாறிவரும் சுற்றுச்சூழலின் காரணிகளான மாசு, புவி வெப்பமயமாதல் ஆகியவை குறித்து உறுதியான, அறிவியல் சார்ந்த கொள்கை குறுக்கீடுகள் பற்றி அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.*

- *ஒரு நிலையான தரவு தளத்தை உருவாக்குவதன்மூலம் நிலம் மற்றும் நீர் வளங்களை பாதுகாக்கவும், நிர்வகிக்கவும், திட்டமிடல் மற்றும் விழிப்புணர்வு திட்டத்திற்கு ஒரு பயனுள்ள பங்கை வகிக்கும்.*

2011-2012 முதல் 2020-2021 வரை மொத்தம் 67 ஆராய்வுகளுக்கு ரூ.673.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. அவற்றில் 44 ஆராய்வுகள் நிறைவடைந்துள்ளன. மீதம் இருபத்து மூன்று (23) ஆராய்வுகள் நடைபெற்று வருகின்றன. இதேபோன்று 11 பயிலரங்கங்கள் மற்றும் ஒரு கருத்தரங்கிற்கு மேற்படி காலத்தில் ரூ.55.97 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 13]

இவ்வாராய்வுகள் நிலப்பயன்பாடு, நீர், விவசாயம், வாழ்வாதாரம், சுற்றுச்சூழல், ஈரநிலம், காலநிலை மாற்றம், நகரமயமாக்கல், வனம், கழிவு மேலாண்மை மற்றும் ஆரோக்கியம் போன்ற பிரிவுகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

3.1.6 நீடித்த வளர்ச்சி இலக்குகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகளை தமிழ்நாட்டில் செயல்படுத்துவதில், மாநில திட்டக் குழுவும், பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையும் இணைந்து, தொடர்புடைய துறைகளின் ஒருங்கிணைப்புடன் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கீழ்வரும் பல்வேறு பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

3.1.6.1 உயர் அதிகாரக் குழு மற்றும் பணிக் குழுக்கள்

மாநிலத்தில் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் செயலாக்கத்தை மேற்பார்வையிடுவதற்காக ஒன்பது முகமை துறைகளின் அரசு செயலாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட, மாநில அளவிலான உயர் அதிகாரக் குழு, அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், 17 இலக்குகள் மற்றும் அதன் 169 குறிக்கோள்கள் எய்தப்படுவதை அவ்வப்போது, ஆய்வு செய்து கண்காணிப்பதற்காக, 17 இலக்குகளை உள்ளடக்கிய, எட்டு (8) பணிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த எட்டு பணிக் குழுகளிலும், இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை எட்டுவதற்கு தொடர்புடைய துறைகள் இதில் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். நிர்ணயிக்கப்பட்ட பணிவரையறைகளின்படி பணிகள் மேற்கொண்டு வருகின்றன. மாநில திட்டக் குழுவின் குழுமத் தலைவர்கள் உறுப்பினர் அமைப்பாளர்களாக உள்ளனர்.

3.1.6.2 நீடித்த வளர்ச்சி இலக்குகள் தொலைநோக்கு ஆவணம் 2030

ஒவ்வோர் இலக்கிற்கும் தொலைநோக்கு ஆவணம் தயார் செய்ய வேண்டியது பணிக் குழுக்களுக்கான பணிவரையறையில் முக்கியமான ஒரு பொறுப்பாகும். இந்த தொலைநோக்கு ஆவணம் தயார் செய்வதில், இதர பொறுப்புகளான, அளவிடக்கூடிய குறிக்காட்டிகளை கண்டறிதல், அவற்றிற்கான தரவுகளை, அடிப்படைதரவாக 2015-16 ஆம் ஆண்டிற்கும் மற்றும் 2016-17 முதல் 2018-19 ஆண்டுகளுக்கான தரவுகளையும் துறைகளிலிருந்து

பெறுவது, இலக்குகள் மற்றும் குறிக்கோள்களுக்கு தொடர்புடைய திட்டங்களை ஒருங்கிணைப்பது ஆகியவை உள்ளடங்கியுள்ளது.

மேலும், இந்த ஆவணத்தைத் தயார் செய்வது தொடர்பான வழிகாட்டுதலுக்காக, பணிக் குழுக்களின் தலைவர்களான முகமை துறையின் அரசு செயலாளர்கள் தலைமையில் 5 முதல் 7 வரையிலான பணிக் குழுக் கூட்டங்களும் உறுப்பினர் அமைப்பாளர்களால் நடத்தப்பட்டு, அதில் ஒவ்வோர் இலக்கிற்கும் தனித்தனியே தொலைநோக்கு ஆவணம் வரைவு செய்யப்பட்டது. மாநிலத்திற்கான விரிவான நீடித்த வளர்ச்சி தொலைநோக்கு ஆவணம் 2030 தயார் செய்திடும்பணி பணிக் குழுக்களின் உள்ளீடுகள் மற்றும் அண்மையில் திருத்தியமைக்கப்பட்ட மாநில திட்டக் குழு (முந்தைய மாநில வளர்ச்சி கொள்கை குழு)வினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

3.1.6.3 மாநில/மாவட்ட/வட்டார குறிக்காட்டி வரையறை

புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகம் வெளியிட்டுள்ள வழி காட்டுதல்களின்படி, தேசிய குறிக்காட்டி வரையறையை அடிப்படையாகக் கொண்டு, தொடர்புடைய துறைகளின் உயர் அலுவலர்கள் பங்கேற்புடன் தொடர் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, மாநிலத்திற்கான மாநில குறிக்காட்டி வரையறை 314 குறிகாட்டிகளுடனும், மாவட்ட அளவில் தரவுகளை கொண்டுள்ள 104 குறிக்காட்டிகளுடனும், வட்டார அளவில் தரவுகளை கொண்டுள்ள 93 குறிக்காட்டிகளுடனும் மற்றும் மாநில திட்டக் குழுவின் உள்ளீடுகளுடன் இறுதி செய்யப்பட்டு பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையால் வெளியிடப்பட்டுள்ளது.

3.1.6.4 பெண்களுக்கு எதிரான குற்றங்களைக் களைவது தொடர்பான தொடர் கருத்தரங்கு

பெண்களுக்கு எதிரான குற்றங்களைக் களைவது தொடர்பாக 6 நாட்கள் தொடர் கருத்தரங்கு, ஐக்கிய நாடுகள் மகளிர் அமைப்பு மற்றும் யுனிசெப் அமைப்புடன் இணைந்து திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையால், டிசம்பர் 2020-ல் நடத்தப்பட்டது. தொடர்புடைய துறைகளின் உயர் அலுவலர்கள் பங்கேற்ற, இக்கருத்தரங்கை நடத்துவதற்கான பணிகளை, பொருளியியல் மற்றும் புள்ளியியல் துறையுடன் இணைந்து மாநில திட்டக் குழு(முந்தைய மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழு) மேற்கொண்டது.

2021 செப்டம்பர் 13]

3.1.7 முன்னேற விழையும் மாவட்டங்கள்

'முன்னேற விழையும் மாவட்டங்கள்' என்ற திட்டமானது 2017 ஆம் ஆண்டு ஒன்றிய அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டு நித்தி ஆயோக்கினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசு வறுமை, நல்வாழ்வு மற்றும் ஊட்டச்சத்து, கல்வி, அடிப்படை வசதிகள், திறன்மேம்பாடு மற்றும் அனைவருக்குமான நிதி சேவைகள் ஆகிய 11 முக்கிய காரணிகளில் பின்தங்கிய 115 மாவட்டங்களை முன்னேற விழையும் மாவட்டங்களாக இனங்கண்டுள்ளது.

ஒன்றிய அரசின் உள் துறையால் இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டவை என தெரிவு செய்யப்பட்ட 35 மாவட்டங்களும் இந்த 115 முன்னேற விழையும் மாவட்டங்களுள் அடங்கும். இதன் நோக்கம் ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு நிர்வாக கூட்டமைப்பு, மாநில மற்றும் ஒன்றிய அரசின் திட்டங்கள் ஒருங்கிணைப்பு மற்றும் மாவட்டங்களிடையே வளர்ச்சிக்கான போட்டியினை தோற்றுவித்தல் என்ற உத்தியின் வாயிலாக முன்னேற விழையும் மாவட்டங்களை மேம்படுத்துவதாகும்.

இத்திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்ட 115 மாவட்டங்களில் தமிழகத்தில் இராமநாதபுரம் மற்றும் விருதுநகர் ஆகிய இரு மாவட்டங்கள் முன்னேற விழையும் மாவட்டங்களாக இனங்காணப்பட்டுள்ளன.

3.1.7.1 நிர்வாகம்

இத்திட்டம் நேரடியாக நித்தி ஆயோக்-ஆல் நிருவகிக்கப்பட்டு மாவட்ட ஆட்சியரால் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தை ஒன்றிய அரசு அமைச்சகங்களில் உள்ள இணைச் செயலர் அதற்கு மேலுள்ள நிலையிலான அலுவலர்கள் ஒன்றிய அரசின் பற்று அலுவலர்களாகவும், மாநில அரசின் செயலர் நிலையில் உள்ள அலுவலர் மாநில பற்று அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டு மாவட்டங்களில் கள ஆய்வு செய்து முன்னேற்றத்திற்கு தேவையான வழிகாட்டுதல்களை அளிக்கின்றனர். ஒவ்வொரு முன்னேற விழையும் மாவட்டத்திற்கும் ஒன்றிய அரசின் ஓர் அமைச்சகம் வளர்ச்சி நடவடிக்கைகளை மேற்பார்வையிடவும், வழி நடத்தவும் நியமிக்கப்பட்டுள்ளது. இவற்றோடு ஒன்றிய அரசின் அமைச்சர் ஒருவரும் சில மாவட்டங்களை ஆய்வு செய்ய நியமிக்கப்பட்டுள்ளார்.

இத்திட்டத்தில் முக்கிய பகுதிகளான நல்வாழ்வு மற்றும் ஊட்டச்சத்து, கல்வி, வேளாண்மை மற்றும் நீராதாரங்கள், அனைவருக்குமான நிதி சேவைகள் மற்றும் திறன் மேம்பாடு மற்றும் அடிப்படை கட்டமைப்பு ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தப்படுகிறது. மாவட்டங்களின் மாதாந்திர முன்னேற்றங்களுக்கான நிகழ்நேர விவரங்களை நேரடியாக பெற்றிடும் வகையிலான இணையதளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாவட்டங்களின் முன்னேற்றத்தை அளவிட 49 முக்கிய செயல்பாட்டு காரணிகள் தெரிவு செய்யப்பட்டு, அவற்றில் சிறப்பாக செயல்பட்டுள்ள மாவட்டத்தின் அடைவுகளை இலக்காக கொண்டு, இத்திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட மாவட்டங்கள் தமக்கென திட்டங்களை வகுத்து அவற்றை விரைந்து நிறைவேற்றுதலில் மாவட்டங்களிடையே போட்டி ஏற்படுத்தும் முகமாக கடந்த மாதத்திற்கும் நிகழ்கின்ற மாதத்திற்கும் இடையேயான முன்னேற்றம் ஒவ்வொரு மாதமும் நித்தி ஆயோக்-ஆல் கண்காணிக்கப்பட்டு, மாதந்தோறும் தரவரிசைப்படுத்தப்படும். மற்றும் ஒட்டுமொத்த மதிப்பெண் மற்றும் துறைவாரியான மதிப்பெண் அடிப்படையில் தரவரிசை பட்டியல் வெளியிடப்படும்.

3.1.7.2 நிதி உதவி

ஒன்றிய அரசின் பொதுத் துறை நிறுவனங்கள் தங்களின் கூட்டு சமூகப் பொறுப்பு நிதியிலிருந்து (CSR) இம்மாவட்டங்களுக்கு நிதி உதவி அளிக்க ஒன்றிய அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், அயல்நாட்டு நிதி உதவிபெறும் திட்டத்தின் (EAP) கீழ் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (JICA) மூலம் கீழ்க்கண்ட மூன்று சாளரங்கள் வாயிலாக உதவி அளிக்கப்படுவதாக நித்தி ஆயோக் தெரிவித்துள்ளது.

வ. எண்	விவரம்	ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்)
1	*நீடித்த நிலைத்த வளர்ச்சி இலக்குகளை அடையும் வகையில் மாவட்டங்களில் திட்டங்களை போட்டி முறையில் செயல்படுத்துவதில் மாவட்டங்களுக்கு 20 மாதத்திற்கு மாதம் 30 கோடிவீதம் (சாளரம் - 1)*	*600*

2021 செப்டம்பர் 13]

வ. எண்	விவரம்	ஒதுக்கீடு (ரூபாய் கோடியில்)
2	*ஒன்றிய அரசின் செயல்கள் அடங்கிய அதிகாரம் படைத்த குழுவால் அனுமதிக்கப்படும் ஒன்றுக்கு மேற்பட்ட மாவட்டங்களுக்கான சிறப்பு திட்டங்களுக்கான நிதி (சாளரம் - 2)*	*350*
3	*இந்தியாவில், நீடித்த வளர்ச்சி இலக்குகளின் முன்னேற்றத்தை கண்காணிக்க நித்தி ஆயோக்கில் நிர்வாக வசதி, தேர்ந்தெடுக்கப்பட்ட தரவுகளை மூன்றாம் அமைப்பின் களஆய்வு வழியாக உறுதி செய்தல், நீடித்த வளர்ச்சி இலக்குகளில் மாநிலம் தரவரிசை எட்டும் பொருட்டு மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களிடையே போட்டியினை ஏற்படுத்துதல், மாநிலம், மாவட்டம், துணை மாவட்ட அளவிலான அலுவலர்களுக்கு திறன் மேம்பாடு பயிற்சி அளித்தல் (சாளரம் - 3)*	*24*
	மொத்தம்	**974**

ஒட்டுமொத்த தரவரிசையில் முதலிடம் பெறும் மாவட்டத்திற்கு, ரூ.10.00 கோடியும், வளர்ச்சி பிரிவுகளில் முதலிடம் பெறும் மாவட்டங்களுக்கு ரூ.3.00 கோடியும், திட்டம் சாரா நிதியாக வழங்கப்படுகின்றது.

3.1.7.3 மாவட்டங்களின் செயல்பாடு

ஏப்ரல் 2018-ல் விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இரு மாவட்டங்கள் 5 துறைகளில் முன்னேற்ற நிலைக்கான ஒட்டு மொத்த மதிப்பெண் முறையே 45.6 மற்றும் 46.8 ஆகும்.

விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இரு மாவட்டங்களும் அளவுருக்களின்மீது குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்து பிப்ரவரி 2021-ல் ஒட்டுமொத்த குறியீட்டு மதிப்பெண்கள் முறையே 62.9 மற்றும் 59.7 பெற்றுள்ளன.

விருதுநகர் மாவட்டம் பிப்ரவரி-மார்ச் 2019-ல் அடிப்படை கட்டமைப்பில் இந்திய அளவில் தர வரிசையில் முதன்மை மாவட்டமாக பட்டியலிடப்பட்டு திட்டம் சாரா நிதியாக ரூ.3.00

கோடியும், ஜுன்-ஜுலை 2020-ல் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து பிரிவில் எய்திய முன்னேற்றத்திற்காக ரூ.3.00 கோடியும் பெற்றுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் ஏப்ரல்-மே 2019-ல் வேளாண்மை மற்றும் நீராதாரங்கள் பிரிவில் எய்திய முன்னேற்றத்திற்காக இந்திய அளவில் தரவரிசையில் முதன்மை மாவட்டமாக பட்டியலிடப்பட்டு திட்டம் சாரா நிதியாக ரூ.3.00 கோடி பெற்றுள்ளது.

3.2 பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை தமிழகத்திற்கான புள்ளி விவரங்களான வேளாண்மை புள்ளி விவரங்கள், தொழில் துறை புள்ளி விவரங்கள், வீட்டு வசதி மற்றும் கட்டடப் புள்ளி விவரங்கள், சந்தை மற்றும் விலைப் புள்ளி விவரம், மாநில வருவாய் மதிப்பீடு மற்றும் சமூக பொருளாதார ஆய்வுகள் உட்பட பல்வேறு புள்ளி விவரங்களை திட்டங்கள் வாயிலாக சேகரித்து, தொகுத்து, பகுப்பாய்வு செய்து அரசுக்கு வழங்குவதில் மாநில முகமை மையமாக செயல்படுகிறது. தமிழக அரசும் இந்திய அரசும் கொள்கை முடிவெடுக்கவும், நலத் திட்டங்களை செயல்படுத்தவும், பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை சமூக பொருளாதாரக் காரணிகளை உரிய நேரத்தில் தேவையான, நம்பகமான முறையில் அளித்து வருகிறது.

3.2.1 துறையின் செயல்பாடுகள்

பல்வேறு பொருளாதார அளவீடுகளான மாநில வருவாய், மாவட்ட வருவாய், தொழில் உற்பத்தி குறியீட்டெண், நுகர்வோர் விலைக் குறியீட்டெண், மொத்த விலை குறியீட்டெண் போன்ற மதிப்பீடுகள் இத்துறையின்மூலம் கணிக்கப்பட்டு தொடர்ந்து வெளியிடப்பட்டு வருவதோடு மத்திய மாநில அரசுகளால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் சிறப்பு கணக்கெடுப்புகள், ஆய்வுகள் போன்றவற்றை மேற்கொண்டு பல்வேறு அறிக்கைகள் தயாரித்து அரசின் தேவைக்கேற்ப வழங்குவது இத்துறையின் முக்கிய செயல்பாடாகும். மேலும், இத்துறையால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் தமிழ்நாடு புள்ளி இயல் கையேடு, பருவம் மற்றும் பயிர் பற்றிய அறிக்கை, பொருளாதார நிலை குறித்த ஆய்வறிக்கை போன்றவை பல்வேறு துறைகளுக்கும் உடனடி பார்வைக் கையேடுகளாக பயன்படுகின்றன. இவை ஆராய்ச்சி

2021 செப்டம்பர் 13]

நிறுவனங்களுக்கும், பொது மக்களுக்கும் பயனுள்ளவைகளாகவும் அமைந்துள்ளன. தமிழகத்தின் பல்வேறு துறை சம்பந்தப்பட்ட திட்ட செயல்பாடுகளை இத்துறையின் தொழில்நுட்பப் பணியாளர்கள் மதிப்பீடு செய்து பல்வேறு ஆய்வறிக்கைகள்மூலம் அரசின் நலத் திட்டங்கள்/சமூக பொருளாதாரத் திட்டங்கள் சிறப்பாக செயல்பட பணியாற்றி வருகின்றனர்.

பன்னாட்டு அளவில் பல்வேறு நாடுகள் மக்களுக்கு சிறந்த சேவை வழங்குவதற்காக ஆதார ரீதியிலான கொள்கை முடிவுகளின் அடிப்படையில் சிறந்த மேலாண்மை நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளன. இந்த இலக்கை அடையும் பொருட்டு, இதுபோன்ற சிறப்பு செயலாக்கத்தினை நமது மாநிலத்திலும் செயல்படுத்தும் விதமாக இத்துறையில் சில புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

3.2.2 துறையின் முயற்சிகள்

3.2.2.1 புள்ளி விவர பகுப்பாய்வு பிரிவு (DAU)

தமிழ்நாடு அரசின் 2015-16 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட அறிக்கை உரையில் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, தமிழ்நாடு மின்ஆளுமை முகமையுடன் இணைந்து புள்ளி விவரங்கள் பகுப்பாய்வு மையம் உருவாக்கப்படும் என அறிவிக்கப்பபட்டது. இம்மையம் புள்ளி விவரங்கள் அடிப்படையிலான உள்ளீடுகளை, உயர்மட்டக் கொள்கைகளை உருவாக்கும் அமைப்புகளுக்கு ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்ட கொள்கை வகுப்பை அளிக்க உதவுகின்றது. இந்தியாவில் இதுபோன்ற மையத்தினை நிறுவிய முதல் மாநிலம் தமிழ்நாடு ஆகும்.

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் புள்ளி விவர பகுப்பாய்வுப் பிரிவு உலக சூழலுக்கேற்ப புள்ளி விவரங்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல் அவைகளை சிறப்பாக ஆய்வு செய்யும் ஒரு பிரிவாகவும் செயல்படுகிறது. பல்வேறு அரசுத் துறைகளின் செயல்பாட்டின்போது உருவாகும் அளவற்ற புள்ளி விவரங்களை அரிதாக ஆராய்ந்து, அவற்றின்மூலம் செயல்படுத்தக்கூடிய பயனுள்ள அறிக்கைகளை அளிக்கிறது.

நவீன தகவல் தொழில்நுட்பங்களை மற்றும் பயன்பாட்டு மென்பொருளை பயன்படுத்தி தொடர்புடைய புள்ளி விவரங்களை வழங்கி விரைவில் முடிவெடுக்க இம்மையம் உதவுகிறது. இம்மையம்

மாநில அளவிலான தகவல் சேகரிப்பு இணைய முகப்பு ஒன்றை உருவாக்கி, அதன்மூலம் பல்வேறு துறைகளின் விவரங்களை விரைவாக மற்றும் துல்லியமாகத் தொகுத்து தேவையின் அடிப்படையில் அரசுக்கும் பிற துறைகளுக்கும் வழங்குவது இதன் சிறப்பம்சமாகும்.

புள்ளிவிவர பகுப்பாய்வு மையம் தற்போது நான்கு திட்டங்களை ஜே-பால் தெற்கு ஆசியாவுடன் இணைந்து செயல்படுத்தியுள்ளது.

(i) மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையால் வழங்கப்பட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் (CMCHIS) கூற்றுகளின் தரவரிசை பகுப்பாய்வு செய்யப்பட்டது.

(ii) உள்ளாட்சி அமைப்புகளின் புள்ளி விவரங்களை ஆய்வு செய்து ஐந்தாவது மாநில நிதி ஆணையத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

(iii) காணாமல் போன நபர்களின் புள்ளி விவரங்களை வைத்து அடையாளம் காணப்படாத இறந்த உடல்களுடன் ஒப்பிட்டு, மாநில குற்ற ஆவண காப்பகத்துடன் இணைந்து அவர்கள் அடையாளங்களை பகுப்பாய்வு செய்தது.

(iv) சென்னை பெருநகர காவல் துறையில் பெறப்பட்ட அவசர கால எண் 100-ல் பெறப்பட்ட அழைப்புகள் தொடர்பான விவரங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

2020-21 ஆம் ஆண்டு, சம்பந்தப்பட்ட துறையின் விருப்பத்திற்கேற்ப மூன்று திட்டங்களுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அமைவிடப் பரப்பு சார்ந்த புள்ளி விவரங்களைப் பயன்படுத்தி குற்ற வரைபடம் தயாரித்தல் மற்றும் குற்ற பகுப்பாய்வு செய்வதற்காக ரூ.30.58 இலட்சத்தில் காவல் துறையின் மாநில குற்ற ஆவண காப்பகம்மூலம் குற்ற பகுப்பாய்வு செய்தல்.

இயந்திரங்கள் வழி கற்பித்தல் வாயிலாக ஜிஎஸ்டி வரி சேகரிப்பை மேம்படுத்த ரூ.4.50 இலட்சம் செலவில் வணிக வரித் துறை, புள்ளிஇயல் பகுப்பாய்வு மையம் மற்றும் ஜே-பால் நிறுவனம்மூலம் பகுப்பாய்வு செய்தல்.

2021 செப்டம்பர் 13]

தமிழக மாநிலத் தேர்தல்கள்-2021 தேர்தலை முன்னிட்டு பொது மக்கள்/வாக்காளர்களின் அறிவு, அணுகுமுறை மற்றும் செயல்பாடுகள் (KAP) தொடர்பான அடிப்படை ஆய்வு ரூ.10 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டது.

புள்ளி விவரங்களைப் பகிர்தலின் அவசியம் குறித்து ஒரு கருத்தரங்குத் தொடரை இம்மையம் உருவாக்கியுள்ளது. இக்கருத்தரங்கின் முக்கிய நோக்கம், அரசின் கொள்கை முனைவோர்கள், ஆராய்ச்சியாளர்கள், புள்ளியியல் அறிவியலாளர்கள் இதுபோன்ற பிற தரப்பினரையும் ஓர் அமைப்பின்கீழ் கொணர்ந்து, அதன்மூலம் தற்போது உள்ள புள்ளி விவரங்களை ஆராய்ந்து அனைத்து அரசின் கொள்கை வகுத்தலுக்கு உதவி புரிதல்.

தரவு பகிர்வு கொள்கை கருத்தரங்குகளின் தொடர்ச்சியாக, 2021-22 ஆம் ஆண்டில் அரசு துறைகளின் பெரிய புள்ளி விவரங்களை பகுப்பாய்வு செய்தல் தொடர்பான பல்வேறு கருத்தரங்குகளை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

புள்ளிவிவர பகுப்பாய்வு மையத்தினை நிறுவவும், அதன் திறனை அடையாளம் காணவும் பெரியளவு புள்ளி விவரங்களை பகுப்பாய்வு செய்யவும் தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் நிதியிலிருந்து, அரசாணை எண் 20, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறைமூலம் மொத்த திட்ட செலவு ரூ.428.66 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

3.2.2.2 தமிழ்நாட்டிலுள்ள குடும்பங்களின் சமூக பொருளாதார வளர்ச்சி குறித்த குழுப் பட்டியல் ஆய்வு (TNHPS)

தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சியை அறிந்து கொள்வது தமிழ்நாட்டிலுள்ள குடும்பங்களின் சமூக பொருளாதார வளர்ச்சி குறித்த குழுப் பட்டியல் ஆய்வின் நோக்கமாகும். தனிநபர் குடும்பங்கள் ஆகியவற்றை முக்கிய ஆதாரமாகக் கொண்டு சமுதாயம் மற்றும் பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் வளர்ச்சியை கண்டறியும் வகையில் இவ்வாய்வு வடிவமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதார வளர்ச்சி குறித்த விவரங்களைத் திட்டமிடுபவர்களும் மற்றும் பொதுமக்களும் உரிய நேரத்தில் தேவையான புள்ளி விவரங்கள் இந்த ஆய்வின் மூலம் கிடைக்கப்பெறுவர். பொது மக்களுக்கு

ஆதாரப் பூர்வமான சான்றுகள் சார்ந்த கொள்கை வகுத்தலுக்கும், மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்களுக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்கள் வடிவமைப்பதற்கும் உதவிகரமாக இருக்கும்.

இந்த ஆய்வானது மூன்று கட்டங்களாக, முதற்கட்டம்: முன் அடிப்படை ஆய்வு/வீடுகளைப் பட்டியலிடுதல், இரண்டாம் கட்டம்: அடிப்படை ஆய்வு மற்றும் மூன்றாம் கட்டம்: இறுதி நிலை ஆய்வு என குறிப்பிட்ட ஆண்டுகளில் தொடர் ஆய்வாக நடத்தப்படுகின்றது. இந்த ஆய்வு பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, சென்னை மேம்பாட்டு ஆய்வு நிறுவனம், சர்வதேச பங்குதாரரான அமெரிக்க மிச்சிகன் பல்கலைக்கழக ஆராய்ச்சி ஆய்வு மையம் ஆகியோருடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை நடத்திய முதல் நீண்டகால ஆய்வு இதுவாகும். இவ்வாய்வின் முக்கிய அம்சமானது கையடக்க கணினி உதவியுடன் தனிப்பட்ட நேர்காணலில் இலக்க முறையில் களப் பணியிலிருந்து விவரங்களை சேகரிப்பதாகும்.

முன் அடிப்படை ஆய்வு/வீடுகளை பட்டியலிடும் ஆய்வு பணி 2018-ல் நிறைவடைந்துள்ளது. மொத்தம் 2,51,594 குடும்பங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. பதிலளிக்காத வீடுகளில் மீண்டும் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலான மதிப்பீடுகளும் கணக்கிடப்படுகின்றன.

தமிழ்நாடு குடும்பங்களின் சமூக பொருளாதார வளர்ச்சி குறித்த குழுப் பட்டியல் ஆய்வு திட்டத்திற்கு தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் நிதியிலிருந்து அரசாணை (பலவகை) எண் 19, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மா.தி.கு) துறை, நாள் 26-2-2016-ல், மொத்த திட்ட தொகையாக ரூ.390.00 இலட்சம் மூன்று ஆண்டுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.2.2.3 தமிழ்நாடு கோவிட் களநிலவர ஆய்வு (TNCPS)

இக்கணக்கெடுப்பின் மாதிரி வீடுகளில் காலப்போக்கில் கோவிட் காரணமாக ஊரடங்கு நடவடிக்கைகளை மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெவலப்மென்ட் ஸ்டடீஸ் (MIDS) உடன் இணைந்து பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை மாநில அளவிலான விரைவான மறுமொழி தொலைபேசி கணக்கெடுப்பை TNHPS-ன்கீழ் தொடங்கியது.

2021 செப்டம்பர் 13]

உலகளாவிய தொற்றுநோயின் மோசமான தாக்கத்தை மாற்றியமைக்கத் தகுந்த கொள்கை நடவடிக்கைகளை வடிவமைக்க தமிழக அரசுக்கு உடனடி நம்பகமான பயனுள்ள தரவை வழங்குவதே TNCPS-இன் முதன்மை நோக்கமாகும். வேலை நிலை (வேலை இழப்பு) மற்றும் வீட்டு வருமானம் போன்ற முக்கிய மாறிகள் குறித்த தரவுகளை சேகரிக்க ஓரளவு முறை பயன்படுத்தப்பட்டது. இத்தொற்று நோய்களின்போது நேர்காணல் அட்டவணையை நிருவகிக்க கணினி உதவி தொலைபேசி நேர்காணல் (CATI) முறை பயன்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு கோவிட் களநிலவர ஆய்வு அலை-1 கணக்கெடுப்பு ஜூன் 2020-ல் மேற்கொள்ளப்பட்டது. 10,014 கிராமப்புற மற்றும் நகர்ப்புற குடும்பங்களின் மாதிரி அளவு வெற்றிகரமாக கணக்கெடுக்கப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்டன. அலை-2 கணக்கெடுப்பு 8,940 வீடுகளில் நடத்தப்பட்டு 2020 நவம்பரில் நிறைவடைந்து அறிக்கையின் முடிவுகள் வெளியிடப்பட்டன. பிப்ரவரி 2021 ஆம் ஆண்டில் 8,664 வீடுகளில் அலை-3 கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அறிக்கையின் முடிவுகள் வெளியிடப்பட்டன. அலை-4 கணக்கெடுப்பு ஜூலை 2021-ல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3.2.2.4 தமிழகத்திலுள்ள வயது முதிர்ந்தோரின் சமூக பொருளாதார நிலை குறித்த குழுப் பட்டியல் ஆய்வு

வயது முதிர்ந்தோரின் சமூக பொருளாதார நிலை, உடல்ரீதியாக மற்றும் பொருளாதாரரீதியாக மற்றவர்களை சார்ந்திருத்தல், அறிவாற்றல் மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றை உட்கொண்ட சுகாதார நிலை ஆகியவற்றை அறிதல் மற்றும் சுகாதார அமைப்பு மற்றும் சமூக பாதுகாப்பு மற்றும் அணுகுமுறை ஆகியவற்றை அறிந்து கொள்வது இந்த குழுப் பட்டியல் ஆய்வின் நோக்கமாகும். வயது முதிர்ந்தோரின் சமூக பொருளாதார நிலையினைக் குறித்து தரவு தளம் உருவாக்கப்படும். மேலும், வயது முதிர்ந்தவர்களின் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்த தேவைப்படும் இலக்குகளை அடைய ஒரு தனித்துவமான தளத்தை இந்த ஆய்வு வழங்கும். இந்த கணக்கெடுப்பு தமிழ்நாட்டில் உள்ள வயது முதிர்ந்தோரின் சுகாதாரம், பொருளாதார நிலை மற்றும் சமூக நல்வாழ்வை மையமாகக் கொண்டது.

இந்தக் குழு ஆய்வு, பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையுடன், அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல்

ஆராய்ச்சி ஆய்வகம் தெற்கு ஆசியா, (ஜே-பால் தெற்கு ஆசியா) நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து எட்டு ஆண்டுகள் தொடர் ஆய்வாக இரண்டு வார கால இடைவெளியுடன் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகின்றது. இந்நிறுவனமானது (J-PAL) தொழில்நுட்ப ஆலோசகராகவும், தரக் கட்டுப்பாட்டாளராகவும் செயல்பட்டு வருகின்றது.

இந்தக் கணக்கெடுப்பு, டேப்லெட்டுகளைப் பயன்படுத்தி டிஜிட்டல் பயன்முறையில், அதாவது கணினி உதவி தனிப்பட்ட நேர்காணல் (CAPI) முறையில் தரவு சேகரிக்கப்படுகிறது.

இந்த கணக்கெடுப்பின்கீழ் சுகாதார அளவீடுகள் மற்றும் உயிர் குறிப்பான்கள் முதன்முறையாக தமிழ்நாட்டில் சேகரிக்கப்படுகிறது. மேலும், நோய் சுமை, மனநலம் மற்றும் செயல்பாட்டு ஆரோக்கியம், சுகாதாரப் பாதுகாப்பு, முதியோரின் சமூக மற்றும் பொருளாதார நல்வாழ்வு குறித்த நம்பகமான அறிவியல் தகவல்களும் இதில் அடங்கும்.

மனித மேம்பாட்டு குறியீடு மற்றும் சார்பு விகிதத்தின் அடிப்படையில் கணக்கெடுப்புக்கு சென்னை (பெருநகர பகுதி), திருவண்ணாமலை, தருமபுரி, திருச்சிராப்பள்ளி மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஐந்து மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. வீட்டுப் பட்டியல் ஜூலை 2018 மத்தியில் நிறைவடைந்தது, இந்த ஐந்து மாவட்டங்களில் சுமார் 92,000 குடும்பங்கள் ஆய்வுமூலம் கண்டறியப்பட்டன.

வயதானவர்களுக்கு பொருத்தமான ஆதாரம் அடிப்படையில் கொள்கைகளை வடிவமைப்பதற்கும், முதியவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்களுக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்குவதற்கும் இந்த ஆய்வு உதவுகிறது. சமூக பாதுகாப்புக் கொள்கை மற்றும் நிரல் உருவாக்கம் ஆகியவற்றை வடிவமைப்பதற்கும் ஆராய்ச்சிக்கான தளத்தை உருவாக்குவதற்கும் இது உதவியாக இருக்கும்.

அடிப்படை ஆய்வுப் பணி ஜூன் 2019-ல் நிறைவடைந்தது. 4739 குடும்பங்களில் 6294 வயது முதிர்ந்தவர்கள் உள்ளனர் என அடிப்படை ஆய்வில் உள்ள வீட்டுப் பட்டியல் கணக்கெடுப்பில் உள்ளதாக பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை ஆய்வின்மூலம் கணக்கெடுக்கப்பட்டுள்ளது. இவற்றுள், பொது சுகாதாரத் துறைமூலம் 4496 வயது முதிர்ந்தவர்களிடமிருந்து

2021 செப்டம்பர் 13]

சுகாதார அளவீடுகள் விவரம் சேகரிக்கப்பட்டுள்ளது. திட்டப் பகுப்பாய்வு மேற்கொள்ளும் பணி முடிவு பெற்றுள்ளது. அடிப்படை கணக்கெடுப்பின் முடிவுகளை ஜே-பால் சமர்ப்பித்துள்ளது, மேலும் கணக்கெடுப்பின் எதிர்கால அலைகளில் சேர்க்கக்கூடிய முக்கிய புள்ளிகள் இதில் பரிந்துரைக்கப்பட்டன.

இந்தக் குழு கணக்கெடுப்பின் அலை-1-ஐ 2021-2022 காலகட்டத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் திட்டத்தின்கீழ் மொத்த திட்ட தொகையாக ரூ.606.00 இலட்சம், அரசாணை (நிலை) எண்.21, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 27-2-2016-ன்மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.2.2.5 தமிழக மாநிலத் தேர்தல் 2021 ஆம் ஆண்டுக்கான பொதுமக்கள்/வாக்காளர்களின் அறிவு, அணுகுமுறை மற்றும் நடைமுறைகள் குறித்த அடிப்படை ஆய்வு (KAP)

இந்திய தேர்தல் ஆணையத்தால் முன்மொழியப்பட்ட முறையான வாக்காளர் கல்வியறிவு, அணுகுமுறை மற்றும் நடைமுறைகள் குறித்த கணக்கெடுப்பு (KAP) தமிழ்நாடு சட்டமன்ற மாநிலத் தேர்தல் 2021-ற்கு முன்னர் நடத்தப்பட்டது. இவ்வறிக்கை 18-2-2021 அன்று தமிழகத்தின் தலைமை தேர்தல் அதிகாரியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இக்கணக்கெடுப்பிற்கு இந்திய தேர்தல் ஆணையம் ரூ.10.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

3.2.3 துறையின் புதிய திட்ட முயற்சிகள்

3.2.3.1 நிகழ் காலத்திற்கான தரவை சேகரிப்பதற்கான நோக்கம்

1. *காலாண்டிற்கு ஒருமுறை தரவு சேகரிப்பை பயனாளர்களுடன் பகிர்தல்.*

2. *தேர்தல் அறிக்கையை செயல்படுத்துவதை கண்காணிக்க மின்னணு முறையில் தேர்தல் அறிக்கை சாதனை குறித்த கணக்கீட்டினை உருவாக்குதல்.*

3. *கணினிவழி ஆய்வு – (இயற்கை வளங்களை அடையாளம் கண்டு இணைத்தல்)*

(i). புவியியல் ஆய்வு

(ii). புரப்புவியியல் ஆய்வு – மாநிலத்தில் உள்ள அனைத்து வளங்களின் பொருளாதார மதிப்பினை ஆராய்தல்.

4. துறைவாரியான வேலைவாய்ப்பு சாத்தியக்கூறுகளை அடையாளம் காண கணக்கெடுப்பு மேற்கொள்ளுதல்; கல்வி நிறுவனம் மற்றும் தொழில் துறையுடன் இணைந்து வேலைவாய்ப்பிற்கான திறனை மேம்படுத்துதல்.

5. மாண்புமிகு முதலமைச்சரின் தொலைநோக்குத் திட்டத்தின்படி ஒரு டிரில்லியன் (ஒரு இலட்சம் கோடி) பொருளாதார இலக்கினை அடைவதற்கான வளங்களை உருவாக்குவதற்கான செயல்திட்டம் மற்றும் அந்நிய நேரடி முதலீட்டிற்கான இனங்களை கண்டறிந்து பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்தி தொலைநோக்கு இலக்கினை அடைதல்.

6. அரசாங்கத்தின் தேவைக்கேற்ப நிகழ்காலத்திற்கான தரவினை சேகரித்தல்.

3.2.3.2 வெளிப்படையான புள்ளிவிவரங்கள்

தமிழக அரசின் வெளிப்படையான அரசு புள்ளிவிவரங்கள் TNOGD (Tamil Nadu Open Government Data) திட்டத்தின் வடிவமைப்பாக (Nodal Organization) மாநிலத்தின் தேசிய புள்ளி விவர பகிர்வு மற்றும் அணுகும் கொள்கையுடன் (NDSAP) இணைந்து பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை செயல்படுகிறது. இந்தத் திட்டத்தில் TNOGD அமைப்பின்கீழ் https://tn.data.gov.in இணையதளம் ELCOT நிறுவனத்தினரால் வழங்கப்படுகிறது. TNOGD அரசாங்க புள்ளி விவரங்களை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதன்மூலம் வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் மதிப்பு உருவாக்கம் ஆகியவற்றை ஊக்குவிக்கிறது. திணைக்களங்கள் மற்றும் பயனர்கள் புள்ளிவிவரங்களை ஒரே இடத்தில் இணையத்தில் வெளியிடுவதற்கு இந்த இணையதளம் பயனுள்ளதாக இருக்கும். பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையால் வெளியிடப்பட்ட புள்ளி விவர கையேடு 2009 முதல் 2019 வரை 11 ஆண்டுகளுக்கான புள்ளிவிவரங்கள் TNOGD இணையதளத்தில் பகிரக்கூடிய வடிவத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தப்பட்ட

2021 செப்டம்பர் 13]
புள்ளிவிவரங்கள் தேவைப்படும்போது பகுப்பாய்வு நோக்கங்களுக்காக பதிவிறக்கம் செய்யப்படலாம். மாவட்டப் புள்ளிவிவர கையேடுகளும் இணையதளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன. புள்ளிவிவர கையேட்டில் 42 அத்தியாயங்கள் உள்ளன. இதில் தமிழக அரசின்கீழ் வரும் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, வேலைவாய்ப்பு, கால்நடை பராமரிப்பு, தொழில்கள் மற்றும் வர்த்தகம், நகராட்சி மற்றும் உள்ளாட்சிகள் போன்ற 200-க்கும் மேற்பட்ட துறைகளிலிருந்து புள்ளிவிவரம் சேகரிக்கப்படுகிறது.

3.2.3.3 வலைத்தளம்

இத்துறைக்கான வலைத்தளம் ELCOT *நிறுவனம்மூலம் உருவாக்கப்பட்டுள்ளது. இது 2021-2022 ஆம் ஆண்டு முதல்* https://des.tn.gov.in *வலைத்தள முகவரியில் செயல்படும்.*

3.2.3.4 பொதுகள ஆய்வு பயன்பாட்டு கட்டமைப்பு

*புள்ளிவிவரம் சேகரிப்பு நடவடிக்கைகளை களத்தில் நேரடியாக கணினிமயமாக்கும் பணியினை பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை மேற்கொண்டு வருகிறது. கணினிமயமாக்கலின் காரணமாக இந்தத் துறை புள்ளிவிவர சேகரிப்பை காகித அடிப்படையிலான கேள்விகளிலிருந்து கையடக்க சாதனங்களுக்கு அதாவது கணினி உதவி தனிப்பட்ட நேர்காணல் (*CAPI*) பயன்முறையில் கையடக்க கணினிமூலம் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இவ்விலக்கினை அடைய 16 திட்டங்களுக்கு தற்போது* ELCOT *நிறுவனம்மூலம் பொது கள ஆய்வு கணினிமயமாக்குதல் கட்டமைப்பை (*CSAF*) உருவாக்கியுள்ளது.*

3.2.4 சமூகப் புள்ளியியல்

3.2.4.1 தேசிய மாதிரி கணக்கெடுப்பு

தேசிய மாதிரி கணக்கெடுப்பு 1950 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இது இந்திய மாதிரி கணக்கெடுப்பு அலுவலகத்தின் தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் அடுத்தடுத்த சுற்றுகளில் நடத்தப்பட்ட ஒரு சமூக பொருளாதார ஆய்வு ஆகும். இது அறிவியல் மாதிரி முறைகளைப் பயன்படுத்தி புள்ளி விவரங்களை சேகரிக்கும். பல்வேறு நிலைகள் கொண்ட ஓரடுக்கு வடிவமைப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கணக்கெடுப்பு

பல்வேறு பொருள்கள் குறித்து சேகரிக்கப்பட்ட மாதிரி தரவுகளின் அடிப்படையில் மதிப்பீடுகளை வழங்குகிறது.

தேசிய மாதிரி ஆய்வு 75-வது சுற்று (ஜூலை 2017 முதல் ஜூன் 2018) வரை நடைபெற்றது. "குடும்ப நுகர்வுச் செலவினங்கள், சமூக நுகர்வு-சுகாதாரம், கல்வி" ஆகிய தலைப்புகளின்கீழ் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

தேசிய மாதிரி ஆய்வு 76-வது சுற்று (ஜூலை 2018 முதல் டிசம்பர் 2018 வரை) "குடிநீர், சுகாதாரம், வீட்டுவசதி நிலை மற்றும் மாற்றுத் திறனாளிகள் குறித்த ஆய்வு" ஆகியவற்றின் மீதான கணக்கெடுப்பு நடத்தப்பட்டன.

தேசிய மாதிரி ஆய்வு 77-வது சுற்று (ஜனவரி 2019 முதல் டிசம்பர் 2019) வரை நடைபெற்றது. "நிலம் மற்றும் கால்நடைகள் வைத்துள்ள விவசாயக் குடும்பங்களின் நிலை மற்றும் கடன் மற்றும் முதலீடு" குறித்த ஆய்வு ஆகியவை குறித்த விவரங்கள் சேகரிக்கப்பட்டன.

தேசிய மாதிரி ஆய்வு 78-வது சுற்று (ஜனவரி 2020 முதல் டிசம்பர் 2020) "உள்நாட்டு சுற்றுலா செலவினங்கள் மற்றும் பலகாட்டி ஆய்வு (Multiple Indicators Survey)" ஆகியவை குறித்த விவரங்கள் சேகரிக்க திட்டமிடப்பட்டன. கொரானா-19 பெருந்தொற்று காரணமாக உள்நாட்டு சுற்றுலா குறித்த ஆய்வு கைவிடப்பட்டது. மேலும், பலகுறிகாட்டிகள் குறித்த ஆய்வு (Multiple Indicators Survey)-க்கான கால அளவு மார்ச் 2021 வரை நீட்டிக்கப்பட்டு விவரங்கள் சேகரிக்கப்பட்டன. தேசிய மாதிரி ஆய்வு சுற்றுக்களில் பலகுறிகாட்டி ஆய்வு (Multiple Indicators Survey) என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

3.2.4.2 வீட்டு வசதி புள்ளியியல்

தேசிய அளவில் வீட்டு வசதி கொள்கை மற்றும் வீட்டு வசதி திட்ட ஆவணங்களை ஏற்படுத்துவதற்காக பொது மற்றும் தனியார் துறைகளின் கட்டடம் சம்பந்தமான செயல்பாடுகள் குறித்த விவரங்கள் சேகரிக்கப்படுகிறது. இந்த தரவு பரவலாக கட்டுமானத்தின் தன்மை மற்றும் வகை, அஸ்திவாரம் மற்றும் மாடி பகுதி, வசிக்கும் அலகுகளின் எண்ணிக்கை, குடியிருப்பு மற்றும் மதிப்பிடப்பட்ட செலவு போன்றவற்றை உள்ளடக்கியது.

2021 செப்டம்பர் 13]

(i) *2020-2021* ஆம் ஆண்டில் பொதுத் துறைக்கு பொதுத் துறை நிறுவனங்களிலிருந்தும், தனியார் துறைக்கு *151* நகரங்களிலிருந்தும் விவரங்கள் பெறப்படுகின்றன.

(ii) *2019-2020* வரை தனித்தனியாக பொதுத் துறை மற்றும் தனியார் துறைக்கு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டு மத்திய மற்றும் மாநில அரசு துறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

3.2.4.3 வீடு கட்டத் தொடங்கும் குறியீடு (HSUI)

புதிதாக கட்டடம் கட்ட அனுமதிக்கப்பட்ட விவரங்களிலிருந்து கட்டட வளர்ச்சி குறியீட்டு எண் அளவுகளைத் தெரிந்து கொள்ளவும், பொருளாதார வளர்ச்சிக்கு கட்டட புள்ளியியல் விவரங்களின் பங்கினை அறிந்து கொள்வதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

வீட்டுவசதி மற்றும் நகர்புற வறுமை ஒழிப்பு அமைச்சகத்தின்கீழ் உள்ள தேசிய கட்டட நிறுவனம் (NBO) புதுடெல்லி, வீட்டுவசதி மற்றும் கட்டட புள்ளிவிவரங்களின் அடிப்படையில் வீட்டுவசதி தொடக்க குறியீட்டை(HSUI) ரிசர்வ் வங்கியுடன் இணைந்து உருவாக்குகிறது. தமிழ்நாட்டில் *17* நகரங்கள் (*2011* மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகை) தரவு சேகரிப்பு மற்றும் பரிமாற்றத்திற்காக *2014-2015* ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டன.

2020-2021 ஆம் ஆண்டு வரையில் தேர்ந்தெடுக்கப்பட்ட *17* நகரங்களிலிருந்து வீடுகள் கட்ட அனுமதி வழங்கப்பட்ட விவரங்கள் சேகரிக்கப்பட்டு நேரடியாக இணையவழி வாயிலாக தேசிய கட்டட நிறுவனம், புதுடெல்லிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

3.2.4.4 கட்டடக் குறியீட்டெண் (BCCI)

கட்டுமானப் பொருட்கள் மற்றும் கட்டுமானப் பணியாளர்களின் கூலி விவரங்கள் காலாண்டிற்கு ஒருமுறை *16* மாவட்ட மையங்களிலிருந்து (சென்னை, காஞ்சிபுரம், கடலூர், வேலூர், சேலம், தருமபுரி, கோயம்புத்தூர், ஈரோடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, புதுக்கோட்டை, விருதுநகர், பாளையங்கோட்டை, நாகர்கோவில் மற்றும் உதகமண்டலம்) சேகரிக்கப்படுகின்றன. அடிப்படை ஆண்டு *1999-2000=100*

அடிப்படையில் கட்டடக் குறியீட்டெண் கணிக்கப்பட்டு மத்திய மற்றும் மாநில அரசு அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

31-3-2021 முடிவடைந்த காலாண்டில் 16 மையங்களுக்கான கட்டட கட்டுமான செலவின் குறியீடுகள் அறிக்கைகள் தயாரித்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளன.

3.2.5 தொழிற் புள்ளிவிவரங்கள்

3.2.5.1 ஆண்டுத் தொழில் ஆய்வு

மாநில வருவாய் மதிப்பீட்டிற்கென தொழிற்சாலை சட்டம் 1948 பிரிவு 2m(i) மற்றும் 2m(ii)-ன்கீழ் மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றிற்கான முதலீடு, கடன், உற்பத்தி மற்றும் கூடுதல் பெறுமானம், தொழிலாளர்கள், சம்பளம், இடுபொருள் ஆகியவை குறித்த தொழிற்சாலை விவரங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அதன்மூலம் தமிழ்நாடு ஆண்டுத் தொழில் ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தகவல்கள் உற்பத்தி துறையிலிருந்து வருமான மதிப்பீட்டினை மற்றும் மாநில வருவாய் மதிப்பீட்டினை கணக்கிடுவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

தற்போது ஆண்டுத் தொழில் ஆய்வு 2018-2019 ஆம் ஆண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும் 2019-2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளில் ஆய்வு மூலம் மேற்கண்ட விவரங்கள் சேகரிக்கப்பட்டு கூர்ந்தாய்வு பணி நடைபெறுகிறது.

3.2.5.2 தொழில் உற்பத்தி குறியீட்டெண்

தொழில் உற்பத்தி குறியீட்டெண், 2011-2012 ஆம் ஆண்டினை அடிப்படையாகக் கொண்டு மாநில அளவில் உள்ள தொழிற்சாலைகளின் பொதுவான காரணிகளான உற்பத்தி விவரங்கள் மற்றும் பொருளாதார நிலைமையினை மதிப்பிட உதவுகிறது. மாதாந்திர அடிப்படையில் கனிமம் மற்றும் சுரங்கத் துறை, உற்பத்தித் துறை மற்றும் மின்சாரம் ஆகிய மூன்று முக்கிய தொழில் அமைப்புகளிலிருந்து உற்பத்தி குறித்த விவரங்கள் சேகரிக்கப்படுகிறது.

2021 செப்டம்பர் 13]

2011-2012 ஆம் ஆண்டினை அடிப்படையாகக் கொண்டு மாதாந்திர அறிக்கை, மூன்று துறைகளிலிருந்து பெறப்படுகின்ற உற்பத்தி விவரங்களைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. கனிம உற்பத்தி விவரங்கள், (8 வகைகள்) கனிமம் மற்றும் சுரங்கத் துறை, கிண்டி, சென்னை-32-லிருந்தும், மின்சார உற்பத்தி, மத்திய மின் வாரியம், புது டில்லியிலிருந்தும், தொழிற் துறை உற்பத்தி விவரங்கள் 1244 தொழிற்சாலைகளிடமிருந்து நேரடியாக உரிய படிவங்களில் பெறப்பட்டு துறை வாரியான மற்றும் பயன்பாடு வாரியான குறியீட்டெண்கள் 253 இனங்களுக்கு ஒவ்வொரு மாதமும் கணிக்கப்படுகின்றன.

3.2.5.3 கைத்தறி

ஒவ்வொரு காலாண்டிலும் தமிழகத்தில் கைத்தறித் துணியின் மொத்த உற்பத்தி, விற்பனை மற்றும் இருப்பு சதவீதத்தை மதிப்பிடுவதும், ஒவ்வோர் ஆண்டும் கைத்தறி நெசவாளர்களின் சமூகப் பொருளாதார நிலைமைகளைக் கண்டறிவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

சென்னை, கிருஷ்ணகிரி, பெரம்பலூர், புதுக்கோட்டை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர இதர மாவட்டங்களில் தேர்வு செய்யப்பட்ட 170 குவி மையங்களிலிருந்து கைத்தறி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கைத்தறி திட்டத்தின்கீழ் 2019-2020 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தற்சமயம் 2020-2021 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.


3.2.6 வேளாண்மை புள்ளிவிவரங்கள் சேகரித்தல்

பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, மாநில வேளாண்மை புள்ளியியல் ஆணைக் குழுவாக (State Agricultural Statistics Authority – SASA) செயல்பட்டு வருகிறது. வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்களில் பணிபுரியும் பெரும்பான்மையான மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு வேளாண்மைத் துறையினை சார்ந்துள்ளதால், இத்துறை மாநில பொருளாதாரத்தில் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகிறது. இத்துறையில் வேளாண்மை புள்ளிவிவரம், பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி, நிலப் பயன்பாடு, நீர்பாசனம், நில உடைமை, பயிர்க்

காப்பீடு, விவசாயக் கூலி, விவசாயிகளின் விளைச்சலின் விற்பனை மிகுதி போன்ற அனைத்து விவரங்களையும் உள்ளடக்கியது. இவ்விவரங்கள் விவசாயம் சார்ந்த திட்டங்களின் கொள்கை முடிவுகளை மேற்கொள்வதற்குப் பயன்படுகிறது.

இத்துறையில் கீழ்க்கண்ட பல்வேறு விவசாயம் சார்ந்த புள்ளிவிவரங்கள் சேகரிக்கும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

3.2.6.1 பருவமும் பயிரும் அறிக்கை (2020-2021)



மாவட்ட வாரியாக உணவுப் பயிர் மற்றும் உணவல்லாத பயிர்களின் பரப்பு, நில பயன்பாடு, நீர்பாசன ஆதாரங்கள், நீர்ப்பாய்ச்சப்பட்ட மற்றும் நீர்ப்பாய்ச்சப்படாத பயிர்களின் பரப்பு, உற்பத்தி மற்றும் உற்பத்தி விகிதம் ஆகியவற்றினை மதிப்பீடு செய்து ஒவ்வோர் ஆண்டும் வெளியீடு செய்யப்பட்டு ஒன்றிய அரசு, மாநில அரசு மற்றும் இதர துறைகளுக்கும் அனுப்பபட்டு வருகிறது.

மேலும், இவ்வறிக்கையில் மழைப் புள்ளிவிவரம், வேளாண் சார்ந்த பொருட்களின் விலைவாசி நிலவரம், விவசாயக் கூலி மற்றும் விவசாயப் பொருளாதார குறியீடு ஆகிய விவரங்களும் அளிக்கப்படுகின்றன. 2019-2020 ஆம் ஆண்டிற்கான பருவமும் பயிரும் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 2020-2021 ஆம் ஆண்டிற்கான இறுதி அறிக்கைக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

3.2.6.2 பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்கள் முன் மதிப்பீடு

ஜமாபந்தியில் பயிர்ப் பரப்பு விவரங்கள் இறுதி செய்யப்படுவதற்கு முன்பாகவும், பயிர் அறுவடை பரிசோதனைகளின் அடிப்படையில் இறுதி உற்பத்தி விகிதம் கணக்கிடப்படும் முன்னர், 56 முக்கிய உணவு மற்றும் உணவல்லாத பயிர்களுக்கான பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்கள் முன் மதிப்பீடு செய்யப்படுகிறது.

2021 செப்டம்பர் 13]

3.2.6.3 பொது பயிர் மதிப்பீட்டாய்வு திட்டம் (நெல், தானியங்கள், பயிறு வகைகள் எண்ணெய் வித்துக்கள், கரும்பு மற்றும் பருத்தி)

பொது பயிர் மதிப்பீட்டாய்வு திட்டத்தின்கீழ் ஒவ்வோர் ஆண்டும், உணவு மற்றும் உணவல்லாத 17 முதன்மைப் பயிர்களுக்கு மொத்தம் 9,500 அறுவடைப் பரிசோதனைகள் தேர்வு செய்யப்பட்டு, பயிர் அறுவடை பரிசோதனைகள் வேளாண் துறை அலுவலர்களால் களப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பொருயியல் மற்றும் புள்ளியியல் துறை அலுவலர்களால் இப்பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்பார்வையிடப்பட்டு வருகின்றன. பயிர் அறுவடைப் பரிசோதனைகளின் அடிப்படையில் உற்பத்தி மற்றும் விளைச்சல் விவரங்கள் மாநில மற்றும் மாவட்ட அளவில் கணிக்கப்பட்டு வருகிறது.

3.2.6.4 பழங்கள், காய்கறிகள் மற்றும் சிறுபான்மைப் பயிர்களுக்கான பயிர் அறுவடைப் பரிசோதனை

இத்துறையினரால் மேற்கொள்ளப்படும் பழம், காய்கறி மற்றும் சிறுபான்மைப் பயிர்களுக்கான அறுவடைப் பரிசோதனைகளின் முக்கிய நோக்கம், பயிர் உற்பத்தி மற்றும் விளைச்சல் விகிதம் ஒரு ஹெக்டேர் அளவிற்கு துல்லியமாக கணக்கிடுவதற்காகும்.

பழம் / காய்கறிகள்	உற்பத்தி (மெட்ரிக் டன்களில்)		
	2017-18	2018-19	2019-20
மா	579929	524339	494728
வாழை	3044122	3484599	3987895
பலா	43562	54681	50056
திராட்சை	55603	45967	33106
கொய்யா	45698	44667	41504
ஆரஞ்சு	2028	2334	4723
எலுமிச்சை	13167	16301	15658
அன்னாசி	31486	30286	32463
தக்காளி	319090	396654	575141
வெண்டை	79189	80590	175243

பழம் / காய்கறிகள்	உற்பத்தி (மெட்ரிக் டன்களில்)		
	2017-18	**2018-19**	**2019-20**
கத்தரி	*123255*	*137542*	*275956*
முட்டைகோசு	*131332*	*91478*	*185961*
சர்க்கரை வள்ளிக்கிழங்கு	*7946*	*8854*	*14383*

இத்திட்டத்தின்கீழ், முக்கிய தோட்டக்கலை பயிர்களான மா, பலா, வாழை, திராட்சை, கொய்யா, ஆரஞ்சு, எலுமிச்சை மற்றும் அன்னாசி ஆகிய 8 பழவகைப் பயிர்களுக்கும், தக்காளி, வெண்டை, கத்தரி, முட்டைகோசு மற்றும் சர்க்கரைவள்ளி ஆகிய 5 காய்கறிப் பயிர்களுக்கும் அறுவடைப் பரிசோதனைகளுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் தோராயமாக ஒவ்வோர் ஆண்டும் 720 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1440 பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறுபான்மைப் பயிர்	உற்பத்தி (மெட்ரிக் டன்களில்)		
	2017-18	**2018-19**	**2019-20**
மிளகாய்	*18108*	*14000*	*29618*
வெங்காயம்	*214642*	*218595*	*261835*
மஞ்சள்	*73134*	*92361*	*96254*
உருளைக்கிழங்கு	*68517*	*49384*	*84720*
கொத்தமல்லி	*4112*	*2526*	*3675*
மரவள்ளிக்கிழங்கு	*2715116*	*2629655*	*3065106*
முந்திரி	*19279*	*19701*	*25687*
இஞ்சி	*7425*	*7279*	*3038*

சிறுபான்மைப் பயிர் திட்டத்தின்கீழ் மிளகாய், வெங்காயம், மஞ்சள், உருளைக்கிழங்கு, கொத்தமல்லி, மரவள்ளிக்கிழங்கு, முந்திரி மற்றும் இஞ்சி ஆகிய 8 சிறுபான்மைப் பயிர் அறுவடை பரிசோதனைகளுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. தோராயமாக ஒவ்வோர் ஆண்டும் 637 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1274 பயிர் அறுவடைப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


2021 செப்டம்பர் 13]

3.2.6.5 பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம்

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அறிவிக்கைச் செய்யப்பட்ட பயிர்களுக்கு உதவி வேளாண் அலுவலர்களால் பயிர் அறுவடைப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, சராசரி விளைச்சல் விவரங்கள் கணக்கிடப்பட்டு, புயல், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்ற பாதிப்புகள் ஏற்படும்போதும், பூச்சி மற்றும் நோயினால் பயிர்களுக்கு சேதம் ஏற்படும்போதும், விவசாயிகளுக்கு காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையினரால் பயிர் அறுவடை பரிசோதனைகள் திட்டமிடப்பட்டு மேற்பார்வையிடப்படுகிறது. 2020-2021 ஆம் ஆண்டுக்கு காரிப் பருவத்திற்கு 31 பயிர்களுக்கு 77,482 பரிசோதனைகளும், சிறப்பு பருவத்தில் 4 பயிர்களுக்கு 44,152 பரிசோதனைகளும் மற்றும் ராபி பருவத்தில் 32 பயிர்களுக்கு 60,818 பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் அறிவிக்கைச் செய்யப்பட்ட பயிர்களுக்கு சராசரி விளைச்சல் விவரங்கள் கணிக்கப்பட்டு தொடர்புடைய காப்பீட்டு நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. மேலும், மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுவில் தொடர்புடைய துறையினரால் ஒத்திசைவு செய்யப்பட்டு அறிவிக்கை செய்யப்பட்ட பயிர்ப் பரப்பு விவரங்கள் ஒவ்வொரு பருவ இறுதியிலும் காப்பீட்டுக் கழகங்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன.

3.2.6.6 தென்னை மற்றும் கமுகு பயிர் மதிப்பீட்டாய்வு

தென்னை மற்றும் கமுகு மரங்களின் எண்ணிக்கை கணிக்கப்படுதல், காய்க்கும் மற்றும் காய்க்காத மரங்களின் எண்ணிக்கை, ஒரு தென்னை மற்றும் கமுகு மரத்தின் சராசரி உற்பத்தி விகிதம், மாநில/ மாவட்ட அளவில் ஓர் ஆண்டிற்கான மொத்த



உற்பத்தி ஆகியவற்றை மதிப்பீடு செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தென்னை மற்றும் கமுகு பயிரின் ஆய்வுக் காலம் ஜூலை முதல் ஜூன் வரை கொண்ட பசலி ஆண்டு ஆகும். 2020-2021 ஆம் ஆண்டு இவ்வாய்வினை நடத்துவதற்காக தென்னை பயிருக்கு 379 கிராமங்களும், கமுகு பயிருக்கு 64 கிராமங்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

3.2.6.7 மழைப் புள்ளி விவரம் சேகரிப்பு

மழைப் புள்ளிவிவரங்கள் வருவாய்த் துறை, பொதுப் பணித் துறை, வனத் துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் இந்திய வானியல் ஆய்வுத் துறை போன்ற துறைகளால் பேணப்படும் 604 சாதாரண/தானியங்கி மழைமானி நிலையங்களிலிருந்து சேகரிக்கப்படுகிறது. இம்மழைப் புள்ளிவிவரங்கள் மாதம், பருவம் மற்றும் ஆண்டு வாரியாக தொகுக்கப்பட்டு அறிக்கையாக பேணப்பட்டு வருகின்றன.

3.2.6.8 நீர்ப்பாசனம் மற்றும் நீர்த்தேக்க தரவுகள்

நீர்ப்பாசன தரவுகள் கீழ்க்கண்ட மூன்று தலைப்புகளில் சேகரிக்கப்படுகிறது. அவை, ஆதார வாரியாக நீர்ப்பாய்ச்சப்பட்ட பரப்பு, பயிர் வாரியாக நீர்ப்பாய்ச்சப்பட்ட பரப்பு மற்றும் நீர்த்தேக்கங்கள் மூலமாக பாசனத்திற்கு பயன்படும் பரப்பு போன்றவையாகும். இத்தரவுகள் வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் பொதுப் பணித் துறை ஆகிய துறைகளிலிருந்து சேகரிக்கப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும், வட்ட, மாவட்ட அளவில் நீர்ப்பாசனச் சிற்றேடுகள் தயாரிக்கப்படுகின்றன.

3.2.6.9 விவசாயக் கூலி

விவசாயக் கூலி விவரங்கள் மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் தலா ஒரு கிராமம் வீதம் தேர்வு செய்யப்பட்டு, விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. அக்கிராமங்களில் விவசாயத் தொழில்களுக்கு ஒவ்வொரு மாதமும் வழங்கப்படும் நிலவும் கூலி விவரங்கள் களப் பணியாளர்களால் நேரடியாகச் சென்று சேகரிக்கப்பட்டு விவசாயக் கூலி குறியீட்டெண் கணிக்கப்பட்டு அறிக்கைகளாக மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

2021 செப்டம்பர் 13]

3.2.6.10 விற்பனை மிகுதித் திட்டம்

விற்பனை மிகுதித் திட்டத்தின் நோக்கம் மூன்று பருவங்களின் (குறுவை, சம்பா மற்றும் கோடை) இறுதியில் உற்பத்தியில் மீதம் உள்ள நெல்லின் அளவினை கணக்கிடப்படுவதற்கு நெல் உற்பத்திக்காக வழங்கப்பட்ட கூலிக்கான நெல், விதைக்க மற்றும் சொந்த நுகர்வுக்கான நெல் போன்றவைகள் தவிர்த்து, விற்பனைக்காக ஒதுக்கப்படும் நெல் அளவு மதிப்பீடு செய்யப்படுகின்றன.

3.2.7 ஒன்றிய அரசின் நிதியுதவித் திட்டங்கள்

3.2.7.1 பயிர் பரப்பு விவரங்களை உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டம் (TRS)

ஒன்றிய அரசினால் செயல்படுத்தப்படும் இத்திட்டம் ஒவ்வோர் ஆண்டும் எதேச்சை அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட 20 விழுக்காடு கிராமங்களில் நில பயன்பாட்டு புள்ளிவிவரங்கள் பயிர் வாரியாக நீர்ப்பாய்ச்சப்பட்ட மற்றும் நீர்ப்பாய்ச்சப்படாத பயிர் பரப்பில், உயர் ரகம் மற்றும் உள்ளூர் ரகம் பயிர் விவரங்கள், 9 முக்கிய பயிர்களுக்கு குறுவை, சம்பா மற்றும் கோடை ஆகிய மூன்று பருவங்களுக்கு சேகரிக்கப்படுகின்றன. கிராமப் பதிவேடுகள் சரிவர பேணப்பட கிராம நிர்வாக அலுவலர்களுக்கு வருவாய்த் துறைமூலம் உரிய அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2020-2021 ஆம் ஆண்டு 3,481 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு பயிர் பரப்பு விவரங்கள் மாவட்ட அளவில் கணிக்கப்பட்டு, மாநில அளவிலான விவரங்களுடன் தொகுத்து ஒன்றிய அரசுக்கு அனுப்பப்படுகின்றன.

3.2.7.2 பயிர் மேம்பாட்டுத் திட்டம் (ICS)

பயிர் மேம்பாட்டுத் திட்டத்தின் முக்கிய செயல்பாடுகள் மாநில அளவில் இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி கிராமங்களில் மாதிரி சோதனையாக கிராம நிர்வாக அலுவலர்களால் பேணப்படும் பதிவேடுகளில் பயிர் பரப்பு மற்றும் அடங்கலில் கிராமத்திற்கான பக்கவாரியான பயிர் பரப்பின் கூட்டுத்தொகை சரியான முறையில் பராமரிக்கப்படுகிறதா என ஆராயவும், முக்கிய உணவுப் பயிர்களுக்கான விளைச்சல் மதிப்பீடுகளைக் கணிக்க அறுவடை நிலையில் பயிர் அறுவடை பரிசோதனைகளை மேற்பார்வை செய்தலும் ஆகும்.

[2021 செப்டம்பர் 13

இத்திட்டத்தின் நோக்கமானது, முதன்மை களப் பணியாளர்களாகிய கிராம நிர்வாக அலுவலர்களால் மாநில அளவில் சேகரிக்கப்படும் வேளாண் புள்ளிவிவரங்களின் முறையில் காணப்படும் குறைபாடுகளை, ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசு அலுவலர்களால் மேற்பார்வைமூலம் கண்டறிந்து அவற்றை களைய தக்க வழிவகைகளை இத்திட்டத்தின் மேம்பாட்டிற்காக பரிந்துரை செய்வதாகும்.

இத்திட்டத்தின் முடிவுகளை ஒன்றிய அரசின் தேசிய புள்ளியியல் அலுவலகம், பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி மதிப்பீடுகள் ஆகிய முதன்மைத் தரவுகளின் தரத்தை மேம்படுத்த பயன்படுத்தப்படுகிறது.

3.2.7.3 வேளாண்மைக் கணக்கெடுப்பு

வேளாண்மைக் கணக்கெடுப்பு 1970-1971 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை மூன்று கட்டங்களில் நடத்தப்பட்டு வருகிறது. 2015-2016 ஆம் ஆண்டினை அடிப்படையாகக் கொண்ட பத்தாவது வேளாண்மைக் கணக்கெடுப்பின் மூன்று கட்டப் பணிகளும் முடிவடைந்து ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இந்த கணக்கெடுப்பு முக்கிய காரணிகளான வேளாண் கைப்பற்றுகளின் வகைகள் (தனி, கூட்டு மற்றும் நிறுவனம்) குத்தகைத் தன்மை, நிலக் கைப்பற்றுதாரர்களின் சமூக நிலை, நிலப் பயன்பாடு, நீர்ப்பாசன தன்மை, பயிரிடும் வகை, உரம் மற்றும் பூச்சிக்கொல்லி பயன்பாடு மற்றும் வேளாண் கருவிகளின் பயன்பாடு போன்ற முக்கிய தகவல்களை அளிக்கின்றன.

3.2.8 மாநில வருவாய் புள்ளிவிவரங்கள் மதிப்பீடு

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கான காரணிகளை அளவிடுவதற்கு மாநில வருவாய் கணக்கீடு மிகவும் இன்றியமையாததாகும். மாநில உள்நாட்டு உற்பத்தி மற்றும் பொருளாதார பெருமொத்த காரணிகள் மாநிலத்தின் வளர்ச்சியின் நிலையை கணிக்க அவசியமான ஒன்றாக விளங்குகின்றன. மேலும், அரசுக்கு பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளில் ஏற்படும் மாற்றங்களை கணிக்கவும் அரசு நிதிநிலை தேவைகளை கணிக்கவும் இவை பயன்படுகின்றன.

2021 செப்டம்பர் 13]

3.2.8.1 மாநில வருவாய்

மாநில வருவாய் மதிப்பீடு, பொருளாதார வளர்ச்சியைக் கணிக்க உதவும் வகையில் 17 உட்பிரிவுகளின்கீழ் மொத்த, நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி மற்றும் தனிநபர் வருவாய் ஆகியவை மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் வருவாய் மதிப்பீடுகள் ஒவ்வொரு வருடமும் கணிக்கப்படுகின்றன. மாநில வருவாய் மதிப்பீடுகள் 2011-2012 ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாட்டிற்கு 2018-2019 ஆம் ஆண்டிற்கு திருத்திய மதிப்பீடும், 2019-2020 ஆம் ஆண்டிற்கு துரித மதிப்பீடு மற்றும் 2020-2021 ஆம் ஆண்டிற்கு முன்மதிப்பீடு ஆகிய மதிப்பீடுகள் நடப்பு மற்றும் நிலையான (2011-2012) விலையில் கணிக்கப்பட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு - தமிழ்நாடு

அடிப்படை ஆண்டு (2011-2012) (ரூபாய் கோடியில்)									
வ. எண்.	ஆண்டு	மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு				நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடு			
		நடப்பு விலையில்	வளர்ச்சி விகிதம் (ரூ)	நிலையான (2011-12) விலையில்	வளர்ச்சி விகிதம் (ரூ)	நடப்பு விலையில்	வளர்ச்சி விகிதம் (ரூ)	நிலையான(2011-12) விலையில்	வளர்ச்சி விகிதம் (ரூ)
1	*2011-12*	*751486*	-	*751486*	-	*674478*	-	*674478*	-
2	*2012-13*	*854825*	*13.75*	*791824*	*5.37*	*768295*	*13.91*	*709343*	*5.17*
3	*2013-14*	*968530*	*13.3*	*851976*	*7.6*	*858870*	*11.79*	*750416*	*5.79*
4	*2014-15*	*1072678*	*10.75*	*893915*	*4.92*	*957350*	*11.47*	*791915*	*5.53*
5	*2015-16*	*1176500*	*9.68*	*967562*	*8.24*	*1057084*	*10.42*	*862437*	*8.91*
6	*2016-17*	*1302639*	*10.72*	*1036762*	*7.15*	*1171973*	*10.87*	*922084*	*6.92*
7	*2017-18*	*1465051*	*12.47*	*1125793*	*8.59*	*1317984*	*12.46*	*1000308*	*8.48*
8	*2018-19 (தி.ம.)*	*1630209*	*11.27*	*1204667*	*7.01*	*1468449*	*11.42*	*1071602*	*7.13*
9	*2019-20 (து.ம)*	*1797229*	*10.25*	*1278559*	*6.13*	*1619720*	*10.30*	*1133438*	*5.77*
10	*2020-21 (மு.ம)*	*1902689*	*5.87*	*1296659*	*1.42*	*1716544*	*5.98*	*1151371*	*1.58*

தி.ம. - திருத்திய மதிப்பீடு ; து.ம - துரித மதிப்பீடு ; மு.ம.- முன் மதிப்பீடு

தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் (நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி)

(ரூபாயில்)

வ. எண்.	ஆண்டு	நடப்பு விலையில்	நிலையான (2011-12) விலையில்
1	2011-12	93112	93112
2	2012-13	105340	97257
3	2013-14	116960	102191
4	2014-15	129494	107117
5	2015-16	142028	115875
6	2016-17	156595	123206
7	2017-18	175276	133029
8	2018-19 (தி.ம.)	194373	141844
9	2019-20 (து.ம)	213396	149329
10	2020-21 (மு.ம)	225106	150990

தி.ம. - திருத்திய மதிப்பீடு; து.ம. - துரித மதிப்பீடு; மு.ம.- முன் மதிப்பீடு;

மாவட்ட வருவாய் மதிப்பீட்டின் புதிய வெளியீடு 2011-2012 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு 2011-2012-ல் இருந்து 2018-2019 (தற்காலிகம்) வரை, நடப்பு மற்றும் நிலையான விலையில் மதிப்பீடுகள் கணிக்கப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

3.2.8.2 மாநில கணக்கு

தமிழ்நாடு மாநில நிதிநிலை அறிக்கை பொருளாதாரம் மற்றும் செயல்நோக்கு அடிப்படையில் 2018-2019 (Accounts), 2019-20 (Accounts), 2020-2021 (RE) ஆகிய ஆண்டுகளுக்கு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குப் பிரிவு, உள்நாட்டு மொத்த உற்பத்தி மற்றும் மூலதன கணக்கு உருவாக்க மதிப்பீட்டிற்கு முக்கிய பங்கு வகிக்கிறது. பொருளாதார மற்றும் செயல்நோக்கு

2021 செப்டம்பர் 13]

அடிப்படையில் தணிக்கை செய்யப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் அதாவது தமிழ்நாட்டிலுள்ள உள்ளாட்சி நிறுவனங்களான மாநகராட்சி (15), நகராட்சி (121), ஊராட்சி ஒன்றியம் (385) மற்றும் பேரூராட்சி (528) ஆகியவற்றிற்கு வரவு மற்றும் செலவுகள் 2018-2019 மற்றும் 2019-2020 (P) ஆம் ஆண்டிற்கு கணக்குகள் தொகுக்கப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

3.2.8.3 மூலதன ஆக்கம்

மத்திய புள்ளியியல் அலுவலகம் வழிகாட்டுதலின்படி மாநில பொதுத் துறைக்கான மொத்த நிலையான மூலதன ஆக்கம் கணக்கிடப்படுகின்றன. இம்மதிப்பீடுகள் அரசிற்கு சரியான கொள்கை முடிவு எடுப்பதற்கும், நாட்டின் பொருளாதார திட்டமிடுதலுக்கும் பயன்படுகின்றன. தமிழ்நாட்டிற்கான பொதுத் துறைக்கான மொத்த நிலையான மூலதன ஆக்க (GFCF), மதிப்பீடுகள் புதிய அடிப்படை ஆண்டை (2011-2012) கொண்டு 2011-2012 முதல் 2018-2019 ஆகிய ஆண்டு வரை கணிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

3.2.9 விலைவாசி மற்றும் விலைக் குறியீட்டெண்கள்

3.2.9.1 அங்காடி புலனாய்வு மற்றும் விலை புள்ளிவிவரம்

மாநிலத்தில் உள்ள 96 அங்காடி புலனாய்வு மையங்கள்மூலம் முக்கிய வேளாண்மை மற்றும் வேளாண் சார்பற்ற பொருட்களின் விலைகள், முதன்மை வேளாண்மை பொருட்களின் வரத்து, இருப்பு மற்றும் அனுப்புகை ஆகிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. வாராந்திர அறிக்கைகளை சேகரித்து, மாதாந்திர அறிக்கைகளாகத் தொகுத்து அறிக்கையாக மத்திய தொழிலாளர் செயலகம், வேளாண்மைத் துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, தேங்காய் மேம்பாட்டு வாரியம், இந்திய உணவுக் கழகம் ஆகியவற்றிற்கு அனுப்பப்பட்டு வருகிறது மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சிறைத் துறை, அரசு பொது மருத்துவமனைகள் மற்றும் பிற துறைகளிலிருந்து விலை விவரங்கள் கோரப்படும்போது அவ்விவரங்கள் அளிக்கப்படுகிறது.

அரசின் கொள்கை முடிவு மற்றும் குறியீட்டெண்கள் கணிப்பதற்கு விலை விவரங்கள் பயன்படுகிறது.

[2021 செப்டம்பர் 13

3.2.9.2 மொத்த விலை குறியீட்டெண்

வேளாண்மை மற்றும் வேளாண்மைத் தொழில் சாராத பொருட்களுக்கான மொத்த விலை விவரங்கள் சேகரிக்கப்பட்டு தமிழ்நாட்டிற்கான மொத்த விலைக் குறியீட்டெண் 2011-2012=100-ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு மாதந்தோறும் கணித்து வெளியிடப்படுகிறது.

3.2.9.3 தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலைக் குறியீட்டெண்

தமிழ்நாட்டில் உள்ள சென்னை, சேலம், மதுரை, குன்னூர், கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் விருதுநகர் ஆகிய 7 மத்திய மையங்களுக்கான நுகர்வோர் விலை குறியீட்டெண்கள் சிம்லாவில் உள்ள மத்திய தொழிலாளர் செயலகத்தால் 2016 = 100-ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு கணித்து வெளியிடப்படுகிறது. அதற்கான விலை விவரங்கள் அந்தந்த மையங்களிலிருந்து சேகரித்து நேரடியாக சிம்லாவிற்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

கடலூர், நாகர்கோவில், வேலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 4 மாநில மையங்களுக்கு 2011=100 ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் மாதந்தோறும் கணித்து வெளியிடப்படுகிறது. நுகர்வோர் விலைக் குறியீட்டெண்களைக் கொண்டு அகவிலைப்படி தினக்கூலி மற்றும் குறைந்தபட்ச கூலி ஆகியவை கணக்கிடப்படுகின்றன.

3.2.9.4 மாவட்ட அளவிலான நுகர்வோர் விலை குறியீட்டெண்கள் (கிராமப்புறம், நகர்ப்புறம், இணைந்தது)

மாவட்ட அளவிலான கிராமப்புற மற்றும் நகர்ப்புற நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் திட்டங்களை பரவலாக்குவதற்கும், மாவட்ட அளவிலான விலை நிலவரப் போக்கினை அறிந்து கொள்வதற்கும், குறிப்பிட்ட மண்டலம் அல்லது மாவட்டத்திற்குரிய கொள்கைகளை வகுப்பதற்கான இலக்குகளை நிர்ணயிப்பதற்கும் பயன்படுகிறது.

மத்திய புள்ளியியல் அலுவலகத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி 2019-2020-ஐ அடிப்படை ஆண்டாகக் கொண்டு மாவட்ட அளவிலான நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் கணிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் கணிப்பதற்கு தமிழ்நாட்டின்

2021 செப்டம்பர் 13]
32 மாவட்டங்களில் உள்ள 153 கிராமப்புற மையங்கள் மற்றும் 145 நகர்ப்புற மையங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன, பொருட்களின் தொகுப்பு (Commodity Basket) மற்றும் அடிப்படை ஆண்டு விலை விவரங்கள் (Fixation of Base Year Price) இறுதி செய்யப்பட்டு நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள் கணிப்பதற்கான பணி நடைபெற்று வருகிறது.

3.2.10 பொருளாதாரக் கணக்கெடுப்பு

பொருளாதாரக் கணக்கெடுப்பு என்பது வேளாண் மற்றும் வேளாண்மை அல்லாத நிறுவனங்கள் (பயிர் உற்பத்தி, மலைத் தோட்டப் பயிர், பொது நிர்வாகம், இராணுவம், கட்டாய சமூகப் பாதுகாப்பு ஆகியவை தவிர) உற்பத்தி சார்ந்த அல்லது சேவைகளுடன் தொடர்புடைய அனைத்து பொருளாதார நடவடிக்கைகளையும் கணக்கிடுதலாகும்.

பொருளாதாரக் கணக்கெடுப்பு மாநிலத்தின் புவியியல் எல்லைக்குள் அமைந்திருக்கும் அமைப்புசாரா நிறுவனங்கள் உட்பட அனைத்து நிறுவனங்களின் எண்ணிக்கையினை வழங்குகிறது. இது வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் பொருளாதாரத்தில் பெரும் பங்களிப்பை கொண்டுள்ளது. மேலும், பொருளாதாரக் கணக்கெடுப்பானது பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளில் வளர்ச்சித் திட்டங்களை திட்டமிடுவதற்கு மற்றும் செயல்படுத்துவதற்கு தேவைப்படும் தொழில்முனைவோர் குறித்த புள்ளிவிவரம், நிறுவனங்கள் குறிப்பாக அமைப்புசாரா நிறுவனங்களின் எண்ணிக்கை போன்ற தகவல்களை வழங்குவதாகும்.

பொருளாதாரக் கணக்கெடுப்பு மாநிலத்தின் அனைத்து நிறுவனங்களின் செயல்பாடு மற்றும் கட்டமைப்பு மாறிகள் பற்றிய தகவல்களை வழங்குகிறது. மேலும், பொருளாதார நடவடிக்கைகளின் புவியியல் பரவல் நிறுவனங்களின் உரிமையாளர் வகை, பணியாளர்களின் எண்ணிக்கை போன்ற தகவல்களை வழங்குகிறது. பொருளாதாரக் கணக்கெடுப்பில் சேகரிக்கப்படும் விவரங்கள் மாநில மற்றும் மாவட்ட அளவில் சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை திட்டமிடுவதற்கு மிகவும் பயன்படுகிறது.

பொருளாதாரக் கணக்கெடுப்பு இந்திய அரசின் திட்டமாகும், இது ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. இதுவரை ஆறு பொருளாதாரக் கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

TRUTH ALONE TRIUMPHS

[2021 செப்டம்பர் 13

மத்திய அரசால் இதுவரை நடத்தப்பட்டுள்ள அனைத்து பொருளாதாரக் கணக்கெடுப்புகளிலும் தமிழ்நாடு பங்குபெற்றுள்ளது. தற்போது நடைபெறுவது ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பாகும்.

இந்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட செயலாக்க அமைச்சகத்தினால் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. மாநில அளவில் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பில் தொடர்புடைய மாநில துறைகளை ஒருங்கிணைக்கும் துறையாக பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை செயல்படுகிறது.

ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்புப் பணியில் மேம்படுத்தப்பட்ட தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பக் கருவிகள் பயன்படுத்தப்படுகிறது. ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு தொழில்நுட்பப் பணிகள் இந்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின்கீழ் உருவாக்கப்பட்ட Common Service Center, e-Governance Services India Limited-SPV என்ற நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது. ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்புப் பணியினை செயல்படுத்துவது Common Service Center, e-Governance Services India Limited நிறுவனமாகும் (இந்திய அரசின் அரசிதழ் எண்.1749, நாள்: 13.6.2019 இன்படி).

கணக்கெடுப்புப் பணி மற்றும் முதல் நிலை மேற்பார்வைப் பணி (100% மேற்பார்வை) Common Service Center, e-Governance Service India Limited நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகிறது. ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்புப் பணியில் 10% இரண்டாம் நிலை மேற்பார்வையாளர்களால் மேற்பார்வையிடப்படுகிறது. இரண்டாம் நிலை மேற்பார்வைப் பணியில் தேசிய மாதிரி ஆய்வு அலுவலர்கள் மற்றும் மாநில அலுவலர்கள் பங்கேற்றுள்ளனர்.

ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்புப் பணி தமிழ்நாட்டில் சுமூகமாக நடைபெற மாநில ஒருங்கிணைப்புக் குழு (SLCC), மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு (DLCC) - (சென்னை நீங்கலாக) மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒருங்கிணைப்புக் குழு ஆகிய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

2021 செப்டம்பர் 13]

தமிழ்நாட்டில் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு-2019 களப்பணி "மாண்புமிகு தமிழக ஆளுநர்" அவர்களால் 9-10-2019 அன்று சென்னையில் துவக்கி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு களப்பணி அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் துவக்கி வைக்கப்பட்டது. ஏழாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு களப்பணி தற்போது நிறைவடையும் தருவாயில் உள்ளது.

3.2.11 நீடித்த வளர்ச்சி இலக்குகள்

3.2.11.1 குறிகாட்டிகளின் கட்டமைப்பு

நீடித்த வளர்ச்சி இலக்குகளை கண்காணிப்பதற்கு, அதன் குறிக்காட்டிகள் முதுகெலும்பாகத் திகழ்கின்றன. அதன் அடிப்படையில், சம்பந்தப்பட்ட துறைகளுடன் நடத்தப்பட்ட தொடர் கலந்துரையாடல்களின் அடிப்படையில், மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் குறிகாட்டிகளுக்கான வரையறை முடிவு செய்யப்படுகிறது. அதன் அடிப்படையில் மாநில குறிகாட்டிகள் 314, மாவட்ட குறிகாட்டிகள் 104 மற்றும் வட்டார குறிகாட்டிகள் 93 என்று குறிகாட்டிகளின் கட்டமைப்பினை அரசு இறுதி செய்துள்ளது.

நீடித்த வளர்ச்சி இலக்குகளின் மாநில, மாவட்ட மற்றும் வட்டார குறிகாட்டிகளின் தொகுப்பு மற்றும் ஒவ்வொரு குறிகாட்டியும் கணக்கிடும் முறை கொண்ட கையேடு ஒன்று 20.10.2020 அன்று நடைபெற்ற உலக புள்ளியியல் தின கொண்டாட்டத்தின்போது வெளியிடப்பட்டது.

நீடித்த வளர்ச்சி இலக்குகளை உள்ளூர்மயமாக்குதலின் ஒரு பகுதியாக, நகர்ப்புற (Urban) மற்றும் மீள் குடியேற்ற (Resettlement) குறிகாட்டிகள் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் அடிப்படையிலும் சம்பந்தப்பட்ட துறைகளுடனான கலந்துரையாடல்களின் கருத்தின் அடிப்படையிலும் தொகுக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் இப்பகுதிகளின் ஒருங்கிணைந்த முன்னேற்றத்தினை நீடித்த வளர்ச்சி இலக்குகளின்மூலம் கண்காணிக்க இயலும், இப்பணி முடிவுற்று நகர்புற குறிகாட்டிகள் மற்றும் மீள்குடியேற்ற குறிகாட்டிகள் விரைவில் வெளியிடப்படும்.

இத்துறையால் ஜூலை 2021-ல் நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கான தரவு தாள் (Fact Sheet-2020) வெளியிடப்பட்டுள்ளது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

3.2.11.2 நீடித்த வளர்ச்சி இலக்குகளின் மின்னணு பலகை (SDG Dashboard)

சம்பந்தப்பட்ட தொடர்புத் துறைகள் (Line Departments) தங்களுடைய குறிகாட்டிகளின் புள்ளிவிவரங்களை இணையவழிமூலம் மின்னணு பலகையில் உள்ளீடு செய்ய ஏதுவாக, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் (TNeGA)உருவாக்கப்பட்ட இம்மாநில மின்னணு பலகை மறுசீரமைப்பு செய்யப்பட்டு ஜனவரி-2021 முதல் பயன்பாட்டில் உள்ளது. இப்பணியில் இத்துறையின் பங்கு மிக முக்கியமானதாகும். மறுசீரமைப்பு செய்யப்பட்ட மின்னணு பலகையில், மாவட்ட குறிகாட்டிகள் மற்றும் வட்டார குறிகாட்டிகளின் புள்ளிவிவரங்களை உள்ளீடு செய்வதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. இப்பலகையில் இலக்குகள், குறிகாட்டிகளின் செயல்திறனை காண காட்சிப்படுத்துதல் அமைப்பு உள்ளன.

3.2.11.3 திறன் மேம்பாடு

மின்னணு பலகையில் குறிகாட்டிகளின் புள்ளிவிவரங்களை உள்ளீடு செய்வதற்கு மற்றும் குறிகாட்டிகள் பற்றிய விவரங்கள் தொடர்பாக பயிற்சி வகுப்புகள் சம்பந்தப்பட்ட துறைகளின் ஒருங்கிணைக்கும் அதிகாரிகளுக்கு மற்றும் இத்துறையின் அலகுகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டது.

3.2.11.4 பயிலரங்கம்/கருத்தரங்கம்

நீடித்த வளர்ச்சி இலக்குகளின் இலக்கு 5, பாலின சமத்துவம் மற்றும் இலக்கு 16 அமைதி, நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள் ஆகியவற்றின்கீழ், பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான கருத்தரங்கு தொடர் இத்துறையால் 2-12-2020 முதல் 9-12-2020 வரை ஐ.நா சபையின் மகளிர் அமைப்பு (UNWOMEN) மற்றும் யுனிசெப் (UNICEF) அமைப்புடன் இணைந்து நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கு தொடரில் ஐ.நா சபையின் மகளிர் அமைப்பு மற்றும் யுனிசெப் அமைப்பின் பிரதிநிதிகள், துறை சார்ந்த நிபுணர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

3.2.11.5 கண்காணித்தல்

இத்துறை நீடித்த வளர்ச்சி இலக்குகளின் இந்திய குறியீட்டின்கீழ் பல்வேறு இலக்குகளின் செயல்திறனை பகுப்பாய்வு செய்கிறது.

2021 செப்டம்பர் 13]

முன்னேற்றத்தில் அதிக கவனம் செலுத்தப்படவேண்டிய இலக்குகள் மற்றும் அது தொடர்பான இனங்களை அடையாளம் கண்டு அதனை, தொடர்புடைய துறைகளுக்கு தெரிவித்து உரிய தீர்வுகளைக் காண வழிவகை செய்கிறது. நீடித்த வளர்ச்சி இலக்குகளின்கீழ் புள்ளிவிவரங்களை சேகரிக்க இத்துறை பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது.

3.2.12 வெளியீடுகள்

இத்துறையிலிருந்து மாநில, மாவட்ட, வட்டார அளவில் ஏறத்தாழ 500 அறிக்கைகள் பருவ வாரியாக வெளியாகின்றன. அவைகளில் தமிழ்நாடு புள்ளியியல் கையேடு, ஆண்டு புள்ளியியல் தொகுப்பு, பருவமும் பயிரும் பற்றிய அறிக்கை, மாவட்டப் புள்ளியியல் கையேடு போன்றவை முக்கிய வெளியீடுகளாகும்.

3.2.13 தமிழ்நாடு மாநில புள்ளியியல் பயிற்சி நிறுவனம், சென்னை

பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையின் பணியாளர்களின் திறனை மேம்படுத்துவதற்காக தேவை அடிப்படையிலும் மற்றும் குறிப்பிட்ட சிறப்பு பயிற்சி அளிக்க வேண்டி, தமிழ்நாடு மாநில புள்ளியியல் பயிற்சி நிறுவனம் நிறுவப்பட்டு தற்பொழுது அரசால் ஒப்பளிக்கப்பட்ட பதவிகளில் இயக்குநர் மற்றும் இதர பணியாளர்களைக் கொண்டு 1-5-2012 முதல் புள்ளியியல் மற்றும் புள்ளியியல் துறை தலைமையிட வளாகத்தில் இப்பயிற்சி நிறுவனம் இயங்கி வருகின்றது.

இத்துறை பணியாளர்களுக்கு உரிய கால முறையில் பின்வரும் பயிற்சிகளை பல்வேறு துறை வல்லுநர்களின் உதவியுடன் தமிழ்நாடு மாநில புள்ளியியல் பயிற்சி நிறுவனம் வழங்கி வருகின்றது.

(i) *பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் தொடர்பான அடிப்படைக் கருத்துருக்கள், அலுவல் சார்ந்த புள்ளியியல் விவரங்கள், அது தொடர்பான நெறிமுறைகள், பகுப்பாய்வு மற்றும் தகவல் பரிமாற்றும் திறன்கள், அறிக்கை தயாரிக்கும் திறன் போன்றவை அறிமுகப் பயிற்சிகள்மூலம் அளிக்கப்படுகிறது.*

(ii) *தேவை அடிப்படையிலான குறுகிய கால தேசிய மாதிரி ஆய்வு பயிற்சிகள், மாநில வருவாய் கணக்கீட்டு செய்முறைகள், புள்ளியியல் மென்பொருள் பயன்பாடுகள்,*

மென்பொருள் உருவாக்கம், புள்ளிவிவரப் பாதுகாப்பு மற்றும் கணினி மேலாண்மை ஆகியவை நடத்தப்படுகின்றன.

(iii) நிதியாண்டு 2020-2021-ல் இந்நிறுவனத்தில் 10 விதமான பயிற்சிகள் 12 தொகுதிகளாக நடத்தப்பட்டு 412 பணியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

3.3 மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை 1974 முதல் செயல்பட்டு வருகிறது. மத்திய மற்றும் மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களை மதிப்பீடு செய்வதே இத்துறையின் பணி ஆகும். மத்திய/மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான சான்றுகள் அடிப்படையிலான முடிவெடுப்பதில் மதிப்பீடு ஒரு முக்கிய அங்கமாகும். பல்வேறு திட்டங்களின் செயல்முறை மதிப்பீட்டின் பின்னூட்டம், திட்டங்கள் செயல்படுத்தலில் திருத்தம் செய்ய உதவுகிறது. இதனால் முடிவு செய்யப்பட்ட இலக்குகளை அடையவும், திட்டங்களின் செயல்திறனை பயனுள்ளவகையில் செயல்படுத்த மற்றும் மேம்படுத்தவும் முடியும்.

சமூக நலன், சுகாதாரம், கல்வி, வேளாண்மை, நீர்ப்பாசனம், தோட்டக்கலை, வனம், வீட்டுவசதி, போக்குவரத்து, ஊரக வளர்ச்சி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன் போன்ற பல்வேறு துறைகளில் இத்துறையானது இதுவரை 786 மதிப்பீட்டாய்வு அறிக்கைகள் முடிக்கப்பட்டு அரசுக்கு சமர்ப்பித்துள்ளது.

3.3.1 துறையின் முக்கியப் பணிகள்

(i) மத்திய, மாநில அரசின் பல்வேறு திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

(ii) “தமிழ்நாடு – ஓர் பொருளாதார ஆய்வறிக்கை” ஆவணத்தை தயாரித்து வெளியிடுதல்.

3.3.2 துறையின் நிர்வாகம் மற்றும் கண்காணிப்பு

திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் கண்காணிப்பின்கீழ் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை தனிப்பட்ட முறையில் இயங்கி வருகிறது. இதன்மூலம்

2021 செப்டம்பர் 13]

முடிக்கப்பட்ட மற்றும் அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளுக்கு இத்துறையே பொறுப்பாகிறது. இத்துறையின் மதிப்பீட்டு ஆய்வுகள், மாநில மதிப்பீட்டுக் குழு (SEC) மற்றும் மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழு (SEAB) ஆகியவற்றின் வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

3.3.2.1 மாநில மதிப்பீட்டுக் குழு (SEC)

மாநில மதிப்பீட்டுக் குழுவின் தலைவராக செயல்படும் நிதித் துறை, அரசு செயலர், மதிப்பீட்டு ஆய்வுகளின் பட்டியலை முடிவு செய்கிறார். 2021 ஆம் ஆண்டிற்கு இருபத்து ஒன்று மதிப்பீட்டாய்வுகள் இத்துறையால் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

3.3.2.2 மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழு (SEAB)

மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவானது மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவரை தலைமையாகக் கொண்டு செயல்படுகிறது. இக்குழுவில் பல்வேறு கல்வி ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் மாநில மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களும் அங்கம் வகிப்பர். மேலும் இத்துறையில் மேற்கொள்ளப்படும் மதிப்பீட்டு ஆய்வுகளின் செயல்முறையியல்கள் மற்றும் ஆய்வுகளுக்கு இக்குழு ஒப்புதல் அளிக்கிறது. இக்குழு மதிப்பீட்டாய்வுகளின் செயல்முறையியல்களில் உள்ள ஆய்வின் நோக்கங்கள் மற்றும் மாதிரி வரைவு குறித்து கலந்து ஆலோசித்து விவாதித்து முடிவு செய்கிறது. மேலும் முடிக்கப்பட்ட மதிப்பீட்டாய்வின் முடிவுகள் மற்றும் பரிந்துரைகளை விவாதித்து இறுதி செய்கிறது. 2020 ஆம் ஆண்டில் மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவில் பத்து மதிப்பீட்டாய்வுகள் மற்றும் பதினான்கு மதிப்பீட்டு செயல்முறையியல்களுக்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

3.3.3 செயல்திறன்

2021 ஆம் ஆண்டில், அனைத்து (19) மதிப்பீட்டு ஆய்வுகளின் செயல் முறையியல்களுக்கும் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதில் 3 மதிப்பீட்டு ஆய்வுகள் 10-8-2021 அன்று மாண்புமிகு துணைத் தலைவர், மாநில திட்டக் குழு தலைமையில் நடைபெற்ற மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. மேலும், 16 மதிப்பீட்டு ஆய்வுகளின் பணிகள் பல்வேறு கட்டங்களில் நடந்து கொண்டிருக்கின்றன. 27-5-2021

[2021 செப்டம்பர் 13

அன்று நடைபெற்ற மாநில மதிப்பீட்டுக் குழுவின் கூட்டத்தில், 21 மதிப்பீட்டு ஆய்வுகள் இந்தத் துறையால் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. அதற்கான செயல் முறையியல்கள் ஒப்புதலுக்குத் தயாரிக்கப்பட உள்ளது.

3.3.4 ஆய்வுகளை மேற்கொள்வதில் கால வரிசை செயல்முறை

மாநில மதிப்பீட்டுக் குழுவின் ஒப்புதலின் பேரில், மதிப்பீட்டு ஆய்வு இந்தத் துறைக்கு ஒதுக்கப்படுகிறது. பின்னர், மதிப்பீட்டு ஆய்விற்கான குறிக்கோள்களை வடிவமைப்பதற்கும் செயல்முறையியல்களைத் தயாரித்து மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழுவில் முன்வைப்பதற்கும் மாதிரி வரைவு குறித்து கலந்து ஆலோசித்து விவாதித்து முடிவு செய்ய இரண்டாம் நிலை தரவுகளை சேகரிப்பதற்கும், செயல்படுத்தும் துறைகளுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றன. செயல்முறையியல் ஒப்புதலின் பேரில், முதன்மைத் தரவைச் சேகரிக்க வினாத்தாள் தயாரிக்கப்பட்டு மின்னணுமயமாக்கப்படுகிறது. மின்னணுமயமாக்கப்பட்ட கேள்வித்தாளின் மூலம் அதன் ஓட்டத்தையும் பொருத்தத்தையும் சரிபார்க்க முன்மாதிரி களப்பணி சோதனை மேற்கொள்ளப்படுகின்றது.

சேகரிக்கப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு ஒப்புதலுக்காக மாநில மதிப்பீட்டு ஆலோசனைக் குழு முன் சமர்ப்பிக்கப்படுகின்றன மற்றும் மதிப்பீட்டாய்வு அறிக்கையின் பரிந்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் குறித்து பின்தொடர் நடவடிக்கை எடுக்க மாநில திட்டக் குழுவிற்கு அனுப்பப்படுகின்றன.

3.3.5 மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு ஆய்வுகளின் வகைகள்

தேவைகள் மதிப்பீடு–ஒரு பிரச்சினையின் தன்மை மற்றும் நோக்கத்தை அடையாளம் காணவும், சிக்கலைத் தீர்க்கத் தேவையான சேவை வழங்கலைத் தீர்மானிக்கவும் மேற்கொள்ளப்படுகிறது.

3.3.5.1 திட்டக் கோட்பாட்டு மதிப்பீடு

திட்டத்தில் உள்ள கோட்பாட்டை மாதிரியாகக் கொண்டு, ஒரு திட்ட உள்ளீடுகளுக்கும், அதன் இறுதி குறிக்கோளுக்கும் இடையிலான காரணப் பாதையை பட்டியலிடுவதை உள்ளடக்குகிறது.

2021 செப்டம்பர் 13]

3.3.5.2 செயல்முறை மதிப்பீடு

செயல்முறை மதிப்பீடு, வேலைத் திட்டங்களுக்கான மாதிரிகளின் செயல்பாடுகள், செயல்படுத்தல் மற்றும் சேவை வழங்கல் ஆகியவற்றின் செயல்திறனை பகுப்பாய்வு செய்கின்றன. இந்தத் துறையால் மேற்கொள்ளப்பட்ட அனைத்து மதிப்பீட்டு ஆய்வுகளும் செயல்முறை பரிமாணத்தைக் கொண்டிருக்கின்றன.

3.3.5.3 தாக்க மதிப்பீடு

ஒரு தாக்க மதிப்பீடு, திட்டங்களின் தாக்கத்தையும், அதன் காரணமாக ஏற்படும் முக்கிய விளைவுகளையும் அடையாளம் காட்டுகிறது.

3.3.5.4 மதிப்பு விளைவு பகுப்பாய்வு

மதிப்பு விளைவு பகுப்பாய்வானது பல்வேறு திட்டங்களின் வெவ்வேறு சூழ்நிலை மற்றும் காலகட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட திட்ட செலவுகள் மற்றும் அதன் தாக்கம் குறித்து ஒப்பிடுவதாகும். இவை இரண்டும் ஒரே நோக்கத்தை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

3.3.6 தேசிய உணவு பாதுகாப்பு சட்டம் (NFSA)

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை இந்திய அரசாங்கத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டு மற்றும் தேசிய உணவு பாதுகாப்பு சட்டம் 2013-ன் தொடர் மதிப்பீட்டாய்வு செய்வதில் பங்கேற்றுள்ளது. இந்திய அரசாங்கத்தின் உணவு வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சகம் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையை தகுதி அடிப்படையில் தேர்வு செய்தது. இவ்வாய்வானது எட்டு காலாண்டுகளை உள்ளடக்கிய இரண்டு வருட காலத்திற்கு மேற்கொள்ளும் நிகழ்கால மதிப்பீட்டு ஆய்வு ஆகும். ஒவ்வொரு காலாண்டிலும் நான்கு மாவட்டங்களில், 20 மாதிரி நியாய விலைக் கடைகளிலிருந்து 300 மாதிரி பயனாளிகள் மற்றும் அந்தந்த கடையின் விற்பனை நபர்களும் அடங்குவர். குறை தீர்க்கும் நெறிமுறையை மதிப்பிடுவதற்காக மாதிரியின் ஒரு பகுதியாக நியாய விலைக் கடை அளவிலான கண்காணிப்புக் குழு மற்றும் மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் ஆய்வில் உட்படுத்தப்பட்டுள்ளனர். அனைத்து மாதிரி மாவட்டங்களிலும் சரக்கு இருப்பு மற்றும் விநியோக அமைப்பு குறித்த விவரங்கள்

[2021 செப்டம்பர் 13

சேகரிக்கப்பட்டது. வினாத்தாள்கள் இந்திய அரசின் உணவு வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சகம்மூலம் வழங்கப்பட்டது. கள ஆய்வு மற்றும் பகுப்பாய்வு மற்றும் அறிக்கை தயாரித்தல் ஆகியவை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையால் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வின் தரவு சேகரிப்பு மின்னணு முறைமூலம் செய்யப்பட்டன.

தேசிய உணவு பாதுகாப்பு சட்டம் புரிந்துணர்வு ஒப்பந்த காலம் ஜூலை 2018 முதல் ஜூன் 2020 வரையிலான 8 காலாண்டுகளில், 8 ஆய்வு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு உள்ளன. நவம்பர் 2020-ல், இறுதி காலாண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

3.3.7 ஆய்வுகளுக்கான மின்னணு மதிப்பீட்டு முறை

மின்னணு மதிப்பீட்டு முறையின்கீழ் துறைக்கான வலைதளம் உருவாக்கப்பட்டது, வன்பொருள் மற்றும் மென்பொருள் தொகுப்புகள் வாங்கப்பட்டுள்ளன. தரமான தரவு சேகரிப்பு மற்றும் தரவு சேகரிப்பு செயல்திறனை மேம்படுத்துவதற்காக, வினாத்தாள் வடிவமைக்க, வரைப்பட்டிகைகளில் வினாக்களை பதிவேற்ற மற்றும் தரவு சேகரிக்க மென்பொருள் பயன்பாட்டில் துறை பணியாளர்களுக்கு புத்துணர்வு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்துறைமூலம் 2018 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை களப்பணியில் அனைத்து முதல்நிலை விவரங்களும் வரைப்பட்டிகைகளை பயன்படுத்தி சேகரிக்கப்பட்டு 22 மதிப்பீட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3.3.8 மதிப்பீடு ஆய்வுக்கான வழிகாட்டி முறை

கொள்கை முடிவெடுப்பதில் மதிப்பீட்டின் பங்கை வலுப்படுத்த, பல்வேறு அரசு துறைகளால் மதிப்பீட்டு ஆய்வுகளை வடிவமைத்தல், புரிந்துகொள்வது மற்றும் செயல்படுத்துவதற்கான பொதுவான மதிப்பீட்டாய்வு வழிகாட்டி கையேடு உருவாக்கப்பட்டுள்ளது.

3.3.9 வெளி நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்படும் மதிப்பீட்டு ஆய்வுகள்

வெளி நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்படும் மதிப்பீட்டு ஆய்வுகள் அதிக அளவில் பயனாளியின் தொகுதியும் மற்றும் புவிசார் பரப்பளவின் அடிப்படையிலும் நடைபெறும் ஆய்வு

2021 செப்டம்பர் 13]

அறிக்கைகளுக்கு அங்கீகாரம் பெற்ற பட்டியலிடப்பட்ட வெளி நிறுவனங்கள் மூலமாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது.

3.3.10 மேம்பாட்டு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலகத்துடனான (DMEO) நோக்க அறிக்கை

ஒன்றிய அரசின் பல்வேறு திட்டங்களின் எதிர்நோக்கும் குறிக்கோள்களை அடைவது குறித்து மதிப்பீடு செய்யும் பணியை நித்தி ஆயோக்கின் கீழுள்ள DMEO செய்து வருகிறது, அதன் முக்கிய குறிக்கோளானது மாநில மற்றும் ஒன்றிய பிரதேசங்களின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செய்யும் பணிகளை செம்மைப்படுத்துவதாகும். தமிழக அரசின் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையானது, மேம்பாட்டு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலகம், நித்தி ஆயோக்குடன் 8-7-2021 அன்று ஒரு நோக்க அறிக்கையை கையெழுத்திட்டுள்ளது. நோக்க அறிக்கையானது அரசின் கொள்கை மற்றும் திட்டங்களில் கூட்டுறவு முறையிலான கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு கட்டமைப்பை ஏற்படுத்த முக்கியத்துவம் அளிக்கிறது. மாநிலத்தில் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையானது நோக்க அறிக்கையை செயல்படுத்த ஒருங்கிணைக்கும் துறையாக செயல்படும்.

4.0 சென்னை மெட்ரோ இரயில் திட்டம்

சென்னை பெருநகர பகுதி, 87 இலட்சம் மக்கள் தொகையுடன் (2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு) 1189 சதுர கி.மீ அளவிற்கு பரவியுள்ளது. இது, மாநகரப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள், புறநகர் இரயில் போக்குவரத்து மற்றும் பெருந்திரள் விரைவு இரயில் போக்குவரத்து கட்டமைப்புகளை கொண்ட ஒரு பரந்த பொதுப் போக்குவரத்து கட்டமைப்பாகும். பெருகி வரும் தேவைக்குத் தீர்வு காண்பதற்கும் போக்குவரத்து நெரிசல் மற்றும் மாசினை கட்டுப்படுத்துவதற்கும் தமிழ்நாடு அரசு, சென்னை மெட்ரோ இரயில் வாயிலாக பெருந்திரள் போக்குவரத்தை அறிமுகப்படுத்த முடிவு செய்துள்ளது. சென்னை மெட்ரோ இரயில் திட்டமானது, தொலைதூர இரயில்கள் மற்றும் பேருந்துகள், மாநகரப் பேருந்துகள், புறநகர் இரயில்கள் மற்றும் பெருந்திரள் விரைவு இரயில் போக்குவரத்து உள்ளிட்ட ஏனைய பொது மற்றும் தனியார் போக்குவரத்து அமைப்புகளுடன் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட விரைவான, பயன் தகுந்த, திறன்மிக்க மற்றும் நீடித்த பொது போக்குவரத்து முறையாகும்.

[2021 செப்டம்பர் 13

4.1 கட்டம்-I

வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரையிலான வழித்தடமும், சென்னை மத்திய இரயில் நிலையம் முதல் பரங்கிமலை வரையிலான மற்றொரு வழித்தடமும் என இரண்டு வழித்தடங்கள் கொண்ட சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதல் கட்டம் 2006 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் முதன் முதலாக உத்தேசிக்கப்பட்டது. மாநில அரசு, இத்திட்டத்திற்கு 2007 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கி, ஒன்றிய அரசின் நிதியுதவியும் வெளிநாட்டு நிதியுதவியும் பெறுவதற்காக பரிந்துரைத்தது.

ஒன்றிய அரசு, 2009 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், முதல் கட்டத்தின் கீழ், இரண்டு வழித்தடங்களை செயல்படுத்துவதற்கான நிருவாக ஒப்புதலை வழங்கியது. இத்திட்டப் பணியில், 45.1 கி.மீ மொத்த நீளத்தில் இரண்டு வழித்தடங்களை 14,600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசு மற்றும் ஒன்றிய அரசின் கூட்டு முயற்சி அடிப்படையில் செயல்படுத்தப்படுகிறது. ஒன்றிய அரசு, திட்டத்திற்கு ஆகும் செலவின் 15 விழுக்காட்டை சமவீத பங்காகவும், 5.78 விழுக்காட்டை சார்நிலைக் கடனாகவும் வழங்கியுள்ளது. எஞ்சியுள்ள 59.22 விழுக்காட்டு தொகையை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை (Japan International Cooperation Agency) கடனுதவியாக வழங்கியது.

முதல் கட்டத்தின் வாயிலாக ஒப்புதல் அளிக்கப்பட்ட மெட்ரோ இரயில் நிலைய வழித்தடங்களின் விவரங்கள் வருமாறு:

வழித்தடங்கள்	உயர்த்தப் பட்டவை	சுரங்கப் பாதை	மொத்தம்
வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரையில் (கி.மீ)	8.8	14.3	23.1
சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம் முதல் பரங்கிமலை வரையில் (கி.மீ)	12.3	9.7	22.0
மொத்த நீளம் (கி.மீ)	**21.1**	**24.0**	**45.1**
மெட்ரோ இரயில் நிலையங்களின் எண்ணிக்கை	13	19	32

2021 செப்டம்பர் 13]

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், நிறுவனங்கள் சட்டத்தின்படி ஒருங்கிணைக்கப்பட்ட சிறப்பு நோக்குத் திட்டமாக செயல்படுத்தி வருகின்றது. அதன் பின்னர், ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகள் 50:50 என்ற சமபங்கு வீதத்தில் இந்த நிறுவனம் கூட்டு முயற்சி நிறுவனமாக மாற்றியமைக்கப்பட்டது. இவ்வொப்பந்தத்தின்படி, ஒன்றிய அரசு, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தின் அரசு செயலாளரை, தலைவராக கொண்ட ஐந்து இயக்குநர்களை நியமனம் செய்தது. அதே போன்று, மாநில அரசு மேலாண்மை இயக்குநர் உட்பட ஐந்து இயக்குநர்களை நியமித்தது. ஒருங்கே, மூன்று செயல் இயக்குநர்களும், இரண்டு தனிப்பொறுப்பு இயக்குநர்களும் உள்ளனர்.

4.2 திட்டப்பணி நிதியுதவி

இதுநாள் வரை, தமிழ்நாடு அரசு 2858.00 கோடி ரூபாயை சமவீத பங்காகவும், 2834.22 கோடி ரூபாயைச் சார்நிலைக் கடனாகவும் வழங்கியுள்ளது. ஒன்றிய அரசு, 2190.00 கோடி ரூபாயை சமவீத பங்காகவும், 730.00 கோடி ரூபாயைச் சார்நிலைக் கடனாகவும் வழங்கியுள்ளது. நேரடியாகச் செல்லும் நிதியுதவியாக (ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின்) முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய கடன் தொகை 8646.00 கோடி ரூபாய் பெறப்பட்டது. முதல் கட்டத்தின் திருத்திய செலவு மதிப்பீடு 18,380 கோடி ரூபாயாகும். இதற்கான ஒப்புதல் ஒன்றிய அரசின் கருத்தாய்வில் உள்ளது.

4.3 பயணியர் சேவை

முதல் கட்டத்தின்கீழ் பயணியர் சேவைகள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பல்வேறு நிலைகளில் தொடங்கி வைக்கப்பட்டன.

தொடங்கி வைக்கப்பட்ட நாள்	**கி.மீ**	**வழித்தடப்பகுதி**
29-6-2015	*10.15*	*கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரையில் (உயர்த்தப்பட்டவை)*
21-9-2016	*8.60*	*சென்னை விமான நிலையம் முதல் சின்னமலை வரையில் (உயர்த்தப் பட்டவை)*

தொடங்கி வைக்கப்பட்ட நாள்	கி.மீ	வழித்தடப்பகுதி
	1.20	*ஆலந்தூர் முதல் பரங்கிமலை வரையில் (உயர்த்தப்பட்டவை)*
14-5-2017	*7.40*	*கோயம்பேடு முதல் நேரு பூங்கா வரையில் (சுரங்கப்பாதை)*
25-5-2018	*2.50*	*நேரு பூங்கா முதல் சென்னை மெட்ரோ இரயில் வரையில் (சுரங்கப்பாதை)*
	4.35	*சின்னமலை முதல் ஏ.ஜி.-டி.எம். எஸ் வரையில் (சுரங்கப்பாதை)*
10-2-2019	*10.90*	*ஏஜி-டிஎம் எஸ் முதல் வண்ணாரப்பேட்டை வரையில் (சுரங்கப்பாதை)*
மொத்தம்	**45.10**	

4.4 கட்டம் –I இன் நீட்டிப்பு

தமிழ்நாடு அரசு சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம் – I இன் வழித்தடம் - 1 வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர் / விம்கோ நகர் வரையில் 9.051 கி.மீ நீளத்திற்கு நீட்டிப்பதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த திட்டக் கருத்துரு தேவைப்படும் சட்டப்படிக்கான ஒப்புதல், நிதியுதவி மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையிடமிருந்து வெளிநாடு நிதியுதவி ஆகியவற்றிற்காக 2010 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஒன்றிய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டது. இத்திட்டத்தை 3770 கோடி ரூபாய் மதிப்பீட்டு செலவில் செயல்படுத்துவதற்கான நிருவாக ஒப்புதலை 15-6-2016 அன்று வழங்கியது. மேலும், கட்டுமானப் பணிகள் 23-7-2016 அன்று தொடங்கப்பட்டன.

தமிழ்நாடு அரசு, சமபங்குத் தொகையாக 508.00 கோடி ரூபாயும் சார்நிலைக் கடனாக 599.27 கோடி ரூபாயும் கட்டம்–I-ன் விரிவாக்கத் திட்டத்திற்காக வழங்கியுள்ளது. அதே போன்று, ஒன்றிய அரசு பங்கு மூலதனமாக 508.00 கோடி ரூபாயும் சார் நிலைக் கடனாக 205.00 கோடி ரூபாயும் வழங்கியுள்ளது. நேரடியாகச் செல்லும் நிதியுதவியாக 2141.00 கோடி ரூபாய் (ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய கடன்) பெறப்பட்டது.

2021 செப்டம்பர் 13]

இவ்விரிவாக்க வழித்தடத்தில் 14-2-2021 அன்று பயணிகள் சேவை தொடங்கப்பட்டன. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின்கீழ், 54.1 கி.மீ. நீளம் கொண்ட கட்டம்–I முழுமையாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

4.5 கட்டம்-II

திருவாளர்கள் ரைட்ஸ் லிமிடெட் (M/s. Rites Limited) நிறுவனத்தால் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்-II-ற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. மொத்தம் 107.55 கி.மீ நீளத்திலான மூன்று வழித்தடங்களான (i) மாதவரம் முதல் சிறுசேரி (சிப்காட்) வரையிலும் (பழைய மாமல்லபுர சாலையையொட்டி), (ii) கலங்கரை விளக்கம் முதல் கோயம்பேடு புறநகர் பேருந்து முனையம் வரையிலும், (iii) மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலும் (கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம் வழியாக) முதலாவதாக முன்மொழியப்பட்டன. தமிழக அரசின் கட்டம்–II இன் விரிவான திட்ட அறிக்கைக்கு 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் தமிழக அரசின் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டு, ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதிப் பங்களிப்பிற்காகவும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் (JICA) நிதியுதவிக்காக பரிந்துரைத்தது.

அதன் தொடர்ச்சியாக, சென்னை பெருநகரப் பகுதிக்கான ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டத்தின் முடிவுகளின் அடிப்படையில், கட்டம்–II-ல் உள்ள வழித்தடங்களில் ஒன்றான வழித்தடம்-4-ஐ கலங்கரை விளக்கத்திலிருந்து வடபழனி மற்றும் போரூர் வழியாக பூந்தமல்லி வரை நீட்டிப்பதற்கு அரசு முடிவு செய்தது.

மூன்று மெட்ரோ இரயில் வழித்தடங்களுடன் மொத்தம் 118.9 கி.மீ நீளத்திலான சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்-II-ற்கு கொள்கையளவிலான ஒப்புதலை 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அரசு வழங்கியது. கட்டம்-II திட்டம் 69,180 கோடி ரூபாய் திட்டச் செலவு மதிப்பீட்டில், திருவாளர்கள் ரைட்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட ஒருங்கிணைந்த விரிவான திட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி செயல்படுத்துவதற்கு, ஒன்றிய அரசின் ஒப்புதல், நிதியுதவி மற்றும் வெளிநாட்டு கடனுதவி ஆகியவற்றிற்காக ஒன்றிய அரசுக்கு விரிவான திட்ட அறிக்கை பரிந்துரைக்கப்பட்டது.

4.6 கட்டம்–II வழித்தடங்களின் விவரங்கள் பின்வருமாறு:-

- *வழித்தடம்-3: மாதவரம் முதல் சிறுசேரி (சிப்காட்) வரையுள்ள (45.8 கி.மீ)-வடக்கு- தெற்கு வழித்தடமான இவ்வழித்தடத்தில், மென்பொருள் வழித்தடம், அடையார், மயிலை மற்றும் புரசைவாக்கம் போன்ற முக்கியப் பகுதிகள் இணைக்கப்படுகிறது;*

- *வழித்தடம்-4 : கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி புறவழிச் சாலையானது (26.1 கி.மீ) -கிழக்கு மேற்கு வழித்தடமான இவ்வழித்தடத்தில் நகரின் வணிகப் பகுதிகளான நந்தனம், தியாகராயநகர், வடபழனி, போரூர் மற்றும் பூவிருந்தவல்லி ஆகியவற்றை இணைக்கிறது;*

- *வழித்தடம்-5 : மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரை (47.0 கி.மீ) - சுற்று வட்ட வழித்தடமான இவ்வழித்தடத்தில் வில்லிவாக்கம், அண்ணாநகர், கோயம்பேடு, விருகம்பாக்கம், இராமாபுரம், மடிப்பாக்கம் மற்றும் மேடவாக்கம் ஆகிய பகுதிகள் இணைக்கப்படுகிறது;*

இரண்டாம் கட்டத்தில் கருதப்பட்டுள்ள மெட்ரோ இரயில் நிலையங்களின் விவரங்கள் பின்வருமாறு:

வழித்தடங்கள்	**உயர்த்தப்பட்ட இரயில் நிலையங்கள்**	**சுரங்கப் பாதை இரயில் நிலையங்கள்**	**மொத்தம்**
வழித்தடம்-3	*20*	*30*	*50*
வழித்தடம்-4	*18*	*12*	*30*
வழித்தடம்-5	*42**	*6*	*48*
மொத்தம்	**80**	**48**	**128**

* *ஒரு நிலையம் தரைமட்டத்தில்*

வழித்தடம்-3-ல் மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலும் (35.67கி.மீ), வழித்தடம்-5-ல் மாதவரம் முதல் சென்னைப் புறநகர்ப் பேருந்து நிலையம் வரையிலும் (16.34 கி.மீ)-மொத்தம் 52.01 கி.மீ நீள வழித்தடத்திற்கு ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியுதவி வழங்குகிறது. ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையுடன் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கடன்

2021 செப்டம்பர் 13]

ஒப்பந்தம் கையெழுத்தாகி, 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கடன் வழங்கத் தயாராக உள்ளது. கடன் தொகையின் முதல் தவணை 75,519 மில்லியன் ஜப்பான் பணமதிப்பில் (சுமார் 4770 கோடி ரூபாய்) ஆகும். இத்திட்டத்தில் ஒன்றிய அரசு பங்கேற்கும் வரையில், இத்திட்டத்தைத் தற்காலிகமாக மாநில அரசு திட்டமாகக் கருதி, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதியளிக்கும் வழித்தடப்பகுதிகளை 40,941 கோடி ரூபாய் செலவு மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கான நிருவாக ஒப்புதலை 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் மாநில அரசு வழங்கியது.

கலங்கரை விளக்கம் முதல் பூவிருந்தவல்லி புறவழிச்சாலை வரையிலான (26.1 கி.மீ) வழித்தடம்- 4, வழித்தடம்- 3இல் சோழிங்கநல்லூர் முதல் சிறுசேரி (சிப்காட்) வரை (10.13 கி.மீ) மற்றும் வழித்தடம் 5- இல் சென்னை புறநகர் பேருந்து நிலையம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலான (30.66 கி.மீ) எஞ்சிய வழித்தடப்பகுதிகளை செயல்படுத்துவதற்கு ஆசிய வளர்ச்சி வங்கி, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் புதிய மேம்பாட்டு வங்கி ஆகியவற்றின் நிதியுதவி பெறுவதற்கான ஆலோசனை நடைமுறைகள் நன்கு விரைவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் ஒன்றிய அரசு பங்கேற்கும் வரை, இத்திட்டத்தை தற்காலிகமாக மாநில அரசு திட்டமாகக் கருதி, 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், வழித்தடம் 4- முழுமையாகவும் வழித்தடம்- 3 மற்றும் வழித்தடம் 5- இல் எஞ்சிய வழித்தடப்பகுதிகளையும் 25,750 கோடி ரூபாய் செலவு மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்காக அரசு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது.

இதனிடையே, மெட்ரோ இரயில் திட்டங்களுக்கான செலவு மதிப்பீட்டு அளவுகோல் குறித்த வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகத்தின் ஆலோசனைகளின் அடிப்படையில், சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-II இன் செலவு மதிப்பீடு 61,843 கோடி ரூபாயாக (கட்டுமான காலத்திற்கான வட்டி மற்றும் முன் இறுதிக்கட்டணம் நீங்கலாக) திருத்தியமைக்கப்பட்டுள்ளன. திருத்திய செலவு மதிப்பீடு ஒன்றிய அரசின் ஒப்புதல் மற்றும் நிதியுதவிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மண் பரிசோதனைகளைத் தொடங்குவதற்கும் விரிவான வடிவமைப்புத் தயாரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு அரசு ஏற்கனவே

அனுமதியளித்துள்ளது. உயர்த்தப்பட்ட வழித்தடங்கள் மற்றும் நிலையங்கள் மற்றும் சுரங்கப்பாதை மற்றும் நிலத்தடி இரயில் நிலையங்கள் ஆகியவற்றை அமைப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகளை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மேற்கொள்ளத் தொடங்கியுள்ளது. சில வழித்தடப் பகுதிகளில் கட்டுமானப் பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்–I–ற்கு ஒப்புதல் வழங்கியது போன்று, 50:50 சம பங்கீட்டு அடிப்படையில், சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-II முழுவதற்கும் அனுமதியளிக்குமாறு 8-1-2019 ஆம் நாளன்று, மாநில அரசு, ஒன்றிய அரசை அணுகியுள்ளது. ஒன்றிய அரசின் இறுதி ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

4.7 பிற திட்டங்கள்

4.7.1 கட்டம்-I இன் நீட்டிப்பு – விமான நிலையம் முதல் கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரை

சென்னை மெட்ரோ இரயில் வழித்தடம் 1-ஐ விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரை நீட்டிப்பதற்கான விரிவான சாத்தியக்கூறு அறிக்கையை தயாரிப்பதற்கு அரசு 2020 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் இப்பணியை திருவாளர்கள் ஏஇகாம் (M/s. AECOM) நிறுவனத்திற்கு வழங்கி விரிவான அறிக்கை தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

4.7.2 இரயில் வழித்தட இணைப்பு – தாம்பரம் முதல் வேளச்சேரி வரை

தாம்பரம் முதல் வேளச்சேரி வரையிலான இரயில் வழித்தட இணைப்பிற்காக சாத்தியக்கூறு அறிக்கையை தயாரிப்பதற்கு அரசு 2020 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணியை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு, அந்நிறுவனம் இப்பணியை திருவாளர்கள். சிஸ்ட்ரா (M/s. SYSTRA) நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது. இதற்கான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது.

2021 செப்டம்பர் 13]

4.7.3 கோயம்புத்தூர் பெருந்திரள் விரைவுப் போக்குவரத்துத் திட்டம்

கோயம்புத்தூர் நகருக்கான பெருந்திரள் விரைவுப் போக்குவரத்துத் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரிப்பதற்கு அரசு 2021 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. ஜெர்மானிய நாட்டின் நிதியுதவி முகமையான கே.எப்.டபுள்யூ-வின் (KfW) (ஜெர்மன் வளர்ச்சி வங்கி) நிதியுதவியுடன் கோயம்புத்தூர் நகரில் பெருந்திரள் விரைவுப் போக்குவரத்துத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கையை தயாரிக்கும் பணி சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கையை உருவாக்கும் பணியை திருவாளர்கள் சிஸ்ட்ரா மற்றும் ரைட்ஸ் லிமிடெட் கூட்டமைப்பிற்கு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் வழங்கியுள்ளது. சாத்தியக்கூறு அறிக்கை தொகுக்கப்பட்டு, விரிவான திட்ட அறிக்கையை உருவாக்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளது.

4.7.4 இரண்டாம் நிலை நகரங்கள்

மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலியில் பெருந்திரள் விரைவுப் போக்குவரத்து திட்டங்களை செயல் படுத்துவதற்கான சாத்தியக் கூறு அறிக்கைகளை உருவாக்குமாறு அரசு 2021 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணி சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் விரைந்து முடிப்பதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு-IV

(112 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 53—சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2021-2022

முன்னுரை

சமூக பொருளாதார நிலையில், மாநிலம் முழுமையான வளர்ச்சியினை அடைவதற்கான செயல்பாடுகளுக்கு தமிழ்நாடு அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. இவ்வகையில், தமிழ்நாட்டை ஒரு வளர்ந்த மாநிலமாக கட்டமைப்பதற்குரிய திட்டங்கள் மற்றும் கொள்கைகளுடனான வழிகாட்டியாக "தலைநிமிரும் தமிழகம் - தொலைநோக்குத் திட்டங்கள்" திகழ்கிறது. இதில், பத்தாண்டு காலத்திற்குள் வறுமைக் கோட்டிற்குக்கீழ் எந்தக் குடும்பமும் இல்லை என்ற நிலையுடன், உயரிய பொருளாதார வளர்ச்சியினை அடைதல் மற்றும் சமூக நீதிக்கான முக்கியத்துவத்தை வலியுறுத்துவதுடன், வேளாண்மை, நீர் வளங்கள், கல்வி, சுகாதாரம், நகர்ப்புர மேம்பாடு மற்றும் ஊரக உட்கட்டமைப்பு போன்ற முக்கிய பகுதிகளில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை உருவாக்குதல் ஆகியவற்றிற்கான இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இந்த அரசு தனது தொலைநோக்குத் திட்டங்களின் இலக்குகளைத் துரிதமாக செயல்படுத்துவதிலும், சமூகத்தின் அனைத்து பிரிவுகளும் அளப்பரிய பலன்களை பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் உறுதியாக உள்ளது.

2. துறையின் முக்கிய செயல்பாடுகள்

அரசால் அறிவிக்கப்படும் பல்வேறு முதன்மைத் திட்டங்கள் மற்றும் பிற திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை கண்காணிக்கும் பொறுப்பு சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் முதன்மைப் பணியாகும்.

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறைக்கு பின்வரும் முக்கிய பணிகள் வழங்கப்பட்டுள்ளன.

2021 செப்டம்பர் 13]

- ❖ *அரசின் கண்காணிப்பு அமைப்பாக செயல்படுதல் மற்றும் செயல்பாட்டில் இருக்கும் திட்டங்களில் பெறப்படும் பின்னூட்டங்கள் அடிப்படையில் தேவையான திருத்தங்கள் வழங்குதல் / பரிந்துரைத்தல்.*

- ❖ *சட்டமன்றப் பேரவை மற்றும் முக்கிய அரசு விழாக்களில் அறிவிக்கப்படும் பல்வேறு முக்கிய கொள்கை அறிவிப்புகள் தொடர்பான ஆணைகள் சம்பந்தப்பட்ட துறைகளால் வெளியிடப்படுவதையும், அவற்றை செயல்படுத்துவதையும் தொடர்ந்து கண்காணித்தல்.*

- ❖ *திட்டங்களை துரிதப்படுத்தவும், அதனால் ஏற்படும் பயன்களை மேலும் செம்மைப்படுத்தவும், தேவைக்கேற்ப துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்பை உறுதி செய்தல்.*

- ❖ *அரசின் "முதன்மை திட்டங்களின்" பயன் சரியான நேரத்தில் இலக்கு மக்களை சென்றடைவதை உறுதி செய்ய, தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து கண்காணித்தல்.*

- ❖ *செயல்படுத்தப்படும் திட்டங்களின் அளவறி கூறுகள் மற்றும் பண்பியல் கூறுகள் குறித்து அரசுக்கு செயற்குறிப்புகள் மற்றும் தீர்வுகளுக்கான பரிந்துரைகள் தேவையான நேர்வுகளில் வழங்குதல்.*

- ❖ *மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களின் கள ஆய்வு அறிக்கைகள் மற்றும் ஆய்வு கூட்ட அறிக்கைகளை ஒருங்கிணைத்து அவற்றை அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் மூலமாக முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்கு அறிக்கையாக சமர்ப்பித்தல்.*

- ❖ *முதன்மைத் திட்டங்களின் குறிக்கோள்கள் முழுமையாக அடையப் பெறுவதை உறுதி செய்வதற்காக செயல்பாட்டு நடைமுறைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளில் தேவைப்படும் மேம்பாடுகள் மற்றும் திருத்தங்களை தொடர்புடைய துறைகளோடு ஒருங்கிணைந்து பரிந்துரைத்தல்.*

[2021 செப்டம்பர் 13

- ❖ பல்வேறு பகுதிகளில் பின்பற்றப்பட்டு வரும் முன்மாதிரி/ சிறந்த முயற்சிகளை ஆய்வு செய்து அவற்றில் பொருத்தமானவற்றை தமிழ்நாட்டில் செயல்படுத்தத் தேவையான பரிந்துரைகளை வழங்குதல்.

- ❖ அவ்வப்போது அரசால் இத்துறைக்கு வழங்கப்படும் சிறப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.

மேலே குறிப்பிட்டுள்ள செயல்பாடுகளுக்கு ஏற்ப, கள அனுபவம் மற்றும் கள நிபுணத்துவம் கொண்ட அலுவலர்கள் பல்வேறு தொடர்புடைய துறைகளிலிருந்து இத்துறைக்கு பணியமர்த்தப்படுகிறார்கள்.

3. கண்காணிப்பு

கண்காணிப்பு என்பது தகவல்களை முறையாக சேகரித்து, பகுப்பாய்வு செய்து அதன்மூலம் ஒரு திட்டத்தின் முன்னேற்றம் அதன் இலக்கை நோக்கி பயணிப்பதை உறுதி செய்வதோடு, திட்டத்தை செம்மைப்படுத்துவதற்கு தேவையான இடைநிலைத் திருத்தங்களை மேற்கொள்வது உள்ளிட்ட முக்கிய முடிவுகளை வழி நடத்துதல் ஆகும்.

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து அரசு அறிவிக்கும் பல்வேறு திட்டங்களின் செயல் நிலையை சேகரித்து பதிவு செய்கிறது. முக்கிய ஒருங்கிணைப்புக் கூட்டங்களுக்கான முன்னேற்ற அறிக்கைளை தயார் செய்கிறது. அரசு தலைமைச் செயலாளர் அவர்களால் நடத்தப்படும் மாதாந்திர அனைத்து செயலாளர்கள் கூட்டத்திற்குத் தேவையான அறிக்கைகளையும் தயார் செய்கிறது. அவ்வகையில், கண்காணிப்புத் தொடர்பான பின்வரும் பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

3.1. கொள்கை அறிவிப்புகளின் கண்காணிப்பு

சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு ஆளுநர் உரையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள், நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அறிவிப்புகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், மாவட்ட

2021 செப்டம்பர் 13]

ஆட்சியர்களின் மாநாட்டில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் மற்றும் இதர அரசு விழாக்களில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் ஆகியவற்றின் செயலாக்கம் மற்றும் நிறைவேற்றத்தினை கண்காணிப்பதே சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் முக்கிய பணியாகும்.

3.2 தலைமைச் செயலக உள்வலைய வழி நிகழ்நிலை கண்காணிப்பு

இத்துறை, தலைமைச் செயலகத்தில் உள்ள பல்வேறு அரசுத் துறைச் சார்ந்த அறிவிப்புகளின் நிலையை பதிவு செய்வதற்காக ஊடாடும் வலைப்பக்கத்தை (Interactive Webpage) வடிவமைத்து தலைமைச் செயலக உள்வலைய (Intranet) இணையத்தில் நிருவகித்து வருகிறது. பல்வேறு வகையான அறிக்கைகளை தயாரிக்கத் தேவையான பகுப்பாய்வு கண்காணிப்பு மென்பொருளும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தொடர்புடைய துறைத் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து அறிவிப்புகளின் நிலையினை உள்வலைய இணையப் பக்கத்தில் தொடர்ந்து பதிவு செய்திட ஏதுவாக அரசின் அனைத்து நிருவாகத் துறைகளும் தங்கள் துறைச் சார்ந்த “தொடர்பு அலுவலர்களை” (Nodal Officer) நியமித்துள்ளன.

நிகழ்நிலை கண்காணிப்பில் பல்வேறு துறைகள் தெரிவிக்கும் முன்னேற்ற விவரங்களின் அடிப்படையில் அறிவிப்புகளின் நிலை வகைப்படுத்தப்பட்டு, தொகுப்பு அறிக்கைகள் உருவாக்கப்பட்டு, அவ்வப்போது நடத்தப்படும் பல்வேறு ஆய்வுக் கூட்டங்களுக்கு பயன்படுத்தப்படுகிறது.

3.3 முதன்மைத் திட்டங்களின் கண்காணிப்பு

அரசின் உயர் மட்ட அளவில் தனிக்கவனம் செலுத்தி நேரடியாக கண்காணிக்கப்பட வேண்டியத் திட்டங்கள் ‘முதன்மைத் திட்டங்களாக’ (Flagship Programmes) வகைப்படுத்தப்படுகிறது. இத்திட்டங்களின் செயல்நிலை முன்னேற்றம் குறித்து தொடர்புடைய துறைகளுடன் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் வாயிலாக திட்டங்களின் பலன்கள் எதிர்பார்த்த அளவில் முழுமையாக கிடைக்கப்பெறுவது உறுதி செய்யப்படுகிறது. அவ்வகையில் பின்வரும் திட்டங்கள் தற்போது நேரடி கண்காணிப்புக்கு முதன்மைத் திட்டங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன:

[2021 செப்டம்பர் 13

1. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம்.
2. முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம்.
3. விதைகள் மற்றும் நாற்றுகள் விநியோகத் திட்டம் (வேளாண்மை மற்றும் தோட்டக்கலை).
4. ஊரகப் பகுதிகளில் வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குதல்.
5. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்.
6. வாழ்வாதார மேம்பாட்டுச் செயல்பாடுகள்.
7. தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் வீட்டு வசதி மற்றும் சமூக மேம்பாட்டு நடவடிக்கைகள்.
8. பசுமை தமிழ்நாடு இயக்கம் .
9. சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை திட்டங்கள்.
10. சிங்காரச் சென்னை 2.0
11. நமக்கு நாமே திட்டம் (நகர்ப்புர மற்றும் ஊரகம்) .
12. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்.
13. மக்களைத் தேடி மருத்துவம்.
14. வரும் முன் காப்போம் .
15. தமிழ்நாடு நகர்ப்புர சுகாதாரப் பாதுகாப்பு திட்டம்.
16. எண்ணும் எழுத்தும் இயக்கம்.
17. இணையவழி சேவைகள் மற்றும் அகண்ட அலைவரிசை இணைப்பு.
18. சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்.
19. திருமண நிதியுதவி திட்டங்கள்.
20. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் திட்டங்கள்.
21. மாற்றுத்திறனாளிகளின் நலன்களுக்கான RIGHTS திட்டம்.
22. மீன்பிடி துறைமுகத் திட்டங்கள்.

2021 செப்டம்பர் 13]

23. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி திட்டப் பணிகள்.

24. மேம்படுத்தப்பட்ட அரசு நில மேலாண்மை அமைப்பு.

25. மாநிலத்தின் சுற்றுலா மேம்பாடு.

26. விளையாட்டுத் திறன் கண்டறிதல் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள்.

27. மாநிலம் முழுவதும் உள்ள முக்கிய தொழில் பூங்காக்கள்.

28. தற்போதுள்ள விமான நிலையங்கள் மற்றும் பசுமை விமான நிலையங்களின் விரிவாக்கம்.

29. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு பெரும் தொகுப்புகள் உருவாக்கம்.

30. ஒருங்கிணைந்த சாலைப் பாதுகாப்பு இயக்கம்.

திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் தேவைகளின் அடிப்படையில் முதன்மைத் திட்டங்களின் பட்டியலை அவ்வப்போது அரசு மாற்றியமைக்கும்.

3.3.1. உயர்மட்ட கண்காணிப்புக் குழு

அரசின் முதன்மைத் திட்டங்களை ஆய்வு செய்வதற்காகவும், கண்காணிப்பதற்காகவும் உயர்நிலை கண்காணிப்புக் குழு ஒன்று அரசால் பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது:

வ. எண்	பதவி	நிலை
1	அரசு தலைமைச் செயலாளர்	தலைவர்
2	அரசு செயலாளர், நிதித் துறை	உறுப்பினர்
3	அரசு செயலாளர், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை	உறுப்பினர்-செயலர்
4	தொடர்புடைய துறைகளின் அரசு செயலாளர்கள்	உறுப்பினர்கள்

இந்த உயர்நிலை கண்காணிப்புக் குழுக் கூட்டங்களில் முதன்மைத் திட்டங்களின் முன்னேற்றம், சவால்கள் மற்றும்

பிரச்சினைகள் குறித்து விரிவான கலந்தாலோசனை மேற்கொள்ளப்படும். இக்கூட்டங்களில், மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்களின் அறிக்கைகள் அடிப்படையில் முதன்மைத் திட்டங்களில் கொள்கை அளவிலான மாற்றங்கள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளில் திருத்தம் ஆகியவை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

3.4. கருப்பொருள் அடிப்படையிலான (Theme based) கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

தொலைநோக்குத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள் பல்வேறு நிருவாகத் துறைகளின்கீழ் வருவதால், ஒருங்கிணைந்த முயற்சிகளின்மூலம் அவைகளை சிறப்பாக நிறைவேற்ற இயலும். எனவே இலக்குகளை நிறைவேற்ற, கருப்பொருள் அடிப்படையிலான கண்காணிப்பு அணுகுமுறை பின்பற்றப்படும். இதன்படி ஒரு பொதுவான இலக்கினை அடைய அது தொடர்புடைய பல்வேறு துறைகளின் திட்டங்களை ஒருங்கிணைந்த மற்றும் ஒத்திசைக்கப்பட்ட முறையில் கண்காணிக்கப்படும்.

இதன்மூலம், திட்டங்களின் பலன்கள் முழுமையாகவும், கூடுதலாக அடைய பெறுவதையும் சம்பந்தப்பட்ட துறைகள் தங்கள் பங்களிப்பினை மேம்படுத்திடுவதற்கான வாய்ப்பும், நடைமுறை சிக்கல்களைக் களைவதற்குரிய தெளிவும் பெற ஏதுவாக அமையும். இவ்வகையில் தற்போது பின்வரும் பன்னிரெண்டு கருப்பொருள் பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

3.4.1. நீர்வளங்களை மேம்படுத்துதல்

நிலத்தடி நீர் மட்டம், மேற்பரப்பு நீர் சேமிப்புத் திறன், மண்ணின் ஈரப்பதம், பசுமைப்பரப்பு ஆகியவற்றை அதிகரிப்பது என்பது, தடையின்றி குடிநீர் மற்றும் பாசனத்திற்குத் தேவையான நீரினை வழங்குவதை உறுதிசெய்திட மிகவும் அவசியம். நீர்வளத்தை மேம்படுத்த மேற்கொள்ளப்படும் நீர்நிலைகள் பாதுகாப்பு, ஆறுகள் பாதுகாப்பு, நீர் சேகரிப்பு கட்டமைப்புகளை புனரமைத்தல், மண் பாதுகாப்பு, மழை நீர் சேகரிப்பு, கழிவு நீர் மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாடு, கழிவு நீர் மேலாண்மை, காடு வளர்ப்பு போன்ற திட்டங்கள் பொதுப் பணித் துறை (நீர்ப்பாசனம்), ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, வேளாண்மை மற்றும் உழவர் நலம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலன், சுற்றுச்சூழல்,

2021 செப்டம்பர் 13]

காலநிலை மாற்றம் மற்றும் வனம் போன்ற பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படுகிறது. நீர்நிலைகளை கணக்கெடுப்பு செய்தல், அடையாளம் காண்பது மற்றும் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாத்தல் ஆகியவற்றில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை துணைப் பங்களிக்கிறது. நீர்வளங்களை மேம்படுத்தும் அரசின் தொலைநோக்குத் திட்டத்தை விரைவாக அடையச் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, இக்கருப்பொருள் தொடர்புடைய அனைத்து துறைகளின் பணிகளையும் ஒருங்கிணைக்கும்.

3.4.2. வேளாண் உற்பத்தி, விளைச்சல் மற்றும் சந்தைப்படுத்துவதற்குரிய இணைப்புகளை உருவாக்குதல்

போதுமான பாசன நீர், விதைகள் மற்றும் நாற்றுகள், உரங்கள், பயிர்க் கடன் மற்றும் விரிவாக்க நடவடிக்கைகள் போன்றவை, வேளாண் உற்பத்தி மற்றும் விளைச்சலை பெருக்குவதற்கு தேவைப்படும் மிகவும் அடிப்படையான செயல்பாடுகள் ஆகும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் செயல்படுத்தப்படும் நேரடிக் கொள்முதல் நிலையங்கள், தொழில் துறையால் நடத்தப்படும் சர்க்கரை ஆலைகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், வேளாண் விளைபொருள் விற்பனைக் குழு, வேளாண் விற்பனைத் துறை ஆகியவை, வேளாண் பொருட்களின் பின்செய் நேர்த்தி நிலையில் விளைபொருட்களை கொள்முதல் செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் உதவியாக உள்ளது.

வேளாண்மை மற்றும் உழவர் நலம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை போன்றவை உழவர்களுக்குத் தேவையான மேற்கண்ட உதவிகளை செய்து வருகின்றன. தகவல் தொழில்நுட்பத்துடன் கூடிய கைபேசி செயலி மூலமாகவும் இத்துறைகளின் செயல்பாடுகள் நேர்த்தியாக மேம்பட வழிவகைகள் உள்ளன. தமிழ்நாடு அரசின் தொலைநோக்குத் திட்டங்களான அடுத்த 10 ஆண்டுகளில் 11.75 இலட்சம் எக்டர் கூடுதலாக பயிரிடுதல், 10 இலட்சம் எக்டர் அளவுள்ள இருபோக சாகுபடி நிலங்கள் இரு மடங்காக, அதாவது, 20 இலட்சம் எக்டராக உயர்த்துதல், உணவு தானியங்கள் மற்றும் தேங்காய், பருத்தி, சூரியகாந்தி, கரும்பு ஆகிய பணப் பயிர்களுக்கான வேளாண் ஆக்கத்திறனில் முதல் மூன்று இடங்களுக்குள் தமிழகம் இடம் பெறச் செய்தல் போன்ற நோக்கங்களை நிறைவேற்ற மேற்காணும் திட்டங்களை செயல்படுத்தும் துறைகளை ஒருங்கிணைத்து இத்துறை செயல்படும்.

3.4.3. அனைவருக்கும் வீடு

வீட்டுவசதித் திட்டங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை – தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை –தமிழ்நாடு ஆதி திராவிடர் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ஆகிய துறைகளின்மூலம் வரையறுக்கப்பட்ட நகர்ப்புர மற்றும் ஊரக ஏழை மக்களுக்காக செயல்படுத்தப்படுகிறது. நிலம் தொடர்பான பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதில் வருவாய்த்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. புதுமையான, விரைவான கட்டுமானத் தொழில்நுட்பத்தை செயல்படுத்திட பொதுப் பணித் துறையின் ஆலோசனையும் பெறப்பட வேண்டிய அவசியம் உள்ளது. "10 ஆண்டுகளில் ஊரகப் பகுதிகளில் 20 இலட்சம் புதிய கான்கிரீட் வீடுகள் மற்றும் நகர்ப்புரங்களில் 9.75 இலட்சம் புதிய கான்கிரீட் வீடுகள் கட்டப்படும்" என்ற இந்த அரசின் தொலைநோக்கு இலக்கை விரைவாக அடைய தொடர்புடைய துறைகளுக்கு இடையே தேவையான தகவல் பரிமாற்றம் மற்றும் ஒருங்கிணைப்பை சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை முனைப்புடன் ஏற்படுத்தும்.

3.4.4. கல்வி தரத்தை உயர்த்துதல்

கற்றல் செயல்திறன் குறியீடுகளை மேம்படுத்த தரமான கல்வியை வழங்கவேண்டிய கடமை பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வி துறைகளைச் சார்ந்ததாகும். அதே போன்று, பள்ளி/கல்லூரி மாணவர்கள் கல்வி கற்பதற்கு புதிய கட்டடங்கள் கட்டித் தருவது மற்றும் அதனைப் பராமரிப்பது, சுகாதார உட்கட்டமைப்பு, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து ஆகிய உகந்த சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் பணிகளில் பொதுப் பணி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், மருத்துவம்-மக்கள் நல்வாழ்வு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை ஆகிய துறைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மேலும், உயர் செயல்திறன் தரக் குறியீடு, NIRF *தர வரிசையில் ஏற்றம்,* NAAC *அங்கீகாரம் ஆகிய தரக் குறியீடுகளை மேம்படுத்துவதும் மிக முக்கியமாகும். எனவே, கற்றலின் பலன்களை மேம்படுத்துவதற்கு மேற்கண்ட துறைகளின் ஒருங்கிணைந்த கூட்டு நடவடிக்கைகள் அவசியமாகிறது.*

2021 செப்டம்பர் 13]

3.4.5. சுகாதாரக் குறியீடுகளை மேம்படுத்துதல்

"ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு" நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு 3-ன் குறிக்கோளை உறுதிப்படுத்துவதற்கு, பொது சுகாதாரம், தரமான மருத்துவக் கல்வியை உள்ளடக்கிய வலுவான மருத்துவ உட்கட்டமைப்பு ஆகியவை அவசியமானதாகும். சுகாதார உட்கட்டமைப்பு, அனைத்து வயதினரிடையேயும் தனிநபர் சுகாதார பழக்க வழக்கங்களை மேம்படுத்துதல், அங்கன்வாடி மற்றும் பள்ளிகளில் சிறந்த ஊட்டச்சத்து வழங்குதல் ஆகியவை உடல் வளர்ச்சி குறைபாடுகளைத் தடுக்கவும், தொற்று மற்றும் தொற்றா நோய்கள் ஏற்படுத்தும் இன்னல்களை சமாளிப்பதற்கும், முக்கியமானதாகும். மருத்துவம்-மக்கள் நல்வாழ்வு, சமூகநலம் மற்றும் மகளிர் உரிமை, பள்ளிக் கல்வி, பொதுப் பணித் துறை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆகிய துறைகளின் ஒருங்கிணைந்த நடவடிக்கை மூலம் இதை அடைய முடியும்.

3.4.6. அனைவரும் உள்ளடங்கிய சமூகம் (Social Inclusion)

சமூக நீதி, பாலின சமத்துவம் மற்றும் சமுதாயத்தின் அனைத்து பிரிவு மக்களின் பங்கேற்புடன் பெறப்படும் வளர்ச்சி, ஆகியவை "எவரும் விடுபடாமல், அனைவருக்குமான சமூகம்" என்பதை உறுதி செய்வதற்கு மிக முக்கியமானதாகும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம், சமூகநலம் மற்றும் மகளிர் உரிமை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு, மாற்றுத்திறனாளிகள் நலம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி - தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், பொது மற்றும் உள்துறை ஆகிய தொடர்புடைய முக்கியமான துறைகள், அரசின் இந்த உன்னதமான தொலைநோக்கினை அடைய ஒருங்கிணைந்து செயல்பட வேண்டிய அவசியம் உள்ளது.

3.4.7. உட்கட்டமைப்பு மற்றும் தொழில் வளர்ச்சி

சாலை, இரயில் மற்றும் விமானப் போக்குவரத்து, நீர், மின்சாரம் மற்றும் சந்தை உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற அடிப்படை உட்கட்டமைப்புகளை உருவாக்கித் தருவது என்பது, தொழில்மயமாக்கலை விரைவுபடுத்துவதற்கான முக்கியத் தேவையாகும். இந்த கட்டமைப்பு வசதிகளை துரிதமாக

[2021 செப்டம்பர் 13

அடைவதற்கு, போக்குவரத்து, எரிசக்தி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள், பொதுப்பணி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனம், உள் துறை ஆகிய துறைகள் தொழில் துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைகளுடன் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியது அவசியமாகிறது. இந்த அரசின் தொலைநோக்குத் திட்டங்களில் இடம் பெற்றுள்ள இரட்டை இலக்கப் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை எய்தல், மாநில பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை ரூ.35 இலட்சம் கோடிக்கு மேல் உயர்த்துதல் மற்றும் தனி நபர் வருமானத்தை ஆண்டுக்கு ரூ.4 இலட்சத்திற்கு மேல் உயர்த்துவது போன்ற குறிக்கோள்களை அடுத்த பத்தாண்டுகளுக்குள் அடைய ஒருங்கிணைந்த முயற்சிகள் அவசியமானதாகும்.

3.4.8 திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு

இளைஞர்களுக்கான திறன் பயிற்சி, உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளில் வேலைவாய்ப்பை உருவாக்குவது மட்டுமல்லாமல் அவர்களை சுயதொழில் மற்றும் சிறுதொழில் நிறுவனங்களை அமைப்பதற்குத் தேவையான திறனையும் மேம்படுத்துகிறது. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, வேளாண்மை மற்றும் உழவர் நலன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, பள்ளிக் கல்வி, உயர்கல்வி, தொழில் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் நிறுவனங்கள் ஆகிய துறைகள் மூலம் பல்வேறு திட்டங்களின்கீழ் திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இத்தகைய பயிற்சி தேவைப்படும் நபர்களை அடையாளம் காண்பது மற்றும் பயிற்சி பெற்ற நபர்கள் வேலைவாய்ப்பு பெறுவது அல்லது தங்களின் விருப்பத்திற்கேற்ற வணிக நிறுவனங்கள் தொடங்குவதை கண்காணித்து உதவுவது முக்கியமானதாகும். ஒவ்வொரு ஆண்டும் 10 இலட்சம் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் என்ற இந்த அரசின் முக்கியமான தொலைநோக்குத் திட்டத்தை இந்த துறைகளின் ஒருங்கிணைந்த நடவடிக்கை மூலம் உறுதி செய்யப்பட வேண்டும்.

2021 செப்டம்பர் 13]

3.4.9. முறையான கடன் (Institutional Credit)

ஊரக மற்றும் நகர்ப்புர ஏழை மக்கள், விவசாயிகள், மாணவர்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் நிறுவனங்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில், நியாயமான நிபந்தனைகளுடன், முறையான கடன் கிடைப்பதற்கு, வழிவகை செய்வது குறிப்பாக, இந்த கடினமான COVID-19 தொற்றுநோய் காலங்களில் மிக அவசியமானதாகும். மேலும், ஏழை மக்களை வறுமைக்கோட்டிலிருந்து மீட்கவும் அல்லது அவர்களை தீவிர வறுமையான நிலைக்குச் செல்லாமல் தடுப்பதற்கும் இந்த நடவடிக்கை உதவும். முறைசாரா அமைப்புகளின் நெறிமுறையற்ற கடன் வழங்கும் நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வருவதன் காரணமாகவும் இந்த முன்னெடுப்பு மிகவும் அவசியமாகிறது. அடுத்த பத்தாண்டுகளில் வறுமைக்கோட்டுக்குக் கீழே எந்த குடும்பமும் இல்லை என்ற தொலைநோக்கினை தமிழ்நாடு அடைய, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் நிறுவனங்கள் மற்றும் நிதித் துறைகள் ஒன்றிணைந்து செயல்பட்டு தேவையான கடன் இணைப்புகளை கொண்டு வர வேண்டியது அவசியமாகிறது.

3.4.10. மரபு மற்றும் பண்பாடு

மாநிலத்தின் தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகள், தமிழ்நாட்டின் பழங்கால பண்பாடு மற்றும் நாகரிகம் பற்றிய பல அரிய தகவல்களை அளித்துவருகிறது. இந்த கலைப்பொருட்கள் மற்றும் அகழ்வாராய்ச்சி இடங்கள் பொதுப் பணித் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை மற்றும் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றின் பங்களிப்புடன் ஒருங்கிணைந்த முயற்சிகளின் மூலம் பாதுகாக்கப்பட வேண்டும். இந்த இணைப்பை இத்துறை முனைப்புடன் ஏற்படுத்தும்.

3.4.11. சுற்றுச்சூழல் சமநிலை

மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில், வனபரப்பு மற்றும் மரப்பரப்பை 33 விழுக்காடாக அதிகரிப்பது என்பது இந்த அரசின் முக்கிய தொலைநோக்குத் திட்டங்களில் ஒன்றாகும்.

அடுத்த 10 ஆண்டுகளில் இந்த இலக்கை அடைய பல துறைகள் மற்றும் மக்களின் பங்களிப்பு அவசியமாகிறது. தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம், தமிழ்நாடு ஈர நிலங்கள் இயக்கம், தமிழ்நாடு நதி பாதுகாப்பு திட்டங்கள் போன்ற அரசின் முக்கிய சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சிகள், வேளாண்மை மற்றும் உழவர் நலன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், கால்நடை பராமரிப்பு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆகிய பல்வேறு துறைகளின் ஒருங்கிணைத்த பங்களிப்புடன் இந்த இலக்குகளை திறம்பட விரைந்து அடைதல் அவசியமாகிறது.

3.4.12. தரவு நிருவாகம் (Data Governance)

பல்வேறு அரசுத் துறைகளின் வாயிலாக செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களின் பயனாளிகள் தரவுகள், தொடர்புடைய துறைகள்மூலம் தனித்தனியாக சேகரிக்கப்பட்டுள்ளது. எனினும், பல்வேறு நலத்திட்ட தேவைகளுக்கான எதிர்கால திட்டமிடல் மற்றும் கொள்கை முடிவுகளுக்கும், சமூக ஏற்றத்தாழ்வு நிலையினை உரிய வகையில் அறிந்து கொள்வதற்கும், இந்த விவரங்கள் போதுமானதாக இல்லாததால், அனைத்து துறைகளினிடையே ஒருங்கிணைந்த அணுகுமுறை வாயிலாக தரவு பெறுவது அவசியமாகிறது. இவ்வாறு, ஒற்றை ஆதார முறையில் தரவுகளைச் சேகரிக்கும் பொழுது, இலக்கு மக்கள் அனைவருக்கும் நலத் திட்டங்கள் சென்றடைவதை உறுதி செய்வதற்கும், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்வது எளிதாவதற்கான வாய்ப்புகள் உருவாகும்.

மேற்குறிப்பிட்ட அனைத்து துறைகளினிடையே ஒருங்கிணைந்த அணுகுமுறை மூலம் மேற்கொள்ளப்படும் கருப்பொருள் அடிப்படையிலான கண்காணிப்பு வாயிலாக ஏற்படும் மிகுதியான பலன்கள் முழுமையான வளர்ச்சியை அடைவதற்கு வழிவகுக்கும்.

3.5 மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள்

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள்/ முதன்மைச் செயலாளர்கள்/ செயலாளர்களை, மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களாக அரசு நியமிக்கிறது. கண்காணிப்பு அலுவலர்கள், மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மீது கள ஆய்வு மேற்கொண்டும், ஆய்வுக் கூட்டங்கள் நடத்தியும், திட்டங்களை விரிவாக செயல்படுத்திட தக்க ஆலோசனைகளையும்,

2021 செப்டம்பர் 13]

இடையூறுகளுக்கான தீர்வுகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட நிலையிலான அலுவலர்களுக்கு வழங்குகின்றனர்.

கண்காணிப்பு அலுவலர்களுக்கான பல்வேறு துறைகளின் முக்கிய திட்டங்களை ஆய்வுப் படிவங்கள், கருப்பொருள் அடிப்படையிலான கண்காணிப்புக்கு ஏற்றவாறு இருக்கும். இதனுடன், முதன்மைத் திட்டங்களை தனியாக ஆய்வு மேற்கொள்வார்கள்.

ஆய்வுகளின் அடிப்படையில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் துறைகளுக்கிடையேயான பிரச்சினைகளைக் களைவதற்கு ஏதுவாக துறைத் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதோடு மட்டுமல்லாமல் நடைமுறையில் உள்ள பல்வேறு திட்டங்களின் வழிகாட்டு நெறிமுறைகளின் சிறப்புத் தன்மைகளை மதிப்பிடுதல் மற்றும் அரசு அளவில் மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்கை மாற்றங்கள் குறித்தும் பரிந்துரைப்பர். திட்டங்களில் கவனிக்கப்படவேண்டிய இனங்கள், முக்கியமான கருத்துக்கள், எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள், திட்டத்தின் மேம்பாடு மற்றும் மாற்றங்கள் ஆகியவை குறித்த கண்காணிப்பு அலுவலர்களின் பரிந்துரைகள் தொகுக்கப்பட்டு, அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் வழியாக முதலமைச்சர் அலுவலகத்திற்கு சமர்பிக்கப்படும்.

3.6 கள ஆய்வுகள்

பல்வேறு துறைகளிலிருந்து சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையில் பணிபுரியும் அலுவலர்கள், அவ்வப்போது கள ஆய்வு பணிகளை மேற்கொள்வதுடன் முதன்மைத் திட்டங்களின் செயல்பாடுகள், சிறப்புத் திட்டங்களின் செயல்பாடுகள் ஆகியவற்றை, ஆய்வு செய்து மாவட்ட அளவில் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் செயல்திறன் ஆகியவற்றை அறிக்கைகளாக அரசுக்கு சமர்ப்பிப்பார்கள்.

4. முக்கிய செயல்திறன் குறியீடுகள் (Key Performance Indicators)

பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதைத் திறம்பட கண்காணிப்பதற்காக, முக்கிய செயல்திறன் குறியீடுகள் வரையறுக்கப்பட்டு அதன் அடிப்படையில், அரசு துறைகள்

[2021 செப்டம்பர் 13

செயல்படுத்தும் பல்வேறு நலத் திட்டங்களினால் ஏற்படும் முன்னேற்றங்கள், இத்துறையால் கண்காணிக்கப்பட உள்ளன.

நீடித்த, நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDG), நல் ஆளுமை குறியீடுகள் (GGI) மற்றும் பல்வேறு அமைப்புகளால் வெளியிடப்படும் சமூக – பொருளாதார வளர்ச்சி குறியீடுகளை கணக்கில் எடுத்துக் கொண்டும், பிற துறைகளுடன் கலந்து ஆலோசித்தும், முக்கிய செயல்திறன் குறியீடுகள், தெரிவு செய்யப்பட்டு கண்காணிக்கப்படும்.

5. சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் முன் முயற்சிகள்

பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகளை கண்காணிப்பது மட்டும் அல்லாது, அரசின் சில தனித்துவ முயற்சிகள் இத்துறையால் மேற்கொள்ளப்படும். இந்த முன்முயற்சிகள் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்படும்.

5.1 முதலமைச்சர் முகப்புப் பலகை (Chief Minister Dashboard)

முதலமைச்சர் முகப்புப் பலகை, பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளும் வகையில் உருவாக்கப்படும். இம்முகப்புப் பலகை பலதரப்பட்ட அறிக்கைகள் மற்றும் அறிவிப்புகளை வழங்கக் கூடியதாக இருக்கும். முக்கிய செயல்திறன் குறியீடுகளின் அடிப்படையில் தொடர்புடைய துறைகளின் செயல்பாடுகள் முதலமைச்சர் முகப்புப் பலகை வாயிலாக கண்காணிக்கப்படும். இந்த முகப்புப் பலகை, தகவல் தொழில்நுட்பவியல் துறையால் உருவாக்கப்படும்.

5.2 முதலமைச்சர் புத்தாய்வுத் திட்டம் (Chief Minister Fellowship Programme)

மாநிலத்திலுள்ள இளைஞர்களின் திறமைகளில் இந்த அரசு அதிக அளவில் நம்பிக்கை கொண்டுள்ளது. அரசு சேவைகளை மேம்படுத்த இளைஞர்களின் வளத்தை பயன்படுத்தி முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம் செயல்படுத்தப்படும். தகுதியான நபர்களை அவர்களின் தொழில்முறை மற்றும் கல்வி பின்புலங்களின் அடிப்படையில், ஊக்க ஊதியத்துடன் இரண்டு ஆண்டுகால புத்தாய்வு பயிற்சி வழங்கப்படும். இத்திட்டத்திற்கு தகுதி வாய்ந்த இளம் வல்லுநர்கள் வெளிப்படைத் தன்மையுடன்

2021 செப்டம்பர் 13]

தேர்ந்து எடுக்கப்படுவார்கள். தேர்வு பெற்ற இளைஞர்கள், மாநில அரசின் பல்வேறு முதன்மை மற்றும் முன்னுரிமை திட்டங்களை செயல்படுத்துவதில் நேரடியாக ஈடுபடுத்தப்படுவார்கள். மேலும், முதலமைச்சர் அலுவலகம்/சம்மந்தப்பட்ட துறைகளின் வழிகாட்டுதலில் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை மேற்கொள்வர். இவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட திட்டங்களை கண்காணித்து, செயல்பாட்டில் பிரச்சனைகள் இருப்பின் அவற்றை களைவதற்கும், திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவதற்கும் தேவையான முடிவுகளை எடுப்பதற்கும் உதவியாக இருப்பார்கள். பங்கேற்பாளர் துறைகளுடன் கலந்தாலோசித்து இத்திட்டத்தை உருவாக்கவும், செயல்படுத்தவும், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை ஒருங்கிணைப்புத் துறையாக செயல்படும்.

5.3. மாணவர்களுக்கான நிருவாகச் செய்முறைப் பயிற்சித் திட்டம் (Students Internship Programme)

இந்தியாவில் உயர் கல்வி மொத்த சேர்க்கை விகிதத்தில் தமிழ்நாடு முதன்மையாக உள்ளது. இதில் 50 விழுக்காடுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பன்னிரெண்டாம் வகுப்பு முடித்து கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் சேர்கின்றனர். இந்த அரசு, மிகவும் திறமை வாய்ந்த இளைஞர்களுக்கு அரசின் செயல்பாடுகளில் செய்முறை அனுபவம் அளிக்கும் வகையில் குறுகிய கால "மாணவர்களுக்கான நிருவாகச் செய்முறைப் பயிற்சித் திட்டத்தை" அறிமுகப்படுத்தி சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையை ஒருங்கிணைப்புத் துறையாக கொண்டு செயல்படுத்த உள்ளது. இந்த முன்முயற்சியின் மூலம் மாநிலத்தில் அரசு - மாணவர்கள் - கல்வி நிலையங்களின் இடையே இணைப்பும், வளர்ச்சி நடவடிக்கைகளில் அவர்களின் பங்கேற்பும் அதிகரிக்க உதவும். NIRF *தரவரிசையின் படி உயர் நிலையிலுள்ள பல்கலைக்கழகம் / கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இந்த வாய்ப்பு வழங்கப்படும். பயிற்சிக்கான தலைப்புகள் பல்வேறு நலத் திட்டங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் துறைகளுடன் கலந்தாலோசித்து தேர்வு செய்யப்படும்.*

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, விரிவான வழிகாட்டி நெறிமுறைகளை உயர் கல்வித் துறை மற்றும் இதர பல்கலைக்கழகங்களின் நிருவாகக் கட்டுப்பாடு கொண்டுள்ள துறைகளுடன் கலந்து ஆலோசித்து உருவாக்கும்.

5.4. ஒருங்கிணைந்த தரவுத்தளம் உருவாக்குவதற்கான விரிவான கணக்கெடுப்பு

தரவுகளின் அடிப்படையிலான நிருவாகம் என்பது இந்த அரசின் கொள்கையாகும். பல்வேறு துறைகளின்மூலம் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களுக்கான தரவுகளை வலுப்படுத்துவதற்கு ஏதுவாக செயலிமூலம் அனைத்து நகர்ப்புரம் மற்றும் ஊரக குடியிருப்புகளில் விரிவான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படும்.

திறம்பட கொள்கைகள் மற்றும் திட்டங்களை உருவாக்குவதற்கு இந்த கணக்கெடுப்பின்மூலம் சேகரிக்கப்படும் தரவுகள் உதவியாக இருக்கும்.

இந்தப் பணியினை மேற்கொள்வதற்காக களப்பணி அலுவலர்கள் குழு உருவாக்கப்படும். ஒவ்வொரு பரிவர்த்தனையின் போதும் தரவு மேம்படுத்தப்படும். கணக்கெடுப்பு மேற்கொள்வதற்கான கைபேசி செயலி உருவாக்குதல், தரவுத் தளங்களை பராமரித்தல், களப்பணி ஆய்வு மேற்கொள்ளுதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கு ஒருங்கிணைப்புத் துறை (Nodal Department) தெரிவு செய்யப்படும். இந்த தரவை பயன்படுத்தவிருக்கும் துறைகளுடன் கலந்தாலோசித்து தரமான கணக்கெடுப்புப் படிவம் தயாரிப்பதற்கு இத்துறை உதவி புரியும்.

5.5 கள ஆய்வுகள் கண்காணிப்பு கைபேசி மென்பொருள் செயலி

பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் நலத் திட்டங்களின் பயன்கள் சிறந்த முறையில் சென்றடைவதற்குரிய தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் பயன்படுத்துவதற்கு இந்த அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. அரசுத் துறைகளில் பணிபுரியும் களப்பணி அலுவலர்கள் ஆய்வுகள்/விரிவாக்க செயல்களை மேற்கொண்டு தங்களது அறிக்கைகளை மேல்நிலை அலுவலர்களுக்கு சமர்பிக்கின்றனர். அதிக எண்ணிக்கையில் இந்த கள ஆய்வு அறிக்கைகள் பெறப்படுவதால் உயர் அலுவலர்கள் உரிய நேரத்தில் ஆய்வு செய்து கண்காணிப்பதிலும், அதன்மீது உடனுக்குடன் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதிலும் சிரமம் ஏற்படுகிறது. எனவே களப்பணி அலுவலர்கள் மேற்கொள்ளும் ஆய்வுகள் மற்றும் விரிவாக்க செயல்களை கண்காணிக்கும் தற்போதைய

முறைகளை, தற்போதுள்ள தகவல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன்மூலம் சீரமைத்து கைபேசி செயலி வாயிலாக கண்காணிப்பு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். அதனால், பின்வரும் பயன்கள் ஏற்படும்.

- ❖ ஆய்வுகள்/விரிவாக்கச் செயல்களின் நிகழ்கால கண்காணிப்பு.
- ❖ ஆய்வுப் பகுதிகளை மைய இடத்திலிருந்து ஒதுக்கீடு செய்து கண்காணிப்பது.
- ❖ கள ஆய்வு அறிக்கைகள் மற்றும் புகைப்படங்களை எவ்விடத்திலிருந்தும் பார்க்க இயலும்.
- ❖ ஆய்வு அறிக்கைகள் மற்றும் அறிக்கைகளின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் (Action taken report) குறித்து கண்காணிப்பது எளிதாகும்.
- ❖ ஆய்வு அறிக்கைகளை நாட்குறிப்பாக (Diary) பயன்படுத்துவது.
- ❖ துறையின் வலைதளத்துடன் ஒன்றிணைந்து பகுப்பாய்வு அறிக்கைகளை ஆய்வுக்காக பயன்படுத்துவது.

இச்செயலியானது தேசிய தகவல் மையம் (NIC), சென்னை, மூலம் ஏற்கெனவே உருவாக்கப்பட்டுள்ளது. இதனை மேலும் பல்வேறு துறைகளின் பயன்பாட்டிற்கு ஏற்ப மாற்றி அமைத்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

துறைகளின் தேவைகளுக்கேற்ப இச்செயலி வடிவமைக்கப்படுவதற்கு தொடர்புடைய துறைகள் மற்றும் தேசிய தகவல் மையம் ஆகியவற்றுடன் இத்துறை ஒருங்கிணைந்து செயல்படும்.

முடிவுரை

இந்த அரசு மக்களின் நலனுக்கான அனைத்து ஆக்கபூர்வ பணிகளையும், உணர்வுபூர்வமாகவும், அக்கறையுடனும் செயல்படுத்தி வருகிறது. மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதில் அரசின் அர்ப்பணிப்பும், முயற்சிகளும் எப்போதும் போல்

தொடர்ந்து மிகவும் வலுவானதாக இருக்கும். இத்தகைய குறிக்கோள்களையும், முன்னுரிமை செயல்பாடுகளையும் நோக்கி செல்லும் பாதையில், ஒட்டுமொத்த அரசு இயந்திரமும் அயராது மிகுந்த ஆற்றலுடன் செயல்படும். செயல்பாட்டில் இருக்கும் நலத் திட்டங்களை மேம்படுத்துவற்குரிய ஆலோசனைகளுக்கு செவிமடுப்பதுடன், பிற பகுதிகளில் சிறப்பாச் செயல்படும் திட்டங்களையும் கருத்தில்கொண்டு ஒட்டுமொத்த சமுதாயத்திற்கும் அதேபோன்ற நன்மைகள் கிடைத்திடும் வகையில் அரசு முனைப்புடன் செயல்படும்.

2021 செப்டம்பர் 13]

இணைப்பு-V

(112 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 16—நிதித் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2021-2022

முகவுரை:

"பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்
எண்ணிய தேயத்துச் சென்று"

(குறள் 753)

பொருள் என்னும் அணையா விளக்கு மட்டும் கையில் இருந்துவிட்டால் நினைத்த இடத்துக்குச் சென்று இருள் என்னும் துன்பத்தை துரத்தி விட முடிகிறது.

2. தமிழக அரசின் பொது நிதியை செம்மையான முறையில் நிருவகிக்கும் பொறுப்பு நிதித் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது.

நிதித் துறையின் முக்கிய செயல்பாடுகள்:

1) இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 202-ன்படி சட்டமன்றப் பேரவையின் முன் வைப்பதற்கு ஒவ்வொரு ஆண்டும் அரசின் வரவினங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பான மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

2) மாநிலத்தின் கருவூலக் காப்பாளர் என்ற முறையில் தமிழக அரசின் பொது நிதியை மேலாண்மை செய்தல்.

3) மாநில அரசின் நிதி நிலை மேலாண்மை தொடர்பான கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் தேவை ஏற்படும்போது அவற்றை மறுஆய்வு செய்தல்.

4) மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும், மக்களின் நலனைக் கருத்தில் கொண்டும், அரசின் நிதி நிலை இலக்குகளை எய்தும் பொருட்டும், துறைவாரியான நிதித் தேவை, செலவுக்கேற்ற பயன்

ஆகியவற்றின் அடிப்படையில் வரவு-செலவுத் திட்ட நிதியொதுக்கம், நிதி நடைமுறைகளுக்குட்பட்டு பல்வேறு கருத்துருக்களைக் கூர்ந்தாய்வு செய்து மதிப்பீடு செய்தல்.

5) வரவுகளையும், அதற்கேற்றவாறு செலவுகளையும் சீராகப் பராமரிக்கும் பொறுப்புடன், கடன் பொறுப்புகளையும் அரசின் வரவுக்கேற்றவாறு பொருத்தமான செலவினங்களை மேற்கொள்வதும், பெறப்பட்ட கடன்களை உரிய காலத்தில் திரும்பச் செலுத்துவதை உறுதிசெய்வதும் இத்துறையின் பொறுப்பாகும்.

6) இத்துறையானது, மாநிலத்தின் ஒட்டுமொத்த கடன் தேவையை நிருவகிப்பது மற்றும் கடன்மூலம் பெற்ற நிதியை திறம்பட பயன்படுத்தப்படுவதையும் உறுதி செய்கிறது.

நிதித் துறை தொலைநோக்குத்திட்டம்

3. மாநில அரசின் நிதி செயல்பாடுகள் 21 ஆம் நூற்றாண்டுக்கு ஏற்ப நவீனமயமாக்கப்படுவதை உறுதி செய்வதே நிதித் துறையின் நோக்கமாகும். நிதித் துறையானது பரந்த முன்னுரிமையுடன் வருடாந்திர வரவு-செலவுத் திட்டத்தின் பேரியல் கூறுகளை துறைகள் சார்ந்த முயற்சிகளுக்கு அவற்றின் வரவு மற்றும் செலவுகளை சார்ந்து நிருவகிக்கும்.

இத்துறையானது, மாநிலத்தின் ஒட்டுமொத்த கடன் தேவையை நிருவகிப்பது மற்றும் கடன் பெற்ற நிதியை திறம்பட பயன்படுத்தப்படுவதையும் உறுதி செய்கிறது. இந்த சவாலான கட்டமைப்பிற்குள், ஒட்டுமொத்த பொறுப்புணர்வின் அளவு கணிசமாக மேம்பட்டிருப்பதை உறுதிசெய்வதுடன், சரியான நேரத்தில் நிதி ஓட்டத்தின்மீது கட்டுப்பாடுகளும் மற்றும் தணிக்கை செயல்பாடுகள் அதிக வலுவான மற்றும் பயனுள்ள வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளதை உறுதிசெய்வதற்கு, நிதித் துறை அந்தந்த துறைகளின் தனிப்பட்ட செலவின முடிவுகளுக்கு அதிக அதிகாரப்பகிர்வை அந்தந்த துறைகளுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த பரந்த நோக்கத்தைக் கீழ்க்காணும் சிறந்த முயற்சிகளின் வாயிலாக அடையலாம்.

- அதிகாரப்பகிர்வு, பொறுப்புணர்வு மற்றும் பணத்திற்கான உயர் மதிப்பை (Value for money) மேம்படுத்தும் வரவு-செலவுத் திட்ட செயல்முறைக்கு மாறுதல்.

2021 செப்டம்பர் 13]

- *ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் மற்றும் கருவூல அமைப்பினை வலுப்படுத்துதல்.*
- *தணிக்கை செயல்பாடுகளை வலுப்படுத்துதல்.*
- *அதிக நம்பகத்தன்மை மற்றும் அதிகரிக்கப்பட்ட உற்பத்தித் திறன்.*
- *கொள்முதல் செயல்முறையின் செயல்திறனை மேம்படுத்துதல்.*
- *அதிகாரப் பகிர்வினை மேம்படுத்துதல்.*

(i) ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் மற்றும் கருவூல அமைப்பினை வலுப்படுத்துதல்

ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் மற்றும் கருவூல அமைப்பு கீழ்க்கண்ட வழிகளில் வலுப்படுத்தப்படும்;

- *ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் மற்றும் மின்-அலுவலக திட்ட சேவைகளை ஒருங்கிணைத்து, அனைத்து நிதி ஒப்பளிப்புகள் மற்றும் பணியாளர்கள் தொடர்பான மனிதவள முடிவுகளை இணையவழியில் செயல்படுத்துவதை உறுதி செய்தல்.*
- *அரசு உதவித் தொகையினை முறையாகப் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்காக நிறுவனங்களின் வங்கி கணக்கு / பரிவர்த்தனை விவரங்களைக் கண்காணிப்பதில் பொது நிதி மேலாண்மை அமைப்பின் செயல்பாடுகளை ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டத்திலும் உருவாக்குதல்.*
- *மாநிலத்தின் கருவூலத்தில் இருந்து செலுத்துகைகளை ஒழுங்குபடுத்துவதற்கும் குறைபாடுகளை திறம்படக் குறைக்கும் பொருட்டும், முன்-தணிக்கை முறையினை வலுப்படுத்துவதற்காக கருவூல அலுவலகங்களை சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகங்களாக மாற்றுதல்.*
- *அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் தங்களின் ரொக்க இருப்புகளை வங்கிகளுக்குப் பதிலாக சார் கருவூலங்கள் மற்றும் கருவூலகங்களில் அரசின் பொது கணக்கில் பராமரிப்பதை உறுதி செய்தல்.*

[2021 செப்டம்பர் 13

- கருவூல அமைப்பினை பணம் வழங்கும் வங்கிகளாக (Payment Bank) மாற்றுதல்.

(ii) தணிக்கை முறைகளை வலுப்படுத்துதல்

தணிக்கை முறைகளை வலுப்படுத்துவதற்கு கீழ்க்கண்ட வழிமுறைகள் பின்பற்றப்படும்.

- இந்திய தலைமைக் கணக்காயர் தணிக்கை பத்திகளுக்கும் பொதுக் கணக்கு குழு / பொதுத் துறை நிறுவனங்களின் குழுவின் அறிக்கைகளுக்கும், பதிலுரைகளை விரைவுபடுத்துவதற்கான நடைமுறைகளை ஏற்படுத்துதல். பல ஆண்டுகளாக 2000-க்கும் மேற்பட்ட இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறை தலைவரின் தணிக்கைப் பத்திகள் நிலுவையில் உள்ளன.

- அனைத்து தணிக்கைத் துறைகளிலும் தணிக்கை தகவல் மேலாண்மை முறையினை நடைமுறைப்படுத்துதல்.

- இந்திய தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் மற்றும் மாநில தணிக்கைத் துறைகள் அளித்த தணிக்கைப் பத்திகளில் நிலுவையில் உள்ள தணிக்கைப் பத்திகளின் தற்போதைய நிலையினை கண்காணித்தல் போன்ற தணிக்கைக்குப் பிந்தைய தொடர் செயல்பாடுகளுக்கென இணை வழிமுறையை உருவாக்குதல்.

- அரசின் அனைத்து தணிக்கைத் துறைகளையும் தணிக்கை இயக்குநர் ஒருவரின்கீழ் கொண்டுவருதல், இந்த தணிக்கை இயக்குநரை இந்திய தணிக்கை மற்றும் கணக்குகள் பணியைச் சார்ந்த அலுவலரை அயற்பணிமூலம் நியமிக்கலாம்.

- தணிக்கைத் துறைகளின் திறனை மேம்படுத்துதல் மற்றும் அதிக துறைசார் வல்லுநர்களை நியமித்தல்.

(iii) அதிக பொறுப்புணர்வு மற்றும் அதிகரிக்கப்பட்ட உற்பத்தித் திறன்

தணிக்கைப் பத்திகளின் எண்ணிக்கையை குறைக்க, அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி மேம்படுத்தப்படும். இது தணிக்கை ஆய்வறிக்கைகளை குறைத்து மற்றும் அதன்மூலம்

2021 செப்டம்பர் 13]

அரசின் மீதான எதிர்மறை கருத்துகளையும் குறைக்கும். தவறுகளை விரைவாக கண்டறிவதற்கும், தாமதமின்றி திருத்துவதற்கான நடவடிக்கை எடுப்பதற்கும் வலுவான உள் தணிக்கை முறை ஒன்றை அரசிற்குள் நடைமுறைப்படுத்துவது அவசியமாகும். எனவே, அரசின் உள் தணிக்கை அமைப்பு முறையில் அடிப்படை சீர்திருத்தம் மேற்கொள்ளப்படும். அரசு துறைகளிலும் முகமைகளிலும் உள் தணிக்கை செயல்பாடுகளை திறம்பட மேற்கொள்வதற்காக அரசில் செயல்படும் அனைத்துத் தணிக்கைத் துறைகளும் நிதித் துறையின்கீழ் கொண்டு வரப்பட்டு ஒருங்கிணைக்கப்படும். தணிக்கைத் துறைகளின் திறன் மேம்படுத்தப்படும். துறைசார் வல்லமை / நிபுணத்துவம் ஊக்குவிக்கப்படும்.

(iv) கொள்முதல் செயல்முறையின் செயல்திறனை மேம்படுத்துதல்

மாநிலத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் பணிகளின் முழு செயல்முறைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் கணினிமயமாக்குதல், பணிகளுக்கான மதிப்பீடுகளை தயாரிப்பது முதல், ஒப்பந்தங்கள் கோருதல் மற்றும் வழங்குதல், பணிகளை செயல்படுத்துதல், அப்பணிகளுக்கான இறுதி பட்டியல் செலுத்துவது வரை மின்னணு ஒப்பந்த நடைமுறைகளை பின்பற்றுவதன் வாயிலாகவும் அரசின் பல்வேறு துறைகளில் திட்ட மேலாண்மை செயல்முறைகளின் செயல்திறனை கணிசமாக மேம்படுத்தவும் மற்றும் திட்டங்களை செயல்படுத்துவதை பெரிதும் துரிதப்படுத்தவும் இயலும்.

(v) அதிகாரப் பகிர்வினை மேம்படுத்துதல்

துரிதமாக முடிவுகளை மேற்கொள்வதற்கும், செயலாக்கத்தை மேம்படுத்துவதற்கும், செலவு மற்றும் நேர விரயத்தினை குறைப்பதற்கும், அதிக பொறுப்புடைமையை உறுதிப்படுத்துவதற்கும் சம்பந்தப்பட்ட துறைத் தலைமைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வரவு செலவு திட்டத்திற்குள் செலவினங்களை மேற்கொள்வதற்கு நிதித் துறை கூடுதல் அதிகாரப் பகிர்வினை அளிக்கும். இதனை ஏற்படுத்துவதற்கு, கட்டமைப்புகள் மற்றும் நடைமுறைகளை மறுசீரமைப்பு செய்தல் வேண்டும்.

நிதித் துறையின் அமைப்பு

4. பின்வரும் துறைகள்/முகமைகள் நிதித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டில் உள்ளன:-

(i)	கருவூலக் கணக்குத் துறை
(ii)	அரசு தகவல் தொகுப்பு விவர மையம்
(iii)	உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை
(iv)	கூட்டுறவு தணிக்கைத் துறை
(v)	மாநில அரசுத் தணிக்கைத் துறை
(vi)	பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை
(vii)	சிறுசேமிப்புத் துறை
(viii)	ஓய்வூதிய இயக்ககம்
(ix)	தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம்
(x)	தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விவரங்கள் இக்கொள்கை விளக்கக் குறிப்பில் இடம்பெற்றுள்ளன. ஓய்வூதிய இயக்ககத்தின் செயல்பாடுகள் பற்றிய விளக்கம், கோரிக்கை எண் 50 "ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு காலப் பயன்களும்" குறித்த கொள்கை விளக்கக் குறிப்பில் சேர்க்கப்பட்டுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 13]

கருவூலக் கணக்குத் துறை

5. கருவூலங்கள் அரசாங்கத்தின் பழமையான செயல்பாட்டு அலகுகளுள் ஒன்றாகும். தொடக்கத்தில் கருவூலங்கள் ஆட்சியர் அலுவலகங்களின் ஒரு பகுதியாக செயல்பட்டு வந்தது. 1.4.1962 முதல் இத்துறை தனித் துறையாக மறுசீரமைக்கப்பட்டு நிதித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டது. இத்துறை கருவூல கணக்கு ஆணையரின் தலைமையின்கீழ் 6 மண்டல இணை இயக்குநர் அலுவலகங்கள், 6 சம்பள கணக்கு அலுவலகங்கள், 3 சார் சம்பள கணக்கு அலுவலகங்கள், 37 மாவட்ட கருவூலங்கள், 1 ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், 1 உதவி முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் 243 சார் கருவூலங்கள் ஆகியவற்றுடன் இயங்கி வருகின்றது. இத்துறை அரசின் பல்வேறு கருவூல செயல்பாடுகளை செய்து வருகின்றது. இத்துறையின் பணியாளர்கள் நிதி மற்றும் கணக்குகள் தொடர்பான பல்வேறு செயல்பாடுகளைக் கையாள பல்வேறு துறைகள், வாரியங்கள், நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

6. கருவூல கணக்குத் துறையின் முதன்மையானப் பணிகளாவன:

1) அரசின் அனைத்து வருவாய் மற்றும் செலவினங்களை கையாளுதல்.

2) 9.5 இலட்சத்திற்கும் மேலான அரசுப் பணியாளர்களுக்கு சம்பளம் வழங்குதல்.

3) 7.2 இலட்சத்திற்கும் மேலான ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல்.

4) அரசின் திட்டங்கள் மற்றும் பணிகளுக்கான நிதிகளை வழங்குதல்.

5) மாதாந்திர கணக்குகளை மாநிலக் கணக்காயருக்கு அனுப்புதல்.

6) முத்திரைத்தாள் விற்பனை முகவர்களுக்கு பல்வேறு வகையான நீதி / நீதிசாரா முத்திரைத்தாள்கள் விற்பனை செய்தல்.

7) பணியாளர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்காக தொடங்கப்பட்ட புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்துதல்.

8) பணம் பெற்று வழங்கும் அலுவலர்களின் பலவித தல நிதி வைப்புக் கணக்கு மற்றும் தன் வைப்பு கணக்குகளைப் பராமரித்தல்,

9) அனைத்து துறை தலைவர்களுக்கும் வாகன முன்பணம் மற்றும் கணினி முன்பணம் உள்ளிட்ட முன்பணம் நிதி ஒதுக்கீடு வழங்குதல்.

ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம்

7. அரசுப் பணிகள் திறம்பட மற்றும் செவ்வனே நடைபெற நிதி மற்றும் மனிதவள மேலாண்மையை ஒருமைப்படுத்தி ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் அரசால் ரூ.288.91 கோடி மதிப்பில் அமல்படுத்தப்பட்டுள்ளது. கருவூலங்கள் வழியாக வழங்கப்படும் நிதியில் பெருவாரியாக அரசு ஊழியர்களின் சம்பளம் சம்பந்தப்பட்ட செலவீனங்களே இருப்பதால், நிதி மேலாண்மையை, மனிதவள மேலாண்மையுடன் ஒருங்கிணைத்தலால், தமிழக அரசின் அனைத்து துறைகளும் இணைந்து ஒத்துழைப்பு நல்குவதுடன் மனிதவள செயல்திறனையும் அதிகரிப்பதற்கும் அரசின் பணிகளை நிகழ் நேரத்தில் கண்காணிப்பதற்கும் கொள்கை முடிவுகளை எடுப்பதற்கும் ஏதுவாகும். இதற்கு ஒரு முழுமையான தீர்வை வழங்க திருவாளர் அக்சென்சர் சர்வீஸஸ் (பி) லிமிடெட் என்ற முகமை 18.7.2012 அன்று திட்ட மேலாண்மை கலந்தாலோசகராக நியமிக்கப்பட்டு, ஆலோசனைகள் வழங்குதல் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளரைத் தேர்வு செய்தல் ஆகிய பொறுப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

- இத்திட்டத்தினை செயல்படுத்த திட்ட ஒருங்கிணைப்பாளராக திருவாளர் விப்ரோ நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி முறையில் 29.5.2015 அன்று தேர்வு செய்யப்பட்டுள்ளது.

- மேலும், இத்திட்டத்திற்கான கணினி கட்டமைப்பு அனைத்து கருவூல அலுவலகங்களிலும் ஏற்படுத்தப்பட்டு ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

- முதற்கட்டமாக, இத்திட்டம் கரூர் மாவட்டத்தில் ஜனவரி 2020-ல் துவக்கப்பட்டு படிப்படியாக அனைத்து

மாவட்டக் கருவூலங்களிலும் மற்றும் சம்பளக் கணக்கு அலுவலகங்களிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. சம்பளம் மற்றும் இதர பட்டியல்கள் அனைத்தும் இத்திட்டத்தின் மூலமாக பெறப்பட்டு ரிசர்வ் வங்கியின் (RBI) இ-குபேர் (e-kuber portal) வழியாக பயனாளர்களின் வங்கி கணக்குகளில் வரவு வைக்கப்படுகிறது.

- ஓய்வூதியம் பெறும் அனைத்து ஓய்வூதியர்களுக்கும் இத்திட்டத்தின் வாயிலாக, அனைத்து மாவட்ட கருவூலகங்கள் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவகத்தின்மூலம் பட்டியல் தயார் செய்து, ஓய்வூதியம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது.

- கருவூலத்தில் பெறப்படும் அரசின் வருவாய் இனங்களை மின் செலுத்துச்சீட்டு (e-Challan) மூலமாக பொதுமக்கள்/ அரசு துறைகள், வாரியங்கள், நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் போன்றவை மின் வரவுகளாக (e-Receipt) 24 மணிநேரமும் தங்குதடையின்றி இணையத்தின்மூலம் (www.karuvoolam.tn.gov.in) செலுத்த வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சேவைகளுக்காக பாரத ஸ்டேட் வங்கி, இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் பரோடா வங்கி ஆகிய நான்கு வங்கிகள் திரட்டல் வங்கிகளாக (Aggregator Banks) தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவற்றில் பாரத ஸ்டேட் வங்கி மற்றும் பரோடா வங்கி ஆகிய வங்கிகளின் வாயிலாக தற்போது அரசின் வருவாய்கள் பெறப்பட்டு அரசின் ரிசர்வ் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. மேலும், இவ்வாண்டில் பின்வரும் செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

- ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை திட்டத்துடன் வணிக வரித் துறை, பதிவுத் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை மற்றும் போக்குவரத்துத் துறை போன்ற நான்கு முக்கிய வருவாய் ஈட்டும் துறைகளை முழுமையாக ஒருங்கிணைத்தல்.

- ஒப்பளிப்பு செய்யும் நபர்களின் மின்னணு தனித்துவ அடையாளப்படுத்துதல் கையொப்ப சான்றிதழ் (DSC) நடைமுறைப்படுத்துதல்.

[2021 செப்டம்பர் 13

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம் மற்றும் பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் உடன் ஒருங்கிணைத்தல்.
- இந்தியன் வங்கி மற்றும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கிகளை திரட்டல் வங்கிகளாக ஒருங்கிணைத்தல்.
- அனைத்துத் துறைகளிலும் மின் பணி பதிவேடுகளை செழுமைப்படுத்துதல்.
- தமிழக அரசின் வாடகை குடியிருப்பு திட்டத்தில், குடியிருப்பு வாடகை வசூலை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்துடன் ஒருங்கிணைத்தல்.
- வருமான பிடித்தத்திற்காக வருமான வரித் துறையுடன் ஒருங்கிணைத்தல்.
- மாநில கணக்காயர் (கணக்குகள் & உரிமைகள்) மூலம் மேற்கொள்ளப்படும் கருவூலம் சாரா பரிவர்த்தனைகளை ஒருங்கிணைத்தல்.

புதிய கருவூலங்களின் உருவாக்கம் மற்றும் புதிய கட்டடங்கள் கட்டுமானம்

8. தற்போது, மாநிலத்தில் 37 மாவட்டக் கருவூலங்கள் மற்றும் 243 சார்நிலைக் கருவூலங்கள் செயல்படுகின்றன. பழைய மற்றும் தனியார் கட்டடங்களில் செயல்பட்டு வந்த 82 சார்நிலைக் கருவூல ங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட ஒப்பளிப்பு செய்யப்பட்டு அவற்றுள் 73 சார்நிலைக் கருவூலங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 9 சார்நிலைக் கருவூலங்கள் மற்றும் திருநெல்வேலி, காஞ்சிபுரம் மற்றும் திண்டுக்கல் ஆ கி ய மாவட்டக் கருவூலங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டும் பணி பல்வேறு கட்டங்களில் நடைபெற்று வருகிறது, அது விரைவில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சார்நிலைக் கருவூலங்கள் இல்லாத 59 வட்டங்கள் கண்டறியப்பட்டு, அவ்வட்டங்களில் சார்நிலைக் கருவூலங்கள் தேவையென அறியப்பட்டது. சார்நிலைக் கருவூலங்கள் இல்லாத வட்டங்களில் சார்நிலைக் கருவூலங்களை உருவாக்கும் பணிகள் "(ஒரு வட்டம் ஒரு சார்நிலை கருவூலம்)" என்ற அடிப்படையில்) பல கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2021 செப்டம்பர் 13]

தேசிய ஓய்வூதியத் திட்டம்

9. தேசிய ஓய்வூதியத் திட்டம் 1.1.2004 அன்று அல்லது அதற்குப் பிறகு நியமிக்கப்பட்ட அகில இந்திய பணி அலுவலர்களுக்காக (AIS) செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய ஓய்வூதியத் திட்டத்தை (NPS) அகில இந்திய பணி அலுவலர்களுக்காக (AIS) செயல்படுத்துவதற்காக, என்.எஸ்.டி.எல் நிறுவனம் மைய ஆவண வைப்பு நிறுவனமாக நியமனம் செய்யப்பட்டதுடன், ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையம் (PFRDA) அறக்கட்டளை வங்கியாகவும், ஓய்வூதிய நிதி மேலாளர் மற்றும் வருடாந்திர சேவை வழங்குவோராகவும் நியமிப்பதற்கான ஒப்பந்தத்தில் தமிழ்நாடு அரசு 28.6.2017 அன்று கையெழுத்திட்டது. இதுவரை 237 அகில இந்திய பணி அதிகாரிகளுக்கான சந்தா தொகை மற்றும் அரசாங்க பங்களிப்பு என மொத்தம் ரூ.28,72,57,740/- தேசிய ஓய்வூதியத் திட்டத்தின் அறக்கட்டளைக்கு மாற்றப்பட்டுள்ளது. வழக்கமான மாதாந்திர பரிவர்த்தனைகள் தொடர்ந்து செய்யப்படுகின்றன.

பொது நிதி மேலாண்மை திட்டம்

10. பொது நிதி மேலாண்மை திட்டத்தின் வாயிலாக, மத்திய அரசின் நிதியுதவி பெறும் நலத் திட்டங்கள் மற்றும் மத்திய-மாநில அரசின் பங்களிப்புடைய நலத் திட்டங்களின் நிதி நிலையினைக் கணக்கிடுதல், பின்தொடர்தல், கண்காணித்தல் மற்றும் கணக்குகளை ஒத்திசைவு செய்து அறிக்கை வெளியிடுதல் முதலானவற்றை மேம்படுத்த இயலும். கருவூலங்கள் மற்றும் கணக்குத் துறை இந்தத் திட்டத்திற்கான ஒருங்கிணைப்பு துறையாகும். இத்துறையானது, இந்திய அரசு மற்றும் தமிழக அரசின் வழிகாட்டுதல் மற்றும் அறிவுறுத்தல்களின் அடிப்படையில், இத்திட்டத்தை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்காக பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த முறையின்கீழ், 51 அரசுத் துறைகள் தொடர்பான 185-க்கும் மேற்பட்ட மத்திய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

11. நிதி தொடர்பான தகவல்களை மிகவும் பயனுள்ள வகையில் பகுப்பாய்வு செய்யவும், மாநிலத்தின் கணக்குகளை மின்னணுத் தகவல் தொகுப்பு உபகரணங்கள்மூலம் பகுப்பாய்வு செய்து சிறப்பான முறையில் வரவு-செலவினைத் திட்டமிடும் நோக்குடன்

[2021 செப்டம்பர் 13

1971 ஆம் ஆண்டு மத்திய வரவு-செலவுத் திட்ட விவரங்கள் தொகுப்பு மையம் ஒன்றை அரசு தோற்றுவித்தது. இந்த மின்னணு தகவல் தொகுப்பு வசதிகளைப் பயன்படுத்தி அரசுத் துறைகளின் பலதரப்பட்ட செயல்பாடுகளுக்குத் தேவையான வகையில் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் 1972 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. நிர்வாக வசதிகளுக்காக 1975 ஆம் ஆண்டு மேற்கண்ட இரண்டு மையங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் (GDC) ஏற்படுத்தப்பட்டது.

கருவூல அளவிலும் மாநில கணக்காயர் அலுவலகத்திலும் கணினிமயமாக்கப்பட்டதை தொடர்ந்து அரசு தகவல் தொகுப்பு விவர மையத்தின் முதன்மைப் பணிகள் மாறுபாடு அடைந்துள்ளது. எனவே அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் கீழ்க்காணும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

1) அரசுப் பணியாளர்களுக்கான பங்களிப்புடன்கூடிய ஓய்வூதியத் திட்டம்,

2) உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்,

3) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் (ICDS) திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதி (GPF).

12. அரசாணை (நிலை) எண் 108, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 19-4-2010-ல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (NMP) மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் (ICDS) திட்டப் பணியாளர்களுக்கான பொது வருங்கால வைப்பு நிதி குறித்தப் பணிகள் அரசு தகவல் தொகுப்பு விவர மையத்திற்கு ஒப்படைக்கப்பட்டன. மேற்கண்ட திட்டத்தில் 31-7-2021 அன்றுள்ளபடி 2,12,534 சந்தாதாரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

13. அரசாணை (நிலை) எண் 53, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 20-7-2015-ல் இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டப்

2021 செப்டம்பர் 13]

பணியாளர்களிடமிருந்து ஆகஸ்ட் 2015 முதல் வருங்கால வைப்பு நிதி பிடித்தம் செய்யப்படுகிறது. மேலும் கருவூலம்/சம்பளக் கணக்கு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட வரவின பட்டியல்களின் அடிப்படையில் 2015-2016 முதல் 2018-2019 வரை உள்ள ஆண்டுகளுக்கான கணக்குத்தாள் தொகுக்கப்பட்டு வலைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. 2019-2020 ஆம் ஆண்டிற்கான கணக்குத்தாள் தொகுக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

14. மேற்காணும் திட்டத்தில் 8,194 பணியாளர்களுக்கு 31-7-2021 முடிய ரூ.21.86 கோடிக்கு இறுதித் தொகை வழங்குவதற்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசு ஊழியர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

15. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் (CPS) 1-4-.2003-க்குப் பிறகு அரசுப் பணியில் சேர்ந்த அனைத்து அரசுப் பணியாளர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் அரசுப் பணியாளர்களிடமிருந்து அவர்களது அடிப்படை ஊதியம், தர ஊதியம், அகவிலைப்படி ஆகியவற்றை கணக்கில் எடுத்துக்கொண்டு அவற்றின் 10 சதவீதத் தொகையும், அதே அளவு அரசின் பங்களிப்பு தொகையும், அதன் மீதான வட்டித் தொகையும் கணக்கிடப்பட்டு, அரசு ஊழியர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

16. அரசு ஆணை நிலை எண் 201, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 21-5-2009-ன்படி, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள், நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்கள், நகராட்சிப் பள்ளிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்புடன்கூடிய ஓய்வூதியத் திட்ட கணக்குகள் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. அரசு ஆணை நிலை எண் 463, நிதி (ஓய்வூதிய குறை தீர்ப்பு) துறை, நாள் 27-12-2013-ன்படி, மாநிலக் கணக்காயரால் பராமரிக்கப்பட்டு வந்த அரசுப் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட கணக்குகள் இத்துறைக்கு 1-1-2014 அன்று மாற்றம் செய்யப்பட்டது.

அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் வழங்கியுள்ள பங்களிப்பு ஓய்வூதியத் திட்டக் குறியீட்டு எண்கள் குறித்த விவரம் பின்வருமாறு:

வ. எண்	பணியாளர் விவரம்	31.7.2021 அன்று வரை வழங்கப்பட்ட குறியீட்டு எண்கள்
1	அரசுப் பணியாளர்கள்	4,54,197
2	நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்கள் / ஊராட்சி ஒன்றியம் / நகராட்சி பள்ளி பணியாளர்கள்	1,03,610
3	உள்ளாட்சித் துறை பணியாளர்கள்	30,359
	மொத்தம்	**5,88,166**

கடந்த 2019-2020 வரை 4,87,823 அரசுப் பணியாளர்கள், நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்கள், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கணக்குச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

உள்ளாட்சி அமைப்புக்களுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

17. அரசாணை நிலை எண் 260 நிதி (பிஜிசி) துறை, நாள் 15.10.2015 வாயிலாக மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் உள்ளாட்சிகளில் பணிபுரியும் உள்ளாட்சி பணியாளர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கான மாநில ஒருங்கிணைப்பு அதிகாரியாக (State Nodal Officer) கருவூலக் கணக்குத் துறை ஆணையர் அவர்களை அரசு நியமித்துள்ளது. இதற்கான மென்பொருள் தேசிய தகவல் மையத்தால் வடிவமைக்கப்பட்டு பணம் பெற்று வழங்கும் அலுவலர்கள் தங்களது பணியாளர்களின் மாதாந்திர பங்களிப்பு ஓய்வூதிய பிடித்த விவரங்கள் இணையதளம்மூலம் பதியப்பட்டு, உள்ளாட்சி தணிக்கைத் துறையால் இணையதளம் மூலமே தணிக்கை மேற்கொள்ளப்படும் பணிகள் தொடங்கப்பட்டுவிட்டன. உள்ளாட்சித் துறைகளில் நிலையாக்கப்படாத பதவிகளில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற மற்றும் காலமான பணியாளர்களுக்கு இறுதி இருப்புத் தொகை ஒப்பளிப்பு செய்யும் பணிகளும் ஜனவரி 2019-ம் மாதம் முதல் தொடங்கப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 13]

18. உள்ளாட்சி அமைப்புகளில் சுமார் 30,359 நிலையாக்கப்படாத பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பணிபுரிந்து வருகிறார்கள். மேலும், இணையதளம் வழியாக, சந்தாபிடித்தம் மற்றும் அதற்கீடான உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்பு ஆகியவை பதிவு செய்யப்பட்டு உள்ளாட்சி நிதி தணிக்கை துறையினரால் தணிக்கை செய்யப்பட்ட அனைத்து நிலையாக்கப்படாத 22,353 பணியாளர்களுக்கும் 2018-2019 ஆம் ஆண்டு முடிய கணக்குத் தாள் வழங்கப்பட்டுள்ளது.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட இறுதித்தொகை வழங்கும் ஆணை

*19. பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள், பணித்துறப்பு செய்தவர்கள், பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள், பணியிலிருக்கும்போது இறந்தவர்கள் ஆகியோர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட இறுதித் தொகை வழங்குவது குறித்து அரசாணை நிலை எண் 59, நிதி (பிஜிசி) துறை, நாள் 22.2.2016-ல் வெளியிடப்பட்டுள்ளது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள அரசாணை அடிப்படையில் 31.7.2021 வரை 23,260 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, அவற்றுள் 22,893 அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களுக்கு அரசு தகவல் தொகுப்பு விவர மையத்திலிருந்து பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட இறுதி கணக்குச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் பங்களிப்பு ஓய்வூதியத் திட்ட இறுதி ஒப்பளிப்பு ஆணை 31.7.2021 வரை (*CPS Final Authorization*) ரூ.1,240.28 கோடி வழங்கப்பட்டுள்ளது.*

20. ஆளுநர் உரையில், அரசின் தணிக்கை மற்றும் மேற்பார்வை செயல்பாடு முழுமையாக ஆய்வு செய்யப்படும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. 2021-2022-க்கான வரவு-செலவுத் திட்ட உரையில், இந்த அரசு பொறுப்புடைமை மற்றும் ஆக்கத்திறனை அதிகரிக்க பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. தலைமைக் கணக்குத் தணிக்கை அலுவலரின் 2000 தணிக்கைப் பத்திகள் பல ஆண்டுகளாக நிலுவையில் இருப்பது முக்கியமானதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தவறான செயல்களை முன்கூட்டியே கண்டறிந்து, தாமதமின்றி திருத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்ய, அரசிற்குள் வலுவான உள் தணிக்கை நுட்பமுறை அவசியம் என்றும் அரசு குறிப்பிட்டுள்ளது. மாநில அரசுத் துறைகள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களை தணிக்கை செய்யும் தலைமை கணக்குத் தணிக்கை அலுவலக தணிக்கை பிரிவுகளுடன் நிதித் துறை ஒருங்கிணைந்து செயல்படுகிறது. தலைமைக் கணக்குத்

[2021 செப்டம்பர் 13

தணிக்கை அலுவலரின் ஆய்வு அறிக்கைகள் மற்றும் வரைவு பத்திகளுக்கான பதில்கள் தொடர்புடைய துறைகளால் நேரடியாக அனுப்பப்படுகின்றன. மேலும், தலைமைச் செயலாளர் தலைமையிலான மாநில அளவிலான தணிக்கைக் குழுவின்மூலம் தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து நிலுவையில் உள்ள பத்திகளுக்கு தீர்வு காண்பதற்கு நிதித் துறை தொடர்ந்து கண்காணித்து வருகிறது. நிலுவையில் உள்ள தணிக்கை பத்திகளுக்கு விரைவாக தீர்வு காண்பதை உறுதி செய்ய இந்த செயல்முறை முறைப்படுத்தப்பட்டு கணினிமயமாக்கப்படும்.

21. தற்போது தணிக்கை தொடர்பான பின்வரும் துறைகள் நிதித் துறையின் கட்டுப்பாட்டில் செயல்படுகின்றன.

i. கூட்டுறவு தணிக்கைத் துறை

ii. உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை

iii. மாநில அரசு தணிக்கைத் துறை

iv. பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை

22. அரசுக்குள் உள்ள தணிக்கை முறையின் அடிப்படை மறுஆய்வை அரசு மேற்கொள்ளும். இந்த நோக்கத்திற்காக, அரசிற்குள் செயல்படும் அனைத்து தணிக்கைத் துறைகளும் அதன் பிரிவுகளும் நிதித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டு, அனைத்து அரசுத் துறைகள் மற்றும் முகமைகளின் உள் தணிக்கைப் பணிகள் திறம்பட மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்ய தடையின்றி ஒருங்கிணைக்கப்படும். தணிக்கைத் துறைகளின் திறனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும். மேலும், அவை தொழில்முறைப்படுத்தப்படும்.

23. இந்து சமய மற்றும் அறநிலையங்கள் ஆணையர் மற்றும் தலைமைச் செயலக சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இருந்து வந்த இந்து சமய மற்றும் அறநிலையத் துறைகளின் தணிக்கைக்காக செயல்படும் தணிக்கைத் துறை இப்போது நேரடியாக நிதித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்படும்.

24. இந்த முகமைகள், தலைமை கணக்குத் தணிக்கை அலுவலரால் முழுமையாக தணிக்கை செய்யப்படாத

2021 செப்டம்பர் 13]

நிறுவனங்களின் புறத் தணிக்கை மற்றும் வணிக செயல்பாடுகளைக் கொண்ட அரசு துறைகளில் உள் தணிக்கை செயல்பாட்டை மேற்கொள்கின்றன. தணிக்கை செயல்பாட்டை கணிசமாக வலுப்படுத்த பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும், அவற்றுள்:

i. *அரசின் பல்வேறு துறைகளின்கீழ் தணிக்கை செயல்பாடுகளை மேற்கொள்ளும் அனைத்து தணிக்கைத் துறைகள் மற்றும் பிரிவுகள் நிதித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்படும்.*

ii. *மாநில தணிக்கைத் துறைமூலம், சங்கங்கள் சட்டத்தின்கீழ் உள்ள சங்கங்களின் தணிக்கை செயல்பாடுகளும் கணிசமாக வலுப்படுத்தப்பட வேண்டும். பல சங்கங்கள் தங்களுடைய கணக்குகளை பல ஆண்டுகளாக இறுதி செய்யாமல் உள்ளன. இச்சங்கங்களை ஒழுங்குபடுத்தப்படவேண்டிய பதிவுத் துறை தலைவரால் இச்செயல்பாடுகளை முழுமையாக கண்காணிக்க இயலவில்லை.*

iii. *நிதி சார்ந்த விஷயங்களை ஒழுங்குபடுத்தி மேம்படுத்துவதை உறுதிபடுத்த சங்கங்களாக உருவாக்கப்பட்ட அரசு முகமைகளில் சாத்தியமானவற்றை நிறுவனங்களின் சட்டத்தின்கீழ் இலாப நோக்கமற்ற நிறுவனங்களாக மாற்றி நிபுணத்துவம் வாய்ந்த நபர்கள்மூலம் சட்ட முறை தணிக்கைக்கு உட்படுத்தப்படும்.*

25. தணிக்கை செயல்பாட்டை மேம்படுத்த பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்:

i. *நிபுணத்துவம் வாய்ந்த நபர்களை நேரடி நியமனம்மூலம் உரிய நிலையில் பணியமர்த்த வழிவகை வழங்குதல்.*

ii. *பயிற்சி மற்றும் தணிக்கை கையேடுகளை திருத்துதல் மற்றும் புதுப்பித்தல், செயல்முறைகள் மற்றும் நடைமுறைகள்மூலம் தணிக்கைப் பணியாளர்களின் திறனை மேம்படுத்துதல்.*

iii. *சுய நல நோக்கங்கள் உருவாகாமல் இருப்பதை உறுதி செய்ய வலுவான பணியிடமாற்றக் கொள்கையை செயல்படுத்துதல்.*

iv. *கூட்டு நடைமுறைகளுக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கையான நிறுவன அதிகார வரம்பின் அடிப்படையில் நிலையான பகுதியில் தணிக்கைப்*

பணியாளர்களை பணியமர்த்துவதற்குப் பதிலாக தொடர்பின்றி தணிக்கைப் பணியாளர்களை பணியமர்த்துதல்.

iv. தணிக்கை செயல்முறைகளை கண்காணிக்க தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல்.

vi. தணிக்கை கண்டுபிடிப்புகள் மற்றும் அறிக்கைகளின்மீது தொடர்புடைய துறைத் தலைமை மற்றும் நிறுவனங்களுடன் முறையான மற்றும் தீவிர கண்காணிப்பில் இருத்தல்.

26. மாநில அரசின் தற்போதைய அனைத்து தணிக்கை துறைகளையும் மேற்பார்வையிட மாநில தணிக்கை இயக்குநர் என்ற பதவி நிலை உருவாக்கப்படும். இந்திய தணிக்கை மற்றும் கணக்கு பணி சேவையைச் சார்ந்த அலுவலரை மாற்றுப் பணியில் மாநில தணிக்கை இயக்குநராக நியமிப்பது உசிதமானது.

27. மாநில அரசுக்குள் உள்ள ஒட்டுமொத்த தணிக்கை செயல்முறையை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்க ஓய்வு பெற்ற துணைத் தலைமைக் கணக்காயர் நிலை அதிகாரிகள் மற்றும் தணிக்கை நிபுணர்கள் அடங்கிய உயர் அதிகாரக் குழு ஒன்று அமைக்கப்படும்.

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

28. மாநில அரசின் கணக்குகளின் தணிக்கைப் பணி முழுவதும் இந்திய தலைமைக் கணக்கு தணிக்கையரை சார்ந்தது போன்று மாநிலத்திலுள்ள நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், வேளாண்மை விற்பனைக் குழுக்கள், மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் மற்றும் இதர நிறுவனங்களின் கணக்குகளை அவற்றுக்குரிய சட்ட விதிகளின்கீழ் தணிக்கை செய்யும் பணி உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையைச் சார்ந்ததாகும்.

29. இரண்டாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை சட்டம் 2014 (த.நா. சட்ட எண்:24) நிறைவேற்றப்பட்டு 15.12.2014 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை விதிகள் 24.8.2016 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. இது அந்நிறுவனங்களின் தணிக்கைக்கு புதிய சட்டபூர்வ ஆதாரத்தை வழங்குகிறது.

2021 செப்டம்பர் 13]

30. தமிழ்நாடு உள்ளாட்சி நிதிச் சட்டம் *2014* பிரிவு *20*-ன்கீழ் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் தன்னால் தணிக்கை செய்யப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் மீதான தொகுப்பு அறிக்கையை ஒவ்வொரு ஆண்டும் அரசுக்கு சமர்ப்பித்து அரசால் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்.

31. தமிழ்நாடு சட்டமன்றத்தில் தணிக்கை அறிக்கையினை தயாரித்து சமர்ப்பிப்பது குறித்து மாநில கணக்காயரால் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தணிக்கை அறிக்கை வடிவத்தை அவ்வப்போது மாற்றி அமைக்கவும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை விதிகள் *2016* வகை செய்கிறது.

32. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் *2014*-ன் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிறுவனங்களின் தணிக்கையைத் தவிர பிரிவு *5*-ன்படி அரசின் முன் அனுமதியுடன் இதர நிறுவனங்களின் தணிக்கையும் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநரால் சட்டபூர்வமாக மேற்கொள்ளப்படுகிறது. தற்போது பின்வரும் நிறுவனங்கள் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

வ. எண்	**நிறுவனங்கள்**	**மொத்த எண்ணிக்கை**
1	மாநகராட்சிகள்	*15*
2	நகராட்சிகள்	*121*
3	பேரூராட்சிகள்	*528*
4	மாவட்ட ஊராட்சிகள்	*31*
5	ஊராட்சி ஒன்றியங்கள்	*388*
6	பல்கலைக்கழகங்கள்	*23*
7	நூலக ஆணைக் குழுக்கள்	*32*
8	வேளாண்மை விற்பனைக் குழுக்கள்	*23*
9	தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியம்	*1*

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	நிறுவனங்கள்	மொத்த எண்ணிக்கை
10	வேளாண் விற்பனைக் குழு பொறியியல் பிரிவு	3
11	கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி	1
12	உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் புதுநகர் வளர்ச்சிக் குழுமங்கள்	28
13	கிராம ஊராட்சிகள் (ஆண்டுதோறும் சுழற்சி 22% முறையில்) மொத்த கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை - 12524	2801
14	பல்வகை நிறுவனங்கள்	12
15	தேசிய சமூக நலத் திட்டம்	32
	மொத்தம்	**4039**

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் நோக்கம்

33. இத்துறையால் உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்படும் தணிக்கையானது பின் தணிக்கை பணிகளை உறுதி செய்யக்கூடிய பொதுவான தேவைகளை பூர்த்தி செய்கின்றது. உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகளைச் சரிபார்த்தல், வரவு செலவுகள் முறையாக உள்ளனவா எனச் சரிபார்த்தல், மேற்படி வரவு செலவுகள் சம்பந்தப்பட்ட சட்டத்திற்குட்பட்டும் விதிகளின்படியும், அரசாணைகளின்படியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனவா என்பதனை உறுதி செய்தல், உள்ளாட்சி அமைப்புகளின் கணக்குகள் அவ்வமைப்புகளின் செயல்பாட்டின் உண்மை நிலையைப் பிரதிபலிக்கின்றனவா என்பதை சரிபார்த்தல் ஆகிய நோக்கங்களோடு உள்ளாட்சி அமைப்புகளின் தணிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளாட்சி அமைப்புகளுக்கு வரி செலுத்துவோரின் நலன்கள் பாதுகாக்கப்படுவதனை உறுதி செய்வதோடன்றி, உள்ளாட்சி அமைப்புகளுக்கு அரசு மற்றும் பிற நிதி உதவி அளிக்கும் நிறுவனங்கள் வழங்கும் நிதி முழுவதும் வழங்கப்பட்ட காரணங்களுக்காக பயன்படுத்தப்படுகிறதா என்பதையும் அவை உத்தேசிக்கப்பட்ட பயனாளிகளின் நலனுக்கு பயன்படுத்தப்படுகிறதா என்பதையும் தணிக்கையில் உறுதி செய்யப்படுகிறது.

2021 செப்டம்பர் 13]

மாநகராட்சிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட நகராட்சிகளில் உடன்பின் தணிக்கை (Immediate Post Audit) முறையை அமல்படுத்தப்படுதல்

34. உடன்நிகழ் தணிக்கை செயல்படுத்தப்படுகின்ற கீழ்க்கண்ட 14 மாநகராட்சிகளிலும் 15 நகராட்சிகளிலும் உடன்பின் தணிக்கை செயல்பட்டு வருகின்றது. இம்முறையின்படி செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டு, தொகை வழங்கப்பட்டவுடன் செலவுச் சீட்டுக்கள் தணிக்கைக்கு உடனடியாக வழங்கப்பட்டு, அச்செலவுச் சீட்டுகளின் தணிக்கை உடனுக்குடன் செய்யப்பட்டு, குறைபாடுகள் நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்படுகின்றது. தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை உடனுக்குடன் நிர்வாகத்தால் களைய இச்செயல்முறை வழிகோலுகிறது.

உடன்நிகழ் தணிக்கை செயல்படுத்தப்படும் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள்

வ. எண்	மாநகராட்சிகள்	நகராட்சிகள்
1.	சென்னை	காஞ்சிபுரம்
2.	சேலம்	கடலூர்
3.	கோயம்புத்தூர்	கரூர்
4.	திருச்சி	கும்பகோணம்
5.	மதுரை	புதுக்கோட்டை
6.	திருநெல்வேலி	பழனி
7.	தூத்துக்குடி	பொள்ளாச்சி
8.	வேலூர்	ஊட்டி
9.	திருப்பூர்	மறைமலைநகர்
10.	ஈரோடு	தாம்பரம்
11.	தஞ்சாவூர்	பல்லாவரம்
12.	திண்டுக்கல்	திருவண்ணாமலை
13.	ஆவடி	கொடைக்கானல்
14.	நாகர்கோவில்	இராஜபாளையம்
15.		கோவில்பட்டி

[2021 செப்டம்பர் 13

35. உடன்நிகழ் தணிக்கையின்போது, தணிக்கையில் கண்டறியப்படும் தணிக்கை மறுப்புரைகள், தணிக்கைச் சீட்டுகள் வாயிலாக உடனுக்குடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, அவற்றிற்குப் பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு தணிக்கை மறுப்புரைகள் ஏற்கப்படும் அல்லது நீக்கப்படும். நிலுவையில் உள்ள மறுப்புரைகளையும் வரவு மற்றும் செலவுகள் தொடர்பான பத்திகளும் இறுதி செய்யப்பட்டு அவற்றை உள்ளடக்கியதாக தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிகழ்வு அடிப்படையிலான (Accrual based) கணக்கு வைப்பு முறையை செயற்படுத்துதல்

*36. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பின்பற்றப்பட்டு வந்த ரொக்க அடிப்படையிலான கணக்கு வைப்பு முறைக்குப் பதிலாக மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் நிகழ்வு அடிப்படையிலான கணக்கு வைப்பு முறை (*Accrual based Accounting System*) 1999–2000, 2000-2001 ஆகிய கணக்காண்டுகளிலிருந்து இரு கட்டங்களாக செயற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து பேரூராட்சிகளிலும் 2002-2003 ஆம் ஆண்டு முதல் இந்த கணக்கு முறை செயல்படுத்தப்பட்டுள்ளது. 2016-2017 முதல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 7 இலக்க குறியீடுகளைக் கொண்ட தேசிய அளவிலான நகராட்சிகளின் கணக்கு நடைமுறை சார்ந்த கணக்கீடு முறை அமல்படுத்தப்பட்டுள்ளது.*

உள்ளாட்சி அமைப்புகளின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் ஆண்டுக் கணக்குகளுக்கு தணிக்கை சான்று வழங்குதல்:

*37. அரசாணை பல்வகை எண் 93, நிதி (நிதிக் குழு-*IV*)த் துறை, நாள் 28.3.2003-ன்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் நிகழ்வு அடிப்படையிலான கணக்குகள் (*Accrual Based Accounting*) செயல்படுத்தப்படுவதை தொடர்ந்து ஆண்டுக் கணக்குகள் உள்ளாட்சி நிதித் தணிக்கை அலுவலர்களால் தணிக்கை செய்யப்பட்டு சான்றளிக்கப்படுகின்றன.*

அங்கீகரிக்கப்பட்ட பணிநிலைத் திறன்

38. இத்துறைக்கு அனுமதிக்கப்பட்ட 1,327 பணியிடங்களில் இரு பணியிடங்கள் வேற்றுப்பணி அடிப்படையில் தமிழ்நாடு

2021 செப்டம்பர் 13]

மின் ஆளுமை முகமை மூலமும் மீதமுள்ள பணியிடங்கள் இத்துறையிலேயே நேரடி நியமனம் மற்றும் பணிமாறுதல் பணிநியமனம் மூலமும் நிரப்பப்படுகின்றன.

பணியிடத்தின் பெயர்	**ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை**
இயக்குநர்	1
இணை இயக்குநர்	9
துணை இயக்குநர்	17
உதவி இயக்குநர்	72
ஆய்வாளர்	318
துணை ஆய்வாளர்	293
உதவி ஆய்வாளர்	293
அமைச்சுப் பணி	147
பொது சார்நிலைப் பணி	47
உள்ளாட்சி நிதித் தணிக்கை சார்நிலைப் பணி - தற்காலிக விதி (ஓட்டுநர்)	09
அடிப்படை பணி	119
வேற்றுப்பணி (முறைமை பகுப்பாய்வாளர் மற்றும் உதவி முறைமை பகுப்பாய்வாளர்)	02
மொத்தம்	**1327**


தணிக்கை அமைப்பு

39. தற்போது 14 மாநகராட்சிகளிலும், 15 நகராட்சிகளிலும் மற்றும் 13 பல்கலைக்கழகங்களிலும் உடன்நிகழ் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2000-2001 ஆம் ஆண்டு முதல், 388 ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும் காலாண்டுத் தணிக்கை முறையை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி 116 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை தலைமையிடமாகக் கொண்டு, ஒவ்வொரு மூன்று அல்லது நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு

ஓர் ஆய்வாளர் மற்றும் ஒரு துணை ஆய்வாளர் அல்லது ஒரு உதவி ஆய்வாளர் அடங்கிய ஒரு குழு வீதம் தணிக்கைக் குழுக்கள் இதற்கென அமைக்கப்பட்டுள்ளன.

கிராம ஊராட்சிகளைப் பொறுத்தமட்டில் மொத்த ஊராட்சிகளின் எண்ணிக்கையில் 22 சதவிகிதம் சோதனைத் தணிக்கையாக உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மொத்தம் உள்ள 12,524 ஊராட்சிகளில் ஆண்டு தோறும் 2,801 கிராம ஊராட்சிகளில் சோதனைத் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

உடன்நிகழ் தணிக்கைக்குட்படாத எஞ்சியுள்ள 106 நகராட்சிகள், 10 பல்கலைக்கழகங்கள், இதர உள்ளாட்சி அமைப்புகளான பேரூராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், விற்பனைக் குழுக்கள், உள்ளூர் நூலக ஆணைக் குழுக்கள், உள்ளூர் திட்டக் குழுமங்கள் மற்றும் பிற பல்வகை நிறுவனங்களின் தணிக்கை, ஆண்டுதோறும் மேற்படி நிறுவனங்களிலிருந்து ஆண்டுக் கணக்குகள் பெறப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



2021 செப்டம்பர் 13]

பல்கலைக்கழக மானியக் குழு, மாநில / மத்திய அரசு மற்றும் இதர நிதி அளிக்கும் நிறுவனங்களால் இத்துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்ட பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்படும் மானியங்கள் பயன்படுத்தப்பட்டதற்கு இத்துறையினால் தணிக்கைச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

தணிக்கை நிலை முன்னேற்றம்

40. 2019-2020 ஆம் ஆண்டிற்கான அனைத்து ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், மாநகராட்சிகள், 120 நகராட்சிகள், 527 பேரூராட்சிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் இதர நிறுவனங்களின் தணிக்கை முடிவுற்றுள்ளது. 2019-20 ஆம் ஆண்டிற்கான கிராம ஊராட்சிகளின் 22% சோதனைத் தணிக்கை முடிவுற்றது. மேலும் அனைத்து நிறுவனங்களின் 2020-2021 ஆம் ஆண்டிற்கான தணிக்கை 31.12.2021-க்குள் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

வ. எண்	தணிக்கை ஆண்டு	மொத்தமுள்ள நிறுவனங்கள்	தணிக்கை முடிக்கப்பட்டவை	தணிக்கை நிலுவை
1)	2015-2016	3996	3996	0
2)	2016-2017	4042	4042	0
3)	2017-2018	4039	4038	1
4)	2018-2019	4027	4026	1
5)	2019-2020	4027	4025	2
6)	2020-2021	4029	702	3315

தொகுப்பு தணிக்கை அறிக்கை சமர்ப்பித்தல்

41. தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கைச் சட்டம் 2014 பிரிவு 20 மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி நிதித் தணிக்கை விதிகள் 2016, விதி 19-ன்படி உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் ஆண்டுதோறும் தொகுப்பு தணிக்கை அறிக்கை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் வைப்பதற்கு அரசிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

வ. எண்	ஆண்டு	தற்போதைய நிலை
1)	2015-2016	9.7.2018 அன்று சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது/
2)	2016-2017	5.2.2021 அன்று சட்டப்பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.
3)	2017-2018	தொகுப்புத் தணிக்கை அறிக்கை அச்சிடப்பட்டு சட்டப் பேரவையில் சமர்ப்பிக்க தயார் நிலையில் உள்ளது.
4)	2018-2019	தொகுப்புத் தணிக்கை அறிக்கை அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு அச்சிடும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.
5)	2019-2020	வரைவு தொகுப்புத் தணிக்கை அறிக்கை தயாரிக்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

தணிக்கை மறுப்புரைகள் தீர்வு செய்யும் நடைமுறை

42. தணிக்கை அறிக்கையின் மீதான தொடர் நடவடிக்கை எடுப்பது இத்துறையின் இன்றியமையாத பணிகளில் ஒன்றாகும். தணிக்கையின்போது கண்டறியப்படும் பெரும் முறைகேடுகள் உடனடியாக சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் நிருவாக அலுவலர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. தணிக்கை அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பெரும் முறைகேடுகள் மற்றும் தொகை இழப்புகள் பற்றிய விவரங்கள் மாதாந்திர காலமுறை அறிக்கைமூலம் அரசுக்கும், சம்பந்தப்பட்ட நிருவாகத் துறைகளின் தலைவர்களுக்கும் தொடர் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தெரியப்படுத்தப்படுகின்றன.

43. தணிக்கை மறுப்புரைகளுக்கு பெறப்படும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு திருப்தியான விளக்கங்கள் அளிக்கும் நிலையில் தணிக்கைத் தடைகள் நீக்கப்படுகின்றன. மேலும் தணிக்கைத் தடைகளுக்கான பதில்கள் பெறப்பட்டு, தொடர்புடைய நிருவாகத் துறை ஏற்பாடு செய்யும் கூட்டமர்வின் மூலமாகவும், இத்துறையின்

2021 செப்டம்பர் 13]

மண்டல மற்றும் மாவட்ட அலுவலர்களால் தணிக்கைத் தடைகளுக்கு உடனடி தீர்வு காணப்படுகின்றன.

44. தற்போதைய சிறந்த நடைமுறைகளின்படி, தணிக்கையின் தொடக்க நிலை மற்றும் இறுதி நிலைகளில் கலந்தாய்வு செய்யப்படுவதால், தணிக்கையில் அவ்வப்போது சுட்டிக்காட்டப்படும் தவறுகளைச் சரி செய்ய இது வாய்ப்பாக அமைகிறது.

மாவட்ட அளவிலான உயர் நிலைக் குழு மற்றும் மாநில அளவிலான உயர் நிலைக் குழு அமைத்தல்

45. ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில், மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு மாவட்ட உயர்நிலைக் குழுக்களும், ஊரக வளர்ச்சி ஆணையரை தலைவராகக் கொண்டு மாநில உயர்நிலைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன.

பேரூராட்சிகளைப் பொறுத்தமட்டில் மாநில அளவில் பேரூராட்சிகளின் இயக்குநரை தலைவராகக் கொண்டும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டும் பேரூராட்சிகளுக்கான உயர்நிலைக் குழுக்கள் அரசு ஆணை எண் 1, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (பேரூ2), நாள் 4.1.2007-ல் அமைத்து ஆணையிடப்பட்டுள்ளன.

அனைத்து மாநகராட்சிகள் (சென்னை நீங்கலாக) மற்றும் நகராட்சிகளுக்கான மாவட்ட உயர் நிலைக் குழு, மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டும், மாநில அளவிலான உயர்நிலைக் குழு நகராட்சி நிர்வாக இயக்குநரை தலைவராகக் கொண்டும் அரசு ஆணை நிலை எண் 65, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 22.5.2007-இன்படி அமைக்கப்பட்டுள்ளது.

தணிக்கைத் தடைகள் நீக்கம் சார்பான தொகை பிடித்தம்

46. பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற நிறுவனங்களில் 1.4.2020 முதல் 31.7.2021 முடியவுள்ள காலத்தில் 28933 தணிக்கைத் தடைகளை நீக்கம் செய்த வகையில் 755.61 இலட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

[2021 செப்டம்பர் 13

**தணிக்கைத் தடைகளின் மீதான ரொக்கம் வசூல் செய்த விவரம்
ஏப்ரல் – 2020 முதல் ஜூலை – 2021**

வ. எண்	மாதம்	பத்திகளின் எண்ணிக்கை	தொகை வசூலிக்கப்பட்டது (ரூ. இலட்சத்தில்)
1)	ஏப்ரல்-2020	745	24.48
2)	மே–2020	527	4.98
3)	ஜூன்-2020	524	2.81
4)	ஜூலை–2020	885	46.02
5)	ஆகஸ்ட்–2020	1863	11.00
6)	செப்டம்பர்–2020	2260	34.98
7)	அக்டோபர்–2020	3370	57.13
8)	நவம்பர்–2020	2814	17.77
9)	டிசம்பர்–2020	7506	216.64
10)	ஜனவரி–2021	1699	47.25
11)	பிப்ரவரி–2021	2610	152.42
12)	மார்ச்–2021	517	19.53
13)	ஏப்ரல்-2021	558	5.7
14)	மே–2021	73	22.93
15)	ஜூன்-2021	310	6.22
16)	ஜூலை–2021	2672	85.75
	மொத்தம்	**28933**	**755.61**

தணிக்கைக் கட்டணம்

47. பல்கலைக்கழகத் தணிக்கைக்கு 100% தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தணிக்கைக்கு 50% தணிக்கைச் செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும், வேளாண் விற்பனை குழுக்கள் தணிக்கைக்கு மொத்த செலவினத்தில் 2 சதவீதமும் இத்துறையால்

2021 செப்டம்பர் 13]

வசூலிக்கப்படுகிறது. கேட்பு தொகையான 2886 இலட்சம் ரூபாயில், மேற்படி நிறுவனங்களால் தணிக்கைக் கட்டணமாக 1386.04 இலட்சம் ரூபாய் 2020-2021 ஆம் நிதியாண்டில் செலுத்தப்பட்டுள்ளது.

சிறப்புப் பணிகள்

48. வழக்கமான தணிக்கைப் பணிகளுடன் கீழ்க்காணும் சிறப்புப் பணிகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன:

அ) உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல்:

நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய பணியாளர்களின் ஓய்வூதிய/குடும்ப ஓய்வூதியப் பயன்களுக்கு சான்று/ஒப்பளிப்பு மற்றும் தொகை வழங்குதல் போன்ற பணிகள் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 31.07.2021 அன்றைய நிலவரப்படி 30,336 ஓய்வூதியதாரர்கள், நான்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் மாதாந்திர ஓய்வூதியம் பெறுகின்றனர். ஓய்வூதியத்திற்கான தொகை சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களால் மாநில நிதி ஆணைய பகிர்வு நிதி தொகையிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

ஆ) உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்கள் குறைகள் தீர்த்தல்

உள்ளாட்சி அமைப்புகளின் ஓய்வூதியதாரர்/குடும்ப ஓய்வூதியதாரர்கள் தங்கள் ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் முன்மொழிவுகள் தொடர்பான குறைகளைக் களைவதற்கும் தேவைப்படும் விவரங்களைக் காலதாமதம் இன்றி உடன் பெற்றுக் கொள்வதற்காகவும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தில் தகவல் மையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

இ) நகராட்சி ஓய்வூதியதாரர்கள் நல மற்றும் குடும்ப பாதுகாப்புத் திட்டம் நிர்வகித்தல்

ஓய்வூதியதாரர்கள் நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் அரசாணை (பல்வகை) எண் 120, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25.5.1999-ன்படி, நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கு 1.8.1999 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை

இயக்குநரால் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. 1.4.2020 முதல் 31.7.2021 முடிய ஓய்வூதியதாரர்கள் நலத்திட்டத்தின்கீழ் 238 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 88.06 இலட்சம் ரூபாயும், 1.4.2020 முதல் 31.7.2021 முடிய ஓய்வூதியதாரர்கள் குடும்ப பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 108 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 48.15 இலட்சம் ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஈ) ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்கள் நல மற்றும் குடும்ப பாதுகாப்புத் திட்டம் நிருவகித்தல்

ஓய்வூதியதாரர்கள் நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் அரசாணை (பல்வகை) எண் 23, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ7)த் துறை, நாள் 15.3.2013-ன்படி, ஊராட்சி ஒன்றிய ஓய்வூதியதாரர்களுக்கு 1.4.2013 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களின்கீழ் 1.4.2020 முதல் 31.7.2021 முடிய ஓய்வூதியதாரர்கள் நலத் திட்டத்தில் 97 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 44.35 இலட்சம் ரூபாயும் 1.4.2020 முதல் 31.7.2021 முடிய குடும்ப பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 221 கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு 98.91 இலட்சம் ரூபாயும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

உ) உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி இருப்புத் தொகைகளுக்கு வட்டி அளித்தல்

உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதியும் அவற்றிலிருந்து செய்யப்பட்ட முதலீடுகளும் அரசால் 1967 ஆம் ஆண்டு முதல் ஏற்கப்பட்டன. வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளின் இருப்புகளுக்கு வட்டி வழங்குவதற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 1.4.2020 முதல் 31.7.2021 முடிய ரூ.20.10 கோடி ரூபாய் உள்ளாட்சி அமைப்புகளுக்கு பொது வருங்கால வைப்பு நிதி வட்டியாக அளிக்கப்பட்டுள்ளது.

ஊ) அறக்கட்டளைகளின் பொருளாளர்

உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், 1.4.1952 முதல் இத்துறையால் பராமரிக்கப்படும் அறக்கட்டளைகளின் பொருளாளராகவும் செயல்பட்டு வருகிறார். அறக்கட்டளைகளை

2021 செப்டம்பர் 13]
அரசு ஏற்று ஒப்பளித்து அறக்கட்டளைகளின் நிருவாகத் திட்டங்களை அரசிதழில் வெளியிடுகிறது.

தற்போது அறக்கட்டளை நிதிப் பொருளாளர் கட்டுப்பாட்டில் 19.75 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 4 மத்திய அறக்கட்டளைகளும், 36.92 கோடி ரூபாய் மதிப்புள்ள 891 மாநில அறக்கட்டளைகளும் உள்ளன. 1.4.2020 முதல் 31.7.2021 முடிய 302 அறக்கட்டளை நிறுவனங்களுக்கு 41.93 இலட்சம் ரூபாயும் உதவித் தொகைகள், பரிசுகள் மற்றும் பதக்கங்கள் முதலியன வழங்கப்படுவதற்காக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் மேற்கொள்ளப்படும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத் தணிக்கை

49. அரசாணை (நிலை) எண் 260, நிதி (ஓய்வூதிய குறை தீர்ப்பு) துறை, நாள் 15.10.2015-ன்படி உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத் (Contributory Pension Scheme) தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதன் மூலம் பணியாளர்களின் சந்தா மற்றும் நிர்வாக பங்களிப்பின் சரித்தன்மை உறுதி செய்யப்படுகிறது. 1.4.2020 முதல் 31.7.2021 முடிய உள்ள காலத்தில் 2019-2020 ஆம் ஆண்டிற்கு 354 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 2020-2021 ஆம் ஆண்டிற்கு 49 ஊராட்சி ஒன்றியங்களின் உள்ளாட்சி அமைப்புப் பணியாளர்களின் பங்களிப்பு ஓய்வூதியக் கணக்குகளுக்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இதர உள்ளாட்சி அமைப்புகளான 14 மாநகராட்சிகள், 121 நகராட்சிகள் மற்றும் 464 பேரூராட்சி நிறுவனங்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட தரவுகளும் அதன் சரித்தன்மையும் தணிக்கைத் துறையினரால் சரிபார்க்கப்பட்டு தணிக்கையில் அங்கீகரித்து ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

50. i) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கென பிரத்யேக பயிற்சிப் பிரிவு துணை இயக்குநரின் தலைமையில் செயல்படும் வகையில் தோற்றுவிக்கப்பட்டுள்ள நேரடி நியமன உதவி ஆய்வர்கள் மற்றும் பணி மாறுதல் பணி நியமனம்மூலம் பதவி உயர்வு பெற்ற உதவி ஆய்வர்களுக்கு அடிப்படைப் பயிற்சி வழங்கப்படுகிறது. தணிக்கை தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு அனைத்து தணிக்கையாளர்களுக்கும் புத்தாக்க பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

[2021 செப்டம்பர் 13

ii) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறைக்கென தணிக்கைத் தகவல் மேலாண்மை முறைமையினை (AIMS) செயல்படுத்த நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மூன்று இலக்குகள் (Mile Stone) மென்பொருள் வடிவமைப்பு மற்றும் முன்னேற்றம், பயனர் ஏற்றுக்கொள்ளும் சோதனை, விடுபதிகை முடிவுற்று, தொடர் பயிற்சிகள் தணிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

கூட்டுறவு தணிக்கைத் துறை

51. சந்தானம் குழு மற்றும் நிருவாக சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரைகளின்படி கூட்டுறவு தணிக்கைத் துறையானது 17.6.1981 முதல் தனி துறையாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம் 1983-ன் 80-வது பிரிவின்படி பன்மாநில கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர, 14 நிர்வாக பதிவாளர்கள் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் சட்டபூர்வ தணிக்கையை மேற்கொள்வதே இத்துறையின் முக்கியமான பணியாகும்.

52. கீழ்க்காணும் நிர்வாகப் பதிவாளர்கள் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை கூட்டுறவு தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்கு உட்பட்டவையாகும்.

வ. எண்	நிர்வாகப் பதிவாளர்களின் விவரம்	கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை
1.	கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்	8453
2.	கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர்	1356
3.	தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர்	302
4.	தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்	210
5.	தலைமைச் செயல் அலுவலர், பனைப்பொருள் வளர்ச்சி வாரியம்	701

2021 செப்டம்பர் 13]

வ. எண்	நிர்வாகப் பதிவாளர்களின் விவரம்	கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை
6.	கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி)	720
7.	மீன் வளத் துறை இயக்குநர்	1381
8.	கால்நடைப் பராமரிப்பு மற்றும் கால்நடை மருத்துவப்பணிகள் ஆணையர்	109
9.	சர்க்கரைத் துறை ஆணையர்	17
10.	வேளாண்மைத் துறை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்)	1
11.	வேளாண் பொறியியல் மற்றும் சேவை கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர்	114
12.	பட்டு வளர்ச்சித் துறை இயக்குநர்	24
13.	சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை இயக்குநர்	125
14.	ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை இயக்குநர்	49
	மொத்தம்	**13562**

கூட்டுறவுத் தணிக்கை துறையின் செயல்பாட்டின் நோக்கம்

53. கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை தணிக்கை செய்து, அச்சங்கங்களின் நிதிநிலை அறிக்கைகள் முறையாக தயாரிக்கப்படுவதையும், அக்கணக்குகள் சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும் உறுதிப்படுத்துவது கூட்டுறவு தணிக்கைத் துறையின் முதன்மைப் பணியாக உள்ளது. மேலும், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் 1988, சங்கங்களின் துணை விதிகள் மற்றும் அரசு வழிகாட்டுதல்களின்படி செயல்படுவதை உறுதி செய்து, அரசின் நிதியுதவி எந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காகவே செலவிடப்பட்டு உள்ளதை உறுதி செய்கிறது.

[2021 செப்டம்பர் 13

பணியாளர் எண்ணிக்கை

54. 2842 பணியிடங்கள் கூட்டுறவு தணிக்கைத் துறையில் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு:

வ. எண்.	பணியிடம்	ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை
1	இயக்குநர்	1
2	கூடுதல் இயக்குநர்	3
3	இணை இயக்குநர்	7
4	துணை இயக்குநர்	16
5	உதவி இயக்குநர்	75
6	உதவி கணினி பொறியாளர்	1
7	கூட்டுறவு தணிக்கை அலுவலர்	679
8	முதுநிலை கூட்டுறவு தணிக்கையாளர்	746
9	இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர்	1110
10	சுருக்கெழுத்து தட்டச்சர்	5
11	இளநிலை உதவியாளர்	58
12	தட்டச்சர்	37
13	ஓட்டுநர்	10
14	பதிவறை எழுத்தர்	36
15	அலுவலக உதவியாளர்	41
16	இரவு காவலர்	17
	மொத்தம்	**2842**

நகர வங்கிகள் மற்றும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் உடன்நிகழ் தணிக்கை மேற்கொள்ளுதல்:

55. அனைத்து மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர கூட்டுறவு வங்கிகளின் சட்டபூர்வ தணிக்கை, பட்டயக் கணக்காளர்கள்

2021 செப்டம்பர் 13]

வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு தணிக்கைத் துறையைச் சேர்ந்த தணிக்கையாளர்களுக்கு மேற்குறிப்பிட்ட வங்கிகளின் உடன் நிகழ் தணிக்கைப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சட்டபூர்வ தணிக்கை மற்றும் தணிக்கைக் கட்டணம்

56. பிரதம கூட்டுறவுச் சங்கங்களின் சட்டபூர்வ தணிக்கை, 45 நாட்களுக்குள் முடிக்கப்படவேண்டும். தணிக்கை மேற்கொள்ளும் காலத்திற்கு தணிக்கைக் கட்டணம் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்படுகிறது.

57. அடிப்படை விதி 127-ன்படி அதிக அளவிலான வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பெரிய கூட்டுறவுச் சங்கங்களில், அதாவது தணிக்கைக்கு 45 மனித நாட்களுக்கு மேல் தேவைப்படும் நேர்வில் முழுநேர தணிக்கையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அரசாணை நிலை எண் 27, நிதி (கூட்டுறவு தணிக்கை)த் துறை, நாள் 12.2.2020-ன்படி இத்தணிக்கைக்கு கட்டணமாக 35 சதவீத சம்பளத் தொகை சங்கங்களிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

58. தணிக்கை கட்டணம் மற்றும் அடிப்படை விதி கட்டணம் வசூல் விவரம்

வருடம்	தணிக்கைக் கட்டணம் (ரூபாய் கோடியில்)	அ.வி. கட்டணம் (ரூபாய் கோடியில்)
2016-2017	*3.13*	*10.24*
2017-2018	*2.89*	*11.49*
2018-2019	*2.58*	*12.91*
2019-2020	*2.87*	*13.82*
2020-2021	*4.79*	*15.56*

59. தணிக்கை முன்னேற்ற நிலை

கடந்த ஐந்தாண்டுகளில் தணிக்கை முன்னேற்ற விவரம் பின்வருமாறு:-

வ. எண்	தணிக்கை வருடம்	மொத்த சங்கங்கள்	தணிக்கை முடிக்கப்பெற்றவை மற்றும் அறிக்கைகள் வழங்கப்பட்டவை	நிலுவை சங்கங்கள்
1	*2015-2016*	*14017*	*13583*	*434*
2	*2016-2017*	*14007*	*13551*	*456*
3	*2017-2018*	*13768*	*13335*	*433*
4	*2018-2019*	*13622*	*13085*	*537*
5	*2019-2020*	*13565*	*12449*	*1116*

2020-2021 ஆம் ஆண்டிற்கான மொத்தம் உள்ள 13,562 சங்கங்களில் 1480 கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை 31.3.2022-க்குள் முடிக்கப்படும். தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983 இன் பிரிவு 81-ன்கீழ் விசாரணையில் உள்ளவை, வணிக குற்றப் புலனாய்வுத் துறை விசாரணையில் உள்ளவை, நீதிமன்ற வழக்கு காரணமாக புத்தகங்கள் கிடைக்கப் பெறாதவை மற்றும் கணக்கு எழுதப்படாமல் உள்ளவை போன்ற காரணங்களினால் 2019-2020 ஆம் ஆண்டுவரை சில சங்கங்களின் தணிக்கை நிலுவையாக உள்ளது. இச்சங்கங்களின் தணிக்கையை முடிக்க சம்பந்தப்பட்ட நிருவாகத் துறை அலுவலர்களின் ஒருங்கிணைப்புடன் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

60. தனி அறிக்கைகள் (Special Reports)

தணிக்கையில் கையாடல், மோசடி, கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதி மீறல், இருப்புக் குறைவு ஆகிய கடுங்குறைகள் கண்டறியும்போது அனைத்து விவரங்களும் தனி அறிக்கைகள்மூலம் சம்பந்தப்பட்ட நிர்வாகப் பதிவாளருக்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ள உடன் தெரிவிக்கப்படுகிறது. அரசாணை எண் 267, நிதி (கூட்டுறவுத் தணிக்கை)த் துறை, நாள் 6.8.2018-ன்படி தனி அறிக்கைகள்மீது நிர்வாக பதிவாளர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை விவரம் 2017 2018 ஆம் ஆண்டுக்கு அறிக்கையாக அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2018-2019 ஆம் ஆண்டிலிருந்து நிர்வாக பதிவாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கை குறித்த விவரம் எதிர்நோக்கப்பட்டுள்ளது.

2021 செப்டம்பர் 13]

ஐந்து ஆண்டுகளுக்கான தனி அறிக்கைகள் விவரம் பின் வருமாறு:

வருடம்	தனி அறிக்கைகள் எண்ணிக்கை	தொகை (ரூபாய் கோடியில்)
2016-2017	357	42.90
2017-2018	569	59.57
2018-2019	609	65.08
2019-2020	544	47.95
2020-2021	506	94.63

துறையின் புதிய முயற்சிகள்

61. இத்துறையின் பணியிடங்கள், அரசாணையின்படி மறுசீரமைப்பு செய்யப்பட்டபின், துவக்க நிலை பணியிடமான இளநிலை கூட்டுறவுத் தணிக்கையாளர் பணியிடங்களில் காலியாக உள்ள 1000 பணியிடங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடிப் பணி நியமனம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தணிக்கையாளர்களின் திறன் மேம்பாட்டுப் பயிற்சி

62. தணிக்கையாளர்களின் திறமை மற்றும் தணிக்கையின் தரம் இவற்றை மேம்படுத்த பல்வேறு வகையான குறுகியகால பயிற்சிகளும், வருடந்தோறும் இரண்டு நாட்களுக்கு புத்தாக்கப் பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

தணிக்கைத் தகவல் மேலாண்மை முறைமை திட்டம் (AIMS)

63. தணிக்கைத் தகவல் மேலாண்மை முறைமை என்பது இணையம்மூலம் இயங்கக்கூடிய மென்பொருளாகும். இதன் மூலமாக தணிக்கை தொடர்பான தகவல்களான தணிக்கைத் திட்டம் ஒப்புதல் வழங்குதல், தணிக்கையாளர்களின் நாட்குறிப்புகள் சமர்ப்பித்தல், தணிக்கை முன்னேற்றம், தணிக்கை சான்று வழங்குதல், நிதிநிலை அறிக்கைகளை பதிவேற்றம் செய்தல், தணிக்கைக் கட்டணம், வசூல் விவரங்கள், தணிக்கையில் கண்டறியப்படும் கடுங்குறைகள் தொடர்பான தனி அறிக்கை விவரங்கள் ஆகியவற்றை உடனுக்குடன் தணிக்கைத் தகவல் மேலாண்மை முறைமை திட்ட மென்பொருளில் பதிவேற்றம் செய்யப்படுகின்றன.

[2021 செப்டம்பர் 13

மாநில அரசு தணிக்கைத் துறை

64. அரசு வணிகத் திட்டங்கள் தணிக்கைத் துறை 1969 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு, அரசாணை எண் 598, நிதி (உள்ளாட்சி நிதி)த் துறை, நாள் 3-8-1992-ன்படி நடைமுறையில் இருந்த உள்ளாட்சி நிதித் தணிக்கை மற்றும் அரசு வணிகத் திட்டங்கள் துறைகளின் பணிகள் திருத்தி அமைக்கப்பட்டு அரசுத் துறைகளிலும் உட்தணிக்கை மேற்கொள்ளும் வகையில் முதன்மை உட்தணிக்கையாளர் சட்டபூர்வ வாரியங்களின் முதன்மைத் தணிக்கையாளராக செயல்பட்டு வந்தனர். இத்துறையின் பணி மற்றும் கடமைகள் திருத்தியமைக்கப்பட்டதைத் தொடர்ந்து தனிச் சட்டங்களின்கீழ் உருவாக்கப்பட்ட மற்றும் உருவாக்கப்படாத நிறுவனங்களின் தணிக்கை, அரசுத் துறைகளின் உட்தணிக்கை மற்றும் அரசின் நிதியுதவி பெறும் பல்வேறு அரசுத் துறை நிறுவனங்களின் தணிக்கை, வாரியங்களின் திட்ட தணிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருவதை கருத்திற் கொண்டு உட்தணிக்கை மற்றும் சட்டபூர்வ வாரியங்களின் தணிக்கைத் துறையின் பெயர் 'மாநில அரசுத் தணிக்கைத் துறை' என அரசாணை எண் 264 நிதி (உள்ளாட்சி நிதி)த் துறை, நாள் 16-8-2019-ன் வழி மாற்றம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகின்றது.

65. தணிக்கையின் செயற்பரப்பு

- தணிக்கை நிறுவனங்களின் அனைத்து வரவு மற்றும் செலவினங்களை முறையான ஆய்வு மற்றும் தணிக்கை மேற்கொள்ளுதல்.

- தணிக்கை நிறுவனங்களில் அனைத்து நிதி பரிவர்த்தனைகள் மற்றும் நிலையான ஒழுங்குமுறைகள் மற்றும் உரிய விதிமுறைகள் சரியாக பின்பற்றுப்படுவது தொடர்பான கண்காணிப்புகளை உறுதிபடுத்துதல்.

- வாரியங்களில் பணிபுரியும் பணியாளர்களின் ஓய்வூதியப் பயன்கள் (ம) பொது வருங்கால வைப்பு நிதி / சிறப்பு சேமநல நிதித் திட்டம் இறுதி இருப்புத் தொகைகள் ஆகியவற்றினை உறுதி செய்து தணிக்கைச் சான்று வழங்குதல்.

- வாரியங்கள் / நிறுவனங்களின் தணிக்கை தடைகளில் உள்ள கடுங்குறைபாடுகள் (Serious irregularities) குறித்த

2021 செப்டம்பர் 13]

அறிக்கையினை தொடர்ந்து கண்காணிக்க பொது நிறுவனங்கள் குழுவில் இறுதித் தீர்மானம் நிறைவேற்றுதல்.

66. அனுமதிக்கப்பட்ட பணியிட விபரம்

வ. எண்	பதவி	அனுமதிக்கப்பட்ட பணியிடம்
1.	இயக்குநர்	01
2.	இணை இயக்குநர்	01
3.	துணை இயக்குநர்	06
4.	உதவி இயக்குநர்	47
5.	ஆய்வாளர்	90
6.	துணை ஆய்வாளர்	75
7.	கணினி பகுப்பாய்நர்	01
8.	உதவி ஆய்வாளர்	557
9.	இளநிலை உதவியாளர்	33
10.	தட்டச்சர்	36
11.	சுருக்கெழுத்து தட்டச்சர் தரம் I	01
12.	சுருக்கெழுத்து தட்டச்சர் தரம் III	01
13.	பதிவுரு எழுத்தர்	05
14.	ஓட்டுநர்	02
15.	தொலைபேசி இயக்குபவர்	01
16.	அலுவலக உதவியாளர்	43
17.	காவலர்	03
18.	தூய்மைப் பணியாளர்	01
	மொத்தம்	**904**

தணிக்கைக்குட்பட்ட நிறுவனங்கள்

67. மாநில அரசு தணிக்கைத் துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்ட நிறுவனங்களின் விவரம்:

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	எண்ணிக்கை
1.	சட்டபூர்வ நிறுவனங்கள்	06
2.	நீதித் துறை கட்டுப்பாட்டிற்குட்பட்டவை (நிர்வாக பேராட்சியர் (AG), பொறுப்பு சொத்தாட்சியர் (OL), நொடித்தோர் சொத்தாட்சியர் (OL) போன்றவை)	06
3.	வேளாண்மைத் துறை (அனைத்து மாவட்டங்களில் உள்ள முதன்மை கிடங்குகள் மற்றும் துணை கிடங்குகள், விதைப் பண்ணைகள் போன்றவை)	1092
4.	அரசு நிறுவனங்கள் (தமிழ்நாடு திரைப்பட பிரிவு, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தணிக்கை போன்றவை)	1138
5.	அரசு உதவி பெறும் நிறுவனங்கள் (உலக தமிழாராய்ச்சி நிறுவனம், பெரியார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம் போன்றவை)	753
6.	ஆதி திராவிட பழங்குடியினர் கல்வி உதவித் தொகை தணிக்கை	2572
7.	எடையளவு நிறுவனங்கள் (அனைத்து மாவட்டங்களிலுள்ள முத்திரை ஆய்வாளர் மற்றும் முத்திரை உதவி ஆய்வாளர் அலுவலகங்கள்)	338
8.	அரசு உதவி பெறும் தொழில்நுட்ப பயிலகங்கள்/பொறியியல் கல்லூரிகள்	37
9.	புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத் தணிக்கை (பள்ளி செல்லும்/ பள்ளி செல்லா மையங்கள்)	97397
	மொத்தம்	**103339**

2021 செப்டம்பர் 13]

மேற்காணும் தணிக்கை நிறுவனங்களில் உள்ள கீழ்க்கண்ட முக்கியமான நிறுவனங்களுக்கும் இத்துறையால் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது:

1. தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
2. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்
3. சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்
4. தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்
5. கதர் கிராமத் தொழில் வாரியம்
6. முதலமைச்சரின் உழவர் பாதுகாப்பு (சமூகப் பாதுகாப்பு) திட்டம்
7. நாட்டுப்புற கலைஞர் நல வாரியம்
8. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்
9. தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் நல வாரியம்
10. 15 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்கள்
11. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கல்வி உதவித் தொகை திட்டம்
12. அண்ணா மேலாண்மை நிறுவனம்
13. மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகுகள்
14. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
15. ஆசிரியர் தேர்வு வாரியம்
16. இதர நிறுவனங்கள்
17. நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களின் நாட்டு நலப் பணித் திட்டம்
18. தமிழ்நாடு அரசு மருத்துவ உதவித் திட்டம்
19. குடும்ப பாதுகாப்பு நல நிதி
20. மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதி

[2021 செப்டம்பர் 13

21. அரசு உதவி பெறும் தொழில்நுட்ப பயிலகங்கள் (ம) பொறியியல் கல்லூரிகள்

22. அனைத்து அரசு துறைகளின் ஊதிய நிர்ணயத் தணிக்கை

(வணிக வரித் துறை/பதிவுத் துறை (ம) போக்குவரத்து துறையின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது)

23. பாராளுமன்ற/சட்டமன்ற தேர்தல் செலவினத் தொகை

மேற்கண்ட சட்டபூர்வ வாரியங்களின் ஆண்டுத் தணிக்கை உடனிகழ் தணிக்கையாக மேற்கொள்ளப்பட்டு, அத்தணிக்கை அறிக்கைகள், நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் வெளியிடப்படுவதுடன் அவற்றிலுள்ள பல்வேறு கடுங்குறைபாடுகள் குறித்த விவரங்கள் அரசுக்கும் தமிழ்நாடு சட்டசபையின் பொது நிறுவனங்கள் குழுவின் கவனத்திற்கும் கொண்டு செல்லப்படுகின்றன.

68. தணிக்கை நிலை விவரம் (30-6-2021 அன்றைய நிலையில்)

வ. எண்	தணிக்கை நிறுவனங்களின் பெயர்	தணிக்கை முடிக்கப்பட்ட ஆண்டு	தணிக்கை நடப்பில் உள்ள ஆண்டு	பத்திகளின் எண்ணிக்கை	தொகை (இலட்சத்தில்)
1.	தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்	2017-2018	2018-2019	500	1230185.51
2.	தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்	2018-2019	2019-2020	641	57580.61
3.	சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம்	2018-2019	2019-2020	539	87116.90
4.	தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்	2017-2018	2019-2020	1020	35236.39
5.	தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்	2017-2018	2018-2019 (ஆண்டு கணக்கு இதுவரை பெறப்பட வில்லை)	1736	26144.80

2021 செப்டம்பர் 13]

வ. எண்	தணிக்கை நிறுவனங்களின் பெயர்	தணிக்கை முடிக்கப்பட்ட ஆண்டு	தணிக்கை நடப்பில் உள்ள ஆண்டு	பத்திகளின் எண்ணிக்கை	தொகை (இலட்சத்தில்)
6.	தமிழ்நாடு வக்ஃபு வாரியம்	2014-2015	2015-2016 - 2019-2020 முடிய	1435	3823.72
7.	நிர்வாக பேராட்சியர்	2017-2018	2018-2019	938	424.76
8.	பொறுப்பு சொத்தாட்சியர்	2018-2019	2019-2020	1729	6243.85
9.	நொடித்தோர் சொத்தாட்சியர்	2017-2018	2018-2019	1297	3215.08
10.	சட்டப்பூர்வ கலைப்பாளர்	2014-2015	2015-2016 (முதல் அரையாண்டு) - 2019-2020 முடிய	2153	133127.34
11.	எடையளவு நிறுவனங்கள்	2018-2019	2019-2020	13702	29917.80
12.	அரசு நிறுவனங்கள்	2018-2019	2019-2020	74385	133438.43
13.	அரசு உதவி பெறும் நிறுவனங்கள்	2018-2019	2019-2020	19406	305712.06
14.	அரசு உதவி பெறும் தொழில்நுட்ப பயிலகங்கள் மற்றும் பொறியியல் கல்லூரிகள்	2018-2019	2019-2020	5498	14132.53
15.	புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்	2016-2017	2017-2018 - 2020-2021 முடிய	173123	46403.56

[2021 செப்டம்பர் 13

தணிக்கைச் சான்று

69. மானியம் பெறும் நிறுவனங்களுக்கு மானியத் தகுதிச் சான்று இத்துறையால் அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், தணிக்கைக்கு உட்பட்ட வாரியங்களில் பணியாற்றும் பணியாளர்களின் ஓய்வூதியக் கருத்துருக்கள் மற்றும் வருங்கால வைப்பு நிதி கணக்கு முடிப்புகளுக்கு தணிக்கைச் சான்று இத்துறையால் அளிக்கப்பட்டு வருகிறது.

இதர பணிகள்

70. அரசின் குறிப்பான ஆணையின்படி தற்போது 19 அரசுத் துறைகளின் உட்தணிக்கைப் பணிகள் இத்துறையால் மேற்பார்வை செய்யப்பட்டு தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

1. மருத்துவக் கல்வித் துறை
2. மருத்துவம் மற்றும் ஊரக நலத் துறை
3. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத் துறை
4. வேளாண்மைத் துறை
5. வேளாண்மைப் பொறியியல் துறை
6. புவியியல் சுரங்கத்துறை
7. வருவாய் நிர்வாகத் துறை
8. போக்குவரத்துத் துறை
9. கல்லூரி கல்வித் துறை
10. தொழில்நுட்ப கல்வித் துறை
11. சிறை மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை
12. காவல் துறை
13. சமூக நலத் துறை
14. அகதிகள் மறுவாழ்வுத் துறை
15. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை
16. வனத் துறை
17. எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை

2021 செப்டம்பர் 13]

18. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை

19. தீயணைப்பு மற்றும் மீட்பு பணித் துறை

தணிக்கை அறிக்கை மீதான தொடர் நடவடிக்கை

71. தணிக்கையின் போது காணப்படும் கடுங்குறைபாடுகள் கொண்ட பத்திகளின் சுருக்கம் அவ்வப்போது நடவடிக்கைக்காக அந்தந்த துறைத் தலைமைக்கும் மற்றும் அரசின் துறைச் செயலாளரின் கவனத்திற்கும் அனுப்பி வைக்கப்படுகின்றது.

தணிக்கைக் கட்டணம்

72. உண்மைச் செலவினம் அல்லது சராசரி செலவுகளின் அடிப்படையில் தணிக்கைக் கட்டணத்திற்கான கேட்பு எழுப்பப்படுகிறது. 2020-2021 ஆம் ஆண்டிற்கு ரூ.213.61 இலட்சம் தணிக்கை கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

தணிக்கைத் தடைகள் நீக்கம் சார்பான தொகை பிடித்தம்

73. பல்வேறு தணிக்கை நிறுவனங்களின் தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட அரசுக்கு வருவாய் இழப்புகளை உருவாக்கும் இனங்களின் 4581 தணிக்கைத் தடைகள் நீக்கம் செய்யப்பட்டு ரூ.318.28 இலட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

தணிக்கையாளர்களின் திறன் மேம்படுத்துதல்

74. இத்துறையின் தணிக்கையாளர்களின் திறமை மற்றும் தணிக்கையின் தரம் இவற்றை மேம்படுத்த அரசால் உருவாக்கப்பட்ட பயிற்சி மையத்தில் தணிக்கை நடைமுறை குறித்து மூன்று நாட்களுக்கு தணிக்கையாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

75. மின்ஆளுமை முயற்சிகள்

- *இத்துறைக்கான பிரத்யேகமான வலைத்தளம் உருவாக்கப்பட்டு வருகிறது.*
- *மின்னணுமயமாக்கும் முயற்சியின் முழுப்பயன்கள் அடைந்திடும் நோக்கில் இத்துறைக்கென தரவு மேலாண்மை மற்றும் பகுப்பாய்வு அலகு தோற்றுவிக்கப்படவுள்ளது. முதற்கட்டமாக இத்துறையின் 25 பணியாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.*

[2021 செப்டம்பர் 13


பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை

76. பால் கூட்டுறவுச் சங்கங்களின் சட்டபூர்வ தணிக்கைப் பணியினை மேற்கொள்ள, பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை 1987 ஆம் ஆண்டு தனித் துறையாக உருவாக்கப்பட்டது.

77. கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வந்த இத்துறை அரசாணை (நிலை) எண் 370, நிதி (கூட்டுறவு தணிக்கை)த் துறை, நாள் 22-11-2019 வாயிலாக இத்துறைக்கென அங்கீகரிக்கப்பட்ட பணிநிலைத் திறனான 333 பதவிகளைக் கொண்டு நிதித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் தனித் துறையாக செயல்பட அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

பால் கூட்டுறவுச் சங்கங்களின் அமைப்பு

78. தமிழ்நாட்டில் பால் கூட்டுறவுச் சங்கங்கள் மூன்று அடுக்கு அமைப்பாக, மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம், மாவட்ட அளவிலான மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் (25), பிரதம அளவில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் (10335) மற்றும் பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் (47) என செயல்பட்டு வருகின்றன.



2021 செப்டம்பர் 13]

பால் கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் நோக்கம்

79. பால் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை தணிக்கை செய்தல், அச்சங்கங்களின் இருப்புநிலைக் குறிப்பு மற்றும் இலாப நட்டக் கணக்குகள் முறையாக தயாரிக்கப்படுவதையும், அக்கணக்குகள் சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவதும் பால் கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் முதன்மைப் பணியாக உள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், விதிகள் மற்றும் நடைமுறைகளின்படி செயல்படுவதை தணிக்கை செய்வதனால் சங்க உறுப்பினர்கள் அறிந்து கொள்ளும் வகையில் இத்துறை பொறுப்புடைமையுடன் இயங்கி வருகிறது. மேலும், அரசின் நிதியுதவி எந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காகவே செலவிடப்பட்டு உறுப்பினர்களும், சமுதாயமும் முழுமையாகப் பயன் அடைந்துள்ளனர் என்பதையும் உறுதி செய்கிறது.

அங்கீகரிக்கப்பட்ட பணிநிலைத் திறன்

80. இத்துறைக்கு அனுமதிக்கப்பட்ட 333 பணியிடங்களில் கூட்டுறவுத் துறையிலிருந்து 297 பணியிடங்களும், ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறையிலிருந்து 2 பணியிடங்களும் மாற்றுப்பணியில் நிரப்பப்பட்டுள்ளன.

பணியிடத்தின் பெயர்	ஒப்பளிக்கப்பட்ட பணிநிலைத் திறன் எண்ணிக்கை
இயக்குநர்	1
இணை இயக்குநர்	1
துணை இயக்குநர் (கணக்கு)	1
மண்டல துணை இயக்குநர்	5
கண்காணிப்பாளர்	1
உதவி இயக்குநர்	59
முதுநிலை கூட்டுறவு தணிக்கையாளர்	224

TRUTH ALONE TRIUMPHS

பணியிடத்தின் பெயர்	ஒப்பளிக்கப்பட்ட பணிநிலைத் திறன் எண்ணிக்கை
இளநிலை கூட்டுறவு தணிக்கையாளர்	7
அமைச்சுப் பணி	9
பொது சார்நிலைப் பணி	8
அடிப்படை பணி	17
மொத்தம்	**333**

பணிநிலைத் திறன் சீரமைப்பு

81. பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை நிரந்தர பணியமைப்புடன் தனித் துறையாக இயங்க தற்போதுள்ள பணியாளர்களின் பணிநிலைத் திறனை மாற்றி சீரமைத்து மற்றும் சிறப்பு விதிகள் உருவாக்கவும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தணிக்கை முன்னேற்றம்

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்

82. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் 2019-2020 தணிக்கையாண்டிற்கான தணிக்கை 10 அலகுகளிலும் நிறைவு பெற்று தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2020-2021 ஆம் ஆண்டிற்கான தணிக்கைப் பணி தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் 9 அலகுகளில் துவங்கப்பட்டுள்ளது. தணிக்கைக்கு தேவையான நிதிநிலை அறிக்கைகள், பொதுப்பேரேடு மற்றும் படிவம்-34-ல் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை வழங்கிட தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிர்வாக இயக்குநரிடம் கோரப்பட்டுள்ளது. சட்டபூர்வ காலக் கெடுவிற்குள் இணையத்தின் 2020-2021 ஆம் ஆண்டு இறுதித் தணிக்கையினை முடிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள்

83. 2018-2019 ஆம் ஆண்டில் 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களிலும் தணிக்கை நிறைவு பெற்று தணிக்கைச்

2021 செப்டம்பர் 13]

சான்று வழங்கப்பட்டுள்ளது. புதிதாக துவங்கப்பட்ட திருப்பூர் மற்றும் நாமக்கல் ஒன்றியங்களின் தணிக்கை நடைபெற்று வருகிறது.

2019-2020 ஆம் ஆண்டில் 20 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் தணிக்கை நிறைவு பெற்று தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள நாமக்கல், தருமபுரி, தேனி, திருப்பூர், திருவண்ணாமலை ஆகிய புதிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் தணிக்கை பணி நடைபெற்று வருகிறது. திருப்பூர் ஒன்றியத்தில் கணக்குப் புத்தகங்கள் முழுமையான வடிவத்தில் வழங்கப்படாததால் தணிக்கை தொடங்கப்படவில்லை.

2020-2021 ஆம் ஆண்டிற்கு 20 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் தணிக்கை துவங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது.

பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை

84. 2019-2020 ஆம் ஆண்டில் மொத்தமுள்ள 10081 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் 9662 சங்கங்களில் தணிக்கை முடிக்கப்பட்டு, 8895 சங்கங்களுக்கு தணிக்கைச் சான்று வழங்கப்பட்டுள்ளது. 767 சங்கங்களில் தணிக்கைச் சான்று வழங்கும் பணி முன்னேற்றத்தில் உள்ளது.

2020-2021 ஆம் ஆண்டில் மொத்தமுள்ள 10,382 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் 929 சங்கங்களில் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளின் தணிக்கைப் பணி முன்னேற்ற விவரம்:-

வ. எண்	தணிக்கை ஆண்டு	மொத்தமுள்ள சங்கங்கள்	தணிக்கை முடிக்கப் -பட்டவை	தணிக்கைச் சான்று வழங்கப் -பட்டவை	தணிக்கை நிலுவை
1	2015-2016	10785	10785	10785	-
2	2016-2017	10701	10701	10701	-
3	2017-2018	9947	9947	9947	-

வ. எண்	தணிக்கை ஆண்டு	மொத்தமுள்ள சங்கங்கள்	தணிக்கை முடிக்கப் -பட்டவை	தணிக்கைச் சான்று வழங்கப் -பட்டவை	தணிக்கை நிலுவை
4	*2018-2019*	*9857*	*9817*	*9817*	*40 (புத்தகங்கள் எழுதப்பட வில்லை)*
5	*2019-2020*	*10081*	*9662*	*8895*	*419 (புத்தகங்கள் எழுதப்பட வில்லை)*

தணிக்கைக் கட்டணம் மற்றும் அடிப்படை விதிக் கட்டணம்

85. 2020-2021 ஆம் நிதியாண்டில் தணிக்கைக் கட்டணமாக 97.85 இலட்சமும் மற்றும் அடிப்படை விதிக் கட்டணமாக ரூ.145.65 இலட்சமும் பால் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வசூலிக்கப்பட்டு மொத்தம் ரூ.243.51 இலட்சம் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் (ஜூலை 2021 வரை) தணிக்கைக் கட்டணம் ரூ.18.55 இலட்சமும், அடிப்படை விதிக் கட்டணம் ரூ.45.99 இலட்சமும் பால் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வசூலிக்கப்பட்டு மொத்தம் ரூ.64.54 இலட்சம் அரசுக்கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

தனியறிக்கை

86. தணிக்கையில் காணப்படும் கடுங்குறைகள் மற்றும் நிதி சார்ந்த அனைத்து விவரங்களும் தனியறிக்கைகள்மூலம் இயக்குநர், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை மற்றும் பால்வளத் துறை துணைப் பதிவாளர்களுக்கு உரிய நடவடிக்கைக்காக தொடர்புறுத்தப்படுகிறது.

கடந்த 5 ஆண்டுகளில் தனியறிக்கைகளின் முன்னேற்ற விவரங்கள் பின்வருமாறு:

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்

(ரூபாய் இலட்சத்தில்)

தணிக்கையாண்டு	தனியறிக்கைகளின் எண்ணிக்கை	தொகை
2015-2016	1	48.42
2016-2017	1	8.82
2017-2018	1	239.10
2018-2019	6	3674.44
2019-2020	9	12076.06
மொத்தம்	**18**	**16046.84**

மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

தணிக்கையாண்டு	தனியறிக்கைகளின் எண்ணிக்கை	தொகை
2015-2016	6	287.21
2016-2017	8	234.39
2017-2018	10	618.20
2018-2019	20	8300.68
2019-2020	20	10028.12
மொத்தம்	**64**	**19468.60**

தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

தணிக்கையாண்டு	தனியறிக்கைகளின் எண்ணிக்கை	தொகை
2015-2016	284	438.76
2016-2017	400	1312.33
2017-2018	279	878.45
2018-2019	310	397.51
2019-2020	121	85.04
மொத்தம்	**1394**	**3112.09**

பயிற்சி மற்றும் மேம்பாடு

87. பால் கூட்டுறவு தணிக்கைத் துறையின் தணிக்கையாளர்களுக்கு, துறை சார்ந்த அறிவு மற்றும் திறனை மேம்படுத்துவதற்காக அரசின் நிதியுதவியுடன் ஒவ்வோராண்டும் புத்தாக்கப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

துறையின் புதிய முயற்சிகள்

88. பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை சிறப்பாக செயல்படும் பொருட்டு பணிநிலைத் திறன் மறுசீரமைப்பு, பணியிடங்களுக்கு சிறப்பு விதிகள் ஏற்படுத்துதல், தணிக்கைக் கட்டணத்தை திருத்தியமைத்தல் மற்றும் தணிக்கையாளர்களின் பயன்பாட்டிற்கு தணிக்கை கையேடு தயாரித்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறுசேமிப்புத் துறை

89. அஞ்சலகங்களில் செயல்படுத்தப்படும் சேமிப்பு திட்டங்கள் சிறுசேமிப்பு திட்டங்கள் ஆகும். மாநிலத்தில் திரட்டப்படும் சிறுசேமிப்பு முதலீடுகளின் நிகர வசூலினை அந்த மாநிலத்திற்கே நீண்டகால கடனாக ஒன்றிய அரசால் வழங்கப்படுகிறது. இத்தகைய கடன்களின் அதிக வட்டி விகிதம் காரணமாக, தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று, சிறுசேமிப்புக் கடன் பெறுவதிலிருந்து மாநிலத்திற்கு 2016-2017 ஆம் ஆண்டு முதல் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

சிறுசேமிப்புத் திட்டங்கள்

90. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரின் தேவைகளுக்கு ஏற்றவகையில், பலவிதமான சிறுசேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. சிறுசேமிப்புத் திட்டங்களின் வட்டி விகிதத்தினை ஒவ்வொரு காலாண்டிற்கும் மாற்றியமைத்து மத்திய அரசு அறிவிப்பினை வெளியிடுகிறது.

91. தற்போது 1.4.2021 முதல் நடைமுறையில் உள்ள சிறுசேமிப்புத் திட்டங்களின் வட்டி விகிதங்கள் பின்வருமாறு. இத்தகவல்கள் யாவும் தற்போது சிறுசேமிப்புத் துறையின் இணையதளமான (www.tnsmallsavings.org)-ல் வெளியிடப்பட்டு அவ்வப்போது மாற்றங்களும் வெளியிடப்படுகின்றன.:-

2021 செப்டம்பர் 13]

தொடர் எண்	திட்ட விவரம்	01.04.2021 முதல் 30.09.2021 முடிய வட்டி விகிதங்கள்	வட்டி கூடுதல் கால இடைவெளி
1	அஞ்சலக சேமிப்பு கணக்கு (POSA)	4.0	ஆண்டுக்கு ஒருமுறை
2	அஞ்சலக கால வைப்பு நிதி		
(அ)	1 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD)	5.5	காலாண்டுக்கு ஒருமுறை
(ஆ)	2 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD)	5.5	காலாண்டுக்கு ஒருமுறை
(இ)	3 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD)	5.5	காலாண்டுக்கு ஒருமுறை
(ஈ)	5 ஆண்டு அஞ்சலக கால வைப்பு நிதி (POTD)	6.7	காலாண்டுக்கு ஒருமுறை
3	அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் (PORD - 5 ஆண்டுகள்)	5.8	காலாண்டுக்கு ஒருமுறை
4	மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் (SCSS-5 ஆண்டுகள்)	7.4	காலாண்டுக்கு ஒருமுறை
5	அஞ்சலக மாதாந்திர வருவாய் திட்டம் (POMIS)	6.6 (5 ஆண்டுகள்)	மாதத்திற்கு ஒருமுறை
6	தேசிய சேமிப்புப் பத்திரம் NSC VIII-வது வெளியீடு	6.8 (5 ஆண்டுகள்)	ஆண்டுக்கு ஒருமுறை
7	பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் / பொன் மகன் பொது வைப்பு நிதி (PPF-15 ஆண்டுகள்)	7.1 (ஒரு நிதியாண்டில் அதிக பட்சம் ரூ.1.5 இலட்சம் முதலீடு செய்யலாம்)	ஆண்டுக்கு ஒருமுறை
8	கிஸான் விகாஸ் பத்திரம் (KVP)	6.9 (124 மாதங்களில் முதிர்வடையும்)	ஆண்டுக்கு ஒருமுறை
9	செல்வ மகள் சேமிப்புத் திட்டம் (சுகன்யா சம்ரிதி கணக்கு வைப்புத் திட்டம்)	7.6	ஆண்டுக்கு ஒருமுறை

சிறுசேமிப்பு வசூல் விவரங்கள்

92. சிறுசேமிப்புத் திட்டங்களின் வாயிலாக தமிழகத்தில் 2016-2017 முதல் 2020-2021 வரையிலான நிதியாண்டுகளில் தமிழகத்தில் திரட்டப்பட்ட நிதி வசூல் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

ரூபாய் கோடியில்

வ. எண்	ஆண்டு	நிகர இலக்கு	மொத்த வசூல்	முதிர்வு மற்றும் திரும்பப் பெறப்பட்ட தொகை	நிகர வசூல்
1	2016–17	--	20737.29	17227.19	3510.10
2	2017-18	--	25257.16	17301.21	7955.95
3	2018-19	--	31923.58	19511.08	12412.50
4	2019-20	--	41195.23	23572.59	17622.64
5	2020-21	--	41478.48	27421.02	14057.46

முகவரமைப்பு

93. சிறுசேமிப்புத் தொகையை திரட்டுவதற்காக மாநிலம் முழுவதும் முகவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இதில் மகளிர் முகவர் (MPKBY) திட்டத்தின்கீழ் மட்டும் அஞ்சலக தொடர் வைப்புத் திட்டத்திற்கு (PORD) முன்னுரிமை அளித்து மகளிர் மட்டுமே சிறுசேமிப்பு முகவர்களாக நியமனம் செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு முழுவதும் தற்பொழுது அதாவது 30-6-2021 வரை, மொத்தம் 27,499 பதிவு பெற்ற முகவர்கள் பணியாற்றி வருகின்றனர். அந்த விவரங்கள் பின்வருமாறு:-

வ. எண்	முகவர்களின் வகை	மொத்த முகவர்களின் எண்ணிக்கை
1	நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டம் (SAS)	7,060
2	மகளிர் முகவர் திட்டம் (MPKBY)	20,439
	மொத்தம்	**27,499**

2021 செப்டம்பர் 13]

வெகுமதிகள்

*94. சிறுசேமிப்புத் திட்டங்களின்கீழ் முகவர்கள் மூலமாக திரட்டப்படும் முதலீடுகளுக்கு ஒன்றிய அரசு முகவர்களுக்கு தரகுத் தொகை வழங்குகிறது. சிறுசேமிப்பு முகவர்களை ஊக்குவிக்கும் வகையில் சிறுசேமிப்பில் சிறந்து விளங்கும் மகளிர் (*MPKBY*) முகவர்களுக்கு ஊராட்சி ஒன்றியம், மாவட்டம் மற்றும் மாநில அளவிலும் நிலைமுகவர்களுக்கு (*SAS*) மாவட்டம் மற்றும் மாநில அளவிலும் ஒவ்வோராண்டும் தமிழ்நாடு அரசு ரொக்கப் பரிசுகள் மற்றும் கேடயங்கள் வழங்கி வருகின்றன.*

*95. தமிழகமெங்கும் சிக்கனம் மற்றும் சிறுசேமிப்புத் திட்டங்களில் சேமித்தல் ஆகிய இரண்டு பழக்கங்களை ஊக்கப்படுத்துவதிலும், சிறுசேமிப்பு முதலீட்டாளர்கள் மற்றும் முகவர்களின் குறைகளை, இணையதளம் (*www.tnsmallsavings.org*) மூலமாக களைவதிலும், சிறுசேமிப்புத் துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. ஒவ்வோராண்டும் உலக சிக்கன நாள் விழாவின்போதும், மாணாக்கர்களிடையே சிறுசேமிப்பு தொடர்பான கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, நடனப் போட்டி மற்றும் நாடகப் போட்டிகள் நடத்தப்பட்டு தெரிவு செய்யப்பட்ட மாணாக்கர்களுக்கு தமிழ்நாடு சிறுசேமிப்புத் துறைமூலம் பரிசு அளிக்கப்படுகின்றது.*

96. கடந்த நிதியாண்டுகளான 2017-2018 முதல் 2021-2022 முடிய ஒவ்வொரு ஆண்டும் ரூ.3.30 இலட்சம் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

விளம்பரம்

97. சிறுசேமிப்புத் துறை, சென்னை மற்றும் மாவட்டங்களில் நடத்தப்படும் பொருட்காட்சிகளில் கலந்துகொண்டு, சிறுசேமிப்பு அரங்கு அமைத்தும், பொது மக்களுக்கு துண்டு பிரசுரங்கள் வழங்கியும் விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றது.

98. கடந்த ஒவ்வொரு நிதியாண்டுகளிலும், அரசால், ரூபாய் 10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பல்வேறு கிராமங்களில் ஒவ்வோராண்டும் 250 நாடகங்கள் நடத்தப்பட்டன.

தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் (TNIDB)

99. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு சட்டம் 2012-ன்கீழ் திட்டங்களைக் கண்டறிதல், கருத்துருவாக்கல்,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2021 செப்டம்பர் 13

முன்னுரிமை அளித்தல் மாநிலத்தில் செயல்படுவதற்கான பணிகளை மேற்கொள்ள சட்டரீதியான வழிவகைகளை உருவாக்குகிறது. இச்சட்டம், உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் செயல்படுத்தக்கூடிய உள்கட்டமைப்பு திட்டங்களுக்கான திட்ட தயாரிப்பு, கட்டமைப்பு, நிதியுதவி, செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்கான உகந்த சூழலை ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு சட்டம் 2012 விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள், அரசு முகவரமைப்புகள் செயல்படுத்துகிற 500 கோடி ரூபாய் மதிப்பிற்கு மேற்பட்ட அனைத்துத் திட்டங்களுக்கும் மற்றும் 10 கோடி ரூபாய் மதிப்பிற்கு மேற்பட்ட அனைத்து அரசு-தனியார் பங்கேற்புத் திட்டங்களுக்கும் பொருந்தும். தமிழ்நாடு உள்கட்டமைப்பு விதிகள் 2012 சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட நிதிகளை நிருவகிக்கவும், அதிலிருந்து திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கவும் வழிமுறைகளை உருவாக்குகிறது. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரிய ஒழுங்குமுறைகள் 2013-ன்கீழ் வாரியம் செயல்படுவதற்கான நடைமுறைகள் மற்றும் திட்ட ஆவணங்களுக்கு ஒப்புதல் அளிப்பதற்கான வழிமுறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு சட்டம் 2012-ன்கீழ் தோற்றுவிக்கப்பட்ட இவ்வாரியம் தமிழ்நாட்டில் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக தோற்றுவிக்கப்பட்ட முன்னோடி முகமையாகும். இவ்வாரியம் மாநிலத்தில் உட்கட்டமைப்பு வளர்ச்சி நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதுடன், பொதுத் துறைகள் வாயிலாகவும் மற்றும் பொது-தனியர் பங்களிப்பு முறையின் வாயிலாகவும் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு வகை செய்கிறது.

- இவ்வாரியத்தின் தலைவராக முதலமைச்சரும் (அலுவல் வழி) மற்றும் துணைத் தலைவராக நிதி அமைச்சரும் (அலுவல் வழி) இருப்பர். இவ்வாரியத்தில் தலைமைச் செயலர் தலைமையில் நிர்வாகக் குழுவும், நிதித் துறை செயலர் தலைமையில் துணைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியச் சட்டம் 2012-ன்கீழ் திட்ட தயாரிப்பு நிதி மற்றும் தமிழ்நாடு

2021 செப்டம்பர் 13]

உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி ஆகியவை திட்டங்கள் செயல்படுத்துவதை எளிதாக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளன.

- தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டங்களின் வடிவமைப்பு, மேம்பாடு, செயல்பாடு, நிர்வாகம், மேலாண்மை ஆகியவற்றை எளிதாக்க நிதி உதவி அளிக்கிறது.
- திட்ட தயாரிப்பு நிதி ஆய்வுகள் நடத்துதல், நிபுணர்கள் மற்றும் ஆலோசகர்களின் சேவைகளை அமர்த்துவது, சாத்தியக்கூறு ஆய்வுகள், விரிவான திட்ட ஆய்வுகள், திறன் மேம்பாடு, ஆராய்ச்சி போன்ற நோக்கங்களுக்காக நிதி உதவி அளிக்கிறது.
- திட்ட தயாரிப்பு நிதியிலிருந்து நிதியளிக்கப்பட்ட முக்கிய திட்டங்கள்
 - ➢ சென்னை மெட்ரோ இரயில் திட்டம்
 - ➢ தமிழ்நாடு ஒருங்கிணைந்த சுற்றுலா வளர்ச்சித் திட்டம்
 - ➢ அத்திக்கடவு-அவினாசி குடிநீர் வழங்கல் திட்டம்
 - ➢ தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்
 - ➢ சில்ஹல்லா நீர் மின்நிலையத் திட்டம்
 - ➢ சென்னை-கன்னியாகுமரி தொழில் பெருவழித் தடம்
 - ➢ பேரூரில் நாளொன்றிற்கு 400 மில்லியன் லிட்டர் கடல்நீர் சுத்திகரிப்பு ஆலை நிறுவுதல்
 - ➢ தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் மாநில நெடுஞ்சாலைகளை மேம்படுத்தும் திட்டம்
 - ➢ தமிழ்நாட்டில் உள்ள 30 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளை மேம்படுத்தும் திட்டம்
- மேலும் பின்வரும் உள்கட்டமைப்பு திட்டங்கள் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தால் கண்டறியப்பட்டுள்ளன:
 - ➢ சென்னை நிதி நுட்ப நகரம்

- தமிழ்நாடு வணிக மையம், சென்னை
- சென்னையில் பேருந்து முனையங்களை நவீனப்படுத்தும் திட்டம்
- சென்னை இலகு இரயில் திட்டம்
- சென்னை - பெங்களூரு தொழில் பெருவழித்தடத் திட்டம்
- பணிபுரியும் மகளிர்க்கான தங்கும் விடுதிகள் திட்டம்
- தொழிற்சாலை தேவைகளுக்கான கடல்நீர் சுத்திகரிப்புத் திட்டம், தூத்துக்குடி
- ஒருங்கிணைந்த வாகன நிறுத்த மேலாண்மைத் திட்டம்.

தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம்

*100. தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் (*TNIFMC*), சொத்து மேலாண்மை நிறுவனமாக 2013-ம் ஆண்டின் கம்பெனி சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டது. 49 சதவீதம் தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் மற்றும் 51 சதவீதம் நிதி நிறுவனங்களாலும் முதலீடு செய்யப்படுகிறது. இது சர்வதேச முதலீட்டாளர்களுக்கு, வணிக ரீதியாக சாத்தியமான மற்றும் குறிப்பிடத்தக்க துறைகளில், மாநில அரசின் நிதியில் தாக்கத்தை ஏற்படுத்தாமல் அதிக மூலதனத்தை அளிப்பதற்கான வாய்ப்பை வழங்குகிறது. தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனம் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி (*Tamil Nadu Infrastructure Fund*), தமிழ்நாடு உறைவிட நிதி (*Tamil Nadu Shelter Fund*) ஆகிய நிதியங்களை நிர்வகிக்கும் நிதி மேலாளராக செயல்படுகிறது. தவிர தமிழ்நாடு வளர் துறை விதை நிதி (*Tamil Nadu Emerging Sector Seed Fund*) என்ற புதிய பெயரில் தொடங்கப்பட உள்ளது. தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் 300 கோடி ரூபாயினை தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதியத்திற்கு வழங்க இசைவளித்து 30 கோடி ரூபாயினை விடுவித்துள்ளது. இதுகாறும் இந்நிதியம் 830 கோடி ரூபாய் அளவிற்கு இசைவினைப் பெற்றுள்ளது.*

*101. தமிழ்நாடு முதலீட்டு மேம்பாட்டு திட்டம்-*II *(*TNIPP-II*)-ன்கீழ் ரூ.300 கோடி நிதியை முதல்-இழப்பு முதலீட்டு பிரிவில், ஜப்பான் பன்னாட்டு ஒத்துழைப்பு நிறுவனம் (*JICA*)*

பங்களிப்பு செய்துள்ளது. தற்போது இந்தியாவிலுள்ள சில வங்கிகள் மற்றும் நிதி அமைப்புகளும் முதலீடுகள் செய்வதில் பங்களித்து வருகின்றன. தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதியங்களைத் தவிர கீழ்க்கண்ட இரண்டு நிதியங்களில் பெற்றுள்ள இசைவு விவரங்கள் பின்வருமாறு:

தமிழ்நாடு உறைவிட நிதி (TNSF) வகை 1 (சமூக) மாற்று முதலீட்டு நிதியாகும்

- மலிவு வீட்டு வசதி திட்டங்களில் முதலீடு செய்வதற்காக உள்நாட்டு மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களிடமிருந்து வளங்களை திரட்டுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்நிதிக்கு தமிழக அரசு 150 கோடி ரூபாய் நிதியும் உலக வங்கி மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி தலா 35 மில்லியன் அமெரிக்க டாலர் நிதியுதவியும் அளிக்க உறுதி செய்துள்ளன.

தமிழ்நாடு வளர்ந்து வரும் துறை விதை நிதி (Tamil Nadu Emerging Sector Seed Fund (TNESSF) வகை 1 (ஆதார முதலீடு) நிதியாக உருவாக்கப்பட உள்ளது.

- தமிழக அரசால் அடையாளம் காணப்பட்டுள்ள புதிய துறைகளில் ஈடுபடும் நிறுவனங்களின் ஆரம்ப கால மற்றும் ஆதார மூலதனத்தில் முதலீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது ஆரம்ப நிலையில் உள்ளது.

102. உலக வங்கி, தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் வாழ்விட மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 35 மில்லியன் அமெரிக்க டாலர் (ரூ.245 கோடி) வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

மேலும், 35 மில்லியன் அமெரிக்க டாலர்கள் (சுமார் ரூ.256 கோடி) நிதி முதலீடு ஆசிய மேம்பாட்டு வங்கியிடம் (Asian Development Bank) பெறுவதற்கான பேச்சுவார்த்தைகள் முடிவடையும் நிலையில் உள்ளன. தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனத்தில் பங்குதாரர் மற்றும் எதிர்பார்க்கப்படும் பங்குதாரர்களாகிய தேசிய வீட்டு வசதி வங்கி (National Housing Bank) மற்றும் ஹட்கோ (HUDCO) நிறுவனம் ஆகியவை ஒவ்வொன்றும் தலா ரூ.500 கோடி முதலீடு செய்ய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. இந்நிதியம், மலிவு விலை வீட்டு வசதித் திட்டங்களில் முதலீடு செய்ய ரூ.3,000 கோடி நிதியை திரட்ட குறிக்கோள் கொண்டுள்ளது.

[2021 செப்டம்பர் 13

புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் - 2021

103. புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் 30.6.2021-க்கு பிறகு மேலும் நான்காண்டிற்கு சில சிறப்பு அம்சங்களுடன் நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. இப்புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்-2021, பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்மூலம் செயல்படுத்தப்படுகிறது. புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அரசு ஊழியர்கள், உள்ளாட்சி அமைப்புகள், அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் தமிழ்நாடு சட்டப் பேரவையில் இயற்றப்பட்ட சட்டங்களின்கீழ் ஏற்படுத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள், மாநில அரசு நிறுவனங்கள் (விரும்புவன மட்டும்) ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தகுதியுடைய அவர்தம் குடும்ப உறுப்பினர்களின் மருத்துவ சிகிச்சைக்காக தொகுப்பாண்டில் ஐந்து இலட்சம் ரூபாய் மருத்துவ உதவி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் காப்பீட்டுக் கட்டணமாக அரசு ஊழியரிடமிருந்து ரூ.300 (ரூ.295 காப்பீட்டு சந்தா + ரூ.5 சிறப்பின நோய்கள் மற்றும் சூழ்நிலைகளில் ஏற்படும் எதிர்பாரா செலவுகளுக்காக நிதிய மூலதனம் இதன்மூலம் ரூ.20.00 இலட்சம் வரை மருத்துவ உதவி பெறலாம்) வீதம் அவர்களது மாதாந்திர ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது.

104. இப்புதிய திட்டத்தில், கீழ்க்காணும் நோய்களுக்கு மருத்துவ சிகிச்சை பெற நிதி உச்சவரம்பு 10.00 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது:

1) புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சை, கீமோதெரபி, கதிரியக்க சிகிச்சை மற்றும் புற்றுநோய்க் கட்டிகளுக்கான நோய்த் தடுப்பாற்றல் சிகிச்சை முறைகள்

2) கல்லீரல், சிறுநீரகம், இதயம், நுரையீரல் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை

3) சிக்கலான இதய அறுவை சிகிச்சை மற்றும் இதய மாற்று அறுவை சிகிச்சை

4) விபத்து மற்றும் தீவிர சிகிச்சை தேவைப்படும் பல்வகைப்பட்ட எலும்பு முறிவு

5) இதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை, அன்யூரிசிம்ஸ் மற்றும் ஆஞ்சியோபிளாஸ்டி

6) தீயினால் ஏற்பட்ட காயங்களுக்கான சிகிச்சை.

2021 செப்டம்பர் 13]

105. இத்திட்டத்தின்கீழ் விபத்தினால் ஏற்படும் அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு அங்கீகரிக்கப்படாத (Non Network) மருத்துவமனைகளிலும் சிகிச்சை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், *203* வகையான சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சை நடைமுறைகள் மேற்கொள்வதற்கு, தமிழ்நாடு, புதுச்சேரி, திருவனந்தபுரம், பெங்களூரு மற்றும் புதுதில்லி ஆகிய இடங்களில் உள்ள *1169* அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில், கட்டணமில்லா மருத்துவ சிகிச்சைகள் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் *1.7.2016* முதல் *30.6.2021* வரையிலான நான்காண்டுகளில் *2,48,716* பயனாளிகள் *1033.46* கோடி ரூபாய் செலவில் மருத்துவ சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர். புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் *2021*-ன்கீழ் *1.7.2021* முதல் *31.8.2021* வரை *10,058* பயனாளிகள் *41.67* கோடி ரூபாய் செலவில் மருத்துவ சிகிச்சை பெற்றுப் பயனடைந்துள்ளனர்.

106. இது தவிர தற்போது கோவிட்-*19*-க்கான சிகிச்சைகளை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் மேற்கொள்ள ரூ.*5.00* கோடி நிதிய மூலதனம் (Corpus Fund) உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் இதுநாள் வரை ரூ.*30* கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத் துணை உட்பட), குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2018

107. ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத் துணை உட்பட), குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், *2014*, *01.07.2014* முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் *1.7.2018* முதல் *30.6.2022* முடிய, நான்கு ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவிற்கு சில சிறப்பு அம்சங்களுடன் நீட்டிக்கப்பட்டுள்ளது. பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்தின்மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இப்புதிய திட்டத்தில், அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் ஆகியவற்றைப் பெற உச்சவரம்பு *2* இலட்சம் ரூபாயிலிருந்து *4* இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

108. இப்புதிய திட்டத்தில், ஓய்வூதியதாரர்களைச் சார்ந்துள்ள மகன் / திருமணமாகாத மகள் வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மனநலம் குன்றியவராகவோ அல்லது

மனநலமற்றவராகவோ இருந்தால், மாற்றுத் திறனாளியாக இருந்து மற்றும் பொருளீட்ட இயலாதவராக இருந்தாலோ, மணமாகாத/ விவாகரத்து பெற்ற/ விதவை மகள்கள் ஆகியோர் இப்பயனைப் பெற, சில நிபந்தனைகளுக்குட்பட்டு, நீட்டிக்கப்பட்டுள்ளது.

109. இப்புதிய திட்டத்தில் கீழ்க்காணும் மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் ஆகியவற்றைப் பெற உச்சவரம்பு 7.50 இலட்சம் ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது:

1) புற்றுநோய்க்கான அறுவை சிகிச்சை, கீமோதெரபி, கதிரியக்க சிகிச்சை மற்றும் புற்றுநோய்க் கட்டிகளுக்கான நோய் தடுப்பாற்றல் சிகிச்சை முறைகள்

2) கல்லீரல், சிறுநீரகம், இதயம், நுரையீரல் மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை

3) சிக்கலான இதய அறுவை சிகிச்சை மற்றும் இதய மாற்று அறுவை சிகிச்சை

4) விபத்து மற்றும் தீவிர சிகிச்சை தேவைப்படும் எலும்பு முறிவுகள்

5) இதய வால்வு மாற்று அறுவை சிகிச்சை, அன்யூரிசம் (Aneurysm) மற்றும் ஆஞ்சியோபிளாஸ்டி (Angioplasty)

6) தீக்காயங்களுக்கான சிகிச்சை.

110. இப்புதிய திட்டத்தில், திடீரென்று எதிர்பாராத விதமாக, அவசர சிகிச்சை தேவைப்படுகின்ற மற்றும் விபத்தை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு இத்திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்படாத (Non Network) மருத்துவமனைகளிலும் சிகிச்சை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 114 வகையான சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சை நடைமுறைகள் பணச் செலவின்றி மேற்கொள்வதற்குத் தமிழ்நாடு, புதுச்சேரி, திருவனந்தபுரம், புதுதில்லி மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களில் உள்ள 1168 அங்கீகரிக்கப்பட்ட (Network) மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 1.7.2018 முதல் 30.6.2022 வரையிலான நான்காண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் காப்பீட்டுக் கட்டணமாக ஓர் ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரருக்கு 3,800 ரூபாய் வீதம்

2021 செப்டம்பர் 13]

யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்திற்கு சேவை வரிகளுடன் அரசு ஆரம்பத்தில் செலுத்தும். இதற்கென ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர்களிடமிருந்து ஒவ்வொரு மாதமும் 350 ரூபாய் வீதம் அவர்களது மாதாந்திர ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியத்திலிருந்து ஜூலை மாதம் 2018 முதல் பிடித்தம் செய்யப்படுகிறது.

111. 1.7.2014 முதல் 30.6.2018 வரையிலான நான்காண்டுகளில் 2,01,285 பயனாளிகள் 578.01 கோடி ரூபாய் அளவிற்கு மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர். இத்திட்டம் நீட்டிக்கப்பட்டு 1.7.2018 முதல் 31.8.2021 வரை 1,85,266 பயனாளிகள் 720.24 கோடி ரூபாய் அளவிற்கு மருத்துவச் சிகிச்சை பெற்றுள்ளனர்.

112. மேலும், உள்ளாட்சி அமைப்புகள், அரசு சார்ந்த நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் அரசு பல்கலைக்கழகங்கள், விருப்பமுள்ள மாநில அரசு அமைப்புகள்/ நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரிந்து அந்தந்த நிறுவனங்களிடமிருந்து ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு, அந்த நிறுவனங்களால் கூடுதலாகச் செலுத்தப்படும் தொகையினை மாநில அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் எதிர்கொள்ளாமல் அந்த நிறுவனங்களால் செலுத்தப்படும் நிலையில், அவர்கள் இத்திட்டத்தினை நீட்டித்துக்கொள்ள அரசினால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

113. மேலும், தற்போது கோவிட்-19க்கான சிகிச்சைகளை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் மேற்கொள்ள ரூ.2.50 கோடி நிதிய மூலதனம் (Corpus Fund) உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இதுவரை ரூ.15.00 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இணைப்பு-VI

(112 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 35—மனிதவள மேலாண்மைத் துறை)

கொள்கை விளக்கக் குறிப்பு, 2021-2022

1. முன்னுரை

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்."

(குறள் 517 - தெரிந்து வினையாடல்)

(இச்செயலை இக்காரணங்களால் இவன் முடிக்க வல்லவன் என்று ஆராய்ந்து அச்செயலை அவனிடத்தே விடுதல் வேண்டும்.)

திரு. டி.ஏ. வர்கீஸ், ஐ.சி.எஸ்., அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட நிருவாகச் சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில், அரசுத் துறைகளினிடையே மனித வளங்களை திறம்பட நிருவகிக்கும் வண்ணம், 1976 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் ஆறாம் நாள் பொதுத் துறையிலிருந்து சில பொருண்மைகளைப் பிரித்து பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை உருவாக்கப்பட்டது.

1(2) பணியாளர்கள் மூலமாகவே ஒரு நிறுவனம் நிமிர்ந்து நிற்கிறது. அவர்கள் வியர்வையாலும், உழைப்பாலும், முயற்சியாலும் அது முன்னேற்றமடைந்து இலக்குகளை நோக்கிப் பயணித்து, நோக்கத்தை அடைந்து வெற்றி பெறுகிறது. இதுகாறும் இத்துறைக்குப் "பணியாளர் நிருவாகம்" என்ற பழம் பெயரே வழங்கப்பட்டு வந்தது. பணியாளர்கள் என்று சொன்னால் அவர்களை நாம் பாரமாகக் கருதுகிறோம் என்று பொருள்; பணியாளர்கள் பாரமல்ல, அவர்கள் சமன்செய்து சீர்தூக்கும் துலாபாரங்கள்; நேர்மையாக நிருவாகத்தை நடத்திச் செல்ல வேண்டிய கட்டளைக்கற்கள்; திறமையால் பளிச்சிட வேண்டிய வைரக்கற்கள்; அடுத்தவர்களை மதிப்பீடு செய்ய வேண்டிய எடைக்கற்கள்; ஏழைகளின் வாழ்வு முன்னேற உதவ வேண்டிய படிக்கற்கள்; அத்தகைய பணியாளர்கள் நிருவாகத்தின் மனித வளமாகக் கருதப்பட

2021 செப்டம்பர் 13]

வேண்டும், நிறுவனத்தின் சொத்துக்களாக மதிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் துறை என்ற பெயரை 'மனிதவள மேலாண்மைத் துறை' என்று மாற்றியமைத்திருக்கிறார்கள்.

1 (3) 'பெயரில் என்ன இருக்கிறது?' என்று மகா காவியங்களை எழுதிய ஷேக்ஸ்பியர் குறிப்பிட்டார். ஆனால் அவர் படைத்த பாத்திரங்களுக்கெல்லாம் குணத்திற்கேற்ப பெயரைச் சூட்டினார். குறள் என்று அழைக்காமல் திருக்குறள் என்றே தெரிவிக்கும் மரபு நம் மண்ணில் உண்டு. எதை எந்தப் பெயரில் அழைக்கிறோம் என்பதும் நம் இலக்கைச் செம்மைப்படுத்தும் என்பதால் இத்தகைய முயற்சி முக்கியமான மாற்றத்தை அலுவலர்கள் மத்தியில் அவசியம் ஏற்படுத்தும்.

1(4) 'மகத்தான மனித வளம்
அதன்மூலம் மக்கள் நலம்'

என்கிற கோட்பாட்டில் செயல்படுவது அரசு அலுவலர்களுடைய தலையாய கடமை. தங்களிடம் வருகிற கோப்புகள் கனமாக இருப்பதற்குக் காரணம் அதில் படிந்திருக்கும் ஏழையின் கண்ணீரோ, அபலையின் கவலையோ, விதவையின் துயரமோ, திக்கற்றவரின் துன்பமோ என்று நினைத்துப் பணியாற்றும்போதுதான் ஓர் அலுவலர் மனிதவளம் மிகுந்தவராக மாறுகிறார்.

1(5) மண்ணிலிருந்து எடுக்கப்பட்ட வைரத்தையும் பட்டை தீட்டுகிறபோதுதான் அது பளபளக்கிறது. அதேபோன்று மனித வளத்தை செம்மைப்படுத்துவதால் அவர்களது திறன் மேம்படுகிறது.

மனிதவள மேலாண்மையில், நியமனம், பயிற்சி, மேம்பாடு, ஊக்கம் அளித்தல், நெறிமுறைப்படுத்துதல் போன்ற அனைத்துப் பணிகளும் அங்கங்களாக இருக்கின்றன. இவற்றைத் தமிழகத்தில் இருக்கிற அரசுப் பணியாளர்களுக்கு நிகழ்த்துகின்ற நிறுவனங்கள் அனைத்தும் இந்தத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. இத்துறை, முன்பு, இரண்டு அலகுகளாகச் செயல்பட்டு வந்தது. இந்த இரண்டு அலகுகளும் ஓரிடத்தை நோக்கிச் செல்கிற இரு பாதைகளாக இருக்கின்றன என்பதை அறிந்து அவை 'மனிதவள மேலாண்மை' என்ற ஒற்றைக் குடையின்கீழ் அரசாணை (வாலாயம்) எண் 2625, பொது (சிறப்பு A) துறை, நாள் 30.6.2021-ல் ஒருங்கிணைக்கப்பட்டு மனிதவள மேலாண்மைத் துறை என்று அழைக்கப்படுகிறது.

[2021 செப்டம்பர் 13

1. (6) இத்துறையின் முக்கிய பணிகளை நான்கு தொகுதிகளாக வகைப்படுத்தலாம்:

(அ) சட்டபூர்வமானவை

(ஆ) நிருவாகம்

(இ) ஆலோசனை

(ஈ) பயிற்சி

1.(6) (அ) சட்டபூர்வமானபணிகள்

சட்டங்களை நிருவகித்தல்

சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கும், அரசு வழங்கும் சேவைகளுக்குமான இணைப்பு உயிரோட்டமான ஒன்று. இது, பரந்த செயல்பாட்டு எல்லைகளைக் கொண்ட அரசுப் பணிகளின் தரத்தின்மூலம் வெளிப்படுகிறது. எனவே, சட்டபூர்வ மற்றும் நிருவாக வரையறைகளை, முன்னேற்றத்திற்கு வித்திடும் வகையிலும் சமச்சீர் மரபை பேணிடும் வகையிலும் நிருவகிப்பதன்மூலம் அரசின் செயல்பாடுகளில் ஒழுங்குமுறை உறுதிப்படுத்தப்படுகிறது.

இத்துறை பின்வரும் சட்டங்களை நிருவகிக்கிறது:-

- *தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 [தமிழ்நாடு சட்டம் எண் 14/2016];*
- *தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டம், 2018 (தமிழ்நாடு சட்டம் எண் 33/2018);*

1(6) (ஆ) நிருவாகப் பணிகள்

அனைத்து அரசுத் துறை அலகுகளின் அன்றாட நிருவாகத்தில் பணிகள் மற்றும் ஒழுக்கம் தொடர்புடைய பின்வரும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் பின்பற்றப்படுவதை இத்துறை உறுதி செய்கிறது:

- *தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் நடத்தை விதிகள், 1973;*
- *தமிழ்நாடு அரசு அடிப்படை விதிகள்;*

2021 செப்டம்பர் 13]

- *தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள், 1955;*
- *தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955;*
- *தமிழ்நாடு அமைச்சுப் பணிக்கான சிறப்பு விதிகள்;*
- *தமிழ்நாடு அடிப்படைப் பணிக்கான சிறப்பு விதிகள்;*
- *தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணிக்கான சிறப்பு விதிகள்;*
- *தமிழ்நாடு பொதுப் பணிக்கான சிறப்பு விதிகள்-இனம்* XII *மற்றும்* XII-A;
- *தமிழ்நாடு பொது சார்நிலைப் பணிக்கான சிறப்பு விதிகள்-இனம்* XXII;
- *தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறைகள், 1954;*
- *தமிழ்நாடு தகவல் பெறும் உரிமை (கட்டணம்) விதிகள், 2005;*
- *தமிழ்நாடு தகவல் ஆணைய (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012;*
- *தமிழ்நாடு தகவல் ஆணையப் பணி விதிகள், 2017;*
- *தமிழ்நாடு லோக் ஆயுக்தா விதிகள், 2018.*

விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைப் புதுப்பித்தல்

உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் மற்றும் தொழில்நுட்பத் தொடர்பு ஆகிய மாற்றங்களின் பெரும் தாக்கத்தினால், நெறிமுறைகளில் தர நிர்ணயம், எளிமைப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள்மூலம் பணியாளர்கள் ஒழுங்குமுறையை கடைபிடிக்கச் செய்தல் இன்றியமையாததாகிறது. இது அரசுப் பணியாளர்களின் வெளிப்படைத் தன்மையையும், பொறுப்புடையைமையும் மேம்படுத்தி, அவர்களை தனித்தன்மையையுடனான பணியமைப்பாக நிருவகிக்க வழிவகுக்கும். அதற்கேற்ப, தற்போதுள்ள விதிகள்/

ஒழுங்குமுறைகள், அவ்வப்போது மறுபரிசீலனை செய்யப்பட்டு, தேவையற்ற பகுதிகள் நீக்கப்பட்டு, நாளது தேதி வரையிலான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மூலம் பணியாளர்களிடையே பணி அமைப்பின் முக்கியத்துவம் மற்றும் அதன் இலக்குகள் வலியுறுத்தப்பட்டு தெளிவுபடுத்தப்படுகிறது.

1(6)(இ) ஆலோசனை வழங்கும் பணிகள்

அரசுப் பணிகளில் ஒரே மாதிரியான நடைமுறைகளைப் பராமரிக்கும் பொருட்டு தமிழ்நாடு அரசு அலுவல் விதிகள் மற்றும் தலைமைச் செயலக அறிவுறுத்தங்களின்கீழ் பின்வரும் நேர்வுகள் உள்ளிட்ட பல்வேறு நேர்வுகளில் மனிதவள மேலாண்மைத் துறையை தலைமைச் செயலகத் துறைகள் கலந்தாலோசிக்கின்றன:-

- தமிழ்நாடு மாநிலப் பணிகள் மற்றும் தமிழ்நாடு தலைமைச் செயலகப் பணிகளில் உள்ள பல்வேறு பதவிகளுக்கு காலிப் பணியிட மதிப்பீடு மற்றும் தேர்ந்தோர் பெயர் பட்டியல் தயாரித்தல்;

- அரசுப் பணியாளர்களின் பணி வரன்முறை மற்றும் தகுதிகாண் பருவ விளம்பல் நேர்வுகளில் வழிகாட்டுதல் தெளிவுரைகள் வழங்குதல்;

- அடிப்படை விதிகளில் தெளிவுரை வழங்குதல்;

- முதுநிலை திருத்தம் தொடர்பான கருத்துருக்களை ஆய்வு செய்தல்;

- சிறப்பு / தற்காலிக விதிகளை உருவாக்குதல் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளும் நேர்வுகளில் ஆலோசனை வழங்குதல்;

- அரசுப் பணியாளர்களின் மீதான ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்த நேர்வுகளில் ஆலோசனை வழங்குதல்.

1(6)(ஈ) பயிற்சி

அரசுப் பணியாளர்களின் அன்றாட பணிகளிலும் அவர்கள் எதிர்காலத்தில் வகிக்க வேண்டிய பொறுப்புகளிலும் பணித்திறனை மேம்படுத்த, பயிற்சி அளித்தல் இத்துறையின் முக்கியமான செயல்பாடாகும்.

2021 செப்டம்பர் 13]

அரசுப் பணியாளர்கள் பணியில் சேரும்பொழுதே, அவர்களின் அடிப்படை திறனை வளர்த்துக்கொள்ளவும், குறிப்பிட்ட துறைகளில் அவர்களின் திறமையையும், மதிப்பையும் கூட்டவும், சவால்களை எதிர்நோக்கும் திண்ணம் கொண்டவர்களாக மேம்படுத்தவும், அவர்களுக்கு பின்வரும் பல்வேறு வகையான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன:-

- அனைத்து அரசுப் பணியாளர்களுக்கும் பணியில் சேரும் போது அடிப்படைப் பயிற்சி
- பணியில் உள்ள அரசுப் பணியாளர்களுக்கு கட்டாயப் பயிற்சி
- தேவைக்கேற்ற புத்தாக்கப் பயிற்சிகள் (தகவல் அறியும் உரிமை சட்டம், மின் ஆளுமை, இணைய பாதுகாப்பு, போன்றவை)

பொதுப் பணிகளில் பல்வேறு நிலைகளில் உள்ள பதவிகளுக்கான தேர்வுகளில் தேர்ச்சிப்பெற ஏதுவாக தமிழக இளைஞர்களுக்கு இத்துறையால் ஆயத்த பயிற்சி அளிக்கப்படுகிறது.

2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

அரசுப் பணியாளர்கள் அரசின் திட்டங்களை செயல்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகின்றனர். பணியாளர்களை தேர்வு செய்யும் பணிகளுக்காக இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 315(1)-ன்கீழ் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் இயங்கி வருகிறது. தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பணி நிபந்தனைகள் 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒழுங்குமுறை விதிகளின்படி நிருவகிக்கப்படுகின்றன. தற்போது தேர்வாணையம் தலைவர் மற்றும் ஆறு உறுப்பினர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

2(2) பொதுவான பணிகள்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அரசுப் பணியாளர்களைத் தெரிவு செய்யும் பணிகளுடன் அவர்களுக்கான துறைத் தேர்வுகளை ஆண்டிற்கு இருமுறை நடத்துகிறது.

[2021 செப்டம்பர் 13

இளைஞர்கள் தங்களுடைய எதிர்காலத்தில் இந்திய இராணுவ அதிகாரிகளாக உருவாகுவதை ஊக்குவிக்கும் விதமாக, மத்திய அரசின் பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் சார்பாக ஆண்டிற்கு இருமுறை டேராடூன் இந்திய இராணுவக் கல்லூரி நுழைவுத் தேர்வுகளையும் நடத்துகிறது.

மேலும், பணியாளர்களைத் தெரிவு செய்தல் பற்றிய விதிகளை இயற்றுவது, பணி நியமனம், பதவி உயர்வுகள் அளித்தல் மற்றும் ஒரு பணியிலிருந்து மற்றொரு பணிக்கு மாறுதல் முறையில் நியமனம் செய்தல் ஆகியவற்றில் பின்பற்றப்பட வேண்டிய நெறிகளை வகுப்பது மற்றும் அரசுப் பணியாளர்களின் ஒழுங்குமுறை நடவடிக்கைகள் மீதான மேல்முறையீடு குறித்த அனைத்து நேர்வுகளிலும் அரசுக்கு ஆலோசனையினை, தேர்வாணையம் வழங்குகிறது.

2(3) ஆண்டு திட்ட அட்டவணை

தேர்வர்கள் தங்களை முன்னதாகத் தயார் செய்துகொள்ளவும், துறைகள் தெரிவுத் திட்டத்தினை முன்கூட்டியே அறிந்துகொள்ளவும் ஏதுவாக, ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்தில் தேர்வாணையம் போட்டித் தேர்வுகளுக்கான ஆண்டு திட்ட அட்டவணையை வெளியிடுகிறது.

2(4) ஒரு முறை பதிவு செய்தல்

தேர்வர்களின் வசதிக்காக, 'ஒரு முறை பதிவு செய்தல்' முறையினை அறிமுகப்படுத்தி அதில் தேர்வர்களின் அடிப்படை விவரங்கள், கையொப்பம் மற்றும் புகைப்படம் தரவுதளத்தில் பதிவேற்றப்படுகிறது. இப்பதிவானது, ஐந்து ஆண்டுகளுக்கு செல்லத்தக்கதாகும். இப்பதிவில் புதிய உள்ளீடுகளை சேர்க்கவும், புதுப்பித்துக் கொள்ளவும் வழிவகை உள்ளது. அனைத்துத் தேர்வுகளுக்கும், இணையதளம் வழியே விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன.

2(5) தெரிவு நடவடிக்கையில் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துதல்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், திறமையானவர்கள் தெரிவு செய்யப்படுவதை உறுதி செய்ய, உரிய நடைமுறைகளில் பாதுகாப்பினை பலப்படுத்தும் விதமாக, தேர்வு நடைபெறும் மையங்களை ஒளிப்பதிவு செய்தும், தீவிர

2021 செப்டம்பர் 13]

மேற்பார்வை தேவைப்படும் மையங்களை கண்காணித்தும், ஆணையத்தில் அப்பணிகளை மேற்கொள்ளும் இடங்களை வலை நிழற்படக்கருவி (Web Camera) மூலம் ஒளிப்பதிவும் செய்கிறது. மேலும், அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் தேர்வு எழுதுபவர்களின் பெயர், பதிவு எண், புகைப்படம் போன்ற அனைத்து விவரங்களும் அச்சிடப்பட்ட தன்விவர கொள்குறி விடைத்தாட்கள் (Personalised OMR) வழங்கப்பட்டு வருகிறது. தொழில்நுட்ப பதவிகளுக்கு கணினி வழி தேர்வினையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

தேர்வு முடிவடைந்த உடன் கொள்குறி வகைக்குரிய விடைகளை (Answer Keys) தேர்வாணையத்தின் இணையதளத்தில் வெளியிட்டு வருகிறது. தேர்வாணையம், இணைய வழியில், பொதுச்சேவை மையங்கள் மூலமாக சான்றிதழ் சரிபார்த்தல் முறையை அறிமுகப்படுத்தியுள்ளதால் செலவும், காலவிரயமும் தவிர்க்கப்படுகிறது. மேலும், அலகு / பணி ஒதுக்கீட்டிற்கு கலந்தாய்வு முறை பின்பற்றப்படுவதற்கு முன்பாக, காலிப் பணியிடங்கள் குறித்த விவரங்கள் தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்படுகிறது.

மாற்றுத் திறனாளி விண்ணப்பதாரர்கள் தேர்வு மையங்களை எளிதாக அணுகுவதை தேர்வாணையம் உறுதி செய்கிறது. தேவை ஏற்படின், எழுத்துத் திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு உதவியாளர்கள் தவிர கூடுதல் நேரமும் வழங்கப்படுகிறது.

2(6) துறை பதவி உயர்வுக் குழு

துறை பதவி உயர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படும் கருத்துருக்களின்மீது விரைந்து நடவடிக்கை எடுக்க ஒற்றைச் சாளர முறை, தேர்வாணையத்தால் பின்பற்றப்படுகிறது. தற்போது, பதவி உயர்வு மற்றும் மாறுதல்மூலம் பணி நியமனம் பெறும் தொகுதி A-ஊதிய நிலை 25-க்கு மேல் உள்ள நுழைவு நிலையிலான பதவிகள் மட்டும் தேர்வாணையத்தின் துறை பதவி உயர்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படுகிறது. ஏனைய அனைத்துப் பதவிகளுக்குமான தேர்ந்தோர் பெயர்ப் பட்டியல் அந்தந்த துறைகளுக்கான பதவி உயர்வு குழுவின் முன் வைக்கப்படுகிறது.

2(7) தெரிவுகளில் முன்னேற்றப் போக்கு

கடந்த ஜனவரி 2020 முதல் ஆகஸ்ட் 2021 வரை மாநில மற்றும் சார்நிலைப் பணிகளில் உள்ள பல்வேறு பணியிடங்களுக்கு, தேர்வாணையம் 12,904 தேர்வர்களை இறுதி செய்துள்ளது.

தெரிவு தொடர்பான தரவுகளை துல்லியமாக ஆராய்ந்து பேணுவதன்மூலம் தேர்வாணையம், அரசிற்கு பணியமர்த்தங்களில் உள்ள வாய்ப்புகள் மற்றும் சவால்களை எதிர்கொள்ளும்வகையிலான தீர்வுகளை எட்டுவதற்கும் அதிகப்படியான எண்ணிக்கையில் தேர்வுகளை திறம்பட நடத்திடவும் உதவுகிறது.

மாநிலத்தின் தெரிவு விவரங்கள் வரைபடங்களாக இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

3. தமிழ்நாடு தகவல் ஆணையம்

ஜனநாயகத்தில், பொது விவகாரங்களில் பங்கு பெறுவதற்கான குடிமக்களின் அறிவையும், திறனையும் அதிகப்படுத்துதல் என்ற உறுதியான கொள்கையின் அடிப்படையில், 7.10.2005 அன்று தமிழ்நாடு தகவல் ஆணையம் அமைக்கப்பட்டு, அவ்வாணையம் ஒரு தலைமைத் தகவல் ஆணையர் மற்றும் 6 தகவல் ஆணையர்களைக் கொண்டு இயங்கி வருகிறது.

3(2) 2005 ஆம் ஆண்டு தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ், பொது அதிகார அமைப்பிடம் உள்ள தகவல்களை கேட்பதற்கும், பார்வையிடுவதற்கும் மற்றும் பெறுவதற்கும் குடிமக்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

3(3) 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு தகவல் பெறும் உரிமைச் சட்டம் (கட்டணங்கள்) விதிகளில், கட்டணங்களை செலுத்தும் விதங்கள் மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள விண்ணப்பதாரர்களுக்கு கட்டண விலக்கு ஆகியவை வரையறுக்கப்பட்டுள்ளன. மேலும், முதல் மேல்முறையீடு மற்றும் இரண்டாம் மேல்முறையீடு ஆகியவற்றிற்கும் விண்ணப்பக் கட்டணங்கள் ஏதுமில்லை.

3(4) தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழான மனுக்களையும், முதல் மேல்முறையீட்டு மனுக்களையும், இணையவழியில் (www.rtionline.tn.gov.in) கட்டணம் செலுத்தி தாக்கல் செய்வதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 25.6.2021 முதல், மனிதவள மேலாண்மைத் துறையில், மனுக்கள் மற்றும் முதல் மேல்முறையீட்டு மனுக்கள் இணையவழியில் பெறப்பட்டு வருகின்றன. இந்த வசதி தலைமைச் செயலகத்தில் உள்ள அனைத்துத் துறைகளாலும் படிப்படியாக அமல்படுத்தப்படும். இணையவழியில் கட்டணங்களைப் பெற உரிய விதித் திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

2021 செப்டம்பர் 13]

3(5) இணையதளம் மூலமாக இரண்டாம் மேல்முறையீடு செய்யும் வசதியும் ஆணையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆணையத்தின் வலைதளத்தில், (www.tnsic.gov.in) வழக்கு விவரப் பட்டியல் மற்றும் இரண்டாம் மேல்முறையீட்டின் மீதான ஆணையத்தின் முடிவுகள் பதிவேற்றப்பட்டு வருகின்றன.

3(6) தகவல் அறியும் உரிமைச் சட்டம் *2005*-ன்கீழ் ஒவ்வொரு வருடமும் சுமார் *3.30* இலட்சம் மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்படுகின்றன. இம்மனுக்கள்மீது, மாநிலம் முழுவதுமுள்ள பல்வேறு பொதுத் தகவல் அலுவலர்களாலும் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்களாலும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

3(7) தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் நோக்கத்தினை முழுமையாக நிறைவேற்றிடும் விதமாகவும், நிலுவையிலுள்ள மனுக்களை குறைக்கும் விதமாகவும், அச்சட்டத்தின்கீழான மனுக்கள் மற்றும் மேல்முறையீட்டு மனுக்களுக்கு தீர்வு காண்பது குறித்து மாநிலம் முழுவதுமுள்ள பொதுத் தகவல் அலுவலர்கள் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்களுக்கு அவ்வப்போது பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேற்படி சட்டத்தை செயல்படுத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட அனைவருக்கும் இந்தப் பயிற்சி அளிக்கப்படும்.

3(8) கோவிட்-*19*-ன் காரணமாக, ஆணையத்தில் நடைபெறும் இரண்டாம் மேல்முறையீட்டு விசாரணைகள் மெய்நிகர் முறையில் நடத்தப்பட்டன.

3 (9) நாட்டிலேயே ஒரு முன்னோடி முயற்சியாக, பார்வைதிறன் குறைபாடு உடையோர்களின் கோரிக்கையின் பேரில், ஆணையத்தின் முடிவுகள் / ஆணைகள், சென்னையில் அமைந்துள்ள பார்வையற்ற நபர்களுக்கு அதிகாரமயமாக்குதலுக்கான தேசிய நிறுவனத்தின் ஒருங்கிணைப்புடன், பிரெய்லி எழுத்து வடிவில் வழங்கப்படுகிறது.

3(10) பொதுமக்களுக்கும், பொதுத் தகவல் அலுவலர்களுக்கும் விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் மற்றும் தகவல் அளித்தல் தொடர்புடைய பல்வேறு நடைமுறைகள் குறித்து தேவையான உதவிகளை, தகவல் ஆணையத்தில் இயங்கிவரும் உதவி மையம் (Help Desk) அளித்துவருகிறது.

3 (11) தமிழ்நாடு தகவல் ஆணையமானது, சென்னை நந்தனத்தில் உள்ள பேர்ன்பேட் அரசு பண்ணை கிராமம் என்ற இடத்தில் புதிதாக கட்டப்பட்ட கட்டடத்தில் தற்போது இயங்கிவருகிறது.

3(12) மனித வள மேம்பாட்டுத் துறைவாயிலாக இவ்வாணையத்தின் ஆண்டறிக்கை சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுகிறது.

4. மாநில விழிப்புப் பணி ஆணையம்

தமிழ்நாடு விழிப்புப் பணி ஆணையம் 1965 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. பொதுப் பணிகளில் நிருவாகரீதியாக ஊழல் தடுப்பு நடவடிக்கைகளில் அரசுக்கு அறிவுரை வழங்குதல், ஊழல் குறித்த ஒவ்வொரு இனங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்குதல் ஆகியவை இவ்வாணையத்தின் முதன்மையான பணிகளாகும். மாநிலத்தின் சட்டபூர்வ அமைப்புகள், பல்கலைக்கழகங்கள், நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்து பொது ஊழியர்கள்மீது விழிப்புப் பணி ஆணையம் தமது வரம்பினை கொண்டுள்ளது.

4(2) விழிப்புப் பணி ஆணையத்தின் நோக்கங்கள்

(i) பொது ஊழியர் எவரேனும் நாணயமற்ற வகையில் நடந்து கொண்டதாகவோ அல்லது ஊழல் புரிந்துள்ளதாகவோ அல்லது தன்னுடைய அதிகாரத்தை தவறான அல்லது ஊழல் நோக்கத்திற்காக பயன்படுத்தியதாகவோ அல்லது தனது அதிகாரத்தை உரிய முறையில் பயன்படுத்தாமை பற்றியோ கூறப்படும் புகார்மீது விசாரணை ஏற்படுத்தும் நடவடிக்கையினை மேற்கொள்ளுதல்;

(ii) இதற்காகத் தேவைப்படும் தகவல் அல்லது புள்ளிவிவரங்களை சேகரித்து அரசிற்கு ஊழல் தடுப்பு நடவடிக்கைகளில் உரிய ஆலோசனை வழங்குதல்;

(iii) அரசுத் துறை அல்லது அரசு சார்ந்த நிறுவனம் ஆணையத்தின் பரிந்துரைகளின்மீது எடுத்த நடவடிக்கைகளை கண்காணித்தல்.

5. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம்

பொது நிருவாகத்தில் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை திறம்பட கையாளும் பொருட்டு, முதன்முதலாக 1964-ல் ஊழல்

2021 செப்டம்பர் 13]

தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககம் ஏற்படுத்தப்பட்டது. இந்த இயக்ககத்திற்கு காவல் துறை இயக்குநர் (DGP) நிலையில் ஓர் இயக்குநர் தலைமை வகிக்கிறார். இயக்குநருக்கு உறுதுணையாக இணை இயக்குநர், துணை இயக்குநர், காவல் கண்காணிப்பாளர், காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் சட்ட அலுவலர்கள் உறுதுணையாக பணியாற்றுகிறார்கள். இவ்வியக்ககத்தின்கீழ் பிரிவு அலுவலகங்கள் மாநிலம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன.

5(2) இயக்ககத்தின் செயல்பாடுகள்

i) *அரசும், மாநில விழிப்புப் பணி ஆணையமும் பரிந்துரைக்கும் நேர்வுகளில் ஊழல் குற்றச்சாட்டுகள் மற்றும் அது தொடர்பான முறைகேடுகளின்பேரில் விசாரணை மேற்கொள்வது.*

ii) *இவ்வியக்ககத்தால் சேகரிக்கப்படும் தகவல்களை மற்றும் புள்ளிவிவரங்களை மாநில விழிப்புப் பணி ஆணையருக்குத் தெரியப்படுத்துதல்.*

iii) *பொது மக்களிடமிருந்து பெறப்படும், பொது ஊழியர்கள் மீதான இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான புகார்களின் மீது விசாரணை மேற்கொள்வது.*

iv) *ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் பெறப்படும் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான புகார்களில் நுண்ணறிவுத் தகவல்களை சேகரிப்பது மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம் 1988-ன் கீழான குற்றங்களை புலனாய்வு செய்வது.*

v) *குறிப்பான புகார்களின் அடிப்படையில், ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசு ஊழியர்களை, இலஞ்சம் பெறும்பொழுது, தகுந்த முறைகளைப் பின்பற்றி பொறிவைத்து கையும் களவுமாகப் பிடித்தல்.*

5(3) ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விரைந்து விசாரிப்பதற்காக, சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், சிவகங்கை, திருச்சி, திருநெல்வேலி மற்றும் விழுப்புரம் ஆகிய எட்டு இடங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. அந்தந்த மாவட்டங்களில் உள்ள தலைமைக் குற்றவியல் நீதிமன்றங்களில் பணிபுரியும் முதன்மை அமர்வு

நீதிபதிகள் மற்றும் சிறப்பு நீதிமன்றங்களில் பணிபுரியும் சார் நீதிபதிகளுக்கு ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிக்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

5(4) ஊழல் தடுப்புச் சட்டம், 1988-ல், பிரிவு 17A-ன்படி பொது ஊழியர்கள் அவர்தம் அலுவலகப் பணிகள் மற்றும் கடமையாற்றும்போது நடைபெற்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள்மீது விசாரணை அலுவலர்கள் விசாரணை மேற்கொள்ளும் முன்னர் உரிய அதிகார அமைப்புகளிடம் முன் அனுமதி பெறப்படல் வேண்டும். இச்சட்டப் பிரிவின்படி அதிகார அமைப்பு மூன்று மாதங்களுக்குள்ளோ அல்லது எழுத்துப் பூர்வமாக பதிவு செய்யக்கூடிய காரணங்களுக்காக மேலும் ஒரு மாத காலத்திற்குள்ளோ தனது முடிவினைத் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்பட்ட காலவரையறைக்குள் முன் அனுமதி வழங்கப்படுவதை மாநில விழிப்புப் பணி ஆணையம் கண்காணிக்கிறது.

5(5) இவ்வியக்ககத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஊழல் புகார்கள் தொடர்பான வழக்குகளின் ஆண்டு வாரியான புள்ளிவிவரங்கள் இயக்கக இணையதளத்தில் வெளியிடப்பட்டு வருகின்றன. மின்னஞ்சல் வாயிலாக பெறப்படும் புகார்களும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

5(6) ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தால் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாத இறுதி வாரத்தில் விழிப்புணர்வு வார விழா நடத்தப்படுகிறது. கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற விழிப்புணர்வு வார விழாவில், “விழிப்புணர்வு இந்தியா”, “வளமான இந்தியா” என்ற கருப்பொருளில் கட்டுரை எழுதுதல், விழிப்புணர்வு வாசகப் பதாகைகள் உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பங்கு பெற்றனர்.

5(7) 2021-ஆம் ஆண்டுக்கான கருப்பொருள் “சுதந்திர இந்தியா @ 75. தற்சார்புடன் கூடிய நேர்மை” ஆகும். ஊழல் தடுப்பு நடவடிக்கைகளில் ஒரு புதிய முயற்சியாக, மத்திய விழிப்புப் பணி

2021 செப்டம்பர் 13]
ஆணையம் வெளியிட்டுள்ள வழிகாட்டுதலின்படி, துறைகளின் செயல்பாடுகளான நில மேலாண்மை, தகவல் தொழில்நுட்ப பயன்பாடு மற்றும் மின் ஆளுமை உள்ளிட்டவைமீது கண்காணிப்பை அதிகரிக்க வலியுறுத்தப்பட்டுள்ளது. அதற்கேற்ப ஆய்வுப் பிரிவில் உரிய மாதிரி படிவங்கள் சேர்க்கப்படும்.

5(8) அரசுப் பணிகளில் ஊழல் நடவடிக்கைகளை தவிர்ப்பதும், தண்டிப்பதும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தின் குறிக்கோளாகும். அதன்படி இந்த இயக்ககத்திற்கும் ஆய்வுக் குழுவிற்கும் உள்ள உயிரோட்டமான இணைப்பு மேல்நிலை அமைப்புகளில் வலுப்படுத்தப்படும்.

6. ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள்

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தால் சுமத்தப்படும் ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுகள்மீது விசாரணை மேற்கொள்ளும் ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்களானது, தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயம்) விதிகள், 1955 இன்படி தேவையான சாட்சியங்களை விசாரிக்கவும், தொடர்புடைய ஆவணங்களைக் கோருவதற்கும் அதிகாரங்களைப் பெற்ற நீதிமுறை சார்புடைய அமைப்பாகும்.

6(2) சென்னை, கோயம்புத்தூர், மதுரை, நாகர்கோவில் திருச்சி மற்றும் திருநெல்வேலி ஆகிய ஆறு இடங்களில் ஒழுங்கு நடவடிக்கைகள் தீர்ப்பாயங்கள் செயல்பட்டு வருகின்றன. நீதிமுறை சார்புடைய செயல்பாடுகளை இந்திய ஆட்சிப் பணி அலுவலர் / மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள ஆணையர் மேற்கொண்டு வருகிறார். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தில் உள்ள குற்றவியல் வழக்குரைஞர்கள் (Prosecutors for Disciplinary Proceedings) தீர்ப்பாய விசாரணைகள் நடத்துவதற்கு உதவிபுரிகின்றனர். இத்தீர்ப்பாயம் தனது விசாரணை அறிக்கைகளை அரசின் நிருவாகத் துறைக்கு உரிய ஆணைகள் வெளியிடும்பொருட்டு அனுப்புகிறது.

நிருவாகத் தீர்ப்பாயங்கள் கையாளும் வழக்குகளின் எண்ணிக்கை

வ எண்	தீர்ப்பாயம்	2018			2019			2020			1.8.2021 தேதியில் நிலுவை
		நிலுவை மற்றும் பெறப்பட்டவை	தீர்வு	நிலுவை	நிலுவை மற்றும் பெறப்பட்டவை	தீர்வு	நிலுவை	நிலுவை மற்றும் பெறப்பட்டவை	தீர்வு	நிலுவை	
1.	சென்னை	*20*	*13*	*7*	*23*	*4*	*19*	*35*	*3*	*32*	*39*
2.	கோயம்புத்தூர்	*50*	*11*	*39*	*45*	*10*	*35*	*41*	*4*	*37*	*43*
3.	மதுரை	*11*	*1*	*10*	*12*	—	*12*	*19*	—	*19*	*27*
4.	நாகர்கோவில்	*33*	*1*	*32*	*33*	*9*	*24*	*29*	*2*	*27*	*27*
5.	திருச்சிராப்பள்ளி	*55*	*12*	*43*	*50*	*12*	*38*	*42*	*5*	*37*	*47*
6.	திருநெல்வேலி	*9*	—	*9*	*13*	—	*13*	*17*	*1*	*16*	*22*
	மொத்தம்			**140**			**141**			**168**	**205**

7. லோக் ஆயுக்தா

பொது ஊழியர்களிடையே ஊழலை கட்டுப்படுத்திடும் நோக்கத்துடன், லோக் ஆயுக்தா என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டு, அதற்குரிய தமிழ்நாடு லோக் ஆயுக்தா சட்டம் மற்றும் தமிழ்நாடு லோக் ஆயுக்தா விதிகள் 2018 ஆம் ஆண்டு இயற்றப்பட்டன.

7(2) தமிழ்நாடு லோக் ஆயுக்தா அமைப்பானது, தலைவர் மற்றும் இரண்டு நீதித் துறை சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் இரண்டு நீதித் துறை சாராத உறுப்பினர்களுடன் அதன் முழு கட்டமைப்புடன் சென்னை, கிண்டி, சிட்கோ கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

7(3) ஊழல் புகார்கள்மீது விசாரணை செய்யும்போது, லோக் ஆயுக்தா அதனுடைய விசாரணைப் பிரிவு, விழிப்புப் பணி ஆணையம், அரசு முகவாண்மை மற்றும் அரசு அலுவலரின் சேவைகளை பயன்படுத்தலாம். லோக் ஆயுக்தா, தற்போது விசாரணை தேவைப்படும் நேர்வுகளை விசாரிப்பதற்காக விழிப்புப் பணி ஆணையத்தின் வழியாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்தை அணுகுகிறது.

2021 செப்டம்பர் 13]

7(4) பொது ஊழியர் மீதான குற்றச்சாட்டிற்கான முகாந்திரம் உள்ளதா என்பதனை தமிழ்நாடு லோக் ஆயுக்தா உறுதி செய்யும்.

7(5) 1988 ஆம் ஆண்டு ஊழல் தடுப்புச் சட்டம், பிரிவு 17A-ன்படி பொது ஊழியர்மீது விசாரணை மேற்கொள்ள உரிய அதிகாரியின்முன் அனுமதி பெறப்பட வேண்டும். லோக் ஆயுக்தா விசாரணைக்காக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்ககத்திற்கு பரிந்துரைக்கும் நேர்வுகளுக்கு மேற்குறிப்பிடப்பட்ட பிரிவு பொருந்துவது குறித்து பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

8. ஆய்வுப் பிரிவு

மூத்த அதிகாரிகளைக் கொண்டு துறைத் தலைமை அலுவலகங்களை காலமுறை இடைவெளியில் ஆய்வு செய்ய, அரசு ஒரு திட்டத்தினை அறிமுகம் செய்தது. அதன் தொடர்ச்சியாக, அனைத்து அரசு துறைகளும், ஒரே மாதிரியான செயல்பாடுகள் மற்றும் விதிமுறைகளை ஒருமித்து பின்பற்றுவதை உறுதி செய்வதற்காக, இரண்டு அடுக்குகள் கொண்ட ஆய்வுக் குழுக்கள் 1975 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு அரசு அலுவலகங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

8(2) ஆய்வுப் பணிகளின் நோக்கம் மற்றும் தன்மை, பின்வரும் நிருவாக அடிப்படையிலானது:

(i) அலுவலக நிருவாக அமைப்பினை சரிபார்த்தல் மற்றும் திறனை அதிகரிக்க தேவையான மாற்றங்களை ஏற்படுத்த ஆலோசனை வழங்குதல்,

(ii) தேவைக்கேற்ப பணியாளர்கள்,

(iii) நிதி, தொழில்நுட்ப மற்றும் நிர்வாக செயல்பாடுகளில், துறைத் தலைமையினால் அதிகாரப் பகிர்வு,

(iv) முக்கியமான இனங்களில், செயல்பாடுகள் மற்றும் நிதி நிர்வாகத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடையப்பட்டுள்ளதை உறுதி செய்தல்,


(v) பொதுமக்கள் குறைபாடுகள் எந்த அளவிற்கு கையாளப்பட்டுள்ளன,

(vi) அலுவலக செயல்பாட்டுத் திறனையும் மற்றும் குறிப்பிட்ட காலத்தில் கோப்புகளை தீர்வு செய்வதை சரிபார்த்தல்,

(vii) பல்வேறு பதிவேடுகளை கூர்ந்தாய்வு செய்தல்

[2021 செப்டம்பர் 13

8 (3) ஆய்வுத் துறை அலகுகள் — இரண்டு அடுக்கு முறை



2021 செப்டம்பர் 13]

8(4) 11 மாவட்ட ஆய்வுக் குழுக்களின் எல்லைகள்:

வரிசை எண்	மாவட்ட ஆய்வுக் குழுவின் தலைமையிடம்	உள்ளடங்கிய மாவட்டங்கள்
1.	சென்னை	1. சென்னை
2.	கோயம்புத்தூர்	2. கோயம்புத்தூர் 3. ஈரோடு 4. திருப்பூர் 5. நீலகிரி
3.	சேலம்	6. சேலம் 7. தர்மபுரி 8. நாமக்கல் 9. கிருஷ்ணகிரி
4.	திருநெல்வேலி	10. திருநெல்வேலி 11. தூத்துக்குடி 12. தென்காசி 13. கன்னியாகுமரி
5.	திருச்சிராப்பள்ளி	14. கரூர் 15. புதுக்கோட்டை 16. அரியலூர் 17. பெரம்பலூர் 18. திருச்சிராப்பள்ளி
6.	கடலூர்	19. கடலூர் 20. விழுப்புரம் 21. கள்ளக்குறிச்சி
7.	வேலூர்	22. வேலூர் 23. திருவண்ணாமலை 24. இராணிப்பேட்டை 25. திருப்பத்தூர்
8.	மதுரை	26. திண்டுக்கல் 27. தேனி 28. மதுரை

வரிசை எண்	மாவட்ட ஆய்வுக் குழுவின் தலைமையிடம்	உள்ளடங்கிய மாவட்டங்கள்
9.	தஞ்சாவூர்	29. தஞ்சாவூர் 30. திருவாரூர் 31. நாகப்பட்டினம் 32. மயிலாடுதுறை
10.	இராமநாதபுரம்	33. இராமநாதபுரம் 34. சிவகங்கை 35. விருதுநகர்
11.	காஞ்சிபுரம்	36. காஞ்சிபுரம் 37. செங்கல்பட்டு 38. திருவள்ளூர்

8(5) அடுக்கு 1-ல் உள்ள ஆய்வு அலகுகளின் பணிகள்:

- மூன்று ஆய்வுக் குழுக்களால் ஒவ்வொரு ஆண்டும் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய அலுவலகங்கள் இறுதி செய்தல்.
- ஒவ்வொரு ஆய்வுக் குழுவும் முதனிலை ஆய்வுக் குறிப்புகளின் மீதான குறைகளைச் சுட்டிக்காட்டி, அவற்றை தீர்வு செய்ய வேண்டி துறைத் தலைமை/ வாரியங்களுக்கு அளித்தல்.
- துறைத் தலைமையிடமிருந்து குறை களைவு அறிக்கைப் பெறப்பட்ட பின்பு, மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலரால் இறுதி ஆய்வு நடத்தப்பட்டு, தலைமைச் செயலாளர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.
- இறுதி ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்ட அனைத்து குறைகளும் நிவர்த்தி செய்யப்பட்டு தொடர்புடைய தலைமைச் செயலக துறையால் ஒருங்கிணைந்த அரசாணை வெளியிடப்படுதல்.

2021 செப்டம்பர் 13]

8 (6) அடுக்கு 2-ல் உள்ள மாவட்ட ஆய்வுக் குழுக்களின் பணிகள்:

i)	விரிவான ஆய்வு	—	ஒரு ஆய்வுக் குழு — மாதத்திற்கு ஒரு அலுவலகம்
ii)	திடீர் ஆய்வு	—	ஒரு ஆய்வுக் குழு — மாதத்திற்கு 20 அலுவலகங்கள்
iii)	ஊழல் மற்றும் விழிப்புப் பணி அலுவலர்களுடன் இணைந்து ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்துதல்.	—	மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாதத்திற்கு ஒரு கூட்டம்.
iv)	பயிற்சி	—	i) மாவட்ட அளவிலான அதிகாரிகளுக்கு ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்து ஒரு நாள் பயிற்சி அளித்தல் ii) இரண்டு நாட்களுக்கு அலுவலக நடைமுறைகள் குறித்து இரண்டாம் நிலை அலுவலர்களான கண்காணிப்பாளர் / முதுநிலை உதவியாளர்களுக்கு குறுகிய காலப் பயிற்சி அளித்தல்
v)	வரவு செலவு	—	ஊதியம், படிகள், எரிபொருள் போன்ற செலவினங்களுக்கு அரசுக்கு கருத்துரு அனுப்புதல்.

8(7) 2020-21-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்:

மூன்று அலகுகளை கொண்ட அடுக்கு-1 (ஆய்வு-குழு 1, 2 மற்றும் 3)

	ஆண்டு திட்டத்தின் படி இலக்கு	**முடிவுற்றது**
துறைத் தலைமை அலுவலகங்களில் முதனிலை ஆய்வுகள்	36(கொரோனா-19 பெருந்தொற்றால் 15 ஆக மாற்றியமைக்கப்பட்டது)	10

[2021 செப்டம்பர் 13

அடுக்கு-2 - 11 அலகுகள் உள்ளடக்கியது (11 மாவட்ட ஆய்வுக் குழுக்கள்)

	ஆண்டு திட்டத்தின் படி இலக்கு	முடிவுற்றது
விரிவான ஆய்வு	132	75
திடீர் ஆய்வு	2640	1857
மாவட்ட ஆட்சித் தலைவரால் விழிப்புப் பணி மற்றும் ஊழல் தடுப்பு பிரிவு அலுவலகத்துடன் ஒருங்கிணைந்த கூட்டம்	132	45

8(8) முன்னோக்கி பயணித்தல்

ஆய்வுப் பணி நடைமுறைகளானது அதிக காலம் எடுத்துக் கொள்வதாகவும், விரிவானதாகவும் உள்ளன. இதனால், ஆய்வுக் குழுவினருக்கு திட்டமிடுதலிலும், ஆவணப்படுத்துதலிலும் மற்றும் அதன் தொடர்பான செயல்பாடுகளாலும் மனித ஆற்றல் செலவினமும், காலவிரயமும் ஏற்படுகிறது. அலுவலக ஆய்வு பணிகளினால், ஆய்வுக்குட்படும் அலுவலகங்களின் தினசரி நடவடிக்கைகளில் காலதாமதம், இடையூறு மற்றும் இடைநிறுத்தங்கள் ஏற்படுகின்றன. எனவே, இத்துறையானது தகவல் தொழில்நுட்ப அடிப்படையில் ஆய்வுத் தகவல்களை குறித்த நேரத்தில் சேகரித்து அதனை பல்வேறு நிலை அலுவலர்களுக்கு தெரிவித்து, தொடர் நடவடிக்கையை உறுதி செய்ய கொள்கை அளவில் ஒரு முடிவு எடுத்துள்ளது.

ஆய்வு குறித்த காரணிகளான சரிபார்ப்பு பட்டியல், திறன் அளவைக் குறியீடு மற்றும் தரநிர்ணயம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக மாற்றப்படும்.

பொது மக்கள் தொடர்பு அதிகளவில் உள்ள அலுவலகம் மற்றும் மிகவும் நலிவடைந்தோர் நலம்பேண சேவைகளை நேரடியாக வழங்கும் துறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, மக்கள் பணியாற்றுவதில் முன்னுரிமை வழங்கி அரசளவில் ஒரு முத்திரையைப் பதிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

2021 செப்டம்பர் 13]

நடைமுறையில் விதிமுறைகளுக்கு இணக்கமான செயல்பாடுகள், விதிகளை மீறிய செயல்பாடுகள் மற்றும் முன்மாதிரியான செயல்பாடுகளை தெரிவிக்கக்கூடிய படிவங்கள் ஆய்வில் கட்டாயமாக்கப்படும். ஆய்வுக் குழுக்களினால் கண்டறியப்படும் விவரங்கள் சீர்திருத்த நடவடிக்கைக்கும், விவரங்களை உடனுக்குடன் பகிர்ந்துகொள்வதற்கும் ஏதுவாக ஒருங்கிணைக்கப்படும்.

மாநில அரசின் மனிதவள மேலாண்மைத் துறையின் அதிகார பகிர்வின்கீழ் ஆய்வுக் குழு செயல்பட்டு வருகிறது. எனவே, ஆய்வுக் குழுவின் சட்டபூர்வமான கட்டமைப்பை மீள ஆய்ந்து அதன் செயல்திறன் மேம்பட வழிவகை செய்யப்படும்.

இந்த ஆய்வுக் குழுவின் 2 அடுக்குகளிலும், அலுவலர்கள் பயிற்சியாளர்களாகவும், நடைமுறை விதிகளை கடைபிடிப்பதை உறுதி செய்பவர்களாகவும் இருப்பதால், ஆய்வின் திறனை முழுமையாகப் பெற வேண்டுமெனில், மாவட்ட மற்றும் மாநில அளவில் உள்ள ஆய்வு அலுவலர்களுக்கு விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் தொடர்புடைய பயிற்சிகள் அளிக்க வேண்டியது அவசியமாகிறது.

9. பயிற்சி

பயிற்சியும், முயற்சியும் எழுச்சியை ஏற்படுத்தும் செயல்பாடுகள். சரியான முறையில் பயிற்சி பெறுபவர்கள் நிபுணர்களாகிறார்கள். அவர்கள் காலப்போக்கில் அரசு விதிகளை ஏடுகளில் எழுதாமல் இதயத்தில் எழுதி வைத்துக்கொள்கிறார்கள். திறமையான இளைஞர்களை, பொதுப் பணியில் ஈர்க்கும் மகத்தான பணியை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் திறம்பட மேற்கொண்டு வருகிறது. அலுவலக நிர்வாகம், கோப்பு பராமரிப்பு, அரசு விதிகள், தணிக்கை தொடர்பான அடிப்படைப் பயிற்சியை அளிப்பதன்மூலம் மட்டுமே அவர்கள் கோப்புகளை கையாளும் திறன் பெறுகிறார்கள்.

பயிற்சியின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொண்டு, மனிதவள மேலாண்மைத் துறை, தலைமைச் செயலக பயிற்சி நிலையம், அண்ணா மேலாண்மை நிலையம், 'அ' மற்றும் 'ஆ' பிரிவினருக்கான அடிப்படை பயிற்சி நிலையம், பவானிசாகரில் அமைந்துள்ள குடிமைப் பணியாளர் பயிற்சி

நிலையம் என்கிற நான்கு பயிற்சி பிரிவுகளைக் கொண்டு செயல்படுகிறது.

அதே நேரத்தில், தமிழகத்திலிருந்து பளபளக்கும் நேர்மையுடன் சுடர்விடும் அறிவுடன் திகழும் இளைஞர்கள் அகில இந்தியப் பணிகளில் அடியெடுத்து வைத்து நம் மாநிலத்தின் மாண்பைப் பாரெங்கும் பரப்ப வேண்டும் என்பதற்காக அகில இந்தியப் பணிகளுக்கான குடிமைப் பணி பயிற்சி நிலையம் சென்னையில் செயல்பட்டு வருகிறது. இவற்றைத் தவிர, பாரதியார் பல்கலைக்கழகத்திலும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலும் முதல்நிலை தேர்விற்கு இளைஞர்களை ஆயத்தப்படுத்தும் பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர, போட்டித் தேர்வு மையங்களும் தமிழக அரசுப் பணிகளுக்காக இளைஞர்களுக்கு வழிகாட்டும் வகையில் நடைபெறுகின்றன.

9 (1) தலைமைச் செயலக பயிற்சி நிலையம்

தலைக்கு மூளைபோல மாநிலத்திற்குத் தலைமைச் செயலகம். மூளை முன்நின்று உத்தரவு பிறப்பித்தால்தான் அவயங்கள் இயங்கி செயல்படத் தொடங்கும். அரசு ஆணைகளிலிருந்துதான் அலுவலகங்களில் நடவடிக்கைகள் தொடங்குகின்றன.

திட்டங்களைத் தீட்டவும், சட்டங்களை வழங்கவும் தலைமைச் செயலகமே தலையாய இடமாக இருக்கிறது. தலைமைச் செயலகத்திற்கு புதிதாக நியமிக்கப்படும் அலுவலர்களுக்கு அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் இந்தப் பயிற்சியின்போது கோப்புகள் குறித்தும், அரசாணைகள் குறித்தும், நீதிமன்றத் தீர்ப்புகள் குறித்தும், நினைவூட்டு குறிப்புகள் குறித்தும், காலமுறை பதிவேடுகள் குறித்தும் தெரிந்துகொண்டு பணியைச் செம்மையாய்ச் செய்ய தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்கிறார்கள்.

இப்பயிற்சி நிலையம் இதுவரை 100 அணிகளில் உதவிப் பிரிவு அலுவலர்கள், நேர்முக உதவியாளர்கள், உதவியாளர், நேர்முக எழுத்தர், தட்டச்சர்கள் ஆகியோருக்கு அடிப்படைப் பயிற்சி அளித்துள்ளது.

உலகளாவிய பெருந்தொற்று சூழல் காரணமாக, அடிப்படைப் பயிற்சியினை வகுப்பறை சூழலில் நடத்த இயலவில்லை. எனவே, 99 ஆவது மற்றும் 100 ஆவது அணிகளின் அடிப்படைப்

பயிற்சி வகுப்புகள், ஒரு மாற்றுமுறையாக / புதிய முறையில், பயிற்சி பெறுபவர்களுக்கு காணொலிப் பாடங்கள் மின்னஞ்சல் வாயிலாக நடத்தப்பட்டன. ஒரு அணியில் ஒரே நேரத்தில் அதிக எண்ணிக்கையிலான பயிற்சி பெறுபவர்களுக்கு பயிற்சியளிக்க இது வழி வகுத்தது.

9(2) பயிற்சித் துறைத் தலைவர் அலுவலகம்

பல்வேறு துறைகளில் அளிக்கப்பட்டு வரும் பயிற்சி நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காக, அண்ணா மேலாண்மை நிறுவன இயக்குநர் 22-10-1999 முதல் அலுவல்வழி பயிற்சித் துறை தலைவராக நியமிக்கப்பட்டார். அலுவல்வழி பயிற்சித் துறை தலைவர் (DGT) பயிற்சி குறித்த ஆலோசனைகளை அரசுக்கு வழங்குகிறார். மேலும், அண்ணா மேலாண்மை நிறுவனம் (AIM) தமிழ்நாடு நிருவாக பயிற்சி நிறுவனமாக அறிவிக்கப்பட்டது. பயிற்சித் துறை தலைவரின் கட்டுப்பாட்டின்கீழ் பின்வரும் பயிற்சி நிறுவனங்கள் செயல்படுகின்றன:

i. “அ” மற்றும் “ஆ” பிரிவு அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சி நிலையம், சென்னை.

ii. அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்

iii. அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையம், சென்னை.

iv. போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம்

9(3) அடிப்படைப் பயிற்சி

(அ) தொகுதி ‘அ’ மற்றும் ‘ஆ’ அலுவலர்களுக்கான அறிமுகப் பயிற்சி திட்டம்

தொகுதி ‘அ’ மற்றும் ‘ஆ’ அலுவலர்களுக்கான பயிற்சி நிலையம் அண்ணா மேலாண்மை நிலைய வளாகத்தில் அமைந்துள்ள “காஞ்சி” கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மாநில அரசின் பல்வேறு துறைகளில் பணிபுரிந்து வரும் நேரடி நியமனம் மற்றும் பதவி உயர்வு பெற்ற தொகுதி ‘அ’ மற்றும் ‘ஆ’ அலுவலர்களுக்கு, அலுவலக நிருவாகம், நிதி நிருவாகம், சட்டம், பொது நிதி, பொது நிருவாகம், மேலாண்மைக் கோட்பாடுகள், திட்டமிடல் மற்றும் மேம்பாடு, பொருளாதாரம், கணினி அறிவியல் ஆகிய பொருண்மைகளில் முறையே 35 நாட்கள் மற்றும்

21 நாட்கள் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சி பொது மக்களின் நலனிற்கான நிருவாக மற்றும் செயலாக்க பணிகளை மேற்கொள்ள உதவுகிறது. இப்பயிற்சி நிறுவனம் மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகிறது.

2020-2021 ஆம் நிதி ஆண்டில், தொகுதி 'அ' அலுவலர்கள் 19 பேர் மற்றும் தொகுதி 'ஆ' அலுவலர்கள் 184 பேர் என மொத்தம் 203 அலுவலர்கள் பயிற்சி பெற்றனர்.

(ஆ) அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர்

பவானிசாகர், இயற்கை எழில் கொஞ்சும் அழகிய இடம். தூய காற்றும் இனிய சூழலும் அமையப்பெற்ற அந்த இடத்தில் தொடக்கநிலை பணியாளர்களுக்கு, அவர்களுடைய கவனம் சிந்தாமல் சிதறாமல் பயிற்சியில் மட்டுமே முழு கவனத்தைச் செலுத்தும்பொருட்டு நேர்த்தியான சூழலில் இப்பயிற்சி நிலையம் 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

அரசு இயந்திரம் வெற்றிகரமாக செயல்படுவதற்காக அலுவலகப் பயிற்சி/பணி நடைமுறைகள், மக்கள் தொடர்பு மற்றும் கணக்கியல் போன்ற பயிற்சிகள், பணியாளர்கள் தங்களின் பணிகளை திறமையாக மேற்கொள்வதற்காக, கட்டாயப் பயிற்சியாக அளிக்கப்படுகிறது. பயிற்சியின் நிறைவில் நடத்தப்படும் தேர்வில் அவர்கள் தேர்ச்சி பெறவேண்டும். இந்த பயிற்சி நிலையம், அதி நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டுள்ளது.

பெருந்தொற்று காரணமாக, பொது முடக்கக் காலத்தில் பயிற்சிகள் நிறுத்தி வைக்கப்பட்டன. இதனால் இதுநாள் வரையில், 8,500 அரசுப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவில்லை.

இந்த பின்னடைவு நிலையைக் குறைத்திட, அனைத்து மாவட்ட தலைமையகங்களில் பரவலாக்கப்பட்ட மற்றும் சுருக்கப்பட்ட அடிப்படை பயிற்சி வகுப்பை நடத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. தெரிவு செய்யப்பட்ட மையங்களில் இணையதளம் வாயிலாகவும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செயல் திட்டம்

(i) இணையவழிப் பயிற்சி

ஒரு அணியில் 500 பயிற்சி பெறுபவர்கள் வீதம் இணையதளம் வாயிலாக 35 நாட்கள் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

2021 செப்டம்பர் 13]

2021-2022 ஆம் ஆண்டில், மொத்தம் ஆறு அணிகளில் 3000 பணியாளர்கள் பயிற்சியை நிறைவு செய்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ii) பரவலாக்கப்பட்ட வகுப்பறைப் பயிற்சி

மாவட்டங்களில் ஒவ்வொரு அணியிலும் 250 பணியாளர்களுக்கு பரவலாக்கப்பட்ட நேரடி அடிப்படைப் பயிற்சி 37 நாட்களுக்கு நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2021-2022 ஆம் ஆண்டில், 3000 பணியாளர்கள் பன்னிரண்டு அணிகளில் பயிற்சியை நிறைவு செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதன்படி தற்போதைய பின்னடைவு 13 மாதங்களில் முடிவுறும்.

9(4) அண்ணா மேலாண்மை நிலையம்

பணியில் சேர்ந்து பல்லாண்டுகள் ஆனவர்களும் அவ்வப்போது தங்களைப் புதுப்பித்துக்கொள்ள கட்டாய பயிற்சியினை 'மகிழம்பூ' வளாகத்தில் உள்ள அண்ணா மேலாண்மை நிலையம் அளித்து வருகிறது. இப்பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளர்கள் முதல் இந்திய ஆட்சிப் பணியாளர்கள் வரை அனைவரும் ஏதேனும் ஒரு காலகட்டத்தில் பயிற்சி பெறுகிறார்கள்.

அண்ணா மேலாண்மை நிலையம் (AIM) அண்மைக்காலச் சட்டங்கள், நீதிமன்ற ஆணைகள், தகவல் தொழில்நுட்பத்தில் சிறந்த நடைமுறைகள் குறித்த குறுகிய கால புத்தாக்கப் பயிற்சி அளித்து வருகிறது.

இந்திய அரசால், அவ்வப்போது அனுப்பப்படும் அனைத்திந்திய குடிமைப் பணி அதிகாரிகளுக்கும் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

அண்ணா மேலாண்மை நிலையம் (AIM), பல்வேறு துறைகளின் தேவைக்கேற்ப பயிற்சிகளை வழங்கி வருகிறது.

2019-2020 ஆம் ஆண்டில், அண்ணா மேலாண்மை நிலையம் மற்றும் அதன் மதுரை, திருச்சி மற்றும் சேலத்தில் உள்ள மண்டல பயிற்சி நிலையங்கள் மூலமாகவும், 662 பயிற்சித் திட்டங்கள் வாயிலாக 26,288 பணியாளர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியிலுள்ள 2000 பள்ளி ஆசிரியர்களுக்கு ஒரு புதிய முயற்சியாக தகவல் மற்றும் தொலைத்

[2021 செப்டம்பர் 13

தொடர்பு தொழில்நுட்பம் (ICT) சார்ந்த பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. இதுவரை 600 ஆசிரியர்களை உள்ளடக்கிய 24 பயிற்சிகள் நடத்தப்பட்டன. சத்துணவுப் பணியாளர்கள், நியாய விலைக் கடை விற்பனையாளர்கள், கல்வி, சுகாதாரம், சமூக நலம் மற்றும் கருவூலத் துறை அலுவலர்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையத்தில், பாலின வேறுபாடு நீக்குதல், பெண்களுக்கு அதிகாரமளித்தல், பணியிடத்தில் பெண்களை கண்ணியமாக நடத்துதல் போன்ற சிறப்புப் பயிற்சிகளும் கூடுதலாக நடத்தப்படுகின்றன. குறிப்பிடத்தக்க பயிற்சியாக, மக்கட்தொகைக் கணக்கெடுப்பு பயிற்சியும், வணிக வரித் துறை பணியாளர்களுக்கான பயிற்சிகளும் இப்பயிற்சி நிலையத்தால் மேற்கொள்ளப்பட்டன.

இப்பயிற்சி நிலையத்தில் நடத்தப்படுகின்ற பயிற்சிகளுள், மகத்தான வரவேற்பைப் பெறுகிற ஒரு பயிற்சி, பணி ஓய்வுக்கு முந்தைய கலந்தாய்வு. பணி ஓய்வு பெறப் போகிறவர்கள் பணிக்கொடையை முதலீடு செய்வதற்கும், பணமோசடி நிறுவனங்களிடம் ஏமாந்து விடாமல் விழிப்புணர்வோடு இருப்பதற்கும், ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் மனநிறைவோடு கழிப்பதற்கும், மனநலம் பேணுவதற்கும் ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.

9(5) பயிற்சியில் நவீன முயற்சிகள்

அரசுப் பணியாளர்கள் மற்றும் பொது மக்களின் நலனுக்காக AIM TN என்ற பெயரில் காட்சி ஊடகப் பாதை (Youtube channel) ஒன்றை அண்ணா மேலாண்மை பயிற்சி நிலையம் வடிவமைத்து உருவாக்கியுள்ளது. இந்த ஊடகப் பாதைக்கு 50,000 பேர் பார்வையாளர்களாகவும், 5,000 பேர் சந்தாதாரர்களாகவும் உள்ளனர்.

9(6) அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம்

தமிழ்நாட்டில் உள்ள சமூகப் பொருளாதார முன்னேற்றத்தில் பின்தங்கிய பிரிவுகளைச் சார்ந்த இளைஞர்கள் அகில இந்தியப் பணிகளுக்குச் செல்ல வேண்டும் என்கிற அடிப்படையில், பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் & பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கான தேர்வுக்கு முந்தைய பயிற்சி மையங்கள் முறையே 1966 மற்றும் 1971 ஆம் ஆண்டுகளில்

2021 செப்டம்பர் 13]

துவங்கப்பட்டன. இப்பயிற்சி மையங்கள், 2000 ஆம் ஆண்டில் அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையம் (AICSCC) என பயிற்சித் துறைத் தலைவரின் கட்டுப்பாட்டின்கீழ் ஒன்றிணைக்கப்பட்டது. சென்னையில் உள்ள முதன்மைப் பயிற்சி நிலையம், பசுமைவழிச் சாலையில் அமைதியான சுற்றுப்புறச் சூழலில் அனைத்து வசதிகளுடன் அமைந்துள்ளது. இப்பயிற்சி நிலையத்தின் மண்டல மையங்கள், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் செயல்படுகின்றன. பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் & பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கான தேர்வர்களுக்கான இட ஒதுக்கீட்டு கொள்கைகளின்படி சேர்க்கை மேற்கொள்ளப்படுகிறது. இந்தப் பயிற்சி மையத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கும் இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் முதனிலைத் தேர்வுப் பயிற்சிக்கு தகுதியுடைய மாணவர்களை தெரிவு செய்வதற்கான நுழைவுத் தேர்வு அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையத்தால் (AICSCC) நடத்தப்படுகிறது. நுழைவுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, முதனிலைத் தேர்வை எதிர்கொள்வதற்காக சுமார் ஆறு மாதங்களுக்கு (டிசம்பர் - மே) பயிற்சியளிக்கப்படுகிறது.

முதனிலைத் தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்கள் முதன்மைத் தேர்வை எதிர்கொள்வதற்காக மூன்று மாதங்களுக்கு (ஜுலை - செப்டம்பர்) முனைப்பான பயிற்சி அளிக்கப்படுகிறது. முதனிலைத் தேர்வில் வெற்றிபெற்ற தமிழ்நாட்டு மாணவர்கள் அனைவரும் முதன்மைத் தேர்வுப் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

முதன்மைத் தேர்வில் வெற்றிகரமாக தேர்ச்சி பெற்ற மாணவர்கள் புதுதில்லியில் நடைபெறும் ஆளுமைத் தேர்வை எதிர்கொள்வதற்கு முன்னரே, அவர்களுக்கு மாதிரி ஆளுமைத் தேர்விற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது.

சென்னை பயிற்சி மையத்தில் ஒவ்வொரு ஆண்டும் தகுதியுடைய 325 தேர்வர்களுக்கு குடிமைப் பணி தேர்வுகளுக்கான முதனிலை, முதன்மை மற்றும் ஆளுமைத் தேர்வு குறித்த பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்களில் 225 நபர்கள் உள்ளுறை வசதிகள்பெறலாம்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திலும், கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழகத்திலும் முதனிலைத் தேர்விற்காக மட்டும் தலா 100 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.

முதன்மை பயிற்சிக்காக அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் பயிற்சிக் கையேடுகள் வாங்குவதற்கான செலவினை எதிர்கொள்வதற்காக வருமான உச்சவரம்பைப் பொருட்படுத்தாமல், 225 மாணவர்களுக்கும் மாதமொன்றுக்கு ரூ.3,000/- என மூன்று மாதங்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

அகில இந்திய குடிமைப் பணிகள் பயிற்சி மையமும் AICSCC TN என்ற பெயரில் புதிய காட்சி ஊடகப் பாதை (Youtube channel) ஒன்றை இந்தியாவிலுள்ள அனைத்து ஆர்வலர்களும் பயன்பெறும் வகையில் உருவாக்கியுள்ளது. இந்த ஊடகப் பாதைக்கு 5,02,285 பேர் பார்வையாளர்களாகவும், 23,900 பேர் சந்தாதாரர்களாகவும் உள்ளனர்.

9(7) போட்டித் தேர்வுகள் பயிற்சி மையம்

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC), பணியாளர் தேர்வு வாரியம் (SSC), இரயில்வே பணியாளர் தேர்வு வாரியம் (RRB), வங்கிப் பணியாளர் தேர்வு நிறுவனம் (IBPS) மற்றும் ஒருங்கிணைந்த பாதுகாப்பு துறை பணிகள் (CDS) மற்றும் மத்திய, மாநில பொதுத் துறை நிறுவனங்களில், வேலைவாய்ப்பை பெறுவதற்காக தமிழ்நாட்டு இளைஞர்களை தயார்படுத்த போட்டித் தேர்வு பயிற்சி மையங்கள் மாநிலம் முழுவதும் நிறுவப்பட்டு வருகின்றன.

10. மின்னணு ஆளுகை

குடிமக்களுக்கு அரசு சேவைகளைத் திறம்பட வழங்கும் வண்ணம் வெளிப்படைத் தன்மை பொறுப்புடைமைகளை மேம்படுத்த ஏதுவாக பின்வரும் தகவல் தொடர்பு தொழில் நுட்பமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன:-

- தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005-ன்கீழ் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கவும் கட்டணங்கள் செலுத்தவும் 25-6-2021 முதல் இணையவழி வசதி இத்துறையில்

2021 செப்டம்பர் 13]

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது மற்ற துறைகளிலும் பயன்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

- இத்துறையினால் நிருவகிக்கப்படும் பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகள் https://www.tn.gov.in என்ற தரவுத் தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

- இத்துறையினால் வெளியிடப்பட்ட முக்கியமான அரசாணைகளின் மின்னணுத் தொகுப்பு தலைமைச் செயலக அகத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

- தபால் பகிர்ந்தளிப்பு, தன்பதிவேடு பதிவு/சோதனை (ஆய்வு) ஆகியவற்றிக்கான தேசிய தகவலமைப்பு மையத்தினால் உருவாக்கப்பட்ட மின்னணு கோப்பு செயலாக்க அமைப்பு (EFPS) இத்துறையில் நடைமுறையில் உள்ளது.

- தலைமைச் செயலகத் துறைகளில் அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் தனிப்பட்ட விவரங்கள், பணியாளர் தகவலமைப்பு (PINFOSYS) என்ற மின்னணு தளத்தில் பராமரிக்கப்படுகிறது.

- தலைமைச் செயலக அலுவலர்கள்/ஊழியர்களின் நிருவாகப் பட்டியல் பின்வரும் மின்னணு தளத்தில் பராமரிக்கப்படுகிறது:

 (i) ஏறக்குறைய 400 அலுவலர்களின் விவரப்பட்டியல் http://192.168.149.234/par/est/default.html என்ற இணைப்பில் உள்ளது.

 (ii) ஏறக்குறைய 2400 பணியாளர்களின் விவரப் பட்டியல்கள் http://192.168.149.165/estt/estt.html மற்றும் http://192.168.149.165/estt/esttp.html என்ற இணைப்புகளில் உள்ளது.

11. புதிய முயற்சிகள்

- வளர்ச்சிக்கான வாய்ப்புவரம்பு குறைந்த அளவில் உள்ளவர்களையும் கருத்தில் கொண்டு அனைத்துத் தரப்பிற்குமான வளர்ச்சியை

உறுதிப்படுத்தும் வகையில், '2010 ஆம் ஆண்டு தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களை அரசின்கீழ் வரும் பணிகளில் முன்னுரிமையின் அடிப்படையில் பணி நியமனம் செய்தல் சட்டம்' வாயிலாக தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களுக்கு அரசுப் பணி நியமனத்தில் 20% முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது, மேற்படி முன்னுரிமையானது ஒன்றாம் வகுப்பு முதல் வரையறுக்கப்பட்ட கல்வித் தகுதி வரை தமிழில் பயின்றவர்களுக்கு மட்டுமே பொருந்தும் என்று 16-8-2021 நாளிட்ட ஆணையில் தெளிவுரைகள் வெளியிடப்பட்டுள்ளது.

- மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கான 20% ஒதுக்கீட்டில், சிறப்பு ஒதுக்கீடாக மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (வன்னியகுல சத்திரியர்), மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்கள், மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர்களுக்கு முறையே 10.5%, 7%, 2.5% என உள் ஒதுக்கீடு செய்து சட்ட எண் 8/2021 நிறைவேற்றப்பட்டு 26-2-2021 முதல் அமல்படுத்தப்பட்டது. கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் சில பிரிவினர்களுக்கு போதுமான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்ய அரசு வேலைவாய்ப்பில் 200 புள்ளி இன சுழற்சி (நெடுமட்ட ஒதுக்கீடு) திருத்தி ஆணை வெளியிடப்பட்டது. மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (வன்னியகுல சத்திரியர்) மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர்மரபினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பிரிவினைச் சார்ந்த ஆதரவற்ற விதவை, முன்னாள் படைவீரர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் தமிழ் வழியில் கல்வி பயின்றவர்களுக்கான கிடைமட்ட ஒதுக்கீட்டினை திருத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

- அரசு ஊழியர்களின் நலன் குறிப்பாக பெண் ஊழியர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பொறுப்பின் தொடர்ச்சியாக, உயிருடன் இரண்டுக்கும் குறைவான குழந்தைகளைக் கொண்ட திருமணமான பெண் அரசு

ஊழியர்களுக்கு அனுமதிக்கப்பட்ட மகப்பேறு விடுப்பை 9 மாதங்களிலிருந்து 12 மாதங்களாக உயர்த்தி அரசாணை (நிலை) எண் 84, மனிதவள மேலாண்மைத் (அவி.3) துறை, நாள் 23-8-2021-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வரசாணை 1-7-2021முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

12. முடிவுரை

இத்துறை பணியாளர்களின் திறனை மேம்படுத்தி தரமான சேவை வழங்குவதன்மூலம் அனைத்துத் தரப்பினருக்குமான உள்ளார்ந்த சமூக வளர்ச்சியை இலக்காக நிர்ணயித்துள்ள அரசின் நோக்கத்தை எய்திட வழிவகை செய்யும்.

இணைப்பு-VII

(112 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மானியக் கோரிக்கை எண் 50—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

கொள்கை விளக்கக் குறிப்பு, 2021-2022

*ஆரம்ப காலக்கட்டத்தில், தமிழ்நாட்டில் குடிமைப் பணிகள் ஒழுங்குமுறைகள், 1889-ன்கீழ் மாநில அரசின் ஓய்வூதியதாரர்கள் நிர்வகிக்கப்பட்டனர். மெட்ராஸ் ஓய்வூதியச் சட்டத்தின்கீழ் (*Madras Pension Code*) ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. இச்சட்டத்திற்கு பதிலாக, 1-1-1979 அன்று முதல் தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1-4-2003-க்கு முன்னர் பணியில் சேர்ந்த அனைத்து பணியாளர்களுக்கும் பொருந்தும். பழைய ஓய்வூதிய திட்டத்தின்கீழ் தற்போது 3,44,834 அரசுப் பணியாளர்கள் உள்ளனர். மேலும்,கூடுதலாக 7,31,559 ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். மானியக் கோரிக்கை எண் 50-ன்கீழ், ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுகாலப் பயன்களுக்கான செலவினத்தை மேற்கொள்ளும் பொருட்டு 28,250.59 கோடி ரூபாய் பின்வரும் முக்கிய இனங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

வ. எண்.	விவரம்	எண்ணிக்கை
1.	மாநில அரசு ஓய்வூதியதாரர்கள்	*4,03,590*
2.	ஆசிரியர் ஓய்வூதியதாரர்கள்	*65,514*
3.	மாநில அரசு குடும்ப ஓய்வூதியதாரர்கள்	*2,14,931*
4.	ஆசிரியர் குடும்ப ஓய்வூதியதாரர்கள்	*26,598*
5.	கருணைத் தொகை பெறும் ஓய்வூதியதாரர்கள் உட்பட ஏனைய ஓய்வூதியதாரர்கள்	*20,926*
	மொத்தம்	**7,31,559**

2021 செப்டம்பர் 13]

1-4-2003 ஆம் நாள் அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியில் சேர்ந்துள்ள பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.தற்போது, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் 5,88,166 பணியாளர்கள் உள்ளனர். மேலும் 1-4-2003-க்கு பிறகு பணியமர்த்தப்பட்ட 22,893 பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திலிருந்து வயது முதிர்வு மற்றும் பிறகாரணங்களுக்காக திட்டத்தில் சேர்ந்த பலன்களைப் பெற்று வெளியேறி உள்ளனர்.

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

2. முன்னுரை:-

(i) ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி மாநில அரசானது 1-6-1988 முதல் ஒன்றிய அரசின் ஊதிய விகிதங்களை தனது பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்தியது. இதன் விளைவாக, ஓய்வுபெற்ற பணியாளர்களின் ஓய்வூதியமானது அப்பணியாளர்கள் வகிக்கும் பதவிக்கான திருத்தப்பட்ட ஊதிய விகிதத்தின் அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்டது. அதிகரித்து வரும் சம்பளம் மற்றும் ஓய்வூதிய செலவினங்களால் அரசின் நிதிச் சுமை ஏற்க இயலாத அளவிற்கு அதிகரித்து வருவதால், உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் நலத் திட்டங்களை நிறைவேற்ற, தேவையான நிதி ஆதாரங்களை மட்டுப்படுத்துகிறது.

(ii) எனவே ஓய்வூதியத் திட்டத்தினை மறுசீரமைப்பதற்கான பரிந்துரைகளை அளிக்கும் பொருட்டு கர்நாடக அரசின் ஓய்வுபெற்ற தலைமைச் செயலாளர் திரு. பி.கே. பட்டாச்சார்யா, அவர்களின் தலைமையில் மத்திய அரசு 26-6-2001 அன்று உயர்மட்ட வல்லுநர் குழுவினை அமைத்தது. இந்த உயர்மட்ட வல்லுநர் குழுவானது தனது பரிந்துரையில், பணியாளர்கள் மற்றும் மத்திய அரசிடமிருந்து சமமான பங்களிப்புடனும், பணியாளர்கள் வரையறுக்கப்பட்ட பயனுள்ள ஓய்வூதியம் பெறக்கூடிய வகையிலான புதிய திட்டத்தை பிப்ரவரி 2002-ல் பரிந்துரைத்தது. இந்திய அரசின் நோக்கமானது, புதியதாக அரசுப் பணியில் சேரும் பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ள பங்களிப்புடன்கூடிய ஒரு திட்டத்தை வடிவமைப்பதோடு, மாநில அரசுப் பணியாளர்கள், நடுத்தர வர்க்கத்தினை சார்ந்த சுயதொழில் புரிபவர்கள் மற்றும் அமைப்புசாராத் துறைகளில்

குறைந்த வருமானம் உள்ளவர்கள் போன்ற பிற குழுக்களுக்கு சேவை செய்யும் நோக்கத்தில் உட்கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

(iii) ஓய்வூதிய சீர்திருத்தம் தொடர்பான மத்திய அரசின் முன்முயற்சியினைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் 2002-2003 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

"நாட்டின் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழக அரசு தான் மிக அதிக அளவிலான ஓய்வூதிய செலவுப் பொறுப்புகளை ஏற்றுள்ளது. மொத்த வருவாயினச் செலவினங்களில் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் செலவினங்களில் இதுவும் ஒன்றாகும். 2001 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முதல் தேதியிலிருந்து பணியில் நியமிக்கப்படும் அனைத்துப் பணியாளர்களும், மத்திய அரசினால் அமைக்கப்பட்டுவரும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தைப் (Contributory Pension Scheme) போன்றதொரு புதிய திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படுவர் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது."

(iv) வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டதன் தொடர் நடவடிக்கையாக, 1-4-2003 ஆம் நாள் அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ மாநில அரசுப் பணியில் சேர்ந்துள்ள பணியாளர்களுக்கு அரசாணை (நிலை) எண்.259, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் 06-08-2003-ன் வாயிலாக பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனடிப்படையில் 1-4-2003 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ பணியமர்த்தப்பட்ட பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டனர். மேலும் அரசாணை எண்.304, நிதித் துறை, நாள்.27-5-2004-ன் வாயிலாக பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட பணியாளர்களுக்கு தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள், 1978 பொருந்தாது என்று உரிய திருத்தங்கள் வெளியிடப்பட்டன.

3. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கான வழிமுறைகள்

(i) 1-4-2003 அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியில் சேர்ந்துள்ள பணியாளர்கள் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இவ்வாறு 1-4-2003 அன்று அல்லது அதற்கு பின்னர் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளர்களிடமிருந்து பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு

2021 செப்டம்பர் 13]

பங்களிப்பாக அடிப்படை ஊதியம், அகவிலை ஊதியம் மற்றும் அகவிலைப் படியில் 10 சதவீதம் பிடித்தம் செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், அரசு சமமான அளவு பங்குத் தொகையினை செலுத்துகிறது. அரசு தகவல் தொகுப்பு விவர மையமானது பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கணக்குகளை பராமரித்து வருகின்றது.

(ii) இத்திட்டத்தின்கீழ், 30-6-2021 ஆம் நாள் நிலவரப்படி சுமார் 5,88,166 அரசு, அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்கள் கொண்டு வரப்பட்டு, பங்களிப்புத் தொகை மற்றும் வட்டி உட்பட மொத்தம் 46,052 கோடி ரூபாய் பொதுக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

4. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் சேர்ந்த தொகைக்கான வட்டி விகிதம்

தற்போது, பொது வருங்கால வைப்பு நிதி கணக்குகளுக்கு பொருந்தும் காலாண்டுக்கான வட்டி விகிதத்திலேயே பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்த தொகைக்கான வட்டி அனுமதிக்கப்படுகிறது. பொது வருங்கால வைப்பு நிதிக்கு 1-4-2021 முதல் 30-6-2021 வரையுள்ள கால அளவிற்கு 7.1 சதவீதம் வட்டி அனுமதிக்கப்படுகிறது. தேசிய ஓய்வூதியத் திட்டக் கட்டமைப்பில் பல்வேறு ஓய்வூதிய நிதி மேலாண்மை கணக்குகளின்கீழ் பெறப்படுகின்ற வருமானத்தைவிட இந்த வட்டி விகிதம் குறைவாகவே உள்ளது.

5. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் சேர்ந்த தொகையிலிருந்து செய்யப்பட்ட முதலீடுகள்

தற்போது, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் சேர்ந்த சந்தா தொகையானது, ஆயுள் காப்பீட்டு நிறுவன ஓய்வூதிய நிதி (ரூ.28,725.32 கோடி) மற்றும் ஏல அடிப்படையிலான கருவூலப்பட்டி (ரூ.16,500 கோடி) ஆகியவற்றில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. இம்முதலீடுகளிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையானது பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கு அளிக்கப்படும் பொது வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி விகிதத்தை விட குறைவாக உள்ளது. இந்நிதியிழப்பானது இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் தணிக்கைத் தடையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு அரசுக்கு பெரும் நிதியிழப்பு

[2021 செப்டம்பர் 13

ஏற்படுவதுடன் நிறுவன கட்டமைப்பின்கீழ் முதலீடு செய்யப்பட்டிருந்தால் பணியாளர்களுக்கு அதிக பயன்களை பெற இயலும் .

6. பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வு பெற்றவர்களுக்கு இதுவரை செய்யப்பட்ட தீர்வு

1-4-2003-க்குப் பிறகு பணியமர்த்தப்பட்டு பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் சேர்ந்த பணியாளர்கள் ஏற்கெனவே ஓய்வுபெறத் தொடங்கிவிட்டனர், அத்தகைய ஓய்வூதியதாரர்களுக்கான வருடாந்திர திட்டம் ஏதும் இல்லாத நிலையில், அரசின் இடைக்கால நடவடிக்கையாக அவர்களின் கணக்கில் சேர்ந்த பணியாளர்களின் பங்களிப்பு, அரசின் பங்களிப்பு மற்றும் ஒட்டுமொத்த தொகைக்கான வட்டித் தொகையுடன் தீர்வாக வழங்கப்பட வேண்டும் என்று அரசாணை (நிலை) எண் 59, நிதி (ஓ.கு.பி) துறை, நாள் 22-2-2016 வாயிலாக ஆணையிடப்பட்டுள்ளது. 31-7-2021 ஆம் நாள் நிலவரப்படி, பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின்கீழ், பணி ஓய்வு பெற்றவர்கள், பணித்துறப்பு, இறந்த மற்றும் பணி நீக்கம் செய்யப்பட்ட 22,893 பணியாளர்களுக்கு இறுதி தீர்வு தொகையாக 1,240.28 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. 10 ஆண்டுகளுக்கும் குறைவான பணிக்காலம் முடித்தவர்களுக்கு இந்த முறை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாகும், ஏனெனில் அவர்கள் கணக்கில் குறைந்தபட்ச ஒட்டுமொத்த தொகை மற்றும் குறைந்த வருடாந்திர தொகை மட்டுமே பெற வாய்ப்புள்ளது. எனினும் இந்த நிலை 10 ஆண்டுகளுக்கு மேல் பணிக்காலம் உள்ளவர்களுக்கு குறைந்த பலன் பெறும் நிலை என்பதால் ஏற்புடையதாக அமையாது. வருடாந்திர கொடுப்பனவுகளில் முதலீடுகள் குறித்த தெளிவு இல்லாமல் காலம் நீட்டிக்கப்பட்டுள்ளதால், ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு அதிக பாதுகாப்பற்ற நிலை உள்ளது. எனவே பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தின்கீழ் சேர்ந்துள்ள பங்களிப்புத் தொகையினை கையாள்வதில் தெளிவான வழிமுறை உடனடியாக தேவைப்படுகிறது.

7. உள்ளாட்சி அமைப்புகளுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்

அரசாணை (நிலை) எண். 260, நிதி (ஓ.கு.பி)த் துறை, நாள் 15-10-2015-ன் வாயிலாக மாநகராட்சிகள், நகராட்சிகள்,

2021 செப்டம்பர் 13]
*பேரூராட்சிகள் மற்றும் உள்ளாட்சிகளில் பணிபுரியும் உள்ளாட்சிப் பணியாளர்களுக்கான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்திற்கான மாநில ஒருங்கிணைப்பு அதிகாரியாக (*State Nodal Officer*) கருவூலக் கணக்குத் துறை ஆணையர் அவர்களை அரசு நியமித்துள்ளது. இதற்கான மென்பொருள் உருவாக்கப்பட்டு இதுதொடர்பான புள்ளிவிவரங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.*

8. தமிழ்நாட்டில் உள்ள அகில இந்தியப் பணி அலுவலர்களுக்கான தேசிய ஓய்வூதிய முறை

*தேசிய ஓய்வூதிய முறை 1-1-2004 ஆம் நாள் அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியில் சேர்ந்த தமிழ்நாடு பணி நிலையில் உள்ள அகில இந்தியப் பணி அலுவலர்களுக்காக செயல்படுத்தப்பட்டு வருகிறது. தேசிய ஓய்வூதிய முறைக்கு தேசிய பத்திரங்கள் வைப்பு நிறுவனம் (*National Securities Depository Limited*) ஆவண வைப்பு நிறுவனமாக நியமனம் செய்யப்பட்டதுடன், ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையம் (*PFRDA*) அறக்கட்டளை வங்கியாகவும், ஓய்வூதிய நிதி மேலாளர் மற்றும் வருடாந்திர சேவை வழங்குவோராகவும் தமிழ்நாட்டைச் சார்ந்த அகில இந்தியப் பணி அலுவலர்களுக்கு நடைமுறைப்படுத்த தமிழக அரசினால் 28-6-2017 அன்று ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அகில இந்தியப் பணி அலுவலர்களுக்கான சந்தா மற்றும் அரசின் பங்களிப்புத் தொகையாக 28.73 கோடி ரூபாய் தேசிய ஓய்வூதியத் திட்ட அறக்கட்டளைக்கு (*National Pension Scheme Trust*) 31-7-2021 வரையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.*

9. தேசிய ஓய்வூதிய முறையின் கட்டமைப்பு

தேசிய ஓய்வூதியத் திட்டமானது தனது சந்தாதாரர்கள் ஓய்வூதியத்திற்காக சேமிக்க ஏதுவாக பின்வரும் முக்கிய அம்சங்களை வழங்குகிறது:

(i) தேசிய ஓய்வூதிய முறையானது 1-1-2004 முதல் புதிய ஓய்வூதியத் திட்டமாக செயல்பட்டு வருகிறது. இது 1-1-2004 அன்றோ அல்லது அதன் பின்னரோ ஒன்றிய அரசு பணியில் புதியதாக பணியமர்த்தப்படும் பாதுகாப்பு படையினரை தவிர மற்ற அனைவருக்கும் பொருந்தும். 1-5-2009 முதல் அனைத்து குடிமக்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டதால் இத்திட்டம் தேசிய ஓய்வூதிய முறையாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

(ii) தேசிய ஓய்வூதியத் திட்டமானது வரையறுக்கப்பட்ட பங்களிப்பு அடிப்படையில் அடுக்கு–I மற்றும் அடுக்கு–II என இரண்டு அடுக்குகளாக உள்ளன.

(iii) அடுக்கு–I–ன் கீழான ஓய்வூதிய கணக்கானது 1.1.2004 அன்றோ அல்லது அதன் பின்னரோ அரசுப் பணியில் பணியமர்த்தப்படும் அனைத்து பணியாளர்களுக்கும் கட்டாயமானதாகும். அடுக்கு-I-ல் பணியாளர்களின் சம்பளப் பட்டியலில் இருந்து ஒவ்வொரு மாதமும் பங்களிப்பாக அடிப்படை ஊதியம், அகவிலை ஊதியம் மற்றும் அகவிலைப் படியில் 10 சதவீதம் பிடித்தம் செய்யப்படுகிறது. இந்த பங்களிப்பு தொகையானது ஏழாவது ஊதியக் குழு பரிந்துரைகளின் அடிப்படையில் 14 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அரசு அதற்கு சமமான தொகையினை செலுத்துகின்றது. அடுக்கு-I ஆனது ஆரம்ப கட்டத்தில் திரும்பப் பெற இயலாத கணக்காகவும், தற்போது பகுதி அளவாக திரும்பப் பெறும் கணக்காகவும் மாறியுள்ளது.

(iv) அடுக்கு-II கணக்கானது பொது வருங்கால வைப்பு நிதிக் கணக்கிற்கு நிகராக ஒரு தன்னார்வ சேமிப்புக் கணக்காக 1-12-2009 முதல் நடைமுறையில் இருந்து வருகிறது. செயல்பாட்டில் உள்ள அடுக்கு-I கணக்கானது அடுக்கு-II கணக்கைத் துவங்குவதற்கான முன்நிபந்தனையாகும். அடுக்கு-II-ற்கான பங்களிப்புகள் சந்தாதாரர்களின் விருப்பத்தேர்வின் அடிப்படையில் திரும்ப பெறக்கூடிய ஒரு தனி கணக்காக வைக்கப்பட்டுள்ளது.

(V) 1-1-2004 ஆம் நாள் அன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஒன்றிய அரசுப் பணியில் சேரும் புதிய அரசுப் பணியாளர்களுக்கு தற்போதுள்ள வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியம் மற்றும் பொது வருங்கால வைப்பு நிதி ஆகிய பயன்கள் பொருந்தாது.

(Vi) மைய ஆவண வைப்பு நிறுவனம் மற்றும் ஓய்வூதிய நிதி மேலாளர்கள் நியமிக்கப்பட்டு, ஒவ்வொரு நபரின் கணக்கில் சேர்ந்த நிலுவைத் தொகையும் அவர்களுக்கு மாற்றப்படும் வரை, அரசுப் பணியாளர்களின் பங்களிப்புகள் பொதுக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. மைய ஆவண வைப்பு நிறுவனம் நிலையாக உருவாகும் வரை, மத்திய ஓய்வூதிய கணக்கியல் அலுவலகம் (CPAO) மைய ஆவண வைப்பு நிறுவனமாக செயல்பட்டது.

(Vii) பணம் பெற்று வழங்கும் அலுவலர்/சம்பளக் கணக்கு அலுவலர் (கருவூல அலுவலர்) அல்லது ஆன்லைன் இயங்குதளம்

2021 செப்டம்பர் 13]

/ (eNPS / அல்லது Points of Presence (POP) மூலம் ஒரு தேசிய ஓய்வூதியத் திட்டக் கணக்கை சந்தாதாரர் தொடங்கி நிரந்தர ஓய்வூதியக் கணக்கு எண்ணை (PRAN) பெறலாம்.

(viii) முதலீடு மற்றும் ஓய்வூதிய நிதியினை சந்தாதாரர்கள் அவர்களின் விருப்பத்தின் பேரில் தேர்வு செய்யலாம்;

(ix) சந்தாதாரர்கள் தங்கள் இருப்பிடம், வேலை அல்லது ஓய்வூதிய நிதி மேலாளரை மாற்றினாலும், நாட்டில் எங்கிருந்தும் தங்களின் கணக்கை எளிதாக இயக்கி கையாள வழிவகை செய்கிறது.

(x) சந்தாதாரர்கள் 60 வயது அல்லது அதற்குப் பிறகும் அடுக்கு-I-க்கான கணக்குத் திட்டத்தில் இருந்து வெளியேற முடியும். இத்திட்டத்திலிருந்து வெளியேறும் பணியாளர்கள் அவர்களது ஓய்வூதிய ஒட்டுமொத்த நிதியில் 40% ஏதாவது ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தில் (IRDA) வருடாந்திர பயன்பெறும் வகையில் முதலீடு செய்வது கட்டாயமாகும், இது பணியாளர் மற்றும் அவரைச் சார்ந்தவர்களுக்கு வாழ்நாள் ஓய்வூதியத்தை வழங்கும். சந்தாதாரர்கள் 60 வயதை எய்துவதற்கு முன் திட்டத்தை விட்டு வெளியேறினால், வருடாந்திர ஓய்வூதிய ஒட்டுமொத்த நிதியில் ஓய்வூதிய பலன் பெறும் வகையில் காப்பீட்டு நிறுவனத்தில் 80% கட்டாயமாக முதலீடாக வைக்கப்படும்.

(xi) வெளிப்படையான முதலீட்டு விதிமுறைகள் மற்றும் தேசிய ஓய்வூதியத் திட்ட அறக்கட்டளையின் நிதி மேலாளர்களின் வழக்கமான கண்காணிப்பு மற்றும் செயல்திறனுடன் தேசிய ஓய்வூதியத் திட்டமானது ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மேம்பாட்டு ஆணையத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது.

(xii) ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (PFRDA) ஓய்வூதிய முதலீட்டு சந்தையை ஒழுங்குபடுத்தி மேம்படுத்துகிறது.

மத்திய குடிமைப் பணி (ஓய்வூதியம்) விதி, 1972-ன்கீழ் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கப்படும் “பணிக்கொடை மற்றும் இறப்புப் பணிக்கொடை” ஆகியவை தேசிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பணியாற்றும் பணியாளர்களுக்கும் பொருந்தும் என 2016 ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் ஒன்றிய அரசால் தேசிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பணியாற்றும்

பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஓய்வூதியமாக ரூ.9000/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஏழாவது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1-4-2019 முதல் பணியாளர் மற்றும் அரசின் பங்களிப்பு முறையே 14% ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

10. பல்வேறு மாநிலங்களில் தேசிய ஓய்வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட விவரம்

ஒன்றிய அரசின் தேசிய ஓய்வூதிய திட்டமானது 1-1-2004 முதல் ஒன்றிய அரசுப் பணியாளர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு 29-03-2008 முதல் நிலுவைத் தொகைகள் ஓய்வூதிய நிதி அறக்கட்டளைக்கு (Pension Fund Trust) மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

தேசிய ஓய்வூதியத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தியுள்ள மாநிலங்களின் விவரங்கள் பின்வருமாறு:-

மாநிலங்களின் பெயர்	நடைமுறைப்படுத்தப்பட்ட நாள்
ஆந்திர பிரதேசம்	1-9-2004
அருணாச்சல பிரதேசம்	1-1-2008
அசாம்	1-2-2005
பீகார்	1-9-2005
சத்தீஷ்கர்	1-11-2004
கோவா	5-8-2005
குஜராத்	1-4-2005
அரியானா	1-1-2006
இமாச்சல பிரதேசம்	15-5-2003
ஜம்மு & காஷ்மீர்	1-1-2010
ஜார்கண்ட்	1-12-2004
கர்நாடகா	1-4-2006
கேரளா	1-4-2013
மத்திய பிரதேசம்	1-1-2005

2021 செப்டம்பர் 13]

மாநிலங்களின் பெயர்	நடைமுறைப்படுத்தப்பட்ட நாள்
மகாராஷ்ட்டிரா	1-11-2005
மணிப்பூர்	1-1-2005
மேகாலயா	1-4-2010
மிசோரம்	1-9-2010
நாகாலாந்து	1-1-2010
ஒடிசா	1-1-2005
பஞ்சாப்	1-1-2004
ராஜஸ்தான்	1-1-2004
சிக்கிம்	1-4-2006
தெலுங்கானா	1-9-2014
உத்திர பிரதேசம்	1-4-2005
உத்திரகாண்ட்	1-10-2005
திரிபுரா	1-7-2018

மேற்கு வங்க மாநிலம் தவிர அனைத்து மாநிலங்களும் தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்துள்ளது. தமிழ்நாட்டில் பங்களிப்பு ஓய்வூதிய திட்டமானது 1-4-2003 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் இதுவரையில் நிலுவைத் தொகைகள் தேசிய ஓய்வூதிய அமைப்பிற்கு மாற்றம் செய்வதற்கான வழிமுறைகள் ஏதும் வகுக்கப்படவில்லை.

11. வல்லுநர் குழு அமைத்தல்

தற்போதுள்ள வரையறுக்கப்பட்ட பயன் தரும் ஓய்வூதியத் திட்டத்தை தொடர பல்வேறு அரசுப் பணியாளர்கள்/சங்கங்களின் கோரிக்கையை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, பொருத்தமான முடிவுகளை மேற்கொள்ள அரசிற்கு பரிந்துரைக்க ஏதுவாக 2016 ஆம் ஆண்டில் ஒரு வல்லுநர் குழு அமைக்கப்பட்டது. இக்குழு தனது அறிக்கையினை 27-11-2018 அன்று அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது.

[2021 செப்டம்பர் 13

12. இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் தணிக்கை அறிக்கை குறிப்புகள்

மார்ச் 31, 2018 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான தணிக்கை அறிக்கையில் குறைவான நிதி முதலீடு மற்றும் கருவூலப்பட்டி முதலீட்டிற்கு பெறப்பட்ட குறைவான வட்டி காரணமாக 2015-2018 காலகட்டத்தில் மாநில அரசிற்கு ரூ.797.12 கோடி கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது என கண்டறியப்பட்டுள்ளது. பங்களிப்பு ஓய்வூதிய நிதிக்கு பணியாளர் மற்றும் அரசின் பங்களிப்பு எவ்வாறு முதலீடு செய்யப்பட வேண்டும் என்ற முடிவை எடுப்பதற்கான நீண்ட தாமதம் பணியாளர்களுக்கு கணிசமான நிதி இழப்பை ஏற்படுத்துகிறது மற்றும் நிதி பாதுகாப்பின்மைக்கு உட்படுகிறது. அதே நேரத்தில், அரசாங்கம் எதிர்மறை வட்டி சுமையின் காரணமாக தற்போது ஆண்டுக்கு ரூ.1200 கோடிக்கும் அதிகமான கூடுதல் நிதிச் செலவையும் எதிர்கொள்கிறது. எனவே அனைத்துப் பரிமாணங்களின் அடிப்படையிலும் இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் தணிக்கைத் தடை குறிப்புகளையும் கருத்தில் கொண்டு வல்லுநர் குழுவின் பரிந்துரைகளின்மீது விரைவில் முடிவு எடுக்கப்படும்.

வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டம் (பழைய ஓய்வூதியத் திட்டம்)

வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் ஓய்வு பெறும் அரசுப் பணியாளர்கள் பெறும் பயன்களின் விவரங்கள் பின்வருமாறு:

13. ஓய்வூதியம் (Pension)

(அ) ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுவதற்கு குறைந்தபட்ச தகுதி பணிக்காலம் 10 நிறைவுற்ற ஆண்டுகளாகும் (10 completed years*). முழு ஓய்வூதியம் பெறத் தகுதி பெறுவதற்கு குறைந்தபட்ச தகுதி பணிக்காலம் 30 நிறைவுற்ற ஆண்டுகளாகும். மேலும், அரசுப் பணியாளர்கள் ஓய்வு பெறும்போது பெற்ற ஊதியத்தில் 50 சதவீதம் அல்லது இறுதி 10 மாத பணிக்காலத்தில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 சதவீதம் இதில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஓய்வூதியம் கணக்கிடப்படுகிறது.*

2021 செப்டம்பர் 13]

(ஆ) 1-10-2017 முதல், குறைந்தபட்ச மாத ஓய்வூதியம் 7,850 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

14. கூடுதல் ஓய்வூதியம்/கூடுதல் குடும்ப ஓய்வூதியம்

ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு, கீழ்க்கண்டவாறு கூடுதல் ஓய்வூதியமாக/கூடுதல் குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகின்றது.

வ. எண்.	ஓய்வூதியதாரர் / குடும்ப ஓய்வூதியதாரர் வயது வரம்பு	கூடுதல் ஓய்வூதியம் / கூடுதல் குடும்ப ஓய்வூதியம்	ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள் 1-6-2021 அன்றுள்ளபடி எண்ணிக்கை
1.	80 முதல் 84 வரை	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 20%.	43,050
2.	85 முதல் 89 வரை	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 30%.	24,503
3.	90 முதல் 94 வரை	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 40%.	6,282
4.	95 முதல் 99 வரை	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 50%.	1,020
5.	100 மற்றும் அதற்கு மேல்	அடிப்படை ஓய்வூதியத்தில் / குடும்ப ஓய்வூதியத்தில் 100%.	138
மொத்தம்			**74,993**

15. உள்ளாட்சி அமைப்பு பணியாளர்கள் உட்பட அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கான ஓய்வூதியம்

அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கும், உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களுக்கும்

மாநில அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படுவது போன்றே ஓய்வுகாலப் பயன்கள் அனுமதிக்கப்படுகின்றன.

16. வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டம் மற்றும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றின் கீழ்வரும் பணியாளர்களுக்கான ஓய்வுக்காலப் பயன்கள்

ஓய்வு பெறும்போது பணியாளர் கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பு ஒப்படைப்பு, சொந்த அலுவலுக்கான ஈட்டா விடுப்பு ஒப்படைப்பு செய்து விடுப்புச் சம்பளம் பெற அனுமதியும் மற்றும் ஓய்வு பெறும் பணியாளர், ஓய்வு பெற்ற பின்னர் தன்னுடைய சொந்த ஊருக்கு அல்லது தான் வசிக்க விரும்பும் வேறு ஏதாவது ஊருக்குச் செல்வதற்கான பயணப்படி வழங்கப்படுகிறது.

17. வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ்வரும் பணியாளர்களுக்கான பணிக்கொடை (Gratuity)

(அ) ஆற்றிய பணிக்கான பணிக்கொடை (Service Gratuity)

பத்து நிறைவுற்ற ஆண்டுகளுக்கு (10 completed years) குறைவாக தகுதிப் பணி புரிந்தவர்களுக்கு, அவர்கள் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. இது ஆற்றிய பணிக்காக அனுமதிக்கத்தக்க ஓய்வுகாலப் பணிக்கொடையுடன் கூடுதலாக வழங்கப்படுகின்ற மொத்த தொகையாகும்.

(ஆ) இறப்புப் பணிக்கொடை (Death Gratuity)

அரசுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும்போதே மரணமடையும் நேர்வில், 1-10-2017 முதல், பின்வரும் வீதங்களில் இறப்புப் பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:-

வ. எண்.	பணிக்காலம்	பணிக்கொடையின் வீதம்
1.	ஓராண்டுக்குக் குறைவாக	மாத ஊதியத்தில் இரு மடங்கு
2.	ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக	மாத ஊதியத்தில் ஆறு மடங்கு
3.	ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் பதினொரு ஆண்டுகளுக்குக் குறைவாக	மாத ஊதியத்தில் பன்னிரண்டு மடங்கு

2021 செப்டம்பர் 13]

வ. எண்.	பணிக்காலம்	பணிக்கொடையின் வீதம்
4.	பதினொரு ஆண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் இருபதாண்டுகளுக்குக் குறைவாக	மாத ஊதியத்தில் பதினைந்து மடங்கு
5.	இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக	அதிகபட்சமாக மாத ஊதியத்தில் 33 மடங்கு என்பதற்கு உட்பட்டு, முடிவுற்ற ஒவ்வோர் ஆறு மாதத் தகுதிப் பணிக்கும் அரைமாதச் சம்பளம். அவ்வாறு வழங்குகிற இறப்புப் பணிக் கொடை ரூபாய் 20 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கும்.

(இ) ஓய்வுகாலப் பணிக்கொடை (Retirement Gratuity)

ஒரு அரசு பணியாளர், ஐந்து நிறைவுற்ற ஆண்டுகளும் (5 completed years*) அதற்கு மேலும் தகுதிப் பணியை முடித்திருந்தால், அவர் ஓய்வு பெறும்போது ஓய்வுகாலப் பணிக்கொடை வழங்கப்படுகிறது. 1-4-1998 அன்று அல்லது அதற்குப்பிறகு ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு அவர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப் படியின் அடிப்படையில் பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. 1-1-2016 முதல் இறப்பு பணிக்கொடை/ஓய்வுகாலப் பணிக்கொடையின் உச்சவரம்புத் தொகை 20 இலட்சம் ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.*

18. வரையறுக்கப்பட்ட பயன்தரும் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ்வரும் பணியாளர்களுக்கான குடும்ப ஓய்வூதியம் (Family Pension under Defined Benefit Pension Scheme)

(அ) 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதி அல்லது அதற்குப் பிறகு இறந்த அரசுப் பணியாளர் அல்லது ஓய்வுபெற்ற அரசுப் பணியாளரின் குடும்பத்திற்கு அவர் ஒரு வருடத்திற்கும் குறையாத காலத்திற்கு தொடர்ச்சியான தகுதிப் பணியினை நிறைவு செய்திருந்தால் அவர்தம் குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும்.

[2021 செப்டம்பர் 13

(ஆ) அரசாணை நிலை எண்.313, நிதி(ஊதியக்குழு)த் துறை, நாள் 25-10-2017-ன் மூலமாக குடும்ப ஓய்வூதியம் நிர்ணயம் செய்யப்படும் பொழுது ஓய்வூதியதாரர் ஓய்வு பெறும் பொழுது பெற்ற ஊதியம் மற்றும் தர ஊதியத்தின் திருத்தப்பட்ட ஊதிய விகிதம்/ஊதிய ஏற்ற முறையில் தொடர்புடைய பரிந்துரைக்கப்பட்ட அலகில் குறைந்தபட்ச ஊதியத்தின் 30%-க்கும் குறைவாக இருக்கக்கூடாது.

(இ) 1-10-2017 முதல் வழங்கப்படும் குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் மாதம் 7,850 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

19. கருணைத் தொகை (Ex-Gratia Payment)

பங்களிப்பு வருங்கால வைப்பு நிதி/மாநில அரசின் ஓய்வூதியமில்லாத பணியாளர் அமைப்பைச் சேர்ந்த இறந்த பணியாளர் குடும்பங்களுக்கும், 1-1-1986-க்கு முன் பணியிலிருந்து ஓய்வுபெற்ற அல்லது பணியிலிருக்கும்போது இறந்துவிட்ட முன்னாள் மாவட்ட வாரியப் பணியாளர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியில்லாத நபர்களுக்கும் மாதமொன்றுக்கு வழங்கப்படும் கருணைத் தொகை 645 ரூபாயுடன் 1-7-2019 முதல் 304 சதவீத அகவிலைப் படியுடன் வழங்கப்படுகிறது.

20. ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக அளித்தல் (Commutation of Pension)

(அ) ஓய்வூதியம் பெறுவோர், தமது ஓய்வூதியத் தொகையில் $33^{1}/_{3}$ விழுக்காடு வரையிலான ஓய்வூதியத் தொகையினை ஒட்டுமொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். இச்சலுகை, விருப்பத்தின்பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக அளித்தபிறகு, ஓய்வூதியத்தில் குறைக்கப்பட்ட பகுதிக்கும் அகவிலைப் படி வழங்கப்படுகிறது.

21. அகவிலைப் படி

ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு, அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படுவது போலவே அகவிலைப்படி வழங்கப்படுகிறது. தற்காலிக ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் அகவிலைப் படி பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

2021 செப்டம்பர் 13]

22. மருத்துவப் படி

1-10-2017 முதல் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கு மாதமொன்றுக்கு 300 ரூபாய் மருத்துவப் படி வழங்கப்படுகிறது. தற்காலிக ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் மருத்துவப் படி பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

23. பொங்கல் பரிசு

"C" மற்றும் "D" பிரிவு பணியாளர்களாக இருந்து ஓய்வுபெற்ற மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், முன்னாள் கிராம பணியமைப்பு (முன்னாள் கிராம அலுவலர்கள், கிராம உதவியாளர்கள்) உட்பட அனைத்து "C" மற்றும் "D" பிரிவு அரசு ஓய்வூதியதாரர்கள், அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் (Ad-hoc pensioners of all categories) மற்றும் அனைத்து குடும்ப ஓய்வூதியதாரர்கள் அதாவது ஓய்வூதியதாரர்கள் எந்த பணியாளர் பிரிவில் ஓய்வு பெற்றிருந்தாலும்/பணியாளர்கள் பணியிடை மரணம் அடைந்திருந்தாலும் ஒட்டுமொத்த பொங்கல் பரிசுத் தொகையாக 500 ரூபாய் வழங்கப்படுகிறது.

24. பண்டிகை முன்பணம்

ஓய்வூதியதாரர்களுக்கு பண்டிகை முன்பணம் 2-8-2019 முதல் 4,000 ரூபாய் வழங்கப்படுகிறது.

25. ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்

(அ) 1-1-1997 முதல் ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒரு மாதத்திற்கான சந்தாத் தொகை செலுத்திய பிறகு இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின் தகுதியான குடும்ப உறுப்பினர்களுக்கு அல்லது ஓய்வூதியதாரரால் நியமனம் செய்யப்பட்ட நியமனதாரருக்கு 50,000 ரூபாய் வழங்கப்படுகிறது.

(ஆ) குடும்பப் பாதுகாப்பு நிதியின்கீழ் பெறப்பட்ட சந்தா தொகையானது தீர்வுக்காக நிலுவையில் உள்ள ஏராளமான கோரிக்கைகள் மற்றும் ஓய்வூதியதாரர்களிடமிருந்து பெறப்பட்ட நிலுவையில் உள்ள உரிமை கோரல்களுக்கு வழங்க போதுமானதாக இல்லை. ஓய்வூதியர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தின்கீழ் உள்ள நிலுவைத் தொகைகளை தீர்வு செய்ய ஏதுவாக ஐந்து வருடங்களுக்குள் வட்டி இல்லாமலேயே அரசுக்கு திரும்ப

செலுத்தும் பொருட்டு அரசு 25.00 கோடி ரூபாய் முன்பணமாக வழங்கியுள்ளது. மேலும் இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியர்கள் செலுத்தும் சந்தா தொகையினை ரூ.80/-லிருந்து ரூ.150/-ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

(இ) இத்திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் 31-7-2021 வரையிலான காலங்களுக்கு 2,26,349 ஓய்வூதியதாரர்களின் குடும்பங்களுக்கு 834.25 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

26. தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடை திட்டம்

(அ) இத்திட்டம் 1-4-1984 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாதம் 20 ரூபாய் வீதம் 148 மாதங்கள் வரை அரசுப் பணியாளரிடம் பிடித்தம் செய்யப்பட்டு, அவர் பணியிலிருந்து ஓய்வுபெறும்போது, அவர் செலுத்திய பங்களிப்புத் தொகை, வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையாக 10,000 ரூபாய் சேர்த்து வழங்கப்படுகிறது.

(ஆ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 2000 என்ற புதிய திட்டம் 1-10-2000 முதல் தொடங்கப்பட்ட பின்னர் முந்தைய திட்டத்தில் பணியாளர்கள் சேர்க்கை நிறுத்தப்பட்டது. எனினும் முந்தைய திட்டத்தில் சேர்க்கப்பட்ட பணியாளர்கள் ஓய்வுபெறும் போது உரிய பணப்பயன் அத்திட்டத்தில் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 30-9-2000 வரை அரசுப் பணியில் உள்ள அனைத்து நிரந்தரப் பணியாளர்களுக்கும் விருப்பத்தின் பேரில் இப்புதிய திட்டத்தில் சேர்க்கப்பட்டு 50 ரூபாய் வீதம் மாதந்தோறும், ஓய்வு பெறும் மாதத்திற்கு முந்தைய மாதம் வரை செலுத்தி அத்தொகை ஓய்வு பெறும்போது வட்டியுடன் திரும்ப வழங்கப்படுகிறது.

(இ) 1-10-2000 அன்றும், அதற்குப் பிறகும் பணியில் சேரும் பணியாளர்கள் அனைவருக்கும் இத்திட்டம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு மாதச் சந்தா தொகை 70 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவர் பணியிலிருந்து ஓய்வுபெறும்போது, அவர் செலுத்திய பங்களிப்புத் தொகை, வட்டி மற்றும் அரசின் பங்குத் தொகையாக 10,000 ரூபாய் சேர்த்து வழங்கப்படுகிறது.

2021 செப்டம்பர் 13]

27. கடந்த ஆண்டுகளில் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலப் பயன்களுக்கான செலவு விவரம் பின்வருமாறு:-

ஆண்டு	ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலப் பலன்கள் குறித்த மொத்தச் செலவு (ரூபாய் கோடியில்)	மொத்த வருவாய் கணக்கு வரவுகளில் சதவீதம்
2005-2006	4,488.83	13.22
2006-2007	5,461.68	13.35
2007-2008	6,038.96	12.71
2008-2009	7,776.21	14.13
2009-2010	8,439.24	15.11
2010-2011	11,855.27	16.89
2011-2012	12,687.97	14.89
2012-2013	13,248.08	13.41
2013-2014	14,934.37	13.82
2014-2015	17,528.06	14.32
2015-2016	18,490.89	14.33
2016-2017	20,176.74	14.39
2017-2018	22,432.23	15.34
2018-2019	29,710.58	17.10
2019-2020	30,219.77	17.32
2020-2021 (RE)	27,696.39	15.33
2021-2022 (IBE)	35,250.89	16.09
2021-2022 (RBE)	28,250.59	13.95

28. மின்னணு ஓய்வூதியம் (e-Pension)

ஓய்வூதியம் வழங்கும் நடைமுறையும் மற்றும் ஓய்வூதியதாரர்கள் தொடர்பான புள்ளிவிவரங்களையும் பெற கணினித் தகவல் மென்பொருள் அனைத்து மாவட்டங்கள் மற்றும் ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை ஆகிய இடங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்களை நேரடியாக அவரவர் வங்கிக் கணக்குகளில் மின்னணு

தீர்வு முறை (Electronic Clearing Service) / மண்டல மின்னணு தீர்வு முறை (Regional Electronic Clearing Service) வழியாக வரவு வைக்கப்படுகிறது. மேலும், முதன்மை மாநில கணக்காயரின் தொகுப்பிலுள்ள ஓய்வூதியம் குறித்த விவரங்கள் அனைத்தும் மின்னணு ஓய்வூதிய மையத் தொகுப்பிற்கு (e-Pension Central Server) மாற்றப்பட வழிவகை செய்வதன்மூலம் ஓய்வூதியம் குறித்த விவரங்களைத் துல்லியமாக பெறுவதோடு குறைந்த செலவு மற்றும் குறுகிய காலத்தில் அதிக பயன்பெற வழி ஏற்படும்.

29. ஓய்வூதியதாரர்களின் நேர்காணல் (Mustering)

ஓய்வூதியதாரர்கள்/குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு ஏற்படும் இடர்களைக் கருத்தில் கொண்டு, ஓய்வூதியதாரர் நேர்காணலை எளிமைப்படுத்தும் முயற்சியாக தேசிய தகவல் மையத்துடன் (NIC) இணைந்து ஓய்வூதியதாரர்கள்/குடும்ப ஓய்வூதியதாரர்களை அடையாளம் காண மின்னணு விரல் ரேகை பதிவு செய்தல் முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது ஓய்வூதியதாரர்களின் வருடாந்திர நேர்காணலின்போது ஆதார் எண்கள் ஓய்வூதியதாரர்களின் விவரங்களுடன் இணைக்கப்பட்டு வருகிறது. கொரோனா (COVID-19) நோய் தொற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, ஓய்வூதியம்/ குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் பயன்பெறும் வகையில் ஓய்வூதியர்களின் 2021-ம் ஆண்டிற்கான வருடாந்திர நேர்காணல் (Annual Mustering) மற்றும் வாழ்வு சான்று சமர்ப்பித்தல் (furnishing of Life Certificate) ஆகியவற்றிற்கு விலக்கு அளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

30. ஓய்வூதிய பதிவுகள் மின்னணுமயமாக்கல் (Digitization)

ஓய்வூதியம் பெறும் ஆணைகளையும், பிற பதிவுகளையும் கணினிமயமாக்க ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம், சென்னை மற்றும் அனைத்து கருவூலங்களில் மின்னணுமயமாக்கல் செய்யப்பட்டு இந்தப் பதிவுகளை மின்னணு ஓய்வூதிய மென்பொருளில் இணைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. சென்னை மாநில கணக்காயர் அலுவலகத்தில் உள்ள ஓய்வூதியம் தொடர்பான ஆவணங்களை மின்னணுமயமாக்கம் செய்திட அரசு 95.53 இலட்சம் ரூபாய் ஒப்பளிப்பு செய்துள்ளது. மேலும், இரண்டாம் கட்டத்தின்கீழ் இப்பணிகளுக்கான செலவுகளை மேற்கொள்ள அரசு 124 இலட்சம் ரூபாய் அளவிற்கு நிர்வாக ஒப்புதலை வழங்கியுள்ளது.

2021 செப்டம்பர் 13]
இப்பணிக்காக தற்போது வரை 43.44 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

31. ஓய்வூதியர் இணையம் (Pensioners Portal)

தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களுக்காக பிரத்யேகமாக ஒரு ஓய்வூதியர் இணையம் உருவாக்க அரசாணை (நிலை) எண் 359, நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள். 7-12-2017-ல் ஆணை வெளியிடப்பட்டது. இதற்கான வலைதளம் மற்றும் மென்பொருள் உருவாக்கப்பட்டு, 18-1-2019-ல் துவக்கப்பட்டது. இவ்வலைதளத்தில் ஓய்வூதியதாரர்கள், தங்களது ஓய்வூதியம் பெற்ற விவரம், ஓய்வூதியம் தொகுத்துப் பெற்றதை மீளப்பெறுவது, கூடுதல் ஓய்வூதியம், ஓய்வூதியதாரர்களின் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் ஓய்வூதியம் தொடர்பான விவரங்கள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வலைதளத்தின்மூலம் ஓய்வூதியதாரர்கள் தாங்களாகவே தங்களுக்குத் தேவையான விவரங்களைப் பெற வசதி செய்யப்பட்டுள்ளது.

32. ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத் துணை உட்பட) குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2018

(அ) ஓய்வூதியதாரர்கள் (வாழ்க்கைத் துணை உட்பட)/ குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கான புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், 2014, 01-07-2014 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1-7-2018 முதல் 30-6-2022 முடிய, நான்கு ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவிற்கு சில சிறப்பு அம்சங்களுடன் நீட்டிக்கப்பட்டுள்ளது. பொதுத் துறை நிறுவனமான யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்தின்மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இப்புதிய திட்டத்தில், அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் ஆகியவற்றை பெற உச்சவரம்பு 2 இலட்சம் ரூபாயிலிருந்து 4 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

(ஆ) இப்புதிய திட்டத்தில், சில மருத்துவ சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகள் ஆகியவற்றைப் பெற உச்சவரம்பு 7.50 இலட்சம் ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

[2021 செப்டம்பர் 13

(இ) மேலும், கண்புரை அறுவை சிகிச்சைக்கான மருத்துவ உதவியின் உச்சவரம்பு கண் ஒன்றிற்கு 20,000 ரூபாய் வீதமும், கர்ப்பப்பை நீக்குவதற்கான அறுவை சிகிச்சை உதவியின் உச்சவரம்பு 45,000 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ஈ) இப்புதிய திட்டத்தில், திடீரென்று எதிர்பாராத விதமாக, உடனடி கவனிப்பு தேவைப்படுகின்ற மற்றும் விபத்தை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் அங்கீகரிக்கப்பட்ட சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சைகளுக்கு இத்திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்படாத (Non-Network) மருத்துவமனைகளிலும் சிகிச்சை மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், 114 வகையான சிகிச்சைகள் மற்றும் அறுவை சிகிச்சை நடைமுறைகள் கட்டணமின்றி மேற்கொள்வதற்கு தமிழ்நாடு, புதுச்சேரி, திருவனந்தபுரம், புதுதில்லி மற்றும் பெங்களூரு ஆகிய இடங்களில் உள்ள 1168 அங்கீகரிக்கப்பட்ட (Network) மருத்துவமனைகளில் மருத்துவ சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 1-7-2018 முதல் 30-6-2022 வரையிலான நான்காண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் காப்பீட்டுக் கட்டணமாக ஒரு ஓய்வூதியதாரர்/ குடும்ப ஓய்வூதியதாரருக்கு 3,800 ரூபாய் வீதம் யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்திற்கு சேவை வரிகளுடன் அரசு செலுத்தும். இதற்கென ஓய்வூதியதாரர்/குடும்ப ஓய்வூதியதாரர்களிடமிருந்து ஒவ்வொரு மாதமும் 350 ரூபாய் வீதம் அவர்களது மாதாந்திர ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியத்திலிருந்து ஜூலை மாதம் 2018 முதல் பிடித்தம் செய்யப்படுகிறது. பிடித்தம் செய்யப்பட்ட தொகையை விடக் கூடுதலாகச் செலுத்தப்படும் பொருட்கள் மற்றும் சேவைகள் வரி உட்பட காப்பீட்டுக் கட்டணத்தை அரசு/ அரசு சார்ந்த அமைப்புகள் ஏற்கும்.

(உ) 1-7-2014 முதல் 30-6-2018 வரையிலான நான்காண்டுகளில் 2,01,285 பயனாளிகள் 578.01 கோடி ரூபாய் அளவிற்கு மருத்துவ சிகிச்சை பெற்றுள்ளனர்.

(ஊ) இத்திட்டம் நீட்டிக்கப்பட்ட 1-7-2018 முதல் 31-8-2021 வரை 1,85,266 பயனாளிகள் 720.24 கோடி ரூபாய் அளவிற்கு மருத்துவச் சிகிச்சை பெற்றுள்ளனர்.

2021 செப்டம்பர் 13]

(எ) மேலும், உள்ளாட்சி அமைப்புகள், அரசு சார்ந்த நிறுவனங்கள்,வாரியங்கள் மற்றும் அரசு பல்கலைக்கழகங்கள், விருப்பமுள்ள மாநில அரசு அமைப்புகள் / நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரிந்து அந்தந்த நிறுவனங்களிடமிருந்து ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அந்தந்த நிறுவனங்களால், கூடுதலாகச் செலுத்தப்படும் தொகையினை மாநில அரசின் வரவு-செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்காமல் அந்தந்த நிறுவனங்களால் செலுத்தப்படும் நிலையில், அப்படியே இத்திட்டத்தினை நீட்டித்துக்கொள்ள அரசினால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

(ஏ) மேலும், தற்போது கோவிட்-19-க்கான மருத்துவ சிகிச்சையினை அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் மேற்கொள்ள 2.50 கோடி ரூபாய் நிதிய மூலதனம் (Corpus Fund) உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இதுநாள் வரை 17.50 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது.

33. ஓய்வூதிய இயக்குநரகம்

அரசு 1-9-1994 முதல் ஓய்வூதிய இயக்ககத்தை உருவாக்கியது. இவ்வியக்ககம் தற்போது நிதித் துறை கூடுதல் செயலாளர் நிலையில் உள்ள அலுவலரை இயக்குநராகக் கொண்டுள்ளது. இந்த இயக்ககம், கீழ்க்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகிறது:

(அ) மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஓய்வூதிய குறைகளைத் தீர்த்தல்.

(ஆ) ஓய்வூதியதாரர்களின் குறைகளை, ஓய்வூதிய அதாலத் அமைப்புமூலம் தீர்த்தல்.

(இ) ஓய்வூதியதாரர்கள் கோரும் தெளிவுரைகளை வழங்கிடல்.

(ஈ) அரசுத் துறைகளின் தொழிற்சாலை பணியாளர்களின் சேமநல நிதித் திட்டம் தொடர்பான பணிகளை நிருவகித்தல் மற்றும் நிறைவேற்றுதல்.

(உ) தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் மருத்துவ நல நிதித் திட்டம், 1995-ன்கீழ் நிலுவையிலுள்ள நேர்வுகளை தீர்வு செய்தல்.

[2021 செப்டம்பர் 13

(ஊ) குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களின் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம், 1997-ஐ நிருவகித்தல் மற்றும் அதை செயல்முறைபடுத்துதல்.

(எ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடைத் திட்டம், 1984 மற்றும் 2000-ன் மதிப்பீடு, கணக்கு ஒத்திசைவு மற்றும் கட்டுப்பாடு பணி.

(ஏ) ஓய்வூதிய இயக்ககத்தில் பணிபுரிவோரின் ஊதியம் மற்றும் இதர பயன்களின் வரவு-செலவுத் திட்டம் மதிப்பீடு செய்தல் மற்றும் துறைக் கணக்குகளை சம்பளக் கணக்கு அலுவலகம் மற்றும் மாநிலக் கணக்காயர் கணக்குகளுடன் ஒத்திசைவு பணி செய்தல்.

(ஐ) அமைப்புசாரா தினக்கூலிப் பணியாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் பொது மக்களுக்கான தமிழ்நாடு அரசு சமூக பாதுகாப்புத் திட்டம், 1974-ஐ நிருவகித்து நிறைவேற்றுதல்.

34. ஓய்வூதிய இயக்ககத்தின் மூலம் ஓய்வூதியதாரர்களின் குறை தீர்த்தல்

பல்வேறு மாவட்டங்களிலுள்ள ஓய்வூதியதாரர்/ குடும்ப ஓய்வூதியதாரர் ஆகியோர்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள், முதலமைச்சரின் தனிப்பிரிவு மூலமாக பெறப்படும் மனுக்கள், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலமாக பெறப்படும் மனுக்கள் ஆகியவற்றின் மீது உரிய கவனம் செலுத்தப்பட்டு, ஓய்வூதியதாரர்களின் குறைகளுக்கு உடனடியாக தீர்வு காண நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன.

35. மாவட்ட ஆட்சியாளர்களின் ஓய்வூதியதாரர் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

மாவட்ட ஆட்சியாளர்கள் ஓய்வூதியதாரர்களின் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தினை நான்கு மாதங்களுக்கு ஒரு முறை தங்களது மாவட்டங்களில் நடத்துகின்றனர். இக்கூட்டத்தில், இயக்குநர் அல்லது இணை இயக்குநர் பங்கேற்று, அம்மாவட்டத்திலுள்ள ஓய்வூதியதாரர்களின் குறைகள் கேட்டறியப்பட்டு, அவற்றை விரைந்து களைந்திட மாவட்ட ஆட்சியருக்கு உதவி புரிகின்றனர். ஓய்வூதிய பலன்கள் தொடர்பான கோப்புகள் மாநில கணக்காயர்

2021 செப்டம்பர் 13]

அலுவலகத்தில் நிலுவையிலிருந்தால் அவற்றை விரைந்து முடித்திட, இவ்வியக்ககத்தால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்ட வாரியான குறை தீர்க்கும் மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மாவட்டங்களில் ஓய்வூதியதாரர் குறை தீர்க்கும் கூட்டங்கள் முறையாக நடத்தப்பட்டு, துறைவாரியாக ஓய்வூதியதாரர்களின் குறைகள் தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

36. ஓய்வூதிய அதாலத்

ஓய்வூதியதாரர்களின் குறை தீர்ப்பதற்கென்று லோக் அதாலத்தில் ஓய்வூதிய இயக்குநர், சம்பந்தப்பட்ட தலைமைச் செயலகத் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாநிலக் கணக்காயரின் பிரதிநிதி ஆகியோரை உள்ளடக்கிய ஒரு குழுவினை அரசு அமைத்துள்ளது. ஒவ்வொரு மாதமும் இந்த அதாலத் நடைபெறுகிறது. இதுவரை 456 ஓய்வூதியதாரர்களின் மனுக்கள் விசாரிக்கப்பட்டு 258 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளன.

37. ஓய்வூதியர்களின் கையேடு

*ஓய்வூதியங்கள் மற்றும் ஏனைய ஓய்வுக்காலப் பயன்கள், அவ்வப்பொழுது அரசால் வெளியிடப்படும் ஆணைகள், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் கருத்துரு அனுப்ப வழிகாட்டுதல் ஆகியவற்றை ஓய்வூதியதாரர்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு கையேடு ஒன்று தயார் செய்யப்பட்டு இணைய தளத்தில் (*www.tn.gov.in/dop*) வெளியிடப்பட்டுள்ளது. மின்அஞ்சல் மூலமாகவும் ஓய்வூதிய இயக்குநரகத்தை தொடர்பு கொள்ளலாம். இத்துறைக்கான மின்அஞ்சல் முகவரி* dop@tn.nic.in.

38. ஓய்வூதிய இயக்குநரக கணினிமயமாக்கம்

*குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் முழுமையாக கணினிமயமாக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் தேவையான அடிப்படை விவரங்கள் அளிக்கப்பட்டு, ஒப்பளிப்பு ஆணைகள் வெளியிடப்படுகின்றன. அதைப்போன்று, தொழிலாளர் சேமநல நிதித் திட்டம் 1969-ன்மூலம் வழங்கப்பட வேண்டிய இறுதித் தொகை, கணினிமூலம் பணம் பட்டுவாடா (*NEFT*) பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு செய்யப்பட்டு வருகிறது.*

இணைப்பு-VIII

(261 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

பேரவைக் கூட்டம் நடைபெற்ற அனைத்து நாட்களும் வருகை புரிந்த உறுப்பினர்களின் பட்டியல்

வ. எண்	உறுப்பினர் பெயர் (திருவாளர்கள்)
1.	நா. அசோக்குமார்
2.	க. அசோகன்
3.	ப. அப்துல் சமது
4.	V. அமலு
5.	ச. அரவிந்த் ரமேஷ்
6.	இரா. அருள்
7.	க. அன்பழகன்
8.	S.R. இராஜா
9.	இரா. இராஜேந்திரன்
10.	வி.ஜி. இராஜேந்திரன்
11.	ரா. இளங்கோ
12.	முனைவர் த. இனிகோ இருதயராஜ்
13.	ஈ.ஆர். ஈஸ்வரன்
14.	தா. உதயசூரியன்
15.	ஜே. எபினேசர் ஜே.ஜே. என்கிற ஜான் எபினேசர்

2021 செப்டம்பர் 13]

வ. எண்	உறுப்பினர் பெயர் (திருவாளர்கள்)
16.	டாக்டர். நா. எழிலன்
17.	ஐட்ரீம் இரா. மூர்த்தி
18.	கோ. ஐயப்பன்
19.	க.சொ.க. கண்ணன்
20.	க. கணபதி
21.	இ. கருணாநிதி
22.	ஜெ. கருணாநிதி
23.	இராம. கரு மாணிக்கம்
24.	மு.பெ. கிரி
25.	ஆ. கிருஷ்ணசாமி
26.	எஸ். சதாசிவம்.
27.	ச. சந்திரன்
28.	பெ.சு.தி. சரவணன்
29.	ம. சிந்தனை செல்வன்
30.	க. சிவகாம சுந்தரி
31.	மா. சின்னதுரை
32.	கு. சின்னப்பா
33.	எஸ். சுதர்சனம்

வ. எண்	உறுப்பினர் பெயர் (திருவாளர்கள்)
34.	க. சுந்தர்
35.	ஐ.பி. செந்தில்குமார்
36.	கு. செல்வபெருந்தகை
37.	க. செல்வராஜ்
38.	கோ. தளபதி
39.	ந. தியாகராஜன்
40.	வி.பி. நாகைமாலி
41.	நிவேதா எம். முருகன்
42.	இ. பரந்தாமன்
43.	மு. பன்னீர்செல்வம்
44.	S.S. பாலாஜி
45.	எ.எம்.வி. பிரபாகரராஜா
46.	ம. பிரபாகரன்
47.	ஜே.ஜி. பிரின்ஸ்
48.	நா. புகழேந்தி
49.	ஜி.கே. மணி
50.	கே. பொன்னுசாமி
51.	A.J. மணிக்கண்ணன்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2021 செப்டம்பர் 13]

வ. எண்	உறுப்பினர் பெயர் (திருவாளர்கள்)
52.	சா. மாங்குடி
53.	இரா. மாணிக்கம்.
54.	G.V. மார்க்கண்டேயன்
55.	க. மாரிமுத்து
56.	ஜெ. முகம்மது ஷாநவாஸ்
57.	பெ. ராமலிங்கம்
58.	முனைவர் டி.ஆர்.பி. ராஜா
59.	ஆ. வெங்கடேசன்
60.	எஸ்.பி. வெங்கடேஷ்வரன்
61.	அ. வெற்றிஅழகன்
62.	த. வேலு
63.	தி. வேல்முருகன்
64.	முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா
65.	ஜோசப் சாமுவேல்

Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.